# ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்

## அதன் ஆய்வுக்குரிய அரிய வழிமுறைகள்

ஷெய்ஹுல் முப்லிஹீன்
M.S.M .அப்துல்லாஹ் (ரஹ்)

# 01

## பகுத்தறிவைக்கொண்டு குர்ஆனை விளங்கலாமா?

குர்ஆனை விளங்கித் தெளிவுபெறுவதற்கு ஐந்து வழிகள் உள்ளனவென்பது நூலறிவுமூலம் ஏறக்குறைய எல்லா மக்களுக்கும் தெரிந்தவொரு விஷயம்தான். இவ்வைந்து வழிகளையும் கண்டறிய நுண்ணறிவு அவசியமாகின்றது. ஆனால், எம் உலமாக்களில் பலர் பகுத்தறிவைக் கொண்டு குர்ஆனை விளங்க முடியாதென்று சுமார்1400 வருடங்களாகக் கூறிக்கொண்டும், எழுதிக்கொண்டுமிருக்கிறார்கள். யுக்தியின்படி குர்ஆனுக்குப் பொருள் கொள்வது நரகத்தைத் தன் இருப்பிட மாக்கிக் கொள்வதாகுமென்று ஹதீஸுகளைக் கொண்டு அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால், குர்ஆனோ சுமார் 340 இடங்களில் குர்ஆனை ஆராயும்படியும், சிந்திக்கும்படியும் வற்புறுத்துகிறது.

குர்ஆனின் கூற்றுக்கும் உலமாக்களின் கூற்றுக்கு மிடையே நேர்விரோதம் தென்படுகிறது. பகுத்தறிவைக் கொண்டேயன்றி மனிதனால் ஆராய, சிந்திக்கமுடியாது. பகுத்தறிவுக்கு ஒத்துக்கொள்ளாத அல்லது விளங்காத ஒன்றை

இறைவன் வேதமாக அனுப்பினால் அதைப் பகுத்தறிவுடைய மனிதன் எப்படிக் கடைப்பிடிக்கமுடியும்? அறபுப்பாஷையில்தான் குர்ஆனை விளங்கலாம், ஒப்புக்கொள்ளலாமென்றால் அதையும் ஏற்கமுடியாது. எஹுது நஸாறாக்களில் அறபுப்பாஷையைத் தாய்ப்பாஷையாகக்கொண்டோர் அறபுப்பாஷையில் பண்டிதர்களாய்ப் பட்டம் பெற்றோர் பலஇலட்சம்பேர் இருக்கிறார்கள். ஆனால், குர்ஆனை விளங்கி அவர்கள் ஈமான் கொள்ளவில்லையே! எனவே, உலமாக்கள் கூறுகிற விஷயத்தையும் குர்ஆன் கூறுகிற விஷயத்தையும் நாம் தெளிவாய் விளங்கிக் கொள்ளாமல் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை விளங்கமுடியாது. (அறிவு ஒப்புக்கொள்ளாத எந்தவொரு விஷயத்தையும் மனிதனால் ஒப்புக்கொள்ள முடியாது.) ஆதலால் முதலில் எம் உலமாக்களில் பலர் கூறுகிறயுக்தி என்பது என்னவென்பதை ஓரளவு விளங்கிக்கொண்டு அதன்பின் குர்ஆனை விளங்கும் ஐந்து வழிகளையும் ஆராய்வோம்.

**குர்ஆன்: 32:13**

وَلَوْ شِئْنَا لَآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدٰىهَا وَلٰكِنْ
حَقَّ الْقَوْلُ مِنِّيْ لَاَمْلَئَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ
وَالنَّاسِ اَجْمَعِيْنَ

**நாம் விரும்பியிருந்தால், ஒவ்வொரு மனிதனுக்கும் நேரான வழியில் செல்லக்கூடிய அறிவைக் கொடுத்திருப்போம்: எனினும், ஜின்களையும், மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவோமென்ற நம்முடைய தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.**

இவ்வாக்கியத்தின்படி, நேர்பாதையில் செல்ல அறிவு தேவையென்பதும் அதற்கு இறை வழிகாட்டல்(ஹிதாயத்) அவசியமென்பதும் தென்படுகிறது. நேர்பாதையை விளக்குவதே

குர்ஆன். நேர்பாதையை விளங்குவதற்கு அறிவு தேவையென்றால், அறிவில்லாத மனிதன் தவறான பாதையில் செல்வானென்பதே அர்த்தம். நாம் குர்ஆனை நம்புவதா? உலமாக்களின் பேச்சை நம்புவதா?

*ஹதீஸ்:-*

*எவர் திருமறைக்குத் தம் நோக்கப்படி விளக்கம் கூறுகிறாரோ அவர் சரியாகக் கூறியிருந்தபோதிலும் நிச்சயமாக அவர் குற்றவாளியேயாவார் என்று றஸுல் (ஸல்) அவர்கள் கூறினர்.*

*அறிவிப்பவர்:- ஜுன்துப் (றலி)*
*ஆதாரம்:- அபூதாவூத், திர்மிதி*

*ஹதீஸ்:-*

*கல்வி ஞானமின்றித் திருகுர்ஆனுக்கு விளக்கங்கூறுபவன் நரகத்தைத் தன் இருப்பிடமாக்கிக் கொள்ளவும் என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர்:-இப்னு அப்பாஸ்(றலி)**

**ஆதாரம்:-திர்மிதி**

இவ்வகையான ஹதீஸுகளெல்லாம் ஒரே விஷயத்தைத்தான் வலியுறுத்துகின்றன. இவ்விஷயம் எதுவென்பதை நாம் பொறுமையோடு கண்டறிய வேண்டும். ஏனென்றால், சரியானதைப் பிழையானதென்றும், பிழையானதைச் சரியானதென்றும் விளங்கிக்கொண்ட அறிவீனத்தால் மக்களை வழிகெடுக்க முனைகின்ற சில கூட்டங்கள் இவ்விதமான ஹதீஸுகளுக்குத் தவறான அர்த்தங்களைக் கற்பனை பண்ணித் தங்கள் தவறான நோக்கை உறுதிப்படுத்த முயல்கிறார்கள். இவ்வித ஹதீஸுகளை ஆதாரமாய் எடுத்தக் கொண்ட இன்றுள்ள ஒருசில உலமாக்கள் பகுத்தறிவுக்குக் குர்ஆன் விரோதமென்றும், பகுத்தறிவைக் கொண்டு குர்ஆனை விளங்கக்கூடாதென்றும், விளங்க முடியாதென்றும், அப்படி விளங்குவது ஹறாமென்றும், குர்ஆனை இமாம்கள் எப்படி விளக்கினார்களோ அதை மட்டுமே

நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இமாம்களை ஏற்காதவன் காபீரென்றும், அறபுப்பாஷை தெரியாதவரின் மார்க்க விளக்கத்தைக் கேட்பது கொடிய வழிகேடென்றும், உலமாக்களாகிய தமது சொல்லைப் பொதுமக்கள் மீறாமலே வாழவேண்டுமென்றும் கூறி மக்களை மேலும் மேலும் அறியாமையென்ற இருளிலேயே செலுத்திக்கொண்டிருக் கிறார்கள் என்பதை நான் காணுகின்றேன். முற்கால மதாச்சாரிகள் மக்களைத் தம் ஆதிக்கத்தின் கீழ் கட்டுப்படுத்தக் கையாண்ட அதே வழிமுறைகளையே இவர்களும் கையாளுகிறார்கள்.

இவ்வித மூடத்தனமான ஏமாற்றுவித்தைப் பிரச்சார ங்களும், அடக்குமுறைகளுந்தான் இன்றைய இஸ்லாமியச் சமுகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றன. இவ்விதமான அமாவாசை ஆலிம்கள் தங்களை மேதைகளாய்க் காட்டி வயிறு வளர்க்க, கௌரவந்தேடவே இத்தகைய பிரச்சாரங்களைச் செய்துகொண்டிருக்கிறார்களென்று நான் துணிந்து கூற விரும்புகிறேன். ஒரு சில உலமாக்களின் பேச்சில் மயங்கிய மக்கள் குர்ஆனுக்குச் சாம்பிராணிப் புகைபோட்டுக் கொண்டி ருக்கிறார்களே அன்றி, குர்ஆனைப் பெரும்பாலும் திறப்பதோ வாசிப்பதோகிடையாது. எல்லோரும் குர்ஆன், தப்ஸீர்களைப் பார்வையிட்டு ஹதீஸுகளுடன் ஒப்பிட்டு நோக்கினால் லேபல் பேர்வழிகளான தாங்கள் மக்கள் முன்னிலையில் தலைகாட்ட முடியாதென்பதை அவர்கள் தெளிவாய் அறிந்தேயிருக் கிறார்கள். மக்கள் மார்க்க விஷயத்தில் விழிப்படைந்து விட்டால் தங்களின் பிழைப்புப் பாழாய்விடுமே; எனவே, மார்க்க விஷயத்தில் மக்களை விழிப்படைய விடக்கூடாதென்பதே அவர்களுடைய குறிக்கோளாகும். நாம் ஏமாறும் மக்களாய் இருப்பதனால்தான் அவர்கள் ஏமாற்ற நினைக்கிறார்கள்.

நாம் முன்புகாட்டிய ஹதீஸுகளை, ஒருசில உலமாக் களின் இரவல் மூளையை விட்டுவிட்டுச் சுயமூளையுடன்

நோக்குங்கள். குர்ஆனுடைய விஷயத்தில் தன் நோக்கப்படி, சொந்தக்கருத்து(யுக்தி)ப்படி என்றுதான் கூறப்படுகிறதேயன்றிப் பகுத்தறிவைக்கொண்டு என்று ஹதீஸ்களில் கூறப்பட வேயில்லை. சொந்தக்கருத்து எனும் போது அது பகுத்தறிவு வாதம் என்று முடிவுகட்டி விடுகிறோம். இந்த முடிவுதான் இன்றுள்ள பெரும்பாலான உலமாக்களின் முடிவாகும். ஆனால், விஷயம் அப்படியல்ல பகுத்தறிவு ஒன்றேயொன்றாயினும் அவ்வறிவு தீர்ப்புக்கட்டும் நிலைமை வெவ்வேறாயிருக்கின்றது. பகுத்தறிவு உண்மையில் தீப்புக்கட்டுவதில்லை. இவ் விஷயத்தை ஓரளவு விளங்குவோம்.

# 02

## சொந்தக்கருத்து என்றால் என்ன?

குர்ஆனை விளங்கிக்கொள்ளும் ஐந்து வழிகளையும் கண்டறிவதுதான் எமது குறிக்கோள். இந்த குறிக்கோளை நாம் சரியாகப் புரிந்துகொள்வதானால் முதலில் எம்மறிவிலுள்ள சில இருட்திரைகளை(மூடத்தனங்களை) அகற்ற வேண்டியது அவசியமாகும்.ஏதோ சொல்ல வேண்டிய நான் வேறு எதையோ எழுதிக்கொண்டிருக்கிறேனே என்று நீங்கள் அலட்டிக் கொள்ளாமல் என்பேச்சில் மிகுந்த கவனஞ்செலுத்த வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். சாதாரண மனிதரின் திரைகளை நீக்காமல் நான் தரப்போகின்ற கல்வி அவர்களுக்குப் பிரயோசனந்தராதென்பதை நான் அறிந்திருப்பதனாலேயே இப்படிக் கூறுகிறேன். சிந்திக்கும் எல்லா மக்களும் நான் சொல்லப்போவதைத் தெளிவாய் விளங்கவேண்டுமென்பதே என் அவா.

இறைவனின் வழிகாட்டலைக்கொண்டு நேர்பாதையில் தரிபட்டிருக்கும் நல்லடியார்களைத்தவிர ஏனைய உலகமக்கள் அனைவரும் மிகக்கடினமான மூன்று திரைகளில் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். தாம் இப்படித் திரைகளில் சிக்குண்டிரு கிறோமென்பதையும் அம்மக்கள் அறிந்து கொள்வதில்லை. இவ்வித மக்கள் எவ்விஷயத்தில் தமது சொந்தக்கருத்தை எடுத்துக்கொண்டாலும் அது நாம் முன்பு கூறிய மூன்று திரைகளின் அடிப்படையில் உருவானதாகவே இருக்கும்.

இவ்வகை மக்களின் அறிவுக்குப் பகுத்தறிவு என்பது பெயரல்ல, இந்த அறிவுக்கு வஹ்மு, பேதபுத்தி, சபலபுத்தி, மூடபுத்தி என்பதே பெயராகும். இந்த வஹ்மு என்ற பேதபுத்தி, பழக்கவழக்கம், நூற்கேள்வியறிவு, மனோஇச்சை ஆகிய திரைகளுக்கு அடிமையாயிருந்து கொண்டுதான் தனது சொந்தக்கருத்தை, யூகத்தை உருவாக்கிக்கொள்கிறது. இச்சொந்தக்கருத்துச் சரியாயுமிருக்கலாம், பிழையாயுமிருக்க லாம். உண்மையை நோக்கினால், இந்த சொந்தக்கருத்து என்பது பழக்க வழக்க, நூற்கேள்வியறிவினால் பெற்றுக்கொண்ட அறிவை அடிப்படையாய்க் கொண்டுதான் உருவாகிறது. அதாவது கண்மூடித்தனமான பின்பற்றலில், தக்லீதில் இருந்துதான் உருவாகிறது. இது உண்மையான பகுத்தறிவு மல்ல, உண்மையான அனுமான ஆராய்வோடுள்ள யுக்தியும்(மஃகூலும்) அல்ல. ஆனால், சிந்தனை குறைந்த மக்கள் இவ்வித அறிவே பகுத்தறிவு, யுக்தி என்று ஏமாந்துவிடுகிறார்கள்.

‘‘வணக்கத்துக்குப்பாத்திரமான நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர’’என்று கலிமாவுக்குப் பொருள் கொண்ட நூற்கேள்வியின் மூலம் அறிந்து கொண்ட ஒருவர் கலிமாவுக்கு ‘‘அல்லாஹ் தவிர இலாஹு இல்லை’’ என்று பொருள்கொண்ட இன்னொருவரைக் காணும்போது அவரின் கூற்றுப் பிழையென்றும், ஷிர்க்கென்றும், வழிகேடென்றும் கூறுகிறார். இதுதான் சொந்தக்கருத்து என்பது. இந்தச் சொந்தக்கருத்து எம்முன்னோரின் சொந்தக்கருத்தே என்பதை அவர் உணராமலே பின்பற்றிச் சென்று கொண்டிருக்கிறார். தான் நேரான பாதையில் மூதாதைகளின் பாதையில் செல்வதாக நம்பியிருக்கிற அவர் மூதாதைகளின் வழிகாட்டலை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதால், அவர் எந்த நூலில் எந்தக்கேள்வியில் ஊறியுள்ளாரோ அந்த அறிவைக் கொண்டுதான் குர்ஆனை ஹதீஸுகளை அணுகுவார். அவருடைய அறிவுக்கு முரண்பட்ட

தாய்த் தென்படும் குர்ஆன் ஹதீஸுகளின் விளக்கங்களை அவருடைய அறிவுக்கேற்றபடி புரட்ட, இருட்டடிப்புச்செய்ய, மறைக்கவே முயற்சிப்பார். மக்கள் இப்படிப் போய்க் கொண்டிருப்பதன் காரணமென்ன?

தங்களுடைய நூற்கேள்வியறிவு, பழக்கவழக்கம், மனோ இச்சை என்பவை சரியானவையா, பிழையானவையா? என்ற எவ்வித ஆராய்வுமில்லாமல் குருட்டுத்தனமாய்ச் சரிதான் என்று நம்பிக்கொண்டு திடீர்முடிவுகட்டிவிடுவதே மக்கள் தவறான வழியில் போய்க்கொண்டிருப்பதற்கு முக்கிய காரணமாகும். இவ்வித மூடபுத்தியினால் ஏற்பட்ட யுக்தியை - சொந்தக் கருத்தைக் கொண்டு குர்ஆன், ஹதீஸுகளை அணுகக் கூடாதென்பதே நாம் முன்பு காட்டிய ஹதீஸுகளின் போதனை யாகும். அந்த ஹதீஸை இன்னுமொருமுறை அவதானியுங்கள். அதில் ‘‘எவர்தம் நோக்கப்படி விளக்கம் கூறுகிறாரோ’’ என்ற வசனம் இன்னுமோர் உண்மையை அறிவிக்கின்றது. நோக்கம் என்பது நிய்யத், விருப்பம், கொள்கை என்ற பொருளுடைய தாயிருப்பதனால் ஷிர்க்கென்ற தவறான நோக்கிலிருந்து கொண்டு விளக்கம் கூறுதல் என்ற பொருளை அவ்வசனம் உணர்த்துகிறது. அப்படியானால், நாம் காட்டிய முதலாவது ஹதீஸில் சொந்தக்கருத்து சரியாயிருந்தாலும் அவர் குற்றவாளியேதான் என்று ஏன் கூறப்படவேண்டும்? இப்படி ஒரு சந்தேகம் தோன்றலாம். சொந்தக்கருத்தின்படி ஒரு வசனத்திற்கு அல்லது சில வசனங்களுக்கு விரிவுரை கொடுப்பது சரியென்று கண்ட ஒருவர் அதே சொந்தக் கருத்தைக் கொண்டு மற்றும் வசனங்களுக்கும் விரிவுரை கொடுக்க முற்படலாமல்லவா? ஆகையால்தான் இது குற்றமென்று கணிக்கப்படுகிறது. தன் குறையறிவில் நிறையறிவான வேதவசனத்ததைக் கட்டுப்படுத்திய குற்றம் அவரைச்சார்கிறது.

இன்று உலமாக்களென்ற போர்வையில் உலாவும் மிகப்பெரும்பாலார் இவ்விதப் பின்பற்றலில் போய்க்

கொண்டிருப்பதனால் குர்ஆன், ஹதீஸுகளை மறுக்கவும் முற்படுகிறார்கள். இன்னோர் எந்தவொரு விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் இன்ன இமாம் எழுதியது, இன்ன மாமேதை எழுதியது என்று கூறிக்கொண்டு ஏதோவெல்லாம் நூற்களை ஆதாரங்காட்ட முற்படுகிறார்கள். இவர்கள் ஏதோவோர் இமாமைப் பின்பற்றாதவன் காபீர் என்று கூறுவது மட்டுமல்லாமல் எழுதியும் வைத்திருக்கிறார்கள். ஆனால் யாராவது ஒருவர் உங்களுடைய இமாம் யாரென்று இவர்களைக் கேட்டால் எங்களுடைய இமாம் குர்ஆன்தான் என்று கூறிக்கொள்கிறார்கள். இவர்களில் இன்னுமொரு கூட்டத்தார் இமாம்களை ஏற்கமுடியாதென்றும் இமாம்களுடைய நூற்களை ஏற்கக்கூடாதென்றும் குர்ஆனையே இமாமாகக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார்கள்.ஆனால், அவர்களின் வாதப்பிரதிவாதங்களின் தவறுகளை உணர்த்தக் குர்ஆனின் ஆதாரங்களைத் தூக்கும்போது உடனே அதை மறுக்கிறார்கள். முஹ்கமுவைப் பலகருத்துடைய முதஷாபிஹாத்தாக மாற்றுகிறார்கள். இது ஏன்? இவர்கள் வாயினால் குர்ஆனை ஏற்றுக்கொண்டோமென்று கூறிக்கொண்டாலும், இமாம்களை மறுக்கிறோமென்று கூறிக்கொண்டாலும் இவர்கள் உண்மையான இமாம்களாக ஏற்றுக்கொண்டிருப்பது இப்னு தைமியா, அப்துல் வஹ்ஹாப் போன்றோரையும் அவர்களுடைய நூற்களையும் தான். இமாம்களைப் பின்பற்ற வேண்டாமென்று கூறுகிற இவர்கள், தாங்களே வேறு இமாம்களைப் பின்பற்றித் தவறான பாதையிற் செல்கிறோமென்பதை உணர்வதேயில்லை.

உதாரணமாக, நபி(ஸல்) அவர்கள் பிறந்த அன்று முதன்முதலில் மீலாத்விழாக் கொண்டாடியவன் அபூலஹபாயிருப்பதால் அந்த முஷ்ரிக்கின் செயலை நாமும் பின்பற்றி மீலாத்விழா கொண்டாடக்கூடாதென்பது இவர்கள் வாதம். இது ஷிர்க்கென்பது இவர்கள் முடிவு. ஆனால், நாம் அனுஷ்டிக்கும் நோன்பு, ஹஜ்ஜுப் போன்ற கடமைகளை அபூஜஹ்லும் அனுஷ்டித்திருக்கிறானே! அந்த முஷ்ரீக் அனுஷ்டித்தவற்றை

நாமும் அனுஷ்டிப்பது ஷிர்க்காகாதா? என்று இவர்களைத் திருப்பிக்கேட்டால் மழுப்பமுறப்படுகிறார்கள். இஸ்லாத்தில் கேள்விக்கு இடமில்லையென்று உடனே பத்வாத்தயாரித்து விடுகிறார்கள். யாரோ சொல்லி, எழுதிவைத்த ஒன்றை பாடமிட்டுக்கொண்டு விதண்டாவாதஞ் செய்கிறார்கள். இவர்கள் தங்கள் ஆராய்வைக்கொண்டு எந்தவொரு முடிவையும் பெற்றுக்கொள்வதாய்த் தெரியவில்லை. இவ்வகைக் கூட்டத்தினர் இறைவனால் விதிக்கப்பட்ட ம∴கூல் என்ற ஆராய்ந்துணரும் அறிவை ஒப்புக்கொண்டவர்களுமல்ல; மன்கூல் என்ற வேதப்பிரமாணத்தை ஒப்புக்கொண்டவர்களுமல்ல. இவர்கள் கண் மூடித்தனமாய்ப் பிறரைப் பின்பற்றும் பின்பற்றல் வாதிகளேயா வார்கள். இவ்வகையினரை நாம் “இமாம் ஜமாஅத்தினர்” என்று கொள்ளலாமேயன்றி “ஸுன்னத்வல் ஜமாஅத்தினர்” என்று கூறமுடியாது.

எனவே, இமாம்களைப் பின்பற்றாதவன் காபீர் என்போரும், இமாம்களைப் பின்பற்றுபவன் காபீர் என்போரும், ஒரேவகையான முத்திரையிடப்பட்டவர்களே என்பதைத் தெளிந்த பகுத்தறிவுடைய மக்கள் அறிந்தே இருக்கிறார்கள். பின்பற்றல் வாதிகளான இவ்வகையினர் குர்ஆனை இமாமாக ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்வது வெறும் ஏமாற்று மந்திரமாகும்.

**குர்ஆன்: 31:21**

وَإِذَا قِيلَ لَهُمُ اتَّبِعُوا مَا أَنزَلَ اللَّهُ قَالُوا بَلْ
نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ آبَاءَنَا أَوَلَوْ كَانَ
الشَّيْطَانُ يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ السَّعِيرِ

**அவர்களை நோக்கி, "அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள்" என்று கூறபட்டால், அதற்கு அவர்கள் இல்லை எங்கள் மூதாதைகள் எதன் மீது இருக்கக்கண்டோமோ, அதனையே பின்பற்றுவோமென்று கூறுகிறார்கள்.அவர்களுடைய மூதாதைகளை ஷைத்தான் நரக வேதனையின் பால் அழைத்திருந்தாலுமா? (பின்பற்றுவார்கள்)**

(குர்ஆன் 5:104, 4:61 போன்ற வசனங்களையும் நோக்குக)

இவ்வித ஆயத்துக்கள் முஷ்ரிக்கீன்களை, காபிரின்களை நோக்கிக்கூறப்பட்டதென்று இக்கூட்டத்தினர் மழுப்பினாலும் அந்தமக்கள் கூறிய அதே கூற்றைத்தானே இவர்களும் கூறுகிறார்கள்! மூ:.மீன்களோ அல்லாஹ், றஸுலின் சொல்லை அப்படியே ஏற்று நடப்பார்களேயன்றி இப்படி விதண்டாவாதஞ் செய்யவேமாட்டார்கள்.

அபூஜஹில்கூட தான் இப்றாஹீம்(அலை) அவர்களுடைய மார்க்கத்தில் இருந்து கொண்டிருப்பதாகவே நம்பியிருந்தான். தன் மூதாதைகளைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றியதால் இப்றாஹீம்(அலை) அவர்களுக்கு ஒரு விக்கிரகத்தை உருவாக்கி வணங்கினான். இந்த தீயசெயலுக்கும் அவன் முஷ்ரிக்காய் அமைவதற்கும் காரணமாயிருந்தது அவனுடைய குருட்டுத்தனமான பின்பற்றல்தான். தன் மூதாதையரும் தானும் நேரான பாதையிலிருப்பதாக நம்பிக்கொண்டுதான் அவன் றஸுல் (ஸல்) அவர்களை வழிதவறியவர்? முர்த்தத் என்று கூறினான். இந்த அபூஜஹீலின் இயற்பெயர் "அபுல்ஹிகம்" என்பது. அறிவாளரின் அல்லது ஞானவான்களின் தந்தை என்பது அதன் பொருள். அபூஜஹீல் அறபுமண்ணில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தவன் அறபுப்பாஷையில் பாண்டித்தியமுடையவன். நபியின் பேச்சையும் குர்ஆன் வசனங்களையும் தெளிவாய்ச் சந்தேகமின்றி விளங்கிக் கொண்டதனால்தான் அவன் றஸுலை

நோக்கி *“உம்மை நாம் பொய்யராக்கவில்லை. ஆயினும் நீர் எதனைக் கொண்டு வந்தீரோ அதனையே பொய்யாகக் காணுகின்றோம்”* என்று கூறியிருக்கின்றான்.

இந்த அபூஜஹ்ல் றஸுல்(ஸல்) அவர்களுடைய பேச்சையும் குர்ஆன் வசனங்களையும் “இபாறத்”என்ற வெளிச்சத்தத்தினாலும், “தலாலத்”என்ற கருத்தினாலும், தெளிவாய் விளங்கியறிந்துங்கூட அதை ஒப்புக்கொள்ள முடியாமலிருந்தான்! இஸாறத் எனற சயிக்கினையைக் கொண்டும், “இஹ்திலாவ்” என்ற உவமானத்தை கொண்டும் விளங்கக்கூடிய ஆற்றலை அல்லாஹ் அவனுக்குக் கொடுக்கவில்லை. ஆனால், அவனுடனிருந்த உமரேபாறுக் (றலி) அவர்கள் அல்லாஹ்வின் ஹிதாயத்தைக்கொண்டு விளங்கியறிந்து கொண்டதனால் ஈமான் கொண்டார்கள். அபூஜஹ்ல் குர்ஆனையும் ஹதீஸையும் பொய்யாகவே கண்டான்.

*ஹதீஸ்:-*

*(முஹம்மதே!) நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்க வில்லை. எனினும், நீர் எதைக்கொண்டு வந்தீரோ அதையே பொய்யாகக் காணுகிறோமென்று அபூஜஹ்ல் கூறினான். அப்போது “நபியே! அவர்கள் கூறுவது உமக்குக் கவலையளிக்கின்றது என்பதைத் திட்டமாக நாமறிவோம். அவர்கள் உம்மைப் பொய்யராக்கவில்லை. ஆனால், இவ்வக்கிரமக்காரர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களையே பொய்யாக்கிப் புறக்கணிக்கின்றனர்” என்ற 6:33ம் வசனத்தை அல்லாஹ் அருளினான்.*

**அறிவிப்பவர்:-அலி(றலி)**
**ஆதாரம்:-திர்மிதி**

அபூஜஹ்ல் குர்ஆனையும் கலிமாவையும் பொய்யாக் கண்ட காரணந்தான் என்ன? அவன் குர்ஆனையும் றஸுல்

(ஸல்) அவர்களுடைய விளக்கவுரையையும் ஆராய, சிந்திக்க எடுத்துக்கொண்ட அடிப்படை பிழையாய் அமைந்திருந்தமையே! குர்ஆன் மூமீன்களின் ஈமானை உறுதிப்படுத்துவதாயும், முஷ்ரிக் கீன்களின் ஷிர்க்கை மிகைப்படுத்துவதாயும் அமைக்கப் பட்டிருக்கிறது. குர்ஆன் 2:26ம் வசனம் இதற்கு ஆதாரமாகும். எனவே, குர்ஆனை எந்த அடிப்படையில் அணுகுகிறோமோ அந்த அடிப்படைக்கேற்ற விளக்கமே கிடைக்குமென்பது உறுதி மனிதர்களில் மிகப்பெரும்பாலார் சரியான அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு குர்ஆன் ஹதீஸுகளை அணுகுவ தில்லை. முன்னோரிலும் மிகப் பலர் குர்ஆனை அணுகவேண்டிய முறைப்படி அணுகவில்லை.

*ஹதீஸ்:-*

*சிந்தித்து ஆராயாமல் குர்ஆன் ஓதுவதில் நன்மையில்லை. விளங்கியறியாத வணக்கம் ஒரு வணக்கமேயல்ல.என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர்:- அலி(றலி)**
**ஆதாரம்:- றஜீன்**

இன்றுள்ள பெரும்பாலான லேபல் உலமாக்கள் குர்ஆனின்பக்கம் மக்களை அழைப்பதாகக் கருதுவதும் அவர்களுடைய விளங்கங்களும், விரிவுரைகளும் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாயிருப்பதும் ஆராய்வாளர்கள் அறிந்த தொரு விஷயந்தான். இன்னோர், உரிய முறைப்படி குர்ஆன் ஹதீஸுகளை அணுகாமல் குருட்டுத்தனமான பின்பற்றலைக் கொண்டே அணுகுகிறார்கள். கண்மூடித்தனமான பின்பற்றலில் ஊறியிருப்பதனால் குர்ஆன் வசனங்கள் ஒன்றுக்கொன்று முரணாயிருப்பது போல இந்த அமாவாசைப் பேர்வழிகளின் அறிவுக்குத் தென்படுகிறது. குர்ஆனில் எவ்வித முரண்பாடும் கிடையாதென்று குர்ஆன் 4:82ம் வசனம் வலியுறுத்துகிறது.

**குர்ஆன்: 53:28**

وَمَا لَهُم بِهِ مِنْ عِلْمٍ إِن يَتَّبِعُونَ إِلَّا الظَّنَّ

وَإِنَّ الظَّنَّ لَا يُغْنِي مِنَ الْحَقِّ شَيْئًا

*இதை(வேதத்தை)ப்பற்றி அவர்களுக்கு யாதொரு ஞானமுங்கி டையாது. (ஆதாரமற்ற வீண்) கற்பனையைத்தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை. கற்பனை உண்மைக்கு முரணான யாதொன் றையும் உறுதிப்படுத்தாது.* (குர்ஆன் 4:61, 5:104, 31:21 போன்ற வசனங்களையும் கவனத்திற்கொள்க)

*ஹதீஸ்:-*

*இறுதிக்காலத்தில் ஆற்றல் அனுபவமில்லாதமடையர்கள் வருவார்கள், வெளித்தோற்றத்தில் வெளியரங்கமான தொழுகை, நோன்பு முதலாம் அமல்களில் மிகப் பேணுதலாயிருப்பார்கள். ஆனால், அவர்கள் கெட்ட கொள்கை(ஷிர்க்) உடையவர்களாகவும், பிசகான நம்பிக்கை(ஈமான்) கொண்டவர்களாகவும் இருப்பார்க ளென்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிப்பவர்:- அபூஸயீதில்குத்ரி(றலி)**
**ஆதாரம்:- புஹாரி**

இன்னும் பல ஹதீஸுகளைத் தரலாம். இவ்வளவையே போதுமாக்கிக் கொள்வோம். இப்போது பகுத்தறிவை நாம் எப்படி பயன்படுத்துவது என்பதைக் காண்போம். குர்ஆன் பகுத்தறிவுக்கு முரணாகுமா? என்பதை நோக்குவோம். உண்மையான யுக்தி (ம.்.கூல்) என்றால் என்னவென்பதையும் அறிந்துகொள்வோம்.

03

# பகுத்தறிவு என்றால் என்ன? பகுத்தறிவின் வேலை என்ன?

பகுத்தறிவு என்று மக்களிற் பெரும்பாலார் நம்பியுள்ள அறிவு மூன்று நிலைமைகளை ஒருங்கே பெற்றுக் கொண்ட தொன்றாகும். பகுத்துணரும் அறிவு இருட்திரையிற் சிக்கும்போது "வஹ்மு"(பேதபுத்தி) என்றும் ஒளித்திரையிற் கட்டுண்ணும்போது "நுண்ணறிவு"என்றும் இவ்விரு திரைகளிலிருந்தும் நீங்கும்போது "நூர்" என்றும் பெயர்பெறுகிறது. நாம் இதை நுட்பமாய் உணராவிடில் உண்மை பிடிபடாது. மேற்கூறிய அறிவின் நிலைமைகள் ஒவ்வொரு வரையறைக்கு உட்பட்டவையாகும். இவற்றில் பகுத்துணரும் பகுத்தறிவு எதுவென்பதை நோக்குவோம்.

ஒன்றுக்கொன்று முரணான பல பொருட்கள் அல்லது பல சொற்கள் அல்லது பல செயல்கள் இருப்பதை அறியும்போது அவற்றை ஒன்றொடொன்று ஒப்பிட்டு நோக்கி வேறுபாடு கண்டறியும் அறிவே பகுத்தறிவு என்பது. இந்த அறிவு சரி பிழை கணிப்பதுமல்ல, தீர்ப்புக்கட்டுவதுமல்ல, பிரித்து வேறுபாடு காண்பது மட்டுந்தான் அதன் தொழில். இந்த அறிவு உலகிலுள்ள இயங்கும் சிருஷ்டிகள் அனைத்திற்குமே (புற் பூண்டுகளுக்குக்கூட) இயல்பாகவே இறைவனாற் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் மனிதன் மட்டுமே உரிமை பாராட்ட முடியாது. இந்த அறிவு சரி பிழை கணிப்பதானால், இதற்கோர் உறுதுணை (எடுகோள்) அவசியமாகிறது. இந்தத்துணை பழக்க வழக்கம் என்ற இருட்திரையாயிருக்கலாம். அல்லது நூற்

கேள்வியறிவென்ற ஒளித்திரையாயிருக்கலாம். மனோ இச்சை என்பதும் இருள் ஒளித்திரைகளிலே புதைந்திருக்கிறது. பகுத்துணரும் அறிவு இதில் எதைத்துணையாய் எடுத்துக் கொள்கிறதோ அந்த அடிப்படையைக் கொண்டுதான் சரிபிழை கணிக்கிறது. விருப்பை, வெறுப்பை உருவாக்குகிறது. விரும்ப, வெறுக்க, தீர்ப்புக்கட்ட எந்த அடிப்படையை இந்த அறிவு எடுத்துக்கொள்கிறதோ அந்த அடிப்படையிலேயே இயங்குகிறது. இவ்வியக்கம் சரியானதாயிமிருக்கலாம்; பிழையானதாயிமிருக்கலாம். வஹ்மை அடிப்படையாய்க்கொண்ட தீர்ப்பைப் பிழை என்றும், "அகில்" என்ற நுண்ணறிவை அடிப்படையாய்க்கொண்ட தீர்ப்பை நூறுவீதமும் சரியென்றும் கூறமுடியாது. நுண்ணறிவும் ஒரு திரைதான்.

நூர் என்ற அறிவுடன் பகுத்தறிவு தீர்ப்புச்செய்வதில் எவ்விதப் பிழையுமே இருக்காது. ஆதலால், நாம் ஒரு விஷயத்தில் விசேஷமாய் தீனுடைய விஷயத்தில் குர்ஆன் மூலம் ஓர் உண்மையான தீர்ப்பை,முடிவைப் பெறுவதானால் குர்ஆன், ஹதீஹுகளை எந்த அடிப்படையில் எவ்வெவ்வழிகளில் எமது பகுத்தறிவு அணுகவேண்டுமென்பதை ஒவ்வொரு மனிதனும் தெளிவாய் அறிந்துகொள்ளவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். இல்லையானால் குர்ஆன் ஹதீஸுகளின் போதனையை எம்மால் உணர முடியாமலேயே போய்விடும்.

உலகமக்கள் விசேஷமாய் முஸ்லீம்கள் பற்பல கூட்டங்களாய், ஒன்றுக்கொன்று முரண்பட்ட வெவ்வேறு பிரிவுகளாய், ஒருவருக்கொருவர் ஜென்ம விரோதிகளாய் அமைந்திருப்பதற்குக் காரணம் குர்ஆனுடைய உண்மையான நோக்கமென்னவென்பதையும் எந்த அடிப்படையில் குர்ஆன், ஹதீஸுகளை நோக்குவதென்பதையும் தெளிவாய் அறிந்து கொள்ளாமல் மனம்போன போக்கிலும் குருட்டுத்தனமான பின்பற்றலிலும் மூழ்கிக்கொண்டு தத்தமது யுக்திப்படி குர்ஆன், ஹதீஸுகளை அணுகியதேயாகும்.

*ஹதீஸ்:-*
*அல்லாஹ் அறிவைப்படைத்து முன்னால் வருமாறு கூறினான். அது முன்னால் வந்தது. அதைப்பின்னால் போகுமாறு பணித்தான். அது பின்னாற் சென்றுவிட்டது. அப்போது அவன் உன்னைவிட மிகவும் உவப்பான தொன்றை நான் படைக்கவில்லை படைப்புக்களில் எனக்கு மிகவும் உவப்பானவர்கள் மீதுதான் உன்னை ஏற்றி அனுப்புவேன் என்று அல்லாஹ் கூறியதாக றஸூல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிப்பவர்:- இப்னு மஸ்வூத்(றலி)**
**ஆதாரம்:-றஜீன்**

இந்த ஹதீஸில் முன், பின் என்று கூறப்பட்டது அறிவின் ஏற்றவிறக்கத்தை-உயர்வுதாழ்வின் தன்மையை விளக்குவதற்காகவே முன் செல்லும் அறிவின் தன்மையை “அகில்” “நூர்” என்றும் பின் செல்லும் அறிவின் தன்மையை “வஹ்மு” (சபலபுத்தி) என்றும் கூறப்படும். முன் என்பது அல்லாஹ்வை அணுகுவதாயும் ஏறஇறங்கக்கூடியதாயிருக்கிறது. ஏறுதல், இறங்குதல் நாம் எடுத்துக்கொள்ளும் அடிப்படையைப் பொறுத்ததாகும். வஹ்முடன் கூடிய பகுத்தறிவு நரகத்தையும், நூருடன் கூடிய பகுத்தறிவு ஜன்னத்தையும் பெற உதவியாகும். நபிமாரல்லாதோரைப் பின்பற்றுவதால் வஹ்முவையும், நபிமாரை பின்பற்றுவதால் நூரையும் பெற்றுக் கொள்கிறோம். எனவே, குர்ஆனையே விளக்குகிறோம் என்று வாயாற் கூறுபவர்களை நாம் பின்பற்றுவதை விடுத்து, உண்மைக்கு உண்மையாய்க் குர்ஆனையும் அதனைப் பெற்றுத்தந்த எமது நபியின் ஹதீஸுகளையும் விபரணங்களையும் பின்பற்றுவதே அறிவுடைமையாகும். இந்த ஹதீஸில் எனக்குவப்பானவர்கள் என்று கூறுப்பட்டது இன்ஸையும் ஜின்னையும் குறிப்பிட்டதாகும். ஆதாரம்:-குர்ஆன் 52:56

*ஹதீஸ்:-*

*அண்மையில் என் சமுகத்தினரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். அப்போது ஒரு பிரிவார் ஏற்படுவார்கள்.அவர்கள் நன்மொழி கூறுவார்கள்.தீயசெயல் புரிவார்கள். குர்ஆனை ஓதுவார்கள்.அது அவர்கள் மார்பின் ஆரம்ப எலும்பையும் கடக்காது. (இருதயத்தில் அமையாது.) வேட்டைப் பொருளிலிருந்து அம்பு வெளிப்படுவதுபோல மார்க்கத்தை விட்டும் அவர்கள் அப்புறப்பட்டுவிடுவார்கள் பின்னர் திரும்பவும்மாட்டார்கள், அம்பு அதன் கூட்டை அடையும் வரை, அவர்கள் தாம் படைப்புகளில் மிகக்கெட்டவர் களாவார்கள். அவர்களைக் கொல்பவருக்கும் அவர்களால் கொல்லப்படுபவருக்கும் நல்வாழ்வுண்டாகட்டும்! குர்ஆனின் பக்கம் அவர்கள் அழைப்பார்கள். ஆனால் அதில் அவர்களுக்கு எவ்விதச் சம்பந்தமும் இருக்காது. அவர்களை எவர் கொல்கிறாரோ அவர் அல்லாஹ்வை நெருங்கியவர்களில் மிக மேலானவராயிருப்பார், என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நாயகமே! அவர்களின் அடையாளமென்னவென்று தோழர்கள் வினவினர்.அடையாளம் மொட்டையடிப்பது என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்:-அனஸ்(றலி)**
**ஆதாரம்:- அபூதாவூத்**

இந்த ஹதீஸில் பல உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. இன்றுள்ள வஹ்ஹாபிகளில் ஒரு பிரிவார் ஷெய்க்கிடமிருந்து பைஅத்(தீட்ச்சை) பெறும்போது தலைமுடியை மொட்டை யடித்துக் கொள்வதாக நாம் அறிகிறோம். ஆயினும், மொட்டையடித்தல் என்பதில் உண்மையை இருட்டடிப்புச்செய்து இஸ்லாத்தை மொட்டையடித்தல், கப்றுஸ்தானங்களை மொட்டையடித்தல் என்றும் பொருள்கூற இடமுண்டு. எமது அரசாங்கம், எமது காலம் அன்னவர்களைக் கொன்றொழிக்க அனுமதியளிக்காது. அப்படிக் கொன்றழிப்பது நியாயமுமாகாது.

மார்க்கத்தில் பலாத்காரம் இல்லை. மார்க்கம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மூமீனும் ஜிஹாது செய்தவர்களாகவே மரணியுங்கள் என்றும் ஒரு ஹதீஸ் காணப்படுகிறது. இதன்படி, மூமீன்களாகிய நாமும் ஜிஹாது செய்யத்தான் வேண்டுமென்றால் நமக்கு இலகுவானதொரு வழி அவர்களது கருத்துக்களை குர்ஆன் ஹதீஸுகளின் அடிப்படையில் பேச்சுமூலமும், எழுத்துமூலமும் எதிர்த்துப் போராடுவது மட்டுமே.

**குர்ஆன்: 14:28**

اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ بَدَّلُوْا نِعْمَتَ اللّٰهِ كُفْرًا
وَّاَحَلُّوْا قَوْمَهُمْ دَارَ الْبَوَارِ

**அல்லாஹ்வின் (அருளைக்) குப்ரைக்கொண்டு மாற்றித் தங்கள் மக்களையும் அழிவுக்கிடங்கில் தள்ளிவிட்டவர்களை நீர் பார்க்கவில்லையா?**

இவ்வாக்கியத்தின்படி எமது காலத்தில் மட்டுமன்றி றஸுல்(ஸல்) அவர்களுடைய காலத்திலும் பலர் உண்மையை மூடிமறைத்து இருட்டடிப்புச் செய்துதானிருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. காபீர் என்பது மூடுபவன், மறைப்பவன் என்ற பொருளுடையது. முன்வேதங்களிலுள்ள உண்மையை மறைத்தமையால்தான் இறைவன் அவர்களை காபீர்கள் என்று கூறுகிறான். ஆயினும், பெரும்பாலான தப்ஸீர்களில் காபீர் என்றால் நிராகரிப்பவன் என்றே பொருள் கூறப்பட்டிருக்கிறது. எனினும், காபீர் என்பதற்கு மூடுபவன், மறைப்பவன் என்பதே சரியான அர்த்தமாகும்.

**குர்ஆன்: 38:29**

كِتٰبٌ اَنْزَلْنٰهُ اِلَيْكَ مُبٰرَكٌ لِّيَدَّبَّرُوْٓا
اٰيٰتِهٖ وَلِيَتَذَكَّرَ اُولُوا الْاَلْبَابِ

**நாம் உமக்கு அருள்செய்திருக்கும் இவ்வேதம் மிக்க பாக்கிய முடையது. அறிவுடையோர் இதன் வசனங்களை ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக.**
(குர்ஆன் **54:17, 47:24, 30:58** போன்ற வசனங்களையும் எடுத்துக்கொள்க.)

அறிவுடையோர் என்பதில் இறைவன் குறிப்பிடும் அறிவு எது? எந்த அறிவைக் கொண்டு சிந்திப்பது? ஆராய்வது? மிகச்சுருக்கமாகக் கூறுவோம். ஏதாவதொரு தவறான தளையிற் கட்டுண்ட அறிவு அறிவேயல்ல. சரியான தளையிற்கட்டுண்டு (அதாவது தத்துவ உண்மைகளில் நின்று) ஆராயும் அறிவுக்கே "அறிவு" என்றும், இவ்வகையான அறிவைப்பயன்படுத்தி அனுமானிப்போரையே "அறிவுடையோர்" என்றும் இறைவன் கூறுகிறான். தத்துவம் என்ற தளை எமது ஆராய்வை, சிந்தனையை ஒருமுகப்படுத்துமாகையால் அதை நாம் தளை என்று கூறுதல் பொருந்தாது. நபிமார் காட்டிய வழியில் நின்று அடிமைத்தளையிலிருந்தும் அறிவை விடுவித்துக் குர்ஆன் ஹதீஸுகளை ஆராய, அனுமானிக்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அது கட்டாயக் கடமையென்றும் நான் கூறுவேன். மனித இனம் 73 கூட்டம் என்பதை நாம் அறிவோம். இதில் 72 கூட்டம் ஏதோவோர் உளநோயில் சிக்கியவர்களாகவும், ஒரேயொரு கூட்டம் மட்டுமே உளநோயிலிருந்து விடுபட்ட சுதந்திர புருடர்களாகவும், சாந்தியடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த உளநோயைத் தீர்க்கவே 124,000

நபிமாரைக்கொண்டு இறைவன் கலிமாவை அனுப்பியுள்ளான். இந்த கலிமா உளநோயைத் தீர்க்கும் சஞ்சீவியாயிருக்கிறது. இந்த சஞ்சீவியைக் கையாளும் விளக்கந்தான் குர்ஆன், ஹதீஸ் என்பவை.

**குர்ஆன்: 10:57**

يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءَتْكُمْ مَوْعِظَةٌ مِنْ
رَبِّكُمْ وَشِفَاءٌ لِمَا فِي الصُّدُورِ
وَهُدًى وَرَحْمَةٌ لِلْمُؤْمِنِينَ

**மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. (உங்களுடைய) இருதயங்களிலுள்ள நோய்களுக்கு அது சஞ்சீவியாகும். விசுவாசங்கொண்டவர்களுக்கு (அது) நேர்வழி காட்டியாகவும், ஓர்அருளாகவும் இருக்கிறது.**

இன்றுள்ள உளநோய் மருத்துவ நிபுணர்கள் எந்தவொரு மனிதனும் உளநோயற்றவனாயில்லை என்றும், உளநோய் எட்டுவகை என்றும் கூறுகிறார்கள். இந்த உளநோய்களுக்குப் பெரும்பாலும் எண்ண அலைகளைக் கொண்டு ஹிப்னாடிஸ (மெஸ்மரிஸ) முறைப்படி வைத்தியம் செய்கிறார்கள்.மேலும், மின்காந்த அலைகளைக் கொண்டும் வைத்தியம் செய்கிறார்கள். இந்த முறையை மூளைச்சலவை என்று நாம் கூறலாம்.

ஆனால், நாம் காட்டிய ஆயத்தில் எல்லா உளநோய்களுக்கும் சஞ்சீவி ஒன்றேயென்று அறிவிக்கப் பட்டிருப்பதால் மனிதனுடைய எல்லா உளநோய்களையும் கலிமத்துத்தையிபா குணப்படுத்தும் என்பதை அறிகிறோம்.

எனவே, கலிமத்துத்தையிபாவின் விளக்கவுரையும் ஆதார நூலுமான குர்ஆனை அணுகுவதானால் கலிமாவைக் கொண்டே அணுகவேண்டுமென்பதும் புலப்படுகிறது. கலிமத்துத்தையிபாவை விளங்கிக்கொள்ளத் தெளிந்தபகுத்தறிவும், ஆராய்வும் வேண்டும். எனவே, குர்ஆனை அறிவைக்கொண்டு அறியமுடியாதென்பதும், குர்ஆன் அறிவுக்கு முரண் என்பதும், குர்ஆனுக்குச் சரியான யுக்தியின்படி தீர்ப்புக்கட்ட முடியாதென்பதும் வஹ்மு என்ற பேதபுத்தியின் பிதற்றலாகும். மனிதனால் விளங்கமுடியாத வொன்றை இறைவன் வேதமாய் அனுப்பமாட்டான். அறபுப் பாஷைதான் குர்ஆன் விளக்கத்திற்கு அவசியமென்றால் அபூஜஹ்ல் கூட ஈமான்கொண்டிருப்பானே. குர்ஆனுக்கு "புர்கான்" என்றொரு பெயருண்டு. "பிரித்தறிவிப்பது" என்பது அதன் அர்த்தம். பிரித்தறிவிப்பது எது? அதுதான் பகுத்தறிவு. இந்தப் பகுத்தறிவு கலிமாவை அடிப்படையாகக்கொண்டு குர்ஆனை அணுகுமானால் அவ்வறிவும் மஃகூலென்ற உண்மையான யுக்தியேயாகும்.

குர்ஆனில் சுமார் 70 இடங்களில் தொழும்படியும், சுமார் 340 இடங்களில் சிந்திக்கும்படியும் இறைவன் கூறியுள்ளதை நாமறிவோம். அப்படியானால், சிந்திக்கும் அறிவுடைய மனித யுக்தியினால் குர்ஆனை விளங்க முடியாதென்பது விதண்டாவாதமல்லவா? மனிதஅறிவுக்கு விளங்காத எந்தவொரு விஷயத்தையும் மனிதன் ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பதையறிந்த இறைவன் மஃகூல்(யுக்தி), மன்கூல் (வேதவசனங்கள்) என்ற இருமூலப் பிரமாணங்களில் முதலிடம் யுக்திக்கே என்றறிவிக்கின்றான். யுக்தியினால் உண்மையை உணராதவன் குர்ஆன், ஹதீஸுகளை ஏற்றுக்கொண்டதாய் வாதிடுவது ஏமாற்றுவித்தையாகும். நாம் முன்பு காட்டிய ஹதீஸுகளில் சுட்டிக்காட்டப்பட்ட யுக்தி என்பது வஹ்முவை நோக்கியதாயும், குர்ஆனில் கூறப்பட்ட ஆராயும் யுக்தி அகிலென்ற நூரை நோக்கியதாயுமிருக்கிறது.

பிரித்துக்காணும் இப்பகுத்தறிவு, தவறான வழியைப் பின்பற்றலில் எடுத்துக்கொண்டால் “வஹ்மு” என்றும் சரியான வழியைப் பின்பற்றலில் எடுத்துக்கொண்டால் “அகில்” அல்லது “நூர்” என்றும் பெயர்பெறுகிறது. வஹ்மு மூடர்களின் தலையிலும், அகில் அறிஞர்களின் தலையிலும் இயங்குகிறது. நபிமார்களின் தலை உண்மையில் தலையேயல்ல. அறிஞர்களின் தலையில் மாட்டிக்கொள்வதும் இரவல்மூளையை எடுத்துக் கொள்வதாகுமே என்று நீங்கள் கூறலாம். ஆம்! அது இரவல்மூளையேதான்! ஆனால், அதை நாம் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால் நபிமார்களான அறிஞர்களிலிருந்து வெளியான உண்மை என்னவென்பதை நாம் அறியாதவர்களாகவும். நபிமாருக்கெதிரான முஷ்ரீக்குகளான அறிவிலிகளின் கொள்கையைத் தெளிவாய் அறிந்தவர்களாகவும், அதிலேயே ஊறியவர்களாகவும் இருக்கிறோம்.

நாம் பகுத்தறிவை முறையாய் பயன்படுத்துவதானால் நபிமாரின் கொள்கை என்னவென்பதை அறியவேண்டும். அதன்பின் நபிமார்களினதும் நபிமார்களுக்கெதிரானவர்களினதும் கொள்கைகளை ஒன்றொடொன்று ஒப்பிட்டு நோக்கி, அகிலென்ற அனுமான அறிவின் மூலம் உண்மையான ஆதாரங்களைக் கொண்டு தீர்ப்புப்பெற வேண்டும், அப்போதுதான் எம்மை நாம் புத்திஜீவிகளென்று கூறமுடியும். றஸூல்(ஸல்) அவர்கள் எம்மை விட்டு சுமார்1410 வருடங்களுக்கு முன்பே மறைந்துவிட்டார்கள். அவர்களுடைய தோழர்களும் எம்முடனில்லை. குர்ஆன் றஸூல்(ஸல்) அவர்களின் மூலம் எமக்கருளப்பட்ட வேதமென்று நம்பியிருக்கிறோம். அந்த வேத நூலில் மனிதருக்கு வேண்டிய சகலவிஷயங்களும் அடங்கியிருப்பதாயும் எமது தர்க்கங்களுக்குரிய சரியான தீர்ப்புகள் கூறப்பட்டிருப்பதாயும் அறிகிறோம்.

**குர்ஆன்: 16:64**

وَمَآ أَنزَلْنَا عَلَيْكَ ٱلْكِتَٰبَ إِلَّا لِتُبَيِّنَ لَهُمُ ٱلَّذِى
ٱخْتَلَفُوا۟ فِيهِ ۙ وَهُدًى وَرَحْمَةً لِّقَوْمٍ يُؤْمِنُونَ

**அன்றி, (நபியே!) இவர்கள் எவ்விஷயத்தில் தர்க்கித்துக் கொண்டார்களோ அதனைத் தெளிவாக்குவதற்காகவே (இந்த) குர்ஆனை உம்மீது நாம் இறக்கிவைத்தோம்: அன்றி, (இது) விசுவாசங்கொண்ட மக்களுக்கு நேர்வழியாகவும், ஓர் அருளாகவும் இருக்கிறது.**

நேர்வழி, கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதுதான் என்பதையும் அதை விளக்குவதே குர்ஆன் என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். எமது முன்னோர் தர்க்கித்துக் கொண்ட விஷயம் எது? எமது றஸூலுடனும் முந்திய நபிமாருடனும் எம்முன்னோர்களான மக்கள் தர்க்கித்துக்கொண்ட விஷயம் கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதுடைய விஷயந்தான். எனவே, தௌஹீதிலேற்படும் சந்தேகங்கள் அத்தனைக்கும் குர்ஆன் உண்மையான விளக்கந்தருமென்பது நிச்சயமான உண்மை. அப்படியானால், நாம் நபிமாரின் கொள்கை யென்னவென்பதையும், இஸ்லாத்தின் உண்மையென்ன வென்பதையும் கண்டறிவற்கு முதற்சாட்சியாய்க் குர்ஆனையும் இரண்டாம் சாட்சியாய் ஹதீஸையும் - அதாவது மன்கூலென்ற 2வது பிரமாணத்தை எடுத்துக் கொண்டு உண்மையான யுக்தியென்ற - மஃகூலென்றழைக்கப்படும் 1வது பிரமாணத்தைக் கொண்டு எமது சிந்திக்கும் - ஆராயும் அறிவை (அகிலை) நீதிபதியாய் வைத்துத்தான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். எனவே, எந்த அடிப்படையில் நாம் குர்ஆன் ஹதீஸுகளை ஆராயவேண்டுமென்பதை நோக்குவோம்.

# 04

# எந்த அடிப்படையில் குர்ஆன் ஹதீஸ்களை விளங்குவது?

*ஹதீஸ்:-*

*நீங்கள் ஏன் போர்புரியக் கூடாது என்று ஒருவர் என்னிடம் வினவினார். அதற்கு நான், திட்டமாக இஸ்லாத்தின் கடைக்கால் ஐந்து செயல்களில் நிறுவப்பட்டிருக்கிறது. அவையாவன,*

*1வது:- உண்மையாக அல்லாஹ் தவிர இலாஹ் இல்லையென்றும் உண்மையாக முஹம்மது(ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் திருத்தூதருமாவர் என்றும் சாட்சி கூறுவதும்*

*2வது:- தொழுகையைக்கடைப்பிடித் தொழுகுவதும்,*

*3வது:- ஸக்காத் கொடுத்து வருவதும்,*

*4வது:- றமழான் மாதம் நோன்பு நோற்பதும்,*

*5வது:- ஹஜ்ஜ் செய்வதும், என்று அண்ணல் நபி கூறியதை நான் செவியுற்றேன் என்று கூறினேன்.*

**அறிவிப்பவர்:- அப்துல்லாஹ் இப்னு உமர் (றலி)**

**ஆதாரம்:- முஸ்லிம், திர்மிதி, முஅத்தா, நஸாயி**

இதைப்போன்ற இன்னும் சில ஹதீஸுகள் தென்படுகின்றன. சில ஹதீஸுகளில் நோன்பு, ஸக்காத் என்பவை முன்பின்னாகவும் கூறப்பட்டுள்ளன. அதைப்பற்றி நமக்கு இப்போது சர்ச்சையில்லை.இஸ்லாத்தின் ஆரம்பம் கலிமாவை ஒப்புக்கொள்வதுதான் என்பதை இந்த ஹதீஸ் உறுதிப்படுத்துகிறதென்பதே இங்கு நமக்கு அவசியமாகும். நபி(ஸல்) அவர்களின் முக்கிய தோழர்களில் ஒருவர்தான் இச்செய்தியை நமக்கு அறிவித்திருக்கிறார். உலக முஸ்லிம்கள் யாவரும் இதை ஒப்புக் கொண்டிருப்பதால் பிற மனிதர்களுடைய சாட்சியம் (இஜ்மாஉ) இங்கு நமக்கு அவசியமல்ல. இந்த ஹதீஸை நமக்கறிவித்த றஸூலின் தோழர், இந்த ஹதீஸின் மூலம் நமக்கறிவிக்கும் செய்திக்கு குர்ஆன் சாட்சியமளிக்கிறதா என்பதை இப்போது நோக்குவோம். அதாவது, இஸ்லாத்தின் ஆரம்பம் அல்லது அடிப்படை கலிமாதானாவென்பதை இன்னும் தெளிவாக அறிந்து கொள்வோம்.

**குர்ஆன்: 41:43**


مَا يُقَالُ لَكَ إِلَّا مَا قَدْ قِيلَ لِلرُّسُلِ مِنْ قَبْلِكَ
إِنَّ رَبَّكَ لَذُو مَغْفِرَةٍ وَذُو عِقَابٍ أَلِيمٍ

**உமக்கு முன்னர் வந்த றஸூல்மார்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையன்றி உமக்குக் கூறப்படவில்லை.**

இவ்வாயத்தின்படி, நபிமார் றஸூல்மார்களுக்கு அல்லாஹ் ஏதோவொன்றைக் கூறியனுப்பியுள்ளான் என்பது தென்படுகிறது. அது எது?

**குர்ஆன்: 21:25**

وَمَآ أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِيٓ
إِلَيْهِ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعْبُدُونِ

**உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்குக்கெல்லாம், "நிச்சயமாக என்னைத்தவிர வேறு இலாஹு இல்லை, எனக்கே இபாதத்துச் செய்யுங்கள்" என்று நாம் வஹி அறிவிக்காமலில்லை.** (குர்ஆன் 7:59, 7:65, 7:73, 7:85 போன்ற வசனங்களையும் கவனத்திற்கொள்க. )

இவ்வாக்கியத்திற் கூறப்பட்ட ''இபாதத்'' என்ற சொல் தொழுகை நோன்பு முதலாம் அமல்களை மாத்திரம் குறிப்பிட்டதல்ல. எமது ''திருக்குர்ஆன் தீர்ப்பு'' என்ற நூலின் 1ம் பாகத்தில் இதனைத் தெளிவாய் விளக்கியுள்ளேன். இவ்வாயத்தின்படி, கொள்கை மந்திரத்தில் அதாவது, லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமத்துத்தையிபாவினால் உணர்த்தப்படும் கொள்கை விளக்கத்தில் நபிமார்கள் யாவரும் ஒன்றுபட்டவர்கள் என்பது நிச்சயமான உண்மை. நபிமார்கள் யாவரும் ஒரே கலிமாவையே கொண்டு வந்தார்கள். இபாதத் செய்யும்படி ஏவினார்கள். இவ்விரு விஷயங்களிலும் நபிமார்கள் எவரும் வேறுபட்டவர்களேயல்ல.

நாம் முன்பு காட்டிய ஹதீஸில் முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ள லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைத்தான் எல்லா நபிமாரும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நபிமாரில் எவரும் பல கலிமாக்கள் இருப்பதாய் எப்போதும் கூறிய தாயில்லை. முன்பு காட்டிய அந்த ஹதீஸில் மேலும் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற கடமைகளும் தரப்பட்டி ருப்பதாய்க் கூறப்பட்டுள்ளது. இக்கடமைகள் நாவினாற் கூறிய

கலிமாவை உள்ளத்தில் பதித்துக்கொள்ளக் கையாளப்படும் அணுகுமுறைகளென்பது தென்படுகிறது. எப்படியென்றால், முன் நபிமாருடைய காலத்தில் இந்தக் கடமைகள் வெவ்வேறாய் இருந்திருக்கின்றன.

**குர்ஆன்: 22:67**

لِكُلِّ أُمَّةٍ جَعَلْنَا مَنسَكًا هُمْ نَاسِكُوهُ فَلَا يُنَازِعُنَّكَ
فِي الْأَمْرِ وَادْعُ إِلَىٰ رَبِّكَ إِنَّكَ لَعَلَىٰ هُدًى مُّسْتَقِيمٍ

**ஒவ்வொரு வகுப்பாருக்கும் (அவ்வக்காலத்திற் கேற்றவாறு) அவர்கள் தங்கள் இறைவனை நெருங்குவதற்குரிய (வணங்குவதற்குரிய) வழியை நாம் ஏற்படுத்தியிருந்தோம். (உம்காலத்தில் உமக்கேற்படுத்திய) வழியைப் பற்றி அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்யவேண்டாம். அன்றி, நீர் அவர்களை இறைவனின்பால் அழையும், நிச்சயமாக நீர்தான் நேரானவழியில் இருக்கின்றீர்.**

இவ்வாக்கியத்தின்படி நபிமார்கள் வணங்கும் கடமைகளில் வேறுபாடுடையவர்கள் என்பது புலப்படுகிறது. அப்படியானால், நபிமார் யாவரும் ஏகோபித்துக் கூறிய இபாதத் என்பது தொழுகை, நோன்பு முதலாம் அமல்களைச் சுட்டியதல்லவென்பது தென்படுகிறது. 21:25ம் ஆயத்தை மீண்டுமொருமுறை நோக்குங்கள் அவ்வாயத்தில் இபாதத் என்ற சொல்தான் பாவிக்கப்பட்டுள்ளதேயல்லாமல் அமல், ஸலாத் என்ற சொற்கள் பாவிக்கப்படவேயில்லை. எனவே, இபாதத்தென்றால் தொழுகை, நோன்பு முதலாம் அமல்களைச் சுட்டியதென்று ஒரு சிலர் கூறுவது வஹ்மு(பேதபுத்தி) ஆகும். நபிமார்கள் இவ்வாறு கடமைகளில் வேறுபாடுடையவர்களாயிருப்பினும் அவர்கள் அனைவரும் கலிமாவைக் கொண்டு

மக்களை இஸ்லாத்தின்பால் அழைத்த விஷயத்தில் ஒன்றுபட்டவர்களாகவும் முஸ்லிம்களாகவும், மூமீன்களாகவும் இருந்திருக்கின்றனர். குர்ஆன் 12:101, 6:84, 10:72 போன்ற ஆயத்துக்கள் இவ்வுண்மைக்கு ஆதாரமாயிருக்கின்றன.

எனவே, இஸ்லாமென்பது கொள்கையை நோக்கியதாயும் அமல்கள் என்பவை அந்தக் கொள்கையை உறுதிப்படுத்தும் செயல்களாயும் இருக்கின்றன என்பதை நாம் மறுக்கவே முடியாது. இப்போது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீனுல் இஸ்லாத்தின் உயிர் கலிமாவேதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நமக்கிங்கு அவசியமானது இவ்வுண்மை மட்டுமே. குர்ஆனையும் ஹதீஸையும் ஒப்பிட்டு நோக்கித்தான் மஃகூலென்ற சிந்திக்கும் ஆராயும் அறிவின்படி இம்முடிவை நாம் எடுத்திருக்கிறோம். இதை உறுதிப்படுத்தும் வேறு சாட்சியங்களுண்டா என்பதை அதாவது மஃகூலென்ற யுக்தியின்படி நாம் எடுத்துக் கொண்ட முடிவு சரியா என்பதை அறிய மன்கூலென்ற வேத ஆதாரங்களை நோக்குவோம்.

*ஹதீஸ்*

*ஒருமுறை மூன்று காபீர்கள் றஸுல்(ஸல்) அவர்களுடைய சமூகத்துக்கு வந்து, முஹம்மதே! நீர் அல்லாஹ்வுடன் வேறு எந்த இலாஹுவையும் அறியமாட்டீரா? என்று வினவினார்கள். அப்போது நபியவர்கள் "லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக்கொண்டே நான் நபியாக அனுப்பப்பட்டேன். இந்தக் கலிமாவின் பக்கமே மக்களை நான் அழைக்கிறேன்" என்று கூறினார்கள். இது சம்பந்தமாகவே "குல்ஐயுஸையின் அக்பரு ஷஹாததன்" என்ற ஆயத்து அருளப்பட்டது.*

**அறிவிப்பவர் :-அப்பாஸ் (றலி)**
**ஆதாரம்:-துர்ருல் மன்துார்**

**குர்ஆன்: 6:19**

قُلْ أَيُّ شَيْءٍ أَكْبَرُ شَهَادَةً ۖ قُلِ اللَّهُ ۖ شَهِيدٌ بَيْنِي وَبَيْنَكُمْ ۚ
وَأُوحِيَ إِلَيَّ هَٰذَا الْقُرْآنُ لِأُنذِرَكُم بِهِ وَمَن بَلَغَ ۚ أَئِنَّكُمْ لَتَشْهَدُونَ
أَنَّ مَعَ اللَّهِ آلِهَةً أُخْرَىٰ ۚ قُل لَّا أَشْهَدُ ۚ قُلْ إِنَّمَا
هُوَ إِلَٰهٌ وَاحِدٌ وَإِنَّنِي بَرِيءٌ مِّمَّا تُشْرِكُونَ

**சாட்சிகளில் மிகப்பெரியது எதுவென நீர்(அவர்களைக்)கேளும். அல்லாஹ்வே எனக்கும் உங்களுக்குமிடையில் சாட்சியாக இருக்கிறான். இந்தக் குர்ஆனைக் கொண்டு உங்களுக்கும் (அதை) அடைந்தவர்களுக்கும் நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவே எனக்கு இது வஹி மூலம் அருளப்பட்டுள்ளது. நிச்சயமாக அல்லாஹ்வுடன் வேறு எந்த இலாஹும் இருப்பதாக நீங்கள் உறுதியாகக் கூறுவீர்களா? என்றும் நீர் கேளும். அவ்வாறு நான் சாட்சி கூறமாட்டேன். என்று நீர் கூறி நிச்சயமாக அல்லாஹ்தான் இலாஹுவாயிருக்கிறான்(அவனுக்கு) இணை கற்பிப்பதிலிருந்து நிச்சயமாக நான் அப்பாற்பட்டவனென்றும் கூறுவீராக.**

இவ்வாக்கியத்தின்படி கலிமா ஒன்றொயொன்று தானென்றும், ஷிர்க்கை இணையை நீக்கவே கலிமத்துத்தையிபாவைக் கொண்டு நபிமாரை இறைவன் அனுப்பினான் என்றும், இப்போது அறிந்துகொண்டோம்.

**குர்ஆன்: 12:108**

قُلْ هٰذِهٖ سَبِيْلِيْٓ اَدْعُوْٓا اِلَى اللّٰهِ عَلٰى بَصِيْرَةٍ اَنَا

وَمَنِ اتَّبَعَنِيْ وَسُبْحٰنَ اللّٰهِ وَمَآ اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ

**(நபியே!)நீர் கூறும், இதுவே எனது வழி. நான் அல்லாஹ்வின் பக்கமே அழைக்கிறேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றியவர்களும் இருந்து கொண்டிருக்கிறோம். அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன். ஆகவே, இணையேற்படுத்து வோரில் நானும் ஒருவனல்ல.**

**குர்ஆன்: 23:73**

وَاِنَّكَ لَتَدْعُوْهُمْ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ

**(நபியே!) நிச்சயமாக நீர் அவர்களை நேரான வழிக்கே அழைக்கிறீர்.**

இவ்வாயத்துக்களின்படி, றஸூல்(ஸல்) அவர்கள் கலிமாவைக் கொண்டே மக்களை அல்லாஹ்வின்பக்கம் அழைத்தார்களென்பதையும், நேரானவழியென்பது கலிமா வினால் உணர்த்தப்படும் தௌஹீதே என்பதையும் கலிமத்துத் தையிபா ஒன்றேயொன்றுதான் என்பதையும், நாம் மறுக்கவே முடியாது. முன்காட்டிய ஆதாரங்களின்படி, நமது றஸூல்(ஸல்) மட்டுமல்லாமல் உலகில் தோன்றிய 124,000 நபிமாரும் இதே அடிப்படையில்தான் போதனை செய்தார்களென்பதையும் நாம் மறுக்க முடியாது. மறுத்தால் நாம் விதண்டாவாதிகள் என்பதே அதன் அர்த்தம்.

நாம் சுருக்கமாய்த்தந்த ஆதாரங்களின்படி, எல்லா நபிமாரும் இஸ்லாத்தையே மார்க்கமாகக் கொண்டிருந்தார்

களென்பதும், இவர்கள் போதனை செய்து அமுல்படுத்திய அந்த இஸ்லாத்தின் ஆணிவேர் அல்லது உயிர் கலிமாவே என்பதும், கலிமாவை விளக்கமளிக்கும் சட்ட நூற்கள்தான் நபிமாரால் கொண்டுதரப்பட்ட ஸுஹ்புகள், வேதநூற்கள் என்பதும், வேதநூலில் ஏற்படும் மயக்கங்களைத் தெளிவுபடுத் துவதையே நபிமார்கள் உபதேசித்த ஹதீஸுகளென்பதும், மஃ கூலென்ற யுக்தியின்படியும், மன்கூலென்ற வேதவசனங்களின் படியும், அந்த வேத வசனங்களின் விளக்கவுரையான ஹதீஸுகளின் படியும் மிகத்தெளிவாய் நிரூபணமாகியுள்ளது.

எனவே, உள்ளாலுள்ளபடி கலிமாவின் கருத்தைக் கண்ட றிந்த பின் அதன் வழிகாட்டலோடுதான் குர்ஆன் ஹதீஸுகளை அணுகவேண்டும். கலிமாவுக்கு நேர்முரணாக அபூஜஹ்லின் பிடிவாதத்தில் இருந்து கொண்டு மனம்போன போக்கில் குர்ஆனை ஆராய்வது வாழ்நாளை வீணாக்குவதாகவே அமையும். எனவே, கலிமாவே குர்ஆனின் கருப்பொருளாக இருப்பதனால் குர்ஆனையும், ஹதீஸுகளையும் கலிமாவைக் கொண்டே அணுக வேண்டுமென்பதைத் தெரிந்து கொண்டோம்.

**குர்ஆன்: 17:9**

إِنَّ هَٰذَا الْقُرْآنَ يَهْدِي لِلَّتِي هِيَ أَقْوَمُ وَيُبَشِّرُ
الْمُؤْمِنِينَ الَّذِينَ يَعْمَلُونَ الصَّالِحَاتِ أَنَّ لَهُمْ أَجْرًا كَبِيرًا

**நிச்சயமாக இந்தக் குர்ஆன் மிக நேரானவழியை அறிவிக்கிறது. அன்றி, விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்வோருக்கு நிச்சயமாக மிகப்பெரிய கூலியுண்டு என்றும் நன்மாராயங் கூறுகிறது.**

(குர்ஆன் நேர்வழியை - கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதென்ற நேர்பாதையை விளக்குவதற்காகவே தரப்பட்ட தென்பதை நாம் மறுக்கமுடியாது.)

இவ்விஷயம் இன்னும் எமக்குத் தெளிவாய் உறுதியாக வேண்டும் என்பதற்காக இன்னும் குர்ஆனைக் கொஞ்சம் நோக்குவோம்.

**குர்ஆன்: 3:7**

هُوَ الَّذِيْٓ اَنْزَلَ عَلَيْكَ الْكِتٰبَ مِنْهُ اٰيٰتٌ مُّحْكَمٰتٌ
هُنَّ اُمُّ الْكِتٰبِ وَاُخَرُ مُتَشٰبِهٰتٌ ۭ فَاَمَّا الَّذِيْنَ
فِيْ قُلُوْبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُوْنَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاۗءَ
الْفِتْنَةِ وَابْتِغَاۗءَ تَاْوِيْلِهٖ ڤ وَمَا يَعْلَمُ تَاْوِيْلَهٗٓ اِلَّا
اللّٰهُ ڤ وَالرّٰسِخُوْنَ فِي الْعِلْمِ يَقُوْلُوْنَ اٰمَنَّا بِهٖ ۙ
كُلٌّ مِّنْ عِنْدِ رَبِّنَا ۚ وَمَا يَذَّكَّرُ اِلَّآ اُولُوا الْاَلْبَابِ

**அவனே இவ்வேதத்தையும் உம்மீதருளினான். இதில் (தெளிவாகவும்) குறிப்பாக(வும்) உள்ள (ஒரே கருத்துடைய) அர்த்தத்தையுடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதாம் இவ்வேதத்தின் அடிப்படை, மற்றவை பல கருத்துக்களுக்கு இடம் பாடானவை. எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கின்றதோ அவர்கள் அதில் குழப்பத்தை உண்டுபண்ணக் கருதிப் பல அர்த்தங்களையே தேடிப் பின்பற்றுவார்கள். ஆயினும் இதன் உண்மைக்கருத்தை அல்லாஹ்வையன்றி எவரும் அறியார். கல்வியறிவில் நிலைபெற்றவர்களோ இதனையும் நாங்கள் விசுவாசித்தோம். யாவும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதாம் என்று கூறுவார்கள். அறிவுடையோரையன்றி மற்றெவரும் நல்லுபதேசமடையமாட்டார்கள்.**

இவ்வாயத்தில் குறிப்பாகவுள்ள (ஒரேகருத்துடைய) வசனங்களுமிருக்கின்றன என்றும், இவையே வேதத்தின் அடிப்படை என்றும் இறைவன் கூறுகிறான். இந்த ஒரே கருத்துடைய வசனங்களை "முஹ்கமு" என்று இவ்வாயத்துக் கூறுகிறது. கலிமத்துத்தையிபா ஒன்றேயோன்றுதான். ஆனால், இவ்வாயத்துப் பன்மையில் ஏன் கூறப்படவேண்டும்? கலிமாவை உறுதிப்படுத்தும் வசனங்கள் தனித்தனிக் கலிமாக்களாயிருப் பதனாலேயே பன்மையிற் கூறப்பட்டிருக்கிறது. அவை கலிமாவுடன் சமபெறுமதியுடையவை என்பது விளக்கப் பட்டிருக்கிறது. அப்படியானால், கலிமாவும் அதை உறுதிப்படுத்த அருளப்பட்ட வசனங்களும் ஒரே கருத்துடையவை (முஹ்கமு) தான் என்பது நிரூபணமாகிவிட்டது. இப்போது, முஹ்கமு என்றால் என்னவென்பதையும் அதன் வரைவிலக்கணம் என்ன வென்பதையும் ஆராய்வோம்.

# 05

# முஹ்கமு என்றால் என்ன?

முஹ்கமு என்பதற்கு ஆறு அம்சங்கள் பொருந்தியிருக்க வேண்டுமென்று குர்ஆன், ஹதீஸுகள் விளக்கந்தருகின்றன. இவற்றை ஆதாரங்களுடன் நிரூபணஞ் செய்வதானால் மிக நீண்ட நேரத்தைச் செலவிட வேண்டியேற்படும். ஆதலால் இன்றுள்ள முஸ்லிம்கள் 73 கூட்டத்தினரும் நான் கூறப்போகிற விபரத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாலும், அகராதிகளும் அதே விபரத்தை ஒப்புக்கொண்டிருப்பதாலும் இங்கே நமக்கு அவசியமான அளவுமட்டும் விளக்குகிறேன்.

**முஹ்கமு வசனங்களுக்குள்ள ஆறு அம்சங்களும் பின்வருமாறு:-**

1வது.
குறிப்பாகவுள்ள ஒரேயொரு கருத்தை மட்டுமேயுடையது, எழுதப்படிக்கத் தெரியாத உம்மிகளான பாமரமக்களாலும் தெளிவாய் விளங்கிக்கொள்ளக்கூடியது.
(ஏற்பதும், மறுப்பதும் வேறுவிஷயம்.)

2வது.
திடப்பிரமாணத்திலுள்ளது. சந்தேகப்பட வேண்டாத தெளிவானது. வாசகநடை கருதியபொருளுக்குநேர்நடையிலிருக்கும்.

3வது.

இறைவனால் சட்டமாக்கப்பட்டது. ஹுக்கூமாக்கப்பட்டது. தஹ்வீல் என்ற வலிந்துரைக்கு இடந்தராதது.

4வது.

மாற்றப், புரட்ட, இருட்டடிப்புச் செய்யக்கூடாதது. செய்ய முடியாதது. தக்லீஸு என்ற குறிப்பித்தலுக்கு இடமளிக்காதது.

5வது.

பல அர்த்தங்களைக் கற்பிக்க முடியாதது. கற்பிக்கக் கூடாதது. நுஸ்க் என்ற புரட்டலுக்கு இடந்தராதது.

6வது.

இபாரத்துன்னஸ் (சத்தப்பிரமாணம்), தலாலத்துன்னஸ் (கருத்துப்பிரமாணம்), இஸாரத்துன்னஸ் (சயிக்கினைப் பிரமாணம்) இஹ்திலாவுன்னஸ் (உவமானப் பிரமாணம்) ஆகிய நான்கு மூலப்பிரமாணங்களின்படியும் ஒரே கருத்தையே வெளிப்படுத்தக்கூடியது.

மேலே கூறிய ஆறு அம்சங்களையும் ஏற்றுக் கொண்டவை எவையோ அவைதான் முஹ்கமு வசனங்கள் என்பவை. இந்தஆறு அம்சங்களுகளுக்கும் மாறுபட்டிருப்பவையே முதஷாபிஹாத் என்ற பல கருத்துடைய வசனங்கள் என்பவை. எனவே, ஒரு முஹ்கமு வசனத்துக்கு எம்முடைய அறிவின்படி, கற்பனை யூகப்படி பொருள் கொள்ளமுடியாது. உதாரணமாக, முஹ்கமுவான ஒரு வசனத்தில் “கை” அல்லது “முகம்” என்று கூறப்பட்டால் அதற்கு உண்மையான கை அல்லது முகம் என்பதே அர்த்தமன்றி வேறு எவ்வித அர்த்தமுமே கிடையாது. முதஷாபிஹாத்தென்ற பல கருத்துடைய வசனங்களில் “கை” அல்லது “முகம்” என்ற சொற்கள் இடம்பெற்றால் அச்சொற்களுக்கு இடத்திற்கும் அவசியத்திற்கு மேற்றபடி நாம் பொருள்கொள்ளலாம். இவ்விபரம் குர்ஆனை விளங்குவதற்குரிய முக்கிய அடிப்படைகளில் ஒன்றாயிருப்பதால் குர்ஆனை ஆராயும் நாம் இதை எக்கட்டத்திலும் மறக்கவேகூடாது.

குர்ஆனில் முஹ்கமு, முதஷாபிஹாத், லாஹிறு, நஸ்ஃ, முபஸ்ஸறு போன்ற பல தினுசான ஆயத்துக்கள் உள்ளன. இவற்றில் முஹ்கமுவைக் கொண்டேயன்றித் தௌஹீதை உறுதிப்படுத்த முடியாது. எமது முதல் நூலான "ஈமானின் உண்மையை நீ அறிவாயா?" என்ற நூலில் இதைத் தெளிவாய் விளக்கியிருக்கிறேன். கலிமா முஹ்கமுவைச் சேர்ந்தது என்பதை மறக்கவேண்டாம்.

இஸ்லாத்தின் அடிப்படையான, உயிரான கலிமாவை முஹ்கமு என்று அறிந்தவர்கள் ஆலிம்களாக இருப்பார்கள். இவர்கள் கலிமாவுக்குள்ளது ஒரேயொரு பொருளே என்பதை அறிந்தவர்களாக இருப்பார்கள். கலிமாவுக்குப் பலபொருட்கள் உண்டென்றோ லாஹிர், பாத்தின் உண்டென்றோ கூறமாட்டார்கள். நமது மூதாதைகளில் மிக நீளமான பட்டப் பெயர்களில், ஜுப்பாக்களில் அமாவாசை ஆலிம்களாகயிருந்த ஒரு சிலர்தான் கலிமாவுக்குப் பல கருத்துக்களைக் கற்பனை பண்ணி நூற்களை எழுதியுள்ளார்கள் என்பது அவர்களைப் பின்பற்றிய மிகப் பெரும்பாலான மக்கள் அறியாதவொரு விஷயந்தான். இஸ்லாத்தின் முதன்முதலில் ஏற்பட்ட பித்அத் இந்தப் புரட்டல்தான். இந்தக் கற்பனையான அடிப்படையை வைத்தக்கொண்டுதான் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய நாயன் என்று வலிந்துரை கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயம் எமது முதல் நூற்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கலிமாவை நிரூபணஞ்செய்யவே குர்ஆன் அருளப்பட்டதென்பதைப் புரிந்துகொள்ளாதோர் கலிமாவின் அடிப்படையில் குர்ஆனை நோக்காமல் தங்கள் வஹ்முக்கேற்றபடி குர்ஆனை நோக்குவதால்தான் இஸ்லாம் இன்று உயிரற்றதாய்க் காட்சியளிக்கிறது.

லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமத்துத்தையிபாவை நிருபிப்பதே குர்ஆன் ஹதீஸுகளின் கடமையென்றால், கலிமாவுக்கு முரணான ஒருவசனங்கூடக் குர்ஆன் ஹதீஸில்

இடம்பெற முடியாது. எனவே, நாம் குர்ஆன் ஹதீஸுகளை விளங்கி உண்மைகாண வேண்டுமென்றால் கலிமாவை அடிப்படையாகக் கொண்டே நாம் ஆராய்வு செய்யக் கடமைப் பட்டுள்ளோம். கலிமாவுக்குப் பல கருத்துக்களைக் கற்பனை பண்ணிக்கொண்டு மனம்போன போக்கில் குர்ஆனை அணுகும் போது குர்ஆன் வசனங்கள் - விசேஷமாய் முஹ்கமு வசனங்கள் ஒன்றுக்கொன்று முரணாகவே தென்படும். ஆதலால், கலிமாவின் உண்மையைத் தெளிவாய் விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையிலே குர்ஆனை அணுகவேண்டுமென்பதை மீண்டும் கூறிவைக்கிறேன்.

பெரும்பெரும் மேதைகள் கூடக் கலிமாவுடைய விஷயத்தில் கண்மூடித்தனமான பின்பற்றலில் ஊறியிருக்கிறார்கள் என்பதையும், கலிமாவுக்கு நான்கு அல்லது பல பொருட்கள் உண்டென்று கூறுவதும் எழுதுவதும், குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான படுபொய்யும், புரட்டலுமாகும் என்பதையும் அறிவுடைய மக்கள் தீரஆராய்ந்தறிவது மிகஅவசியமாகும்.

**குர்ஆன்: 2:159**


إِنَّ الَّذِينَ يَكْتُمُونَ مَا أَنزَلْنَا مِنَ الْبَيِّنَاتِ وَ
الْهُدَىٰ مِن بَعْدِ مَا بَيَّنَّاهُ لِلنَّاسِ فِي الْكِتَابِ
أُولَٰئِكَ يَلْعَنُهُمُ اللَّهُ وَيَلْعَنُهُمُ اللَّاعِنُونَ

**நேர்வழியையும் தெளிவான அத்தாட்சிகளையும் நாம் அருளி மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவுபடுத்திய பின்னும் (அவற்றை) எவர்கள் மறைக்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ்வும் சபிக்கிறான் சபிப்போரும் அவர்களை சபிக்கின்றனர்.**

**குர்ஆன்: 2:176**

ذٰلِكَ بِأَنَّ اللّٰهَ نَزَّلَ الْكِتٰبَ بِالْحَقِّ ۗ
وَإِنَّ الَّذِيْنَ اخْتَلَفُوْا فِي الْكِتٰبِ لَفِيْ شِقَاقٍ بَعِيْدٍ

**இதன் காரணம்: நிச்சயமாக அல்லாஹ் (முற்றிலும்) உண்மையாகவே இவ்வேதத்தை அருளியிருக்க அதன் வசனங்களை மறைப்பதுதான். மேலும், வேதத்தைப் புரட்டுகிறவர்கள் நிச்சயமாக (நேர்வழியை விட்டு)ப் பிரிந்து வெகுதூரத்தில் இருக்கின்றனர்.**

முஹ்கமு வசனங்கள் சட்டமாக்கப்பட்டவையும் ஒரே கருத்துடையயவையுமாகும் என்ற விபரத்தில் இன்னும் தெளிவு தேவையெனக்கண்டால் குர்ஆனிலுள்ள 47:20ம் ஆயத்தில் “ஸூறத்துன்முஹ்கமதுன்” என்றும் 68:36, 37:154 போன்ற வசனங்களில் “கைபதஹ்கமூன்” என்றும் கூறப்பட்டுள்ளதை ஆராய்க. இன்னும் அவசியமானால் 22:52, 11:1, 47:20, 22:112, 38:22,26, 4:65, 5:43, 3:79, 5:50 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்ந்து தெளிவுபெறுங்கள்.

இங்கே,நமது நபிமார்களையும் அவர்களை எதிர்த்து நின்ற நம்றூத், பிர்அவுன், அபூஜஹ்ல் போன்றோரையும் ஓரளவு நோக்குவோம். எமது “ஸுன்னத்வல் ஜமாஅத்தினரை அறிந்து கொள்வது எப்படி?” என்ற நூலில் இதுபற்றித் தெளிவாய் விளக்கியுள்ளேன். இப்போது அதன் பொழிப்பை மட்டும் தருகிறேன். நபிமார்கள் அனைவரும் அல்லாஹ்வுடன் அவனல்லாத வேறு இலாஹு இல்லையென்பதையே வலியுறுத்தியுள்ளார்கள். நபிமார்கள் கலிமாவுக்குக் கொண்டிருந்த பொருள் “அல்லாஹ் தவிர இலாஹு(சிருஷ்டி) இல்லை” என்பதே இதற்கு ஆதாரம்.

**குர்ஆன்: 7:85**

وَإِلَىٰ مَدْيَنَ أَخَاهُمْ شُعَيْبًا ۚ قَالَ يَٰقَوْمِ اعْبُدُوا
اللَّهَ مَا لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرُهُ ۖ قَدْ جَاءَتْكُم بَيِّنَةٌ
مِّن رَّبِّكُمْ فَأَوْفُوا الْكَيْلَ وَالْمِيزَانَ وَلَا تَبْخَسُوا
النَّاسَ أَشْيَاءَهُمْ وَلَا تُفْسِدُوا فِي الْأَرْضِ بَعْدَ
إِصْلَاحِهَا ۚ ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِن كُنتُم مُّؤْمِنِينَ

**அவனைத்தவிர உங்களுக்கு வேறு இலாஹு (வணங்கப்படுகிற சிருஷ்டி) இல்லை.**

**குர்ஆன்: 21:22**

لَوْ كَانَ فِيهِمَا آلِهَةٌ إِلَّا اللَّهُ لَفَسَدَتَا ۚ
فَسُبْحَانَ اللَّهِ رَبِّ الْعَرْشِ عَمَّا يَصِفُونَ

**வானம் பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத இலாஹுகள் (சிருஷ்டிகள்) இருந்திருந்தால் அவ்விரண்டும் கேட்டையடைந்திருக்கும்.**

**குர்ஆன்: 27:64**

أَمَّنْ يَبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيدُهُ وَمَنْ يَرْزُقُكُمْ مِنَ السَّمَاءِ وَالْأَرْضِ
ءَإِلَٰهٌ مَعَ اللَّهِ قُلْ هَاتُوا بُرْهَانَكُمْ إِنْ كُنْتُمْ صَادِقِينَ

**அல்லாஹ்வுடன் வேறு இலாஹு(சிருஷ்டி) இருக்கிறதா? (இல்லை) நீங்கள் உண்மை சொல்பவர்களாயிருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டுவாருங்கள்.**

**குர்ஆன்: 43:84**

وَهُوَ الَّذِي فِي السَّمَاءِ إِلَٰهٌ وَفِي الْأَرْضِ إِلَٰهٌ وَهُوَ الْحَكِيمُ الْعَلِيمُ

**அவனே வானத்திலும் இலாஹுவாய்(சிருஷ்டியாய்)ப் பூமியிலும் இலாஹுவாய்(சிருஷ்டியாய்) இருக்கிறான்.**

**குர்ஆன்: 47:19**

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ وَلِلْمُؤْمِنِينَ
وَالْمُؤْمِنَاتِ وَاللَّهُ يَعْلَمُ مُتَقَلَّبَكُمْ وَمَثْوَاكُمْ

**நிச்சயமாக அல்லாஹ்வைத்தவிர வேறு இலாஹு(சிருஷ்டி) இல்லையென்பதை நீர் அறிந்துகொண்டு, விசுவாசங்கொண்ட ஆண்களுக்காகவும், விசுவாசங்கொண்ட பெண்களுக்காகவும், உமக்காகவும் பாவமன்னிப்பைக் கோருவீராக. உங்கள் நடமாட்டத்தையும் தங்குமிடங்களையும் அல்லாஹ் நன்கறிவான்.**

(இவை போன்ற பிற ஆயத்துக்களையும் எடுத்துக்கொள்க.)

இவ்வித ஆயத்துக்களின்படி நபிமார்களின் கொள்கை அதாவது, கலிமாவுக்கு அவர்கள் கொண்டிருந்த பொருள் “அல்லாஹ்வையன்றி இலாஹு (சிருஷ்டி) இல்லை” என்பதே. இதை அறிவுடையோர், குர்ஆனை ஏற்றுக்கொண்டோர் மறுக்க முடியாது. இலட்சசோப இலட்சம் இலாஹுகள் இருந்து கொண்டிருந்த போதுதான் இவ்வாயத்துக்கள் அருளப்பட்டன வென்பதை நாம் அறிந்திருக்கிறோம். கலிமாவின் பொருளை இலகுவாய் விளங்கக்கூடிய சில விபரங்களை முதலில் விளக்கிக் காட்டி அதன்பின் கலிமத்துத்தைபாவின் உண்மையான பொருளை விளக்குவதே நல்லதென்று நினைக்கிறேன். பொறுமையடைக.

**குர்ஆன்: 37:35,36**

إِنَّهُمْ كَانُوٓا إِذَا قِيلَ لَهُمْ لَآ إِلَٰهَ إِلَّا ٱللَّهُ يَسْتَكْبِرُونَ

وَيَقُولُونَ أَئِنَّا لَتَارِكُوٓا ءَالِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُونٍ

**அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று அவர்களுக்குக் கூறப்பட்டால் நிச்சயமாக அவர்கள் கர்வங்கொண்டு, என்னே! பைத்தியங்கொண்ட ஒரு கவிவாணருக்காக நாங்கள் எங்களுடைய இலாஹுகளை மெய்யாகவே விட்டுவிடுவோமா என்று அவர்கள் கூறுகின்றனர்.**(இன்னும் 38:5,38:7,39:3 போன்ற ஆயத்துக்களையும் கவனத்திற்கொள்க.)

இதன்படி, நபிமாருக்கு மாறான அபூஜஹ்ல் போன்றோர் அல்லாஹ் வேறு என்றும் வணங்கப்படுகிற இலாஹு அல்லாஹ்வின் வேறானதென்றுந்தான் உறுதி கொண்டிருக்கின் றார்கள் என்பதை அறிவுடையோர், குர்ஆனை ஒப்புக் கொண்டோர் மறுக்கமுடியாது. மூமீன்களின் கொள்கைக்கு முஷ்ரீக்குகளின் கொள்கை நேர்விரோதமானதுதானே! இப்போது,

எமது அறிவுக்கு வேலை கொடுப்போம். உலகில் தோன்றிய 124,000 நபிமார்களில், ஓரிருவரைத்தவிர ஏனையோர் எழுதப் படிக்கத் தெரியாத உம்மிகளேயாவர். எமது றஸுல்(ஸல்) அவர்களும் எழுதப்படிக்கத் தெரியாத உம்மி நபியேதான்! முன் நபிமார்கள் உம்மி மக்களிடையேதான் கலிமாவைக் கூறினார்கள். எமது றஸுல்(ஸல்) அவர்களும் உம்மி நபியாய் இருந்து கொண்டு உம்மிகளான பாமரமக்களிடையேதான் கலிமாவைக் கூறியிருக்கிறார்கள்.

**குர்ஆன்: 62:2**

هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُو عَلَيْهِمْ
آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِن
كَانُوا مِن قَبْلُ لَفِي ضَلَالٍ مُّبِينٍ

**உம்மிகளுக்கு அவர்களில் நின்றுமே ஒரு றஸூலை அனுப்பினான்.**

உம்மி நபியால் கூறப்பட்ட கலிமாவைக் கேட்ட உம்மிகளான பாமரமக்கள் கலிமாவின் கருத்தைத் தெளிவாய் விளங்கிக்கொண்டதனால்தான் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் மறுத்திருக்கிறார்கள். உம்மி என்ற சொல்லில் வேறு சில நுட்பங்களுமுண்டு. அவ்விபரம் இங்கே அவசியமில்லை. கலிமா பல கருத்துடையதாய் இருந்திருந்தால் அதை பாமரமக்களால் விளங்கிக்கொள்ள முடியாது. எனவே பாமரமக்களாலும் இலகுவாய் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரேயொரு கருத்துடையதே கலிமத்துத்தையிபா என்பது உறுதியாகிறது. மன்கூலென்ற வேத ஆதாரப்படியும், ம.ஃகூலென்ற யுக்தியின்படியும் கலிமத்துத் தையிபா ஒன்றேயென்றும் அது ஒரேயொரு கருத்தை மட்டுமே உடையதென்றும் நிரூபணமாகிவிட்டது. ஆதலால், மார்க்க வழிகாட்டிகளான உலமாக்கள் இனிமேலாவது மக்களுக்கு

உண்மையை உணர்த்தி இஸ்லாத்துக்கு உயிரூட்ட முன்வருவார்களானால் இம்மை மறுமைப் பயன்களைப் பெறமுடியும் என்பதையும் இல்லையேல் இறை தண்டனையை இம்மையிலும், மறுமையிலும் ஏற்கவேண்டி வருமென்பதையும் கூறிவைக்கவிரும்புகிறேன்.

**குர்ஆன்: 6:39**

وَالَّذِينَ كَذَّبُوا بِآيَاتِنَا صُمٌّ وَبُكْمٌ فِي الظُّلُمَاتِ مَن يَشَإِ
اللَّهُ يُضْلِلْهُ وَمَن يَشَأْ يَجْعَلْهُ عَلَىٰ صِرَاطٍ مُّسْتَقِيمٍ

**எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றனரோ அவர்கள் இருள்களில்(தட்டழியும்) செவிடர்களாகவும் ஊமையர் களாகவும் இருக்கின்றனர். அல்லாஹ் தான் நாடியவர்களை தவறான வழியில் விட்டுவிடுகிறான். அவன் விரும்பியவர்களை நேரான வழியில் செலுத்துகிறான்.**(இவ்வாயத்தில் குறிப்பிட்ட இருள்கள் பழக்கவழக்கம், நூற்கேள்வியறிவு, மனோஇச்சை என்ற மூன்று திரைகளைக் குறிப்பதாகும்.)

தெளிந்த அறிவோடு நோக்கிப் பார்த்தால் அல்லாஹ் வையன்றி அவனுடன் எதுவுமில்லையென்ற உண்மையை உலகுக்குணர்த்துவது நபிமாரின் குறிக்கோளாகவும், அல்லாஹ்வுடன் அவனல்லாத இலாஹுᵘம் உண்டென்பது அபூஜஹ்ல் போன்றோரின் நம்பிக்கையாகவும் இருந்திருக்கிறது. இப்போது கட்சிப்பற்றற்ற அறிவோடு இருந்துகொண்டு குர்ஆன் ஹதீஸᵘகளின் கூற்றை நம்பியே நாம் இந்த முடிவுக்கு வந்துள்ளோம். இதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படக் காரணமே இல்லை.

# 06

# றஸூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் பெற்றிருந்த கல்வி ஞானம் எது?

அப்பாஸ்(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட, நாம் முன்பு தந்த ஹதீஸை இங்கு நாம் மீண்டும் சிறிது கவனத்திலெடுக்க வேண்டும். "ஹிக்மத்" என்ற சரியான கல்வி ஞானமின்றிக் குர்ஆனுக்கு விளக்கமளிப்பவன் குற்றவாளி யென்றால், றஸூல்(ஸல்)அவர்களும் ஸஹாபாக்களும் எந்தக் கல்விஞானத்தைக் கொண்டு குர்ஆனுக்கு விளக்கமளித்தார்கள் என்பதை நாம் அறியவேண்டும். றஸூலும் ஸஹாபாக்களும் பெற்றிருந்த கல்வி ஞானம் என்பது பாடசாலை, மத்ரஸா, பல்கலைக்கழகம் போன்றவற்றில் பெற்றுக்கொண்ட கல்வி ஞானமல்ல. அவர்கள் பெற்றிருந்த தௌஹீதென்ற (கலிமா வினால் உணர்த்தப்படும்) கொள்கை விளக்கமே அந்தக் கல்வி ஞானமாகும். இந்த ஞானக்கல்வியைக் குர்ஆன் "ஹிக்மத்" என்றும் "தஸ்கியா" என்றும் ஹதீஸுகள் "இஹ்ஸான்" என்றும் பெயர் சூட்டியிருக்கின்றன. ஆரிபீன்களான அவுலியாக்கள் இக்கல்விக்கு "தஸவ்பு" என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

*ஹதீஸ்:-*

*நபி(ஸல்) அவர்கள் மாஆது(றலி) அவர்களை எமன்நாட்டுக்கு அனுப்பியபோது அவர்களை நோக்கி, உம்மிடம் தீர்ப்புத்தேடி ஏதாவது வழக்குகள் கொண்டு வரப்பட்டால் நீர் எவ்விதம் தீர்ப்பு வழங்குவீர் என்று*

*கேட்டனர். அல்லாஹ்வின் குர்ஆனின்படி தீர்ப்பு வழங்குவேன் என்றார்கள். நபியவர்கள், நீர் அதற்குரிய கட்டளையைக் காணாவிட்டால்? என்று வினவினர். அல்லாஹ்வின் தூதருடைய வழமைப்படி தீர்ப்பு வழங்குவேன் என்று அவர்கள் கூறினார்கள். நபியவர்கள் அல்லாஹ்வின் தூதருடைய நடைமுறையில் நீர் காணாவிட்டால்? என்று வினவினர். அதற்கு அவர்கள், என் புத்தி(யுக்தியை)க் கொண்டு ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவேன். ஆராய்வதில் குறைவு செய்யமாட்டேன் என்று கூறினார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் மாஆது (றலி) அவர்களின் நெஞ்சில் தட்டிக்கொடுத்துப் புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியதே. அவன்தான் அல்லாஹ்வுடைய தூதுவரின் தூதுவருக்கு அல்லாஹ்வுடைய தூதுவர் திருப்தியுறும் வகையில் அருள் புரிந்தான் என்று கூறினார்கள்.*

ஹாரிஸ் இப்னு அம்று(ரலி) அவர்கள் முஆவியா(ரலி) வாயிலாக அறிந்து அறிவிக்கப்பட்டது.

*ஆதாரம்:- அபூதாவுத், திர்மிதி*

எந்தெந்த அடிப்படையில் எவ்வெவற்றை ஆராய்வதென்ற உண்மை இந்த ஹதீஸில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

முன்சென்ற நபிமார்களும், எமது றஸுல்(ஸல்) அவர்களும், அவர்களின் தோழர்களும் அல்லாஹ்வுடன் பிறிதில்லை என்ற கலிமாவின் உண்மையை அடிப்படையாய்க் கொண்டுதான் ஸுஹ்புகளையும், முன்வேதங்களையும், குர்ஆனையும் விளங்கியிருப்பார்கள். இதை அறிவுள்ள மனிதனால் மறுக்கமுடியாது. அறிவுத் தெளிவில்லாத அமாவாசைகள், அபூஜஹ்லின் கொள்கையில் ஊறிய அதிகாரிகள் ஆகிறாவில் எமக்கு எவ்வித உதவியும் சிபாரிசும் செய்யவேமாட்டார்கள். நாம் குற்றவாளிகள்தான் என்று இறை

முன்னிலையில் நிரூபிக்கப்பட்டாலும் கலிமாவின் துணை கொண்டும் எமது றஸுல்(ஸல்) அவர்களின் ஸபாஅத்தைக் கொண்டும் நாம் ஏதோவொரு மீட்சியைப்பெறமுடியும். ஆதலால், இவ்விஷயத்தில் அலட்சியம் செய்யாமல் முழுக்கவனஞ் செலுத்தவேண்டியது மிகமிக அவசியமாகும்.

*ஹதீஸ்:-*

*நாயகமே! தங்களுடைய ஸபாஅத்துக்குப் பாத்திரமானவர் எவர் என்று நான் வினவினேன். அதற்கு அவர்கள், என் ஹதீஸ்களில் உமக்குள்ள ஆர்வத்தைக்கண்ட நான் உமக்கு முன் எவரும் இதைப்பற்றி வினவமாட்டார்கள் என்று எண்ணினேன் என்று கூறி "எவர் கலப்பற்ற மனத்துடன் லா இலாஹ இல்லல்லாஹ் எனக்கூறுகிறாரோ அவரே மறுமையில் என் ஸபாஅத்துக்குப் பாத்திரமானவர்" என்று கூறினார்கள்.*

**அறிவிப்பவர்:- அபூஹுறைறா (றலி)**

**ஆதாரம் :- புகாரி**

வணக்கத்திற்குரிய நாயன் ஒருவனே என்று கூறுவதற்குக் கலப்பற்றமனமும் கலிமாவும் அவசியமல்ல. எனவே, கலிமாவில் ஏதோவோர் அகமியம் உண்டென்று தென்படுகிறது. குர்ஆனில் கூறப்படும் கொடிய பாபிகள் என்பது யாரென்பதை ஆராய்ந்தால், லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா கிடைக்கப்பெற்றும் அதை உதாசீனம் செய்தவர்களே கொடியபாபிகள் என்பது தென்படுகிறது. எனவே, கலிமா விஷயத்தில் ஒவ்வொருவரும் முழுக்கவனஞ்செலுத்த வேண்டியது மிகமிக அவசியமாகும்.

குர்ஆனை விளங்குவதற்கு ஐந்து வழிகள் இருப்பதாய்க் குர்ஆன் ஹதீஸுகள் விளக்கந்தருகின்றன. உலக முஸ்லிம்கள் யாவரும் விளங்க ஐந்து வழியுண்டு என்ற இவ்வுண்மையை ஏற்றுக் கொண்டிருப்பதால் நாம் இதற்குரிய ஆதாரங்களை இங்கே விபரிக்கவில்லை. விளங்கக் கூடிய ஐந்து வழிகளை

மட்டும் இங்கே தருகிறேன். கலிமாவைக் கொண்டே குர்ஆனை அணுக வேண்டும் என்ற உண்மையை மறந்து விடாதீர்கள். நீங்கள் மறந்துவிட்டால் நான் தரப்போகிற விளக்கம் உங்களை கபோதிகளாய்மாற்றி மீண்டும் அபூஜஹ்லின் பாதையிலேயே செலுத்திவிடும். ஆதலால், கலிமாவின் அடிப்படையைக் கொண்டே நாம் குர்ஆனை ஆராய முற்படுகிறோம் என்பதை அடிக்கடி நினைவுகூர வேண்டியது அவசியமென்று கூறுகிறேன்.

இஸ்லாத்தின் அடிப்படை அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காமல் இருத்தலே என்பதை உலக முஸ்லிம்கள் யாவருமே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இணை கற்பித்தல் என்னும் ஷிர்க்குடைய விஷயத்தில் நல்லடியார்கள் நீங்கலாகவுள்ள மக்கள் கண்மூடித்தனமான பின்பற்றலில் ஊறி வழிதவறிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் காணுகிறேன். எமது முதல் நூற்களில் ஷிர்க்கென்றால் என்னவென்ற விஷயத்தைக் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் முதலாம் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு நிரூபித்துக் காட்டியுள்ளேன். ஆயினும் மக்களில் பலர் தௌஹீதுடைய விஷயத்தில் இன்னும் தெளிவடைய வேண்டும் என்பதற்காகவே இந்நூலை எழுதியிருக்கிறேன். இணை கற்பித்தல் என்பது இறைவனால் மன்னிக்கப்படமுடியாத மாபெருங்குற்றமென்று குர்ஆன் ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன. இக்குற்றத்திலிருந்தும் விடுபடாத மனிதன் பல்லாயிரம் வருடங்கள் அமல் செய்தாலும் அவன் இம்மை மறுமையில் வெற்றி பெறவேமாட்டான் என்றும், தன்னிறைவு அடையவேமாட்டான் என்றும் வேதம் வலியுறுத்து வதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

# 07

# இணை என்றால் என்ன?

இணை, சமம், ஒப்பு, உவமை, நிகர் என்றால் அவற்றின் உண்மையான விபரம் என்னவென்பதை இங்கே சிறிது விபரித்துக் காட்டியபின் குர்ஆனை விளங்கும் வழிகளை அணுகுவோம். இறைவனுடைய வாஜிபான ஸிபத்து (அவசியமான பண்பு)களில் சிலவற்றை முதலில் நோக்குவோம்.

1. இறைவன் நிலையாய் இருந்து கொண்டிருப்பவன். (அழிவில்லாதவன்)
2. இறைவன் பார்ப்பவன்.
3. இறைவன் கேட்பவன்.
4. இறைவன் பேசுபவன்.
5. இறைவன் சக்தியுடையவன்.
6. இறைவன் அறிபவன்.

இவ்வளவையும் எடுத்துக் கொள்வோம். இவற்றை முன்மாதிரியாய்க் கொண்டு பிறவிஷயங்களை நீங்களே சிந்தனை செய்து தெளிவுபெறுங்கள். இப்பண்புகள் இன்ஸானாகிய எம்மிடத்திலும் இருக்கின்றன. அல்லாஹ்வேறு, இன்ஸான் (சிருஷ்டி)வேறு எனக்கொண்டால் அல்லாஹ்வுக்கு இன்ஸான் இணையாய், நிகராய், ஒப்பாய், சமமாய் இருக்கிறான் என்றாகும். எப்படியெனில், எமது இடது கைக்கு வலது கை இணையாய்,

ஜோடியாய், ஒப்பாய் இருக்கிறது. கைகளுக்குக் கால்களின் ஸூறத் (தோற்றம்) வேறுபட்டிருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று ஜோடிதான், இணைதான், சமம்தான் என்பதை நாம் மறுக்க முடியாது. இவை இடத்தால் வேறுபட்டிருப்பதால்தான் இணையாய், ஜோடியாய் அமைகின்றன. சூட்சுமமான என் உயிர் பௌதிகமான என் உடலுக்கு வேறு என்றால் இணை, ஜோடி ஆகும். ஆணாகிய எனக்குப் பெண்ணாகிய என் மனைவி இணை, ஜோடி ஆவாள். வெள்ளை நிறத்துக்குக் கறுப்பு நிறம் இணையாய், ஜோடியாய் இருக்கிறது. இவற்றைப் போல் உலகிலுள்ள எவ்விஷயத்தை வேண்டுமானாலும் சிந்தனை செய்யுங்கள். நீருக்கு நெருப்பும், வெள்ளைக்குக் கறுப்பும் ஒன்றுக்கு மற்றொன்று நேர்முரணாயிருந்தாலும் அவை ஒன்றுக்கு மற்றொன்று இணை என்னும் ஜோடியாய், சமமாய், நிகராய், ஒப்பாய்த்தான் இருக்கின்றன. கோபத்துக்கு இரக்கம் ஜோடிதான், இணைதான், சமம்தான். ஒன்றுடன் மற்றொன்று உண்டென்பதே "இணை" என்பதன் அர்த்தமாகும்.

இறைவன் இருந்து கொண்டிருக்கிறான் என்றால் நானுந்தான் இருந்து கொண்டிருக்கிறேனே! இறைவன் அழிவில்லாதவன் நான் என்றுணரும் என் றூஹு"ம் அழிவில்லாததுதான். நானும் பார்க்கிறேன் இறைவனும் பார்க்கிறான்; நானும் கேட்கிறேன் இறைவனும் கேட்கிறான்; நான் கண்கொண்டு பார்க்கிறேன் இறைவன் கண்ணின்றிப் பார்க்கிறான்; இவ்வகையில் நான் அவனுக்கு இணை(ஜோடி) தான். நான் செவி கொண்டு கேட்கிறேன் இறைவன் செவியின்றிக் கேட்கிறான். இவ்வகையில் நான் அவனுக்கு இணை(ஜோடி) தான். நான் நாவைக் கொண்டு பேசுகிறேன் அவன் நாவின்றிப் பேசுகிறான். நானும் ஒரு குறிப்பிட்ட அளவு சக்தியுடையவன். இறைவன் பூரணசக்தியுடையவன். நானும் ஒரு குறிப்பிட்ட அளவு அறிகிறேன் இறைவன் பூரணமாய் அறிகிறான். இறைவனுக்கு லாஹிர் - பாத்தின் (வெளிப்படை - மறைவு) உண்டு. எனக்கும் லாஹிர் - பாத்தின் (வெளிப்படை - மறைவு)

உண்டு. இறைவனுக்கு இரக்கமும் கோபமும் உண்டு, எனக்கும் இரக்கமும் கோபமும் உண்டு. இவற்றைப் போல் பிற விஷயங்களையும் கவனத்திற் கொள்ளுங்கள். வெள்ளையும் கறுப்பும் ஒன்றுக்கொன்று நேர்முரணாயிருந்தும் அவை ஒன்றுக்கொன்று இணை, ஜோடி, சமம், நிகர், ஒப்பு,உவமைதான் என்பதை நாம் ஏற்றுக்கொண்டால் நிறைவுள்ள இறைவனுக்கு நேர்முரணான குறைவுள்ள நானும் (சிருஷ்டியும்) இறைவனுடன் இணையாய், துணையாய், நிகராய், ஒப்பாய், உவமையாய் இருக்கிறேன் என்றுதானே கூறவேண்டும்! நான் ஒரு முஸ்லிம், மூமீன் என்று கூறிக்கொள்கிறேன் ஆயினும், அல்லாஹ் வேறு நான் வேறு என்று நம்பிக்கொண்டிருப்பதால் என்னையறியாமலேயே என் அறிவில் (உள்ளத்தில்) இறைவனுக்கு நான் இணையானவன், சமமானவன், நிகரானவன், ஒப்பானவன் என்ற ஓர் உளநோயை, ஷிர்க்கை ஆக்கிக் கொள்கிறேன். இரு பொருட்கள் ஒன்றுக் கொன்று நேர்முரணாய் நீரும் நெருப்பும்போல் இருப்பினும் உள்ளது (மவுஜூது) என்ற வகையில் அவை இணையேயாகும். உள்ளத்திலேற்படுகிற வேறு என்ற துவித நம்பிக்கையினால்தான் செயலிலும் ஷிர்க்கேற்படுகிறது. எப்போது துவித உணர்வு நீங்கிவிடுமோ அப்போதே எல்லாச் ஷிர்க்குகளுமே நீங்கிவிடும். இவ்விதமான இணையிலிருந்தும் (ஷிர்க்கிலிருந்தும்) மனிதனை விடுவித்து அல்லாஹ் இணைதுணையற்ற, சமநிகரற்ற, ஒப்புவமையற்ற ஏகன் என்பதை தெளிவு படுத்துவதற்காகவே கலிமாவும் அதன் தலீல்களான (ஆதாரங்களான) குர்ஆன் ஹதீஸுகளும் தரப்பட்டுள்ளன.

இவ்விஷயத்தைத் தெளிவாய் விளங்கிக்கொள்ளாவிடில் மனிதன் ஒருபோதும் தன்னிறைவு பெறமுடியாது, அல்லாஹ்வின் ஐக்கியம் கிடைக்கவேகிடைக்காது. நிரந்தர நரகம் என்பதன் அந்தரங்கம் இதுவே. ஆனால், இன்றுள்ள உலமாக்களில் 99 வீதமானோர் இவ்விஷயத்தை விளக்கித்தரவில்லை. எம்மை அவர்கள் ஜன்னத்துக்கும் இறை ஐக்கியத்துக்கும் அழைத்துச்

செல்வதாய் கூறுகிறார்கள். ஆனால், அது பொய்யே யாகும்.அவர்களில் மிகப் பெரும்பாலாரே நரகத்தின் நடுமத்தியில் இருக்கும்போது எமக்கு எப்படி ஜன்னத்தின் வழியைக் காட்டுவார்கள்? அல்லாஹ்வை விட்டும் தூரப்பட்டு அல்லாஹ்வுக்கு அந்நியமாக்கிக் கொண்டிருப்போர் அல்லாஹ்வுடன் எம்மை எப்படி ஐக்கியமாக்கி வைப்பார்கள்? ஆதலால், வீண்பிடிவாத உணர்வுகளைக் களைந்தெறிந்துவிட்டு எமது இமாமான குர்ஆனைக்கொண்டும் எமது சாட்சியான றஸூல்(ஸல்) அவர்களின் அறிவுரைகள், போதனைகளைக் கொண்டும் குர்ஆனைக் கொண்டும் "ஸிறாத்" என்ற நேர்பாதையைக் கண்டறிந்து அதில் சென்று இறை ஐக்கியத்தைப் பெறுவது ஒவ்வொரு மனிதனுக்கும் கட்டாயக் கடமையாகும்.

இப்போது இறைவன் நிலையாயிருப்பவன், அழிவில்லாதவன் என்பதை நோக்குங்கள். அவன் அழிவின்றி நிலையாயிருப்பவன் என்றால் அவனையன்றி அவனுடன் எதுவுமே ஜோடியாய், இணையாய் இருக்கமுடியாது. பல பொருட்கள் இருப்பதானால் அவை ஒன்றையொன்று தாக்கும். தாக்கத்தில் அழியும் பொருள், பொருளில்லாத வெறும் கற்பனையாகவே இருக்கும். தோன்றி மறைகின்ற மயக்குக் காட்சி பொருளாயிருக்க முடியாது. இவ்விபரத்தைக் குர்ஆன் தெளிவாய் விளக்கி இறைவனுக்கு சிருஷ்டி இணையல்லவென்றும் தோன்றி மறையும் சர்வ உலகும் மயக்கு (ஹுரூர்) என்றும் ஆணித்தரமாய் நிரூபணஞ்செய்கிறது.

**குர்:ஆன்: 23:91**

مَا اتَّخَذَ اللّٰهُ مِنْ وَّلَدٍ وَّمَا كَانَ مَعَهٗ مِنْ اِلٰهٍ اِذًا لَّذَهَبَ كُلُّ
اِلٰهٍۭ بِمَا خَلَقَ وَلَعَلَا بَعْضُهُمْ عَلٰى بَعْضٍ سُبْحٰنَ اللّٰهِ عَمَّا يَصِفُوْنَ

**அவனுடன் அவனல்லாத யாதொரு இலாஹுவும் இருப்பதில்லை. அப்படி இருந்தால் அந்த இலாஹுகள் தங்கள் சிருஷ்டிகளைக் கொண்டுபோய் ஒருவர் மற்றவர் மீது யுத்தம் புரிய(தாக்க) ஆரம்பித்து விடுவார்கள்.**

இவ்வாயத்தை மட்டுமன்றி 7:85, 21:22, 43:84, 17:42, 21:99, 57:4, 50:16 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்ந்து தெளிக. அல்லாஹுவுடன் அவனல்லாத எதுவுமே இல்லை; இருப்பது அவன் மட்டுமே என்பதுதான் தௌஹீது. இதுவே இஸ்லாத்தின் கொள்கை. அறிவற்ற மனிதன் இதை மறுத்தாலும், இஸ்லாத்தின் உயிர், அல்லாஹ்வுக்கு இணைகிடையாது-அல்லாஹ்வையன்றிப் பிறிதொன்று இல்லை, அல்லாஹ் ஏகன் என்பதே. எனவே, கலிமாவின் அடிப்படையிலேயே நாம் இப்போது குர்ஆனை அணுகுவோம்.

# 08

## குர்ஆனை விளங்குவதற்குரிய ஐந்துவழிகள்

1வது:- குர்ஆனைக் கொண்டே குர்ஆனை விளங்கியறிதல்.

(அ) குர்ஆனின் எவ்வாயத்து விளங்கவில்லையோ அவ்வாயத்தை விளக்கித்தரும் குர்ஆனின் வேறு ஆயத்துக்களைக் கொண்டு விளங்கியறிதல்.

(ஆ) குர்ஆனின் எவ்வாயத்து விளங்கவில்லையோ அவ்வா யத்தைக் கொண்டே விளங்கியறிதல்.

(இ) குர்ஆனின் எவ்வாயத்து விளங்கவில்லையோ அவ்வா யத்துக்கு நேர் முரண்போல் தென்படுகிற வேறு ஆயத்துக்களைக் கொண்டு விளங்கியறிதல்.

2வது:- குர்ஆனை ஹதீஸுகள் மூலம் விளங்கியறிதல்.

3வது:- குர்ஆனை அறபிலக்கிய வழக்குக்கமைவாய் விளங்கி யறிதல்.
(இது, முதஷாபிஹாத் ஆயத்துக்களுக்கு மிகப்பொருத்த மானதாகும்.)

4வது:- மேலே காட்டிய மூன்று வழிகளையும் மீறாமல் ஆராய்ந்து, அனுமானித்து, யூகித்தறிதல்.

(இந்த யூகம் கட்டுப்பாடில்லாத, பின்பற்றலற்ற சுயசிந்தனையுடன் குர்ஆனிலும் பிறகல்விகளிலும் அனுமதிக்கப்பட்ட தத்துவ உண்மைகளை மீறாமல் ஆராய்ந்து விளங்கியறிதல் என்பதாகும். மஹ்கூல், மன்கூல் என்ற பிரமாணங்களில் முதலிடம் வகிப்பது இந்த மஹ்கூலென்ற யுக்திப்பிரமாணந்தான். இந்த யுக்தி வஹ்மோடில்லாமல் அகிலிலிருந்து பெறப்பட வேண்டும்.)

5வது:- வஹி, இல்ஹாமத், இல்முல்லத்துன்னி, கஸ்ப்பு,றூயா, முஸாஹிதா போன்றவற்றைக் கொண்டு விளங்கியறிதல்.

குறிப்பு:-
1வது வழியிலுள்ள ஆ, இ ஆகிய இரு பகுதிகளையும் வாசக நேயர்கள் இலகுவாய் விளங்கவேண்டும் என்பதற்காக இந்நூலின் இறுதிப்பகுதியில் 5ம் 6ம் வழிகளென்று கூறி விளக்கியுள்ளேன். அதாவது மொத்தமாயுள்ள 5வழிகளையும் 7 பகுதிகளாய்ப் பிரித்து விளக்கியிருக்கிறேன்.

மேலே காட்டிய ஐந்து வழிகளிலும் உறுதிப்படுத்தப்பட்டதே கலிமத்துத்தையிபா என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகையால்தான், 27:64ம் ஆயத்தின் மூலம் கலிமாவை மறுக்கக்கூடிய ஆதாரம் உங்களிடமிருந்தால் கொண்டுவாருங்களென்று அல்லாஹ் சவால் விட்டுக் கொண்டிருக்கிறான். கலிமத்துத்தையிபாவின் ஆதாரநூல் குர்ஆனே என்பதையும் அந்நூலின் விளக்கவுரை, விரிவுரைகளே ஹதீஸுகள் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இல்லையானால், நாம் அல்லாஹ் றஸுலை ஒப்புக் கொண்டவர்கள், குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக்கொண்டவர்கள் என்றெல்லாம் தம்பட்டமடிப்பது வெறும்பறைதான். நாம் காட்டிய ஐந்து வழிகளையும் மீறிய எம்முன்னோரில் மிகப்பலர்

கலிமாவையும் குர்ஆனையும் இருட்டடிப்புச் செய்து மக்களை அழிவுப்பாதையில் செலுத்தியிருக்கிறார்கள். ஆச்சரியப்பட வேண்டாம்! இன்றுள்ள இஸ்லாமிய மக்களில் 99 வீதமானோர் ஷிர்க்கைத் தௌஹீதாயும் தௌஹீதை ஷிர்க்காயும் விளங்கிக் கொண்டிருப்பதற்கு மிக முக்கிய காரணம், குர்ஆனின் சில வசனங்களும் கலிமாவும் ஒரு சில அமாவாசைகளினால் புரட்டப்பட்டிருப்பதும் கண்மூடித்தனமான ஆராய்வில்லாத பின்பற்றலில் சென்றுகொண்டிருப்பதுமாகும். எமது வேத நூலை ஒரு காதல் கதைப் புத்தகமாய், மனித யுக்தியால் உருவாக்கப்பட்டதாய்க் கருதாமல் இறைவனுடைய பேச்சு என்று நம்பிப் பாகுபாடற்ற சுயசிந்தனையுடன் ஆராய்ந்து தெளிவு பெற வேண்டியது அவசியத்திலும் அவசியாகும். இல்லையானால் குர்ஆன் காட்டும் வழியில் சென்று இம்மை மறுமையிலுள்ள நற்பயன்களைப் பெற எம்மால் முடியாமலே போய்விடும்.

இப்போது கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மையை இறைவனுக்கு இணைகிடையாதென்பதை நாம் கூறிய ஐந்து வழிகளிலும் குர்ஆன், ஹதீஸுகள் மூலம் நிரூபணஞ் செய்யலாமா? என்பதைக் காண்போம். இங்கே, ஒரு சிறு குறிப்புரை; அது என்னவேன்றால், தௌஹீதுக்கு முரண் போல் தென்படுகிற பல தினுசான ஆயத்துக்களை எடுத்துக்காட்டி அவற்றிலேற்படும் சந்தேகங்களையும் அவற்றுக்குரிய சரியான பதில்களையும் எமது முதல் நூற்களில் தெளிவுபடுத்தி விளக்கியிருப்பதால் அந்நூற்களில் தெளிவுபடுத்தப்படாத சில முக்கியமான குர்ஆன் ஆயத்துக்களை மட்டுமே இந்நூலில் விளக்கவிரும்புகிறேன் என்பதே.

# 09

## 1வது வழி:-
## குர்ஆனைக்கொண்டே குர்ஆனை விளங்குதல்

கலிமத்துத்தையிபாவை உறுதிப்படுத்தும் குர்ஆன் வசனங்களில் 112ம் அத்தியாயம் மிகப்பிரதானமான ஒன்றாகும். இந்த அத்தியாயம் குர்ஆனின் 1/3 பகுதியென வர்ணிக்கப் படுகிறது. இவ்வத்தியாயத்தின் சிறப்பை விளக்கும் பல நூற்கள் எம்மிடையே உண்டு. இதற்கு எவ்வித ஆதாரமும் தேவையில்லை என்னுமளவுக்கு அந்நூற்களையும் குர்ஆன் மொழிபெயர்ப்புக்களையும் நம்பியிருக்கிறோம். ஆனால், நம்முன்னோர் தந்த விபரங்களையும் குர்ஆன் தப்ஸீர்களையும் நோக்கும்போது அந்த 112ம்ஸூறா கலிமாவுக்கு நேர் விரோதமாய் அல்லாஹ் வேறுதான் சிருஷ்டி வேறுதான் என்று விபரந்தருவதுபோல் தென்படுகிறது. எனவே, அறிவு ஞானத்திற்கிடமளிக்காத ஒருசில அமாவாசைகள், அல்லாஹ் வேறுதான் சிருஷ்டி அவனல்லாத வேறுதான் என்று நம்பிக்கொண்டு, அதே அடிப்படையில்தான் முஹ்கமுவான பிற வசனங்களுக்கும் பொருள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கலிமாவை அடிப்படையாய்க்கொண்டு குர்ஆனை அணுக வேயில்லை. நாம் காட்டிய ஐந்து வழிகளையும் இன்னோர் வாயால் ஒப்புக்கொண்டிருந்தார்களேயன்றி, அவ்வழிகளில் எதனைக் கொண்டும் இவர்கள் குர்ஆன், ஹதிஸுகளை அணுகவேயில்லை என்பது தென்படுகிறது. இதை இங்கே ஓரளவு ஆராய்வோம்; நிரூபித்துக்காட்டுவோம்.

# 10

## இறைவன் ஒருவனா? ஏகனா?

**குர்ஆன்: 112: 1,2,3,4**

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ لَمْ يَلِدْ ۙ وَلَمْ
يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

**நீர்கூறும் அல்லாஹ் (அஹதுன்) ஒருவன். அல்லாஹ் தேவையற்றவன். அவன் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை. தவிர, அவனுக்கு ஒப்பாக ஒன்றுமில்லை.**

இன்று நம்மிடையேயுள்ள மிகப்பல தப்ஸீர்களில் 112ம் அத்தியாயத்துக்கு நாம் மேலே காட்டியபடிதான் மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார்கள். இந்த அத்தியாயம் முஹ்கமுவான ஒரே கருத்துடைய கலிமாவை உறுதிப்படுத்த அருளப்பட்ட முஹ்கமு அத்தியாயம் என்பதையும் அதில் பாவிக்கப்பட்டுள்ள அத்தனை வசனங்களும் சொற்களும் முஹ்கமுவைச் சேர்ந்த ஒரே கருத்தை மட்டும் கொண்டவையென்பதையும் நாம் முதலில் ஒப்புக்கொள்ளவேண்டும். 112ம் அத்தியாயம் கலிமாவை உறுதிப்படுத்தும் பிரதான தலீல்(ஆதாரம்)களில்

ஒன்றாயிருப்பதால் அது முஹ்கமுவைச் சேர்ந்ததுதான் என்பதை நாம் மறுக்கமுடியாது. அப்படியானால், இந்த அத்தியாயம் கலிமாவின் கருத்தை (இறைவனுக்கு இணையில்லை) என்பதைத்தான் உறுதிப்படுத்தவேண்டும். ஆனால், இந்த 112ம் அத்தியாயம் கலிமாவுக்கு முரணாய் அல்லாஹ்வேறு, சிருஷ்ட்டிவேறு என்ற துவிதக்கொள்கையை(முஷ்ரீக்கின் கொள்கையை) ஏன் விளக்க வேண்டும்? இவ்வத்தியாயம் சில அமாவாசைப் பேர்வழிகளால் இருட்டடிப்புச் செய்யப்பட்டி ருக்கிறது. வலிந்துரை கொள்ளப்பட்டிருக்கிறது. பெரும்பாலான கல்விமான்கள்கூட இதை ஆராய்ந்ததாகவோ,உண்மையை எடுத்து விளக்கியதாகவோ இதுகால வரையிலும் தென்பட வேயில்லை. “அஹதுன்” என்ற சொல்லுக்கு ஒருவன் என்று அகராதிகள் கூறிக்கொண்டிருக்கலாம். அகராதி அடிப்படை யிலும் பாஸை வழக்கிலும் மருட்சியடைந்த ஒரு கூட்டத்தார் தான் “அஹதுன்” என்ற சொல்லுக்கு ஒருவன் என்று பொருள் கொண்டிருக்கிறார்கள்

“அஹதுன்” என்ற இச்சொல்லுக்கு ஒருவன் என்று பொருள் கொண்டால் 112ம் அத்தியாயம் உண்மைக்கு முரணாய் விளக்கமளிக்கிறது. இவ்விளக்கம் ஷிர்க்கையே உருவாக்குகிறது. ஆதலால், இச்சொல்லின் உண்மையான பொருள் என்ன? என்பதை நாம் காட்டிய குர்ஆனை விளங்கும் ஐந்து வழிகளிலும் ஆராய்ந்து தெளிவுபெற வேண்டியது அவசியமாகும். இல்லையானால் நாம் உண்மையைக் கண்டறிய முடியாமலே போய்விடும்.

அல்லாஹ் படர்க்கையில் இருக்கிறானென்றும் அல்லாஹ்வேறு, சிருஷ்டிவேறு என்றும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் நடைபெறுவதில் சிருஷ்ட்டிக்குப் பங்குண்டென்றும், சில மக்கள் நம்பினார்கள். மேலும், கடவுள் அவதாரம் செய்து மனிதராய்ப், புற்பூண்டாய், ஆடாய், மாடாய்ப்

பிறக்கிறாரென்றும் சிலர் நம்பினார்கள். கடவுள் விகாரப்பட்டுச் சிருஷ்ட்டியாய் வெளியாகினாரென்றும், சிலந்தி நூலை வெளிப்படுத்துவது போல அல்லாஹ் (கடவுள்) தன்னைவிட்டும் வேறான ஓர் வெளியில் சிருஷ்ட்டியை வெளிப்படுத்தி, மீண்டும் சிலந்தி தனது நூலைத் தன்னிடத்தே எடுத்துக்கொள்வதுபோல கடவுளும் சிருஷ்டியை எடுத்துக்கொள்கிறாரென்றும் சிலர் நம்பினார்கள். இன்னும் சிலர் ஈஸா(அலை) அவர்களே கடவுள் (ஈஸா அல்லது யேசு) என்றும் அவர் கடவுளின் நேசகுமார னென்றும், உஸைர்(அலை) அல்லாஹ்வின் குமாரென்றும், மலக்குகள் இறைவனின் பெண்மக்களென்றும் சிலர் நம்பினார்கள். இவ்விதமான கற்பனை யூகங்களில் மூழ்கிய மக்களின் அறியாமையை, குருட்டு நம்பிக்கையைப்போக்கி இறைவனுக்கு இணை, துணை, சமம், நிகர், ஒப்பு, உவமை கிடையாதென்ற உண்மையை உணர்த்தவே கலிமாவும் அதன் தலீல்களில் ஒன்றான 112ம் அத்தியாயமும் வேதத்தில் அருளப்பட்டிருக்கிற தென்பதை நாம் முதலில் ஒப்புக்கொள்ளவேண்டும். இவ்வுண்மையை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் 112ம் சூறா ஏகத்துவமென்ற தௌஹீதை உறுதிப்படுத்தவே அருளப்பட்ட தென்ற உண்மையை மறுக்கிறோம் என்பதே அதன் அர்த்தமாகும்.

குர்ஆனின் 112ம் சூறாவில் பாவிக்கப்பட்ட ‘‘அஹதுன்” என்ற சொல் ஒருமை, பன்மையை விளக்குவதற்காக அருளப்பட்டதல்ல. இறைவன் சர்வவல்லமையுடைய ஒருவனே என்பதை முஷ்ரிக்கீன்களும் பூரணமாய் ஒப்புக்கொண்டே இருந்தார்களென்பதை குர்ஆனின் 10:31, 23:86,87, 29:61, 43:9 போன்ற பல ஆயத்துக்கள் சாட்சியமளிக்கின்றன. இறைவன் ஒருவன் உண்டு என்பதை எந்த ஓர் சமூகமக்களும் மறுத்ததாய் ஆதாரம் கிடையாது. கடவுளில்லையென்றுகூறும் நாஸத்தீகவாதி கூட, அவனையறியாமலேயே கடவுள் உண்டெண்பதை நிரூபிக்கிறவனாகிறான். எனவே இறைவன் ஒருவனே என்று

அல்லாஹ் எமக்கறிவிக்கவேண்டிய அவசியமே இல்லை. அஹதுன் என்ற சொல் தௌஹீதை நிரூபிக்க அருளப்பட்ட தென்றால் அதன் கருத்தில் எவ்வித ஷிர்க்குமே ஏற்படக்கூடாது. ஆனால் அஹதுன் என்ற சொல்லுக்கு ஒருவன் என்று பொருள் கொண்டால் அது சுத்தமான ஷிர்க்காகவே அமைகிறது. எப்படியென்றால்,

**1வது**

ஒன்று என்று கணிப்பதற்கு அல்லது அறிவதற்கு இருபொருட்கள் அல்லது பல பொருட்கள் அவசியமாகும். ஒன்றும், அதனுடன் அதுவல்லாத இடமும் இல்லையானால் ஒன்று என்பதை நாம் அறிய முடியாது. ஒன்று என்பதைக் கண்டமாய்க்கொண்டால் அது வல்லாத அகண்டமும் உண்டென்றாகும். இதன் சுருக்கம் என்னவென்றால், ஒன்று என்று தரிபடுத்த அதுவல்லாத இடமும் திசையும் இருக்க வேண்டியிருப்பதால் அந்த ஒன்றுடன் அதுவல்லாத (வெற்றிடமும்) பிறிதும் உண்டென்றாகும். இடமும் திசைகளும் இல்லையானால் ஒன்றென்பதே இல்லை. இணையேற்படுத்தல் என்பதன் ஆணிவேர் இதுதான். இதை மறுக்கவே கலிமாவும், 112ம் அத்தியாயம் போன்ற தலீல்களும் தரப்பட்டிருக்கின்றன. எனவே,குர்ஆனின் கொள்கைக்கு முரணான கருத்துள்ள ஒரு சொல்லை நாம் எமது பின்பற்றல் மூலம் எடுத்துக்கொள்வது தவறாகும் இது சுத்தமான பித்அத்தாகும்.

## 2வது:-

இறைவனின் வாஜிபான ஸிபத்துக்களில் ஒன்று என்னவென்றால் இடம், திசை, இலக்கம் போன்றவற்றில் கட்டுண்ணாத நித்தியஜீவனாய் இருக்கிறான் என்பது. இதன்படி, அவனை இடத்தில்,திசையில், இலக்கத்தில் மட்டுப்படுத்துவது அடிப்படை நம்பிக்கைக்கு முரணாகிறது. எனவே, அல்லாஹ்வை “ஒருவன்” என்று இலக்கத்தில் கட்டுப்படுத்துவது குற்றமாகும்.

## 3வது:-

வேறுசில தப்ஸீர்கள் “அஹதுன்” என்ற சொல்லுக்கு “தனித்தவன்” என்று பொருள்தருகின்றன. இந்தப் பொருளிலும் ஒரு மயக்கு இருக்கிறது. எப்படியென்றால், தனித்தவன் என்னும்போது பிற பொருட்கள் இல்லை என்றாவதால், இது சரிபோல் தென்படலாம். ஆயினும், பிறவற்றை விட்டும் தனித்தவன் என்னும் போது அவனுடன் அவனல்லாதவையும் உண்டென்று ஏற்படுவதால், இது ஷிர்க்காகவே அமையும். முஹ்கமுவான ஒரேகருத்துடைய வசனத்துக்கு அல்லது சொல்லுக்கு சந்தேகாஸ்பதமான, பல கருத்துடைய சொற் களைக்கூறி விளக்குவது மிகப் பெருந்தவறாகும். இவ்வித புரட்டல்கள் அறியாமையால், ஆராய்வின்மையால்தான் ஏற்பட்டி ருக்கின்றன. அல்லாஹ் மட்டுமே இருக்கிறான் என்பது தௌஹீதென்றால்,அதற்கு முரணானஷிர்க்கென்பது அவனுடன் அவனல்லாதவையும் உண்டென்பதாகவே இருக்கும். இறைவன் ஒருவனே என்றறிவதே தௌஹீதென்றால், இறைவன் ஒருவனே என்றறியாமலிருப்பதே ஷிர்க்காக இருக்கவேண்டும். இப்படியானால், பல இறைவர்கள் உண்டென்று யார் கூறியிரு க்கிறார்? எவருமே இல்லை! முஷ்ரிக்கீன்கள் கூட அஸீஸும் அலீமுமாகிய இறைவனை நெருக்கிச்சேரவே இந்த இலாஹுகளை வஸீலாவாக எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்றுதான் கூறியிருக்கிறார்கள். இதற்கு குர்ஆன்-39:3 போன்ற பல ஆயத்துக்கள் ஆதாரமாய் இருக்கின்றன. எனவே, தௌஹீதுக்கு முரணான தவறான விளக்கங்களை எம் முன்னோர் தப்ஸீர்களில் புகுத்தியிருப்பதற்குக் காரணம் அவர்கள் கலிமாவின் உண்மையை அடிப்படையாய்க் கொண்டு குர்ஆன் ஹதீஸுகளை அணுகாமையே.

அல்லாஹ் ஒருவனே என்று ஏற்றிருந்த மக்களை நோக்கி இறைவன் முஷ்ரீக்கீன்கள் என்று ஏன் கூறியிருக்கிறான் என்பதை அவர்கள் ஆராயாமல் பின்பற்றல் முறையில் ஆண்டவன் ஒருவனே என்று எடுத்துக்கொண்டுதான் அதாவது ஷிர்க்கின்

அடிப்படையை, ஆணிவேரை அறிந்து கொள்ளாமல்தான் குர்ஆன் ஹதீஸுகளை அணுகியிருக்கிறார்கள். ஓரே இறைவனை ஏற்றுக் கொள்வதுதான் தௌஹீது என்ற மூடத்தனமான நம்பிக்கையும் குருட்டுத்தனமான பின்பற்றலுமே இதற்குக் காரணமாய் இருக்கிறது. இறைவன் ஒருவன் உண்டென்று கூற இத்தனை நபிமார்கள் அவசியமேயில்லை! வேதங்கள், முஹ்ஜிஸாத்துக்கள், யுத்தங்கள் எதுவுமே அவசியமில்லை! இறைவன் ஒருவனே என்பதை இன்றும் யாரும் மறுத்ததோ எதிர்த்ததோ இல்லை! முன்சென்ற நபிமாரும் அவர்களைப் பின்தொடர்ந்த நல்லடியார்களுந்தான் இறைவன் ஒருவனே என்பது ஷிர்க் என்று கூறியிருக்கிறார்கள். அல்லாஹ்வையன்றி இல்லை என்று கூறியிருக்கிறார்கள். இவர்களைத்தான் உலக மக்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ நபிமார்கள், நல்லடியார்கள் கொலை செய்யப்பட்டார்கள்; தீயிலிடப்பட்டார்கள். நபிமார்களை, நல்லடியார்களை மறுத்த காரணத்தால் எத்தனையெத்தனையோ சமூகங்கள் மண்ணோடு மண்ணாகிவிட்டன. இன்றும் இதே நிலைதான்.

நாம் முன்பு கூறிய 112ம் அத்தியாயம் தௌஹீதை உறுதிப்படுத்தவே அருளப்பட்டதென்றும் அதில் பாவிக்கப்பட்டுள்ள "அஹதுன்" என்ற சொல் ஒருமை, பன்மை என்பவற்றை விளக்குவதற்காகத் தரப்பட்டதல்ல என்றும் நான் முன்பே கூறினேன். முதல், இடை, கடை என்ற பாகுபாடற்றதாய் அதனுடன் பிறிதொன்றில்லாததாய், நித்திய ஜீவனுடையதாய், மனித அறிவின் கட்டுப்பாட்டில் அடங்காத ஏகமாய் இருப்பது எதுவோ அதை விளக்கி விபரந்தருவதே "அஹதுன்" என்ற சொல் பாவிக்கப்பட்ட நோக்கமாகும். எனவே "அஹதுன்" என்ற சொல்லுக்கு "ஏகன்", "ஏகம்" (வுஜூது) என்பதே பொருத்தமான தமிழ்ச் சொல்லாகும். ஏகமென்றால் அதற்கு எல்கை, இடம், திசை, முன், பின், மத்திபம், இலக்கம் எதுவுமே கணிக்கமுடியாது. ஏகமென்பது வியாபகமாய் அமைந்திருப்பதால் எவையெவையோ வெல்லாம் இருப்பதாய்

நமக்குத் தென்பட்டாலும் அவையெல்லாம் ஏகத்தில் ஏகமாகவே இருக்கவேண்டும். (ஏகமென்றால் என்னவென்பது பின்னால் தெளிவுபடுத்தப்படும்) ஒருமைக்கும் ஏகத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்னவென்பதை நாம் தெளிவாய் உணரவேண்டும்.

இந்த 112ம் அத்தியாயம் இறைவன் வானத்தில்தான் இருந்துகொண்டிருக்கின்றான் என்றும் அவன் ஒருவனே என்றும் அவன் சிருஷ்டியை விட்டும் வேறானவன் என்றும் நம்பியிருந்த முஷ்ரிக்கீன்களின் அறியாமையைப் போக்கவே அருளப்பட்ட தென்பதை அதே அத்தியாயம் நிரூபணஞ் செய்கிறது. "நீர் கூறும்" என்ற வசனம் றஸுல்(ஸல்) அவர்கள் தங்கள் சுயபுத்தியால் இவ்வாக்கியத்தைக் கூறாமல் இறை ஏவலின்படியே கூறினார்கள் என்பது புலப்படுகிறது. இச்சொல் நபியை மட்டும் சுட்டாமல் நம் எல்லோரையும்தான் கூறும்படி அறிவிக்கிறது. "ஹு" என்ற சொல் முஷ்ரீக்கீன்களால் நம்பப்பட்ட படர்க்கை யில், அர்ஷில் இருக்கிற இறைவனைச் சுட்டிக்காட்டி "அந்த அல்லாஹ்" என்று கூறப்பட்டிருப்பதால் இந்த ஆயத்து நிச்சயமாக முஷ்ரிக்கீன்களை நோக்கியே அருளப்பட்டிருக்கிறது என்பது உறுதியாகிறது. அதாவது, அல்லாஹ் படர்க்கையில் இருக்கிறான் என்று நம்பிய மக்களை நோக்கி (நீங்கள் கற்பனை பண்ணியுள்ள) அந்த அல்லாஹ் இன்னார்தான் என்பதை விளக்குவதே அத்தியாயத்தில் தரப்பட்ட பிற வசனங்களின் கடமையாகும். அப்படியானால், நாம் கூறிய ஐந்து வழிகளின் படியும் இந்த அத்தியாயத்திலுள்ள வசனங்கள், சொற்கள் ஒன்றையொன்று உறுதிப்படுத்துகின்றனவா என்பதை இங்கே காண்போம்.

1வது வழியான குர்ஆனைக்கொண்டே குர்ஆனை விளங்குதல் என்ற அடிப்படையில் நோக்கினால் "அஹதுன்" என்ற சொல்லை விளக்கவே "ஸமதுன்" என்ற சொல் தரப்பட்டிருப்பதை நாம் காணலாம். இதைப் பொறுமையோடு நோக்குவோம். "ஸமது" என்றால் "தேவையற்றது" என்பதே

அதன் அர்த்தம். இதை எல்லோரும் ஏற்றிருக்கின்றனர். எல்லா அகராதிகளும் ஏற்றிருக்கின்றன. "தேவையற்றது" எது? வேறு எதன் தேவையுமற்றதாய் இருப்பது எதுவோ அதுதான் "ஸமது" அதுதான் "தேவையற்றது" என்பது. அப்படியானால் அதனுடன் அதுவல்லாத எதுவுமே இருக்கமுடியாது. இருந்தால் "தேவையற்றது" என்பது பிழையாகும். பிறிது இல்லாமல் அதனால் இருக்க முடியாது என்ற ஷிர்க்கே நிலைப்படும். அதாவது, அது "தேவையுடையது" என்றாகும். பல பொருட்கள் இருந்தால் ஒன்றையொன்று தாக்கும். ஒன்றையொன்று தாக்குபவை தேவையுடையவையாய் இருக்கும்; இயக்கமுடைவையாயும் இருக்கும். இயக்கமுடையவை தேவையுடையவைதான். எனவே, தேவையற்றது எதுவோ அது இயங்குகிறதா? இல்லையா? என்பதைக்கூட அறிவினால் அறியமுடியாது. ஆதலால், மனித அறிவைக் கடந்ததாய் எவ்விதக் கட்டுப்பாடுகளிலும் கட்டுண்ணாததாய், அதையன்றி அதனுடன் வேறெதுவுமே இல்லாததாய் (ஸமதாய்) தேவையற்றதாய் என்றும் நிலைப்பட்டு இருந்து கொண்டிருப்பது எதுவோ அதை விளக்கவே "அஹதுன்" என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கின்றது. அப்துக்கு றப்பு முரண் என்ற தத்துவ அடிப்படையில் நோக்கினால் அப்துவிடத்தில் இயக்கத்தை, தேவையைக் காணுகிற, அறிகிற (வட்டத்துக்குள் கட்டுண்ட அறிவுடைய) நாம் றப்புவின் இயக்கத்தைப் புலன்களால் பார்க்கமுடியாதென்பதை ஒப்புக்கொள்ள முடியுந்தானே?

"அஹதுன்" என்ற சொல்லுக்கு, அதே சொல்லை அடுத்துள்ள "ஸமதுன்" என்ற சொல்லைக் கொண்டுதான் "ஏகன்" அல்லது "ஏகம்" என்ற முடிவுக்கு வந்துள்ளோம். குர்ஆனைக் கலிமாவின் அடிப்படையில் நோக்கியதால் "அஹதுன்" என்ற சொல்லுக்கு "ஏகன்" அல்லது "ஏகம்" என்பதே சரியான அர்த்தம் என்ற முடிவை "ம.்.கூல்" (யுக்தி), "மன்கூல்" (சுருதி அல்லது வேத ஆதாரம்) என்ற இரு சட்டப்பிரமாணங் களின்படி நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இப்போது,

நாம் பெற்றுக்கொண்ட இதே கருத்துடன் 112ம் ஸூறாவை மீண்டும் நோக்குவோம்.

**குர்ஆன்: 112:1,2,3,4**

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝ اَللّٰهُ الصَّمَدُ ۝ لَمْ يَلِدْ ۙ وَلَمْ
يُوْلَدْ ۝ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۝

**நீர் கூறும். அல்லாஹ் ஏகன். அல்லாஹ் தேவையற்றவன். அவன் பெறுவதுமில்லை: பெறப்படுவதுமில்லை. தவிர, அவனுக்கு ஒப்பான (இணையான, நிகரான) ஏகன் இல்லை.**
(இதுதான் இந்த ஸூறாவின் உண்மைக்கருத்தாகும்)

“அவன் பெறுவதுமில்லை, பெறப்படுவதுமில்லை” என்ற வசனம் முஷ்ரீக்கீன்கள் கொண்டிருந்த ஒரு தவறான நம்பிக்கையைப் போக்கி உண்மையான ஈமானை விளக்குவதற்காகவே தரப்பட்டுள்ளது என்பதை எம்மில் மிகப்பலர் உணர்வதில்லை. பெறுவதும் பெறப்படுவதும் சிருஷ்டிதான் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அதைப் போல பெறாதவன், பெறப்படாதவன் சிருஷ்டிகர்த்தா(றப்பு) என்பதும் நாம் எல்லோரும் அறிந்த ஒரு விஷயந்தான். ஆகையால், இவ்வசனம் ஈசா(அலை) பொன்றோரை இறைவனின் குமாரனென்று கூறிய மக்களை நோக்கியே அருளப்பட்டதென்று நாம் மழுப்பமுடியாது. ஏனெனில், ஒரு கூட்டத்தாருக்கு மட்டுமே இந்த ஸூறா தரப்படவில்லை. உலக மக்கள் அனைவருக்குமே பொதுவாக இந்த ஸூறா அருளப்பட்டுள்ளது. ஒரு கூட்டத்தாரின் தவறை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டி உண்மையை நிரூபிப்பதே ஆயத்தின் நோக்கமாகும். “ஏகன்” என்பதை நாம் “ஒருவன்” என்று கொண்டால் முஹ்கமுவை முதஷாபிஹாத்தாய் மாற்றிக்கொண்ட புரட்டர்கள், மறைப்ப

வர்கள், காபீர்கள் என்றெல்லாம நமக்கு நாமே பெயர் சூட்டிக்கொள்ள நேரும்

“பெறுவதுமில்லை; பெறப்படுவதுமில்லை” என்ற வாசகங்கள் றப்புக்கு அப்து நேர்முரண் என்பதை வலியுறுத்தவே தரப்பட்டிருக்கின்றன. ஆனால், றப்புக்கு அப்து நேர்முரண் என்னும் போது றப்பு வேறுதான், அப்து வேறுதான் என்று எமது பேதபுத்தி(வஹ்மு) திடீர் முடிவுகட்டிவிடுகிறது. இது எம்முடைய வெறும் மருட்சியாகும். இப்போது, தெளிந்த அறிவோடு நோக்கிப்பாருங்கள். அவன் பெறுவதுமில்லை பெறப்படுவதுமில்லை என்றுதான் கூறப்பட்டு இருக்கின்றதே தவிர, றப்பும் அப்தும் வெவ்வேறென்றோ அல்லது இரண்டும் ஒன்றுதான் என்றோ கூறப்படவில்லை! ஆனால், மருண்ட புத்தியுடைய மனிதன், பெறுகிற பெறப்படுகிற சிருஷ்டி வேறு என்றும் பெறாத பெறப்படாத சிருஷ்டி கர்த்தா வேறு என்றும் ஆயத்து விளக்கந்தருவதாக மருண்டு விடுகிறான். அஹதுன் என்ற அல்லாஹ்வின் ஏகத்தன்மையை விளக்குவதே ஆயத்தின் நோக்கம் என்பதை அம்மனிதன் உணர்ந்து கொள்வதேயில்லை. அப்துக்கு றப்பு முரண் என்ற தத்துவ விபரத்தைப் புரிந்து கொள்ளாத நாம் எடுத்துக்கொள்ளும் திடீர்முடிவு பிழையான தென்பதை வலியுறுத்தி நிரூபிக்கவே “அவனுக்கு ஒப்பாக (இணையாக) வேறு ஏகன் இல்லை” என்ற வசனம் அதன் பின்னால் அருளப்பட்டிருக்கிறது. இதை நாம் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெறுவது அவசியமாகும். ஆதலால், இதை இலகுவாய் விளங்குவதற்காக முதலில் ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

எமது பௌதிக உடலும், பௌதிகமல்லாத அறிந்து கொள்ளமுடியாத எமது உயிரும், ஒன்றுக்கொன்று நேர் முரணானவை என்பதை நாம் அறிவோம். எமதுடல் பெறுவதாயும், பெறப்படுவதாயும் இருக்கிறது. ஆனால்,

எமதுயிரோ பெறுவதுமில்லை; பெறப்படுவதுமில்லை; எனவே, உடலுக்கு உயிர் முற்றும் முரணானதுதான். உடல் தோற்றுவதாயும் எல்கையில், நிறையில், காலத்தில், இடத்தில், இலக்கத்தில் கட்டுண்டதாயும், சுட்டிக்காட்டக்கூடியதாயும் எல்லோரும் எல்லாப்புலன்கள் வாயிலாகவும் அறியக் கூடியதாயும் இருக்கிறது. ஆனால், உயிர் முன்சொன்ன எல்லாக் கட்டுப்பாடுகளையும் விட்டு நீங்கியதாய் தன்னில் தானே மட்டும் அனுபவத்தில் உணரக்கூடியதாய் இருக்கிறது. எனவே, உடலுக்கு உயிர் முற்றும் முரணானது என்பது நிச்சயமான உண்மை. இன்னுங்கூறினால், உடல் எனது வெளிப்படை (லாஹிர்) ஆகவும் , உயிர் எனது மறைவு(பாத்தின்) ஆகவும் இருக்கின்றன. உடல் மறைந்தழிவதாயும், உயிர் அழியாத தாயும் இருக்கின்றன. உடல் உருவாகுவதற்கு முன்னும், உடல் இப்போது இருந்து கொண்டிருக்கும்போதும், உடல் அழிந்த பின்பும் இருந்து கொண்டிருப்பது அதாவது, என்றும் நிலையாய் இருப்பது உயிர் மட்டும்தான். தோன்றுதல், இருத்தல், அழிதல் ஆகிய மூன்று நிலைகளிலும் எவ்வித மாறுபாடும் விகாரமும் அழிவும் இல்லாமல் நித்தியமாய் நிலைத்திருப்பது உயிர் மட்டுந்தான். உடல்தான் இடத்தில், காலத்தில், திசையில், கட்டுண்டிருந்ததேயன்றி, உயிர்(நான்) எவ்வித கால, இட, வரையறையுமின்றி என்றும் இருந்தது போலவேதான் இருந்து கொண்டிருக்கிறது.

எனதுடலும் எனதுயிரும் ஒன்றுக்கொன்று நேர் முரணாயிருப்பினுங்கூட, நான் வேறு, என்னுடல் வேறு என்று கூறமுடியுமா? நான், உயிர் அல்லாத வெற்றுடல் மட்டுந்தான் என்று கூறமுடியுமா? உடல் இல்லாத உயிர்மட்டுமே நான் என்று கூறமுடியுமா? உடலும் உயிரும் ஏகமாயுள்ளவனே “நான்” என்பவன். எனவே, உயிரான நான் வேறு, உடல் என்னைவிட்டும் வேறு அல்லது உடல் நானல்லாத வேறு என்று கூறமுடியுமா? நாம் இவ்வாறெல்லாம் கூறுவதானால் இக்கூற்று எம் மருட்சியினால், வஹ்மினால் ஏற்பட்ட வெறும்

மயக்கமாகத்தானே இருக்கும்? நாம் காட்டிய 112ம் ஸூறாவின் நடுப்பகுதி அப்துக்கு றப்பு முரண் என்று விளக்குகிறதேயன்றி, அப்தும் றப்பும் வெவ்வேறு என்று விளக்கவேயில்லை! நாம்112ம் ஸூறா அப்து வேறு றப்பு வேறு என்று விளக்குவதாக விளங்கிக் கொள்வது எமது மருட்சியினாலேற்பட்ட கற்பனை யூகமேயாகும். குர்ஆன் - 2:165, 2:224, 10:31,53:43,44 போன்ற ஆயத்துக்களைத் தெளிந்த அறிவோடு சிந்தனைசெய்து பாருங்கள். சர்வசக்தியும் அல்லாஹ்வுக்குடையதே என்பதை இவ்வகை ஆயத்துக்கள் விபரம் தருகினறன.

நான் என்றுணரும் எனக்குச் சொந்தமான பல நாமங்களிலிருக்கின்றன. "மனிதன்" என்பது என் நாமங்களில் ஒன்று. கை,கால், முகம், வயிறு முதலாம் உறுப்புக்கள் யாவும், எனது நாமங்களின் தோற்றங்களாய் இருக்கின்றன. இவையெல்லாம் ஒன்று சேர்ந்த நாமமே "மனிதன்" என்பது, இது எனது முழுத்தோற்றமாகும். எனது கை, கால், முகம் போன்ற உறுப்புக்கள் எனது குறிப்பட்ட ஒவ்வொரு நாமத்தின் தோற்றங்களாகும். இதைப்போல, இறைவனுடைய நாமங்கள் தான் அவற்றின் ஸூறத்தோடு தனித்தனிச் சிருஷ்டிகளாய்க் காட்சியளிக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்த முழுத்தோற்றமே றப்பின் "வெளிப்பாடு"("லாஹிர்", "தஸ்பீஹ்") என்பது. இந்த வெளிப்பாடுதான் அர்ஷு, குர்ஷி, லவ்ஹு, கலம், சொர்க்கம், நரகம் மற்றும் எல்லா ஆலங்களையும் (சிருஷ்டியுலகம்) அல்லது பிரபஞ்சம்) தன்னில் கொண்ட இறைவனின் "லாஹிர்" என்ற முழு ஸூறத்தாயிருக்கிறது. இதற்கு எல்கை எமக்குத் தெரியாது. எனவே, அவனுடைய முழுத் தோற்றத்தை எவராலும் எந்த சிருஷ்டியாலும் காண, அறிய முடியாது. இந்த ஸூறத் தான பிரபஞ்சத்துக்கு உயிராய் இருப்பவனும் இந்த றப்புத்தான். பிரபஞ்சத்தை எமது புலன்களுக்கமைவாய் காணுகிறோம். பிரபஞ்சத்துக்கு உயிராய் இருக்கும் றப்பை நாம் காண்பதி ல்லை. பிரபஞ்சம் தோன்ற முன்பும், தோன்றியிருக்கும் போதும், அழிந்த பின்பும் இருப்பது அல்லாஹ் என்ற உயிர்(வுஜூது)

மட்டுந்தான். எப்போது அப்து என்ற பிரபஞ்சமில்லையோ அப்போதே றப்புமில்லை. அல்லாஹ் மட்டுமே மிஞ்சுவான். எனவே, "அப்து", "றப்பு" என்ற சொற்கள் அல்லாஹ்வின் (ஹக்கின்) இரு நிலமைகளை(மர்த்தபாக்களை)க் குறிப்பிடும் இரு சொற்களேயன்றி, வெவ்வேறான தனித்தனியான இரு பொருட்களே அல்ல. என் இயக்கத்திற்கு என் உடலின் இயக்கம் முற்றும் முரணானது. என் உடலின் இயக்கத்தை எல்லோரும் அறியமுடியும். ஆனால், உயிரான என் இயக்கத்தை எவரும் அறிய, எடைபோட முடியாது. உண்மையை நோக்கினால், என் உடல் எவ்வித இயக்கமும் உடையதேயல்ல. நான் என்னுடலை எப்படி வேண்டுமானாலும் இயக்குகிறேன். இயக்கும் ஆற்றல் என்னுடையதேயன்றி உடலுக்குரிய தனியான சக்தியல்ல. நான் என்னுடலில் சர்வசக்தியும் உடையவனாய் இருப்பதுபோல இறைவன் சர்வ ஆலங்களிலும் சர்வ சக்தியுடையவனாய் இருக்கிறான். அவனையன்றி வேறில்லா திருப்பதால், என்னில் நான் கண்ட சக்திகூட அவனுடைய சக்திதான்.

என் உடல் என்னைவிட்டும் வேறானதென்று எவரும் கூறமுடியாது. அப்படிக் கூறுபவனை சித்த சுவாதீனமுள்ளவனாய் நாம் கணிக்கமுடியாது. குர்ஆனைக்கொண்டே குர்ஆனை விளங்குதல் என்ற அடிப்படையில் 112ம் ஸூறாவின் இறுதி வசனத்தை நோக்குவோம். அவனுக்கு ஒப்பாக(வேறு)ஏகன் இல்லை என்று அவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது. நாம் முன்பு கூறிய விபரந்தான் உண்மை என்பதை இவ்வசனம் நிரூபிக்கிறது. எப்படியென்றால், ஒரு பொருளுக்கு இன்னொரு பொருள் ஒப்பாய் இருப்பதானால், ஒப்பிட்டு நோக்க ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் வேண்டும். விசேஷமாகக் கூறுவதாயின், ஒப்பிட்டு நோக்கும் பொருட்கள் ஒன்றுக்கொன்று இணையாய் இருப்பதானால், அவை இடத்தால் வேறுபட்டிருக்க வேண்டும். நானும் என்னுயிரும் இடத்தால் வேறுபட்ட இரு பொருட்களேயல்ல. எனவே, எனக்கு என்னுடலும், என்னுடலுக்கு

நானும் இணையாக முடியாது. இறைவனுடன் அவனல்லாத பிறபொருட்கள் எதுவுமே இல்லை என்பது கலிமாவின் உறுதியான ஆணித்தரமான வாதம். அல்லாஹ் அல்லாததே சிருஷ்டி என்றால், அல்லாஹ்வுடன் ஒப்பிட்டு நோக்கக்கூடிய சிருஷ்டி என்ற வேற்றுப்பொருளும்(வுஜூதும்) உண்டு என்றாகும். இதுதான் ஷிர்க்கின் ஆணிவேர். இதை நீக்கவே 112ம் ஸூறா தரப்பட்டுள்ளது. அவனுடன் ஒப்பானது இல்லை என்றால், சிருஷ்டி என்பது அவனை விட்டும் வேறான ஒருதனிப் பொருளாய் இருக்கவே முடியாது. நான் வேறு என் உடல் வேறு என்றிருந்தால்தான் என்னை என் உடலுடன் ஒப்பிட முடியும். நானும் உடலும் ஏகமே என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். என்னை(உயிரை)யும் என் உடலையும் ஏகம் என்றுணர்கிற எனக்கு, என்னை விட்டும் என் உடல் எப்படி வேறாக முடியும்? என்னை என்னுடன் எப்படி ஒப்பிடுவது?

சிருஷ்டி அவனல்லாதது எனக்கொண்டால்தான் அவனுடன் இன்னொன்றை ஒப்பிடுவதாய் அமையும். சிருஷ்டி அவனையன்றி இல்லை என்றால் அதாவது, சிருஷ்டி அவனை விட்டும் வேறான தனிப்பொருள் அல்ல என்றால் அவனுடன் ஒப்பிட்டு நோக்க வேறு எதுதான் இருக்கமுடியும்? சர்வ உலகும் அதன் உயிரும்(அப்தும், றப்பும்) ஏகமாய் இருப்பதென்றால், ஒப்பிடுதல் என்பது தவறாகும். எவர் இவ்வுண்மையை புரிந்து கொண்டாரோ அவர் ஷிர்க்கிலிருந்தும் விடுபட்ட மூமீனாய் அமைந்துவிடுகிறார்.

**குர்ஆன்: 5:73**

لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ ثَالِثُ ثَلَاثَةٍ ۘ
وَمَا مِنْ إِلَٰهٍ إِلَّا إِلَٰهٌ وَاحِدٌ ۚ وَإِن لَّمْ يَنتَهُوا عَمَّا
يَقُولُونَ لَيَمَسَّنَّ الَّذِينَ كَفَرُوا مِنْهُمْ عَذَابٌ أَلِيمٌ

**நிச்சயமாக அல்லாஹ் மூவரில் ஒருவன்தான் எனக் கூறியவர்களும் மெய்யாகவே காபிராகிவிட்டார்கள். ஏனென்றால், ஏகமான இலாஹுவைத்தவிர வேறு இலாஹு இல்லை. ஆகவே, அவர்கள் (இவ்வாறு) கூறுவதிலிருந்து விலகிக் கொள்ளாவிடில் அவர்களிலுள்ள நிராகரிப்போரைத் துன்புறுத்தும் வேதனை நிச்சயமாக வந்தடையும்.**

இவ்வாயத்திலுள்ள "மூவரில் ஒருவன்தான் அல்லாஹ்" என்ற வாசகம் பல உண்மைகளை விளக்குகிறது. பிதா, சுதன், பரிசுத்த ஆவி அல்லது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் போன்ற மூவரில் ஒருவனே இறைவன் என்றால், மற்றைய இருவரும் இறைவன் அல்லாதவர்கள் என்றாகும். இந்த மூன்று நாமங்களும் ஏகமான(ஒரே) வுஜூதின் மூன்று நிலைகளுக் கேற்ப மூன்று நாமங்கள் என்று கொண்டால் அதில் எவ்வித தவறுமே ஏற்படாது. எனவே, "ஒருவன்" என்று ஒன்று என்ற இலக்கத்தில் இறைவனை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்துவது தவறாகும்.

112ம் ஸூறாவிலுள்ள "அவன் பெறுவதுமில்லை; பெறப்படுவதுமில்லை" என்ற வசனம் மூன்று பொருட்களைத் தருகிறது.

1. அல்லாஹ் வேறுதான் சிருஷ்டி வேறுதான் என்பது, இது வஹ்மினால் ஏற்பட்ட மருட்சியாகும்.
2. அல்லாஹ்வும் சிருஷ்டியும் ஒன்றுதான். இது அனுமான அறிவினால் ஏற்படும் மருட்சியாகும்.
3. அல்லாஹ்வுக்கு சிருஷ்டி நேர்முரண் என்பது. இதுதான் மருட்சியற்ற தெளிந்த அறிவின் தீர்ப்பாகும். வசனத்தின் உண்மைப்பொருள் இதுதான்.

எனவே, முன்கூறிய இரு பொருளும் அறிவீனமென்ற இருட்திரையினாலும், அறிவென்ற ஒளித்திரையினாலும் ஏற்பட்ட மருட்சியாகும்.

# 11

# றூஹு எத்தனை?

**குர்ஆன்: 15:29**

فَإِذَا سَوَّيْتُهُ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِي فَقَعُوا لَهُ سَاجِدِينَ

**நாம் மனிதனை உருவாக்கி அதில் என் றூஹுவை ஊதினால் அவருக்கு நீங்கள் ஸுஜூது செய்யுங்கள். (சிரம்பணியுங்கள்)**

இவ்வாயத்திற் கூறப்பட்ட றூஹு அல்லாஹ்வுடையது தான். இது பிரிபடக் கூடியதல்ல. (இவ்விபரம் எமது முதல் நூலில் விளக்கப்பட்டுள்ளது. ) றூஹு புகுத்தப்பட்டது என்பது எமது தப்ஸீர்களின் விரிவுரையாகும். புகுத்துதல் என்பதற்குப் பல பொருட்கள் இருக்கவேண்டியது அவசியம். ஆயத்தின் விபரம் வேறாயிருக்கிறது. இவ்வாயத்தில் இங்கு நமக்குத் தேவையானது என்னவெனில், அல்லாஹ்வுடைய றூஹுதான் மனிதனுக்கும் றூஹுவாயிருக்கிறது என்ற உண்மை மட்டுமே.

**குர்ஆன்: 2:28**

كَيْفَ تَكْفُرُونَ بِاللَّهِ وَكُنتُمْ أَمْوَاتًا فَأَحْيَاكُمْ

ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يُحْيِيكُمْ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ

**(மனிதர்களே!) உயிரற்றவர்களாயிருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டியிருக்க நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நிராகரிக்கின்**

**றீர்கள்? பின்னும் அவனே உங்களை மரிக்கச்செய்வான். பின்னும் அவனே உங்களை உயிர்ப்பிப்பான், பின்னும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்படுவீகள்.**

இன்ஸான் உயிரற்ற வெறும் ஸூறத்தாய் இருந்து உயிரூட்டப்பட்டான் என்பதும், முடிவில் உயிரற்ற வெறும் ஸூறத்தாய்(அஸ்மாவாய்) மாறுவான் என்பதும், அல்லாஹ் நாடியபோது மீண்டும் உயிர்பெறுவான் என்பதும், அல்லாஹ் வைவிட்டும் இன்ஸான் வேறொரு தனிவுஜூதுவேயல்ல என்பதும், இவ்வாயத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**குர்ஆன்: 19:66,67**

وَيَقُولُ الْإِنسَانُ أَإِذَا مَا مِتُّ لَسَوْفَ أُخْرَجُ حَيًّا أَوَلَا
يَذْكُرُ الْإِنسَانُ أَنَّا خَلَقْنَاهُ مِن قَبْلُ وَلَمْ يَكُ شَيْئًا

**மனிதன், நான் இறந்த பின்னர் உயிரூட்டி எழுப்பப்படுவேனா என்று கேட்கிறான். முன்னர் யாதொரு பொருளாகவும் இல்லாதிருந்த அவனை நாம்தான் மனிதனாகச் சிருஷ்டித்தோம். என்பதை அவன் கவனிக்கவேண்டாமா?**

யாதொரு பொருளாகவும் இல்லாதிருந்த நிலைமை எது? இல்லாமை மனிதனிடத்தில்தான் உண்டு. இறைவனிடத்தில் இல்லை. எனவே, இல்லாதிருந்த என்ற சொல் மனித அறிவுக் கெட்டாத நிலையில் (தஜயுனுல் ஊலாவில்) இறைநாட்டத்தில் வெறுங்கற்பனையாய், ஸூறத்துக்கூட இல்லாததாய், ஏகனான ஏகனுடன் ஏகனாகவே இருந்தான் என்பதை அறிவிக்கிறது. அதம் என்பது கன்ஸுல்மஹ்பிய்யி என்ற மர்த்தபாவைச் சுட்டியதாகும். எனவே, மனிதனை இல்லாமையைக்கொண்டு அதாவது சூனியத்தைக் கொண்டு சிருஷ்டித்தான் என்பது பொருளல்ல. இல்லாமையில் இருந்து சிருஷ்டித்தான் என்பதே

அதன் அர்த்தமாகும். அதாவது, மனித அறிவில் இல்லாமை யென்ற அமாவில் இருந்ததையே ஸூறத்தாக்கி வெளிப்படுத் தினான் என்பதே பூரணமான உண்மையாகும்.

**குர்ஆன்: 9:40**

إِلَّا تَنصُرُوهُ فَقَدْ نَصَرَهُ اللَّهُ إِذْ أَخْرَجَهُ الَّذِينَ
كَفَرُوا ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ إِذْ يَقُولُ
لِصَاحِبِهِ لَا تَحْزَنْ إِنَّ اللَّهَ مَعَنَا ۖ فَأَنزَلَ اللَّهُ
سَكِينَتَهُ عَلَيْهِ وَأَيَّدَهُ بِجُنُودٍ لَّمْ تَرَوْهَا وَ
جَعَلَ كَلِمَةَ الَّذِينَ كَفَرُوا السُّفْلَىٰ ۗ وَكَلِمَةُ
اللَّهِ هِيَ الْعُلْيَا ۗ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ

**நிச்சயமாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்.**

அல்லாஹ் நம்மோடிருக்கிறான் என்றால், மோதிரத்துடன் தங்கம் இருந்துகொண்டிருப்பது போல என்பதே அதன் அர்த்தம். தங்கந்தான் மோதிரமாயிருக்கின்றது.

**குர்ஆன்: 8:12**

إِذْ يُوحِي رَبُّكَ إِلَى الْمَلَائِكَةِ أَنِّي مَعَكُمْ فَثَبِّتُوا الَّذِينَ
آمَنُوا ۚ سَأُلْقِي فِي قُلُوبِ الَّذِينَ كَفَرُوا الرُّعْبَ
فَاضْرِبُوا فَوْقَ الْأَعْنَاقِ وَاضْرِبُوا مِنْهُمْ كُلَّ بَنَانٍ

**உமது இறைவன் மலக்குகளை நோக்கி நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கிறேன். ஆகவே, நீங்கள் மூமீன்களை உறுதிப்படுத்துங்கள்.**

**குர்ஆன்: 50:16**

وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ
بِهِ نَفْسُهُ ۖ وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيدِ

**நாம் இன்ஸானிடத்தில், அவனது பிராண நரம்பிலும் சமீபமாய் இருக்கிறோம்.**

இவ்வித ஆயத்துக்களைச் சிந்தனைசெய்து தெளிவு பெறுங்கள். உடனிருத்தல் பிராண நரம்பிலும் சமீபமாய் இருத்தல் என்பதெல்லாம் இன்ஸான் அவனாக இருந்தாலேயன்றி வேறு எவ்வகையிலும் ஒத்துவராது என்பதை தெளிந்த அறிவோடு நோக்குங்கள். இலாஹு என்ற சொல் பொதுப்பெயர்ச் சொல்லாய் இருப்பதால், அப்துவையும் றப்புவையும் ஏகமாய் (ஒன்றாய்)க் கொண்டு கலிமாவை நோக்கினால், இருப்பதாய் (மவுஜுதாய்)க் காட்சியளிப்பதும் அதில் மறைந்ததுபோல் அறிவுக்குத் தோன்றாததாய் இருப்பதும், அல்லாஹ்வையன்றி இல்லை என்பது தெளிவாய் தென்படுகின்றது. இது எப்படியெனில், என் உடலை உலகாயும், என்னை அதில் மறைந்தவனாயும் எடுத்துக்கொண்ட நான், என்னை விட்டும் என் உடலான சிருஷ்டி வேறல்ல என்று கூறுவதுபோல பேரண்டமாய் இருக்கிற அப்தும், அதற்கு உயிராய் இருக்கிற றப்பும்(சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவும்) அல்லாஹ்வை விட்டும் வேறல்ல. ஏகமாயுள்ள அல்லாஹ்வாகிய அவனே சிருஷ்டியாகவும், சிருஷ்டி கர்த்தாவாகவும் (அப்துவாகவும்

றப்புவாகவும்) இருக்கிறான் என்பதை உணர்த்துவதே கலிமாவினதும், அதன் தலீல்களினதும் உண்மையான நோக்கமாகும்.

**குர்ஆன்: 27:64**

أَمَّن يَبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيدُهُ وَمَن يَرْزُقُكُم مِّنَ السَّمَآءِ وَالْأَرْضِ
ءَإِلَٰهٌ مَّعَ اللَّهِ قُلْ هَاتُوا بُرْهَانَكُمْ إِن كُنتُمْ صَٰدِقِينَ ﴿٦٤﴾

**அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) நீங்கள் (உண்டென்று) உண்மை சொல்பவர்களாய் இருந்தால், உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.**

அல்லாஹ்வுடன் பிறிதில்லை என்பதை நிருபணஞ் செய்யப் போதிய ஆதாரங்கள் இஸ்லாத்தின் உறுதிப் பிரமாணங்களில் நிறைய இருக்கின்றன. குர்ஆன், ஹதீஸுகளையும் சிந்திக்கும் அறிவையும் வீசியெறிந்து விட்டு முஷ்ரீக்கின் கொள்கையில் ஊறிய பின்பற்றல்வாதிகள் அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்று கூறினால், அவர்களை அறியாமலேயே அல்லாஹ்வுடன் ஒப்பிடக்கூடிய சிருஷ்டிப் பொருளும் அவனுடன் உண்டென்று அவர்களுடைய உள்ளத்தில் ஓர் உளநோயை ஆக்கிக்கொள்கிறார்கள். இந்த உளநோயின் பெயர்தான் ஷிர்க் என்பது. இந்த உளநோயைக் குணமாக்கும் சஞ்சீவி(மருந்து)தான் கலிமாவும் அதன் தலீல்களுமாகும். (இதை விபரமாய் அறிய விரும்பினால் குர்ஆன் 14:24, 25:26, 22:24 போன்ற ஆயத்துக்களை ஆராய்க.)

## தொகுப்பு

1. முஹம்மது(ஸல்) அவர்களின் நாவின்மூலம் இந்த 112ம் ஸூறாவை இறைவன் எமக்கருளியுள்ளான். (திரையிலிருந்தேயன்றி இறைவன் பேசுவதில்லை.)

2. முஷ்ரீக்கின்கள் இன்ஸானைவிட்டும் அல்லாஹ் வேறாகப் படர்க்கையிலிருக்கிறான் என்று நம்பியிருந்த நம்பிக்கையை அவர்களுடைய பாஷைவழக்கில் எடுத்துக்காட்டி விளக்கவே “அந்த அல்லாஹ்” (உங்களுடைய எண்ணத்தில் நீங்கள் கற்பனை செய்திருக்கும் அல்லாஹ்) என்று கூறப்பட்டுள்ளது.

3. அல்லாஹ் என்பவன் பகுபடாத, மனித அறிவுவட்டத்தில் கட்டுண்ணாத ஏகன் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

4. “அஹதுன்” என்ற சொல்லின் பொருள் “ஏகன்” என்பதுதான் என்று அதையடுத்துவரும் “ஸமது” என்ற சொல் உறுதிப்படுத்துகிறது.

5. அல்லாஹ் என்ற சொல்லினால் உணர்த்தப்படும் “தாத்” அல்லது வுஜூதை விளக்குவதற்காகவே “அவன் பெறுவதுமில்லை; பெறப்படுவதுமில்லை” என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது, அப்துக்கு றப்பு நேர்முரண் என்பதை விளக்கவே இவ்வசனம் பாவிக்கப்பட்டுள்ளது. வேறு என்று விளக்குவதாகக் கொள்வது வஹ்மு என்ற பேதபுத்தியாகும்.

6. அப்துக்கும் றப்புக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை அறிந்த மனிதன், மீண்டும் அப்துவேறு றப்புவேறு என்று கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே அவனுக்கு ஒப்பானது (இணை, சமம், நிகர், ஜோடி, உவமை) இல்லை என்று வலியுறுத்தப்படுகிறது. சிருஷ்டி அவனை விட்டும் வேறானதல்ல என்று உணர்த்தப்படுகிறது.

7. “அஹதுன்” என்ற சொல்லினால் உணர்த்தப்பட வேண்டிய உண்மையை விபரிப்பதே 112ம் அத்தியாயத்தின் நோக்கமாயிருக்கிறது. அதாவது, றுபூபியத், உபூதியத் ஆகிய இருநிலைகளும் ஏகமான அல்லாஹ்வுக் குரியனவே என்பதை உறுதிப்படுத்துவதே ஆயத்தின் நோக்கமாகும்.

8. கடவுளே விகாரப்பட்டுச் சிருஷ்டியாய் வெளியானானென்றும் கெட்டழிந்து சிருஷ்டியானான் என்றும், கடவுளே ஈஸா(அலை) என்றும், கடவுளுடைய மகனே ஈஸா(அலை) என்றும், உஸைர்(அலை) அவர்கள் கடவுளின் குமாரனென்றும், பற்பல வகையான மருட்சியில் ஊறியிருந்த உலக மக்களின் மருட்சியை நீக்கி, இறைவனின் சுயநிலையை விளக்கவே இந்த சூறா அருளப்பட்டிருக்கிறது. தெய்வீகத் தன்மைக்கு முரணான கற்பனை யூகங்களைப் போக்கி உண்மையான தெய்வீக இலட்சணத்தை(தௌஹீதை) விளக்குவதற்காக இந்த சூறா அருளப்பட்டதென்பதை நாம் ஊன்றி நோக்க வேண்டும்.

நாம் ஒரேயொரு ஸுறாவைமட்டும் அதன் தொடர் வசனங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்ந்ததால் மட்டும் இம்முடிவுக்கு வந்திருக்கிறோம். கலிமாவைக் கொண்டே குர்ஆனை அணுகினோம். இப்போது, குர்ஆனைக் கொண்டே குர்ஆனை விளங்குதல் என்ற அடிப்படையில் நாம் எடுத்துக் கொண்ட தீர்ப்புக்கு குர்ஆனில் வேறு ஆதாரங்களுண்டா என்பதை ஆராய்வோம். குர்ஆனை விளங்கும் 1வது வழியில்தான் நாம் இப்போது தரிபட்டிருக்கிறோம் என்பதை மறக்கவேண்டாம்.

# 12

## “வெளிப்பாடு” என்றால் என்ன?

**குர்ஆன்: 57:3**

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

**ஆதியும் அவனே, அந்தமும் அவனே, தோற்றுவதும் அவனே, மறைந்திருப்பதும் அவனே. அவன் சகலவற்றையும் நன்கறிந்தோன்.**

இவ்வாயத்தும், கலிமாவின் தலீல்(ஆதாரம்)களில் ஒன்றாகும். கலிமாவைக்கூறி அதை விளக்க இந்த ஆயத்தையே றஸுலுல்லாஹ் ஆதாரங்காட்டியிருக்கிறார்கள். மேலும், இவ்வாயத்தும் முஹ்கமுவைச்சேர்ந்த ஒரே கருத்துடைய தென்பதை நாம் மறக்கக்கூடாது. இவ்வாயத்து ஐந்து விஷயங்களை வலியுறுத்துகிறது.

**1வது:-**

“அவ்வல்” (தொடக்கம், ஆரம்பம், ஆதி) என்பதாகும். ஆதி என்பது தன்னில் தானே ஆதியாகாது, இன்னொன்றுக்குத்தான் அது ஆதியாயிருக்க முடியும். எனவே, ஆதி என்ற சொல் காலத்தால் வரையறுக்கப்பட்டிருப்பதால், அல்லாஹ்வுக்கு ஆதி உண்டென்று கொள்ளமுடியாது. சிருஷ்டிக்குத்தான் அதாவது, அழிந்து மறையும் பொருளுக்குத்தான் ஆதி இருக்கமுடியும்.

ஆகவே, இந்த “அவ்வல்” என்ற சொல்லால் நாம் பெறும் அர்த்தம் “சிருஷ்டிக்கு ஆதியானவன்” என்பதே. “அவ்வல்” என்பது இறைவனின் இலாஹியான திருநாமங்களில் ஒன்றுதான். இது சிருஷ்டிக்கும் பொருந்துவது ஏன்? சிருஷ்டி என்ற ஸூறத்தில் அவனே இருந்துகொண்டிருப்பதால்தான் பொருந்துகிறது. உடலுக்கு ஆதியும், அந்தமும் உண்டேயன்றி, உயிருக்கு ஆதியும் அந்தமும்கிடையாது.

**2வது:-**

“ஆகிர்”(முடிவு, இறுதி ,கடை, அந்தம்) என்பதாகும். இதுவும் முன்கூறியதுபோலவே இருக்கிறது. “ஆகிர்” என்பது தன்னில் தானே ஆகிராக(இறுதியாக) முடியாது. இன்னொன்றுக்குத்தான் இறுதியாக இருக்கமுடியும். “ஆகிர்”(இறுதி) என்ற சொல் காலத்தால் வரையறுக்கப்பட்டிருப்பதால், அல்லாஹ்வுக்கு ஆகிர் (இறுதி,அந்தம்) உண்டென்று கொள்ள முடியாது. ஆகவே, இந்த “ஆகிர்” என்ற சொல்லால் நாம் பெறும் அர்த்தம் “சிருஷ்டிக்கு அந்தமானவன்” என்பதே. ஆகிர் என்பதும் இறை வனின் ஓர் இலாஹியான நாமந்தான் இதுவும் சிருஷ்டிக்கே பொருந்துகிறது. மனித உடலுக்குத்தான் அவ்வல், ஆகிர்(ஆதி, அந்தம்) உண்டு. உயிருக்கு அவ்வல், ஆகிர்(ஆதி, அந்தம்) கிடையாது. எனவே, சிருஷ்டி என்பது அவனுடைய ஸூறத்து த்தான் என்பதை மறுக்க முடியாது.

**3வது:-**

“லாஹிர்”(தோற்றுவது, வெளிப்படையாய்க் காட்சியளிப்பது, சிருஷ்டியின் அறிவால் அறியப்படக்கூடியது) என்பதாகும். இது சிருஷ்டிகளை- சர்வபிரபஞ்சங்களை நோக்கியதொரு விஷயமாகவே தென்படுகிறது. நாம்காண்பது எமக்குத் தோற்றுவது சிருஷ்டிதான், இதில் எவருக்கும் சந்தேகமே யில்லை. பெறுவதும், பெறப்படுவதும், புதிது புதிதாய் தோற்றுவதும், இருந்துகொண்டு காட்சியளிப்பதும், முடிவில் இல்லாமல் அழிந்து மறைந்துவிடுவதும் சிருஷ்டிகளே. இதை

எம்மறிவு மறுக்க முடியுமா? தோற்றுவது கண்டப்பொருளாய், முப்பரிமாணத்தில் கட்டுண்டதாய், பௌதிகமாயிருப்பதால் தோற்றுவதாய் இருக்கும் சிருஷ்டி இறைவனேயல்ல என்ற முடிவுக்கு வருவது பிழை என்பதை வலியுறுத்தவே "லாஹிர்" (வெளிப்படையாய்த் தோற்றுபவன்) என்று கூறப்பட்டிருக்கிறது. கண்டப்பொருளாயிருந்து தோற்றமளிப்பது இறைவனல்ல என்ற வாதம், கண்டப்பொருளான என் உடல் என்னைவிட்டும் வேறானதென்று கூறுவதுபோன்ற வெறும்மருட்சியாகும். (தோற்றாதவனே அல்லாஹ் என்றும், தோற்றுவது(சிருஷ்டி) அல்லாஹ் அல்லவென்றும் கூறியவர்கள் நம்றூது, பிர்அவுன், அபூஜஹ்ல் போன்ற முஷ்ரிக்கீன்கள் என்பதை எமது முதல் நூற்களில் விளக்கியுள்ளேன்.) "ஆகிர்", "அவ்வல்", "பாத்தின்", "லாஹிர்" என்ற இச்சொற்கள் யாவும் இறைவனின் இலாஹியான திருநாமங்கள்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. எல்லோருமே இதை ஏற்றிருக்கின்றனர். அப்படியாயின், "லாஹிர்" என்ற சொல்லில் மட்டும் சந்தேகங்கொள்ள வேண்டிய காரணந்தான் என்ன? தெளிவில்லாத ,சிந்தனையற்ற அறிவும் கண்மூடித்தனமான பின்பற்றலுந்தான் இதற்குக்காரணமாகும். "லாஹிர்" என்பது, இறைவனின் திருநாமங்களில் ஒன்றென்றால் அந்த லாஹிருக்கு நேர்முரணாகவுள்ள பாத்தின் என்பதும் அவனுடைய நாமந்தான் என்றால், வெளிப்படையாய்த் தோற்றும் சிருஷ்டி(பிரபஞ்சம்) அவனல்லாதது என்று எப்படிக்கூற முடியும்? "அவ்வல்", "ஆகிர்", "லாஹிர்", "பாத்தின்" ஆகிய இத்திருநாமங்கள் முஹ்கமுவான ஒரே கருத்துடையவை என்பதை நாம் குர்ஆனின் விதிப்படி ஏற்றிருக்கிறோம். எனவே, இச்சொற்களை நாம் எவ்வகையிலும் வலிந்துரை கொள்ளவே கூடாது. "லாஹிர்" என்ற சொல்லுக்கு "தெளிவானவன்" என்று சில தப்ஸீர்கள் கூறுகின்றன. இந்தத் தப்ஸீர்கள் கூறுகின்ற "தெளிவு" என்பதில் ஒரு மயக்குண்டு. எனவே, தோற்றுபவன் என்பதே "லாஹிர்" என்பதன் சரியான அர்த்தமாகும்.

**4வது:-**

“பாத்தின்”(மனிதப் புலன்களுக்கெட்டாமல் மறைந்திருப்பவன்) என்பதாகும். இப்படி மறைந்திருக்கிற அல்லாஹ்தான் (வுஜூதுதான்) பெறாதவன், பெறப்படாதவன் என்பதை 112ம் ஸூறா விளக்கந்தருகிறது. “அவ்வல்”, “ஆகிர்” “லாஹிர்”, “பாத்தின்” ஆகிய இந்நான்கு சொற்களும் இறைவனின் இலாஹியான நாமங்கள்தான் என்று முன்பே கூறினேன். இலாஹியான நாமங்கள் சிருஷ்டிக்கும் பொருந்துகிறதென்றால், சிருஷ்டி என்பது அவனைவிட்டும் வேறான தனி வுஜூதுவாய் இருக்கமுடியுமா?

**5வது:-**

“எல்லாவற்றையும் அறிந்தவன்” என்பதை இப்போது தெளிந்த அறிவோடு நோக்குங்கள். சிருஷ்டிக்கு ஆதியாயிருந்தவனை நாம் கண்டதில்லை. சிருஷ்டிக்கு அந்தமாய் இருக்கப் போகிறவனையும் நாம் காணப்போவதில்லை. ஏன்? சிருஷ்டிதான் ஆதியிலும் அந்தத்திலும் இல்லை என்றால், சிருஷ்டியாயிருக்கின்ற எம்மால் அதை எப்படி அறியமுடியும்? அறியவே முடியாது. நாம் சிருஷ்டியாயிருக்கும் போதாவது காண்கிறோமா? இல்லை. சிருஷ்டியாகிய எம்மிடத்தில் இறைவன் இன்றும் மறைந்தவனாய்த்தானே இருக்கிறான்! அப்படியானால், இறைவனின் வெளிப்பாடு, தோற்றம், ஸூறத் என்பது எது? நாம் காணும் அத்தனைதோற்றங்களும், ஸூறத்துக்களும் அவனுடைய தோற்றங்களாய், ஸூறத்துக்களாய்த்தான் இருக்க வேண்டும்.

சிருஷ்டி அவனல்லாதது என்று கொண்டால் மிகப்பெரும் பிழைகள் ஏற்படுகின்றன. அரூபியான அல்லாஹ்வுடன் வெளிப்படையாய்த் தோற்றும் சிருஷ்டி அவனல்லாதாய், வேறானதாய் இருப்பதென்று கொண்டால் இணையுண்டு என்ற ஷிர்க்குண்டாகும். அரூபியான இறைவன் இருக்க ஓரிடமும், அவனல்லாத ரூபியான சிருஷ்டி இருக்க வேறிடமும் அவசியமாகும். இரண்டும்

ஒன்றாய் இருக்கிறதென்றால் அதுவும் ஒத்துவராது. இருபொருட்கள் ஏககாலத்தில் ஒன்றென்றாகாது. இது ஒரு தத்துவம். எனவே, லாஹிரும் பாத்தினும் பெயரளவில் வேறுபடினும் இரண்டும் வெவ்வேறில்லாத ஏகந்தான். சூட்சுமமான பாதினான நானும், லாஹிரான என் உடலும் ஏகமாய்த்தான் இருக்கின்றது. என்னுயிரைவிட உடல் வேறானதென்றால், நானிருக்கும் இடத்தில் உடலும் உடலிருக்குமிடத்தில் உயிரும் இருக்கமுடியாது. இருபொருள் ஏககாலத்தில் ஒன்றாயிருக்க முடியாது. எனவே, பாதினென்ற உயிராயும் லாஹிறென்ற உடலாயும் ஏகமாய் இருப்பவன் நான்தான். லாஹிரும் பாதினும் இருதனிப்பொருட்களல்ல. ஏகமாயுள்ள எனது இரு நிலமைகளின் அதாவது, எனது இருமர்த்தபாக்களைக் குறிப்பிடும் இரு பெயர்களே லாஹிர், பாதின் என்பவை. ஒன்று மறைவதானால் அதை மறைக்கும் பொருளும் அவசியம். இல்லையானால், பாத்தின்(மறைவு) என்றசொல் பொருந்தாது. சிருஷ்டிதான் மறைக்குதென்றால், அதுவும் ஒத்துவராது, மறைக்கும் பொருள் மறைபடும் பொருளின் அளவாய் அல்லது அதிலும் பெரிதாய் இருக்கவேண்டும். அப்படியாயின் சிருஷ்டியும் இறைவனும் ஒன்றைப்போல் மற்றொன்று சமமாய் அல்லது சிருஷ்டி இறைவனை விடவும் பெரிதாய் இருந்தாலேயன்றி மறைக்க முடியாது. சிருஷ்டி தனித்தபொருள்தான் என்றால் ஏகவியாப கமாய் அஹதாயிருக்கிற அல்லாஹ்வில் இருக்கமுடியாது. ஏன்? சிருஷ்டியுள்ள இடத்தில் இறைவனும், இறைவன் உள்ள இடத்தில் சிருஷ்டியும் அதாவது, ஒன்றுள்ள இடத்தில் மற்றொன்று இருக்கமுடியாதென்று தத்துவங்கூறுவது உண்மையானால், ஏகமான இறைவனில் சிருஷ்டி இருக்கும் இடமெல்லாம் துவாரங்கள் ஏற்பட்டுவிடும்! ஆகவே, ஏகமான இறைவனை துவாரங்களுள்ள இறைவன் என்று சொல்ல நேரிடுமே! வெளிப்பாடு, தோற்றம், உருவம், ஸூறத் என்ற பொருளுடைய "லாஹிர்" என்ற சொல்லையும் இதற்கெதிரிடையான "பாத்தின்" என்ற சொல்லையும் மிக அவதானமாய் நாம் ஆராய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இவ்வாயத்தை இன்றுள்ள உலமாக்களில் ஒரு கூட்டத்தினர் இருட்டடிப்புச் செய்து மக்களைத் தவறான வழியில் செலுத்துகிறார்கள். எப்படியென்றால், ஆதி, அந்தம், தோற்றம், மறைவு, ஆகிய யாவற்றையும் அல்லாஹ் அறிந்தவனென்றும் வெளிப்படையாய்த் தோற்றும் சிருஷ்டி அல்லாஹ் அல்லாதது தான் என்றும் மழுப்புகிறார்கள். இது சுத்தமான புரட்டலாகும். அவ்வல், ஆகிர், லாஹிர், பாத்தின் ஆகிய இத்திருநாமங்கள் இறைவனின் இலாஹியான திருநாமங்கள்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இதுவரை எவரும் மறுத்ததுமில்லை. இந்த நாமங்கள் அவனுக்குரியவையாய் இருப்பதால்தான் அவன் "முற்றாய் அறிந்தவன்" என்று அழைக்கப்படுகிறான். இந்த நாமங்கள் அவனுக்குரியவையல்ல என்றால், அவற்றை அவன் அறிகிறான் என்பது பொருந்தாது. ஏனென்றால், இடத்தால், காலத்தால், உருவத்தால், குணத்தால் வேறுபட்ட பொருட்கள் ஒன்றையொன்று முற்றாய் அறிதல் முடியாது. இது பகுத்தறி வாளர்கள் யாவரும் ஒப்புக்கொண்ட ஓர் தத்துவ உண்மை யாகும். அவனையன்றி வேறில்லாதிருப்பதால்தான் அவனே அவ்வலாயும், ஆகிராயும், லாஹிறாயும், பாத்தினாயும், முற்றும் அறிந்தவனாயும் இருக்கிறான். "லாஹிர்" என்ற வெளிப்பாடு அவனல்லவென்றால், அதாவது சிருஷ்டியுலகு என்ற பிரபஞ்சம் அவனல்லவென்றால் அவனுடன் ஒப்பிடக்கூடிய, அவனுக்கு இணையான வேற்றுப் பொருட்களும் உண்டு என்றாகும். ஷிர்க் என்பது இதுதான். சிருஷ்டியான லாஹிர்(வெளிப்பாடு) அவனல்லாதது என்றுகொண்டால் அவன் முற்றாய் அறிந்தவன் என்பது ஒத்துவராது. ஏனென்றால், சிருஷ்டி அல்லாஹ் அல்லாதது என்னும் போது சிருஷ்டியுலகை நாம் எப்படி எல்கையில் மட்டுப்படுத்துகிறோமோ அதேபோல எல்கையற்ற இறைவனையும் எங்களையறியாமலேயே இடத்திலும் காலத்திலும்(எல்கையில்) மட்டுப்படுத்திவிடுகிறோம். மனித அறிவினால் மட்டுப்படுத்தப்படுகிற ஒன்று சிருஷ்டியாய் இருக்கு மேயன்றி இறைவனாய், ஏகவியாபகமான அல்லாஹ்வாய் இருக்கவே முடியாது. மட்டுப்படுத்தப்படுபவை சிருஷ்டியாய்

இருப்பதால், அவை ஒன்றையொன்று முற்றாய் அறியவே அறியா. வெளிப்பாடு(பிரபஞ்சம்) இறைவனல்லவென்று நம்புகிற மனிதன் இறைவனைச் சிருஷ்டியின் நிலையில் கட்டுப்படுத்திக் கொண்டு, அவனுடைய கற்பனையிலுள்ள இலாஹுவுக்கு (சிருஷ்டிக்கு)அல்லாஹ் என்று பெயர் சூட்டிக்கொண்டுமிரு க்கிறான். இப்படிப்பட்ட மனிதன் கற்பனையினாலும், மனோ இச்சையினாலும் பீடிக்கப்பட்ட ஓர் உளநோயாளியாவான்.

சிருஷ்டியுள்ள இடத்தில் இறைவனும், இறைவனுள்ள இடத்தில் சிருஷ்டியும் இல்லையென்றால், இறைவன் ஏக வியாபகன் என்பது பொய்யாய் முடியும். இறைவன் அஹதுன் (ஏகன்) என்பது உண்மையானால், சிருஷ்டி அவனுடைய தோற்றப்பாடாகவே இருக்கும். அதாவது, வெளிப்பாடு(லாஹிர்) அல்லாஹ்வுடையதாகவே இருக்கும். இருபொருள் ஏககாலத்தில் ஒன்றாயிராதென்ற தத்துவப்படி, அல்லாஹ் என்ற ஏகப் பொருளுடன் அதுவல்லாத வேறெதுவும் இருக்கமுடியாது. லாஹிறான சிருஷ்டிக்கு நாம் எல்கை வகுத்துக் கொள்வதுபோல, பாத்தினான இறைவனுக்கும் நாம் எம்மை அறியாமலேயே எல்கை வகுத்துக் கொள்கிறோம். இந்த லாஹிறும், பாத்தினும் ஏகமான(ஒரே) வுஜூதின் வெவ்வேறில்லாத இரு மர்த்தபாக்கள் (இரு நிலைமைகள்) என்று கொண்டால்தான் அவன் எல்லாம் அறிந்தவன் என்பது உண்மையாகும். அவனையன்றி பிறிதொன்றும் இல்லாமல் அவனே எல்லாமாய், எல்லாமே அவனாய் இருப்பதனால்தான் அவன் எல்லாம் அறிந்தவன் என்பது பரிபூரண உண்மையாகிறது.

**குர்ஆன்: 4:126**

وَلِلَّهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ ۚ

وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطًا

**வானங்களிலும், பூமியிலுமுள்ள யாவும் அல்லாஹ்வுக்குரியனவே, அல்லாஹ் யாவற்றையும் சூழ்ந்தவனாக இருக்கிறான்.**

என்னுடைய உடல் என்ற வெளிப்பாட்டுக்கும், (லாஹிறுக்கும்) உயிர் என்ற மறைவுக்கும்(பாத்தினுக்கும்), நானே உடமைக்காரனாயிருப்பதுபோல, வானம் பூமி யாவிலும் உள்ள வெளிப்பாடென்ற லாஹிறுக்கும், பாத்தின் என்ற மறைவுக்கும் அல்லாஹ்தான் உடமைக் காரனாயிருக்கின்றான். குர்ஆன்- 21:165, 2:224, 10:31 போன்ற பல ஆயத்துக்கள் இவ்வுண்மையை நிரூபிக்கின்றன. என் உடலை நான் சூழ்ந்திருப்பதைப்போல, (நகைகளைத் தங்கம் சூழ்ந்திருப்பது போல) அல்லாஹ் சர்வ ஆலங்களையும் சூழ்ந்தவனாய் (முஹீத்தாய்) இருக்கிறான்.

குர்ஆன் 56:85ம் ஆயத்தில் ‘‘நீங்கள் நம்மைப் பார்ப்பதில்லை’’ என்றும், 7:7ம் ஆயத்தில் ‘‘நாம் மறைவாக இருக்கவில்லை’’ என்றும், அல்லாஹ் கூறுகிறான். அதாவது, பாத்தின், லாஹிர் ஆகிய இருதன்மைகளும் தனக்குரியவையே என்று அல்லாஹ் மிகத்தெளிவாய் விளக்கியுள்ளான். எனவே, 57:3ம் ஆயத்திற்கூறிய ஆதி, அந்தம், வெளிப்பாடு, மறைவு ஆகிய நான்கு தன்மைகளும்(நாமங்களும்) தன்னுடையவைதான் என்று கூறிய உண்மையை 56:85,7:7ம் ஆயத்துக்களைக் கொண்டு இறைவன் நிரூபணஞ் செய்துள்ளான். இவ்வுண்மையை நிரூபணம் செய்ய இன்னும் எவ்வளவோ ஆதாரங்களைத் தரமுடியும்.

குர்ஆன் ஹதீஸுகளுக்கும் அறிவுக்கும் முரணாய் அல்லாஹ் வேறுதான் சிருஷ்டி அவனல்லாத வேறுதான் என்று ஒருவர் வாதிடுவாரேயானால், அவர் ம.்.கூல், மன்கூலென்ற மூலப்பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளாத ஒரு முஷ்ரீக்காய், இணைகற்பிப்பவராய் இருக்கிறார் என்பதே உண்மையாகும்.

**குர்ஆன்: 16:123**

ثُمَّ أَوْحَيْنَا إِلَيْكَ أَنِ اتَّبِعْ مِلَّةَ إِبْرٰهِيْمَ
حَنِيْفًا ۗ وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ

**ஆகவே, "(நபியே!) நீர் இப்றாஹிமுடைய நேரான மார்க்கத்தைப் பின்பற்றுவீராக!" என்று உமக்கு வஹி அறிவித்தோம்.(அவர் இப்ராஹிம்) இணைகற்பிப்பவராக இருக்கவில்லை.**

இணை, ஷிர்க் என்றால் என்னவென்பதையும் பெரும்பாலார் விளங்கிக் கொள்ளாமையினால் உண்மையை மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இறை ஐக்கியத்தைப் பெறத் துடிக்கும் மனிதர்கள் ஷிர்க், இணை, சமம், ஜோடி, ஒப்பு, உவமை என்ற சொற்களால் குறிப்பிடப்பட்ட உண்மையென்ன என்பதை மிகத் தெளிவாய் புரிந்து கொள்ளவேண்டியது மிகமிக அவசியமாகும். இவ்விபரம் அறிவில் தெளிவாய் அமையவில்லையானால், ஒருபோதும் குறிக்கோளை அடையவே முடியாதென்பதை உறுதியாக நம்பவேண்டும். ஒன்றுடன் இன்னொன்று இருந்து கொண்டிருப்பதே இணை, ஷிர்க், என்பதன் அர்த்தம். ஒன்றுக்கொன்று இணையாய், ஜோடியாய் உள்ள பொருட்கள் எல்லாவகையிலும் நூறு வீதமும் ஒத்திருக்க வேண்டுமென்பது அவசியமல்ல. உதாரணமாக, பௌதிக உலகும் சூட்சும உலகும் வெவ்வேறு என்றால் அவை ஒன்றுக்கு மற்றொன்று இணைதான், ஜோடிதான், இதைப்போல பௌதிகமான என்னுடல் சூட்சுமமான என்னுயிருக்கு வேறானதென்றால், என்னுடல் எனக்கு இணை, ஜோடி என்றாகும். வெள்ளைக்கு கறுப்பு இணையாயிருப்பது போல, நீருக்கு நெருப்பு இணையாய் இருப்பதுபோல, பௌதிகத்துக்கு சூட்சுமம் இணைதான். இவற்றின் ஸூறத்துக்களும் பண்புகளும் வெவ்வேறாயிருப்பினும் அவை வெவ்வேறு இடத்தில்

இடங்கொண்டிருப்பதால் அவை ஒன்றுக் கொன்று இணைதான், ஜோடிதான். ஸூறத்து , குணம் ,இடம், காலம், போன்றவை வேறுபடினும் ஒன்றுக்கொன்று இணை, ஜோடி, சமம், நிகர், ஒப்பு, உவமைதான் என்பதை மறுக்க முடியாது. இவ்விபரம் முன்பு தரப்பட்டுள்ளது.

ஜோடியுள்ள பௌதிக சூட்சும வஸ்த்துக்கள் வெறுங் கற்பனை ஸூறத்துக்களே என்றும், இந்த ஸூறத்துக்கள் யாவற்றிற்கும் மூலமாய் இருந்து கொண்டிருப்பது வுஜூதுதான் என்றும் எடுத்துக்கொண்டால், சிருஷ்டியுலகு குணமாயும், நாமமாயும், வுஜூது குணியாயுமிருக்கிறது. சிருஷ்டி தோன்று வதாயும் வுஜூது தோன்றாததாயும் இருப்பதனால், அவை ஒன்றுக்கொன்று இணை என்று கூறமுடியாது. சிருஷ்டி வேறு வுஜூது வேறு என்று கொண்டால்தான் இணையேற்படும். நெருப்பு வேறு, அதன் ஸூறத்தும் ஸூறத்திலிருந்து வெளியாகும் வெப்பமும் வெவ்வேறென்று கொண்டால்தான் நெருப்புக்கு ஸூறத்தும், வெப்பமும் இணையென்று கூறமுடியும். இணை, ஜோடி என்பது சிருஷ்டியையும் (குணத்தையும்), ஜோடியின்மை (ஏகம்) வுஜூதுவான குணியையும் குறிப்பிடுவதாகும். குணியை விட்டுக் குணமும், குணத்தை விட்டுக் குணியும் எவ்வகையிலும் வெவ்வேறாய் இருக்கவேமுடியாது. குணியும், குணமும் வெவ்வேறென்று நம்பும் உளநோய்தான் ஷிர்க், இணை என்பது. லாஹிறும், பாத்தினும் ஏகமாயுள்ள வுஜூதுவின் இரு நிலமைகள் என்று கொண்டால் இணையேற்படவே முடியாது.

நானும் என்னுடலும் என் சக்தியும் வெவ்வேறல்ல வென்றால், என்னுடலோ உடலின் அங்கங்களோ எவ்வகையிலும் எனக்கு இணையாகமுடியாது. என்னுடல் என்னை விட்டும் வேறானதென்றால்தான் உடலுக்கு நானும், எனக்கு உடலும் இணையாக முடியும். என்னுடலான சிருஷ்டி என் கற்பனையிலுள்ள வெறும் ஸூறத்தேயென்றால், நான்

பெறாத, பெறப்படாதவனாயும் என் கற்பனையிலுள்ள சிருஷ்டியான உடல் பெறுவதாயும், பெறப்படுவதாயும் இருக்கிறது. என்னுடலான ஸுறத்துக்குத்தான் இணை, துணை, நிகர், ஒப்புவுவமை, பிறப்பிறப்பு உண்டேயன்றி எனக்கு இவையெதுவும் கிடைக்கவே கிடையாது. என்னுடலான சிருஷ்டி ஆணாயும், பெண்ணாயும் இருக்கிறது. நான் ஆணுமில்லை, பெண்ணுமில்லை. என்னுடலுக்கு இடம் அவசியம் எனக்கு இடம் அவசியமல்ல. நானே என்னுடலுக்கு இடமாயிருக்கிறேன். என்னுடலுக்கு நான் முற்றிலும் முரணானவன். ஆயினும், என்னுடல் என் ஸுறத்தேயன்றி என்னைவிட்டும் வேறான என்னைப்போன்ற ஒரு தனிப்பொருளேயல்ல.

"அவ்வல்","ஆகிர்" என்ற சொற்கள் அவ்விரண்டுக்கு மிடைப்பட்ட இன்னுமொன்று உண்டென்று அறிவிக்கின்றன. தோற்றப்பாட்டுக்கு(லாஹிறுக்கு)த்தான் அவ்வலும்(ஆதியும்), ஆகிரும்(அந்தமும்) உண்டென்பது உண்மை. தோற்றப்பாட் டையே நாம் சிருஷ்டி என்று கூறுகிறோம். சிருஷ்டியை அவனல்லாத வேற்றுப்பொருள் என்று கொண்டால், ஆதியாயும் அந்தமாயுமுள்ள றப்புடன் றப்பு அல்லாத தோற்றப்பாடும் (சிருஷ்டியும்) உண்டென்றாகிறது. தோற்றப்பாடு(லாஹிர்) என்பது உண்மைப் பொருளாய் இருக்கமுடியாது. உண்மைப் பொருளை விட்டும் வேறானதாயும் இருக்கமுடியாது. தோற்றப் பாடென்பது இனந்தெரியாத மனிதஅறிவில் இலகுவாய் அமைய முடியாத ஏதோவொன்றின் வெளிப்பாடாய் இருக்குமேயன்றி, உண்மைப் பொருளை விட்டும் வேறானதாய் இருக்கவே முடியாது. தோற்றம் என்பது ஒரு பொருளேயல்ல. "லாஹிர்" என்ற தோற்றப்பாடு இருப்பதனால்தான் "பாத்தின்" என்ற மறைவும் அதனுடன் இருந்து கொண்டிருக்கிறது. தோற்றம் (லாஹிர்), தோற்றமின்மை(பாத்தின்) ஆகிய இரண்டும் கட்டுப்பாட்டில் கட்டுண்டிருப்பதால் அவை கட்டுப்பாடற்ற, ஆதியந்தமற்ற, நிலையாயுள்ள வுஜூதுவின் குணமாகவே

இருக்கும். வுஜூதுவை விட்டும் அவ்விரண்டு நிலமைகளும் வேறானதாய் இருக்கவே முடியாது. லாஹிர் என்ற தோற்றப்பாடு அல்லாஹ்வைவிட்டும் வேறானதென்றால், இதை அறிவினால் ஏற்கமுடியாது. தௌஹீதும் நிலைப்படாது.

"அவ்வல்", "ஆகிர்", "லாஹிர்", "பாத்தின்" ஆகிய நான்கு சொற்களும் "அல்லாஹ்" என்ற வுஜூதுவின் "றுபூபிய்யத்" என்ற இரண்டாவது மர்த்தபாவைக் குறிப்பிட்டவையாகும். நான் பிறப்பதற்கு முன் எனக்கென்று ஒரு ஸூறத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன் எனக்கு எவ்வித நாமமுங்கிடையாது. *இன்னவஸ்துவென்றும் கூறுவதிற்கில்லாத ஒரு நிலையில் மனிதன் இருந்தானென்று* குர்ஆன் 70:1,2 வசனங்கள் அறிவிக்கின்றன. இந்த நிலமையை வுஜூது என்று எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு ஸூறத்தைப் பெற்றபோது "அப்துல்லாஹ்" என்று பெயர் பெற்றேன். இந்த நிலமையை "றுபூபிய்யத்" என்று வைத்துக்கொள்ளுங்கள். பெயரைப் பெற்றுக்கொண்ட நான், தோற்றுபவனாயும், மறைந்தவனாயும் இவ்விரண்டுக்கும் ஆதியாயும், அந்தமாயும் இருக்கிறேன். இந்த நான்கு நிலமைகளையும், பெயர்களையும் பெற்றுக்கொண்ட நான் இன்ஸானாய் இருக்கிறேன். இதைப்போல தோற்றுவதான சர்வஆலங்களுமாய்க் காட்சியளிப்பதும், ஆலங்களில் மறைந்த தாய் இருப்பதும், ஆலங்களுக்கு ஆதியாயும், அந்தமாயும் இருப்பதும் றப்புவாய் இருக்கின்றான். முன் கூறிய "அவ்வல்", "ஆகிர்", "லாஹிர்", "பாத்தின்" ஆகிய நான்கு நிலமைகளையும் பெயர்களையும் பெற்றுக்கொண்டவன் றப்புவாய் இருக்கின்றான். மனித அறிவிலமையாத வுஜூதுவாயிருக்கும் அல்லாஹ் எப்போது தோற்றம் என்பதை எடுத்துக் கொண்டானோ அப்போதே றப்புவாயும், அப்துவாயும் இவ்விரு நிலமைகளையும் கடந்தவனாயும் இருக்கிறான். இந்த மார்த்தபாவின் பெயர்தான் "அல்லாஹ்" என்பது. தோற்றும் நிலையை "அஸ்மாவுடைய மர்த்தபா" என்றும் இவ்விரண்டு மர்த்தபாக்களையும்

உள்ளடக்கியதாய் மனித அறிவு வட்டத்தை கடந்திருக்கும் நிலையை “அமா”, “தாத்து”, “வுஜூது”, “குன்ஹு”, “ஹக்கு” என்றும் கூறுகிறோம்.

“அப்துல்லாஹ்” என்ற பெயரும் “இன்ஸான்” என்ற பெயரும் எனக்கே உரியவையாய் இருப்பதுபோல, “றப்பு“ என்ற பெயரும் “அப்து” என்ற பெயரும் “அல்லாஹ்” என்ற பெயரும் வுஜூதுவான உண்மைப் பொருளின் ஒவ்வொரு நிலையைக் குறிப்பிட்டவையாகும். தோற்றமென்ற ஸூறத்தில் கட்டுண்ட நான் “அப்துல்லாஹ்” என்றும், தோற்றத்தையும் தோற்றமின்மையையும் ஏற்றுக்கொண்ட நான் “இன்ஸான்” என்றும், இவ்விரண்டுக்கும் முன் பெயரற்றிருந்த நான் “றூஹு” என்றும் பெயர் பெற்றிருந்தேன். இந்த எல்லா நிலமைகளும் றூஹுவாயிருக்கும் என்னில் உள்ளவையே. இந்த நிலமைகளை ஒன்றை விட்டொன்று வேறானதென்று காண்பது எனது வஹ்மு என்ற மூடபுத்தியாகும். மனிதன் உண்மையை உணர்ந்து தெளியவே வெவ்வேறாய்ப் பிரித்துப் பேசப்படுகிறது. உள்ளது வுஜூது மட்டுமே. இதற்கு இணை, துணை, சமம், நிகர், ஜோடி, ஒப்பு, உவமை கிடையாது. அவனே அவனிடத்தில் சர்வமுமாய் அவனுக்காகவே இருந்து கொண்டிருக்கிறான் என்றில்லா விட்டால், “எல்லாம் அறிந்தவன்” என்பது பொருத்தவே பொருந்தாது. காலத்தால், இடத்தால், குணத்தால், பெயரால், மூலத்தால் வேறுபட்டபொருட்கள் ஒன்றையொன்று முற்றாய் அறியவே அறியா, இது ஒரு தத்துவ உண்மையாகும். இதை முன்பே விளக்கியுள்ளேன். (நுட்பமாயுணர்க)

இந்த 57:3ம் இலக்க ஆயத்தை ஒருசாரார் இருட்டடிப்புச் செய்வது முற்றிலும் ஷிர்க்கையே உறுதிப்படுத்துவதாய் அமையும். இறைவன் எம்மை விட்டும் வேறான ஓரிடத்தில் (படர்க்கையில்) இருக்கிறான் என்றும், அவனுடைய சக்திவேறு, எம்முடைய சக்திவேறு என்றும், அவன் அரூபியேயன்றி ரூபியல்ல என்றும் நம்பியிருந்த முஷ்ரிக்கீன்களை நோக்கி,

அவர்களுடைய அந்த நம்பிக்கை தவறானதென்று உணர்த்தி விளக்கமளிப்பதற்காகவே இவ்வாயத்து அருளப்பட்டதென்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். “ஹுவல்அவ்வலு” என்பதிலுள்ள “ஹு” என்ற சொல் இதை நிரூபணம் செய்கிறது. தவறான நம்பிக்கைகொண்டிருந்த அந்த முஷ்ரீக்கீன்களை நோக்கித்தான் இவ்வாயத்தில் “அவ்வல்”, “ஆகிர்”, “லாஹிர்”, பாத்தின் என்ற நான்கு சொற்களையும் ஒன்றுக்கொண்று முரணான கருத்துடையவையாய், ஒன்றுக்கொன்று நேர் எதிர்ச் சொல்லாய் இறைவன் பாவித்துள்ளான். அவ்வலுக்கு ஆகிரும், லாஹிருக்கு பாத்தினும் எதிரெதிர் ஜோடியாய், இணையாய் இருக்கின்றன. ஜோடியுடையவை, இணையுடையவை தனித்தனியானவைதான் என்றால், அவை பெயராயினும் பொருளாயினும் சிருஷ்டியாய் இருக்குமேயன்றி அல்லாஹ்வாய் (வுஜூதுவாய்) இருக்கவே முடியாது. அல்லாஹ்வுக்கு இணை, ஜோடி கிடையாதென்பதே இஸ்லாத்தின் உயிராய் இருக்கிறது. ஆகவே, “அவ்வல்”, “ஆகிர்”, “லாஹிர்”, “பாத்தின்” ஆகிய இந்நான்கு சொற்களும் ஏகமாயுள்ள(ஒரே) வுஜூதுவின் நான்கு நிலைமைகளை(மர்த்தபாக்களை)க் குறிப்பிட்டபெயர்களாகவே இருக்கும். ஆகையால்தான், இந்நான்கு நாமங்களும் இறைவனின் இலாஹியான நாமங்கள் என்று உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஆதியாய், அந்தமாய், பாத்தினாய் இருப்பவனே அல்லாஹ் என்றும், லாஹிறாய் இருப்பவை அல்லாஹ் அல்லாதவை என்றுங்கொண்டால், தோற்றாத அல்லாஹ்வுடன் தோற்றுகிற அல்லாஹ் அல்லாத சிருஷ்டியும், ஜோடியாய், இணையாய் உண்டு என்றாகும். இது சுத்தமான ஷிர்க்காகும். தோற்றுவது அல்லாஹ்வின்(வுஜூதுவின்) தோற்றப்பாடான வெறும் ஸூறத்தே என்று கொண்டால், தோன்றாப் பொருளின் வெளிப்பாடே சிருஷ்டி என்றாகும். தோன்றாப் பொருளாயிருக்கும் வுஜூதுவான அல்லாஹ் கெட்டழியாமலும் விகாரப்படாமலும் இருந்தபடியே இருந்து கொண்டு, தோன்றும் ஸூறத்தாயும்

அவனிடத்தில் அவனுக்காக அவனே காட்சியளிகிறான் என்ற சுத்த சத்தியமான தௌஹீது நிலைப்படும். எனவே, தோற்றாத அல்லாஹ்வைவிட்டும், தோற்றுகிற சிருஷ்டி வேறு அல்ல என்பதே முற்றிலும் உண்மையாகும். “ஏகமாக்கல்” “ஒருமைப்படுத்தல்”, “தௌஹீது” செய்தல் என்பதன் இரகசியம் இதுவேயாகும். இவ்வுண்மையில் தரிபடுவதற்காக ஆராயும் ஆராய்வின் பெயர்தான் “முறாகபா”, “இபாதத்” என்பது.

அவனையன்றிப் பிறிதொன்று இல்லாதிருக்கும்போது அவனுக்கு எவ்வித இணையும் கிடைக்கவே கிடையாது. (நுட்பாய் உணர்க) குர்ஆன்- 42:11 “அவனைப் போன்றது இல்லை”. இருப்பது அவன் மட்டுமேதான் என்றால், அவனைப் போன்றது, ஒப்பானது, இணையானது, சமமானது, நிகரானது இருக்கவே முடியாது. இதுதான் “தௌஹீது”, “ஏகத்துவம்” என்பது. அல்லாஹ்வைவிட்டும் சிருஷ்டி வேறானது என்றுகொண்டால், அவனுக்கு ஒப்பானது உண்டு என்று கூறநேரிடும். எனவே, கலிமாவை விளங்கிக் கொள்ளாமல், கலிமாவின் அடிப்படையில் குர்ஆனை நோக்காமல், அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்ற முஷ்ரீக்கின் கொள்கையை அடிப்படையாய்க் கொண்டு குர்ஆனை நோக்குவதனாலேயே புரட்டல்கள் தலை தூக்கு கின்றன.

நாம் காணும் சிருஷ்டியுலகைப் பொய்யென்று யாருங் கூறமுடியாது. ஏன்? இல்லாதது இருப்பதாகாது. இருப்பதும் இல்லாததாகாது. இது எல்லா மக்களுக்கும் தெரிந்த, எல்லா வேதங்களும் இன்றைய விஞ்ஞானமும் ஒப்புக்கொண்ட ஆதாரத்தோடுள்ள ஒரு பிரதான தத்துவமாகும். அப்படியானால், சிருஷ்டியாய் இருப்பதாய் நாம் காணும் தோற்றம் இல்லாமை என்ற சுத்தசூன்யமாயும் இருக்காது. ஏன்? சூன்யம் என்பதொன்று இல்லவே இல்லை. இல்லாதது இருப்பதாய்க் காட்சியளிக்க முடியாதே! அப்படியானால், சிருஷ்டி அழிந்துவிடுகிறது அல்லது சூன்யமாகிவிடுகிறது என்றுங் கூற முடியாதே! ஏன்? இருந்து

கொண்டிருப்பது இல்லாததாகாது. எனவே, சிருஷ்டி என்பது தோன்றிமறையும் நீர்க் குமிழியைப் போல், மறைப் பொருளா யுள்ள இறைவன் என்ற கடலில் தோன்றி மறையும் ஸிபத் (பண்பு), அஸ்மா(நாமம்) ஆகியவற்றின் ஸூறத்தென்ற வெறும் நீர்க் குமிழிகளாகவே இருக்கின்றன. கடல் எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் தோன்றி மறையும் (கடலின் வெளிப்பாடான) அலையும், குமிழியும், நுரையும் இருந்து கொண்டே இருக்கும். கடலுக்கு எல்கையுண்டு. ஆனால் இறைவனென்ற கடலுக்கு எல்கையில்லை. வெறும் ஸூறத்தைப் பொருளாய் காண்பது எமது புலன்களால் ஏற்பட்ட மருட்சியாகும். “ஹுரூர்”, “மயக்கு”, “மாயை” என்றெல்லாம் கூறப்படுவது இதுவே. இங்கு, இன்னுமொரு முக்கிய விபரம் என்னவெனில், சிருஷ்டியான கடல் விகாரப்பட்டுக் குமிழியாகின்றது. ஆனால், சிருஷ்டிக்கு முரணான இறைவன் விகாரப்படாமல், கெட்டழி யாமல் இருந்தபடியே இருந்துகொண்டு சிருஷ்டி என்ற ஸூறத்தில் காட்சியளிக்கிறான். கடல் இன்னுமொரு பொருளுடன் (காற்றுடன்) தாக்கமுற்று அலையை, சலனத்தை உருவாக் குகிறது. இறைவன் இன்னொன்றுடன் தாக்கமுறாமல் இருந்த படியே இருந்துகொண்டு சிருஷ்டியாய்க் காட்சியளிக்கிறான்.

“இ∴லமு அன்னதாலிகல்வுஜூத லைஸலஹு ஷக்லுன் வலாஹஸ்லுன், வலாஹஸ்றுன், வமா அஹாதலஹற வஜதல்லா பிஷ்ஷக்லி, வல்ஹத்தி, வலம்யதஹைர், அம்மாகான மின் அதமிஸ்ஸக்லிவ அதமில்ஹத்தி பல்ஹுவல்ஆனகமாகான அலைஹி”

**கருத்து:-**

“நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் அல்லாஹ் (வுஜூது) என்பவன் உருவம், எல்கை அற்றவன். காலம் முதலாம் கட்டுப்பாடும் அவனுக்கில்லை. எனினும், அவன் அப்படி இருப்பதுடன் உருவத்திலும் எல்கையிலும் வெளியாகியுள்ளான்.

இப்படி வெளியானாலுங்கூட அவன் முன்பிருந்த நிலையிலி ருந்து மாறுபடவேயில்லை. அவன் எப்போதும் இருந்த நிலையி லேதான் இருந்து கொண்டிருக்கிறான்".

இதுதான் இஸ்லாத்தின் உயிரான தௌஹீதுக் கலிமாவின் உண்மையாகும் .

"எல்லாவஸ்த்தும் அவன்தானே அவையாயிருக்க, அவற்றை வெளிப்படுத்திய இறைவன் தூயவன்" இது முஹ்யித்தீன் இப்னு அறபி அவர்களின் கூற்றாகும். இது முற்றிலும் உண்மையாகும்.

# 13

## சிருஷ்டி என்பது பொய்யா?

**குர்ஆன்: 16:3**

خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ۚ تَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ

**வானங்களையும், பூமியையும் ஹக்கை(உண்மையை)க் கொண்டே படைத்திருக்கிறான். அவர்கள் இணையேற்படுத்துவதைவிட்டும் அவன் மேலானவன்.**

"ஹக்கு" என்பது "உண்மை" என்ற பொருள் உடையது. உண்மை என்றால், உள்ளது, இருப்பது என்பதே அர்த்தம். எனவே, வானம், பூமி, அவற்றிலுள்ள யாவும் உள்ளதாயிருக்கும் ஹக்கின்(உண்மையின்) வெளிப்பாடு(லாஹிர்)தான், பொய்யானவையல்ல. பிடிவாத உணர்வோடு உண்மையை மறுப்பது மூடத்தனமாகும். பொய் என்ற பாத்தில் வேறு, ஹுஃரூர் என்ற மருட்சி வேறு. சர்வ உலகும் ஹுஃரூர் என்ற மயக்கமேயன்றி, பாத்தில் என்ற பொய்யல்ல. சிருஷ்டி உலகு அல்லாஹ் அல்லாத தனி வுஜூது என்று நம்புவதே பாத்தில் என்ற பொய்யாயிருக்கிறது.

எமக்குள்ள புலன்களுக்கமைவாய் முப்பரிமாணமுள்ள பௌதிகப் பொருட்களையே சிருஷ்டி என்னும் அடிப்படையில் நாம் காணுகிறோம். இது, ருபூபியத்தின் ஓர் இரகசியமாகும். இதைக் குர்ஆன் ஹதீஸுகள் "ஹுஃரூர்", "மாயை", "மயக்கு", "மருட்சி", "வஹ்மு" என்றெல்லாம் விபரந்தருகின்றன. புலன்கள்

வெவ்வேறு அமைப்பைப் பெற்றிருந்தால், நாம் காணும் சிருஷ்டிகள் யாவும் வெவ்வேறு பரிமாணத்தில் அல்லது வித்தியாசமான அமைப்பில் தோன்றலாம். எனவே, நாம் தற்போது காணும் சிருஷ்டிகளின் உண்மையைப் பூரணமாய் அறிந்து கொண்டோம் என்று கூறுவதற்கில்லை. நாம் காணும் சிருஷ்டி என்பது வெறுங்கற்பனைத் தோற்றமேயன்றி உண்மைப் பொருளுமல்ல; இன்மைப் பொருளுமல்ல. சிருஷ்டி என்பது, வெறும் தோற்ற வெளிப்பாடு(ஸூறத்) மட்டுந்தான். சிருஷ்டி ஒரு பொருளேயல்ல. நிழல் என்பது வெறும் தோற்றப்பாடு என்ற ஸூறத்து மட்டுந்தான். அதைப் பொருளாய் காண்பதுதான் ஹுளூர் என்பது. நாம் காணும் உலகுக்கு ஓர் உயிருண்டு. என் உயிர் என்ற நான், என்னால் ஆக்கிக்கொள்ளப்பட்ட மனத்தில் கனவின்போது எத்தனையெத்தனையோ சிருஷ்டி களைக் காணுகிறேன். அவை ஒவ்வொன்றும் காலத்தால் இடத்தால் வெவ்வேறாய் இருந்துகொண்டு "நான்", "நான்" என்ற தனித்தனி உணர்வோடுதான் கனவில் உலாவுகின்றன. நான் விழிப்படைந்து விட்டால் கனவுலகம் மறைந்து விடுகிறது. இல்லாதது வராது. எனவே, கனவுலகம் நான் கனவைக் காண்பதற்கு முன் என்னுடன் இருந்ததுதான். ஆனால், நான் அறியாமலிருந்தேன். கனவின் பின்னும் அந்தக் கனவுலகம் எங்கேயோ மறைந்து விட்டது. மறைந்ததேயன்றி அது அழிய முடியாது. என் நினைவில் என்றும் இருந்துகொண்டுதான் இருக்கும்.

கனவில் வெளியான சிருஷ்டிகள் யாவும் "நான்" "நான்" என்று தனித்தனியாய் நம்பியிருந்த நம்பிக்கை என் உயிருக்கு உரியதேயன்றி, கனவில் வெளியான ஸூறத்தென்ற சிருஷ்டிக்கு உரியதேயல்ல. கனவுக்கு முன்பும், கனவின்போதும், கனவின் பின்பும் இருப்பது நான் மட்டுந்தான். எனவே, என்னையன்றிக் கனவில் வெளியான சிருஷ்டி(இலாஹு) வேறானதல்லவென்று நான் கூறுவது எப்படிப் பிழையாகும்? இதைப்போல, அல்லாஹ் வாகிய என்னையன்றி எதுவுமே இல்லை என்று இறைவன்

20:14ம் வசனத்தில் கூறுவதை நாம் பிழைகாண்பது தவறல்லவா? தோற்றாத என்னுயிரில் அல்லது மனதில் தோன்றி, இருந்து, மறையும் கனவுலகு(ஸிபத்தென்ற) என் குணமாயும், அஸ்மா என்ற என் ஸூறத்தாயும், நான் குணி என்ற வுஜூதாயும் இருப்பதைப்போல வுஜூது என்ற அல்லாஹ் மறைந்தவனாயும் அவனுடைய ஸிபத், அஸ்மா(பண்பு, நாமம்) என்பவை மறையாதவையாயும் எமக்குத்தென்படுகின்றன. தோற்றப் பாடாயுள்ள அஸ்மாக்களும், ஸிபத்தென்ற சக்தியுந்தான் சிருஷ்டிகள் என்பவை. சர்வ பேரண்டமும் இதிலடங்கும். (நுட்பமாய் உணர்க) சிருஷ்டிகள் யாவும் அப்துக்களாய் இருக்கின்றன. சிருஷ்டிகளை இயக்கும் றூஹு றப்புவாய் இருக்கின்றது.

**குர்ஆன்: 1:1**

الحمد لله رب العلمين

**எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. ஆலங்கள் (பிரபஞ்சங்கள்) அனைத்தையும் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்துவோன்.**

**குர்ஆன்: 19:93**

ان كل من في السموت والارض الا اتي الرحمن عبدا

**ஏனென்றால், வானங்களிலும் பூமியிலுமுள்ள ஒவ்வொன்றும் றஹ்மானிடம் அடிமையாக(அப்துவாக)வே வருகின்றது.**

இவ்வகை ஆயத்துக்களில் குறிப்பிடப்பட்ட அடிமை (அப்து) என்பது, கண்ணாடியில் எனக்குத் தென்படும் ஸூறத்தைப் போன்றதாகும். அந்த ஸூறத்து சுயநிர்ணய உரிமையற்ற, வெறும் ஸூறத்தாய் இருப்பதுபோல, சர்வபிரபஞ்சமும் இறைவனின் ஸூறத்துக்கள் என்ற அடிமைகளாகவே

இருக்கின்றன. பௌதிகக் கண்ணாடியில் தென்பட்ட என் ஸுறத்தான அடிமையைக் கண்ணாடியுடைய நான் உயிராயிருந்து இயக்குவது போல,றப்பு என்பவன் அவனுடைய அறிவு(நூர்) என்ற கண்ணாடியில் உள்ள சர்வஸுறத்துக் களையும் றப்பு என்ற உயிராயிருந்து இயக்குகிறான்.

57:3ம் ஆயத்து ஒரு வட்டவரைக்குள் கட்டுண்ட மனித அறிவை நோக்கித்தான் கூறப்பட்டதாகும். கட்டுப்பாட்டறிவில் சிக்குண்ட நாம் நாமம், பண்பு என்ற சிருஷ்டியை (ஸுறத்தை, குணத்தை) அதன் குணியான அல்லாஹ்வை(வுஜூதை) விட்டும் வேறானதென்று நம்பியிருக்கிற உளநோயான ஷிர்க்கில் மூழ்கிக் கொண்டிருப்பதனால், அந்த தவறான விசுவாசந்தான் இறைவனை மறைத்துக்கொண்டிருக்கிறது. இறைவன் எப்போதும் மறைந்தவனேயல்ல. (ஆதாரம் பின்னால் தரப்படும்) மனிதனுக்குள்ள இந்த மயக்கத்தை நீக்கவே “லாஹிர்” (“தோற்றுபவன்”) என்றசொல் தரப்பட்டிருக்கிறது. சர்வ பிரபஞ்சமுமாய்க் காட்சி அளிப்பதும் அதில் மறைந்ததாய் இருந்து இயக்குவதும் அவனே என்பதை வலியுறுத்தவே இவ்வாயத்து அருளப்பட்டுள்ளது. இப்போது சிறிது சிந்தனை செய்யுங்கள். சிருஷ்டிகளுக்கு முன்பும், சிருஷ்டிகளுக்கு பின்பும், சிருஷ்டிகளின் போதும் அவன்மட்டுமே இருந்து கொண்டிருக்கின்றான். அவனையற்றி வேறெதுவும் அவனுடன் கிடைக்கவே கிடையாதென்று அறிவிப்பதே கலிமத்து த்தையிபாவின் சாரம். அதை நிரூபணஞ் செய்வதே தலீல்களின் சாரம்.

“எல்லாம் அறிந்தவன்” என்னும்போது தோன்றி, இருந்து, மறையும்யாவும்(சர்வபிரபஞ்சமும்) அவனில் அவனாகவே இருப்பதனாலேயே எல்லாம்அறிந்தவன் என்று அழைக்கப்படுகிறான். காலத்தால், இடத்தால் கண்டப்படுத்தப்பட்ட எந்தவொன்றும் முற்றிலும் அறிந்ததாய் இருக்கமுடியாது.

என்னுடல் என்நாமத்தின் ஸூறத்தாய் என்னைவிட்டும் வேறல்லாததாய் இருப்பதால் என்ஸூறத்திலுள்ள சகல விபரங்களையும் நான் அறிந்திருக்க முடியுந்தானே! இதைப் போல, சர்வபிரபஞ்சமும் இறைவனின் ஸூறத்தாய் அவனைவிட்டும் வேறல்லாததாய் இருப்பதால் அவன் யாவற்றையும் அறிந்தவனாய் இருக்கிறான். அப்துக்கு றப்பு நேர் முரணல்லவா? நான் அறிந்த அறிவு அப்துவின் அறிவுதான். அவ்வறிவு வஹ்முடன் கூடியதுதான். எனவே, நான் என்னை, என்னுடலை அறிந்திருப்பதற்கு முரணாகவே இறையறிவு அறிகிறது. நாம் 57:3ல் கண்ட நாலு அம்சங்களையும் இந்த ஐந்தாவது அம்சம் உறுதிப்படுத்துகிறது. இன்னும் இவ்வாயத்து விஷயமாய் விஞ்ஞானரீதியான எவ்வளவோ விளக்கங்களைத் தந்து நிரூபிக்கலாம். இந்நூல் அதற்கு இடந்தராதிருப்பதால் இவ்வளவையே போதுமாக்குவோம். இடத்தினால் வேறுபட்டபவை பௌதீகமானாலும், சூட்சுமமானாலும் கண்டப்பொருளான சிருஷ்டியாகவே இருக்கும்.

குர்ஆனைக் கொண்டே குர்ஆனை விளங்குதல் என்ற அடிப்படையில், நாம் முன்பு எடுத்துக்கொண்ட 112ம் ஸூறாவையும் 57:3ம் ஆயத்தையும் ஆதாரமாய்க் கொண்டு அல்லாஹ்வையன்றி அவனுடன் வேறு எதுவுமில்லை- இருப்பது அவன் மட்டுமே என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இவ்வுண்மையைப் பிறஆயத்துக்களும்(கலிமாவின் தலீல்களும்) உறுதிப்படுத்துகின்றனவா என்பதை நோக்குவோம்.

கலிமாவை உறுதிப்படுத்தும் முஹ்கமுவைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான ஆயத்துக்கள் குர்ஆனில் இடம் பெறுகின்றன. இவை எல்லாவற்றையுமே விளக்கி எழுதுவதென்றால், இப்போது அதை முழுமையாய் எம்மால் சாதிக்க முடியாது. மனிதன் முன்மாதிரியை எடுத்துக்கொண்டு தெளிவுபெற வேண்டியவன். இந்த முன்மாதிரி என்ற வகையில் எமது நூல்கள் யாவற்றிலும் மனிதனுக்குச் சந்தேகமேற்படக்

கூடிய பல ஆயத்துக்களை எடுத்துக்காட்டி அவற்றிலேற்படும் சந்தேகங்களை ஆதாரபூர்வமாய் விளக்கி உண்மையை உறுதிப்படுத்தியுள்ளேன். அந்நூற்களில் விளக்கப்படாத ஒரு சில ஆயத்துக்களை மட்டும் இங்கே விளக்க விரும்புகிறேன். இவற்றை முன்மாதிரியாய்க் கொண்டு பிற ஆயத்துக்களை ஆராய்வதும் தெளிவுபெறுவதும் உங்கள் கடமையாகும். முடியாதபோது, என்னை நேரில் சந்தித்து உரையாடித் தெளிவு பெறுங்கள். இங்கே, சிருஷ்டி என்பது இறைவனின் ஸூறத்துத் தான் என்பதை உறுதிப்படுத்தும் முஹ்கமு ஆயத்துக்களை மட்டும் தருகிறேன். அதன் பின்னர் குர்ஆனை விளங்கும் இரண்டாவது வழியைக் காணலாம்.

# 14

# வஜ்ஹு என்றால் என்ன?

**குர்ஆன்:2:115**

وَلِلَّهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ ۚ فَأَيْنَمَا تُوَلُّوا فَثَمَّ
وَجْهُ اللَّهِ ۚ إِنَّ اللَّهَ وَاسِعٌ عَلِيمٌ

**நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வுடைய முகம் (வஜ்ஹு) இருக்கிறது.**

இந்த ஆயத்தும் கலிமாவின் தலீல்களில் (ஆதாரங்களில்) ஒன்றாகும். அதுமட்டுமல்ல, ஒரே கருத்துடைய முஹ்கமு வசனமாகும். இதை மறந்து விடவேண்டாம். இந்த வசனத்துக்கு இன்றுள்ள மிகப் பெரும்பாலான தப்ஸீர் விரிவுரைகளில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை நோக்கினால், அவற்றை விபரித்து விளக்கிய எமது முன்னோரின் அறியாமையையும் கண்மூடித்தனமான பின்பற்றலையும் நாம் தெளிவாய் உணரலாம். இவ்வகையினர் எவ்விதக் கல்வி ஞானமுமில்லாமல் ஆதாரங்களை அலட்சியம் செய்துவிட்டு, குர்ஆனுக்கு முரணாக இலக்கிய வழக்கின்படி இவ்வாயத்துக்கு விரிவுரை தந்திருக்கிறார்கள்.

கண்ணதாசனுடைய பாடலைக் கேட்டவன் கண்ணதாசனைக் கண்டேன் என்று கூறுவதுபோல, அஹமது வரைந்த சித்திரத்தைப் பார்த்தவன் அஹமதுடைய கையைக் கண்டேன் என்று கூறுவதுபோல, சிருஷ்டியுலகைப் பார்த்து

இறைவல்லமையை அறிந்துபார்க்கும் திசைகள்தோறும் அல்லாஹ்வுடைய முகத்தைக் கண்டேன் என்று உருவகப்படுத்திக் கூறுவது போலவே இவ்வாயத்தும் கூறப்பட்டிருப்பதாய் வியாக்கியானஞ் செய்திருக்கிறார்கள். இந்த இலக்கிய வழக்கு முத்தஷாபிஹாத் என்ற பல கருத்துடைய வசனங்களுக்குப் பொருந்துமேயன்றி முஹ்கமு என்ற ஒரே கருத்துடைய வசனங்களுக்குப் பொருந்தவே பொருந்தாது. இலக்கிய வழக்கைமட்டும் அடிப்படையாய்க் கொண்டு குர்ஆனுக்குப் பொருள் கூறுவது குர்ஆனுக்கு மாறாகும். முஹ்கமு வலிந்துரையை ஏற்காது. “இபாரத்”, “தலாலத்”, “இஸாரத்”, “இஹ்திலாவ்” ஆகிய நான்கு பிரமாணங்களின் படியும் ஒரே கருத்தை தரக்கூடியது எதுவோ, அதுதான் “முஹ்கமு” என்பது.

மருண்ட புத்தியும் ஒரு மீற்றர் நீளமான பட்டம் பதவிப் பெயர்களையுங்கொண்ட எவரோ ஒருவர் அல்லது பலர், இவ்விதமான ஆயத்துக்களுக்கு எவ்வித உலகியல் அறிவும் கல்விஞானமும் இல்லாமல் தமது நோக்கத்திற்கேற்ப தமது யூகப்படி பொருள் விளக்கம் அளித்திருப்பதால்தான் இன்று தௌஹீது ஷிர்க்காயும், ஷிர்க்குத் தௌஹீதாயும் மக்களுக்குத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வித மருண்ட புத்தியில் மயங்காமல் உரிய முறைப்படி, அவசியமான சட்ட அடிப்படையில் நாம் குர்ஆனை ஆராய்வோம்.

இவ்வித ஆயத்துக்களில் விசேஷமாய் “கை”, “முகம்” என்ற சொற்கள் பாவிக்கப்பட்ட ஆயத்துக்களில் ஸஹாபாக்கள் சந்தேகங்கொள்ளாமல், ஆராயாமல் ஏற்றுக் கொண்டது போல நாமும் ஏற்றுக் கொள்வதே சரியென்றும் அவ்வகை வசனங்களை ஆராய்வதும் விளக்கங்கூறுவதும் வழிகேடென்றும் மூளை வளர்ச்சியற்ற சில லேபல்கள் மக்களிடம் கூறி மழுப்புகிறார்கள். தங்கள் அறிவீனத்தை மறைக்கவும், தங்களை மேதாவிகளாய்க் காட்டிக் கொள்ளவுமே அவர்கள் இப்படி கூறுகிறார்கள் என்பதை அறிஞர் அறிவர். குர்ஆன் வசனங்களை

சிந்தித்து ஆராயும்படி குர்ஆனில் சுமார் 340இடங்களில் வற்புறுத்துவதை அவர்கள் இன்னும் காணவில்லைப்போலும்! விஞ்ஞான அறிவில்லாத ஸஹாபாக்களுக்கு ஏற்படாத சந்தேகம் விஞ்ஞான அறிவுள்ள இக்கால மக்களுக்கு ஏற்படாது என்பதற்கு என்ன ஆதாரமுண்டு? இவ்வித ஆயத்துக்களை ஆராயாமல்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று குர்ஆன் ஹதீஸுகள் விதி விலக்கு செய்திருக்கின்றனவா? மனிதனுக்கு எப்போதும் சந்தேகம் ஏற்பட்டே ஆகவேண்டும்! விடை கண்டறிந்தே ஆகவேண்டும்! ஆனால், நியாயமற்ற வீண் சந்தேகம் ஏற்படக்கூடாது. நியாயமான சந்தேகம் உண்மையை உறுதிப்படுத்தும். ஆராய்வில்லாமல் குர்ஆன் ஓதுவது பிரயோசனந்தராது. ஆராயாமல் குர்ஆன் ஹதீஸுகளைப் பாடமிட்டுக்கொள்பவர் பொதிசுமந்த கழுதைக் கொப்பானவர்தான். எனவே, நாம் உண்மையை அறியும் வரையிலும் ஆராய்ந்தே ஆகவேண்டும். ஆராய்வது வணக்கத்தில் முதலிடம் பெறுகிறதென்பதை ஹதீஸுகள் வலியுறுத்துகின்றன. குர்ஆன் மஃகூலென்ற யுக்திக்கு முதலிடந்தந்திருக்கிறது. இதற்குக் குர்ஆனிலிருந்தே பல ஆதாரங்களைத் தரமுடியும்.

*ஹதீஸ்*

*மார்க்கத்தை விளங்கியறிவதைவிடச் சிறந்ததைக் கொண்டு அல்லாஹ்வை வணங்கப்படுவதில்லை. மார்க்கத்தை விளங்கியறிந்த ஒருவன் ஆயிரம் வணக்கவாளிகளை விடவும் ஷைத்தானுடைய விஷமத்துக்கு மிகக் கடினமாயிருக்கின்றான். ஒவ்வொரு மாளிகைக்கும் தூண் இருப்பதுபோல, மார்க்கத்தின் தூண் மார்க்க விளக்கமாய் இருக்கிறதென்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர் :- அபூஹுறைறா (றலி)**

**ஆதாரம் :- அபூதாவுத், நஸாயி**

இந்த ஹதீஸில் கூறப்பட்ட மார்க்க விளக்கம் என்பது தற்காலம் எமது மத்ரஸாக்களில் கற்றுக்கொள்ளும் பாடங்களைக் குறிப்பிட்டதல்ல. தீன், மார்க்கம் கலிமாவேயாகும். தற்கால மௌலவிமார்கள் கற்றுக்கொள்வது இமாம்களுடைய சட்ட விளக்கங்களேயன்றி மார்க்க விளக்கமல்ல.

2:115ம் ஆயத்தில் கூறப்பட்ட“வஜ்ஹு” என்ற சொல்லுக்கு முகம் என்பதே பொருள் என்று குர்ஆன், ஹதீஸுகள் கூறிக் கொண்டிருக்கின்றன. இதே கருத்தை எல்லா அகராதிகளும் ஒத்துக் கொண்டிருக்கின்றன. வலிந்துரைகொண்ட கூட்டத்தினரும் “வஜ்ஹு” என்றால் “முகம்” என்றே பொருள் கொண்டிருக்கின்றனர். ஆனால், முகம் என்ற சொல்லை விளங்க, விளக்க ஆற்றல் இல்லாமையினால் யூகத்திற் கேற்றபடி மழுப்பியிருக்கிறார்கள். எனவே “வஜ்ஹு” என்ற சொல்லின் பொருள் “முகம்” என்பதுதான் என்பதை நாம் இங்கே நிரூபணஞ்செய்ய வேண்டியதில்லை. “முகம்” என்றால் என்னவென்பதைக் காண்போம். நிரூபிப்போம்.

*‘‘நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வுடைய முகம் இருக்கிறது’’*. இவ்வேத வசனம் கூறுவதை எமது திரையிடப்பட்ட அறிவு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. நாம் பார்க்கும் எந்தவோர் இடத்திலும், திசையிலும் இறைவனுடைய முகத்தை நாம் கண்டதேயில்லை. இறைவனுடைய முகம் இருக்கட்டும் மனிதனுடைய அல்லது மிருகங்களுடைய அல்லது ஊரும், பறக்கும் உயிரினங்களுடைய முகங்களைத்தானும் நாம் திரும்பும் திசைகள்தோறும் காண்பதில்லை. வானத்தை, கடலை, மலையை, பூகோள உருண்டையை, நெருப்பை, நீரை, மண்ணை, காற்றைக் காணும்போதெல்லாம் நாம் அவற்றுக்கெல்லாம் முகம் இருப்பதாய்க் காணவில்லை. எனவே, இவ்வேத வசனம் நீளமான பட்டங்களோடும், நீளமான தாடிகளோடும் வாழ்ந்த ஒரு சில லேபல் உலமாக்களின் அறிவைக் குருடாகவே மாற்றி விட்டிருக்கிறது. குர்ஆன்

பிரகாசம் (நூர்) அல்லவா? வலுவில்லாத அறிவுக்கண் குருடு படத்தான் செய்யும்! இன்று, பெரும் பெரும் உலமாக்கள் என்ற போர்வையில் வாழும் பலர் தாங்கள் ஸுன்னத்வல் ஜமாஅத்தினர் என்றும், குர்ஆனை ஒப்புக்கொண்டவர்கள் என்றும், குர்ஆனின் பக்கம் மக்களை அழைக்கிறோம் என்றும் கூறிக்கொண்டிருக்கிறார்களே! இவர்களாவது அல்லாஹ்வுடைய முகத்தைக் கண்டிருக்கிறோம் என்று கூறுவார்களா? முடியவே முடியாது! ஏன்? அப்படி அவர்கள் கூறினால், எமக்கும் காட்டித்தாருங்கள் என்று நாம் அவர்களைக் குரங்குப்பிடி பிடிப்போமே! அவர்களால் காட்ட முடியுமா? முடியாது. ஆனால், உறுதி பெற்ற ஒரு முமீனால் இதைச் சாதிக்க முடியும்! இப்போது நீங்களும் திட்டமாக அல்லாஹ்வுடைய முகத்தைப் பார்ப்பதானால் எமது பேச்சை உன்னிப்பாய்க் கவனியுங்கள்.

''வஜ்ஹு'' என்ற சொல்லுக்கு ''முகம்'' என்று பொருள் கூறும்போது மனிதன், ஜின் மற்றும் ஜீவராசிகளினுடைய முகம்போல்தானே இருக்கும் என்றுதான் மிகப்பெரும்பாலாலோர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை நூற்கேள்வி யறிவு, அனுபவம் (பழக்கவழக்கம்) போன்ற திரைகளிலிருந்தே உருவாகியிருக்கிறது. எம்மில் பெரும்பான்மையோர் அறிவதில்லை. எமது அனுபவத்திற்கு முரணாய்த் தென்பட்ட வேதவசனத்தைக் கண்டபோது திகைக்கிறோம். அதை மறுக்கிறோம். எம்மைப்போல் கண்கள், மூக்கு, செவிகள், வாய், தாடை, நெற்றி போன்ற அங்கங்களைக் கொண்ட முகத்தை நாம் இறைவனுக்கும் கற்பனை பண்ணிக்கொண்டுதான் இறைவனுடைய முகத்தை தேடுகிறோம். அதைக்காண ஆசைப்படுகிறோம். ஆனால், எமக்கு அப்படியான முகம் அகப்படுவதில்லை. கற்பனையிலுள்ள வெறும் பொய்யை எப்படிக்காண்பது? காணவேமுடியாது. இல்லாதது இருப்பதாகாது. கற்பனை ஆண்டவனை எடுத்துக்கொள்ள வேண்டாம். என்பது குர்ஆனின் கூற்று. எனவே, விளக்கம் தெரியாத நாம் ஆயத்தை மறுக்கிறோம். வலிந்துரை கொள்கிறோம்.

சிருஷ்டிக்கு சிருஷ்டிகர்த்தா நேர்முரண் என்று 112ம் ஸூறா விளக்கிய தத்துவத்தை மறந்துவிடுவதனாலேயே எமதறிவுக்கு மயக்கமேற்படுகிறது. சிருஷ்டியின் முகம், கண், செவி, முதலாம் அங்கங்களையுடையது என்றால், அல்லாஹ்வின் முகம் அதற்கு முரணாகவே இருக்கும். அப்துவின் முகம் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் கொண்டதென்றால், றப்புவின் முகம் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் கொள்ளாத ஏக வியாபகமானதாகவே இருக்கும். அப்துவின் முகம் திசையுடையது என்றால் றப்புவின் முகம் திசையற்றதாகவே இருக்கும் இதைப்போல் மற்றும் விஷயங்களையும் சிந்தனை செய்யுங்கள். இத்தத்துவ உண்மையை மறுப்போர் 112ம் ஸூறாவை மறுத்த காபீர்கள் என்றாவார்கள். இவ்விஷயத்தைத் தெளிவாய் விளக்குவதற்காக ஒரு சிறு உதாரணம் தருகிறேன். என்னுடலுக்கு முகமுண்டு. அதைப் பார்க்கலாம், தொடலாம். என் ஆத்மாவுக்கும் ஒரு முகமுண்டு. அதைப் பார்க்கவும் தொடவும் முடியாது. எனவே, அது உடலின் முகத்துக்கு நேர் முரணானது. என்னுடல் பௌதீகம்; என் ஆத்மா சூட்சுமம். உடலுக்கு உயிர்(ஆத்மா) நேர்முரணல்லவா? உடலை உலகாகவும், உயிரை அதன் றப்பாகவுங்கொண்டு நோக்கினால் இதை இலகுவாய் விளங்கலாம். அப்படியானால், திரும்புந்திசைகள் தோறுந்தென்படுகிற அல்லாஹ்வின் முகம் எது? அதன் வரைவிலக்கணம் என்ன? இக்கேள்விகளுக்குரிய விரிவான விடைகளை இனிக் காண்போம்.

# 15

## அல்லாஹ்வின் முகம் எது?

சிருஷ்டி என்ற வகையில், அணுப்போன்ற ஓர் அற்ப வஸ்துவானாலும் பேரண்டம் போன்ற மிகப்பிரமாண்டமான வஸ்துவானாலும் அது தரிப்பட்டிருந்து காட்சியளிக்க இடமுங் காலமும் அவசியமாகும். இவை இல்லையானால், சிருஷ்டி என்பது இருப்பதாக மனிதன் காணவும், அறியவும் முடியாது. இடத்திற் கட்டுண்ட ஒவ்வோர் அணுவுக்கும், அணுவின் கருவுக்குங் கூட மேல்,கீழ், முன் ,பின், வலம், இடம் என்ற ஆறு திசைகள் அல்லது பக்கங்கள் அல்லது முகங்கள் இருக்கின்றன. எமது வசதிக் கேற்றபடி முகங்களைப் பெருக்கியும் கொள்ளலாம். நாம் ஆறு முகங்களை(பக்கங்களை, திசைகளை) மட்டுமே எடுத்துக்கொள்வோம். ஆனால், ம.்.கூல், மன்கூல் என்ற பிரமாணங்களின்படி ஆராய்வு செய்தால் உண்மையில் இடமுந்திசையும் இல்லவே இல்லை! இதைக் கலிமாவும் அதன் தலீல்களான(ஆதாரங்களான) குர்ஆன்,ஹதீஸுகளும் உறுதிப்படுத்துகின்றன; இன்றைய விஞ்ஞானமும் இவ்வுண்மையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. (இவ்விஷயத்தை இதே நூலில் காலம் என்றால் என்னவென்ற தலைப்பிலும் ஜடம் என்றால் என்னவென்ற தலைப்பிலும் சமீபத்தில் விளக்குவேன். இன்ஷா அல்லாஹ்) நாம் திரையிடப்பட்ட அறிவோடுள்ளவர்களாய் இருப்பதால், எமது அறிவுக்கமைவாய் ஒவ்வொரு பொருளுக்கும் ஆறு பக்கங்கள் அல்லது திசைகள்

அல்லது முகங்கள் இருப்பதாய்க் கொண்டு நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை நோக்குவோம்.

நாம் குறிப்பிட்டபடி, ஒவ்வொரு பொருளுக்கும் ஆறு திசைகள் அல்லது ஆறு பக்கங்கள் அல்லது ஆறு முகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பக்கங்கள், திசைகள், முகங்களைத்தான் "வஜ்ஹு" என்ற சொல்லால் குறிப்படப்பட்ட தேயன்றி கண், செவி, மூக்கு, வாயுள்ள முகம் என்ற கருத்தோடு அச்சொல் பாவிக்கப்படவேயில்லை. எமக்கு எதிரில் இருந்து கொண்டிருக்கும் ஒரு பொருளுக்கு ஆறு திசைகள், பக்கங்கள், முகங்கள் இருந்தாலும் நாம் காண்பது அப்பொருளின் ஒரு திசையை, ஒரு பக்கத்தை. ஒரு முகத்தை மட்டுந்தான். நாம் பார்க்கும் சிருஷ்டிப் பொருள் நீளம், குறுகல், வட்டம், முக்கோணம், கூர்ங்கோணம், உருண்டை, தட்டை போன்ற எந்த வடிவத்தில்(ஸூறத்தில்) இருந்தாலும் அச்சிருஷ்டியான வடிவத்தின்(ஸூறத்தின்) ஒரு முகத்தை மட்டுந்தான் பார்க்கிறோம். ஒரு பொருளின் எல்லா முகங்களையும் ஏக காலத்தில் நாம் காணமுடியாது. அப்படிக் காண்பதானால், ஆறு முகங்களையும் ஒருமுகப்படுத்திக் காட்டக்கூடிய ஒரு கருவியை எடுத்துக் கொண்டால்தான் முடியும்! ஆயினும், நாம் காணும் பொருளின் வெளிமுகத்தை மட்டுந்தான் எம்மால் காணமுடியும். உதாரணத்திற்கு ஓர் அணுவை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு நீர்த்துளியைப் பெரிதாக்கி எம்முடைய உலகத்தின் அளவுக்கு எடுத்துக் கொண்டால் அணு என்பது ஓர் எலுமிச்சப் பழத்தின் அளவு என்று கொள்ளலாம். இந்த அணுவுக்கும், இந்த அணுவின் மையத்திலிருக்கும் அதன் கருவுக்கும், அந்த கருவைச் சுற்றிக்கிறங்கும் இலத்திரன் போன்ற மிகமிக நுண்ணிய மின்துகளுக்குங்கூட இடமும் ஆறு முகங்களுமுண்டு! ஆனால், அந்த ஆறு முகங்களையும் எம்மால் பார்க்க முடிவதில்லை. ஏதோவொரு வகையில் பார்த்தோமென்றாலும் அந்த முகங்களின் ஒரு புறத்தை(பக்கத்தை) மட்டுமே நாம் பார்க்க முடியும்.

உயிருள்ளதாயும் உயிரற்றதாயும் இருக்கும் சிருஷ்டிகளின் (சராசரங்களின்) ஒவ்வொரு புறங்கொண்ட தொகுப்புக் காட்சியையேயன்றி நாம் பார்ப்பதில்லை. நாம் எங்கு எத்திசையை நோக்கினாலும், சிருஷ்டிகளின் ஒவ்வொரு புறங்கொண்ட தொகுப்பான ஒரு முகத்தையே பார்க்கின்றோம். இதில் சர்வபிரபஞ்சமுமே அடங்கும். எனவே, ஆயத்தில் குறிப்பிடப்பட்ட "முகம்"(வஜ்ஹு) என்பது லாஹிறான சிருஷ்டிகளின் புறம் அல்லது பக்கம் என்பதை விளக்கப் பாவிக்கப்பட்டதேயன்றி, உயிரினங்களின் முகம்போன்ற கண், மூக்கு, செவி, வாயுள்ள முகம் என்று கூறுவதற்காக அல்ல. திசை, பக்கம், புறம், முகம் என்பதை முன்பின் திசைகளாய், முன்பின் பக்கங்களாய், முன்பின் புறங்களாய், முன்பின் முகங்களாய்ப் பிரித்தெடுத்துக் கொண்டாலும் இதை இலகுவாய் விளங்கலாம். நாம் ஒரு சிருஷ்டியை நேர் எதிரில் பார்க்கும்போது அச்சிருஷ்டியின் முன்புறத்தை அதாவது, எமது பார்வைக்கு தென்படும் முன் முகத்தை மட்டுந்தான் பார்க்கிறோம். பின்புறம் அல்லது பின்முகம் எமது பார்வைக்குத் தென்படுவதேயில்லை. ஓர் மனிதனின் பின்புறத்தைக் கண்டாலும், முன்புறத்தைக் கண்டாலும், அம்மனிதனுடைய மேல், கீழ், வல, இடப்புறங்களைக் கண்டாலும் நாம் அவனை மனிதன்தான் என்று ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், முன்புறத்தைப் பார்த்தபோது முகத்தைக் கண்ட நாம் பின்புறத்தைப் பார்த்தபோது அம்முகத்தைக் காண்பதேயில்லை. ஏன்? அங்கு முகம் இருப்பதில்லை. மனித உடலின் ஓர் அங்கமாக தலையில் ஒரு புறத்தைமட்டுமே நாம் முகம் என்று நம்பியிருப்பதால் நாம் கண்டறிந்த முகத்தைச்சுட்டியே "முகம்" ("வஜ்ஹு") என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது என்று மருண்டுவிடுகிறோம். இது எமது வஹ்மு என்ற பேதபுத்தியின் விளைவாகும். ஆயினும், நாம் எம்மை மேதைகள் என்றே எடைபோட்டுக்கொள்கிறோம்.

''வஜ்ஹு'' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட ''முகம்'' என்பது ''பக்கம்'', ''புறம்'' என்ற பொருளுடையது. திரும்புந் திசைகள்தோறுந் தென்படுகிற முகம் (புறம்,பக்கம்) அல்லாஹ்வுடையதுதான் என்றால், சர்வபிரபஞ்சத்திலுமுள்ள சர்வசிருஷ்டியும் அவனுடைய தோற்றமாகவே (ஸூறத்தாகவே) இருக்கவேண்டும். அப்படியானால், எங்கேயும், எவரும், எப்போதும் அல்லாஹ்வின் லாஹிறான ஸூறத்தென்ற முகத்தையேயன்றிப் பிறபொருள் எதனையும் பார்க்கவே முடியாது. இவ்வுண்மையை வஹ்மு என்ற மூடபுத்தி மறுத்தாலும் விஷயம் பரிபூரணமான உண்மையேதான். எனவே, ஆயத்துக் கூறுவது பொய்யேயல்ல. ஆயத்தின் நோக்கை விளங்கிக் கொள்ளாமையே மருட்சிக்குக் காரணமாயிருக்கிறது. அல்லாஹ் வேறு, சிருஷ்டி அவனல்லாத வேறு என்ற முஷ்ரீக்குகளின் நம்பிக்கையிலூறிய ஒருவர் இவ்வுண்மையை இறக்கும் வரையிலும் ஏற்றுக்கொள்ளவேமாட்டார் என்பது உறுதி. நான் சுருக்கமாய்த் தந்த இவ்விபரத்தை நுட்பமாய் உணர்ந்து தெளிவு பெறுக.

**ஹதீஸ்:-**

*ஒரு தடவை நாங்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்களுடன் காரிருளில் பிரயாணஞ்செய்தோம். கிப்லா எத்திசையில் இருக்கிறதென்பதை எங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. எனவே, எங்களிலிருந்த ஒவ்வொருவரும் அவரவர் இருந்த திசையிலேயே தொழுதுகொண்டோம். விடிந்த பின் இச்செய்தியை றஸூல்(ஸல்) அவர்களிடம் கூறினோம். அப்பொழுது, நீங்கள் எத்திசையை நோக்கினும் அத்திசை அல்லாஹ்வுடைய முகமே(வஜ்ஹுவே) என்ற 2:115ம் வசனம் அருளப்பட்டது.*

**அறிவிப்பவர்:-ஆமிர் இப்னு றபீஆ(றலி)**
**ஆதாரம் :- திர்மிதி**

குர்ஆனை ஹதீஸும் அவ்விரண்டை யுக்தியும் ஒத்திருப்பதால் ம.்.கூல், மன்கூல் என்ற பிரமாணங்களின் படி "வஜ்ஹு" என்ற சொல் "திசை", "புறம்", "பக்கம்" என்ற பொருளில்தான் முகம் என்று கூறப்பட்டிருக்கிறதென்பதை மறுக்கமுடியாது. (2:115ம் இலக்க வசனத்தில் பாவிக்கப்பட்ட சொல் "வஜ்ஹு" என்பதே)

## ஒரு நுட்பம்

நாம் காட்டிய 2:115ம் ஆயத்தில் இன்னுமொரு நுட்பமுண்டு. ''வஜ்ஹு'' (''முகம்'') என்றசொல் ஒருமையில் தான் பாவிக்கப்பட்டிருக்கிறேதேயல்லாமல் பன்மையில் பாவிக்கப்படவில்லை. சர்வபிரபஞ்சத்திலும் நாம் காணும் சிருஷ்டிகளில் முகங்கள்(புறங்கள், பக்கங்கள்) பல்வேறு வகையினதாய், காலத்தால், இடத்தால் வேறுபட்டனவாய் இருப்பதால் நாம் காணும் சிருஷ்டிகளின் ஒவ்வொரு முகமும் (புறமும், பக்கமும்) தனித்தனியே றப்புடையதுதானென்று கூறமுடியாது. நாம் காண்பது சிருஷ்டியுடைய முகங்களையே (புறங்களையே, பக்கங்களையே)தான். இவை எண்ணிலடங்கா வகையினவாகும். இவை அனைத்தையும் ஏகமாய் அதாவது, ஒரே முகமாய்க் கொண்டிருப்பவனே இறைவனாய் இருக்கிறான். இந்த முகத்துக்கு எல்கை, வரையறை இல்லாதிருப்பதால் நாம் எத்திசையை நோக்கினும் அது அல்லாஹ்வுடைய முகமே தான்.(வஜ்ஹுவேதான்) தனிப்பட்ட ஒரு முகத்தை (புறத்தை, பக்கத்தை) அல்லாஹ்வுடையதென்று கூறுவது குப்ரு ஆகவும் அல்லாஹ்வுடையதல்ல என்று கூறுவது "ஷிர்க்" ஆகவும், திரும்பும் திசையெல்லாம் தென்படுவது அல்லாஹ்வுடைய முகமேயென்று கூறுவது சுத்தமான தௌஹீதாகவும் இருக்கிறது.

"வஜ்ஹு" என்ற சொல் ஒருமையிற் கூறப்பட்டிருப்பதால், சர்வஆலங்களும் அவனுடைய முகமேதான் என்பதும்

கண்டப்பொருளான தனிப்பட்ட ஒரு பொருளின் தோற்றத்தை அல்லாஹ்வின் முகம் என்று கூறுவது தவறென்பதும் இவ்வாயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

ஓர் கண்டப்பொருளின் முகம் குறிப்பிட்ட ஓர் இடத்தில்தான் இருக்க முடியும். இது யாவரும் ஒப்புக்கொண்ட ஓர் அனுபவ உண்மை. எனவே கண்டப்பொருளுக்கு நேர்முரணான அகண்டப்பொருளின் முகம் ஓர் குறிப்பிட்ட இடத்தை மட்டும் கொள்ளாமல், அதையன்றிப் பிறிதொன்றில்லாத ஏக வியாபகமான(ஒரேயோர்) முகமாகவே இருக்கும். வஜ்ஹு என்றசொல்லை ஒருமையில்கூறித் தொளஹீதின் ஹக்கை இறைவன் எவ்வளவு நாஸுக்காய் விளக்கியுள்ளான் என்பதை ஊன்றி உணர்க.

## இன்னும் ஓர் நுட்பம்:-

நாம் காட்டிய 2:115ம் ஆயத்தில் ‘‘வஜ்ஹு’’ என்ற சொல்லை ஒருமையிலும், திசைகள் என்ற சொல்லைப் பன்மையிலும் கூறப்பட்டிருக்கிறது. இது ஏன்? உள்ளது ஒரேயோர் முகம் ஏககாலத்தில் எல்லாத்திசைகளிலும் அமையமுடியாதே! அப்படியானால் இறைவன் கூறுவதில் வேறோர் நுட்பம் இருக்க வேண்டும். திசையென்பது இடத்தைப் பொறுத்தததாயும் இடம் என்பது காலத்தை பொறுத்தாயும் காலம் வரையறையற்றதாயும் இருப்பதால் திசையென்பது கிடையாதென்பது இன்றுள்ள விஞ்ஞானத்தின் முடிவான தீர்ப்பாகும். புலனாட்சியில் கட்டுண்ட மனிதன் தான்(உடல்) இருந்து கொண்டிருக்கிற இடத்தை அடிப்படையாய்க் கொண்டுதான் திசையைக் கணிக்கிறான். இம்மனிதன் தன்உடல் இருந்து கொண்டிருக்குமிடமே உலகத்தின் மையம் என்று கொள்கிறான். இது ஓர்மயக்கமாகும்.

புலனாட்சியிலிருந்தும் விடுபட்ட ஆத்மா(றூஹு)தான் சர்வ ஆலங்களுக்கும் மத்திபமாயும், எல்கையிடமுடியாத விரிவானதாய்ச் சர்வ ஆலங்களையும் தன்னிடத்தே கொண்டதாயிருப்பதால், உண்மையிலேயே திசை கிடையாதென்பது இவ்வாயத்தின் மூலம் உணர்த்தப்பட்டிருக்கிறது. எனவேதான் மருட்சியுடைய மக்களறிவில் பலதிசைகள் இருப்பதாய்த் தென்படினும் ஏகவியாபகமாய், இலக்கத்தில் அமையாததாய் இருப்பது அல்லாஹ்வுடைய ''வஜ்ஹு'' மட்டுமேயென்று கூறப்பட்டிருக்கிறது. திசை கிடையாதென்பதையும் நாம் மருட்சியில் மயங்கி இருக்கிறோம் என்பதையும் விஞ்ஞான ரீதியாய் விளக்குவதே ஆயத்தின் நோக்கமாகும். 1400 வருடங்களின் முன்பே குர்ஆன் இவ்விஞ்ஞான உண்மையை விளக்கியிருந்தும் அவ்வேதத்துக்குத் தனியுரிமை பாராட்டும் முஸ்லீம்கள் இதுவரை அவ்வுண்மையை விளங்கிக் கொள்ளவில்லையென்றால் இது முஸ்லீம்களின் அறிவுத்துறையிலுள்ள அலட்சிய மனப்பான்மையைத்தான் எடுத்துக்காட்டுகிறது. திசையும், இடமும், ஜடமும் கிடையாதென்பதை இந்த நூலின் அடுத்த பாடங்களில் விளக்குவேன். இன்ஷா அல்லாஹ் பொறுமையடைக.

# 16

## அல்லாஹ் சிருஷ்டியைச் சூழ்ந்திருப்பது எப்படி?

**குர்ஆன்: 4:126**

وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۚ وَكَانَ
اللّٰهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيْطًا

**திடனாக அல்லாஹ் எல்லா வஸ்துக்களையும் சூழ்ந்தவனாயிருக்கிறான்.**

இவ்வாயத்தில் “சூழ்தல்” என்பதற்கு “முஹீத்” என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது. எல்லா வஸ்துக்களையும் சூழ்ந்திருக்கிறான் என்றால், அவனிருக்கும் இடத்தில் வஸ்துக்களும் வஸ்துக்கள் இருக்கும் இடத்தில் அவனும் இல்லை என்றாவதால் சிருஷ்டி வேறுதான் அல்லாஹ் வேறுதான் என்று வஹ்மு என்ற பேதபுத்தி முடிவு கட்டிவிடுகிறது. இம்முடிவு சுத்தமான இணைகற்பித்தல்(ஷிர்க்) என்பதை அந்த மூடபுத்தி அறிவதில்லை. “சூழ்தல்” என்றால் நிலத்தைக் கடல் சூழ்ந்தது போல என்று வஹ்மு நம்பிவிடுகிறது. பக்கம், புறம் என்ற

முகத்தைக் கண், மூக்கு, வாயுடைய முகமாய்க் கற்பனை பண்ணிக் கொண்டதுபோல இந்தச் "சூழ்தல்" என்ற சொல்லுக்கும் வஹ்மு என்ற மூடபுத்தி தவறான பொருள் கொண்டுவிடுகிறது. வேதவசனம் கூறும் "சூழ்தல்" என்பது, மூடபுத்தி கற்பனை பண்ணிய சூழ்தலைப் போன்றதல்ல. (எமது முதல் நூற்களில் இவ்வாயத்துக்கு விளக்கமளிக்கப் பட்டிருப்பதால் அவசியமான அளவு மட்டுமே கூறுகிறேன்.)

# 17

## சூழ்தல் என்றால் என்ன?

என்னை நான் சூழ்ந்திருக்கிறேன் என்பதை அல்லது கத்தியை இரும்பு சூழ்ந்திருக்கிறது என்பதை அல்லது நகையைத் தங்கம் சூழ்ந்திருக்கிறது என்பதைச் சிந்தனை செய்யுங்கள். என்னை நான் சூழ்ந்துள்ளேன் என்றால் என்னுடலை உயிர் சூழ்ந்ததுபோல நானே உடலாயிருக்கிறேன் என்பதே அர்த்தம். கத்தியை இரும்பு சூழ்ந்துள்ளது என்றால், கத்தி இரும்பின் ஸுறத்து என்பதே அர்த்தம். நகையைத் தங்கம் சூழ்ந்துள்ளது என்றால் நகை தங்கத்தின் ஸுறத்து என்பதே அர்த்தம். எனவே, இச்சூழ்தல் உள்ளூற்றதை வெளியேயுள்ள வேறொன்று சூழ்ந்துள்ளதுபோன்ற சூழ்தல் அல்ல. தங்கம் என்பது இயற்பெயராயும் நகை என்பது எம்மாற்கூறப்பட்ட ‘‘கௌனி’’ என்ற பெயராயும் இருக்கிறது. தங்கத்தின் ஒரு சூறத்தை ‘‘மாலை’’ என்றும் இன்னுமொரு ஸுறத்தை மோதிரம் என்றும் கூறுகின்றோம். ஆனால் மாலையும் மோதிரமும் தங்கத்தின் வேறானவையேயல்ல. பெயர்களும் சட்டத்திற்குட்பட்ட ஸுறத்துக்களும் ஒன்றுக்கு மற்றொன்று நேர்முரணானவைதான். ஆயினும் தங்கத்தை விட்டும் மாலையும், மோதிரமும் வேறுவேறான தனித்தனிப் பொருட்களேயல்ல. மாலையை, மோதிரத்தைத் தங்கம் சூழ்ந்த

தாயிருக்கிறது. இருந்து கொண்டிருக்கும் உண்மைப்பொருள் தங்கம் மட்டுந்தான். மாலையும் மோதிரமும் தங்கத்தின் ஸூறத்துக்களேயன்றி, தங்கமல்லாத அல்லது தங்கத்தை விட்டும் வேறான தனித்தனியான உண்மைப் பொருட்களல்ல. மாலையும் மோதிரமும் வெறும் நாமங்கள் மட்டுமே. "லாத்", "உஸ்ஸா", "மனாஸ்" என்பவையும் மாலை, மோதிரம் போன்ற வெறும் நாமங்களேயன்றி வுஜூதைவிட்டும் வேறுவேறான தனித்தனிப் பொருட்களேயல்ல. இரும்பும், தங்கமும் மாறுபாடடைவதால் ஸூறத்துக்கள் உருவாகின்றன. ஆனால், இறைவன் மாறுபடாமல், கெட்டழியாமல், விகாரப்படாமல் இருந்து கொண்டுதான் சர்வ ஸூரத்துக்களுமாய்க் காட்சியளிக்கிறான். (என்னுடலை நான் சூழ்ந்திருப்பதைப்போல) நான் கெட்டழியாமல், மாறுபாடடையாமல், விகாரப்படாமல் இருந்துகொண்டுதான் கனவைக் காணுகிறேன். கனவில் கண்ட சிருஷ்களின் ஸூறத்துக்கள் யாவும் என்னுடைய ஸூறத்துக்களே. அவற்றை நான் சூழ்ந்திருந்து கொண்டுதான் கனவைக் கண்டேன். எனவே, யாவும் இறைவனின் ஸூறத்தே என்பதை மறுக்கமுடியாது.

"எல்லாமறிந்தவன்" என்பதை இவ்விடத்தில் நினைவு கூர்வது அவசியம். சர்வஉலகும் அவனுடைய ஸூறத்தா யிருப்பதால்தான் அவன் சர்வஉலகிலுமுள்ள சர்வ விஷயங்களையும் ஏககாலத்தில் அறிந்தவனாயிருக்கின்றான். இடத்தால் வேறுபட்டவை கண்டப்பொருளான சிருஷ்டியாய் இருக்குமாதலால் அவை ஒன்றையொன்று முற்றாய் அறியா. எனவே, முற்றறிஞனான இறைவனின் ஸூறத்தே சிருஷ்டியுலகு என்பதை மறுக்கமுடியாது.

கலிமாவை அதன் தலீல்களான 112ம் ஸூறாவும் 2:15, 4:126 போன்ற வசனங்களும் உறுதிப்படுத்துகின்றன. இன்னும் சில ஆயத்துக்களை இப்போது ஆராய்வோம்.

**குர்ஆன்: 95:1,2,3**

وَالتِّينِ وَالزَّيْتُونِ ۝ وَطُورِ سِينِينَ ۝ وَهَٰذَا الْبَلَدِ الْأَمِينِ ۝

**அத்தியின் மீதும் ஜைத்துானின் மீதும் சத்தியமாக, ஸினாய் மலையின்மீதும் சத்தியமாக, அபயமளிக்கும் இந்த நகரத்தின்மீதும் சத்தியமாக......................**

**குர்ஆன்: 100:1,2,3,4,5**

وَالْعَادِيَاتِ ضَبْحًا ۝ فَالْمُورِيَاتِ قَدْحًا ۝ فَالْمُغِيرَاتِ
صُبْحًا ۝ فَأَثَرْنَ بِهِ نَقْعًا ۝ فَوَسَطْنَ بِهِ جَمْعًا ۝

**மூச்சித்திணற அதிவேகமாய்ச் செல்லும் குதிரைகள் மீதும், தீப்பொறி பறக்கச் செய்பவைகள் மீதும், அன்றி, அதிகாலையில் பாய்ந்து செல்பவைகள் மீதும் அதனால் புழுதி கிளப்புபவற்றின் மீதும், பின்னர் அதன் காரணமாக மத்தியில் நுழைந்து விடுபவை மீதும் சத்தியமாக..................**

**குர்ஆன்: 103:1,2**

وَالْعَصْرِ ۝ إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ۝ إِلَّا
الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ۝

**காலத்தின் மீது சத்தியமாக, மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்.**

இவ்விதமான பல சத்தியங்கள் குர்ஆனில் இடம்

பெறுகின்றன. சிருஷ்டிகளின் பெயரில் மனிதன் சத்தியஞ் செய்வதை தடைப்படுத்திய இறைவன், தானே சிருஷ்டிகளின் பெயரில் சத்தியஞ் செய்கிறானே! இது ஏன்? ‘‘மன்தீக்’’ முறைப்படி இதற்கு இலகுவானதொரு பதிலளிக்கலாம். சிருஷ்டிக்கு சிருஷ்டிகர்த்தா நேர்முரணல்லவா? ஆகையால், சிருஷ்டியில் சிருஷ்டி சத்தியஞ்செய்வது கூடாதென்று கூறிய இறைவன், தான் சிருஷ்டிக்கு முரணாக சிருஷ்டியில் சத்தியஞ் செய்வது நியாயந்தானே. இது தர்க்கவாதந்தான். இது வெற்றி தோல்வி கணிக்கமட்டுமே உதவலாம். ஆனால், இதன் மூலம் உண்மையைக் கண்டறிய முடியாது.

சிறு பிள்ளைகள் விளையாடும்போது ஒரு பிள்ளை எதையாவது திருடிவிட்டால் மற்றப் பிள்ளைகள் அப்பிள்ளையை உபத்திரவஞ்செய்வதை நாம் காணுகிறோம். அப்போது அப்பிள்ளை தான் குற்றவாளியல்ல என்பதை நிரூபிக்க தன் கண்ணைத் தன் கையால் பொத்திக்கொண்டு ‘‘என் கண்ணறிய நான் எடுக்கவில்லை’’ என்றோ அல்லது ‘‘உன் தலையறிய நான் எடுக்கவில்லை’’ என்றோ சத்தியஞ் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். பிள்ளை தன் சொல்லை உறுதிப்படுத்தத் தன்னில் தன் உறுப்புக்களில் தன் ஸூறத்தில் சத்தியஞ் செய்வதைப்போல இறைவனும் தன்னில் - தன் ஸூறத்தில் சத்தியஞ் செய்திருக்கிறான். இறைவனைப் பிள்ளைக்கு ஒப்பிடுவதாய்த் தவறாய் விளங்கிக் கொள்ளவேண்டாம். அவன் சத்தியஞ் செய்ய அவனல்லாத எதுவுமே இல்லாதிருக்கும் போது அவன் வேறு எதில் சத்தியஞ்செய்யமுடியும்.? எனவேதான் தன் ஸூறத்துக்களான அத்தி, ஜைத்தூன், குதிரை போன்றவற்றில் சத்தியஞ் செய்துள்ளான். சிருஷ்டி என்ற வெளிப்பாடு(லாஹிர்) அவன் தானாகவே இருப்பதால் அவன் அவனிலேயே சத்தியஞ் செய்துள்ளான் என்பது தெளிந்த அறிவுக்குத் தென்படுகிறதல்லவா? அத்தி என்ற சிருஷ்டி அல்லாஹ்வின் வெளிப்பாடு(லாஹிர்)தான் என்றால் சர்வ பிரபஞ்சமும் அவனுடைய வெளிப்பாடே(லாஹிறே) என்பதை

நாம் ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது? பிள்ளையே அல்லாஹ்வின் ஸூறத்துத்தான் என்றால் நாம் பிள்ளையை அல்லாஹ்வுடன் ஒப்பிட்டேனென்று கொள்வது விளக்கப்பிசகேதான். கலிமாவிலுள்ள “இலாஹு” என்பது ஒரு பொதுப்பெயர்ச்சொல் என்பதை ஏற்றுக்கொண்ட நாம் இதில் எவ்வித மயக்கமும் அடைய வேண்டியதில்லை. அஃறினைப் பொருட்கள் கூட அவனைவிட்டும் வேறானவையல்ல என்பதை உணர்த்தவே இவ்வித சத்தியங்கள் தரப்பட்டுள்ளன. இவ்வித ஆயத்துக்கள் முத்தஷாபிஹாத் இனத்தைச் சேர்ந்தவை. நாம் தௌஹீது சம்பந்தமாய் விளக்கிய உண்மையை விட இன்னும் பல ஞான இரகசியங்கள் இவ்வாயத்துக்களில் விளக்கப்பட்டுள்ளன. நமக்கு இங்கே அவ்விபரங்கள் அவசியமல்ல.

பகுத்தறிவு வட்டத்துக்குள் திடீரென அமையாத ஒரு கற்பனைத் தோற்றந்தான் பிரபஞ்சம் என்பது இப்பிரபஞ்சம் குணமாயும் தென்படாத வுஜூது குணியாயும் இருக்கிறது. பிரபஞ்சம் தற்போது எமது புலனறிவில் கட்டுண்ட உண்மையாய் இருப்பினும் இப்பிரபஞ்சம் ஒவ்வொரு கணமும் மாறுபட்டுக் கொண்டும் மறைந்துகொண்டுமிருப்பதால் இப்பிரபஞ்சத்துக்கு (சிருஷ்டிக்கு) மனித அறிவில் உண்மையும் இன்மையும் தென்படுகிறது. இறைவனின் விஷயத்தில் உண்மை என்ற சொல் “உள்ளது”, “இருந்துகொண்டிருப்பது,” “அழியாதது” என்ற பொருளுடையது. இதற்கு “இன்மை”(சூன்யம்) என்ற எதிரிடை கிடையாது. எனவே சிருஷ்டி தோன்றுவதும் மறைவதும் மனித அறிவில் ஹுரூர், மயக்கு, மாயை என்ற காட்சியாய் இருக்கிறது. இறைவனே பகுபடாத காலமாய் இருப்பதால் அவனிடம் தோன்றுதலும், மறைதலும் இல்லை. என்றும் எப்போதும் எல்லாம் அவனுடன் அவனாய் இருந்தது போலவேதான் இருந்து கொண்டிருக்கின்றன. எதுவும் எப்போதும் அவனை விட்டும் மறையமுடியாது. ஆதலால் நாம் காணும் பிரபஞ்சம் இறைவனின் வெளிப்பாடு(லாஹிர்)தான் என்பதை மறுக்கவே முடியாது.

# ஓர் நுட்பம்

நாம் காட்டிய 103:1, 2ம் ஆயத்துக்களில் இறைவன் காலத்தின் மீது சத்தியம் செய்துள்ளான். முன் தந்த ஆயத்துக்களில் அ.்.றிணைப் பொருட்களான சிருஷ்டிகளில் சத்தியம் செய்திருக்கிறான். சிருஷ்டி லாஹிறாயும் காலம் பாதினாயும் இருக்கிறது. எனவே இவ்வித சத்தியங்கள் மூலம் லாஹிறும் பாதினும் நானேதான் என்பதை இறைவன் விளக்கியிருக்கிறான்.

*ஹதீஸ்:-*

*உங்களில் எவரேனும் சத்தியஞ்செய்யும் போது தன் சத்தியத்தில் ''லாத்'', ''உஸ்ஸா'', ''மனாஸ்'' போன்ற இலாஹுகளைக் கூறிவிட்டால் "லா இலாஹ இல்லல்லாஹ்"என்று அதையடுத்துக் கூறிவிடவும். அன்றி, எவராவது தம் சகோதரரிடம் வாரும் சூதாடலாம் என்று கூறிவிட்டால் அறம் செய்துவிடவும் என்று அண்ணல் நபி அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்:- அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்:- அபூதாவுத்**

இந்த ஹதீஸில் இருவகைக் குற்றங்களுக்கு இருவகை மீட்சிகள் (உபாயங்கள்) தரப்பட்டிருக்கின்றன. லாத், உஸ்ஸா, மனாஸ் போன்ற இலாஹுவான சிருஷ்டிகளில் சத்தியஞ் செய்துவிட்டால் "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவைக் கூறும்படி ஏவப்பட்டிருப்பது ஏன்? லாத், உஸ்ஸா, மனாஸ் போன்ற விக்கிரகங்களான இலாஹுகள் அல்லாஹ்வின் லாஹிறான ஸூறத்துக்களேயன்றி அவனைவிட்டும் வேறு வேறான தனித்தனி வுஜூதுகளே அல்ல என்பதை உணர்த்துவதற்காகத்தான். லாத், உஸ்ஸா, மனாஸ் போன்றவை அல்லாஹ் அல்லாதவை என்று நம்பிச் சத்தியஞ் செய்வது ஷிர்க்கென்ற இணைகற்பித்தலாகவும் அவை

அல்லாஹ்வேதான் என்று நம்பிச் சத்தியஞ் செய்வது குப்ருவாகவும் இருக்கிறது. அல்லாஹ்வையன்றிப் பிறிதொன்றுமே இல்லை என்று கலிமா கூறுவது உண்மைதான் என்றால் லாத், உஸ்ஸா, மனாஸ் போன்ற சூறத்துக்களில் காட்சியளிப்பது எது? இருப்பதுதானே காட்சியளிக்கும்! லாத், உஸ்ஸா, மனாஸ் போன்றவற்றில் சத்தியஞ் செய்பவர் ஷிர்க், குப்ரு ஆகிய இருகுற்றங்களிலிருந்தும் விடுபடுவதற்காகவே கலிமாவைக் கூறும்படி ஏவப்பட்டிருக்கிறது.

**குர்ஆன்: 53:23**

إِنْ هِيَ إِلَّا أَسْمَاءٌ سَمَّيْتُمُوهَا أَنْتُمْ وَآبَاؤُكُمْ مَا أَنْزَلَ
اللَّهُ بِهَا مِنْ سُلْطَانٍ ۚ إِنْ يَتَّبِعُونَ إِلَّا الظَّنَّ وَمَا تَهْوَى
الْأَنْفُسُ ۖ وَلَقَدْ جَاءَهُمْ مِنْ رَبِّهِمُ الْهُدَىٰ

**(லாத்,உஸ்ஸா,மனாஸ்) போன்ற இவைகளெல்லாம் உங்கள்மூதாதைகள் வைத்துக்கொண்ட வெறும் பெயர்களேயன்றி (உண்மையில் அவை ) ஒன்றுமேயில்லை. அதற்காக (இவை பொருள் - வுஜூது - என்பதற்காக) அல்லாஹ் யாதோர் ஆதாரத்தையும் (வேதங்களில்) இறக்கி வைக்கவில்லை. அவர்கள் மனோ இச்சையையும் சந்தேகத்தையும் பின்பற்றுகின்றனரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடமிருந்து அவர்களுக்கு நேரானவழி வந்தேயிருக்கிறது.**

நேரானவழி, ஸிறாத் என்பது எது? கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதுதான் நேரானவழி என்பது. சிருஷ்டி என்ற சர்வபிரபஞ்சமும் இறைவனுடைய இலாஹியான நாமங்களின் ஸூறத்துக்களே என்பதை குர்ஆனை ஏற்றுக்

கொண்ட எவரும் மறுக்கமுடியாது. பெயர்களேயன்றி வேறில்லை என்ற வசனம் இரு உண்மைகளை உணர்த்துகின்றது.

1வது :-
நாம் காணும் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வோர் அணுவுங்கூட இறைவனின் (சொந்தமான) இலாஹியான நாமங்களின் ஒவ்வொரு ஸூறத்தேயென்பது தென்படுகிறது. அதாவது, இறைநாமத்தின் அர்த்தம், கருத்துத்தான் பொருளாய்க் காட்சியளிக்கிறதென்பது உறுதியாகிறது.

2வது:-
நாம் காணும் சிருஷ்டிகளுக்கு நாம் ஏற்படுத்தியுள்ள நாமங்கள் ‘‘களனி’’ பெயருக்குப் பெயர் என்பது தென்படுகிறது.

எனவே, நாம் காணும் சிருஷ்டிகள் அல்லாஹ்வைப் போல் தனித்தனி வுஜூதுகளேயல்ல என்பது தெளிவாகவே தென்படுகிறது. இதையுணர்த்துவதே கலிமாவின் வேலை. மாலை, மோதிரம் என்பவை தங்கத்தின் ஸூறத்தாய் இருக்கும்போதும் அவற்றை நாம் ஒவ்வொரு பெயர் சொல்லி அழைப்பதுபோலவே சர்வபேரண்டமும் அவனாய், அவனுடைய ஸூறத்தாய் இருக்கும்போது அந்த ஸூறத்துக்களுக்கு லாத், உஸ்ஸா, மனாஸ் என்று நாம் பெயர் சூட்டுகிறோம். நாம் சூட்டிக்கொண்டது களனியான வெறும் பெயரேயன்றி அவை அல்லாஹ்வைப்போன்ற தனித்தனியான வுஜூதுகளேயல்ல. (குர்ஆன்-6:108 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்வுக் கெடுத்துக் கொள்க.)

**குர்ஆன்: 76: 1,2**

هَلْ أَتَىٰ عَلَى الْإِنسَانِ حِينٌ مِّنَ الدَّهْرِ لَمْ يَكُن
شَيْئًا مَّذْكُورًا ﴿١﴾ إِنَّا خَلَقْنَا الْإِنسَانَ مِن نُّطْفَةٍ
أَمْشَاجٍ نَّبْتَلِيهِ فَجَعَلْنَاهُ سَمِيعًا بَصِيرًا

**ஒவ்வொரு மனிதனுக்கும் (அவன் தோன்றுவதற்கு) முன் ஒருகாலம் செல்லவில்லையா? அதில் அவன் இன்னபொருள் என்றும் கூறுவதற்கில்லாத நிலையிலிருந்தான். கலந்த ஓர் இந்திரியத் துளியைக் கொண்டு நாம்தான் மனிதனை நிச்சயமாகச் சிருஷ்டித்தோம். அவனைச் சோதிக்கும் பொருட்டு (அவனை அவனுக் கெடுத்துக்காட்டி சாட்சியாக்கும் பொருட்டு) அவனைச் செவியுடையோனாகவும் பார்வையுடையோனாகவும் ஆக்கினோம்.**

இவ்வாக்கியத்திற் பல அபார உண்மைகள் வெளிப்படு த்தப்பட்டுள்ளன. ஆண் பெண் கலப்பிந்திரியத்தால்தான் சிசு உருவாகிறதென்ற உண்மையை நாம் விஞ்ஞான வாயிலாய் இந்த 21ம் நூற்றாண்டில்தான் கண்டறிந்தோம். நாம் கண்டறிந்த விஞ்ஞான உண்மையைக் குர்ஆன் 7ம் நூற்றாண்டிலிருந்தே கூறிக்கொண்டிருக்கிறதென்றால் குர்ஆனை நம்புவதற்கு நமக்கு வேறு ஆதாரம் அவசியமில்லை. இவ்வாயத்தில் எமக்கவசிமான விஷயத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

மனிதன் பூமியில் பிறப்பதற்குமுன், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு காலம் சென்றுள்ளதென்பது உண்மைதான். ஆயத்தை இன்னுமொருமுறை நோக்குங்கள். இன்னபொருள் என்றும் கூறுவதற்கில்லாதது என்றால், ஸூறத்தேயில்லாதது என்பது அதன் அர்த்தமாகும். ஸூறத்(தோற்றம்) இருந்தால்தானே அதை நாம் ஒரு பொருள் என்று கூறலாம்? சொல் இல்லாமல்

பொருளும், பொருள் இல்லாமல் சொல்லும் இருக்கமுடியாது. சொல்லின் கருத்துத்தான் பொருள் என்பது. இதை முதலில் தெளிவாய் உணர்ந்து கொள்க. பெயரில்லாத, ஸூறத்தில்லாத ஒன்று அல்லது பல இருந்திருக்காவிட்டால் இப்போது பெயருடையதாய், ஸூறத்துடையதாய்த் தோன்றாது. ஏன்? இல்லாததுவராது இருப்பது இல்லாததாகாது. இது ஓர் தத்துவம். இந்தத் தத்துவத்தைக் கொண்டுதான் இறைவன் இவ்வாயத்தில் இன்னபொருளென்றும் கூறுவதற்கில்லாத நிலையில் இருந்தான் என்று அறிவிக்கின்றான். அப்படியானால் மனிதன் ஸூறத்தும், பெயரும் இல்லாத ஓர்நிலையில் (மர்த்தபாவில்) இருந்துதான் இப்போது ஸூறத்தும், பெயரும் உள்ளவனாய்க் காட்சியளிக்கின்றான். இம்மனிதன் பெயரும் ஸூறத்துமற்றிருந்த காலம் எது? எப்போது?

மனிதன் காலத்தைக் கணிப்பதானால் இடமும் பிறபொருட்களும் (ஜடமும்) அவசியம். இடமும் பிறபொருட்களும் சிருஷ்டிகள்தானே! அப்படியானால் இப்போதிருக்கும் இடமும் பிறபொருட்களும் ஆரம்பத்தில் ஸூறத்தும் பெயரும் அற்றவையாகவே இருந்திருக்கும். எனவே மனிதன் மட்டுமல்லாமல் சர்வபேரண்டமும், இனம்காணமுடியாத, எவ்வித கட்டுப்பாட்டிலும் அமையாத, வரைவிலக்கணங்களைக் கடந்த, முக்கால வேறுபாடற்ற, ஏகமாய் அமைந்த, எல்கையற்ற காலத்தில் காலமாகவே இருந்திருக்கும். இவ்வாயத்தில் கூறப்பட்டகாலம் மனித அறிவில் இலகுவாய் அமைய முடியாதிருப்பதால் மனிதனின் அனுபவஅறிவுக்கேற்பக் காலத்தை முன்பின்னாய் இறைவன் கூறியிருக்கிறான்.

# 18

## காலம் என்றால் என்ன?

காலம் வரைவிலக்கணத்தை ஏற்காதென்பதை இன்றைய விஞ்ஞானம் ஒப்புக்கொண்டிருக்கிறது. காலம் என்பதைக் கடிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு வினாடி, நிமிடம், மணி என்பன போன்றும், சூரியனையும் பூமியின் இயக்கத்தையும் அடிப்படையாகக்கொண்டு இரவு, பகல், நாள், வாரம், மாதம், வருடம், தசாப்தம், நூற்றாண்டு என்பனபோன்றும் நிகழ்ச்சிகளின்(பௌதீக இயக்கங்களின்) வரிசைக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன போன்றும் நாம் பகுத்துப்பிரித்துக் கொண்டாலும் காலம் என்பது எவ்வித கட்டுபாட்டிலும் கட்டுண்ணாததாய் என்றும் இருந்தது போலவேதான் இருந்து னொண்டிருக்கிறது.

பிரபஞ்சத்தில் இடத்துக்கிடம் காலம் வேறுபட்டதுபோல் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. காலம் வேறுபாடுடைய தாய்த் தென்படுவது “வஹ்மு” என்ற மூடபுத்தியினாலுருவாகும் மருட்சியாகும். பௌதீகப்பொருட்களினாலும் அவற்றின் இயக்கங்களினாலும் உருவாகும் தோற்றப்பாடே காலவேறுபாட ல்லாமல் யதார்த்தத்தில் உண்மையானதல்ல. உதாரணமாக பூமியில் ஓர் பகுதி இரவாக இருக்கும்போது அதேவேளையில் பூமியின் மறுபகுதி பகலாக இருக்கிறது. இதனால் இருபகுதிகளு

க்குமிடையில் காலம் வேறுபடுவதாய்த்தென்படுகிறது. ஆனால், உண்மையில் இந்தவேறுபாடு சூரியனாலும் பூமியின் சூழற்சியினாலும் உருவான ஓர் தோற்றப்பாடேயன்றிக் காலம் வேறுபட்டதால் ஏற்பட்டதேயல்ல. இன்னுமோர் உதாரணத்தை நோக்குவோம். பூமியில் ஓர்நாள் 24மணித்தியாலங்கள். ஆனால் வியாழன்கிரகத்தில் ஓர்நாள் 9மணித்தியாலமும் 50நிமிடங்களும் மட்டுமே. இதன்படி பூமியில் ஓர் நாள் முடிவடையும்போது வியாழன் கிரகத்தில் சுமார்2 1/2 நாட்கள் கழிந்து விடுகின்றன. எனவே பூமிக்கும் வியாழனுக்குமிடையில் காலம் வேறுபடுவதாய்த்தென்படுகிறது. ஆனால் உண்மையை நோக்கினால் பூமியின் சுழல்கதியும் வியாழனின் சுழல்கதியும் ஒன்றுக்கொன்று வேறுபடுவதால் இக்காலவேறுபாடு தோன்றினாலும் உண்மையில் காலம் என்றும் இருந்தது போலத்தான் இருந்துகொண்டிருக்கிறது.

சர்வ பேரண்டத்திலுமுள்ள சர்வ ஜீவராசிகளும் தத்தம் இயல்புக்கேற்றபடி காலத்தை ஒவ்வோர் வகையாய்க் கணித்துக் கொண்டு வாழ்ந்தாலும் ஏகமாய், நிலையாய், அழிவற்றதாய், எதிரிடையில்லாததாய் என்றும் இருந்தது போலவே காலம் இருந்து கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை இன்று விஞ்ஞானம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மனித இனம் அவாம்(பாமரமனிதன்), கவாஸ்(சிந்தனையாளர்கள்), கவாஸுல்கவாஸ்(ஆரிபுகள்) ஆகிய முப்பிரிவுகளைக்கொண்டதாயிருக்கிறது. இம்மூன்று வகையினரும் காலத்தை அவரவர் அறிவுக்கேற்றபடி வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படியென்றால்,

1வது :-

சூரியன் சந்திரன் முதலாம் பொருட்களையும் அவற்றின் சுழல் கதியையும் அடிப்படையாய்க் கொண்டு காலத்தைக் கணிக்கும் சாதாரண மனிதன் (அவாம்) நேற்று, இன்று, நாளை, அல்லது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று காலத்தை மூன்று

பிரிவுகளாய்ப்பிரித்துக் கொண்டு வாழ்கிறான். இதை வேதம் ஏற்றுக்கொண்டுள்ளது. இக்கல்வி ஜடஉலகில் வாழும் ஜடஉடலுக்கு வழிகாட்டலாமேயன்றி ஆத்மாவின் தன்நிறைவுக்கு வழிகாட்டாது. அதாவது இவ்வுலக வாழ்வைச் சீராயமைக்கவும், செயல்களை ஒழுங்குபடுத்தவும் இக்கல்வி உதவுவதால் இக்கல்வி யை நாம் புறக்கணிப்பதற்கில்லை. எனினும் இக்கல்வியைக் கொண்டு சாந்தி சமாதானத்தைப் பெறமுடியாது.

2வது :-

சிந்தனையாளர்கள் (விஞ்ஞானிகளில் ஒரு சாரார்) காலத்தை இறந்தகாலமென்றும், எதிர்காலமென்றும் இரண்டாய்ப் பகுத்திருக்கிறார்கள். இவர்களிடத்தில் நிகழ்காலமென்பது கிடையாது. இக்கல்வியும் உண்மையானதுதான். ஒரு செக்கன்ட் முடியும் அதேவேளை அடுத்த செக்கண்ட் ஏற்படுவதால் நிகழ்காலம் இல்லையென்பது உண்மைதான். இதற்கும் குர் ஆனில் ஆதாரங்களுண்டு. இம்மை, மறுமையென்று குர்ஆன் கூறும் விபரத்தை நுட்பமாய் ஆராய்ந்தால் இவ்வுண்மை பிடிபடலாம். இக்கல்வியைக் கொண்டும் மனிதன் பூரணமான சாந்தியைச் சமாதானத்தைத், தன்நிறைவைப் பெறமுடியாது. ஆயினும் சாந்தியைச் பெறத்துடிக்கும் மனிதகுலத்துக்கு உண்மையின் அடிப்படையில் விரைவாய் இயங்குமாற்றலை இக்கல்வி கொடுக்கலாம்.

3வது:-

ஆரிபுகள் என்ற ஆத்மீகத்துறையில் அனுபவம் பெற்ற மகான்கள் இறந்தகாலம், எதிர்காலம் என்பவை கிடையாதென்றும், உள்ளது நிகழ்காலம் மட்டுமே என்றும் மனிதன் காலத்தைப் பகுத்துக்கொள்வது மயக்கு(ஹுரூர்) என்றும் தீர்ப்புக்கட்டியுள்ளார்கள். இத்தீர்ப்பு உண்மையானது தானென்பதற்கு மஹ்கூல் மன்கூலான ஆதாரங்கள் பல உள. நான் விரிவை அஞ்சுவதால் அவற்றை இங்கு தரவில்லை.

இக்கல்வியின் உண்மை எப்போது அனுபவமாய் அமைகிறதோ அப்போதே பூரண சாந்தியை மனிதன் பெற்றுக்கொள்வான். இக்கல்விக்கு இம்மை மறுமையென்ற பேதம் தென்படாது. இறை ஐக்கியம், தஜல்லி என்றெல்லாம் கூறப்படுவது இக்கல்வியால் ஏற்படும் அனுபவத்தைச் சுட்டியதேயாகும். மனிதகுலத்தின் மூன்றுபிரிவாரும் காலத்தை முப்பிரிவாய் வகுத்துக்கொண்டது போல இடத்தையும் மூன்று பிரிவாய் வகுத்துக்கொண்டிருக் கிறார்கள். எப்படியென்றால்,

1வது வகுப்பார்:-
இடத்தை தன்மை, முன்னிலை, படர்க்கையென்று மூன்றாய் வகுத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். இது நூலறிவுக் கல்வியாகும்.

2வது வகுப்பார்:-
தன்மையும் முன்நிலையுமுண்டேயன்றிப் படர்க்கை இல்லையென்றும் அது கற்பனையால் உருவாவதென்றும் கூறுகிறார்கள். படர்க்கையென்பதும் முன்நிலையேதான் என்பது இன்னோரின் வாதம். இவர்களில் இன்னோர் கூட்டம் தன்மையும் படர்க்கையும் மட்டுமே உண்டென்று கூறுகிறார்கள். தன்மையல் லாதவை சமீபமானாலும் தூரமானாலும் அது படர்க்கை தானென்பது இவர்கள் வாதம். இவர்களிருகூட்டத்தாரும் ஒன்றையே வெவ்வேறு வகையில் விளக்குகிறார்கள் அவ்வளவுதான். இக்கல்வி சிந்தனையால் உருவாகுவதாகும்.

3வது வகுப்பார்:-
முன்னிலை, படர்க்கை கிடையாது. தன்மை மட்டுமே உண்டென்பது இவர்கள் வாதம். இவர்கள்தான் ஆரிபுகள். இக்கல்வி தௌஹீதென்ற ஞானவிளக்கத்தினால் பெறப்படுவதாகும்.

இக்கல்வி “றஹீமியத்” என்ற விசேடகிருபையினால் பெற்றுக்கொள்ளப்படுவதாகும்.

காலத்தையும் இடத்தையும் பலவகையாகப் பிரித்துக் கொண்ட மனிதனும், காலத்தை, இடத்தைப்பாகுபடுத்த எடுத்துக் கொண்ட அடிப்படைப் பொருட்களும் இருந்து கொண்டிருப்பது எங்கே? ஏதோ ஓர் பெருவெளியில் என்று கூறமுடியாது. ஏனெனில் இடம் என்பது சிருஷ்டிதான். இந்த இடம் (பிரபஞ்சம்) என்பது தோன்றுவதற்குமுன் காலம் என்பதிலேயே பெயரும் ஸூறத்துமற்றதாய் இருந்திருக்கும். இதன் சாரம் என்னவென்றால் சர்வபேரண்டமும் காலத்தில் பெயரற்றதாய், ஸூறத்தற்றதாய்க் காலமாகவே இருந்து, தோன்றி, வாழ்ந்து, முடிவில் காலத்திலேயே மறைந்து விடுகிறது என்பதே. எம்மிடத்தில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலக் கணிப்புகள் இருப்பினும் உண்மையில் அப்படி ஒன்றுமேயில்லை. நிகழ்காலமாய் இருக்கும் இன்று நாளைக்கு இறந்த காலமாயும் நாளை நிகழ்காலமாயும் அமைகிறது. எனவே உள்ளது நிகழ்காலம் மட்டும்தான். நாம் நிகழ்காலம் என்று கூறுவது எவ்விதக் கட்டுப்பாடுமற்ற ஏககாலமாகும்.

## 19

## ஹுரூர்(மாயை) என்பது என்ன?

இவ்விஷயத்தைத் தெளிவாய் விளங்கிக்கொள்ள ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு மாணவன் தன் ஆசியரிடம் மாயை, ஹுரூர் என்றால் என்னவென்று வினவினான். ஆசிரியர் அதைச் சொல்லினால் விளக்க முடியாதென்றும் தன்னுடன் வந்தால் அதை அனுபவத்தில் விளங்கிக்கொள்ளலா மென்றும் கூறினார். அதன்படி இருவரும் ஒரு காட்டுப்பாதை வழியே சென்றுகொண்டிருந்தனர். ஒரு குறிப்பிட்டதூரம் சென்றதும் ஆசிரியர்! "உனக்குத் தாகமிருப்பதாய்க் காணுகிறேன், கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொண்டு வா" என்று மாணவனைப் பணித்தார். மாணவன் ஆசிரியரைவிட்டுப் பிரிந்து காட்டில் நீர் தேடச் சென்றான். காட்டில் சிறிது தூரம் சென்றதும் ஒரு கிணறு தென்பட்டது. ஓர் அழகிய பெண் அக்கிணற்றில் நீர் அள்ளிக்கொண்டிருந்தாள். மாணவன் பெண்ணின் அழகில் மயங்கினான். தான் நீரள்ள வந்ததை மறந்தான். ஆசிரியரின் ஞாபகமும் அவனிடமிருக்கவில்லை. முடிவில் அப்பெண்ணைத் திருமணஞ்செய்து பல பிள்ளை களையும் பெற்றுக்கொண்டான். ஒரு நாள் தன் சொந்த ஊருக்கு வருவதற்காகக் காட்டுப்பாதை வழியே வந்துகொண்டிருந்தபோது தம் ஆசிரியர் இருந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஆசிரியர் நீரெங்கேயென்று விசாரித்தார். மாணவனுக்கு இப்போதுதான்

ஆசிரியரின் உத்தரவு நினைவுக்கு வந்தது. தான் மணம் முடித்ததும் பிள்ளைபெற்றதும் பல வருடங்கள் போலத் தென்பட்ட ஒரு கனவு என்பதை மாணவன் உணரலானான். ஆசிரியர் இருந்த இடத்தில் இருந்து கொண்டிருப்பதையும், தான் பல வருடங்கள் ஒரு மாயையில் (கனவுக்காட்சியில்) வீணாக்கிவிட்டதையும் அறிந்துகொண்டான். மாயைக்காட்சி (வாழ்வு) பல வருடங்கள்போல் தென்பட்டாலும் உண்மையில் இதே வேளைதான் என்பதையும் காலம் கட்டுப்பாட்டில் அமையாதென்பதையும் புரிந்துக்கொண்டான்.

இவ்வுதாரணத்தில் பல உண்மைகள் சயிக்கினை செய்யப்பட்டிருக்கின்றன. ஆசிரியரை றப்புடைய நிலையிலும், மாணவனை அப்துவுடைய நிலையிலும், நீரை அறிவு நிலையிலும், விவாக வாழ்வை உலகு நிலையிலும் கொண்டு நோக்குக.

**குர்ஆன்: 3:185**

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ ۗ وَإِنَّمَا تُوَفَّوْنَ أُجُورَكُمْ
يَوْمَ الْقِيٰمَةِ ۖ فَمَنْ زُحْزِحَ عَنِ النَّارِ وَأُدْخِلَ الْجَنَّةَ
فَقَدْ فَازَ ۗ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ إِلَّا مَتَاعُ الْغُرُورِ

**இவ்வுலக வாழ்க்கை (ஹுரூர்) மயக்கக்கூடிய இன்பத்தைதவிர வேறில்லை. (7:22,17:64 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்க.)**

இவ்வுலக வாழ்க்கையென்பது எது? அதுதான் நாம் வாழும் ஜடஉலகவாழ்வு என்பது. ஜடஉலகம் (ஹுரூர்) மயக்கு என்றால் நாம் ஜடம் என்று நம்பியிருப்பவையாவும் தோன்றிமறையும் வெறும் சூறத்துக்களேயன்றி இல்லை யென்பதை நாம் உணரவேண்டும்.

**குர்ஆன்: 10:45**

وَيَوْمَ يَحْشُرُهُمْ كَأَنْ لَّمْ يَلْبَثُوٓا اِلَّا سَاعَةً مِّنَ
النَّهَارِ يَتَعَارَفُوْنَ بَيْنَهُمْ ۭ قَدْ خَسِرَ الَّذِيْنَ كَذَّبُوْا
بِلِقَآءِ اللّٰهِ وَمَا كَانُوْا مُهْتَدِيْنَ

**அவர்களை ஒன்றுசேர்க்கும் நாளில் ஒரு பகலின் சொற்ப நேரந்தவிர நாங்கள் (உலகில்) தங்கவில்லை என்று அவர்கள் எண்ணுவதுடன் தங்களுக்குள் ஒருவரையொருவர் அறிந்தும் கொள்வார்கள். அல்லாஹ்வின் சந்திப்பைப் பொய்யாக்கியோர் நிச்சயமாக நஷ்டமடைந்தேயிருப்பார்கள். வழி காணாதவர்களாயும் இருப்பார்கள்.**

**குர்ஆன்: 36:52**

قَالُوْا يٰوَيْلَنَا مَنْۢ بَعَثَنَا مِنْ مَّرْقَدِنَا ۜ هٰذَا
مَا وَعَدَ الرَّحْمٰنُ وَصَدَقَ الْمُرْسَلُوْنَ

**அன்றி, எங்களுடைய துக்கமே! எங்களை நித்திரையிலிருந்து எழுப்பியவர் யார்? என்று கேட்பார்கள். ரஹ்மான் வாக்களித்ததும் நபிமார் கூறிவந்த உண்மையும் இதுதான். (என்றுகூறப்படும்)**

மேலே தந்த ஆயத்துக்களையும் உதாரணத்தையும் நோக்கினால் புலனாட்சியில் கட்டுண்டமனிதன் காலத்தையும், இடத்தையும் கட்டுப்படுத்திக் கொள்வதே “ஹுரூர்” மாயையென்பதற்கு அடிப்படையாய் அமைந்திருப்பதை நாம் உணரலாம்.

காலமென்பது என்றுமிருந்த ஏகமான (ஒரேயொரு) காலமாகவே இருக்கிறது. எனவே, சிருஷ்டியின் ஆரம்பமும், வாழ்வும், முடிவும், காலத்திலேயே தரிப்பட்டிருப்பதை நாம் மறுக்கமுடியாது. இதை மிகஇலகுவாக விளக்குவதே "கலிமத்துத்தையிபா" என்பது. ("லா இலாஹ இல்லல்லாஹ்") லா இலாஹ என்னும் போது சிருஷ்டி இல்லை (அப்துமில்லை றப்புமில்லை) என்றால், மிஞ்சியிருப்பது எது? அதுதான் அல்லாஹ் என்பது. இதன் மறுபெயர்தான் காலம் என்பது. (சமீபத்தில் ஆதாரங்கள் தரப்படும்; பொறுமை அடைக.)

**குர்ஆன்: 55:26,27**

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۝ وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ
ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ

**பூமியிலுள்ள யாவும் அழிந்துபோகும். மிக்கபெருமையும் கண்ணியமும் தங்கிய உமதிறைவன் (வஜ்ஹு) மட்டும் நிலைத்திருப்பான்.**

இந்த ஆயத்தில் றப்பின் "வஜ்ஹு" மட்டும் நிலைத்திருக்கும் என்பதில் பல நுட்பங்கள் தென்படுகின்றன. யாவும் அழிதல் என்பது உலகமுடிவு நாளைக்குறிப்பிடுகிறது. பூமியிலுள்ள யாவும் அழிந்து பூமி மட்டும் மிஞ்சுமென்றால், அப்பூமி இறைவனின் (வஜ்ஹு) முகமாய் இருக்கவேண்டும். வஜ்ஹு (முகம்) உள்ளவரை றப்பும் இருப்பான் என்பது தென்படுகிறது. முன் ஆயத்தில் (2:115ல்) அல்லாஹ்வுடையமுகம் என்றும் இவ்வாயத்தில் றப்புடையமுகம் என்றும் கூறப்பட்டிருப்பதை நோக்கினால் இதில் ஒரு ஞானரகசியம் மறைந்திருப்பதை நாமறியலாம். அவசியமானதை மட்டும் நோக்குவோம்.

இருப்பதாய்க் காட்சியளித்த யாவும் காலம் என்றும் தாத்து, வுஜூது, ஹக்கு என்றெல்லாம் கூறப்படுகிற அல்லாஹ்விலிருந்து தோன்றி, வாழ்ந்து, மறைகின்றன என்பது தென்படுகிறது. தோன்றி, இருந்து, அழிந்த சிருஷ்டிக்கு ஆதியாயும், அந்தமாயும், மறைந்ததாயும் இருந்தது அல்லாஹ் என்ற காலமேயாகும். காலமாயிருக்கும் அல்லாஹ்வின் "லாஹிர்"(தோற்றப்பாடு) என்ற ஸூறத்துத்தான் பிரபஞ்சம் (சிருஷ்டி) என்பது "முஹீத்", "லாஹிர்", "வஜ்ஹு" என்றசொற்களால் உணர்த்தப்பட்ட உண்மை தோற்றுவதும் தோற்றாததுமாய் இருந்து கொண்டிருப்பவன் அல்லாஹ் மட்டுமே என்பதாகும். நாம் கூறிய அல்லாஹ் என்ற காலத்திற்கு ஆதி, அந்தம், தோற்றம், மறைவு எதுவுமே இருக்கமுடியாது. அழிவும் கிடையாது. (வுஜூது என்பது இதுவே) எனவே, தோற்றுவதும் தோற்றாமையும், ஆதியும், அந்தமும் "றுபூபிய்யத்" என்ற இரண்டாவது (மர்த்தபா) நிலைமையைப் பொறுத்ததாகும். தாத்து, வுஜூது என்றிருந்த நிலைமையின் இரண்டாவது மர்த்தபாதான் றப்பு, அப்து என்பது. இதை மனிதனின் தெளிந்த அறிவு ஏற்றுக்கொள்ளும். எனவேதான், சிந்திக்கக் கூடிய மனிதர்களின் அறிவுக்கேற்ற சொற்கள் பாவிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குமேல் அறிவதானால் மனிதனின் அறிவு வட்டத்தைக் கடந்ததாகும். ஆதலால், காலத்தை காலந்தான் அறிந்து கொண்டிருக்கமுடியும்.

*ஹதீஸ்:-*

*(நீங்கள்) திராட்சைப்பழத்தைக் கண்ணியம் வாய்ந்ததென்று கூறாதீர்கள். ஐயையோ காலத்தின் கேடே என்றும் கூறாதீர்கள். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ்வே காலமாகும் என்று றஸூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்:- அபூஹுறைறா (றலி)**

**ஆதாரம்:- புஹாரி, முஸ்லிம், அபூதாவுத்**

*ஹதீஸ்:-*
*நீங்கள் காலத்தைத் திட்டவேண்டாம். திடனாகக் காலமாகிறது. அல்லாஹ்தானாகவே இருக்கிறது.*

**ஆதாரம்:- தாவீலாத்துன் நஜ்மியா, கலிமத்துல்ஹக்கி**

நாம் எடுத்துக்கொண்ட குர்ஆன், ஹதீஸுகளின்படியும் எமது யூகம் என்ற(மஹ்கூல்) அனுமான அறிவின்படியும் காலம் என்று கூறப்பட்டது அல்லாஹ் என்ற சொல்லால் சுட்டப்பட்ட வுஜூதேயாகும். எனவே, அந்தக்காலம் என்ற வுஜூதைவிட வேறெதுவும் அதனுடன் எப்போதும் இருக்கவே முடியாது. நித்திய ஜீவன்(ஹய்யுல்கையூம்) றூஹு என்பதெல்லாம் இதுவே. இது பகுபடாத ஏகமானது. இருப்பது இந்த வுஜூது மட்டுந்தான். அதன் நாமங்களின் தொகுப்பு, பிரபஞ்சமாகவும், பிரபஞ்சத்தில் வெளியாகும் சக்தி வுஜூதுடைய சக்தியாகவுமே இருக்கிறது. இதில் இணை, துணை,ஷிர்க் என்பது கிடைக்கவேகிடையாது. சிருஷ்டியான பிரபஞ்சம் அவனைவிட்டும் வேறானதென்று கொண்டால், நாம் ஷிர்க்கிலேயே ஊறிவிட்ட மூடஜாஹில்கள்(அறிவிலிகள்) என்பதே அதன் அர்த்தமாகும். பிரபஞ்சம் என்பது, அல்லது மனிதன் என்பவன் தோன்றமுன்பு காலமாகவே இருந்திருப்பான். வுஜூது என்ற காலம் தனக்கு(மனிதன்) இன்ஸான் என்ற நாமம் உண்டென்று எப்போது எடுத்துக் கொண்டதோ அப்போது அந்த நாமத்தின் இயல்பான ஸூறத்துத்தான் மனிதன் என்ற இன்ஸானாய் வெளியாயிருக்கிறது. நாமமற்றிருந்த நிலையை “அஹது” என்றும் மனித அறிவுக்கெட்டாமல் நாமத்தோடு சூட்சுமமாய் இருந்த நிலையை “உஹது” என்றும் ஸூறத்தாய் வெளியான நிலையை “வாஹித்” என்றும் கூறுகிறோம். இதை வேறோர் வகையாய்க் கூறினால், முதல் நிலையை (மர்த்தபாவை) வுஜூது அல்லது குன்ஹு அல்லது தாத்து என்றும், இரண்டாவது நிலையை தஐயுனுல்ஊலா அல்லது பொதுக் கற்பனை என்றும், மூன்றாவது நிலையை தஐயுனுஸ்ஸானி அல்லது விபரக்கற்பனை என்றும் கூறலாம்.

இந்த முப்பிரிவுகளும் காலத்தில் கட்டுண்ட எமதறிவில் வெவ்வேறுபோல் தென்பட்டாலும் உண்மையில் வேறுபடாத ஏகமாய் இருந்து கொண்டிருக்கும் வுஜூதுதான் காலமாகும். இதை விளக்கவே 112ம் ஸூறா அருளப்பட்டிருக்கிறது. அதில் பாவிக்கப்பட்ட "அஹதுன்" என்ற சொல்லை இப்போதாவது சிந்தனை செய்து தெளிவு பெறுங்கள், நாம் காணும் கனவில் வெளியான சிருஷ்டிகள் எம்மிலிருந்து தோன்றி, வாழ்ந்து, முடிவில் எம்மிலேயே மறைந்து விடுவது போல காலமென்ற வுஜூதிலிருந்தே பிரபஞ்சம் தோன்றி காலம் என்ற வுஜூதிலேயே வாழ்ந்து காலம் என்ற வுஜூதிலேயே மறைந்து விடுகிறது. உடல் தோன்றி, இருந்து, மறைவதற்கு உயிர் காரணமாய் இருந்ததுபோல தோன்றி, இருந்து, மறையும் சர்வ பிரபஞ்சத்துக்கும் முழுமுதற்காரணமாய் இருப்பது வுஜூது என்ற றூஹு மட்டுந்தான். கனவைக் கண்டுகொண்ட நான்தான் என் கனவில் வெளியான அத்தனை சிருஷ்டிக்கும் உயிராயிருந்து, அவற்றைத் தோற்றுவித்து அவற்றின் வாயிலாகவே நான், நான் என்ற தனித்தனியுணர்வோடு (கனவில்) வாழ்ந்தேன். அந்த நிலமை மாற்றமடைந்து விழிப்பைப் பெற்றபோது நான் என்ற உணர்வைத் தவிர வேறோர் நான் இருப்பதாய்க் காண்பதில்லை. கனவில் வெளியான ஜீவராசிகள் கொண்டிருந்த நான் என்ற உணர்வுக்குப் பெயர்தான் அனாநிய்யத் என்பது. இந்த அனாநிய்யத் எப்போது நீங்குமோ அப்போதே விழிப்புநிலை ஏற்பட்டுவிடும். நீண்டதொரு கனவுலகில் வாழ்கிற மனிதனை விழிப்படையச்செய்து அவனுடைய சொந்தநிலையில் அவனைத் தரிப்படுத்துவதே கலிமாவின் நோக்கமாகும். எனவே வெளியானான் என்றால் அவனையல்லாத வேறோர் இடத்தில் வெளியானான் என்று கருத்துக் கொள்வது வெறும் மருட்சியாகும். இறைவனே சர்வ பிரபஞ்சமென்ற லாஹிர் ஆக, அவனிடத்தில் அவனே அவனுக்காகக் காட்சியளிக்கிறான் என்பதை நாம் உறுதியாய் நம்புவதானால் குர்ஆனில் எமதறிவைக் குழப்பிக் கொண்டிருக்கிற இன்னும் சில வசனங்களை நாம் ஆராயவேண்டியது அவசியமாகும்.

# 20

# றஸூலின் கை அல்லாஹ்வின் கைதானா?

**குர்ஆன்: 48:10**

إِنَّ الَّذِينَ يُبَايِعُونَكَ إِنَّمَا يُبَايِعُونَ اللَّهَ ۚ يَدُ اللَّهِ فَوْقَ
أَيْدِيهِمْ ۚ فَمَن نَّكَثَ فَإِنَّمَا يَنكُثُ عَلَىٰ نَفْسِهِ ۖ وَمَنْ
أَوْفَىٰ بِمَا عَاهَدَ عَلَيْهُ اللَّهَ فَسَيُؤْتِيهِ أَجْرًا عَظِيمًا

**(நபியே!) நிச்சயமாக எவர்கள் உம்மிடம் வாக்குறுதி செய்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்விடமே வாக்குறுதி செய்கின்றனர். அவர்கள் கைமீது அல்லாஹ்வுடைய கைதான் இருக்கிறது. எவன் அதை முறித்துவிடுகிறானோ அவன் தனக்குக் கேடாகவே (அதனை) முறிக்கிறான். எவன் அல்லாஹ்விடம் செய்த அந்த வாக்குறுதியைப் பூர்த்தியாக்கி வைக்கிறானோ அவனுக்கு அல்லாஹ் மகத்தான கூலியை அதிசீக்கிரத்தில் கொடுப்பான்.**

இந்த ஆயத்தைத் தெளிந்த அறிவோடு ஆராய்ந்து முடிவுகட்டாத ஒருசிலர், றஸூலின் கையை அல்லாஹ்வுடைய கையென்று இலக்கிய வழக்கின்படி உருவகப்படுத்திக் கூறப்பட்டிருப்பதாக வியாக்கியானம் செய்துள்ளார்கள். இன்றும் உலமா என்ற போர்வையில் உள்ள பலர், விஷேசயமாய் அப்து வேறு றப்பு வேறு என்று கூறுகிற வஹ்ஹாபிகள்,

வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வுக்கு முகம் உண்டு. கையுண்டு என்று யாராவது கூறினால் அவன் காபீரே என்று எழுதியும் வைத்திருக்கிறார்கள். குர்ஆன் கூறுவதை ஒப்புக்கொள்ளாதவர்களே காபீர்கள் என்பதை நாம் உணரவேண்டும். இவ்வித மழுப்பல் வியாக்கியானங்கள் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறானவையாகும். கலிமாவின் உறுதியான (தலீல்களில்) ஆதாரங்களில் இந்த 48:10ம் ஆயத்தும் ஒன்றாகும். எனவே, இது முஹ்கமு வசனந்தான் என்பதை மறுக்க முடியாது. முஹ்கமு வசனங்கள் இபாரத், தலாலத், இஸாரத், இஹ்திலாவ் (சொல், கருத்து, சயிக்கினை, உவமானம்) ஆகிய நான்கு பிரமாணங்களின் படியும் ஒரேயொரு பொருளை மட்டும் கொடுப்பவையாகும். இவ்வசனங்களை உருவகப்படுத்தும் வசனங்களாய் எடுத்துக்கொள்வது குர்ஆனுக்கு முரணாகும். ஆதலால் இவ்வாயத்தில் குறிப்பிட்டபடி "அல்லாஹ்வுடைய கை தான் இருக்கிறது" என்ற வசனத்தை எவ்வித வலிந்துரையும் கொள்ளாமல் வைத்துக்கொண்டே ஆராய்வோம்.

நாம் முன்பு காட்டிய ஆயத்துக்கள் ஹதீஸுகளின்படி காலந்தான் அல்லாஹ் என்பதை அறிந்து கொண்டோம். காலமென்ற அல்லாஹ்வின் தோற்றப்பாடே பிரபஞ்சமென்பதையும் அறிந்து கொண்டோம். பிரபஞ்சத்தில் வெளியாகும் சக்தி அல்லாஹ்வுடையது என்பதை 2:165, 2:224, 10:31 போன்ற ஆயத்துக்கள் நிரூபிக்கின்றன. அப்படியானால் பிரபஞ்சத்தில் தோன்றும் ஒவ்வொரு பொருளும் இறைவனின் ஸூறத்துத்தான் என்பதை நாம் மறுக்கமுடியாது. இது உண்மைதான் என்றால் முஹம்மது(ஸல்) அவர்களுடைய ஸூறத்து யாருடையது? அல்லாஹ்வுடையதுதான். முஹம்மது என்ற கௌனியான நாமமுடைய ஸூறத்தான அவ்வுடலின் கை அல்லாஹ்வின் கைதான் என்றால், உடலும் இறைவனுடைய ஸூறத்தேதான் என்பதை நாம் ஏன் மறுக்க வேண்டும்? (றஸூலின்) அப்துவான முஹம்மது(ஸல்) என்ற மனிதரின் கை அல்லது உடல் அல்லாஹ்வின் வேறல்ல என்றால் சர்வ பிரபஞ்சமென்ற ஸூறத்து

யாருடையது? அல்லாஹ்வுடையதுதான். லாஹிர் என்ற வெளிப்படைத் தோற்றங்கள் யாவும் அல்லாஹ்வுடையதுதான் என்றால் பாத்தின் என்ற சூட்சும உலகும் அல்லாஹ்வுடையது தான். இவ்விரண்டும் அல்லாஹ்வுடையதுதான் என்றால் நாமறியாத மர்த்தபாக்களும் அல்லாஹ்வுடையவைதான். இபாரத், தலாலத், இஸாரத், இஹ்திலாவ் ஆகிய நான்கு பிரமாணங்களின் படியும் அந்த வேதவசனம் அல்லாஹ்வையன்றி வேறெதுவும் அவனுடன் இல்லவே இல்லை என்று கலிமா உணர்த்தும் கருத்தான தௌஹீதைத்தான் நிரூபிக்கிறது.

என்னுடலையும் (லாஹிரையும்), என்னுயிரையும் (பாத்தினையும்) வெவ்வேறு என்று காணாமலே நான் நம்பியிருக்கிறேன். என் கை என்னுடைய ஓர் அங்கம்தான். என்னுடலிலுள்ள ஒவ்வோர் அணுவும் என் அங்கங்கள்தான். என்னுடலிலுள்ள எந்த ஓர் அணுவின் ஸூறத்தும் என்னுடைய வெளிப்பாடுதான். என்னுடலிலுள்ள ஒவ்வோர் அணுவிலிருந்தும் வெளியாகும் சக்தி என்னுடையதுதான். சக்தியை நல்லதாய், தீயதாய்ப் பிரித்துக் கொள்வது மனிதனுடைய அதாலத் என்ற நீதிநிர்வாகத்தைச் சேர்ந்த விஷயமாகும். நாமிங்கே பேசுவது தௌஹீதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் கூறிய முன்மாதிரியை ஆதாரமாய்க் கொண்டு சிந்தித்தால் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மையை எம்மால் மறுக்கமுடியாது. எல்லோரும் தெளிவாய் விளங்கக் கூடிய ஒரே கருத்துடைய பாஷைவழக்குச் சொற்களைக் கொண்டே கலிமாவின் மூலம் (லாஹிறாயும், பாத்தினாயும்) சிருஷ்டி, சிருஷ்டிகர்த்தா (அப்து, றப்பு) என்ற இரண்டு மர்த்தபாக்களும் அல்லாஹ்வாகிய என்னுடையதே என்றும் என்னுடன் ஜோடியாய், சமமாய், ஒப்பாய், இணையாய், நிகராய் ஒன்றுமே இல்லவே இல்லை என்று இறைவன் வெளிப்படையாய்த்தான் கூறினான். இதை நிரூபணம்செய்து விளக்குவதற்காகவே கலிமாவின் தலீல்களை அருளியிரு க்கிறான். எனவே கலிமாவுக்கு முரணான எந்தவொரு வசனமும்

குர்ஆனில் இடம்பெறமுடியாது. முரணிருப்பதாய்க் காண்பது மருட்சியாகும். இவ்விஷயம் மனிதர்கள் யாவருடைய அறிவிலும் தெளிவாய்ப் பிடிபட வேண்டுமென்பதற்காக இன்னும் சிறிது கூறுகிறேன்.

நாம் காட்டிய 48:10ம் இலக்க ஆயத்தை மீண்டும் ஒரு முறை நோக்குங்கள். அதில், றஸூலிடம் (உம்மிடம்) வாக்குறுதி செய்பவர்கள் அல்லாஹ்விடமே வாக்குறுதி செய்கிறார்கள் என்ற வசனம், அல்லாஹ்வே றஸூல் என்று கொள்வதற்குப் போதுமான ஆதாரமாகும். அல்லாஹ்வுடைய றஸூல் என்பதிலுள்ள “உடைய” என்றசொல் கலிமாவின் ஆதாரப்படி தற்கிழமைப் பொருளில் கொள்ளப்பட்டால் என்னுடைய உயிர் நானாகவே இருப்பதுபோல அல்லாஹ்வுடைய றஸூல் அல்லாஹ்வாகவே இருக்கிறார் என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது. “உடைய” என்றசொல்லைப் பிறிதின் கிழமைப்பொருளில் கொண்டிருந்தவன் அபூஜஹ்ல். அவனை எதிர்த்து தற்கிழமைப் பொருளில் உறுதி செய்தவர்கள் றஸூல்(ஸல்) அவர்கள். இப்போது நாம் றஸூலின் பாதையில் போகவேண்டியிருப்பதை நாம் மறக்கக் கூடாது. எனவே, இதற்குக் கீழ் சொல்லப்பட்ட வசனம் அவசியமில்லை. அப்பிடியிருந்தும் இறைவன் கூறியுள்ளான். இதில் ஓர் உண்மையுண்டு. இவ்வளவு தெளிவாய் விளக்கம் பெற்றும் மனிதன் இன்னும் சந்தேகத்திலிருந்தும் விடுபடமாட்டான் என்பதை இறைவன் அறிந்தவனாய் இருந்தமையினால் அச்சந்தேகத்தை நீக்கி கலிமாவை உறுதிப்படுத்துவதற்காகவே அவர்களுடைய கை மீது அல்லாஹ்வுடைய கைதான் இருக்கிறதென்று கூறியிருக்கிறான். இப்படிக் கூறியிருப்பதில் மிகப்பெரியதோர் உண்மை (தௌஹீது) உணர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மக்களில் மிகப்பலர் அறிந்துகொள்ளவில்லை.

மக்கள், தேவர், நரகர் உயர்திணை என்றும் இவர்களுக்கு முரணான மற்றும் சிருஷ்டிப்பொருட்கள் யாவும்

அஃறிணை என்றும் (இயங்குபவை, இயங்காதவை) சரம், அசரம் என்ற சிருஷ்டி இருவகை என்றும் நாம் இலக்கணம் மூலம் அறிந்திருக்கிறோம். மேலும் உயர்திணையான மனிதன் அவனுடையகையை இழந்துவிட்டாலும் அவன் உயர்திணை யைச் சேர்ந்தவன்தான். ஆனால் அவனிடமிருந்த கை எப்போது அவனைவிட்டு நீங்கியதோ அப்போதே அந்தக்கை அஃறிணைப் பொருளாகிவிட்டது. இப்போது றஸூல்(ஸல்) அவர்களுடைய கை என்பதிலும், அல்லாஹ்வுடைய கை என்பதிலும் "உடைய" என்றசொல் தற்கிழமைப் பொருளில்தான் பாவிக்கப்பட்டிருக்கிறது. இது குர்ஆனின் வாதம். "உடைய" என்றசொல்லைத் பிறிதின்கிழமைப்பொருளில் கொண்டிருந்தது அபூஜஹ்லான முஷ்ரீக்கின் வாதம். இதில் முஷ்ரீக்கை இறைவன் தோற்கடிக்கிறான். எப்படியென்றால், றஸூலின் உடலைக்கண்டவர் அல்லது சத்தியம் செய்தவர் என்ற வசனத்தில் கை என்று மட்டுமே கூறியிருக்கிறான். கை என்று உடலின் ஓர் அங்கத்தை மட்டுமே கூறியிருக்கிறான். கை ஒரு தனி அங்கத்தைக் குறிப்பிட்டால் அது ஓர் அஃறிணை என்பது அதன் அர்த்தம்.

முஷ்ரீக்குகள், ஒவ்வொரு பொருளும் தனித்தனி வுஜூதுகள் என்றும் அவை அல்லாஹ் அல்லாதவை என்றும் நம்பியிருந்தவர்கள். தாங்கள் ஸுஜூது செய்து கொண்டிருந்த இலாஹுகள் அஃறிணைப் பொருட்கள் என்றும் அல்லாஹ்வும் மலக்குகளும் நபிமாருடைய ஆவிகளும் உயர்திணையென்றும் நம்பியிருந்தவர்கள். இறைவனை அரூபி என்றே நம்பியிருந் தவர்கள். இவர்களுடைய மயக்கை நீக்கித் தெளிவூட்டவே "கை" என்ற சொல்லை இறைவன் கையாண்டிருக்கிறான். எப்படியென்றால் அல்லாஹ் அரூபியானவன் என்றால் அவனுடைய கையும் காணமுடியாத அரூபமாகவே இருக்கும். றஸூல்(ஸல்) அவர்களின் கை முப்பரிமாணமுடைய ஜடப் பொருள்தான். றஸூலின் கையில் சத்தியஞ் செய்தவர்களின்

கைகளும் பௌதீக(ஜட)க்கைகளே. ஜடக்கையில் ஜடமல்லாத இறைவனின் கை படமுடியாதே! பட்டாலும் அதைக் கண்ணால் காணமுடியாதே! அதை உணரவும் முடியாதே! றஸுலின் கையில் சத்தியஞ் செய்தோர் றஸுலையும், றஸுலின் கையில் சத்தியஞ் செய்தோரை றஸுலும் நேருக்கு நேர் கண்டுதான் சத்தியஞ் செய்திருக்கிறார்கள். றஸுலின் கை அஃறிணைப் பொருளான ஜடமாயிருந்தும் அது அல்லாஹ்வுடைய கை தான் என்று கூறப்படுவதால், அஃறிணைப் பொருட்களான பிற பொருட்களும் அல்லாஹ்வின் வேறானவையல்ல என்று உணர்த்தப்படுகிறது. எனவே உயர்திணை, அஃறிணை (ஜடம், ஸ்த்தூலம், பௌதீகம்) போன்றயாவும் இறைவனின் லாஹிரான தோற்றப்பாடே என்பது தெளிவாக்கப்படுகிறது. ஏனெனில் சிருஷ்டி என்றவகையில் ஒன்றுக்கொன்று முரண்போல் தென்பட்டாலும் யாவுக்கும் வுஜூது ஏகமானது(ஒன்றே ஒன்று) தான்.

உயிர் என்ற உயர்திணை, உடல் என்ற அஃறிணைப் பொருளோடு வேறுபாடற்ற ஏகமாய்க் கொண்டு வாழ்வதே சிருஷ்டி என்பது. உயர்திணையான உயிர், தன் ஆட்சியை நிறுத்திக் கொண்டால் அவ்வுடல்(மையித்) அஃறிணையான பொருள்தான். இங்கு நாம் கூறிய விஷயத்தை முன்மாதிரியாய் எடுத்துக்கொண்டு நோக்கினால் உயர்திணையான இறைவனும் அஃறிணையான சிருஷ்டியும் (பாதினும், லாஹிறும்) ஒன்றை விட்டொன்று வேறுபடாத, பிரிபடமுடியாத ஏகமாகவே இருந்து கொண்டிருக்கிறதென்பதை நாம் மறுக்கமுடியாது. சர்வ சிருஷ்டிகளும் இறைவனுடைய அடிமைகளேயென்பது குர்ஆனின் வாதம். சிருஷ்டி(அப்து) என்பதைக் கண்ணாடியில் தென்படும் ஸுறத்தாகவும், கண்ணாடியென்பதை நூர் என்ற அறிவாகவும் நூருக்குரிமையாளனான, நானென்றுணரும் உயிரை (றூஹை)க் காண்பவனாகவும் அறிபவனாகவும் எடுத்துக் கொண்டு சிந்தனை செய்தால் இவ்விஷயம் அறிவில் இலகுவாய்ப் பிடிபடலாம். பௌதீகம், ஸுட்சுமம் யாவும் இறைவனைவிட்டும்

வெவ்வேறானவையல்ல என்ற உண்மை எப்போது எம்மறிவில் அமைகிறதோ அப்போது இறைவன் பௌதீக சூட்சும உலகுக்கப்பால் படர்க்கையில் இருக்கிறானென்ற விபரீத புத்தியும் (திரையும்) நீங்கிவிடும். சர்வ உலகும் அவனுடைய லாஹிறான, பாதினான தோற்றப்பாடுதானென்றால் அத்தோற்றப்பாட்டுடன் வேறுபாடற்ற ஏகனாய் அவன் மட்டுமே இருந்து கொண்டிருக்கிறானென்பதே உண்மையாகும். நீங்கள் எந்த நிலையிலிருப்பினும் அவன் உங்களுடன் இருக்கிறான். என்றறிவிக்கும் 8:12, 9:40 போன்ற பல ஆயத்துக்களும் ஹதீஸுகளும் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகின்றன. உடனிருக்கும் அல்லாஹ்வை மறந்துவிட்டு அல்லாஹ்வைத் தேடிப் புதுடில்லிக்கும் பங்களாதேஷத்துக்கும் நாம் செல்கிறோமென்றால் எமதறிவை எப்படி எடைபோடுவது?

உயர்திணைப் பொருளான இறைவன் அஃறிணைப் பொருட்களான ஜடஉலகை விட்டும் வேறாய்ப் படர்க்கையில் இருக்கிறானென்று நம்பியிருந்த முஸ்ரீக்குகளின் ஷிர்க்கை அவர்களுக்கெடுத்துக்காட்டி உண்மையான ஈமானை (தௌஹீதை) உறுதிப்படுத்தவே இவ்வகை ஆயத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வாயத்தில் (48:10) பாவிக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றும் முஹ்கமுவாயிருந்தும் மனிதன் சந்தேகம் நீங்கித் தெளிவாய் உணரவேண்டுமென்பதற்காகப் பாஷைவழக்கில் கையாளப்படும் வழக்குச் சொற்களைக் கொண்டே இறைவன் தௌஹீதை உறுதி செய்துள்ளான்.

**குர்ஆன்: 33:15**

وَلَقَدْ كَانُوا عَاهَدُوا اللَّهَ مِن قَبْلُ لَا يُوَلُّونَ
الْأَدْبَارَ وَكَانَ عَهْدُ اللَّهِ مَسْئُولًا

**அவர்கள் புறங்காட்டி ஓடுவதில்லையென்று இதற்கு முன்னர் அல்லாஹ் விடத்தில் நிச்சயமாக வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியைப்பற்றி கேட்கப்படுவார்கள்.**

யுத்தத்தின்போது தாங்கள் புறங்காட்டி ஓடமாட்டோமென்று ஸஹாபாக்கள் றசூல்(ஸல்) அவர்களிடம்தான் வாக்குறுதி செய்திருக்கிறார்கள். அந்த றசூல்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வை விட்டும் வேறானவர்களென்றிருந்தால் இவ்வாயத்துக் கூறுவது உண்மையென்றாகாது. றசூல் என்று கூறப்படுவது அல்லாஹ்தானென்றில்லா விட்டால், அல்லாவிடமே வாக்குறுதி செய்தார்களென்பது எவ்வகையிலும் ஒத்துவரவே வராது என்பதை ஊன்றி உணர்க. மேலே காட்டிய ஆயத்தில் றசூல் என்ற சொல்லே பாவிக்கப்படாமல் அல்லாஹ் என்ற சொல்லே பாவிக்கப்பட்டிருப்பதையும் 48:10 இலக்க ஆயத்தில் அல்லாஹ்வையும் றசூலையும் இணைத்துக் கூறப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொண்டு நோக்குக. “மன்றஆனி பகத்ற அல்ஹக்” என்னைக் கண்டவன் நிச்சயமாக ஹக்கைக்கண்டான் என்று ஓர் ஹதீஸ் காணப்படுகிறது. நாம் முன்காட்டிய விபரங்களுக்கு இந்த ஹதீஸ் ஆதாரமளிப்பதை நோக்குக. இந்த ஹதீஸில் கூறபட்ட“ஹக்” என்ற சொல் அல்லாஹவின் திருநாமங்களில் ஒன்று என்பதையும் இந்த ஹக் என்ற நாமத்துக்கு எதிரிடை கிடையாதென்பதையும் மறக்க வேண்டாம்.

# 21

# ஜடம் என்றால் என்ன?

ஜடம்,(பௌதீகம், ஸ்த்தூலம்) என்பவை எவை? தன்மை, முன்நிலை, படர்க்கை என்பவை எவை? என்பதைச் சிறிது சிந்தனைக்கெடுப்போம். நீளம், கனம், அகலம், ஆகிய முப்பண்புகளையுடையது எதுவோ அதையே நாம் ஜடம், பௌதீகம், ஸ்த்தூலம் என்று கூறுகிறோம். இந்த ஜடத்தை எமது எல்லாப் புலனுறுப்புக்கள் வாயிலாகவும் எம்மாலறிய முடியும். திண்மம், திரவம், வாயு ஆகிய மூன்றும் ஜடத்தின் மூன்று நிலைகளே (மர்த்தபாக்களே). இறைவன் ஜடமல்லாதவன் என்றோர் நம்பிக்கை உலகமக்கள் எல்லோரிடத்திலுமுண்டு. இந்த நம்பிக்கை எமது முன்னோரால் ஆதாரபூர்வமாய் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஆரிபீன்களான நல்லடியார்களின் ஆதாரத்தோடுள்ள இக்கூற்றை இன்றுள்ள மிகப்பெரும்பாலான மக்கள் தவறாக விளங்கிக்கொண்டு, தவறான விசுவாசத்திலேயே உறுதியடைந்து கொண்டுமிருக்கிறார்கள் எப்படியென்றால்,

ஜடம் என்பது அல்லாஹ்வைவிட்டும் வேறானதாய், அல்லாஹ் அல்லாததாய் இருப்பதால் ஜடத்தை அல்லாஹ் என்று கூறக்கூடாதென்பது பாமரமனிதனின் விளக்கமாகும். முஸ்ரீக்குகளின் கொள்கை இதுவே. ஜடம் என்பது வெறும் தோற்றப்பாடாய்ப் பொருளல்லாத ஹுரூராய்(மயக்காய்) இருப்பதால் அல்லாஹ்வை ஜடம் என்று கூறக்கூடாதென்பது ஆரிபீன்களின் வாதமாகும். ஜடம் என்பதொன்றில்லையென்பதே இவர்களின் முடிவு. இந்த ஆரிபீன்கள் கூறும் ஆதாரத்தோடுள்ள தீர்ப்பையே இன்றைய விஞ்ஞானஉலகம் ஏற்றுக்

கொண்டிருக்கிறது. எனினும் ஆரிபீன்களுக்கும் விஞ்ஞானி களுக்குமிடையில் ஓர் வேற்றுமை தென்படுகிறது. விஞ்ஞானம் ''ம.்.கூல்'' என்ற யுக்தியை மட்டுமே ஆதாரமாய்க் கொண்டு ள்ளது. ஆரிபீன்களோ ''ம.்.கூல்'' என்ற யுக்தியையும் "மன்கூல்" என்ற வேதசுருதிகளையும் ஆதாரங்களாய் எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். மேலும் மஹ்கூல் மன்கூல்களின்படி தன்மை மட்டுமே உண்டென்று ஆரிபீன்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் விஞ்ஞானம் தன்மை மட்டுமே உண்டென்பதை இதுவரை அறிந்துகொண்டிருப்பதாய்த் தென்படவில்லை. யுக்தியை மட்டும் ஆதாரமாய்க்கொண்ட விஞ்ஞானம் சுருதியையும் ஆதாரமாய் எடுத்துக்கொண்டால் நிச்சயமாக அத்தனை விஞ்ஞானிகளும் நல்லடியார்களாகவே மாறிவிடுவார்களென்பது எனது நம்பிக்கை.

மனிதராகிய நாம் குறிப்பிடப்பட்ட ஓரளவு தத்துவ முடைய இருகண்களைப் பெற்றிருப்பதால் முப்பரிமாணமுள்ள ஜடம் இருப்பதாய் அறிகிறோம். எமக்கு ஒரேயோர் கண்மட்டும் தரப்பட்டிருந்தால் எமது கண்ணுக்கு முப்பரிமாணமுடைய ஜடம் தெளிவாய் அமையாது. ஒவ்வோரினச் சிருஷ்டிக்கும் ஒவ்வோர் வகையான கட்டுப்பாட்டுடன் புலனுறுப்புக்கள் அமைந்திருப்பதால் சிலபிராணிகள் நிறக்குருடு உடையனவாய் இருக்கின்றன. சில பிராணிகள் கேட்கும் ஒலியை எம்செவிகளால் கேட்கமுடியாது. சிலபிராணிகள் ஜின், மலக்குகள் போன்ற சூட்சும சிருஷ்டிகளைக்காணும் ஆற்றலுடையன. எம்மால் அவற்றைக் காணமுடிவதில்லை. எனவே ஒவ்வோர் வகைச்சிருஷ்டியும் தாம் வாழும் உலகை அவ்வவற்றின் இயற்கையமைப்புக் கேற்றபடியே காணுகின்றன, அனுபவிக்கின்றன.

முப்பரிமாணத்தில் கட்டுண்ட ஜடப்பொருட்களையே நாம் சிருஷ்டிகளாய்க் காணுகின்றோம். இவை உண்மைப் பொருட்கள்போல் எமக்குத் தென்படினும், அவை வெறும் தோற்றப்பாடுகளேயன்றி உண்மையான பொருட்களேயல்ல.

பௌதீகக் கண்ணாடியில் நாம் பார்க்கும் எம்முடைய ஸூறத் (தோற்றம்) முப்பரிமாணமுடையதாய்த்தான் காட்சியளிக்கிறது. அது உண்மையில் முப்பரிமாணமுடையதுமல்ல, ஜடமுமல்ல. அப்படியானால் சூட்சுமத்திலும் சூட்சுமமான, ஜடமல்லாத ''நூர்'' என்ற அறிவுக் கண்ணாடியில் முப்பரிமாண முடையதாய்க் காட்சியளிக்கும் சர்வ பிரபஞ்சமும் ஜடம்தான், பௌதீகம்தானென்று நாம் நம்புவது சரியாகுமா? சரியாகாது. எமது புலன்களில் கட்டுண்டு மயங்கிய எமது அறிவு ஜடம் இருப்பதாய்க் காண்பது, அறிவது ஹுரூர், மயக்கு அல்லது மாயையாகும். நாம் காணும் பிரபஞ்சங்கள் யாவும், எமது பௌதீகக் கண்ணாடியில் கண்ட முப்பரிமாணம் கொண்ட ஜடத்தைப் போன்ற வெறும் தோற்றப்பாடான ஸூறத்துக்க ளேயன்றி அச்சூறத்து வுஜூது என்ற ஆதாரப்பொருளல்ல. எனவே ஜடம் என்பது எமது புலனறிவால் ஏற்பட்ட மருட்சியேயன்றி உண்மையில் ஜடம் என்றோ பௌதீகமென்றோ ஒரு பொருள் இல்லவேயில்லை. அளப்பரிய ஓர்சக்தியின் தோற்றப்பாடே பிரபஞ்சம் (சிருஷ்டி) என்பதையும், தோற்றப்பாடு சக்தியை விட்டும் வேறானதல்ல என்பதையும் இன்றைய விஞ்ஞானம்கூட நிரூபணம் செய்திருக்கிறது.

புலனறிவு அடங்கும்போது, நானிருக்கிறேனென்று உணரும் ஆத்துமாவிடத்தில் ஜடம் என்பது இல்லாமலாகிவிடும். ஓர் நெருப்புப்பந்தை கயிற்றில் கட்டிச் சுழற்றினால் ஓர் நெருப்புவளையம் தென்படுவதை நாம் காணுகிறோம். உள்ளது நெருப்புப்பந்து மட்டுமேயன்றி நெருப்புவளையம் இல்லவே இல்லை. நாம் காணும் நெருப்புவளையத்தை ஹுரூர் அல்லது மாயை யென்று கூறலாம். புலனாட்சியென்ற பேத புத்தியில் மூழ்கிய மனிதன் இனம் காணமுடியாத ஏதோ ஓர் பூரணப் பொருளின் தோற்றப்பாடான பற்பல ஸூறத்துக்களை ஜடம் என்று நம்பியிருந்தாலும் உண்மையாகவே ஜடம் என்பதொன்று கிடைக்கவே கிடையாது.

நாம் ஜடமாய்க்கண்ட தோற்றப்பாடான ஸுறத்து அல்லாஹ்வைவிட்டும் வேறான தனிப்பொருளல்ல என்பதைத் தெளிவாய் உணர்த்துவதற்காகவே 48:10 ம் ஆயத்தில் றசூலின் கையை இறைவன் தனது கையென்று கூறியிருக்கிறான். இவ்வுண்மையை இருட்டடிப்புச் செய்யவேண்டிய அவசியமில்லை. விஷயம் இப்படியிருக்கும் போதும் தொட்டுப் பார்த்தேயன்றித் தாத்தைக்காண முடியாதென்று கூறும் கூற்று கஞ்சா, அபின் போன்ற போதைகளில் மூழ்கியோரின் கூற்றாகும்.

சிருஷ்டியென்பது (அணுவாயிருந்தாலும் இமய மலையாய் இருந்தாலும்) பிரபஞ்சத்தை ஒவ்வோர் வகையாய்க் கண்டு அனுபவித்தாலும் கூட அவை ஒவ்வொன்றும் நான் நான் என்றுணரும் தம்மைத்தாமே மத்திபமாய்(சென்டராய்)க் கொண்டே வாழ்கின்றன, அறிகின்றன, அனுபவிக்கின்றன. ஒவ்வோர் சிருஷ்டியும் எடுத்துக்கொண்ட பேரண்டத்தின் மத்திபம் நானிருக்கிறேன் என்றுணரும் தன்னுணர்வேயாகும். பிரபஞ் சத்திலுள்ள சிருஷ்டிகளின் வகையைத், தொகையை மனித அறிவினால் எத்திக்கொள்ள முடியாது. சர்வசிருஷ்டிகளும் அவ்வவற்றின் இயல்புக்கேற்பத் தம்மைத்தாமே மையமாய் வைத்துக் கொண்டே வாழ்கின்றன என்பதையும், சரம், அசரம் யாவும் றூஹுடையவையாய் இருந்து தஸ்பீஹு செய்து கொண்டும் (ஸலாத்தில்) வணக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ளன என்பதையும் அறிவுள்ள மனிதனால் மறுக்க முடியாது. குர்ஆன் ஹதீஸுகளில் இதற்கு ஆதாரமுண்டு. நான் விரிவை அஞ்சுவதால் அவற்றை இங்குகூறவில்லை. மேலும் சரம், அசரம் யாவும் உயிர், பேச்சுப் போன்ற பிறபண்புகளையும் பெற்றுக்கொண்டுதான் வாழ்கின்றன. மலை, பேரீச்சை, மரக்கட்டை, ஒட்டகை, பாம்பு போன்றவை றசூல்(ஸல்) அவர்களுடனும் வேறு பல நபிமார்களுடனும் பேசியிருப்பதை நாமறிந்திருக்கிறோம். மூஸா(அலை) அவர்களுடன் பேசியது மரம்தானே! ஒவ்வோர் அணுவும்கூட அதனதன் இயல்புக்

கேற்றபடி இறைவனைத் துதிசெய்துகொண்டேயிருக்கின்றன என்பதை சாதாரணமனிதன் அறிந்துகொள்ளாவிடினும் நல்லடியார்கள் இதை அறிந்துகொண்டுதானிருக்கிறார்கள். சிருஷ்டியாகியயாவும் வெறும் ஸூறத்துக்களேயென்றால் இந்த ஸூறத்துக்களிலிருந்து தனித்தனியே நான் நான் என்றுணரும் தன்னுணர்வு ஸூறத்தைப் பெற்று ஏகமாயிருந்து கொண்டிருக்கும் ஒருவனுக்கே சொந்தமானதாயிருக்கும். ஆயினும் அவ்வுணர்வு ஒவ்வோர் சிருஷ்டிக்கும் வெவ்வேறாய்த் தனித்தனியாய் அமைந்திருப்பதை நாம் பிரத்தியட்சமாய் அறிகிறோம். ஆனால் அனுமானித்தறியும் அறிஞர்களிடத்தில் பல நான்கள் இருக்க முடியாதென்பது தென்படுகிறது. பல நான்கள் இருந்தால் தாக்கமேற்படும். எப்போதும் நான்வேறு மற்றவை வேறு என்று நம்பியுள்ள சிருஷ்டியிடத்தில்தான் தாக்கம் ஏற்படுகிறது. இது எமது அன்றாடவாழ்க்கை அனுபவம்.

# 22

## கற்பனை இலாஹு எது ?

**குர்ஆன்: 21:22**

لَوْ كَانَ فِيهِمَا آلِهَةٌ إِلَّا اللَّهُ لَفَسَدَتَا ۚ فَسُبْحَانَ
اللَّهِ رَبِّ الْعَرْشِ عَمَّا يَصِفُونَ ﴿٢٢﴾

**வானம் பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத இலாஹு கள்(சிருஷ்டிகள்) இருந்தால் அவ்விரண்டும் கேட்டையடைந்திருக்கும்.**

இருந்து கொண்டிருக்கிற(மவுஜூது) சிருஷ்டியான பிரபஞ்சம் அல்லாஹ்வின் வேறான தனி வுஜூதுவாயிருந் தால்தான் வானம் பூமியாவும் அழிந்துவிடும் தாக்கமேற்படும். சுருக்கமாய்க் கூறினால் காலத்தால் இடத்தால் பகுக்கப்பட்டுள்ள ஒவ்வோர் சிருஷ்டியும் ஒன்றையொன்று தாக்கவேசெய்யும். சிருஷ்டி ஒன்றையொன்று தாக்குவதற்குக் காரணம் ஒவ்வோர் சிருஷ்டியும் நான் நானென்ற தனித்தனி உணர்வைப் பெற்றிருப்பதே. இவ்வுணர்வு பொய்யாய் வெறும் கற்பனையாய் இருப்பதால்தான் மோதல் தொடர்கிறது. இவ்வுணர்வே சராசரங்களான சர்வ பிரபஞ்சத்திலும் இயக்கம் நடைபெறு வதற்கு ஆதாரமாய் அமைந்திருக்கிறது, இதில் அணுக்கூட அடங்கும்.

சர்வபேரண்டத்திலுமுள்ள சர்வசிருஷ்டிகளிடத்திலும் இடம்பெற்றுள்ள சகலதன்னுணர்வும் என்னுடையதேயென்று நம்பியுள்ள மூமினான இறைவனுடைய தன்னுணர்வுக்கு எதிரிடைகிடையாது. தாக்கமோ மோதலோ நிகழாது. எனவேதான் நான் என்றுணரும் இறைவன் அழிவற்ற நித்ய ஜீவனுடையவனாயிருக்கிறான். அல்லாஹ்வுடன் அவனல்லாத சிருஷ்டி கிடையாதென்பதும் அவனே இலாஹு என்ற ஸூறத்திலிருந்து அவனுடைய நாட்டத்தை நடாத்துகிறான் என்பதும் குர்ஆன் ஹதீஸுகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹ் வேறு, நான் வேறு என்று நம்பும் நம்பிக்கையே ஷிர்க்கின் ஆணிவேராயிருக்கிறது. என்பதை விளங்கித் தெளிவது அவசியம்.

நாம் காட்டிய 21:22ம் ஆயத்தில் அல்லாஹ் அல்லாத இலாஹு இல்லையென்று வலியுறுத்தப்பட்டிருப்பதையும் முஸ்ரிக்கீன்கள் இலாஹுவாய் நம்பியிருந்தவை எவை என்பதையும் பல கோணங்களில் ஆராய்ந்து தெளிவு பெறுக. சிருஷ்டியென்ற ஸூறத்தில் அவன் மட்டுமே இருக்கிறானென்றால் அவனுடைய நாட்டமே பிரபஞ்சத்தில் நடைபெறுகிறதென்றால் ஏவல், விலக்கல், கேள்விகணக்கெல்லாம் அவசியமல்லவே யென்றோர் கேள்வி பிறக்கிறது. இக்கேள்விக்குரிய விடையை எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலில் முதலாம் பதிப்பில் 394ம் பக்கத்திலிருந்து 426ம் பக்கம் வரையிலும் ஆதாரங்களோடு விளக்கியுள்ளேன். அங்கு கண்டு தெளிக.

**குர்ஆன்: 16:49**

وَلِلّٰهِ يَسْجُدُ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ مِنْ
دَآبَّةٍ وَّالْمَلٰٓئِكَةُ وَهُمْ لَا يَسْتَكْبِرُوْنَ ﴿٤٩﴾

**வானங்கள் பூமியிலுள்ள ஜீவராசிகள் யாவும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கின்றன. மலக்குகளும் அவ்வாறே.**

இவ்வாயத்தில் அறிவுக்கு ஓர்மயக்கம் தோன்றுகிறது. பூமியிலுள்ள ஜீவராசிகளான மனிதரில் மிகப்பலர் மண், கல், வெள்ளி, பொன் போன்றவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட விக்கிரங்களான இலாஹுகளுக்கே ஸுஜூது செய்து கொண்டிருக்கும்போதும் அல்லாஹுவுக்கே ஸுஜூது செய்கிறார்களென்று நிகழ்காலத்தில் கூறப்பட்டிருப்பது எப்படி உண்மையாகும்? அல்லாஹ் கூறுவதுதான் உண்மை யென்றால், விக்கிரகமான இலாஹுவுக்குச் செய்யும் ஸுஜூதும் அல்லாஹ்வுக்கே உரியதென்றால், சர்வ பேரண்டமும் அவனுடைய தோற்றபாடேயென்பதை நாம் எப்படி மறுக்க முடியும்? ஆனால் மண், கல், உலோகங்களான இலாஹுவைச் ஸுஜூது செய்பவன் அதை அல்லாஹ்வை விட்டும் வேறானதென்று நம்பியே சுஜூது செய்கிறான். இந்த நம்பிக்கையே அவனுடைய பிறசெயல்களையும் ஷிர்க்காக மாற்றிக் கொண்டிருக்கிறது.

**குர்ஆன்: 55:29**

يَسْـَٔلُهُۥ مَن فِى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ ۚ كُلَّ يَوْمٍ هُوَ فِى شَأْنٍ

**வானங்கள் பூமியிலுள்ள யாவரும் (தங்களுக்கு வேண்டியவற்றை) அவனிடமே கேட்கின்றனர். அவன் ஒவ்வோர் நாளிலும் ஒவ்வோர் நிலையில் இருக்கிறான்.**

இவ்வாயத்திலும் அறிவுக்கு ஓர்மயக்கம் தோன்றுகிறது. அவசியமானவற்றைமட்டும் இங்கு கூறுவோம். என்னுடைய

செருப்பின்வார் அறுந்தபோது நான் சம்மானிடத்தில் உதவிதேடுகிறேன். உணவுக்குப் பணத்தின் உதவியையும் சமையலுக்கு மனைவியின் உதவியையும் தேடுகிறேன். பிச்சைக்காரன் ஊன்று கோலின் உதவியோடு பணக்காரரின் உதவியையும் தேடுகிறான். இவை போன்ற பிறவிஷயங் களையும் எடுத்துக்கொள்ளுங்கள். உதவிதேடியவனும் உதவிசெய்த ஊன்றுகோலென்ற அஃறிணைப் பொருளும் அல்லாஹ்வின் வேறானவை என்று கூறினால் நாம் குர்ஆனை விளங்கிக் கொள்ள ஆற்றலில்லாத அறிவிலிகள் என்பதே அதன் அர்த்தமாகும். குர்ஆன் இறைவனின் பேச்சு. அதில் பொய்யோ முரணோ இருக்க முடியாது. அதை உருட்டிப்புரட்டி மறைக்கவும் முடியாது. யார் யார் எவ்வெவரிடத்தில் எவ்வெப் பொருளிடத்தில் உதவி தேடினாலும் அது அல்லாஹ்விடம் தேடிய உதவிதானென்பது ஆயத்தின் அர்த்தமாகும். எனவே சிருஷ்டியென்ற தோற்றப்பாடான ஸூறத்திலிருந்து உதவி தேடியவனும் கேட்பவனும் றப்பு என்ற தோற்றப்பாடான ஸூறத்தற்ற நிலையில் பாதினாய் இருந்து உதவி செய்பவனும் கொடுப்பவனும் மறுப்பவனும் அவனாகவே இருக்கிறானென்றும் அவனுடன் அவனல்லாத எதுவும் கிடையாதென்றும் கலிமாவின் உண்மை விளக்கத்தையே இவ்வாயத்து உறுதிப்படுத்துகிறது. குர்ஆனில் 2:165ம் ஆயத்தும் இதைப் போன்ற வேறுபல ஆயத்துக்களும் சர்வவல்லமையும் சர்வசக்தியும் அல்லாஹ்வுக்கே உரியதென்று கூறும் உண்மை இதுவே.

உதவிதேடுபவன் அனாநிய்யத்துடையவனாயிருந்து, அல்லாஹ் அல்லாதவரிடம், அல்லாஹ் அல்லாதவையிடம் உதவி தேடுகிறேனென்று நம்பியிருப்பதாலேயே அவன் முஸ்ரீக்கென்று கணிக்கப்படுகிறான். உயர்திணை, அஃறி ணைப்பொருட்களான(சராசரங்களான) சிருஷ்டிகளின் உதவி ஒத்தாசையின்றி எந்த ஓர் மாமேதையான சிருஷ்டியாலும் எங்கேயும் எப்போதும் வாழவே முடியாதென்பதை நாம் ஊன்றி உணரவேண்டும். செருப்புடையவார் அறுந்துபோனாலும்

அல்லாஹ்விடமே உதவி தேடவேண்டுமென்றால் வாரைத்தைத்துத் தரும் சம்மான் அல்லாஹ்வின் ஸூறத்துக்களிலொன்றே என்பதையும் அவனிடமிருந்து வெளியாகும் சக்தி அல்லாஹ்வுடையதே என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். இல்லையானால் ஷிர்க்கில்லாத எந்த ஓர் மனிதனையும் எங்கேயும் நாம் காணமுடியாது. றசூல்(ஸல்) அவர்களிடம் அல்லது நல்லடியார்களான அவ்லியாக்களிடம் உதவி தேடல், ஸபாஅத்தின் ஆதரவுவைத்தல் போன்றவை யெல்லாம் ஷிர்க்கல்ல என்பது உண்மை. ஆயினும் அது பாமர மனிதனிடத்தில் ஷிர்க்காயமைவதன் காரணம் அவர்களை அல்லாஹ்வை விட்டும் வேறானவர்களென்று நம்புவதுதான். அந்த நல்லடியார்கள் இறைவனின் விசேட ஸூறத்துக்களென்றும் அவர்களில் வெளியாகும் சக்தி, உதவி, அல்லாஹ்வின் சக்தியும் உதவியுமே என்றும் தெரிந்து கொண்ட ஓர் மூமீனிடத்தில் நல்லடியார்கள் மட்டுமன்றி அஃறிணைப் பொருட்களிடத்தில் உதவி தேடினாலும்கூட அது ஷிர்க்காக அமையாது. நுட்பமாய் உணர்க. இஸ்லாத்தின் தௌஹீதையும் இக்கால வஹ்ஹாபிகளின் ஓரிறைக் கொள்கையையும் ஒப்பிட்டு நோக்கி உண்மையில் தெளிவு பெறுங்கள். சர்வ பேரண்டத்திலுமுள்ள சர்வ சிருஷ்டியும் அல்லாஹ்வின் ஸூறத்தான தோற்றப்பாடே என்பதை நிரூபணஞ் செய்ய அனேக ஆதாரங்களுள்ளன.

ஸூறத் என்பதில் இன்னுமோர் நுட்பமுண்டு. பௌதீக உலகத்தை நாம் லாஹிர், (வெளிப்படை) என்று கூறுகிறோம். இதற்குமாறான தோற்றாத மலக்குகள், ஜின்கள் போன்ற சூட்சும சிருஷ்டிகள் வாழும் உலகை பாதின்(மறைந்தது) என்று கூறுகிறோம். இது பாமர மனித அறிவிடத்தில் உண்மைதான். ஆனால் விபரம் வேறுவகையாய் இருக்கிறது. எப்படியென்றால் மலக்குகள், ஜின்கள் வாழும் சூட்சும உலகம் எமதறிவுக்கு மறைந்ததாயிருப்பினும் உண்மையில் அவையும் லாஹிருடைய உலகம் தான். ஏனென்றால் ஸூறத்தில்லையானால் சிருஷ்டி யென்றாகாது. எனவே, நாம் அந்த சூட்சும உலகங்களை

ஜடப்பொருட்களாய் காணாவிட்டாலும் அந்த சூட்சும உலகுக்கும் ஸூறத்துண்டு. ஆகையால் அவ்வுலகமக்களுக்கு அவ்வுலகங்கள் ஜடம்தான். எமதுலகில் நாம் ஜடத்தை கணிக்கும் முறை வேறு அவர்கள் கணிக்கும் முறை வேறு. ஆகையால் லாஹிர் என்பதில் பௌதீக உலகும் சூட்சும உலகும் அடங்கி விட்டன. அப்படியானால் பாதின் என்பதன் உண்மை என்ன? இந்த “பாதின்” “தன்ஸீஹ்” என்ற நிலமை, குன்ஹு, தாத்து, வுஜூது என்று கூறப்பட்ட மனித அறிவு வட்டத்தைக்கடந்த ஓர் நிலையாகும். இதை ஆராய்வுசெய்தல் தடைப்படுத் தப்பட்டுள்ளது. லாஹிர் என்பது அப்து, றப்பென்ற றுபூபியத்தின் நிலைமையை உள்ளடக்கியது. இதில் மனித அறிவு ஓர்பகுதியை எல்லாப் புலன்கள்வாயிலாகவும் இன்னோர் பகுதியை அறிவின்புலன்கள் (அனுமானஅறிவின்) வாயிலாகவும் அறியலாம். குன்ஹு என்ற சுயநிலையான பாதினை, தன்ஸீஹை இறைவன் மட்டுமே அறிவான்.

**குர்ஆன்: 6:148**

سَيَقُولُ الَّذِينَ أَشْرَكُوا لَوْ شَاءَ
اللَّهُ مَا أَشْرَكْنَا وَلَا آبَاؤُنَا وَلَا حَرَّمْنَا مِن شَيْءٍ
كَذَٰلِكَ كَذَّبَ الَّذِينَ مِن قَبْلِهِمْ حَتَّىٰ ذَاقُوا
بَأْسَنَا قُلْ هَلْ عِندَكُم مِّنْ عِلْمٍ فَتُخْرِجُوهُ لَنَا
إِن تَتَّبِعُونَ إِلَّا الظَّنَّ وَإِنْ أَنتُمْ إِلَّا تَخْرُصُونَ

**அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்களுடைய மூதாதைகளும் இணையேற்படுத்தியிருக்கமாட்டோம். யாதொன்றையும் தடுத்திருக்க மாட்டோம் என்று இணை கற்பிப்பவர்கள் (முஷ்ரிக்கீன்கள்)**

**கூறக்கூடும். இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இவ்வாறே நம்முடைய வேதனையைச் சுகிக்கும் வரையில் (நபிமார்களை) பொய்யாக்கி வந்தனர். உங்களிடம் (இணை ஏற்படுத்துவதற்கு) ஏதும் ஆதாரம் உண்டா? இருந்தால் அதனை நம்மிடம் கொண்டு வாருங்கள். நீங்கள் சுயமாகவே கற்பனை செய்துகொண்ட வீண் எண்ணத்தில் மூழ்கிக்கிடப்போரேயன்றிவேறில்லை.**

ஷிர்க், அனாநிய்யத் என்பது மனிதன் அவனுடைய பழக்க வழக்கம் நூற் கேள்வியறிவினால் பெற்றுக் கொள்ளும் வெறும் கற்பனையான, ஆதாரமற்ற பொய்யாய் (இல்லாததாய்) இருக்கிறது. பொய் எப்போதும் எங்கேயும் இல்லாததாகும். அப்படியொன்றிருப்பதாய் நம்புவது மருட்சியாகும். மனிதன் அறியாமையால் ஷிர்க் என்ற பொய்யைக் கற்பனையாய் உருவாக்கிக் கொண்டு வாழ்கிறான், இன்னலடைகிறான். இவனுடைய உள்ளத்திலுள்ள தவறான விசுவாசம் அழித் தொழிக்கப்படாமல் இம்மையிலும் மறுமையிலும் சாந்தியை இவனால் பெற்றுக் கொள்ளமுடியாது.

நீக்கமற நிறைந்த ஏகமான(ஒரேயோர்) உயிரோடு சர்வ ஆலங்களும் இருந்து கொண்டிருப்பதனால் இவ்வாலங் களிலுள்ள ஒவ்வோர் அணுவும் கொண்டுள்ள "நான்" என்ற தன்னுணர்வு ஆலங்களுக்கெல்லாம் ஜீவனாயுள்ள றப்புவின் தன்னுணர்வாகவே இருக்கிறது. மனிதனும் ஜின்னுமல்லாத பிற சிருஷ்டிகள் அவ்வவற்றின் இயற்கை விதியை (களாகத்ரை) மீறாமல் தரிபடுத்தப்பட்டுள்ளன. மனிதனும் ஜின்னும் இயற்கை சுபாத்தை மீறக்கூடிய ஸைத்தான், ஹைவான் என்ற தத்து வங்களோடு தொடர்பு கொண்ட சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருப்பதால் மனிதனுடையவும் ஜின்னுடையவும் "நான்" என்ற தன்னுணர்வு இரட்டை வேடமுடையதாய் அமைந்து விடுகிறது. மனிதனைத்தன் பிரதிநிதியாய் இறைவன் அமைத்திருப்பதால் அம்மனிதனுடைய அறிவு ஒடுக்கமும்

விரிவுமுடையதாய் அமைந்திருக்கிறது. இதன் ஒடுக்கம் “நான்” என்ற நப்ஸின் தன்னுணர்வுதான். இதன் வியாபகமே சர்வபிரபஞ்சத்தின் அறிவாக இருக்கிறது. பிரபஞ்சம் இன்னும் விரிவடைந்து கொண்டேயிருக்கிறதென்பது விஞ்ஞானத்தினதும் குர்ஆன் ஹதீஸுகளினதும் தீர்ப்பாகும். அப்படியானால் மனித அறிவின் விரிவுக்கு எல்கையேகிடையாது.

இந்த அறிவு சர்வபேரண்டத்தையும் சூழ்ந்து கொண்டதாய், ஒவ்வோர் கணமும் ஏற இறங்கக் கூடியதாய் இருக்கிறது. இறக்கம் என்ற கீழ்நிலையில் அறிவு இருக்கும் போது அவ்வறிவு தன்னைவிட்டும் தன் இறைவனை வேறு என்று நம்பியிருப்பதால் அவ்வறிவு நான் என்றுணரும் தன்னுணர்வு “அனாநிய்யத்” (இணை) ஷிர்க் என்று கூறப்படுகிறது. இவ்வறிவு தன் இறைவனைக் கற்பனையினால் தன்னை விட்டும் வேறான ஓர் இடத்தில் இருப்பதாய் நம்பிவிடுகிறது. இந்த அறிவின் திரையிடப்பட்ட ஓர் நிலமையின் பெயர்தான் “நப்ஸு” மனம் என்பது, மனித அறிவு (ஒன்றேயொன்றுதான்) ஏகமானது. இதுவே “றூஹு” “நூர்” என்பது. எப்போது அனாநிய்யத்தென்ற திரையில் அறிவு மட்டுப்படுத்தப்பட்டதோ அப்போதே அவ்வறிவு நப்ஸு என்ற பெயரையும் சிருஷ்டியென்ற பெயரையும் பெற்றுக் கொள்கிறது. இறப்பதும் பிறப்பதும் இந்த நப்ஸுதான். இந்த நப்ஸும் கூட உள்ளது ஒன்றேயொன்றுதான். ஆச்சரியமடைய வேண்டாம். குர்ஆன் 6:98, 7:189 போன்ற பல ஆயத்துக்கள் இவ்வுண்மைக்கு ஆதாரமாய் இருக்கின்றன.

ஓர்மண்புழுவை இருதுண்டங்களாய் வெட்டிவிட்டால் அவ்விருதுண்டங்களும் தனித்தனிப் புழுக்களாய் வாழ்கின்றன. எனவே ஒரே நப்ஷிலேயே (றூஹிலேயே) இருபுழுக்களும் வாழ்கின்றனவென்பது தென்படுகிறது. இவை ஒன்றுக்கொன்று நேர்விரோதியாய் மாறினாலும் கூட ஓரேயோர் நப்ஸின் ஆதிக்கத்திலேயே வாழ்கின்றனவென்பது உறுதியாகிறது.

**குர்ஆன்: 30: 26**

وَلَهُۥ مَن فِى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ ۖ كُلٌّ لَّهُۥ قَٰنِتُونَ

**வானங்களிலும் பூமியிலுள்ளயாவும் அவனுக்கு உரியனவே. இவையாவும் அவனுக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றன.**
**குர்ஆன்: 6:98**

وَهُوَ ٱلَّذِىٓ أَنشَأَكُم مِّن نَّفْسٍ وَٰحِدَةٍ فَمُسْتَقَرٌّ
وَمُسْتَوْدَعٌ ۗ قَدْ فَصَّلْنَا ٱلْءَايَٰتِ لِقَوْمٍ يَفْقَهُونَ

**உங்கள் யாவரையும் ஒரேநப்ஷில் இருந்து உற்பத்தி செய்து பின்னர் தரித்திருக்கச் செய்து ஒப்படைப்பவனும் அவனே. சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு(நம்) வசனங்களை நிச்சயமாக விவரித்தோம்.**

எனதுடலும் சர்வ அங்கங்களும் எனக்குரியவையாய் இருப்பதால் அவை எனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. பூமியிலுள்ளவர்களில் நானும் ஒருவன் தானே! (பூமியிலுள்ள யாவும்) நானும் அவனுக்குடையவன்தானென்றால் நான் அவனுடைய ஸுறத்துக்களில் ஒன்றாகத்தானிருக்க வேண்டும். இறைவனின் அஸ்மாக்களுடைய ஸுறத்தே சர்வஉலகும் என்பதை நாம் ஊன்றி உணரவேண்டும். மனிதனின் இந்த நப்ஸு தன் இறைவனைப் படர்க்கையில் இருப்பதாய் நம்பியிருப்பதால் இறைவனைக் காணவோ அவனுடைய ஐக்கியத்தை (தஜல்லியை)ப் பெறவோ முடியாததாய் இருக்கிறது. நிரந்தர நரகம் என்பதன் சுருக்கம் இதுவே. அனாநிய்யத்தென்றும் ஷிர்க் என்றும் கூறப்படுகிற பொய்யை உள்ளத்திலிருந்து நீக்கி வெற்றிபெறச் செய்வதற்காகவே கலிமத்துத்தையிபாவும் அதன் ஆதாரங்களான வேத நூற்களும் தரப்பட்டன. இதை மக்களுக்கு

விளக்கவே 124,000 நபிமார்கள் தோன்றினார்கள். இறுதிநாள்வரையும் இவ்வுண்மையை விளக்கும் நல்லடியார் களான வலிமார்கள் தோன்றிக் கொண்டேயிருப்பார்கள்.

**குர்ஆன்: 26:213**

فَلَا تَدْعُ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَتَكُوْنَ مِنَ الْمُعَذَّبِيْنَ

**ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் வேறொரு (கற்பனை) இலாஹுவை அழைக்காதீர். அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர்.**

**குர்ஆன்: 16:51**

وَقَالَ اللّٰهُ لَا تَتَّخِذُوْٓا اِلٰهَيْنِ اثْنَيْنِ ۚ اِنَّمَا هُوَ اِلٰهٌ

وَّاحِدٌ ۚ فَاِيَّايَ فَارْهَبُوْنِ

**(மனிதர்களே!) அல்லாஹ் கூறுகிறான். இரு இலாஹுகளை நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள். இலாஹு என்பது ஏகமானது (ஒன்றேயொன்று)தான். ஆகவே நீங்கள் எனக்கே பயப்படுங்கள்.**

இவ்வாயத்துக்களில் இலாஹு என்றசொல் என்னகருத் தோடு பாவிக்கப்பட்டிருக்கிறதென்பதைப் பல கோணங்களில் சிந்தனை செய்யுங்கள். பல இலட்சாதி இலட்சம் இலாஹுகள் இருந்து கொண்டிருந்தும் இரு இலாஹுகளை எடுத்துக் கொள்ளாதீர்களென்று இறைவன் கூறுவதன் அர்த்தமென்ன என்பதைச் சிந்தனை செய்யுங்கள். பொறுமையோடு இன்னும் சிறிது செவிதாழ்த்துக. அனாநிய்யத்தற்ற, கட்டுப்பாடுகளிலி ருந்தும் விடுபட்ட அறிவின் பெயரே “நூர்” என்பது. “றூஹு” என்பதும் இதுவே. இந்த “நூர்” பற்றற்ற நிலையில் சுயமாய் இருந்துணரும் சொந்த உணர்வே “நான்” என்ற உணர்வாகும்.

இந்த நான் வஹ்மு என்ற திரையை எடுத்துக் கொள்ளும் போது அது வெளிமனத்துக்(நப்ஸுக்)குரியதாய், பிரதிபலிப் பாய், ஷிர்க்காய் அமைந்து விடுகிறது. நப்ஸென்ற வெளிமனத்துக்குரிய "நான்" என்பது தன்னிலும் வேறானதோர் இலாஹு இருப்பதாய் நம்பிவிடுவதால் தன்னை ஓர் இலாஹு வாகவும், தன்கற்பனையிலுள்ள இறைவனை வேறோர் இலாஹு வாகவும் ஆக்கிக் கொள்கிறது. இது உள்ளத்திலேற்படும் ஓர் உளநோயாய் இருக்கிறது. முஷ்ரிக்கீன்களின் இவ்வித மூடத்தனமான ஷிர்க்கில் ஊறினால் வேதனையேற்படும் என்பதே ஆயத்துக்கள் போதிக்கும் போதனையாகும்.

எனது கனவில் தோன்றிய சிருஷ்டிகள் யாவும் நான் நான் என்ற தனித்தனி உணர்வோடுதான் கனவில் காட்சிய ளித்தன. கனவின்போது இது நூறுவீதமும் உண்மைதான. ஆனால் விழிப்பைப் பெற்றபோது, கனவில் தோன்றி நடமாடிய சிருஷ்டிகள் கொண்டிருந்த தன்னுணர்வுகள்யாவும் கனவைக் கண்டுகொண்டிருந்த என்னுடைய உணர்வுதான் என்பதை அறிகிறோம். இது ஒன்றேயொன்றுதான். அப்படியிருந்தும் கனவின் போது எல்லாச் சிருஷ்டிகளும் வெவ்வேறு தன்னுணர்வைப் பெற்றிருந்தன என்று ஏமாந்து விடுகின்றேன். கனவுக்கு முன்பும் கனவின்போதும், கனவின் பின்பும் இருந்து கொண்டிருந்தது என்னுடைய ஒரேயோர் நான் என்ற உணர்வு மட்டுமே. கனவில் வெளியான சிருஷ்டிகள் கொண்டிருந்த நானென்ற உணர்வு எனது சொந்த உணர்வின் பிரதிபலிப்பேயாகும். றூஹு நான் என்ற உணர்வுக்கு உரிமைப் பொருளாயும் "நப்ஸு" அவ்வுணர்வைப் பிரதிபலிக்கச் செய்யும் "மழ்ஹர்" ஆகவும் இருக்கிறது. என்னுரிமையை எனது "நப்ஸு" இரவலாய் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுவே அனாநிய்யத் என்ற ஷிர்க்காயிருக்கிறது. அமானிதம் என்பதன் இரகஸியம் இதுவே.

# 23

# கலிமா ஷிர்க் என்ற அனாநிய்யத்தை நீக்குமா?

"லா இலாஹ" என்று கூறும்போது சிருஷ்டி இல்லை யென்றாவதால் நானிருக்கிறேனென்று மருண்டு கொண்டிருக்கிற நப்ஸும் இல்லாமலாகி விடுகிறது. அதாவது சிருஷ்டி இல்லை யென்னும்போது நானும் இல்லையென்று நப்ஸு நம்புவதால் அந்த நப்ஸும் அப்போதே இறந்துவிடுகிறது. அதன் கற்பனையான இலாஹும் இல்லாமல் அழிந்துவிடுகிறது. இப்போது றூஹு நப்ஸின் தொடர்பில்லாமலிருந்துகொண்டு தான் என்னையன்றி இல்லையென்றுணர்வதால் அதற்கிடப் பட்டிருந்த சகல திரைகளும் கட்டுப்பாடுகளும் நீங்கிவிடுகின்றன. எனவே றூஹு தன்னை உணரும் தன்னுணர்வு றூஹுக்கு றூஹுவாயிருக்கும் றப்புடைய தன்னுணர்வாய் அமைந்து விடுகிறது. இப்போது அந்த றூஹு நான் ஓர் சிருஷ்டியே என்ற உணர்வற்றதாயிருப்பதால் அங்கே றப்புடைய பண்புகள் வெளியாகின்றன. முடிவில் அந்த றூஹு கடலில் கரைந்த உப்புக் கல்லின் நிலமையை அடைந்து விடுகிறது. அதாவது இறை ஐக்கியம் கிடைத்துவிடுகிறது. சிருஷ்டி றப்பாகி விட்டதென்றோ றப்பு சிருஷ்டியாகி விட்டனவென்றோ விளங்கிக்

கொள்ள வேண்டாம். இஸ்லாம் ஆஸ்த்தீகமோ நாஸ்த்தீகமோ அல்ல. இஸ்லாம் என்பது ஓர் இயற்கை வழியாகும். இறையுணர்வைக் கொண்டே மூமீன்களை இறைவன் உறுதிப்படுத்துகிறான் என்பதற்கு குர்ஆன் 58:22ம் ஆயத்து ஆதாரமாய் இருக்கிறது.

எவ்வளவு தூரம் அனாநிய்யத் வீழ்ச்சியடைகிறதோ அவ்வளவு தூரம் ஷைத்தானுடையவும் ஹைவானுடையவும் சுபாவங்கள் நீங்கிவிடுகின்றன. மலக்கானி, றஹ்மானியின் சுபாவங்கள் வெளியாகின்றன. இவ்வித குணங்கள் நிரப்படையும் போது அந்தமனிதரின் ஸூறத்து இறைவனுடைய விசேட தஜல்லிக்குரியதாய் அமைந்துவிடுகிறது.

**குர்ஆன்: 21:29**

وَمَن يَقُلْ مِنْهُمْ إِنِّىٓ إِلَـٰهٌ مِّن دُونِهِۦ فَذَٰلِكَ
نَجْزِيهِ جَهَنَّمَ ۚ كَذَٰلِكَ نَجْزِى ٱلظَّـٰلِمِينَ ٢٩

**அவர்களில் எவனும் அல்லாஹ்வையன்றி நானும் ஓர் இலாஹுதான் என்று கூறினால் அவனுக்கு நரகத்தையே கூலியாக்குவோம். அக்கிரமக்காரர்களுக்கு நாம் இவ்வாறே கூலி கொடுப்போம்.**

சர்வவல்லமையுமுடைய இறைவனான இலாஹுவை விட்டும் நான் வேறான ஓர்தனி இலாஹு என்று நம்புவது சுத்தமான ஷிர்க்காக இருப்பதனால்தான் நரகம் கூலியாய்க் கிடைக்கிறது. எனவே இன்ஸான் என்பவன் இறைவனாகிய இலாஹுவைவிட்டும் நான் வேறு ஓர் இலாஹு என்று நம்புவது மிகமிகப்பெரிய பாபம் என்பதை நாம் உணர வேண்டும். குறிக்கோளை, தன்நிறைவை, சாந்தியைப் பெறமுடியாமல் தடைப்படுத்தக் கூடிய கருத்து, சொல், செயல்களே பாபம் என்பதாகும். நாம்

மேலே கூறிய விபரங்களைக் கலிமாவுடன் ஒப்பிட்டு நோக்கித் தெளிக.

**குர்ஆன்: 5:72**

لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوٓا
إِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ ۖ وَقَالَ الْمَسِيحُ
يٰبَنِيٓ إِسْرَآءِيلَ اعْبُدُوا اللّٰهَ رَبِّي وَرَبَّكُمْ ۖ
إِنَّهُ مَنْ يُشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ
الْجَنَّةَ وَمَأْوٰىهُ النَّارُ ۖ وَمَا لِلظّٰلِمِينَ مِنْ أَنْصَارٍ ۝

**நிச்சயமாக மரியமுடையமகன் மஸீகை அல்லாஹ்தானென்று கூறியவர்களும் காபீராகிவிட்டார்கள்.**

இந்த ஆயத்து நாம் முன்கூறிய விபரத்துக்கு முரண்போல் தென்பட்டாலும் நாம் கூறிய உண்மையைத்தான் உறுதிப்படுத்துகிறதென்பதை மிகப்பலர் உணர்வதில்லை. ஈஸா(அலை) அல்லாஹ்தானென்று கூறுபவன் குப்பார் தானென்றால் முஹம்மது(ஸல்) அவர்களை அல்லது தன்னை, அல்லது சிருஷ்டிகளை அல்லாஹ்தானென்று கூறுபவர்கள் ஏன்காபீராக மாட்டார்களென்று எமது அறிவு கேட்கிறது. முன்காட்டிய 21:29ம் ஆயத்தின்படி நானும் "அல்லாஹ் வையன்றி" என்பதில் அல்லாஹ்வின் வேறு என்ற பொருளில் நானும் ஓர் இலாஹு என்று கூறுவதுதான் குற்றம்(ஷிர்க்) என்று பெறப்படுவதால், அல்லாஹ்வுடன் அவனல்லாத இலாஹுவும் உண்டென்று கொள்வதே ஷிர்க்(குற்றம்) என்று

வெளிப்படுத்தப்படுகிறது. இதை முன்பே கூறியுள்ளேன். அக்கிரமக்காரர் என்பது கலிமாவை நாவினால் கூறிக்கொண்டும் ஷிர்க்கில் தரிபட்டிருப்பவர்தானென்று ஓர் ஹதீஸ் விளக்கம் தருகிறது. “மின்தூனி” “மின்தூனில்லாஹி” “மின்தூனிஹி” என்ற சொற்கள் அல்லாஹ் வேறென்று சிருஷ்டிவேறென்று நம்பியிருந்த மக்களை நோக்கி அவர்களுடைய உள்ளத்திலுள்ள ஷிர்க்கை எடுத்துக்காட்டி, அதை நீக்கி, உண்மையான தௌஹீதை உறுதிப்படுத்தவே தரப்பட்டிருக்கின்றன. இவ்வகைச் சொற்கள் உள்ள வசனங்களில் “உங்களுடைய எண்ணத்தில்” என்ற ஓர் வசனம் தொக்கியிருக்கிறது. இவ்விஷயம் எமது முதல் நூலில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதால் நான் அதை இங்கு கூறவில்லை.

அடுத்ததாக 5:72ம் ஆயத்திலேற்படும் மயக்கை நீக்குவோம். அவ்வாயத்தில் “நானும் ஓர் இலாஹுதான், நானும் அல்லாஹ்தான் என்று கூறுபவர்” என்ற வசனத்தை முதலில் நோக்குங்கள். நான் அல்லாஹ்தானென்று கூறப்பட்டால் பிறபொருட்கள் அல்லாஹ் அல்ல என்றாகும். நானும் அல்லாஹ்தானென்று கூறப்பட்டால் இறைவனை ஓர் சமஷ்டிப் பொருளாய் ஏற்றுக்கொண்டதாய் அமையும். இவ்வித வசனங்கள் குப்ருவாகவும், ஷிர்க்காகவும் அமைகின்றன. இதற்குக் காரணம் வியாபகனான இறைவனை வேறாய்க் காண்பதும் கண்டப்படுத்துவதுமேயாகும். மேலும் லாஹிர் மட்டுமே அல்லாஹ் என்று கொள்வதும் பாதின் மட்டுமே அல்லாஹ் என்று கொள்வதும்“குப்ரு”தான். லாஹிரும், பாதினும் அல்லாஹ்வேயென்றும் இவ்விரு மர்த்தபாக்களைக் கடந்தவனும் அவனேயென்றும் விசுவாசிப்பதே தௌஹீதாகும். எனவே “ஷிர்க்”, “குப்ரு” ஆகிய இருகுற்றங்களிலிருந்தும் மனிதன் விடுபட வேண்டுமென்பதற்காகவே எந்த ஓர் சிருஷ்டியின் பேரிலும் அல்லாஹ் என்ற நாமத்தைப் பாவிக்கக்கூடாதென்று வேதம் தடை விதித்திருக்கிறது.

இந்தத்தடை றப்புவால் அப்துவுக்கிடப்பட்ட சட்டமாகும். அப்துக்கு றப்பு நேர்முரணல்லவா? எனவேதான் றசூல்(ஸல்) என்ற மனிதரின் கையைத் தன்னுடைய கையென்று இறைவன் கூறியிருக்கிறான். எமக்கு உண்மையை விளக்கி சாட்சிய மளிக்கவே இப்படிக் கூறியுள்ளான். முஹம்மது(ஸல்) என்ற ஜடம் வெறும் ஸுறத்தேயன்றிப் பொருளல்ல வென்பதையும் அந்த ஸுறத்தும் “ஹுரூர்” என்ற மயக்கைச் சேர்ந்த தென்பதையும் விளக்குவதே 33:15, 48:10 போன்ற ஆயத்துக்களின் நோக்கமாகும். தோன்றும் சிருஷ்டிகள்(பௌதீக, சூட்சும சிருஷ்டிகள்)யாவும் அல்லாஹ்வின் தோற்றப்பாடேயென்றறிவது தௌஹீதாயும், சிருஷ்டிகளின் தோற்றப்பாடு, குணசுபாவங்களுக் கேற்றபடி அதாலெத்தென்ற நீதி நிர்வாகச் சட்டங்களுக் கேற்றபடி சிருஷ்டிகளுடன் நடந்து கொள்வது தௌஹிதை உள்ளத்தில் தரிபடுத்தும் அணுகுமுறைப் பயிற்சிகளாகவும் இருக்கின்றன. தீன் என்பதன் உண்மை இதுவே. மேலே காட்டிய ஆயத்து அல்லாஹ்வேறு சிருஷ்டி வேறென்று விளக்குவதற்காகத் தரப்பட்டதல்ல. சிருஷ்டி அல்லாஹ்வை விட்டும் வேறான தல்லவென்பதை விளக்குவதற்காகவே தரப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையை 21:29ம் ஆயத்தும் 5:72ம் ஆயத்தும் ஒன்றையொன்று நிரூபிக்கின்றன.

இவ்விஷயத்தில் இன்னும் தெளிவு தேவை என்பதற்காக இன்னும் சில ஆயத்துக்களை நோக்குவோம்.

# 24

# அச்சமூட்டி எச்சரிக்கை செய்த நபிமார் யார்?

**குர்ஆன்: 53:56**

هَٰذَا نَذِيرٌ مِّنَ النُّذُرِ الْأُولَىٰ ﴿٥٦﴾

**இவரும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரே. முன்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவரே.**

இந்த ஆயத்தைத் தற்கால வழக்கிலுள்ள பெரும்பாலான தப்ஸீர்கள் இருட்டடிப்புச் செய்து திசைதிருப்பியிருக்கின்றன. தௌஹீதை உறுதிப்படுத்த அருளப்பட்ட இந்த ஆயத்தை ஷிர்க்கை உருவாக்கக் கூடிய வகையில் புரட்டர்கள் புரட்டியிருக்கிறார்கள். எப்படியென்றால்,

இவரும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரே. (இவருக்கு) முன்னர்(மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்த(வர்களைப்போன்ற)வரே.

இப்படி அடைப்புக் குறிக்குள் இவர்களுடைய யுக்தியை நுழைத்துத் தௌஹீதை மூடி மறைத்திருக்கிறார்கள். ஆனால் யுக்தியின்படி குர்ஆனுக்குப் பொருள் கூறுபவன் நரகவாதி என்பதை வாயினால் கூறிக்கொள்கிறார்கள். என்னே இவர்களுடைய அறியாமை. இவர்களுடைய ஈமானின் தன்மையை எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

ஏனிப்படி இருட்டடிப்புச் செய்தார்களென்பதை ஆராய்ந்தால் அதற்கு இருகாரணங்கள் தென்படுகின்றன.

1வது:-
இவர்கள் வசனத்தின் உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ளுமளவுக்குத் தௌஹீதை அறிந்து கொள்ளாமை.

2வது:-
ஆயத்தின் கருத்து இந்துக்களின் மறுபிறவியை உறுதிப் படுத்திவிடுமே என்று அஞ்சி அடைப்புக் குறிக்குள் யூகத்தை நுழைத்திருக்கிறார்கள்.

இஸ்லாத்தின் தௌஹீதுக்கு மறுபிறவிக்கொள்கை நேர்விரோதமானதென்பதை இவர்களறிந்தாலும்கூட அதை விளங்கியறிந்த தெளிவான அறிவு இவர்களிடமிருந்ததாய்த் தெரியவில்லை. மறுபிறவியை மறுத்துத் தௌஹீதைத் தரிபடுத்தவே இவ்வாயத்து அருளப்பட்டிருக்கிறதென்பதை ஒரு சில முபஸ்ஸிரீன்கள் அறியாமலிருந்தது ஆச்சரியம்தான். குர்ஆனில் உள்ள 21:95, 36:31, 21:101 போன்ற பல ஆயத்துக்கள் மறுபிறவியை முற்றாய் மறுப்பவையாய் இருக்கின்றன. மறுபிறவியை மனிதனுடைய ம.்.கூல் என்ற அனுமான அறிவும் ஏற்றுக் கொள்ளாது. இப்போது விஷயத்துக்கு வருவோம்.

குர்ஆன் 112ம் சூறாவில் அல்லாஹ் “அஹது” என்றும் ‘‘ஸமது’’ என்றும் விளக்கம் தந்திருக்கிறது. ஏகன் என்பதை விளக்க “அஹது” என்ற சொல்லும் தேவையற்றவன் என்பதை விளக்க ‘‘ஸமது’’ என்ற சொல்லும் பாவிக்கப்பட்டிருப்பதாய் நான் முன்பே விளக்கியிருக்கிறேன். இந்த ஸமது (தேவையற்றவன்) என்பதன்படி அவன் எவ்வித செயலிலும் ஈடுபட அவசியமில்லாதவன் என்பது தென்படுகிறது. ஆனால் குர்ஆனின் பிற வசனங்கள் இறைவனே சிருஷ்டியைப் படைத்தான், சிருஷ்டியின் பேரில் இரங்குகிறான், கோபிக்கிறான்

என்று அறிவிக்கின்றன. ஆயத்துக்கள் மிக அநேகமாயிருப்பதால் நான் அவற்றை இங்கு தரவில்லை. இப்படி இறைவசனங்கள் ஒன்றுக்கொன்று முரண் போல் தென்படுவதால் அறிவில் மிகக் குழப்பம் ஏற்படுகிறது."ஸமது" தேவையற்றவன் என்பது இறைவனின் குன்ஹு தாத்தை நோக்கியும், படைத்தான் (செயலில் ஈடுபடுகிறான்) என்பது "றுபூபியத்" தென்ற இரண்டாவது மர்த்தபாவை நோக்கியும் கூறப்பட்டதாகும். இதை இலகுவாய் விளக்க முடியாதிருப்பதால் பொறுமையடைக. இன்ஸா அல்லாஹ் சமீபத்தில் விளக்குவேன்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் களும் சாதாரண மனிதனின் அறிவுக்கு வெவ்வேறு விஷயமாய்த் தென்பட்டாலும் உண்மையில் அவை ஒரே விஷயம் தானென்பதை எமது திருக்குர் ஆன் தீர்ப்பு 1ம் பாகத்தில் தெளிவாய் விளக்கியிருப்பதால் அவசியமான அளவு மட்டும் இங்கு தருகிறேன். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்களை நாம் வகுத்துக் கொண்டிருக்கிறோமே இந்த வகுப்பு முறையை எந்த அடிப்படையை ஆதாரமாய்க் கொண்டு வகுத்திருக்கிறோம்? பௌதீக இயக்கங்களின் வரிசைக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாக்கியிருக்கிறோம். கடிகாரம், சூரியன், பூமியின் இயக்கம் போன்றவற்றை அடிப்படையாய்க் கொண்டும், வினாடி, நிமிடம், மணி, இரவு, பகல், நாள், வாரம், மாதம், வருடம், தசாப்தம், நூற்றாண்டு, யுகம், யுகாயுகம், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்றெல்லாம் பல்வேறு வகையாய்க் காலத்தை நாம் வகுத்துக் கொண்டாலும் உண்மையை நோக்கினால் காலம் என்பது வகுக்க, பிரிக்க, கூறுபோட முடியாததாய், வரைவிலக்கணமென்ற கணிப்பீடுகளைக் கடந்ததாய் என்றும் நிலையாய் இருந்து கொண்டிருக்கிற ஏகமான (ஒரேயோர்) காலமாகவே இருக்கிறது.

இதை இலகுவாய் விளங்குவதற்காக நாம் ஓர் யூகத்தைப் பரிசோதனை நடாத்துவோம். கண்,செவி, முதலாம் புலன்களை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்டு நாம் கண்டறிந்த சர்வ உலகையும் ஓர் கணம் மறந்து பாருங்கள். நான் இருக்கிறேன் என்ற நப்ஸின் தன்னுணர்வு மட்டுமே இருக்கும். இவ்வுணர்வு உறுதி பெற்றால் ஆழ்துயில் நிலை ஏற்பட்டுவிடும். ஆத்மீகப் பயிற்சிகள் வாயிலாக இவ்வுணர்வு ஏற்பட்டால் அவ்வுணர்வு றூஹுக்குரியதாய் இருக்கும். இவ்வுணர்வு ஆழ்துயில் நிலையையும் விழிப்பு நிலையையும் ஒரே முறையில் ஏககாலத்தில் பெற்றுக்கொண்டதாய் இருக்கும். விழிப்பும் உறக்கமும் ஏககாலத்தில் உண்டென்பதைச் சாதாரண மனிதனின் அறிவு ஒப்புக்கொள்ளவே கொள்ளாது. நாம் பரீட்சைக்காகக் கண்ணை இறுக மூடிக்கொண்டு ஓரளவு மறதியை ஏற்படுத்தினால் நானிருக்கிறேனென்பதை மட்டும் எம்மால் உணரமுடியும். இவ்வுணர்வுக்குக் காலத்தைப் பற்றிய எவ்விபரமும் தென்படாது. ஏன்? இந்த உணர்விடத்தில் சூரியனோ, பூமியோ, கடிகாரமோ, நிகழ்சிகளோ, இயக்கங்களோ எதுவுமே இல்லையென்றாவதால் அந்த நான் என்ற உணர்வே (அறிவே) காலமாக இருக்கும். மனதை ஒருமுகப்படுத்தி (இக்லாஸை) உருவாக்கி உடலைக் கூட முற்றாய் மறந்து விடும் தகுதி எம்மிடமிருந்தால் நான் இருந்து கொண்டிருக்கிறேன் என்றுணர்கிற நூர் என்ற அறிவே காலமாய் இருந்து கொண்டிருப்பதை நாம் அனுபவபூர்வமாகவே உணரலாம். ஆயினும் இதற்கு இறைவழி காட்டலவசியம். அயரா முயற்சியும் அவசியம். இவ்வுண்மையைக் குர்ஆன் விளக்குகிறது.

**குர்ஆன்: 58:22**

لَا تَجِدُ قَوْمًا يُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ يُوَادُّونَ
مَنْ حَادَّ اللَّهَ وَرَسُولَهُ وَلَوْ كَانُوا آبَاءَهُمْ أَوْ أَبْنَاءَهُمْ
أَوْ إِخْوَانَهُمْ أَوْ عَشِيرَتَهُمْ أُولَٰئِكَ كَتَبَ فِي قُلُوبِهِمُ
الْإِيمَانَ وَأَيَّدَهُمْ بِرُوحٍ مِنْهُ وَيُدْخِلُهُمْ جَنَّاتٍ تَجْرِي
مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا
عَنْهُ أُولَٰئِكَ حِزْبُ اللَّهِ أَلَا إِنَّ حِزْبَ اللَّهِ هُمُ الْمُفْلِحُونَ

**இவர்களுடைய இருதயங்களில் அல்லாஹ் விசுவாசத்தைப் பதிய வைத்துத் தன்னுடைய உணர்வைக் கொண்டு (றூஹைக் கொண்டு) இவர்களைப் பலப்படுத்தி வைக்கிறான்.**

நானிருக்கிறேனென்ற உணர்வு நப்ஸானிக்குடைய தாயின், அது ஹைவானியைச் சேர்ந்ததாயிருக்கும். றூஹுக்குரியதாயின் அது றஹ்மானியயைச் சேர்ந்ததாயிருக்கும். எனவே றூஹு தன் சொந்த உணர்வாய், அறிவாய், நூராய்ப்பெற்றுக் கொண்டிருப்பதே காலமாயிருக்கிறது. காலம் என்பது எல்கையற்றதாய் வரையிலக்கணங்களைக் கடந்ததாய், மனிதன் தன்னறிவால் (கல்வியால்) அறிய முடியாததாய், அதனுடன் பிறிதொன்றில்லாததாய், வேறுபடாமல், விகாரப்படாமல், கெட்டழியாமல், நிலையாய்த் தேவையற்றதாய் இருந்து கொண்டிருக்கும் காலம்தான் ஸமது என்றும் அஹது என்றும் பெயர்பெற்றிருக்கிறது. சர்வஆலங்களிலுமுள்ள ஒவ்வோர் அணுவுங்கூட நானிருக்கிறேனென்றுணரும் உண்மையான உணர்வு காலமென்ற ஸமதுடையதாகவே இருக்கிறது. இங்கே

நான் கூறுவது மனித, ஜின் இனத்தின் நப்ஸில் இருக்கும் நான் என்ற உணர்வையல்ல. நான் கூறுவது றூஹின் உணர்வாகும். எனவே காலத்தின் கோலம்(ஸுறத்து)தான் பேரண்டம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இந்தக்காலத்தின் இன்னோர் பெயர்தான் நூர் என்பது. நூர் என்றால் ஒளியென்பதே அதன் அர்த்தம். இவ்வொளி சூரியனுடைய பௌதீக ஒளி போன்றதல்ல. இந்த நூர் என்ற ஒளிக்கு எதிரிடை இல்லாதிருப்பதால் இதைத்தடைப்படுத்தக் கூடிய பௌதீகமோ சூட்சுமமோ கிடைக்கவே கிடையாது. இந்த ஒளியை நாம் பார்க்கத், தொட முடியாது. இதற்குக் காரணம் நாம் வெறும் ஸுறத்துக்களாய் மட்டும் இருப்பதே. எனவே நூரை நூர்தான் அறியும் சிருஷ்டி அறியவே அறியாது.

**குர்ஆன்: 24:35**


اللهُ نُورُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ مَثَلُ نُوْرِهٖ كَمِشْكٰوةٍ
فِيْهَا مِصْبَاحٌ ۚ اَلْمِصْبَاحُ فِيْ زُجَاجَةٍ ۚ اَلزُّجَاجَةُ
كَاَنَّهَا كَوْكَبٌ دُرِّيٌّ يُّوْقَدُ مِنْ شَجَرَةٍ مُّبٰرَكَةٍ زَيْتُوْنَةٍ لَّا
شَرْقِيَّةٍ وَّلَا غَرْبِيَّةٍ ۙ يَّكَادُ زَيْتُهَا يُضِيْٓءُ وَلَوْ لَمْ تَمْسَسْهُ
نَارٌ ۚ نُوْرٌ عَلٰى نُوْرٍ ۚ يَهْدِي اللهُ لِنُوْرِهٖ مَنْ يَّشَآءُ ۚ وَيَضْرِبُ
اللهُ الْاَمْثَالَ لِلنَّاسِ ۚ وَاللهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ۙ

**அல்லாஹ் வானங்கள் பூமிகளின் (நூர்) பிரகாசமாக (ஒளியாக) இருக்கிறான்.**

இந்த நூரை இதே ஆயத்தில் இறைவன் உதாரணம் கூறி விளக்கியுள்ளான். இந்த நூர் சிருஷ்டியுலகில் அவசியத்தின்

போது, அவசியத்தினளவு றிஸாலத்தென்றும் விலாயத்தென்றும் வெளியாகிக் கொண்டேயிருக்கிறது. வாசகநேயர்களின் வசதிக்காக நூரென்ற அறிவை பண்பு (ஸிபத்) என்று வைத்துக்கொண்டு நோக்குவோம். நூர் என்பது அல்லாஹ்வின் சொந்த அறிவான "விஜ்தான்" என்ற அறிவேயாகும். சிருஷ்டியுள்ளதாய்க் கொண்டால் றப்பையும் அப்தையும் வேறுவேறாய் இந்த நூர்தான் பிரித்துக் காட்டுகிறது. இப்போது இதற்குப் பெயர் பகுத்தறிவு என்பது. சிருஷ்டி இல்லாததே (கற்பனையே அல்லது எண்ணமே) என்று கொண்டால் இப்போது இதன் பெயர் நூர் என்பது. இதில் ஏற்ற இறக்கம் குறைவு நிறைவு எதுவுமே கிடையாது. ஆயினும் ஹுரூர் என்ற மாயை யில் சிக்கியுள்ள மனித அறிவுக்கு ஏற்ற இறக்கமுடையதாய், செயலில் ஈடுபடுவதாய்க் குறைவுள்ளதாயும் நிறைவுள்ளதாயும் தென்படுகிறது. முதன்முதலில் படைக்கப்பட்டது என்னுடைய நூரே என்ற ஹதீஸின்படி நாம் சிருஷ்டி என்று கொண்டால் அறிவுக்கெட்டாமலிருக்கும் "வுஜூதின்" அல்லது "தாத்தின்" இரண்டாவது மர்த்தபாவான றுபூபியத்தை விளக்குவதற்காகவே நூர் என்ற சொல் தரப்பட்டிருக்கிறது என்பதை நாமறியலாம். றுபூபியத்தென்ற இரண்டாவது மர்த்தபாவின் ஓர் பகுதி (சிருஷ்டியென்ற பகுதி) மனிதனின் எல்லாப் புலன்களுக்கும் எட்டக்கூடியதாயும் சூட்சுமமென்ற பகுதி(மலக்கூத்து) உட்புலன்களுக்கு எட்டக் கூடியதாயும் நூர் என்பது றூஹு தன் சொந்த அனுபவத்தில் உணரக் கூடியதாயும் முன் கூறிய யாவற்றையும் சூழ்ந்துகொண்ட "முஹீத்"தாயும் இருக்கிறது.

இந்த நூரைச் சிருஷ்டியென்று கொண்டால் அதில் பல படித்தரங்கள் அமைந்திருக்கினறன. இந்த நூர் என்ற அறிவின் ஓர் படித்தரம் இறைவனை விட்டும் எம்மைப் பிரிப்பது போலும் வேறோர் படித்தரம் இறைவனுடன் எம்மைச் சேர்ப்பது போலும் அமைந்திருக்கிறது. சர்வ ஆலங்களுக்கும் மூலாதாரமாயும் சர்வஆலங்களாகவும் இருந்து கொண்டிருப்பது இந்த நூர்தான். என்னுயிரின் வெளிப்படை (லாஹிர்) என்ற

ஸூறத்து என்னுடலாயிருப்பது போல நூர் என்ற உயிரின் வெளிப்படையான ஸூறத்துக்களே சர்வ ஆலங்களாயும் காட்சியளிக்கின்றன. இறைவன் அமா என்ற நிலையிலிருந்து எதை (முதன்முதலில்) குறிப்பாக எடுத்துக் கொண்டானோ அதுவே "நூர்" என்பது. முதன்முதலில் என்று கூறப்படுவது விளக்கத்துக்காகவேயன்றி இறைவனிடத்தில் முன்பின் என்பதில்லை. முதன் முதலில் படைக்கப்பட்டது என்னுடைய நூரேயென்ற ஹதீஸிலுள்ள உடைய என்ற சொல்லை, என்னுடைய உயிர் என்னும் போது தற்கிழமைப் பொருளில் கொள்வதுபோலக்கொண்டால் நூரென்ற உடமைப்பொருளும் அதன் உடமைக்காரனான அல்லாஹ்வும் வெவ்வேறல்ல என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

நாம் காட்டிய முதன்முதலில் படைக்கப்பட்டது என்னுடைய நூரேயென்ற ஹதீஸை ஒரு சிலர் மறுப்பதாக நானறிகிறேன். மறுப்பது தவறாகும். ஏனெனில் குர்ஆன் 21:107, 5:15 போன்ற பல ஆயத்துக்கள் இந்த ஹதீஸை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஹதீஸை பொய்யர் சொன்னாரா? மெய்யர் சொன்னாரா? என்பதில் நமக்கு கவலையில்லை. குர்ஆன் உறுதிப்படுத்தும் உண்மையை எவர் கூறினாலும் நாம் அதை ஏற்பதில் எவ்வித தவறுமே கிடையாது. எமது மூலப்பிரமாணம், இமாம் குர்ஆன்தான்.

நாம் கூறிய நூர் என்ற அறிவே சர்வ ஆலங்களுக்கும் உயிராயும் றஹ்மத்தாயும் றிஸாலத்தாயும் றசூல் என்ற அறிவிப்பாளராயும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த றஹ்மத், றிஸாலத் என்பவை பிரபஞ்சத்தை விட்டு முந்தியவையுமல்ல, பிந்தியவையுமல்ல. வுஜூது எப்போது "நூர்" என்ற நாமத்தைப் பெற்றதோ அப்போதே றப்பு(இறைவன்), அப்து(அடிமை), றஹ்மத், றிஸாலத் எல்லாமே(ஒன்றாய்) ஏகமாய் அமைந்து விட்டன. ஆரம்பமும் முடிவும் நூர்தான். முன்சென்ற நபிமார் றசூல்மார்களில் வெளியானதும் எமது றசூல்(ஸல்) அவர்களில்

வெளியானதும் என்றும் நிலையாய் இருந்து கொண்டிருக்கும் ஒரேயோர் நூர்தான். இந்த நூர் அவ்வக்காலங்களுக்கேற்ற படி அவசியத்தினளவு வெளியாகிக் கொண்டிருக்கிறது.

**குர்ஆன்: 35:37**

وَهُمْ يَصْطَرِخُونَ فِيهَا رَبَّنَا أَخْرِجْنَا نَعْمَلْ
صَالِحًا غَيْرَ الَّذِي كُنَّا نَعْمَلُ أَوَلَمْ نُعَمِّرْكُم مَّا يَتَذَكَّرُ فِيهِ
مَن تَذَكَّرَ وَجَاءَكُمُ النَّذِيرُ فَذُوقُوا فَمَا لِلظَّالِمِينَ مِن نَّصِيرٍ ﴿٣٧﴾

**(நரகிலிருந்து கொண்டு) அதில் அவர்கள் பெரும் சத்தமிட்டு எங்கள் இறைவனே எங்களை வெளியேற்றிவிடு. நாங்கள் செய்து கொண்டிருந்தவையல்லாத நற்கருமங்களைச் செய்வோம் என்று கூறுவார்கள். நல்லுணர்ச்சி பெறக்கூடியவன் நல்லுணர்ச்சி பெறுவதற்குப் போதுமான நீண்ட காலம் வரை நாம் அதில் உங்களை விட்டு வைத்திருக்கவில்லையா? அன்றி உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவர் உங்களிடம் வந்தேயிருந்தார். (நீங்கள் நிராகரித்து விட்டீர்கள்) ஆதலால் நீங்கள் சகித்துக் கொண்டிருங்கள். அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் ஒருவருமில்லை.**

இவ்வாயத்தைத் தெளிந்த அறிவோடு நோக்குங்கள். நரகவாசிகள் யாவரும் இறைவனுடன் உரையாடுவதைப் பற்றிய விபரம்தான் இவ்வாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. றஸூல்(ஸல்) அவர்களுடைய சமூக மக்களிலுள்ள பாபிகளும் முன்சென்று போன நபிமாரின் சமூக மக்களிலுள்ள பாபிகளும் சேர்ந்த கூட்டம்தான் நரகில் பிரவேசிப்பதென்பதை நாம் எல்லோரும் தெளிவாய் அறிவோம். நரகம் செல்லும் இக்கூட்டத்தினரிடையே சுமார் 124,000 நபிமார் எச்சரிக்கை செய்பவர்களாய்

வந்திருக்கிறார்கள். எனவே இறைவன், “அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்கள் வந்தேயிருந்தார்கள்” என்றுதான் பன்மையில் கூறியிருக்கவேண்டும். அப்படிக் கூறாமல் “அச்சமூட்டி எச்சரிப்பவர் வந்தேயிருந்தார்” என்று ஒருமையில்தான் இவ்வாயத்தில் இறைவன் கூறுகிறான். இப்படிக் கூறுவதன் நோக்கம் என்ன? இதிலோர் ஆழிய விளக்கம் தரப்பட்டிருக்கின்றன. இந்த 35:37 ம் இலக்க ஆயத்தும் 53:56ம் இலக்க ஆயத்தும் ஒன்றையொன்று உறுதிப்படுத்தவே தரப்பட்டிருக்கின்றன. இவ்விரு ஆயத்துக்களும் ஒரே உண்மையைத்தான் வெளிப்படுத்துகின்றன. இவ்வாயத்தைக் குறித்து ஸஹாபாப் பெருமக்களில் ஒருவரான அப்பாஸ்(றலி) அவர்களின் விளக்கமென்ன? என்பதை முதலில் நோக்குவோம்.

**அப்பாஸ்(றலி) அவர்களின் விளக்கம்:-**

35:37ம் வசனத்திலுள்ள “எச்சரிப்பவர் வந்தேயிருந்தார்”, என்பதற்கு விளக்கம் கூறுங்கால், அவர் குர்ஆனைக் கொண்டுவந்த அண்ணல் நபி முஹம்மது(ஸல்) அவர்கள் தானென்று இப்னு அப்பாஸ்(றலி) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பவரும் அவர்களே**
**ஆதாரம்:- ரஜீன்**

**குர்ஆன்: 34:28**

وَمَآ أَرْسَلْنَٰكَ إِلَّا كَآفَّةً لِّلنَّاسِ بَشِيرًا وَنَذِيرًا
وَلَٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا يَعْلَمُونَ

**நாம் உம்மை மனித இனம் முழுவதற்கும் நற்செய்தி வழங்குபவரும் எச்சரிக்கை செய்பவருமாகிய தூதராக(றஸூலாக) அனுப்பியுள்ளோம். ஆயினும் மக்களில் பெரும்பாலார் இதனை அறிவதில்லை.**

மனிதஇனம் முழுவதற்கும் என்ற வசனம், எப்போது மனிதஇனம் தோன்றியதோ அப்போதிலிருந்து மனிதஇனம் முற்றாய் அழியும் வரையிலுள்ளது ஒரேயோர் றசூல்தான் என்பதைத் தெளிவாய் உணர்த்துகிறது. இவ்விஷயத்தில் குர்ஆன் 13:7 (இன்னமா அன்த முன்திறுன் வலிகுல்லி கௌமின் ஹாதி) என்பவை போன்ற பல ஆயத்துக்களை ஆதாரமாய்க் கொண்டு நாம் உறுதி பெற முடியும்.

குர்ஆனில் நூர் என்ற சொல்லைத் தனக்கும் றசூல் (ஸல்) அவர்களுக்கும் றஊபுன், றஹீமுன் என்ற சொற்களைத் தனக்கும் றசூல்(ஸல்) அவர்களுக்கும் பொதுவாகவே கூறியுள்ளான். றசூலின் கையை அல்லாஹ்வின் கையென்று இறைவன் கூறியுள்ள உண்மையை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். மேலும் முஹம்மது(ஸல்) அவர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நன்மாராயம் கூறுவதற்காகவும் அனுப்பியுள்ளோமென்று இறைவன் பல தினுசாக விளக்குகிறான். அச்சமூட்டல், எச்சரிக்கை செய்தல், நன்மாராயம் கூறல் ஆகிய மூன்று செயல்களையும் சிறிது கவனித்துப் பாருங்கள். பயம் காட்டி அச்சத்தையூட்டுதல் பாமர மக்களை நோக்கியதாயும் எச்சரிக்கை செய்வது சமூகத்திலுள்ள அறிஞர்களை நோக்கியதாயும் நன்மாராயம் கூறுதல் நல்லடியார்களை நோக்கியதாகவும் இருக்கிறது. இம்மூன்று விஷயங்களையும் உலகையும் ஆகிறாவென்ற மறு உலகையும் ஒன்றுசேர்த்து நோக்கினால் ஏகமாயுள்ள ஒரேயோர் நூர்தான் பற்பல படித்தரங்களையுடைய தாயிருக்கிறதென்ற உண்மையை நாமுணரலாம்.

**குர்ஆன்: 38: 65**

قُلْ إِنَّمَا أَنَا مُنذِرٌ ۖ وَمَا مِنْ إِلَٰهٍ إِلَّا اللَّهُ الْوَاحِدُ الْقَهَّارُ

**நீர் கூறும் நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன்தான்**

ஆயத்தை நுட்பமாய் நோக்கினால் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையிலுள்ள யாவருக்கும் அச்சமூட்டி, எச்சரித்து, நன்மாராயம் கூறி இம்மை, மறுமை விஷயங்களில் வழிகாட்டக் கூடிய "நூர், றசூல், ஒரேயோர் "ஏகமான" நூர், றசூல்தா னென்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**குர்ஆன்: 21:107**

وَمَا أَرْسَلْنٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ

**அகிலங்கள் அனைத்துக்கும் றஹ்மத்தாகவும் றசூலாகவும் உம்மை அனுப்பினோம்.**

சர்வ ஆலங்களுக்கும் நூராய், றசூலாய் இருந்தது, இருப்பது எது? என்பதை நாமினிமேலாவது ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். குர்ஆன் 33:45, 46ம் ஆயத்துக்களையும் எடுத்து நோக்குக.

மேலே காட்டிய ஆயத்துக்களுக்கும் மாறாகத் தென்படும் ஆயத்துக்களை இப்போது நோக்குவோம்.

**குர்ஆன்: 6:130**

يٰمَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ أَلَمْ يَأْتِكُمْ رُسُلٌ مِّنْكُمْ يَقُصُّوْنَ
عَلَيْكُمْ اٰيٰتِيْ وَيُنْذِرُوْنَكُمْ لِقَاءَ يَوْمِكُمْ هٰذَا، قَالُوْا شَهِدْ
نَا عَلٰى أَنْفُسِنَا وَغَرَّتْهُمُ الْحَيٰوةُ الدُّنْيَا وَشَهِدُوْا عَلٰى
أَنْفُسِهِمْ أَنَّهُمْ كَانُوْا كٰفِرِيْنَ

**மனிதர்களின், ஜின்களின் கூட்டத்தினரே! உங்களில் தோன்றிய தூதர்கள்(நபிமார், றசூல்மார்கள்) உங்களிடம் வந்து என்னுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து நீங்கள்(என்னை) சந்திக்கும் இந்த நாளைப் பற்றியும் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவில்லையா?**

**குர்ஆன்: 23:44**

ثُمَّ أَرْسَلْنَا رُسُلَنَا تَتْرَا كُلَّمَا جَاءَ أُمَّةً رَّسُولُهَا كَذَّبُوهُ فَأَتْبَعْنَا
بَعْضَهُم بَعْضًا وَجَعَلْنَاهُمْ أَحَادِيثَ فَبُعْدًا لِّقَوْمٍ لَّا يُؤْمِنُونَ

**பின்னரும் நாம் நம்முடைய தூதர்களை ஒருவர் பின் ஒருவராய் அனுப்பிக் கொண்டேயிருந்தோம்.**

இவ்வாயத்துக்களிலும் இவைபோன்ற பிற ஆயத்துக் களிலும் தூதர்களென்று பன்மையில் கூறப்பட்டிருப்பதும் காலத்தால், இடத்தால் வேறுபடுத்தி முன் பின்னாய்க் கூறப்பட்டிருப்பதும், றசூல்மார்கள் நபிமார்களின் ஸூறத்தென்ற உடலை நோக்கிக் கூறப்பட்டதாகும். இது ஓர் “இஸ்த்தியாரா” இரவல் வழக்காகும். குர்ஆன் 48:29ம் ஆயத்தில் முஹம்மதென்ற மனித உடலை அல்லாஹ்வுடைய றசூல் என்று கூறப்பட்டி ருப்பதை நோக்குக. மனித உடலை மனிதன் என்று கூறுவது போலவே இதுவும் கூறப்பட்டிருக்கிறது. மனித உடலும் சகல உலகும் ஹுஊர் என்பதை மனதில் இருத்திக் கொள்க. மயக்குடைய மனிதர்கள் காலத்தை முன் பின்னாக்கிக் கொண்டிருப்பதால் அவர்களுடைய அறிவுக் கேற்றபடி இறைவன் வசனங்களைப் பாவித்திருக்கிறான். இவ்வகை வசனங்கள் யாவருக்கும் பொதுவாகவும் ஹுஊரில்(மாயையில்) மூழ்கிய

மக்களுக்குக் குறிப்பாகவும் கூறப்பட்டிருக்கின்றன. எனவே 6:130, 23:44போன்ற ஆயத்துக்கள் 35:37ம் ஆயத்துக்கு முரணானதேயல்ல. 10:47, 16:36, 35:24 போன்ற ஆயத்துக் களையும் ஆராய்வுக்கு எடுத்துக் கொள்க.

நான் மிகச் சுருக்கமாய்த்தந்த விபரப்படி ஆரம்பத்தி லிருந்து முடிவுவரையிலும் நபி, றஸுல், வலி, அறிஞன் என்ற ஸுறத்துக்களில் வெளியாகி மக்களுக்கு வழி காட்டிக் கொண்டிருப்பது ஒரேயோர் ''நூர்'' மட்டுமே என்பதை எம்மால் மறுக்கமுடியாது.

எல்லாச்சிருஷ்டிகளும் இந்த நூரின் தோற்றப் பாடாயிருப்பதால் சிருஷ்டியின் இயற்கைச் சட்டப்படி (களாவின் படி-ஹுக்கூமின்படி) ஒவ்வோர் ஸுறத்திலும் ஒவ்வோர் வகையான தன்மையில் வெளியாகிறது. ஒரேயோர் மின்சக்தி மின்குமிழ், மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டி போன்ற பொருட்களில் வெவ்வேறு தன்மையைக் கொடுப்பதுபோல நூர் என்ற அறிவும் பல்வேறுபட்ட வரையறைகளைக்கொண்டதாய் எமது அறிவுக்குப்புலப்படுகிறது. மின்சாரமும், மின்குமிழும் வெவ்வேறானவை. ஆனால் நூர் என்ற றூஹுவும் (மின்சாரமும்) ஸுறத்தென்ற மின்குமிழ்களும் வெவ்வேறானவையல்ல.

றசூல்(ஸல்) அவர்கள் மட்டுமன்றி முன்சென்று போன றசூல்மார்கள், நபிமார்களும் மனிதர்களேதானென்பதைக் குர்ஆன் 17:95, 18:110, 6:9, 14:11 போன்ற பல ஆயத்துக்கள் நீரூபணம் செய்கின்றன. முஹம்மது(ஸல்) என்ற மனிதரும் பிறநபிமார்களும் அல்லாஹ்வை விட்டும் சிருஷ்டியென்ற வகையில் வேறானவர்களல்லவென்றால் சிருஷ்டி யென்றவகையில் பிற சிருஷ்டிகளும், அஃறிணைப் பொருட்கள் கூட அல்லாஹ்வை விட்டும் வேறானவையல்ல என்பதே உண்மை. அல்லாஹ்வையன்றி அவனுடன் பிறிதொன்றில்லை என்று கலிமா உணர்த்தும் உண்மையே இஸ்லாத்தின் உயிராயிருக்கிறது.

# 25

# சிந்தனையாளரின் விசேட சிந்தனைக்கு

நாம் காட்டிய 53:56ம் இலக்க ஆயத்தை மீண்டும் ஓர்முறை நோக்குங்கள். ‘‘இவரும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரே’’ என்ற வசனம் நாம் விளக்கிக் காட்டிய உண்மையை நிரூபணம் செய்கிறது. எப்படியென்றால் இவரும் என்றசொல் உம்மைத் தொகையாயிருப்பதால் முன்சென்றுபோன அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவர்களும் முஹம்மது(ஸல்) ஆகிய இவரும் என்ற பொருளைக் கொடுக்கின்றது. 124,000 நபிமார்களும் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த வெவ்வேறானவர்கள், வெவ்வேறு ஸுறத்தில் தோன்றியவர்களென்பது தெளிவாய் விளக்கப்படுகிறது. எனவே இந்த வசனம் நபிமாருடைய வெளிப்படையான(லாஹிறான) ஸுறத்தென்ற உடலை குறிப்பிட்டதாகும். இப்போது இரண்டாம் வசனத்தை நோக்குங்கள்

‘‘முன்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவரே’’ என்ற வசனம் காலத்தால், இடத்தால், வேறுபட்ட நபிமார்களின் ஸுறத்துக்களெல்லாம் முஹம்மது(ஸல்) என்ற இந்த றசூலின் ஸுறத்துக்கள்தானென்று இணைத்துக்(பிரிவில்லாமல்) காட்டுகிறது. அதாவது உடலான ஸுறத்துக்களை வேறுபடுத்தியும் அவற்றை ஆட்சி செய்த நூர் கால வேறுபாட்டில் கட்டுண்ணாத ஏகமான ஒன்றேயொன்று என்று ஏகமாக்கியும் இவ்வாயத்து உறுதிப்படுத்துகிறது. அப்படியானால் இவ்வாயத்தில் பாவிக்கப்பட்ட “இவர்”என்பது நூர் என்ற றூஹுவான ஹக்கைக்குறிப்பிட்டதென்பது நிரூபணமாகிறது. மேலும் இவர்

என்ற சொல் முக்காலங்களையும் தன்னுள் கொண்டதாய் (சேய்மைச்சுட்டாய்) அமைந்திருப்பதால் முன் நபிமாரின் தோற்றத்தில் வெளியானதும் முஹம்மது(ஸல்) என்ற ஸூறத்தில் வெளியாகியிருப்பதும் என்றும் நிலையாய் ஏகமாய் இருந்து கொண்டிருக்கிற “நூர்”தானென்று உண்மை தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நூறின் ஸூறத்துக்களையே நாம் ஜடமாய்க்கணித்து மயங்கிக் கொண்டிருக்கிறோம் என்பது இவ்வாயத்துக்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. உலகு நூரைக் கொண்டே சிருஷ்டிக்கப்பட்டு நூரிலேயே வாழ்ந்து அந்த நூரிலேயே மறையும் தோற்றப்பாடேயென்பதும் சர்வ ஆலங்களுக்கும் றூஹுவாய் இருப்பதும் அந்த நூரேயென்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே நூர் பிரிப்பதுபோலும் இணைப்பதுபோலும் தென்படுவது அறிவிலுள்ள மருட்சியே யாகும். பிரிப்பதற்கும் இணைப்பதற்கும் இருபொருட்கள் வேண்டும். உள்ளது ஏகமான ஒரேயோர் நூர்தானென்றால் எதைப்பிரிப்பது? எதை இணைப்பது, இவ்வாயத்து (53:36) கலிமாவின் மிகமுக்கியமான தலீல்களில் ஒன்றாயிருக்கிறது. முஹம்மது(ஸல்) என்ற சிருஷ்டியிலும் முன்சென்ற நபிமார்களென்ற சிருஷ்டியிலும் றூஹுவாயிருப்பது எது? அதுவும் நூர்தான். அப்படியானால் ஒவ்வோர் சிருஷ்டியும் நான், நானென்றுணரும் தன்னுணர்வு ஏகமாயுள்ள ஒரேயோர் நூரின் தன்னுணர்வு தானென்பதை மறுக்கமுடியாது. இவ்வுண்மையில் இன்ஸானைத் தரிபடுத்துவதே கலிமா தரப்பட்ட நோக்கமாகும்.

இவ்வளவு தெளிவான மன்கூல், மஃகூலான பிரமாணங் களால் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் உண்மையை மறுக்கும், நிராகரிக்கும் மனிதன் வேதத்தை ஒப்புக் கொண்டவனுமல்ல, உண்மையான யுக்தியை ஏற்றுக்கொண்டவனுமல்ல. குர்ஆனின் கூற்றை ஏற்றுக்கொள்ளாத ஒருவன் இரவல் மூளையுடன் வாழும் கால் நடையாகவே இருப்பான். நான் படைத்த கால் நடைகளில் கேவலமானது சிந்திக்கத் தெரியாத மனிதன் என்று இறைவன் கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒவ்வோர் ஸூறத்தும்(விசேடமாய் மனிதன்) தன்னை இறைவனை விட்டும் வேறாய் நம்பும்போது அவனிடமுள்ள நூர் என்ற அறிவு பல திரைகளைக் கொண்டதாய் அமைந்து விடுகிறது. இந்த நூர் அனாநிய்யத்தென்ற(ஷிர்க்குடன்) திரையுடன் இருக்கும்போது நப்ஸு அல்லது சிருஷ்டிக்கப்பட்ட உயிர் என்றும் அதன் தோற்றப்பாடு(ஜடம்) சிருஷ்டியென்றும் பெயர்பெறுகிறது. இந்த ஜடமும் இதன் நப்ஸும் மரணத்தை அனுபவிப்பவை. இந்த ஜடத்துக்கும் அந்த நப்ஸுக்கும் “தாத்தாய்” இருக்கும் நூர் எப்போதும் அழிவதோ, மறைவதோ இல்லை. எனவே நப்ஸு என்பது நூர் என்ற அறிவில் கண்டப்படுத்தப்பட்ட ஓர் நிலையாகும். நூர் மறைந்ததாய் இருப்பது எமது அனாநிய்யத் தென்ற திரையினால்தான். நூர் என்றும் இருந்த நிலையில்தான் இருக்கிறது. எப்போது அனாநிய்யத்தென்ற ஷிர்க்கிலிருந்தும் மனிதன் விடுபடுகிறானோ அப்போதே அவன் தன் சொந்த உண்மை நூர்தான் என்பதையுணர்ந்துகொள்வான். இம்மனிதனுடைய ஜடஉடலும், இறந்து மீண்டும் உயிர்பெற்ற நப்ஸும் அல்லாஹ் வெளியாகும் மழ்கறாய் அமைந்து விடுகிறது. நபிமார், வலிமார்களின் நிலமை இதுவே. இவ்விபரத்தைச் சரிவர விளங்கிக் கொண்டால் தூதை அனுப்பிய இறைவனும், அனுப்பப்பட்ட றஸூலும்(தூதரும்), தூதுத்துவத்தை ஏற்கும் மறுக்கும் நப்ஸுகளும் ஏகமான நூரின் ஒவ்வோர் “மர்த்தபா” நிலையாகும் என்பதை எம்மால் உணரமுடியும்.

**குர்ஆன்: 76:30**

وَمَا تَشَاءُونَ إِلَّا أَنْ يَشَاءَ اللَّهُ ۚ إِنَّ
اللَّهَ كَانَ عَلِيمًا حَكِيمًا

**அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள்(எதையும்) விரும்பமுடியாது.**

இவ்வாயத்தின்படி எனக்கேற்படும் விருப்பம் அல்லாஹ்வுடைய விருப்பம்தான் அல்லது அல்லாஹ்வுடைய எண்ணம்தானென்றால் நானிருக்கிறேனென்றுணரும் நான் யார்? நல்ல எண்ணம், கெட்ட விருப்பம், நல்ல செயல், தீய செயலை நிர்ணயிப்பதும், அமுல்படுத்துவதும் அதாலெத்தென்ற நீதிநிர்வாகத்தைச் சேர்ந்ததாகும். நானிங்கே விளக்குவது தௌஹீதுடைய விஷயம்.

இவ்வாயத்துக்கு மாறாகவும் சில ஆயத்துக்கள் தென்படுகின்றன. மனிதனும் விரும்புகிறான், இறைவனும் விரும்புகிறான். ஆனால் இறைவனுடைய விருப்பம்தான் நிறைவேறுகின்றதென்று சில வசனங்கள் விபரம் தருகின்றன. இவ்வகை ஆயத்துக்களில் மனிதனுடைய விருப்பம் என்று கூறுப்பட்டது நப்ஸானியாவின் விருப்பத்தைக் குறிப்பிட்டதாகும், சுயநிர்ணய உரிமையுடைய மனிதனின் தீய எண்ணங்கள், விருப்பங்களைக் குறிப்பிட்டதாகும். நன்மை அல்லாஹ்வில் நின்றுமுள்ளதென்றும் தீமை சிருஷ்டியில் நின்றுமுள்ளதென்றும் குர்ஆன் கூறுவதை ஊன்றி நோக்குக.

**குர்ஆன்: 57:22**


مَا أَصَابَ مِن مُّصِيبَةٍ فِي الْأَرْضِ وَلَا فِي أَنفُسِكُمْ إِلَّا
فِي كِتَابٍ مِّن قَبْلِ أَن نَّبْرَأَهَا ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى اللَّهِ يَسِيرٌ

**பூமியிலோ, உங்களுக்கோ ஏற்படக்கூடிய எந்தக் கஷ்டமும், அவற்றை நாம் சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே (லவ்ஹுல்மஹ்பூல் என்னும்) புஸ்தகத்தில் (பதியப்பட்டு) இல்லாமலில்லை. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதே.**

இவ்வாயத்தில் "தஜயுனுல்ஊலா", என்ற பொதுக் கற்பனையும், ''தஜயுனுஸ்ஸானி", என்ற விபரக்கற்பனையும் விளக்கப்பட்டிருப்பதை ஊன்றி நோக்குக.

றசூல்(ஸல்) அவர்களுடைய கைமட்டுமல்லாமல் ஸுறத்தே அல்லாஹ்வுடையது தானென்றால் நாம் அதை மறுக்க வேண்டிய அவசியமில்லை. மறுப்பது சிந்தித்துத் தெளிவு பெறாத குற்றமாகும். நாம் முன்பு காட்டிய 53:56ம் இலக்க ஆயத்தில் "அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவரே" என்ற வசனம், முகம்மது(ஸல்) என்ற மனித உடலை மட்டும் குறிப்பிட்டு கூறப்பட்டதல்ல. அவர்களின்(சூறத்தில்) தஜல்லியாயிருந்த நூரைப்பற்றி கூறப்பட்டதாகும். அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவரே என்ற வசனம் முன் வசனத்தோடிணையும்போது இறந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும் ஒன்றுபடுத்திக் காட்டுவதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முஹம்மது(ஸல்) என்ற அவர்களை(ஸுறத்தை) நாம் றசூல் என்று கூறுவது "இஸ்தியாரா" என்ற இரவல் வழக்கமாகும். முஹம்மது(ஸல்) என்ற ஸுறத்தைத் திரையாய்க் கொண்டிருந்ததும், மூஸா(அலை), ஈஸா(அலை) போன்ற மற்றெல்லா நபிமார்களின் ஸுறத்துக்களை திரையாக் கொண்டிருந்ததும் ஏகமாய் என்றும் நிலையாய்த் தரிபட்டுள்ள(ஒரேயோர்) ஏகமான நூர் மட்டும்தான். இந்த நூரின் இன்னோர் பெயர் றஹ்மத் என்பதாகும். நூரென்று பெயர்கொண்ட இறையறிவு(காலத்தில்) தன்னில் தரிபட்டுள்ள யாவற்றையும் சூழ்ந்துகொண்ட "முஹீத்"தாக இருக்கிறது. இவ்விபரத்தை விரிவாய்விளக்க இன்னும் எவ்வளவோ கூறவேண்டியுள்ளது. நீங்கள் எப்போது றசூலாக்கப்பட்டீர்களென்று கேட்டபோது, நான் ஆதம்(அலை) உயிருக்கும் உடலுக்குமிடையிலிருந்தபோது என்று ஓர் ஹதீஸும், மண்ணுக்கும் தண்ணீருக்குமிடையிலிருந்தபோது என்று இன்னோர் ஹதீஸும் றசூல்(ஸல்) அறிவித்ததாகக்கூறிக் கொணடிருக்கின்றன. நான் விரிவைப் பயப்படுவதால் அவற்றை இங்கு தரவில்லை.

நாம் சுய நிர்ணய உரிமையுடைய அப்துக்களா யிருக்கிறோம். இவ்வுரிமை அனாநிய்யத்தினால், துவித உணர்வென்ற பொய்க் கற்பனையால்தான் உருவாகியிருக்கிறது.

இது வெறும் பாதில், இல்லாத ஒன்றாகும். அப்படியிருந்தும் நானென்றுணரும் என் சொந்த றூஹுவின் அனுமதியின்றி அனாநிய்யத்தை உருவாக்கிக்கொண்ட எனது நப்ஸு இயங்க முடியாது. நப்ஸின் அனுமதியின்றி உடலின் ஓர் அணுவும்கூட இயங்கமுடியாது. இதற்கு உதாரணம் (மையித்)பிரேதம். உயிராய்(றூஹுவாய்) இருந்த நானே என் நப்ஸை கலீபாவாய்க் கொண்டு உடலை இயக்குகிறேன் என்பதை நம்மில் எவரும் மறுப்பதற்கில்லை. எனவே என்னுடலும், நப்ஸும் எனக்கு லாஹிர், பாதினான அடிமைகளாய் இருக்கின்றன. பௌதீக சூட்சும உலகங்களை இறைவன் அடிமைகளாய் கொண்டிருப்பதைப்போல்.

என்னுடல் எனக்கு அடிமையாயும், நான் உடலின் உரிமையாளனாயும் இருக்கிறேன். ஒருவன் என்னுடமைப் பொருளான என்கையில் சத்தியம் செய்தால் அது என்னில் செய்யப்பட்ட சத்தியம்தான். இதை நாம் மறுக்க முடியுமா? றசூல்(ஸல்) அவர்கள் சுயநிர்ணயஉரிமையற்ற அப்துவாக இருந்தவர்கள். அவர்களிலிருந்து வெளியான(சரியான, பிழையான) எச்செயலும் அவர்களுடைய பிராண நரம்பைவிடச் சமீபமாய் இருந்து கொண்டிருந்த அல்லாஹ்வின் அங்கீகாரம் இல்லாமல் நடைபெற்றிருக்காது. இவர்களின் சிற்சில செயல்களில் தவறிருப்பதாய் நாம் காணுகிறோம். இது எங்களுடைய அதாலெத்தென்ற ஒளித்திரையினால் ஏற்பட்ட மருட்சியாகும். அவர்களிலிருந்து வெளியான மறதி, தவறு போன்றவை மனிதர்களுக்கு நேர்வழிகாட்டுவதற்காகவும், அவர்களில் இன்ஸானியத்தென்ற மனிதஉணர்வும் இருந்தது என்பதை விளக்குவதற்காகவுமே நடைபெற்றன என்பதை நாம் உணரவேண்டும். மறதி, தவறு இல்லையென்றால் அவர்களை நாம் ஓர் காமீல் என்று கொள்ளமுடியாது. அப்து என்பதில் இருவகையுண்டு. ஒன்று சுயநிர்ணய உரிமையுள்ள அப்து. மற்றொன்று சுயநிர்ணய உரிமையற்ற அப்து. முந்தியது இன்ஸானியத்தையும், பிந்தியது உலூஹியத்தையும்

நோக்கியது. இவ்விரு நிலைமைகளும் அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவையாகும். நானும் உங்களைப் போன்ற மனிதனே ஆயினும் என்னைப் போன்றவர் இல்லையென்று றசூல்(ஸல்) அவர்கள் கூறிய கூற்று இதற்கு ஆதாரமாகும்.

ஷிர்க்கென்றும் அனாநிய்யத் தென்றும் கூறப்படுகிற நஜீஸிலிருந்து எப்போது மனிதஅறிவு விடுபட்டதோ அப்போதே அவ்வறிவு நூர் என்ற பெயரைப் பெற்றுக்கொள்கிறது. அவ்வறிவின்(றூஹுவின்) ஓர் விசேட தத்துவம்தான் ஜிப்ரீல் (அலை) என்பது. இதை றூஹுல் குத்தூஸ் என்றும் கூறப்படும். இவ்வறிவை அல்லாஹ்வுடைய அறிவென்று கூறுவதைவிட மேலதிக விபரம் கூறுவதற்கில்லை. இந்த அறிவு அவசியத்தின் போது அவசியத்தினளவு வெளியாக மழ்ஹறாய் அல்லது ஹுறத்தாய் இருந்த மனிதர் முஹம்மது(ஸல்) அவர்களுடைய லாஹிறான உடல், அல்லாஹ்வின் ஓர் குறிப்பிட்ட ஸுறத்துத்தானென்றால் அம்மனிதரின் கை அல்லாஹ்வுடையது தானென்பதை நாம் ஏன் ஏற்க முடியாது? இங்கே அல்லாஹ் யார்? றசூல் யார்? அப்து யார்? றப்பு யார்? என்பதைச் சிந்தனை செய்து தெளிவு பெறுங்கள்.

அல்லாஹ் வேறு, முஹம்மதென்ற மனிதர் வேறு, லாத், உஜ்ஜா, மனாஸ் போன்ற இலாஹுகள் வேறு என்று நம்பியிருந்த மக்களின் அறியாமையையும் ஷிர்க்கையும் நீக்கி அல்லாஹ் வுடன் அவனையன்றிப் பிறிதொன்றில்லை என்பதை விளக்குவதற் காகவே 53:56 போன்ற பல ஆயத்துக்களை கலிமாவின் தலீல்களாய் இறைவன் எமக்கருளியிருக்கின்றான். இவ்வகை ஆயத்துக்களை வலிந்துரை கொள்ள, இரட்டடிப்புச் செய்ய வேண்டிய அவசியமில்லை. இவ்வகை ஆயத்துக்கள் எமது அறிவிலேற்பட்ட திரையை நீக்குவதற்காகத் தரப்பட்டிருக் கின்றனவேயன்றி மறுபிறவியை விளக்க அருளப்பட்டவையல்ல.

நூர் தஜல்லியாகியுள்ள ஸூறத் அல்லாஹ்வுடையது தானெனில், இப்போது அந்த நூர் அல்லது றிஸாலத் எங்கே? இப்போதும் அது இருந்த படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. நாம் காலத்தை மூன்று பிரிவாய்ப் பிரித்துக் கொண்டிருப்பதால் அந்த நூர்(றிஸாலத்) இப்போதில்லை என்று மருண்டு விடுகின்றோம். மேலும் நாம் றசூல் என்று நம்பியிருந்தது முஹம்மது(ஸல்) என்ற பெயரால் அழைக்கப்பட்ட பௌதீக உடலைத்தான், அதாவது ஓர் ஸூறத்தையே றசூல் என்று நம்பியிருந்தோம். உடல் என்ற வெறும் ஸூறத்துக்கு "றசூல்" என்ற சொல் "இஸ்தியாரா" வென்ற இரவல் வழக்காகப் பாவிக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் உணரவேண்டும். றசூல் என்று எம்மால் கணிக்கப்பட்ட ஸூறத்தான உடல், காலத்தில் இடத்தில் கட்டுண்ட எமதறிவுக்கு மறைந்து விட்டது. ஆயினும் அதிலாட்சி செய்த நூர்(றிஸாலத்) என்றுமிருந்தது போலவேதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே இனிமேலும் றசூல்மார்கள், நபிமார்கள் தோன்றுவார்களென்பது பொருளல்ல. ஆயினும் வலிமார்கள் (றசூலுடைய உலமாக்கள்) தோன்றுவார்கள். இவ்வகை வலிமார்களில், றசூல்மார்களில் பெரும்பாலார் அறிந்து கொள்ளாத சில உண்மைகளை அறிந்து கொண்ட வலிமார்களுமுண்டு. மூஸா(அலை) அவர்களுக்கும் ஹில்று (அலை) அவர்களுக்குமிடையில் நடந்த செய்தி நாம் கூறிய உண்மைக்கு ஆதாரமாய் இருக்கிறது. எனக்கும் எனதடியானுக்குமிடையில் ஓர் சிர்ருண்டென்றும் அதைப் பெற்றுக்கொள்ள முர்ஸலான நபிமார்களோ, முகர்ரபான மலக்குகளோ இடம் பெறமாட்டார்களென்றும் ஓர்ஹதீஸ் விளக்கம் தருகிறது. இவ்வகைச் சிர்ருடைய அடியார்களில் முதன்மையானவர்கள் எமது றசூலேகரீம் முஹம்மது முஸ்த்தபா றசூல்(ஸல்) அவர்கள்தான்.

நூர் என்பதே காலமாய் இருப்பதால் அது புதியதோ பழையதோ அல்ல. காலம் வரைவிலக்கணத்தை ஏற்கா தென்பதை இன்றைய விஞ்ஞானம் கூட ஏற்றுக்கொண்டுள்ளதாய்

நான் முன்பே கூறியுள்ளேன், காலத்துக்கு மனித அறிவின் மருட்சிதான் தடையாய்த் திரையாய் அமைந்திருக்கிறதேயன்றி வேறு எதிரிடை கிடைக்கவே கிடையாது. நூர் வெளியாகும் மழ்ஹறாய்(ஸுறத்தாய்) இருந்த ஆதம்(அலை), மூஸா(அலை), ஈஸா(அலை), முஹம்மது(ஸல்) போன்றோரின் ஸுறத்துக்கள் கால வரையறைக்குட்பட்டவை. ஜடம் என்று கணிக்கப்பட்டவை. தோன்றி, இருந்து, மறைந்தவை. ஆனால் றிஸாலத், றஹ்மத் என்று பெயர் கொண்ட நூர் என்றுமிருந்த படியே தானிருக்கின்றது. காலம் என்பதும் றிஸாலத்தென்பதும், றஹ்மத் என்பதுவும் நூர் என்பதும் இதுவே "முன் வந்தவர் இவரே", என்று 53:56ம் ஆயத்தில் கூறுப்பட்ட வசனம் காலத்தில் கட்டுண்ட மனித அறிவுக்கு மறுபிறவியை விளக்குவது போல் தென்படுவது வஹ்முவாகும்.

மறுபிறவியை மறுப்பதே ஆயத்தின் நோக்கமா யிருக்கிறது.

இன்ஸான் என்பது இறைவனின் இறுதி மழ்ஹறா யிருக்கிறது. இதை இந்நூலில் வேறோர் இடத்தில் விபரித்துள்ளேன். இன்ஸானென்ற ஸுறத்திலுள்ள (படித்தவர், படியாதவர்) எவரிடத்திலாவது நூர் வேலை செய்ய ஆரம்பித்தால் (பரிசுத்தமாய் அமைந்தால்) முன்வந்த றசூல்தான் இம்மனிதரின் ஸுறத்தில் காட்சியளிக்கிறதென்றாகும். அவ்லியாக்களில் முழுமை பெற்ற "குத்பு"களின் நிலைமை இதுவே.

# 26

# றஹ்மத் றிஸாலத் என்பவை எவை?

**குர்ஆன்: 21:107**

وَمَآ أَرْسَلْنَٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَٰلَمِينَ ۝١٠٧

**(நபியே!) நாம் உம்மை உலகத்தார்யாவருக்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கிறோம்.**

இதுதான் இன்றுள்ள பெரும்பாலான தப்ஸீர்களின் கருத்து, மொழிபெயர்ப்பு ஆகும். நாம் உம்மைச் சர்வஉலகங்களுக்கும் றஹ்மத்தாகவும் (அருட்கொடையாகவும்) றஸூலாகவும் (தூதுவராகவும்) அனுப்பியிருக்கிறோம் என்பதே ஆயத்தின் சரியான மொழிபெயர்ப்பு ஆகும். றஹ்மத், றிஸாலத் என்பவை பெயர் இரண்டேயானாலும் அவற்றின் வட்டவரைகள் பலவானாலும் உள்ளது நூர் மட்டுந்தான். இவ்வாயத்தின்படி றஹ்மத் இன்னும், இன்றும் இருந்து கொண்டேயிருப்பதால் பிரபஞ்சமும் இருந்து கொண்டேயிருக்கிறது. வுஜூது, றப்பு, அப்து, றஸூல், றஹ்மத் என்பவையெல்லாம் அல்லாஹ் என்ற சொல்லினால் உணர்த்தப்படும் ஹக்கு என்ற நூரின் ஒவ்வொரு நிலமையை (மர்த்தபாவை)ச் சுட்டியவையாகும். அல்லாஹ் மர்த்தபாக்களால் உயர்ந்தவன் என்பது குர்ஆனின் வாதம். ஹதீஸுகள் குர்ஆனை நிரூபிக்கின்றன. இந்த நூர் தான் உண்மையான றூஹு, ஹக்கு, அல்லாஹ் என்று கூறப்படுவது. இது அறிவேயன்றி வேறில்லை. அறிவு முமீன்களின் தவறிப்போன பொருள் என்றும் அதை எங்கே கண்டாலும் பெற்றுக்கொள்ள

வேண்டும் என்றும் கூறப்பட்ட ஹதீஸில் குறிப்பிடப்பட்ட அறிவு, தௌஹீதென்ற ஈமானுடைய அறிவேயாகும். நாவினால் கலிமாவைக்கூறிய மூமீன்களை நோக்கி இந்த ஹதீஸ் கூறப்பட்டதாகும். இவ்வறிவில் தரிபடுவதே ஈமான் என்பது. “எகீன்”(ஈமான்) என்பது முற்றாக(அல்லாஹ்வைப்பற்றிய) அறிவாகுமென்று பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன. றஸுல்(ஸல்) அவர்கள் “அனமின்னூரில்லாஹி வகுல்லுஸையின் மின்னூரி” நான் அல்லாஹ்வின் நூரில் நின்றுமுள்ளவன். சகலசிருஷ்டிகளும் என் நூரில் நின்று முள்ளவை என்று கூறிய ஹதீஸை நிருபணஞ் செய்யப் போதிய ஆதாரங்களுள்ளன.

**குர்ஆன்: 5:15**


يَا أَهْلَ الْكِتَابِ قَدْ جَاءَكُمْ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمْ كَثِيرًا مِمَّا كُنْتُمْ تُخْفُونَ مِنَ الْكِتَابِ وَيَعْفُو عَنْ كَثِيرٍ
قَدْ جَاءَكُمْ مِنَ اللَّهِ نُورٌ وَكِتَابٌ مُبِينٌ

**அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஓர் ஒளியும் தெளிவான வேதமும் வந்துவிட்டன.**

இவ்வாயத்தில் குறிப்பிடப்பட்ட நூர்(ஒளி) றஸுல்(ஸல்) அவர்களுடைய நூரென்ற றிஸாலத்தைக் குறிப்பிட்டதாகும். (அறிவை, றூஹுவைக் குறிப்பிட்டதாகும்.) இவ்வறிவில் தோன்றி, இருந்து, மறையும் அதன் பண்பு என்ற ஸிபத்தே சர்வ பிரபஞ்சத்தில் வெளியாகும் சக்தியாயிருக்கிறது. அந்த நூர் என்ற அறிவு எந்த எந்த நாமங்களைத் தன்னுடையதாய்க் கொண்டிருக்கிறதோ அந்த அந்த நாமங்களின் தொகுப்புச் சூறத்துக்களே நாம் காணும் பிரபஞ்சப் பொருட்களாய், ஆலங்களாய் இருக்கின்றன. (இன்னும் சிறிது செவி தாழத்துக)

நான் உறங்கும்போது ஒரு கனவு காண்கிறேன்.இந்தக் கனவு விழிப்புலகக் கணக்கின்படி 15நிமிடங்கள்தான் என்னிடமிருந்தது மணிக்கூட்டை ஆதாராமாய்க் கொண்டே இந்த 15 நிமிட நேரத்தைக் கணக்கிட்டேன். ஆனால் விழிப்புலகப் பதினைந்து நிமிடம் நான் கண்ட கனவின்போது 15நாளாக அல்லது 15 வருடமாகவும் தென்பட்டிருக்கலாம். இந்தகால வித்தியாசம் எமக்கு ஏன் ஏற்படுகிறது? விழிப்பில் நாம் காலத்தை கணக்கிட்டமுறை(அடிப்படை)வேறு, கனவின்போது எனது உள்ளம் காலத்தை கணக்கிட்டமுறை(அடிப்படை) வேறு. எனவேதான், விழிப்புலக 15நிமிடம் கனவுலகில் 15நாளாக அல்லது 15வருடமாகத் தென்படுகிறது. உண்மையை நோக்கினால் நாம் காலத்தை அறிந்து கொள்ளும் முறையில்தான் எமக்கு இவ்வித மருட்சியேற்படுகிறது. இவ்வித மருட்சியை நீக்கிக் காலத்தோடு காலமாய் (நான் என்ற இன்ஸான் தரிபடவேண்டுமென்பதே கலிமாதரப்பட்ட நோக்கமாகும். இதை உறுதிப்படுத்தவே 53:56ம் ஆயத்து அருளப்பட்டதாகும். இதை இன்னும் சிறிது பொறுமையோடு நாம் ஆராயவேண்டும்.

இங்கே கலிமாவில் தரப்பட்ட “லா இலாஹ” என்ற இருசொற்களையும் நோக்கிப்பாருங்கள். ஒன்றுமில்லை, சிருஷ்டி யில்லை என்பது அதன் உண்மையான அர்த்தம். ஒன்றுமில்லை அல்லது சிருஷ்டியில்லை என்பது உண்மையானால், ஒன்றுமில்லையென்று கண்ட ஒன்றுமட்டுமே இருந்து கொண்டிருக்கும். அந்த ஒன்றுதான் “நான்” என்பது. இந்த நானுக்கு இடமோ, நேற்று, இன்று, நாளையென்ற முக்காலங் களோ முன்னிலை, படர்க்கை என்ற கட்டுப்பாடுகளோ இருக்காது. தன்மை மட்டுமாகவே அது இருக்கும். பிரபஞ்சத்திலுள்ள சர்வ அணுக்களும் வெவ்வேறாய் “நான்”, “நான்” என்று நம்பிக் கொண்டிருந்தாலும் “லா இலாஹ” என்பதை உணர்ந்து கொண்ட நான் எதுவோ அந்த ஒரேயொரு நான் மட்டுந்தான் இருக்கவேண்டும். அப்படியானால், நான்

இருக்கிறேன் என்ற உணர்வு கட்டுப்பாடற்ற ஒன்றின் உணர்வாகவேயிருக்கும். கட்டுப்பாடற்றது எதுவோ அதன் பெயர்தான் “அல்லாஹ்”, “நூர்”, “றூஹு” என்பது. இந்த றூஹு ஏகமான ஒன்றேயொன்றுதான். விளங்குவதற்காகவே ஒன்று என்று கூறுகிறோம். ஒருமைக்கும் ஏகத்துக்கும் வேறுபாடுண்டு.

**குர்ஆன்: 17:85**

وَيَسْـَٔلُونَكَ عَنِ ٱلرُّوحِ ۖ قُلِ ٱلرُّوحُ مِنْ أَمْرِ رَبِّى
وَمَآ أُوتِيتُم مِّنَ ٱلْعِلْمِ إِلَّا قَلِيلًا

**(நபியே!) றூஹுவைப்பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். அதற்கு நீர் கூறும், அது எனது இறைவனின் (அம்று) இரகசியத்தில் நின்றுமுள்ளது. அதைப்பற்றிச் சொற்ப ஞானமேயன்றி உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று கூறுவீராக.**

இவ்வாயத்தில் கூறுப்பட்ட றூஹு என்பதுதான் உண்மையான வஜுதுவாயிக்கிறது. இது மனித அறிவில் அமையக்கூடியதொன்றல்ல. இவ்விஷயம் இறைவனுக்கு மட்டும் சொந்தமானது. இந்த றூஹுவின் உண்மையான வெளிப்பாடு(லாஹிர்)தான் பிரபஞ்சம் என்பது. சர்வபிரபஞ்சத்தையும் உடலாயும், சர்வசிருஷ்டிகளின் றூஹுகள் எல்லாம் தன் றூஹுவாயும் கொண்டு அல்லாஹ் ஒரு விசேஷ ஸூறத்திலும் அவனிடத்தில் அவனே இன்ஸான் என்றபெயரோடு கலீபாவாகவும் இருக்கிறான். வுஜூது என்பது அல்லாஹ், றப்பு என்ற நாமத்தோடும், கலீபா என்பவர் சிருஷ்டி(இலாஹு) இன்ஸான் என்ற பெயரோடும் ஒன்றுக்கொன்று நேர்முரணாய்(லாஹிர், பாத்தினாய்) இருக்கிறது. இந்த றூஹு என்ற அல்லாஹ்தான் சிருஷ்டியான இன்ஸான் என்ற ஆதம்(அலை) அவர்களின் ஸூறத்தில் வெளியானான். “கலக்கல்லாஹு ஆதம அலாஸூறத்திர் றஹ்மான்” “ஆதத்தை

அல்லாஹ் றஹ்மானுடைய ஸூறத்தில் படைத்தான்" என்ற ஹதீஸே இதற்கு ஆதாரத்திற்குப் போதுமானதாகும். றஹ்மான் யார்? றஹ்மானுடைய ஸூறத் எது? இதைச் சிந்தனை செய்து பாருங்கள். றஹ்மான் (நல்லோர், தீயோர் யாவருக்கும் கிருபை செய்பவன்) என்பது அரூபியான வுஜூதா? ரூபியான கலீபா ஆதம்(அலை) அவர்களா? இதையும் சிந்தனைக்கெடுங்கள். மேலேதரப்பட்ட ஆயத்தில் எமக்குத்தரப்பட்ட சொற்பஞானமென்பது (அப்து-றப்பு) றுபூபிய்யத்தை நோக்கியும் நாமறியாத ஞானமென்பது இறைவனின் சுயநிலையான வுஜூதைநோக்கியும் கூறப்பட்டிருக்கிறது.

**குர்ஆன்: 15:29**

فَإِذَا سَوَّيْتُهُۥ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِى فَقَعُوا۟ لَهُۥ سَٰجِدِينَ ٢٩

**ஆகவே(ஆதம் ஆகிய)அவரை நான் சரியாக்கி அவரில் என்னுடைய றூஹ்ஹைவை ஊதினால் (புகுத்தினால்) அவருக்கு நீங்கள் சிரம்பணியுங்கள். (இதுதான் இன்றுள்ள மொழிபெயர்ப்பாகும்)**

இவ்வாயத்தில் "சவ்வைத்துஹுவனபஹ்து" என்று கூறியிருப்பதை பெரும்பாலான தப்ஸீர்கள் சரியான(விரிவுரை) விளக்கம் தந்துள்ளனவென்று கூறுமுடியாது. "ஊதுதல்", "புகுத்துதல்" என்பதற்கு மூன்று பொருட்கள் அவசியமாகும். புகுத்துபவன் அல்லது ஊதுபவன், புகுத்தப்படும் அல்லது ஊதப்படும் பொருள், புகுத்துதலை அல்லது ஊதுதலை ஏற்கும் பொருள் ஆகிய மூன்றுமில்லையானால் புகுத்துதல் அல்லது ஊதுதல் சரிவராது. இப்படிப் பொருள்கொண்டால் அது ஷிர்க்கையும் ஹுலுல்இத்திஹாதையும் உருவாக்கும். ஊதினான் என்றால், அவனிடமிருந்த றூஹு ஆதத்துக்கு ஊதும் போது படிப்படியாய்க் குறைந்து முடிவில் றூஹு இல்லாதவனாய் விடுவானே! றூஹு பிரிபடக்கூடியதோ கூடிக்குறையக்கூடியதோ அல்ல. அது ஏகமானது. எனவே, "சவ்வைத்து" என்ற

சொல்லுக்கு “ஊதுதல்” என்று பொருள் கொள்வதும் “நபஹ” என்ற சொல்லுக்குச் “சரியாக்கினான்”(“சமப்படுத்தினான்”) என்று பொருள் கொள்வதும் அகராதி அர்த்தப்படி பொருத்தமானதுதான்.

ஆயினும் “சவ்வைத்து” என்ற சொல்லின் உண்மைப் பொருளைத் தெளிவாய் அறியவேண்டியது அவசியமாகும். தப்ஸீர்கள் கூறிக்கொண்டிருக்கும் பொருளை நாம் ஒப்புக் கொள்வதானால், அப்துக்கு றப்பு முரண் என்ற தத்துவப்படி இறைவனுடைய ஊதுதல் எம்முடைய ஊதுதலைப் போலல்ல வென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் காட்டிய இவ்வாயத்து ஏகத்துவத்துக்கு முரணாய்த் தென்படுகிறதேயென்று எமக்கு மயக்கமேற்படுவதற்குக் காரணமென்ன? காரணம் எம்முடைய மறதிதான். 112ம் சூறாவினால் உணர்த்தப்பட்ட ஓர்தத்துவ உண்மையை நாம் மறந்துவிட்டுக் குர்ஆனை நோக்குவதால், எமதுள்ளத்தில் “கன்னாஸ்” என்றஸைத்தான் சந்தேகத்தை உருவாக்கி விடுகிறான். நாம் மறந்துவிட்ட தத்துவம்தானென்ன? அதுதான் அப்துக்கு றப்பு நேர்முரண் என்ற தத்துவம். நாம் சிருஷ்டியாயிருந்து கொண்டும் எமது அனுபவ அடிப்படையை வைத்துக்கொண்டும் இறைவனின் செயல்களை எடைபோடு வதனால்தான் இறைவசனங்களில் பெரும்பாலும் சந்தேகம் ஏற்படுகிறது. பழக்க வழக்கம், நூலறிவு, அடிப்படையில்லாத சிந்தனை போன்றவற்றை கருவிகளாய்ப் பயன்படுத்தி ஸைத்தான் எம்மை ஏமாற்றி விடுகிறான். குர்ஆனை நோக்கும்போது அதே குர்ஆன் கூறும் தத்துவ உண்மைகளை அடிப்படையாய் வைத்துக்கொண்டே நாம் குர்ஆனை விளங்கவேண்டும். இவ்வாயத்தில் மயக்கம் கொள்ள வேண்டியதில்லை என்பதற்கு இவ்வளவு விபரமே போதும். ஆயினும் இந்த வேத வசனத்தில் மனித குலம் அறிந்து கொள்ளவேண்டிய உண்மைகள் பல உணர்த்தப்பட்டிருப்பதாலும் இவ்வசனம் கலிமாவின் தலீல்

(ஆதாரம்)களில் ஒன்றாக இருப்பதாலும் நாம் இன்னும் சிறிது ஆராய்வோம்.

இறைவன் தன்னைத் தானே அறிந்து கொண்டிருப்பவனாயும், அவனுடைய அஸ்மாக்களென்ற (நாமங்களென்ற) வெறும்ஸூறத்துக்களான சிருஷ்டிகள்(சர்வ ஆலங்களிலுள்ள யாவும்) தம்மைத்தாமே அறியாதனவாயும் இருந்த நிலையை "தஐனுல்ஊலா" (பொதுக்கற்பனை) என்று கூறப்படும். இதை "அமா" என்று கூறினாலும் பிழையல்ல, முதலாம் குறிப்பு என்று கூறினாலும் பிழையல்ல. "அமா" "தஐயுனுல்ஊலா" இவ்விரு சொற்களும் குர்ஆன் ஹதீஸுகளினால் தரப்பட்ட சொற்களாகும். 1ம் குறீப்பு என்பது எம்போன்ற மனிதர்களால் உருவாக்கப்பட்ட சொல்லாகும். விளங்கிக் கொள்வதற்காக இப்படிக் கூறுவதில் தவறில்லை. ஆயினும் இலக்கத்தில் தரிபடுத்துவது குற்றம்தான். "அமா" என்ற நிலையில் இருந்த, இருக்கிற அல்லாஹ் (வுஜூது அல்லது தாத்து) அவனிடம் இயல்பாயிருந்த "றுபூபியத்" என்ற (தஐனுஸ்ஸானி) விபரக்கற்பனையை எப்போது எடுத்துக் கொண்டானோ அப்போதே நூர் என்ற பெயரும் (அறிவும்) அதில் பொதிந்துள்ள சகல ஆலங்களும் உருவாகிவிட்டன. எங்கே உருவாகிவிட்டன? அவனுடைய நூர் என்ற அறிவில்தான். இவ்விபரம் குர்ஆனில் 54:49,50 போன்ற பல ஆயத்துக்களில் விளக்கப்பட்டுள்ளது. முதலாம் குறிப்பென்ற "அமா" அல்லது "தஐயுனுல் ஊலா"வை ''அஹது" என்றும், றுபூபியத் என்ற அல்லது "தஐனுஸ்ஸானி" யான இரண்டாம் குறிப்பை, "உஹது'' என்றும் கொள்ளவேண்டும். மூன்றாம் குறிப்பு என்ற உபூதியத்தான (அப்து) சிருஷ்டியின் நிலமையே "வாஹித்'' என்பதாகும். இம்மூன்று நிலைமை(மர்த்தபா)களும் காலத்தால், இடத்தால் வேறுபடாத ஏகமானதே என்பதயும் நாம் விளங்குவதற்காகவும், விளக்குவதற்காகவுமே முன்பின்னாய் கூறுகிறோம் என்பதையும் ஓர்கணமும் மறக்கக்கூடாது.

இறைவன் தனது நாமங்களின்(அஸ்மாக்களின்) மொத்த ஸூறத்துக்களை ஒன்றிணைத்து, இன்ஸான் என்ற தனது நாமத்தின் ஸூறத்தை ஓர் கலீபாவாக உருவாக்கினான். அதாவது இன்ஸான் என்ற நாமத்தை மற்றெல்லா நாமங்களையும் சூழ்ந்ததாய் அமைத்து அவனுடைய நாமத்தின் (இன்ஸானென்ற நாமத்தின்) ஸூறத்தையே(கலீபா) பிரதிநிதியாய் ஆக்கிக் கொண்டிருக்கிறான். இந்தக் கலீபாவே “இன்ஸானுன் கபீர்” என்ற ஆதம்(அலை) அவர்களாகும். இந்த ஆதம் என்ற கலீபா என்பரின் லாஹிறான உடல் சர்வ ஆலங்களாகவும், ஆலங்களி லுள்ள சர்வ அணுக்களும் நான் நானென்று தன்னைத் தானே உணரும் தன்னுணர்வு இந்தக் கலீபாவுடையதாகவும் இருக்கிறது.

“கலக்கல்லாஹு ஆதம அலாஸூறத்திர்றஹ்மான்” ஆதத்தை அல்லாஹ் றஹ்மானுடைய ஸூறத்தில் சிருஷ்டித்தானென்றும், “இன்னல்லாஹ கலக ஆதம அலாஸூறத்திஹி” அல்லாஹ் ஆதத்தைத் தன்னுடைய ஸூறத்தில் படைத்தானென்றும் இரு ஹதீஸுகள் காணப்படுகின்றன. இந்த ஹதீஸுகள் “ஸஹீஹ்” உண்மையானவை, நம்பத்தகுந்தவை யென்பதை யாவரும் ஒப்புக் கொண்டிருப்பதால் மேலதிகவிபரம் இங்கு அவசியமில்லை. தஜயுனுல் ஊலா என்ற பொதுக்கற்பனையில் அமைந்திருந்த அவனுடைய ஓர் நாமத்தின் (இன்ஸானென்ற இறுதியான நாமத்தின்) ஓர் ஸூறத்துத்தான் மனிதன் என்பது. இம்மனிதன் 6அடி உயரம் அல்லது ஓர் குறிபபிட்ட உயரம், நிறை போன்ற தளைகளில் கட்டுண்ணாதவராவார். இவருடைய உண்மையான ஸூறத்துப் பேரண்டமாயும் என்றும் விரிவடைந்து கொண்டேயிருப்பதாயும் அமைந்திருக்கிறது. சர்வ பேரண்டத்துக்கும் உயிராய்(றூஹுவாய்) இருப்பவரும் இவரேதான்.

கலீபாவின் வெளிப்படையென்ற(லாஹிறான) ஸூறத்து ஜீவனற்றதாய், வெறும் கற்பனையாய், இயக்கமற்றதாய்

இருந்தமையால் அதன் தேவையைப்பூர்த்தி செய்யும் நோக்கமாய் (சிருஷ்டி தன்னையும் தன் றப்பையும் அறிவதற்காக)த் தன்றூஹுவைக் கொண்டே அந்தக் கலீபா என்ற ஸுறத்தில் தரிபாடாய் அமைந்திருக்கிறான். அவன் பாதின் என்ற றூஹுவாயும், பேரண்டம் அவனுடைய லாஹிர் ஆகவும் இருக்கிறது. றூஹு றப்புவாயும், பேரண்டம் அப்துவாகவும் இருக்கிறது. குர்ஆன்51:56 போன்ற பலஆயத்துக்கள் இவ்விபரத்துக்கு ஆதாரமாய் இருக்கின்றன. ஹதீஸுகளும் அனுபவமும் இவ்விபரத்தை உறுதி செய்கின்றன.

எனது பௌதீகக் கண்ணாடியில் நான் கண்ட என்னுடைய ஸுறத்துக்கு நானே உயிராய் இருப்பதுபோல அல்லாஹ் தன்னுடைய நூரென்ற அறிவுக்கண்ணாடியில் தென்படும் இன்ஸானுன்கபீர், கலீபா என்றெல்லாம் கூறப்படுகிற ஆதம் (அலை) என்ற தன்னுடைய ஸுறத்தில் தன் றூஹுவைக் கொண்டு தானே தஜல்லியாயிருக்கிறான். நான் என் ஸுறத்தைக் கண்ட பௌதீகக் கண்ணாடி என்னைவிட்டும் இடத்தால், காலத்தால் வேறுபட்டது. இறைவனுடைய நூரென்ற கண்ணாடி அவனைவிட்டு வேறானதல்ல. அது அவனேதான். குணியும் குணமும் வெவ்வேறல்ல. நாம் மிகச் சுருக்கமாய்க் கூறிய இவ்விபரம்தான் "றுபூபியத்" என்பது. உபூதியத்தென்றால் என்ன? என்பதைப் பின்னாலறிவோம்.

# 27

## விசேட சிந்தனைக்கு

என்னுடைய பௌதீகக் கண்ணாடியில் நானும் உங்களுடைய பௌதீகக் கண்ணாடியில் நீங்களும் கண்ட எம்முடைய ஸுறத்துக்களை எம்முடையதல்ல வென்று கூறமாட்டோமல்லவா? கண்ணாடியில் நான் கண்ட சூறத்து என்னுடையதுதானென்றால் என்னுடன் இருந்த சூறத்து என்னுடைய கண்ணாடியில் எப்படி நுழைந்திருக்கும்? அல்லது எப்படி ஒன்றியிருக்கும்? என்னைவிட்டும் என்னுடைய ஸுறத்தைப் பிரிக்கமுடியாதே பிரியாதே! கண்ணாடியை நீக்கிக் கொண்டால், கண்ணாடியில் தென்பட்ட ஸுறத்தைக் காணவில்லை. இப்போது அது எங்கே? என்னுடன் வந்து ஒட்டிக் கொண்டதென்று கூறமுடியாதே. என்னைவிட்டு என் ஸுறத்தை வேறாக்கியும், என்னுடைய ஸுறத்து என்னோடுதானிருக்கிறதென்று ஏகமாக்கியும் காட்டியது எனது கண்ணாடிதான். இது சிருஷ்டிகளின் விஷயம்.

நான் என்றுணரும் (நப்ஸானியத்தற்ற) றூஹுவாகிய என்னுடன் ஒன்றுமில்லாத நிலையில் (நானும் என் ஸுறத்தும் கண்ணாடியும் வெவ்வேறென்றில்லாத நிலையில்) (அமாவில்) என் அறிவுக் கண்ணாடியிலுள்ள அத்தனை ஸுறத்துக்களும் என்னுடையவைதான். சின்ன மனிதன் (இன்ஸானுன்ஸகீர்) ஆகிய நான் என் கனவில் கண்ட ஸுறத்துக்கள்யாவும், எனது மனமென்ற கண்ணாடியிலுள்ள என்னுடைய ஸுறத்துக்கள்தான்.

கனவைக்காணும் நான் ஆழ்துயிலிலிருக்கும் நிலையை அமாவுக்கும் கனவைக்காணும் நிலையை றுபூபியத்துக்கும் கனவில் வெளியாகும் ஸூறத்தான சிருஷ்டிகளின் உலகை உபூதியத் தென்றும் கற்பனைபண்ணிக் கொண்டால் இலகுவாய் விளங்கலாம். சிருஷ்டி ஆழ்துயில் நிலையிலிருந்து (இறங்கி) மாறுபட்டுத்தான் கனவைக் காணுகிறது. இறைவன் எம்மைப்போல் ஏறியிறங்கிப்பார்ப்பதில்லை. அவன் ஏககாலத்தில் என்றும் எல்லாமாய் இருந்தது போலத்தானிருக்கிறான். அவனே காலமாயிருப்பதால் அவனிடம் முன்பின்னென்பதில்லை.

நப்ஸைக்கொண்டு கனவைக் கண்டு கொண்டிருந்த றூஹுவாகிய நான் எல்கையற்றவனாயிருந்தும், என்னுடைய கனவின்பேது என்னை 6அடி உயரம் கொண்டவனாயும் காணுகிறேன். ஆயினும் அந்த 6அடி உயரம் கொண்ட ஸூறத்து (ஜடம்) கனவைக் கண்டு கொண்டிருக்கிற றூஹுவின் ஸூறத்துக்களில் நானும் ஒருவனேயென்பதைக் கனவின்போது உணர்வதில்லை. உணர்த்தால் கனவு கலைந்துவிடும். கனவில் வெளியான ஸூறத்து ஓர் குறிப்பிட்ட கட்டுப்பாட்டில் (கழாகத்ரில்) கட்டுண்டிருப்பதால், கனவுலகமே தன் சொந்த இடம் என்றும், கனவைக் காணும் நப்ஸுக்கும், அதற்கு வுஜுதான றூஹுவுக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்றும் மனம் நம்புகிறது. (ஷிர்க்கிற்கு உதாரணம் இதுதான்)

இதைப்போல(கனவில் வெளியான 6 அடி மனிதன் போல) மனித இனம் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்வுலகு ஓர் நீண்ட கனவு என்பதை அச்சிருஷ்டியால் திடீரென உணரமுடியாது. நீண்ட கனவுக்கொப்பான இவ்வுலக மக்கள் அவர்களின் சுயநிலையை அனுபவவாயிலாய் உணரவேண்டு மென்பதற்காகவே அதை அறிவிக்கும் நோக்கோடு நபிமார் உலகில் தோன்றினார்கள். இவர்களுடைய கூற்றை ஏற்றுக் கொண்ட மக்கள் கனவிலிருந்து விழிப்பைப் பெற்றபோது, காண்பவனும் காட்சியும் காட்சிப் பொருளான ஸூறத்தும் நானே

என்பதையுணர்ந்து அவர்களுடைய சொந்த நிலையில் தரிபட்டு விட்டார்கள். நபிமாரின் சொல்லை உதாசீனம் செய்தோர் (கனவிலிருந்தும் விழிப்படைய முடியாதோர்) அவர்களுடைய அறிவுக் கேற்றபடி ஓர் கற்பனை இலாஹுவை ஆக்கிக் கொண்டு தேடியலைகிறார்கள். அதாவது மிகப் பெரும்பாலான மக்கள் தங்கள் இறைவனைப் படர்க்கையிலிருப்பதாயும், அவன் தங்களை விட்டும் வேறானவனாயிருப்பதாயும், கற்பனை பண்ணிக்கொண்டு றப்பைத் தேடுகின்றார்கள். ஐம்புலன்களையும் ஊடகமாய்க் கொண்டு ஓர் நீண்ட கனவுலகில் வாழும் மனிதன் கலிமத்துத்தையிபாவின் போதனைக்குச் செவிகொடுத்து அதை விளங்கித் தெளிவடையும்போது தானே தன்னைத் தேடினேன் என்பதையும் நான் அழிவற்ற நித்திய ஜீவன் என்பதையும் உணர்ந்து கொள்ளமுடியும். இவ்வுணர்வு கனவுலகில் வாழ்ந்த சிருஷ்டிக்குரியதல்ல. விழிப்படைந்த நப்ஸுக்குரியதாகும். இத்தனைக்கும் மூலகாரணமாயிருந்த றூஹு இருந்தபடிதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே மனிதன் என்பவன் யார்? நான் என்பவன் யார்? இவ்வித கேள்விகளுக்கு அனுபவம் தான் விடை தரவேண்டும். குர்ஆன் 20:14ஆம் ஆயத்தை ஆராய்தல் செய்க.

மிக அபூர்வமான ஓர் ஞான விளக்கத்தை எவ்வளவு தூரம் சுருக்கமுடியுமோ அவ்வளவு தூரம் சுருக்கிக் கூறியுள்ளேன். “ஹலக்கல்லாஹு ஆதம அலாஸுறத்திர் றஹ்மான்” என்ற ஹதீஸையும் “இன்னல்லாஹ ஹலக ஆதம அலாஸுறத்திஹி” என்ற ஹதீஸையும் ஆழமாய் நோட்டமிடுக. தாத்து, ஸிபாத்து, அஸ்மா ஆகிய மூன்றும் ஏகமாய் பிரிவில்லாமல் இருந்துகொண்டிருப்பவன் எவனோ அவன்தான் நான் என்றுணர்பவன். சிருஷ்டியான மனிதனின் மனத்தில் உருவான நான் என்பது வெறும் பொய்யான ஷிர்க்காய் (பாதிலாய்) இருக்கிறது. இவ்வுண்மையை நேர் எதிரிடையாய் மாற்றிக் கொண்ட மனிதர்களே இவ்வுலகில் மிகப் பெரும் பான்மையாய் இருக்கிறார்கள்.

லாஹிறென்றும் பாத்தினென்றும் உடன்பாடும் எதிர்மறையும் இல்லாதிருந்த நூர், ஆதம் என்ற ஸூறத்தை எடுத்துக் கொண்டவுடன் லாஹிர், பாத்தின்(தோற்றம், தோற்றமின்மை) ஆகிய இரு தன்மைகளும் ஒன்றை விட்டொன்று வேறென்றில்லாமல் பொருந்தும்படி சரியாக்கி வைக்கப்பட்டுள்ளது. சர்வ ஆலங்களும் என் அறிவிலுள்ளதாய், சர்வ ஆலங்களுக்கும் உயிராயிருந்த இன்ஸானுன் கபீர் என்ற நான் என்னுடைய சுயநிலையில் (ஒரு படித்தரத்தில், மர்த்த பாவில்) ஜன்னத்தில் வாழ்ந்தேன். ஆயினும் தஜயுனுஸ்ஸானி என்ற விபரக் கற்பனையின்படி எனக்கு ஏற்பட்ட அறிவுப் புரட்சியினால் மறதியாளனாய் (என்னை நான் மறந்தவனாய்) மாறினேன். நான் வாழ்ந்த என் அறிவிலுள்ள ஜன்னத் இப்போது சின்ன இன்ஸானாய் (இன்ஸானுன் ஸகீராய்) இருக்கும் எனக்குப் பூமியாக (சூரிய குடும்பத்திலுள்ள ஒரு கோளமாக)க் காட்சியளிக்கிறது. பூமி, ஜன்னத் ஆகிய இரண்டுக்கும் “அர்லு” என்ற சொல்லே குர்ஆனில் பாவிக்கப்பட்டுள்ளது. 2:30, 2:36 போன்ற வசனங்கள் இவ்வுண்மைக்கு ஆதாரமாகும்.

அறிவுப் புரட்சியினால் சின்ன இன்ஸானாய், மறதியாளராய் மாறியிருக்கும் நாம், ஜன்னத் என்பது எம்மை விட்டும் வேறு எங்கேயோ ஒளிந்து கொண்டிருப்பதாய் நம்புகிறோம். எமதறிவிலேயே ஜன்னத் இன்றும் இருந்து கொண்டிருந்தாலும் இதை உணரும் பக்குவம் மிகப் பெரும்பாலாருக்குக் கிடைக்கவில்லை. மறதியிருப்பதனால்தான் மனிதன் உலகின் ஒரு மூலையில் இருப்பதாயும், உடலுக்குள் புகுந்து கொண்டிருப்பதாயும் நம்பியிருக்கிறான். சூட்சுமமான (பாத்தினான) உயிரும், தோற்றுவதான(லாஹிறான) உடலும் ஒன்றித்தவனே இன்ஸான் என்பவன். குர்ஆன் 86:5,6,7,8ம் ஆயத்துக்களில் பௌதீகஉடலையும் இன்ஸான் என்று கூறப்பட்டிருப்பதை ஆராய்க.

நாம் மறதியை நீக்கி நினைவை உருவாக்கிக் கொண்டால், எமது ஆரம்ப நிலையில் தரிபட எம்மால் முடியும். நாம் மறதியை நீக்கவும் நினைவை உருவாக்கவும் வேண்டுமானால் உள்ளது ஒரே ஒரு வழி மட்டுந்தான். இவ்வழியின் பெயர்தான் "ஹுர்புன் நவாபிலி". நினைத்தல், திக்று செய்தல் என்பது. இதை இலகுபடுத்தவே தொழுகை முதலாம் அமல்கள் தரப்பட்டிருக்கின்றன. குர்ஆன் 20:14 போன்ற ஆயத்துக்கள் இதற்காதாரமாகும். தொழுகையின் போது செய்யும் திக்ர் "ஷரீயத்" என்றும், தனித்திருக்கும் போது செய்யும் திக்ர் "தரீக்கத்" என்றும் பெயர் பெறுகிறது. வழி ஒன்றேதான். படித்தரங்கள் பற்பல. மறதியுடன் ஜன்னத்தில் நுழைய முடியாது. மறதியை நீக்கி நினைவை உருவாக்குவதே கலிமத்துத்தை யிபாவின் நோக்கமாகும்.

நாம் அறிந்த, அறியாத சர்வ உலகங்களுக்கும் மையமாய் இருந்து கொண்டிருப்பது "நான்" என்றுணரும் அல்லாஹ்வின் தன்னுணர்வேயாகும். இதையன்றி வேறொரு நான் கிடைக்கவே கிடையாது. ஆயினும், நான், நான் என்ற தனித்தனியுணர்வு இயங்குவன இயங்காதனவாகிய சராசரங்கள் யாவிடத்தும் இருந்து கொண்டிருப்பதை நாம் காணுகிறோம். மண், கல் போன்ற இயங்காப் பொருட்களின் தன்னுணர்வை நாம் அறிவதில்லை.

எனினும் இன்ஸானையும், ஜின்னையும் தவிர்ந்த ஏனைய சிருஷ்டிகள் அவ்வவற்றின் (கழாகத்ரை) இயற்கை அமைப்பை மீறாமல் தரிபடுத்தப்பட்டிருப்பதால் அவற்றின் நானென்ற தன்னுணர்வை அனாநிய்யத் என்று கூறப்படுவதில்லை. ஷிர்க்கென்றும் கூறப்படுவதில்லை. அவற்றின் தன்னுணர்வுக்கு ஜென்னத்தோ நரகமோ கொடுக்கப்படுவதில்லை.

ஆனால் இன்ஸானுடையவும் ஜின்னுடையவும் தன்னுணர்வு மறதியின் காரணமாய், அனாநிய்யத்தாய்,

ஷிர்க்காய் அமைந்துவிடுகிறது. உண்மையான இறையுணர்வுக்கு மாறான சிருஷ்டியுணர்வாய் மாறிவிடுகிறது. சாரக் கண்ணன் உள்ள ஓர் பொருளை இரண்டாய்க் கண்டறிவது போல மனிதனுடைய அனாநிய்யத்தென்ற தவறான நம்பிக்கை என்னை விட்டும் என் இறைவன் வேறானவனென்றெடுத்துக் கொள்வதால் இரண்டுவகை நான்களிருப்பதாய்க் கற்பனையில் ஆக்கிக் கொள்கிறது. அதாவது தன்னை ஒரு நானாகவும், தன் இறைவனை வேறு ஓர் நானாகவும் மனித உள்ளம்(நப்ஸு) கற்பனை செய்து கொள்கிறது. எனவே இவ்விருவகை நான்களில் ஒன்று பொய்யென்ற பாதிலாயும் மற்றொன்று உண்மையென்ற ஹக்காயும் இருக்கிறது. இப்படிக் கற்பனையில் உருவான நானென்ற இலாஹுவை ஆக்கிக் கொள்ள வேண்டாமென்றும் அதனால் தண்டனை கிடைக்குமென்றும் குர்ஆன் 26:213, 16:51 போன்ற ஆயத்துக்களில் இறைவன் விளக்குகிறான். அனாநிய்யத் தென்ற உளநோயே ஷிர்க்கின் ஆணிவேராக இருக்கிறது. இது ஒழிக்கப்பட்டால் மனிதனுடைய எச்செயலிலும் ஷிர்க் ஏற்படவே முடியாது. சிருஷ்டியிடத்திலுள்ள அனாநிய்யத் தென்பதில் இறைவனுடைய ஓர் ஆழியஞானம் மறைந்திருக்கிறது. இங்கு அவ்விபரம் எமக்கவசியமில்லை. றூஹு தன்னைத்தானே உணரும் தன்னுணர்வு இறைவனுக் குரியதேயன்றிச் சிருஷ்டிக் குரியதல்ல. நப்ஸு தன்னைத்தானே உணரும் தன்னுணர்வு தான் சிருஷ்டிக்குரியது.

இவ்விஷயத்தில் மிகக்கடிமான பல சந்தேகங்கள் ஏற்படலாம். மிக முக்கியமான ஓர் சந்தேகம் என்னவென்றால் இறைவன் தன்னைத்தானே மறந்து விட்டதனால் சிருஷ்டியாய் வெளியாயிருக்கிறானா? என்பதே அச்சந்தேகம்.

**சந்தேகத்துக்குரிய பதில்:-**

இறைவன் மறதி, அசதிகளைவிட்டும் மிகமிகப் பரிசுத்தமானவன். இறைவன் எப்போது நூர் என்ற அறிவைத் தன் கட்டுப்பாட்டில் முன்னோக்கினானோ அப்போதே நூர் சிருஷ்டியென்றும் (ஸிபத்)பண்பென்றும் அமைந்து விட்டது. இந்த நூரைக் கொண்டே சர்வ பேரண்டமும் தரிப்பட்டிருப்பதால் சர்வ பேரண்டமும் சிருஷ்டியாகவே இருக்கிறது. லாஹிர் சிருஷ்டியாயும் பாதின் றப்புவாயும் இருக்கிறது. அப்துக்கு நேர் முரணாயிருக்கிறது றப்பு என்பது. மறதியின்மை இறைவனுடையதென்றால் மறதி சிருஷ்டியுடையதாகும். எனவே றூஹுவான றப்பு மறதியற்றவனாயும், அவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், இன்ஸானென்ற மனம்(சிருஷ்டி) மறதியுடையதாயும் இருக்கிறது. இப்படி றப்பும் அப்தும் முரணாயிருப்பதால்தான் சிருஷ்டியுலகு இருந்து கொண்டிருக்கிறது. இயக்கம் நடைபெறுகிறது. இல்லையானால் பேச்சற்ற அமா என்ற நிலை மட்டும்தான் இருக்கும். இதைச் சிருஷ்டி அறியா. எனவே இறைநாட்டம் சிருஷ்டியின் மூலம் வெளியாவதானால் அச்சிருஷ்டிகள் மறதியுடையவையாய் இருக்க வேண்டியது அவசியம். எனவே சிருஷ்டிக்கு மறதியென்ற ஓர் தன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது. நப்ஸில் ஏற்படும் மறதி பலவகை. இத்தன்மை சிருஷ்டியின் தன்நிறைவுக்குச் சாதகமாய்த்தான் கொடுக்கப்பட்டிருக்கிற தேயன்றி இறைவனுடைய தன் நிறைவுக்காகவல்ல. நாம் அறிந்துள்ள லாஹிர், பாதினுடைய உலகங்கள் யாவும் தோன்றி மறையும் கனவைப் போன்ற வெறும் ஹுரூர் ஆகும். எனவே கனவைக் காண்பவன் மயக்கு மறதியற்றவனாயும், கனவில் வெளியான கற்பனைச் சிருஷ்டிகள் மறதி, மயக்குடைய வையாயுமிருப்பது போல ஹக்கான றப்பு மறதியில்லா தவனாயும் அவனுடைய கற்பனையில் உருவாக்கப்பட்ட சிருஷ்டி மறதி மயக்குடையதாகவும் இருக்கிறது. இவ்விஷயம் சொந்த அனுபவத்தில் கண்டறியப்பட வேண்டியது.

குறிப்பு: சுய நிர்ணய உரிமையுடைய சிருஷ்டியின் இயக்கம் அதாலத்தென்ற நீதி நிர்வாகச் சட்டங்களுக்குட்பட்டது. இவ்வியக்கத்தில் சரிபிழை இருக்கலாம். இருக்க வேண்டும். எதிரிடையில்லையானால் சிருஷ்டி இருக்க முடியாது. ஆனால் இறைவனுடைய விஷயத்தில் எதிரிடை கிடையாது. ஆகவே சரி, பிழை, நினைவு, மறதி போன்றவை (இச்சொற்கள் கூட) அவனிடத்தில் கிடையாது. அதாலத்தென்ற நீதிநிர்வாகமும் சரிபிழைகணிப்பதும் சிருஷ்டியிடத்திலேயே அன்றி இறைவனிட த்தில் அல்ல. யாவும் அவன் நாட்டமே. எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு வருவோம்.

நான் காணும், அனுபவிக்கும் சர்வ பிரபஞ்சத்துக்கும் மையமாயிருப்பவன் நானே என்பதை மனித அறிவு உணர்ந்து கொண்டால் ஜன்னத் என்னிலேயே இருந்து கொண்டிருக்கிற தென்பதை உணர்ந்து கொள்ளமுடியும். என்னையன்றிப் பிறிதொன்றில்லையென்பதை என்னுடைய அறிவுக்குச் சந்தேகமில்லாமல் விளங்கித் தெளிவுபெற்றால், அவ்வறிவு நூர் என்ற பெயரைப் பெறுகிறது. இந்த அறிவு றூஹுவின் சொந்த அனுபவமாயிருக்கிறது. ஈமான், எகீன் என்றெல்லாம் கூறப்படுவது இந்த அனுபவமே. இவ்வனுபவம் சிருஷ்டிக் குரியதல்ல. நான் ஓர் சிருஷ்டியென்ற உணர்விருக்கும் வரையில் இவ்வனுபவம் ஏற்படாது. ஆகவே அவ்வனுபவம் றப்புக்குரியதேயன்றி அப்துக்கு உரியதல்ல. இறைவன் என்றும் இந்த எகீனிலேயே தரிபட்டிருக்கிறான். ஆகையால்தான் இறைவனுக்கு மூமீன் என்று ஓர் பெயர் இருந்து கொண்டிரு க்கிறது. குர்ஆன் 59:23 ஆயத்து இதற்கு ஆதாரமாகும். மூமீன் என்ற இறைவனின் திருநாமத்தை ஆரம்ப மூமீனான இன்ஸானுக்கு "இஸ்த்தியாரா" என்ற இரவல் வழக்காக இறைவன் பாவித்திருக்கிறான். அரசனுடைய அதிகாரி என்ற நாமத்தை அவனுடைய பிரஜையான பிரதிநிதிக்கு(கலீபாவுக்கு) இரவலாய் அதிகாரியென்று கூறுவதுபோல, தன் நாமத்தைத்

தன் கலீபாவான இன்ஸானுக்கு இறைவன் பாவித்துள்ளான். “வலி” என்ற இறைவனின் நாமமும் இன்ஸானான கலீபாவுக்குக் குர்ஆனில் இஸ்த்தியாரா என்ற இரவல் வழக்காகவே பாவிக்கப்பட்டிருக்கிறது.

அனாநிய்யத்துக்கு காரணம் மறதியாகும். மறதியென் பதில்லையானால் பிரபஞ்சம் என்பதும் அதன் செயல்களும் (இயக்கமும்) இராது. மறதியை நோக்கினால் அதை லாஹிர் என்றும், நினைவை நோக்கினால் அதை பாதின், என்றும் கூறுலாம். மறதி லாஹிரான அப்தையும் நினைவு பாதினான றப்பையும் நோக்கியதாகும். நினைவு “றுபூபியத்” என்றும் “மறதி” உபூதியத், என்றும் பெயர் பெறுகிறது.

இவ்விரு நிலைகளும் கட்டுப்பாடுடையவைதான். இதை வர்ணிப்பதானால் உள்மனத்தை றப்புடைய ஸ்தானத்திலும் வெளிமனத்தை அப்துவுடைய ஸ்தானத்திலும் கொள்ளலாம். மனத்தின் இவ்விரு நிலைகளுக்கும் றூஹு வுஜூதுவாக இருக்கிறது. எனவே வெளிமனம் உள்மனத்தில் நாஸ்த்தியாகி, உள்மனம் றூஹுவில் நாஸ்த்தியாகாத வரையில் அனாநிய்யத் (ஷிர்க்) முற்றாய் நீங்க முடியாது. எனவே அனாநிய்யத்தென்ற ஷிர்க்கிலிருந்து விடுபட்டுத் தன் சொந்த நிலையை நினைவிற்குக் கொண்டு வருவது இலகுவான ஓர் வேலையுமல்ல.

மறதியற்ற இன்ஸானாய், றப்புடைய ஸூறத்தாயிருந்த இறைகலீபா என்ற ஆதம்(அலை) இறைவனைக் கிப்லாவாகக் கொண்டு, ஆதம்(அலை) என்ற ஸூறத்தில் காட்சியளித்த தனக்கே ஸுஜூது செய்யும்படி மலக்குகளை இறைவன் ஏவியிருக்கிறான். இவ்விஷயத்தை நாம் முன்பு காட்டிய குர்ஆன்15:29ம் இலக்க ஆயத்து விளக்கமளிக்கிறது. ஆதம்(அலை) என்ற ஸூறத்து சிருஷ்டியாயும் (அப்துவாயும்), அவர்களுடைய றூஹு றப்பு என்ற சிருஷ்டிகர்த்தாவாகவும்

இருக்கிறது. லாஹிறென்ற தோற்றும் ஸூறத்தும் பாதினென்ற தோற்றாத றூஹும் வெவ்வேறில்லாத ஏகமாய் அமைந்திருந்த நிலையே (மர்த்தபாவே) கலீபா, இன்ஸானுன் கபீர், பெரிய மனிதன், விராட்புருடன் என்பதன் உண்மையாகும். அப்படியென்றால் என்னையன்றிப் பிறிதொன்றில்லையென்ற அனுபவத்திலூறியுள்ள ஒருவர், நான் என்று கூறும் நான் யார்? நான் யாரென்பதைக் கண்டறியவே ஜட உலகில் நாம் பிறக்கிறோம் என்ற உண்மையை பெரும்பாலார் அறிந்து கொள்ளவேயில்லை.

குறிப்பு:- ஜன்னத்தில் இருந்த ஸூறத்தென்ற ஆதம்(அலை) றூஹுஹென்ற இறைவனுடன் நப்ஸென்ற ஒன்றைக் கொண்டே ஐக்கியமாகி இருந்தார்கள். ஸூறத்தும் நப்ஸும் சிருஷ்டிதான். இந்த சிருஷ்டியான நப்ஸுதான் மறதியாளனாய் இருந்ததல் லாமல் றூஹு மறதியாளனேயல்லவென்பதை ஊன்றி உணர்க. சிருஷ்டி ஜோடியானது. நப்ஸுக்கு அதன் ஜோடி ஸைத்தா னென்ற தத்துவமாகும். இந்த ஷைத்தான், கன்னாஸ் என்பவன் தான் நப்ஸுக்கு மறதியை ஏற்படுத்துகிறான். இது அவனுக்குரிய உத்தியோகம்.

# 28

# குர்ஆனை இன்னும் சிறிது ஆராய்வோம்

**குர்ஆன்: 42:51**

وَمَا كَانَ لِبَشَرٍ أَنْ يُكَلِّمَهُ اللَّهُ إِلَّا وَحْيًا أَوْ مِنْ وَرَاءِ حِجَابٍ
أَوْ يُرْسِلَ رَسُولًا فَيُوحِيَ بِإِذْنِهِ مَا يَشَاءُ إِنَّهُ عَلِيٌّ حَكِيمٌ

**அல்லாஹ் (நேருக்கு நேராக) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்குமில்லை. எனினும் வஹியின் மூலமாகவோ அல்லது திரைக்கப்பால் இருந்தோ அல்லது தான் விரும்பியதைத்தன் அனுமதியின் மீது வஹியை அறிவிக்ககூடிய ஒரு(தூாதரை) றசூலை அனுப்பிவைத்தோ(தான் மனிதருடன் பேசுகிறான்.) நிச்சயமாக அவன் மேலானவனும் ஞானமுடையோனுமாவான்.**

இந்த ஆயத்தும் கலிமாவின் தலீல்களில் ஒன்றாகும். எனவே இவ்வாயத்தில் கூறப்பட்டுள்ள வஹி, திரை, றசூல் என்ற சொற்களை மிகமிக அவதானமாய் நோக்கவேண்டும். இறைவன் மனிதருடன் பேசுவதற்குரிய மூன்று வழிகள் இவ்வாயத்தில் விளக்கப்பட்டுள்ளன. அவை,

1வது:- வஹி மூலம் பேசுவது(இல்காஉ) இது கல்பில் நேரடியாய் அருளப்படுவது. இல்காஉ என்ற வஹி திரையற்றது.

2வது:- திரைக்கப்பாலிருந்து பேசுவது.(வஹ்யுகபி)

3வது:- வஹியை அறிவிக்கக் கூடிய(தூதுவர்) றசூல் மூலம் பேசுவது, (வஹ்யுல்வாஸிதா, வஹ்யு ஜல்லி)

இங்கே குறிப்பிடப்பட்ட தூதுவர்(றசூல்) என்பது, எமது றசூல்(ஸல்) அவர்களையும், ஜிப்ரீல்(அலை) அவர்களையும் சுட்டுவதாயிருக்கிறது. அப்படியல்லாமல் றசூல் என்று கூறப்பட்டது ஜிப்ரீல்(அலை) அவர்களைத் தானென்று, அல்லது எமது றசூல்(ஸல்) அவர்களைத்தானென்று நீங்கள் பிடிவாதம் செய்தாலும் நான் அவ்விரண்டையுமே ஏற்றுக்கொள்கிறேன். இந்த மூன்று வகையான பேச்சுக்களையும் நாம் தெளிவாயறிவதானால், முதலில் நாம் இரண்டாவது வகையைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த இரண்டாவது வகைப் பேச்சைப் புரிந்து கொண்டால் மற்றிருவகைப் பேச்சுக்களும் இலகுவாய் விளங்கிக்கொள்ளும். எனவே இரண்டாவது வகையை முதலில் நோக்குவோம். திரைக்கப்பாலிருந்து பேசுகிறான் என்பதற்கு குர்ஆனில் ஆதாரமுண்டா? ஆம்.

**குர்ஆன்: 28:30**

فلما أتاها نودي من شاطئ الواد الأيمن في البقعة المبار
كة من الشجرة أن يا موسى إني أنا الله رب العالمين ۝

**அவர் அதனிடம் வந்தபோது மிக்க பாக்கியம் பெற்ற அச்சம வெளியுள்ள ஓடையின் வலது பக்கத்திலுள்ள ஓர் மரத்திலிருந்து, மூஸாவே நிச்சயமாக உலகங்களைப் படைத்து போஷிக்கும் றப்புவான அல்லாஹ் நான்தான் என்ற சத்தத்தைக்கேட்டார்.**

இவ்வாயத்தின்படி மரம் என்ற திரையிலிருந்து றப்பு பேசினான் என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் “றப்பு” என்ற அல்லாஹ் நான்தான் என்று கூறுப்பட்டிருப்பதால், றப்பு என்ற மர்த்தபாவுக்கு(நிலமைக்கு) அல்லாஹ் என்ற சொல் பாவிக்கப்பட்டிருப்பதை முதலில் கவனத்தில் கொள்ளவேண்டும். அல்லாஹ் என்பது பகுபடாத, எதிரிடையில்லாத தாத்தென்ற வுஜூதுவை நோக்கியது. றப்பு என்பது எதிரிடையுடையது. றப்பு என்பதன் எதிரிடைதான் அப்து என்பது. எனவே எதிரிடையும் செயலுமுள்ள றப்புக்கு அல்லாஹ் என்ற நாமம் தரப்பட்டிருப்பதால், றப்பு என்பது அல்லாஹ் என்ற நாமத்தில் கட்டுண்ட ஓர் நிலையென்பது உறுதியாகிறது. இதன்படி அல்லாஹ் என்பவன் றுபூபியத்தென்ற தனது இரண்டாவது மர்த்தபாவில் மரம் என்ற சிருஷ்டியான திரையைக் கொண்டு, சிருஷ்டியான மூஸா(அலை) அவர்களுடன் பேசியிருக்கிறான். பேசியது மரம்தான். திரையை எடுத்துக் கொண்டு இறைவன் பேசுகிறான் என்பதற்கு இவ்வளவு ஆதாரமே போதுமானது. ஆனால் மரமென்பது பௌதீக, அஃறிணைப் பொருளான சிருஷ்டிதானென்றால், மூஸா(அலை) என்ற பௌதீக உயர்திணைப் பொருளான சிருஷ்டியும் ஓர் திரைதானே என்பதை எம்மால் மறுக்கமுடியாது. அப்படியானால் மூஸா(அலை) என்றபௌதீக மனிதர் மூலம் அல்லது 1,24,000 நபிமார்கள் மூலம் எமக்கு கிடைத்த கலிமாவை, மூஸா(அலை) ஈஸா(அலை) முஹம்மது(ஸல்) போன்ற மனிதர்களைத் திரையாய்க் கொண்டே இறைவன் எம்முடன் உரையாடினான் என்பதை நாம் ஏன் மறுக்க வேண்டும்? மறுப்பது எமது மூடபுத்தியாகும்.

மரத்தின் ஸூறத்தென்ற திரையும், நபிமார்களின் ஸூறத்தென்ற திரைகளும் உண்மையான தனித்தனி வுஜூதுகளல்ல. அவையாவும் வெறும் கற்பனைத் தோற்றங்கள் மட்டுமே. இவ்வித ஸூறத்தான சிருஷ்டிகளை மனிதன் ஜடமாய் நம்பியிருக்கிறான். இந்த நம்பிக்கைதான் உண்மையான

திரையாய் இருக்கிறது. அஃறிணைப் பொருள் இறைவனுக்குத் திரையாய் இருந்ததென்றால் உயர்திணைப் பொருளான இன்ஸானும் ஓர் திரைதான் என்பதை மறுக்க முடியாது. எனவே சர்வ ஆலங்களையும் திரையாய்க் கொண்டுதான் சர்வ ஆலங்களிலும் அவன் உரையாடுகிறான் என்பது உறுதியாகிறது. சாதாரண மனிதராகிய நல்லவர், கெட்டவர் யாவரும் ஒருவரோடொருவர் திரையிலிருந்துதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாம் யாவரும் திரையிலிருந்துகொண்டுதான் பேசுகிறோம். கேட்கிறோம். பார்க்கிறோம். எனவே றப்பு யார்? அப்து யார்?

படர்க்கையில் இருந்த இறைவன் வானத்திலிருந்து இறங்கி வந்து மரத்துக்குள் புகுந்து, அல்லது மரத்துக்குப் பக்கத்தில் ஒளித்துக் கொண்டிருந்துதான் பேசினானென்று நாம் நம்ப முடியாது. இவ்வாயத்தில் திரைக்கப்பாலிருந்து என்று கூறப்பட்டிருப்பதால் திரை ஒன்றேயொன்றுதானென்பது தென்படுகிறது. ஆயத்தில் திரைகள் என்று பன்மையில் கூறப்படவில்லை. திரையென்று ஒருமையில்தான் கூறப்பட்டிருக்கிறது. அர்ஷில் (வானத்தில்) படர்க்கையில் இறைவன் இருக்கிறானென்றால் அவன் விண்வெளியிலுள்ள எண்ணிலடக்க முடியாத திரைகளுக்கப்பாலிருந்தே பேசியிருக்கவேண்டும். விண்வெளியில் “ஓசோன்” படலம் எனப்படும் வளித்திரை உட்பட இன்னும் எத்தனையோ வகையான சூட்சும திரைகளெல்லாம் உள்ளனவே. ஆனால் “திரைக்கப்பால்” என்று கூறப்படுவதால் திரையொன்றேயொன்று என்பதை ஆயத்து அறிவிக்கிறது. அந்தத்திரை எது? அதுதான் ஸூறத், தோற்றம், மழ்ஹர் என்ற திரை. மரம் என்ற ஸூறத்தில் இருந்து பேசியவனும், மூஸா(அலை), முஹம்மது(ஸல்) என்ற ஸூறத்திலிருந்து பேசியவனும்,53:56ம் ஆயத்தில் கூறிய முன்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்த “றஸூல்” என்ற நாமத்தை எடுத்துக்கொண்ட அதே இறைவன்தான். இந்த இறைவன் தான் முஹம்மது(ஸல்) என்ற பௌதீக மனிதரின் பிராண நரம்பை

விடச் சமீபமாய் இருந்து கொண்டு முஹம்மது(ஸல்) என்ற ஸூறத்தைத் திரையாய்க்கொண்டு மனிதராகிய எங்களுடைய அறிவின்படி திரைக்கப்பால்(வேறுபோல்) இருந்து கூறுகிறான்.

**குர்ஆன்: 20:14**

إِنَّنِيٓ أَنَا ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعْبُدْنِي وَأَقِمِ ٱلصَّلَوٰةَ لِذِكْرِيٓ ١٤

**நிச்சயமாக நான்தான் அல்லாஹ், என்னைத்தவிர வேறு இலாஹு இல்லை. என்னையே நீர் இபாதத்து செய்யும். என்னைத் தியானித்துக் கொண்டிருக்கும் பொருட்டுத் தொழுகையைக் கடைப்பிடியும்**

இவ்வாயத்து றஸூல்(ஸல்) அவர்கள் இறையேவலின் படி நாவினால் கூறியதுதான். அதை மனப்பாடமிட்டும் ஓலை, கல், தோல், எலும்பு போன்றவற்றில் எழுதியும் காப்பாற்றி எடுத்ததுதான் இன்று நம்மிடையேயுள்ள குர்ஆன் என்பதை நாம் மறுக்கமுடியுமா? மறுத்தால் நாம் குர்ஆனை மறுத்தவர்களாவோம். மறுப்பவன் “முஸ்ரீக்” என்றும் மறைப்பவன் “குப்பார்”(காபீர்) என்றும் பெயர்பெறுவான். அப்படியானால் அந்த வேதவசனத்தை முஹம்மது(ஸல்) என்ற ஸூறத்தில் காட்சியளித்த றப்பே கூறினான் என்பதை ஏன் ஏற்க முடியாது? ஏற்கமுடியாமை மூடப்பிடிவாதமாகும். எனவே இன்னும் சிறிது ஆராய்வோம்.

3வது:--

தூதை(வஹியை) அவனுடைய நாட்டப்படி றஸூல் (தூதுவர்)களைக் கொண்டு பேசுவதை நோக்குவோம். நாம் றஸூல் என்று கூறுவது எவரை? அப்துல்லாஹ் என்பவருக்கும் ஆமினா என்பவருக்கும் மக்காவில் பிள்ளையாகப் பிறந்து,

எம்போன்ற ஸூறத்தோடு வாழ்ந்துகொண்டிருந்த முஹம்மது (ஸல்) என்ற மனிதரைத்தானே! இந்தப் பௌதீக உடல் றஸூல் அவர்கள்தானென்றாலும் அதில் எதுவும் பிழையில்லை. அவ்வுடலில் வெளியான அறிவு(நூர், றூஹு)தான் றஸூல்(ஸல்) என்றாலும் அதுவும் முன் சொன்னதையே உறுதிப்படுத்தும். அறிவை நாம் அறிய அதற்குமொரு ஸூறத் அவசியம். அதை நாமறியாமலிருக்கலாம். ஆகவே, நூரைவிட்டு ஸூறத்தும், ஸூறத்தை விட்டு நூரும் (அறிவும்)வேறில்லாத ஏகமேயென்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும். அப்படியானால், எமக்கு முஹம்மது (ஸல்)அவர்கள் றஸூலாய் (தூதுவராய்) இருந்தது போல, அல்லாஹ்வுடைய வஹீயை அறிவிக்க றஸூலாய் (தூதராய்) இருந்த ஜிப்ரீல்(அலை)அவர்கள், எம்முடைய றஸூலுக்கு றஸூலாய் இருந்திருக்கிறார்கள். சிருஷ்டியாகிய எமக்கு சிருஷ்டியாகிய முஹம்மது(ஸல்)அவர்கள் றஸூலாய் இருந்தது போல். சிருஷ்டியான எமது றஸூலுக்கு, சிருஷ்டியான ஜீப்ரீல்(அலை) அவர்களே றஸூலாய் இருந்தார்கள் என்பது முற்றிலும் உண்மை. ஜீப்ரீல்(அலை)மூலம் வஹி அறிவிக்கப்பட்டதாகக் குர்ஆனில் அனேக ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றை நான் இங்கு தரவில்லை. ஜிப்ரீல்(அலை) அவர்களை றஸூல்(ஸல்) அவர்கள் நேரில் பற்பல ஸூறத்துக்களிலும், இருமுறை அவர்களின் சுயஸூறத்திலும் பார்த்திருக்கிறார்கள். இதற்கு உறுதியான ஆதாரங்கள் உள்ளன. ஒருபோது றஸூல்(ஸல்) அவர்களிடம் ஒரு சாதாரண மனிதரின் ஸூறத்திலும் ஜிப்ரீல்(அலை) அவர்கள் வந்து இஸ்லாத்தைப் பற்றி வினவிய விஷயத்தை நேரில் கண்ட ஸஹாபாக்கள் எமக்கறிவித்திருக்கிறார்கள். இவ்விஷயம் நம்மெல்லோருக்கும் தெரிந்திருப்பதால் ஆதாரங்கள் தரவேண்டியதில்லை. ஜிப்ரீல்(அலை)அவர்களும் ஒரு சிருஷ்டிதான் என்பதை நாம் ஏற்றிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஒளியினாலும் நாம் மண்ணினாலும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். அவ்வளவுதான்.

ஜிப்ரீல்(அலை) என்பவர் ஒரு சிருஷ்டியேயென்றால், அவருடன் பேசுவதற்கும் அல்லாஹ்வுக்கு ஒரு திரை வேண்டுமல்லவா? இல்லை. அவசியமில்லை. இதைப் பொறுமையோடு விளக்குவோம். ஜிப்ரீல்(அலை) என்ற அந்த ஸூறத்திலிருந்த மலக்குக் கொண்டுவந்த வஹி எங்கிருந்து இறைவனால் அறிவிக்கப்பட்டிருக்க முடியும்.? மண்ணினால் படைக்கப்பட்ட மனிதனின் பிராண நரம்பைவிடச் சமீபமாய், உயிருக்குயிராய் இறைவன் இருக்கிறான் என்றால், ஜிப்ரீல்(அலை) என்ற ஸூறத்தின் உயிர் எதுவாயிருக்கும்? அதுவும் றப்புடையதாய்த்தானிருக்கும். சிருஷ்டி என்பது “ஹுரூர்” மயக்கேயன்றிப் பொய்யானதல்ல.

**குர்ஆன்: 16:3**

خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ۚ تَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ

**வானங்களையும் பூமியையும் ஹக்கைக்கொண்டே சிருஷ்டித்திருக்கிறான். அவர்கள் இணையேற்படுத்துவதைவிட அவன் மிக மேலானவன்.**

எனவே, பௌதீகமானாலும் சூட்சுமமானாலும் சிருஷ்டியென்பது ஹக்கு என்ற வுஜூதில் தோன்றி, இருந்து, மறையும் உண்மையின்(ஹக்கின்)வெளிப்பாடேயென்பது உறுதிப் படுத்தப்படுகிறது. ஹக்கு என்ற சொல் அல்லாஹ்வை நோக்கிக் கூறப்பட்டால் அதற்கு எதிரிடைகிடையாது. ஹக்கு என்பது இறைவனின் விஷயத்தில் உள்ளது, இருப்பது என்ற பொருளுடையது. சிருஷ்டியின் விஷயத்தில் பொய் என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல்லாகவே ஹக்கு என்பது உண்மை யென்று கூறப்படுகிறது. எனவே, இருப்பதெல்லாம் அவனுடைய ஸூறத்தேயன்றி அவனுக்கிணையானது எதுவுமேயில்லை. ஜிப்ரீல்(அலை) அவர்களுடன் திரையில்லாமலே இறைவன்

பேசியிருக்கிறான் என்பதும், ஜிப்ரீல்(அலை) என்ற திரையைக் கொண்டே அன்று நபிமாருக்கு வஹி அறிவித்தான் என்பதும் புலனாகிறது. ஆகையால், ஜிப்ரீல் என்பதில் இதுவரை எம்மில் மிகப்பலர் அறிந்து கொள்ளாத ஓர் உண்மையிருக்கிறது.

**ஓர் குறிப்பு:-**

இவ்வாயத்தில் ஹக்கைக் கொண்டே வானங்களும் பூமிகளும் படைக்கப்பட்டிருப்பதால் வானமும் பூமியும் தாத்துத்தான், ஹக்குத்தான் என்றும் அதைத் தொட்டறியலாம் என்றும் ஒரு சில மயக்கவாதிகள் கூறிக் கொண்டிருப்பது ஆயத்தின் உண்மை பிடிபடாமையே. சிருஷ்டியென்ற இவ்வுலகு “ஹுௗூர்” என்பதை உணர்ந்து கொண்டால் மயக்கமேற்பட முடியாது.

ஜிப்ரீல்(அலை) அவர்களுடைய இறுதி எல்கை ஸிதறத்துல் முன்தஹா என்பதாகும். அதறகப்பால் ஜிப்ரீல் என்ற நாமம் கிடையாது. இந்த ஸிதறத்துல் முன்தஹாவையும் கடந்துதான் றஸுௗல்(ஸல்) அவர்கள் மி..றாஜ் செய்தார்கள். அப்படியானால் றிஸாலத்தைப் பெற்றிருந்த முஹம்மது(ஸல்) என்ற மனித ஸுௗறத்தைச் சூழ்ந்திருந்த நூர் என்ற அறிவின் ஒரு தத்துவந்தான் ஜிப்ரீல்(அலை) என்பதும், அது இன்ஸானுடைய அறிவின் ஒரு வட்டத்தை இயக்கும் தத்துவமே என்பதும் தென்படுகிறது.

மரம் என்ற அ..றிணைப் பொருளையும், ஆதம்(அலை), மூஸா(அலை) போன்ற உயர்திணைப் பொருட்களின் ஸுௗறத்துக்களையும் இறைவன் திரையாய்க் கொண்டதுபோல, ஜிப்ரீல்(அலை) அவர்களுடைய ஸுௗறத்தைத் திரையாய்க் கொண்டே நபிமாருடனும், நபிமாரின் திரையில் எம்முடனும் இறைவன் பேசியிருக்கிறான். ஆதம்(அலை) அவர்களை ஸுஜுௗது செய்த மலக்குகளும் சிருஷ்டிகள்தான். ஆனால் ஆதம்(அலை)

அவர்களின் ஸூறத்து மண்ணினாலும், மலக்குகளின் ஸூறத்து ஒளியினாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மலக்குகளுக்கும் றூஹு உண்டு. அவர்களுடைய றூஹு எது? அதுவும் அல்லாஹ்வுடைய றூஹுதான். மலக்குகளின் ஸூறத்தும் றூஹும் அல்லாஹ்தானாகவே இருப்பதால் மண்ணால் படைக்கப்பட்ட ஆதம்(அலை) அவர்களின்(றூஹுவிலேயே) அறிவிலேயே அர்ஷி, குர்ஸி, லவ்ஹு, கலம் போன்ற சர்வ பிரபஞ்சமும் அமைந்திருக்கிறதென்ற உண்மையை நாம் சிந்தனை செய்து தெளிவு பெறவேண்டும்.

இவ்விஷயம் எல்லோருக்கும் விளங்கவேண்டு மென்பதற்காக ஒரு சிறு உதாரணம் தருகிறேன். என்னுடைய றூஹு என்பதிலுள்ள உடைய என்ற சொல்லைத் தற்கிழமை உருபு என்று கொண்டால், நான் தான் றூஹு, றூஹுதான் நான் என்பது . என் றூஹுவை(என் அறிவை)க் கொண்டே பலவட்டங்களாய் என் அறிவுக்கு வகுத்திருந்தேன். இந்த வட்டங்களில் ஒன்றுதான் ஜிப்ரீல்(அலை) அவர்களுடைய அகமியமாகும். இந்த ஜிப்ரீல்(அலை) என்பவர் என்னுடைய கட்டுப்பாடுள்ள பரிசுத்தநிலமையின் ஒரு ஸூறத்தாகும். எனவேதான் ஜிப்ரீல்(அலை) அவர்களுக்கு "றூஹுல் குத்தூஸ்" என்று ஒரு பெயர் உண்டு. பரிசுத்தமான றூஹு என்பது அதன் அர்த்தம். இந்த ஜிப்ரீல்(அலை) அவர்களை தவ்றாத் வேதம் "நாமூஸுல் அக்பர்" என்று கூறுகிறது. குர்ஆன் 2:87ல் றூஹுல் குத்தூஸ் என்பவர் ஜிப்ரீல்(அலை) அவர்கள்தான் என்பதற்கு ஆதாரமுண்டு. பெயர் பலவாயும், ஸூறத் பலவாயுமிருப்பினும் நான் என்றுணரும் றூஹுவின் ஒரு விஷேய தத்துவத்தையே "ஜிப்ரீல்" என்றழைக்கப்படுகிறது.

சிருஷ்டியாகிய மனிதனை இறைவனோடு ஒப்பிட்டேன் என்று நீங்கள் கருதினால் அது உங்களுடைய விளக்கப் பிசகாகும். நான் அவனை விட்டும் வேறானவன் என்றால்

தான் ஒப்பிடல் என்ற குற்றத்திற்கு இடமேற்படும். அவனையன்றி நான் வேறல்ல என்னும்போது ஒப்பிடல் என்ற குற்றம் அமையாது.

**குர்ஆன்: 41:53**


سنريهم آياتنا في الآفاق وفي أنفسهم حتى يتبين لهم
أنه الحق أولم يكف بربك أنه على كل شيء شهيد

**நம்முடைய உண்மை(ஹக்கு) அவர்களுக்கு வெளியாவதற்காக உலகத்திலேயும் அவர்களுடைய நப்ஸுகளிலேயும் நம்முடைய அத்தாட்சிகளை (ஆதாரங்களை) நாம் அவர்களுக்கு காட்டுவோம்.**

இறைவனைப்பற்றி அறியவேண்டிய முறைப்படி அறிந்து கொள்வதற்கு மிக இலகுவான ஒரேயொரு வழி எமதுயிரை றப்பாகவும் உடலை அப்துவாகவும் கொண்டு ஆராய்வதாகும். முறாக்கபாவின் அரம்ப நிலை இதுதான். தரீக்கத் என்பதும் இதுவே. இவ்வித ஆராய்வு இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட தாகும். எம்மை நாம் கண்டறியவே இன்ஸான் என்ற சிருஷ்டியாய் உலகில் தோன்றியிருக்கிறோம். என்னுடன் இருக்கும் என் இறைவனை ஆராய்வதில் என்ன தவறிருக்கிறது? ஆராயாமல் இருப்பதுதான் தவறு. குர்ஆன் 51:56ம் ஆயத்து இதற்காதாரமாகும். மறதி, ஷிர்க், அனாநிய்யத் என்பதன் உண்மை எம்மை நாம் கண்டறியாமல் இருப்பதே. ஷிர்க்கென்ற நஜீஸுடன் ஜன்னத்தில் நுழைய முடியாது. ஒழுவில்லாமல் நஜீஸுடன் குர்ஆனைத் தொடவேண்டாம் என்பதன் அர்த்தம் என்னவென்றால், ஷிர்க்கென்ற கொள்கையுடன் குர்ஆனை ஆராயக் கூடாதென்பதே. றஸுல்(ஸல்) அவர்கள் உயிரோடி ருந்தபோது குர்ஆன் அச்சிடப்படவில்லை. எனவே, குர்ஆன் என்று கூறப்பட்டது குர்ஆனின் அர்த்தத்தைக் குறிப்பிட்டதாகும்.

“லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற தௌஹீதுக் கலிமாவில் ஒரு தோன்றா எழுவாய் இருக்கிறது. இக்கலிமாவின் கருத்தைப் பலகோணங்களில் ஆராய்ந்தால் அல்லாஹ் அல்லாத எந்தவொரு சிருஷ்டியாலும் இக்கலிமாவைக் கூறமுடியாது. ஏனென்றால், அல்லாஹ்வாகிய என்னைத்தவிர இலாஹு (சிருஷ்டி) இல்லை, இருப்பவன் நான் மட்டுமே என்பதுதான் கலிமாவின் உண்மையாயிருக்கிறது. எனவே, அனாநிய்யத் துடைய எவரும் இதை ஏற்கவும் உணரவும் முடியாது. கலிமாவின் உண்மை நானென்றுணரும் றூஹுவினால் உணரப்பட வேண்டியதொன்றாகும். நாவினாற் கூறுவது ஈமானின் ஆரம்பம். அனுபவத்தில் தரிபாடடைவது ஈமானின் முழுமையாகும். குர்ஆன் 20:14ம் ஆயத்தை நுட்பமாய் ஆராய்ந்து தெளிக.

நான் மேலே கூறிய விபரங்களை விருப்பு வெறுப்பற்ற நிலையிலிருந்து நோக்கினால், குர்ஆனிலுள்ள எந்தவோர் ஆயத்தும் தௌஹீதைத்தான் உறுதிப்படுத்தும். முஹ்கமுவா னாலும் முத்தஸாபிஹாத்தானாலும் தௌஹீதுக்கு விரோதமான ஒரு வசனம் கூடக் கிடைக்கவே கிடையாது. எனவே, கலிமாவின் கருத்தைச் சரியாய்ப் புரிந்துகொண்டு நாம் குர்ஆனை ஆராயமுற்பட வேண்டும். வலிந்துரை அவசியமேயில்லை. எமதறிவுக் கெட்டாத விஷயத்தைத் தெரிந்த மக்களிடம் கேட்டறிவதில் தவறில்லை. எமது முன்னோரில் பலருடைய வஹ்மு என்ற யூகத்தின்படி குர்ஆனின் உயிர்வசனங்களை இருட்டடிப்புச் செய்திருப்பதே இஸ்லாம் உயிரற்றதாய்க் குறிக்கோளுக்கு நேர் எதிர்த்திசையில் போய்க்கொண்டிரு ப்பதற்குக் காரணமாகும். தௌஹீதை உறுதிப்படுத்தும் ஆதாரங்களான 50:16, 8:17, 4:80, 33:57, 57:14, 9:40, 2:186, 2:224, 42:11.4:17, 17:42 போன்ற ஆயத்துக்களைக் கலிமாவுடன் ஒப்பிட்டுநோக்கி ஆராய்ந்து தெளிவு பெறுக.

இன்னும் சிறிது கவனத்திற்கெடுங்கள். நாய் நாயோடும், பேய் பேயோடும், மிருகம் மிருகத்தோடும் உறவாடி,

உரையாடிக் கொண்டுதானிருக்கின்றன. இயங்காப் பொருட்களுக்குக்கூட உறவாட்டம்(தாக்கம்), உரையாடல்(பேச்சு) இருந்து கொண்டுதானிருக்கிறது. சர்வசிருஷ்டிகளும் இதிலடங்கும். அவையும் தம் றப்புடன் உறவாடிக் கொண்டும் தஸ்பீஹ் செய்து கொண்டுந்தானிருக்கின்றன. அப்படியானால் மற்றும் சிருஷ்டிகளையும் இன்ஸான்கள்தான் என்று ஏன் நாம் கூறக்கூடாது? அதற்குப் பலகாரணங்கள் உள்ளன. பேரண்டத்திலுள்ள சர்வமும் இன்ஸானென்ற என்னுடைய(லாஹிரின்) ஸூறத்திலுள்ள அணுக்களின் தொகுப்பாகும். எமது கையையும் காலையும் அல்லது பிற உறுப்புக்களையும் இன்ஸான் என்று நாம் கூறுவதில்லை. றூஹு தன்னறிவைக் கொண்டு அவ்வறிவிலேயேதான் பிரபஞ்சத்தை உருவாக்கியிருக்கிறது. தன் ஸூறத்தான இன்ஸானுக்கு றூஹுவால் கொடுக்கப்பட்ட மறதியின் காரணமாய் பிரபஞ்சத்தில் என்னுடல் ஓர் அணு என்று தற்போது சிருஷ்டியாயிருக்கும் இன்ஸான் ஏமாந்து விட்டேன். எனது றப்பைத்தேடினேன். என்னிடத்தில் நான் என்றுணர்ந்து கொண்டிருப்பவன் அவனேயென்பதை அறிந்து கொண்டேன். இப்போது எனது றப்பு யார்? நான் யார்? இன்ஸான் என்பவன் யார்? ஊன்றிச் சிந்தனை செய்யுங்கள். அப்து றப்பு என்ற சொற்கள் ஒன்றுக்கொன்று நேர்முரண்போல் தென்படினும் ஏகமாயிருந்து கொண்டிருப்பவன் அல்லாஹ் மட்டுமே என்று கலிமா கூறும் உண்மையை மறுக்கமுடியாது.

**குர்ஆன்: 42:52**

وَكَذَٰلِكَ أَوْحَيْنَا إِلَيْكَ رُوحًا مِّنْ أَمْرِنَا ۚ مَا كُنتَ تَدْرِي مَا

الْكِتَابُ وَلَا الْإِيمَانُ وَلَٰكِن جَعَلْنَاهُ نُورًا نَّهْدِي بِهِ مَنْ

نَّشَاءُ مِنْ عِبَادِنَا ۚ وَإِنَّكَ لَتَهْدِي إِلَىٰ صِرَاطٍ مُّسْتَقِيمٍ ﴿٥٢﴾

**இவ்வாறே உமக்கு(அருளப்பட்ட) நம்முடைய கட்டளைகளில் உயிரானதை வஹிமூலமாக அறிவிக்கிறோம். (இதற்கு முன்) நீர் வேதம் இன்னதென்றும் விசுவாசம்(ஈமான்) இன்னதென்றும் அறிந்தவராய் இருக்கவில்லை. ஆயினும், இதனைப் பிரகாசம் (நூர்) ஆகவும் ஆக்கி நம் அடியார்களில் நாம் விரும்பியவர்களுக்கு இதனைக் கொண்டு நேரான வழியைக் காண்பிக்கிறோம். நிச்சயமாக. நீர் (மனிதர்க்கு) நேரான வழியைக் காண்பிக்கின்றீர்.**

வேதத்தின் உயிர் கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதுதான் என்பதை நாம் உணரவேண்டும். றஸூல் (ஸல்) அவர்களே ஈமானைப்பற்றி, வேதத்தைப்பற்றி அறியாமலிருந்த நிலையில் இறைவழிகாட்டலோடு பூரண காமிலாய் ஜெயம் பெற்றார்கள் என்பது தென்படுகிறது. எனவே, வெறும் மூடர்களான மஹ்ஸர் மடையர்களான நாம் ஈமானை அறிந்து கொண்டோம், வேதத்தை அறிந்துகொண்டோம் என்று நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ளாமல் ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாய் விளங்கியறிந்து அதன் பின் நடைமுறையிற் கொள்வதே அறிவுடைமையாகும். உண்மை புதைக்கப்பட்டுச் சுமார் 1400 வருடங்களாகிவிட்டன. சிந்தித்து தெளிவு பெறுவது எமது கடமை

என்னுள்ளத்தில் ஏற்படும் எண்ணங்கள் பலவகையாயிருக்கின்றன. சில சரியானவையாகவும் சில பிழையானவை யாயுமிருக்கின்றன. விபரமாய்க் கூறினால், மனித உள்ளம் எட்டு அடிப்படைகளில் ஏதோ ஒன்றை மட்டும் ஆதாரமாய்க் கொண்டுதான் ஒரு முடிவுக்கு வருகிறது. இந்த முடிவையே எண்ணம், நிய்யத் என்று கொள்வோம். இந்த அடிப்படைகளில் ஷைத்தானியா, ஹைவானிய்யா, நப்ஸானிய்யா, றஹ்மானிய்யா, என்பவைதான் மொத்த அடிப்படை. ஆயினும் றஹ்மானிய்யா என்பதில் மூன்று பிரிவுகள் உள்ளன. ஆகவே எட்டு என்று கூறுகிறோம். உண்மையாய் உள்ளது ஐந்து மட்டுந்தான்.

எமதுள்ளம் ஷைத்தான், ஹைவானின் அடிப்படையில் தீர்ப்புச் செய்து செயற்பட்டால் அது தவறென்று சட்ட அடிப்படையில் தீர்ப்பிடுகிறோம். மலக்கானி, றஹ்மானியின் அடிப்படையில் தீர்ப்புக் கட்டினால், செயற்பட்டால், எண்ணினால் சட்ட அடிப்படையில் அது நியாயமானது என்று தீர்ப்பிடுகிறோம். இந்த நான்கு அடிப்படைகளையும் விட்டுநீங்கி, உள்ளம் தனிமையிலிருக்கும் போது றஹ்மானிய்யாவின் மற்றும் பிரிவுகள் அவ்வுள்ளத்தில் இடம்பெறுகின்றன.இவ்வுள்ளம் முன்னொரு போதும் தான் அறிந்து கொள்ளாததை அறிந்து கொள்கிறது. “இல்ஹாமத்”, “இல்முல்லத்துன்னி”, “வஹி” போன்ற வெளிப்பாடுகளெல்லாம் இவ்வகையிலுள்ளவையே. இவ்விதமாய்த்தனிமையில் பற்றற்ற நிலையிருந்தே உள்ளத்தில் ஓர் எண்ணம் உதயமானால், அதை உள்ளத்தில் வெளிப்படுத்திய சக்தியின் பெயர் “ஜிப்ரீல்”(அலை) என்று கொள்வோம். எண்ணத்தை உருவாக்கி, ஜிப்ரீல் என்ற தத்துவத்திடம் ஒப்படைத்தது என் றூஹுவாக இருக்கிறது. எண்ணத்தைப் பெற்றுக்கொண்ட தத்துவமான ஜிப்ரீல் (அலை) என்ற சிருஷ்டி, திரைநீங்கிய எமதறிவில் அமையக்கூடியதாய், பார்க்கக்கூடியதாயிருக்கிறது. ஜிப்ரீல்(அலை) என்ற தத்துவந்தான் (வெளிமனதுக்கு) நப்ஸுக்கு, றூஹு அறிவித்த வஹியை றஸூல் என்ற தூதுவராயிருந்து அறிவிக்கிறது. வெளிமனம் (நப்ஸு) தன் பௌதீக உடலான நாவின்மூலம் வெளியுலகுக்கு அறிவிக்கின்றது.

இப்போது தெளிந்த அறிவோடு நோக்குங்கள். றூஹுவின் திரையில்லாத தூதுவராய் ஜிப்ரீல் என்ற தத்துவம் இருந்திருக்கிறது. நாம் தந்த 4:51ம் ஆயத்தை மீண்டும் நோக்குங்கள். அல்லாஹ் பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்குமில்லையென்றுதான் ஆயத்து விளக்கமளிக்கிறது. மலக்குகளுக்கில்லை என்று கூறப்படவில்லை. எனவே, ஜிப்ரீல்(அலை) போன்ற சிருஷ்டிகள் திரையில்லாமலேயே

இறைவனுடன் பேசக்கூடியவையென்பது தென்படுகிறது. அப்படியானால், அந்த மலக்கு என்பது இறைவனின் ஒரு தத்துவமேதான் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். என்னுள்ளத்தில் என்னுடன்தான் நான் திரையின்றி உரையாடுகிறேன். என்னுள்ளம் திரையற்றபோது எனக்கு ஜிப்ரீலாக இருக்கிறது. இந்தத் தத்துவத்தின் தூதுவர் வெளிமனம் என்ற நப்ஸாயும், நப்ஸின் தூதுவர் நாக்கு ஆகவும் இருக்கிறது. நாக்கும் உலகும் பௌதீகம், நாக்கின் தூதுவராக நப்ஸு சூட்சுமமாயிருக்கிறது. நப்ஸின் தூதுவரான ஜிப்ரீல்(அலை) என்ற தத்துவம் மிகமிகச் சூட்சுமமயாய் இருக்கின்றது அதுவே றூஹு என்ற றப்பின் தூதுவவராயிருக்கிறது. ஆனால் உள்ளமென்ற சுயநிர்ணய உரிமையற்ற அப்து(அடிமை), றூஹு தன்னைத் தன் சிருஷ்டிவாயிலாய் அறியும் கண்ணாடியாய், சூட்சுமத்திலும் மிகமிகச் சூட்சுமமாயிருக்கிறது. இந்தப் பௌதீக சூட்சுமங்களையும் அவற்றின் சர்வ ஸுறத்துக்களையும் தத்துவங்களையும் தன்னுள் கொண்டதாய், யாவற்றையும் சூழந்த முஹீத்தாய், மனித அறிவில் அமையாததாய், ஏகவியாபகமாய் இருந்துகொண்டிருக்கும் “நான்” என்றுணரும் றூஹுதான் இறையறிவென்ற நூராய் இருக்கிறது. இதைத்தான் “வுஜுது”, “ஹக்கு”, “தாத்து”, “குன்ஹு”, “அல்லாஹ்” என்றெல்லாம் கூறுகிறோம். இது றூஹுவுக்குரியதேயன்றி ஹைவானியான ஸ்பரிஸ உணர்வுக்குரியதல்ல. இவ்வுண்மையை விளங்கி ஒப்புக்கொள்ளாமல் இருந்து கொண்டு, அல்லாஹ்வைவிட்டும் நான் வேறானவன் என்று நம்புவதே அனாநிய்யத்தென்ற ஷிர்க்கின் ஆணிவேராகும். உலகிலுள்ள இன்பதுன்ப நிகழ்ச்சிகளுக்கு மூலமாயிருப்பது இதுவே. இந்த அனாநிய்யத்தென்ற ஷிர்க்கை அழித்துக்கொண்டு வாழ்ந்தால் சாந்தி சமாதானம்(தன்னிறைவு) கிடைத்துவிடும். இந்த அனாநிய்யத் உள்ளவரையில் சாந்தி, சமாதானம் என்பது பேச்சளவில் இருக்கலாமேயன்றி உள்ளத்திளிருக்காது. (இவ் விபரங்களுக்கு 50:16ம் ஆயத்து ஆதாரமாகும்)

இங்கே நாம் விளக்கியது மலக்கானி, றஹ்மானியின் விபரந்தான். இவ்விரு விஷயங்களுக்கும் முரணான ஷைத்தானி, ஹைவானி ஆகிய இரண்டையும் நீங்கள் சிந்தனைக்கெடுத்துப் பாருங்கள். இந்த நான்குவித வாரிதாத்துக்களும் நான் என்றுணரும் என்னிலேயே புதையுண்டிருக்கின்றன. சுயநிர்ணய உரிமையுள்ள அடிமை, தான் விரும்பிய அடிப்படையை ஏற்றுக் கொள்கிறது. எந்த அடிப்படையில் நிலைப்பட்டிருக்குமோ அந்த நிலைக்கேற்ற நன்மை, தீமைகளை இம்மையிலும் மறுமையிலும் பெற்றுக்கொள்கிறது. சுயநிர்ணய உரிமையற்ற அடிமையோ அறிவில் திடீரென அமையமுடியாத ஒன்றாகும். இதுவே ஸிர்ருடைய அடியார் என்பதன் அர்த்தம். றஸூல்(ஸல்) அவர்களே ஸிர்ருடைய அடியாராய் (அப்துவாய்) இருக்கிறார்கள்.

# 29

## ஒரு மயக்கமும் தெளிவும்

அல்லாஹ் திரையிலிருந்தே பேசுகிறான். (முன்பு ஆதாரம் தந்துள்ளேன்) இறைவன் மட்டுந்தான் திரையிலிருந்து பேசுகிறானா? இல்லை. இன்ஸானும் திரையிலிருந்துதான் உறவாடுகிறான், பேசுகிறான், பார்க்கிறான், கேட்கிறான், செய்கிறான், செய்விக்கிறான். “உன்ஸியத்” என்ற சொல்லடியாய்ப் பிறந்த “இன்ஸான்” என்ற சொல் “உறவாடுபவன்”, “பேசுபவன்” என்ற அர்த்தமுடையது. அப்து என்ற நிலையில் றப்புவுடனும், றப்பு என்ற நிலையில் அப்துவுடனும் (வுஜூது) அல்லாஹ் என்ற நிலையில் தன்னுடன் தானும் உறவாடுபவன் எவனோ அவன்தான் இன்ஸான் என்பவன். உயிரென்ற நான், என்னுடல் என்ற ஸூறத்தைத் திரையாய்க் கொண்டுதான் பேசுகிறேன், நீங்களும் ஸூறத்தென்ற திரையிலிருந்துதான் என்பேச்சை கேட்கிறீர்கள், என்னைப் பார்க்கிறீர்கள். நீங்களும் நானும் உறவாடிக் கொள்ளத் திரையாகவிருந்த உடல்கள்யாவும் ஜடங்கள்தான். மூஸா (அலை) அவர்கள் பேசிய மரமும் எம்போன்ற ஜடம்தான். நூர் என்பதை (எம்முடைய உலகின்) ஒளியென்றுகொண்டால் அதுவும் ஜடந்தான். ஜடமென்பது எத்தகைமையிலும் (திண்மம், திரவம், வாயு) எந்த நிலையிலிருப்பினும் அது கற்பிதமான வெறும் ஸூறத்தேயன்றிப் பொருளில்லை. நூர் என்ற ஒளி ஜடஒளிக்கு முற்றும் முரணானது. நூர் என்பது சூரிய ஒளி போன்றதல்ல.

நான் எங்கிருந்து எப்படிப் பேசுகிறேன் என்பது உங்களுக்கும், நீங்கள் எங்கிருந்து எப்படிப் பேசுகிறீர்களென்பது எனக்கும் புரிவதில்லை. அரும் பிரயாசையெடுத்தாலும், என்னுடல் இருக்குமிடத்தை அறிந்து கொண்ட எனக்கு, நானெங்கிருக்கிறேனென்பது தென்படவில்லை. என் பிராண நரம்பைவிடச் சமீபமாய், எனக்கு(நப்ஸுக்கு) றப்பாயும் (றூஹுவான) எனக்கு அப்துவாயும் இருப்பவன் நான்தான். நீங்களும் இதுபோல்தான் இருக்கிறீர்கள். மனிதனுடைய பிராண நரம்பை விடச் சமீபமாயிருப்பதும், நானென்ற அப்தாயிருப்பதும், நானென்ற றப்பாயிருப்பதும், இதைப்போல் சர்வ சீவராசிகளின் ஸுறத்துக்களைத் திரையாய்க் கொண்டுதான் அவற்றில் நான், நானிருக்கிறேனென்று உணர்ந்து கொண்டிருப்பதும், நானிருக்கிறேனென்றுணர்ந்து கொண்டிருக்கிற, அழிவில்லாத றூஹு மட்டுந்தான். றூஹு என்பது றப்புவாயும் அதன் ஸுறத்தென்ற திரை அப்துவாயும் இருக்கிறது. பௌதீக(ஜட) உடலான ஸுறத்தென்ற லாஹிரையும் சூட்சுமமான ஸுறத்தற்ற றூஹுவையும்(லாஹிரையும், பாதினையும்) ஏகமாய்க் கொண்டிருப்பதும் அந்த றூஹுவேதான். மயக்கமடையாமல் செவிதாழ்த்துக.

லாஹிறாய் இருக்கும் என்னுடல், ஏகவியாபகமாயிருக்கும் றூஹுவாகிய என்னால் எனக்கு நான் விதித்துக் கொண்ட (களாக்கத்ரில்) இயற்கை அமைப்பில் தரிபட்டிருப்பதால் என் சுயநிலையை மறந்த சிருஷ்டியாய், 6 அடிஉயரம் கொண்ட சின்ன இன்ஸானாய் அப்து என்ற பெயரோடு காட்சியளிக்கின்றேன். எனது கட்டுப்பாட்டிலிருந்து நான் விடுபடும்போது பெரிய இன்ஸானாய் (இறைகலீபாவாய்) சர்வ ஆலங்களையும் லாஹிறாய்க் கொண்டு, ஆலங்களுக்கெல்லாம் உயிரான றப்புவாயும் இருக்கிறேன். சிருஷ்டியான ஸுறத்தாயும் அதனுயிரான றப்பாயும் இவ்விருமர்தபாக்களையும் தன்னிடத்தே கொண்ட வுஜுதாயிருப்பதும், நான் என்ற உண்மையான உணர்வைக் கொண்டுள்ள றூஹுதான். றூஹுவான

என்னையன்றி இலாஹு இல்லவே இல்லை. ஜடஉலகையும் சூட்சும உலகையும் றூஹுவான என்னையும் தொடர்பு படுத்துவது றூஹுவான என்னுடைய தத்துவங்களே. இவ்வித தத்துவங்கள்தான் ஜிப்ரீல், மீக்காயில், இஸ்றாயீல், இஸ்றாபீல் போன்றவை. இவ்வித தத்துவங்கள் யாவும் றூஹுவின் சிருட்டிகளே. இவ்வித சிருஷ்டிகளுக்கும் லாஹிர், பாதின் உண்டு.

**ஹதீஸ்:-**

*மனிதர்களில் ஸைத்தானுடைய குணமும் இருக்கிறது, மலக்குகளின் குணமும் இருக்கிறது. கெட்டது நல்லதாகவும், உண்மை பொய்யாகவும் தெரியவருவது ஸைத்தானுடைய குணமாகும். நல்லது நல்லதாகவும், உண்மை உண்மையாகவும் தெரியவருவது மலக்குகளின் குணமாகும். வானவர்களுடைய குணத்தைப் பெறுபவர் இது இறைவனின் புறமிருந்து வந்ததென்றறிந்து அவனைப்புகழ வேண்டும். மற்றதைத் தன்னிற் கண்டால் கண்டவர் ஸைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோரவேண்டுமென்று கூறி 2:268ம் இலக்க திருவசனத்தையும் றசூல்(ஸல்) அவர்கள் ஓதிக்காட்டினார்கள்.*

**அறிவிப்பவர்:இப்னுமஸ்ஊத்(றலி)**

**ஆதாரம்:- திர்மிதி**

இந்த ஹதீஸில் பல ஞான உண்மைகள் தெளிவு செய்யப்பட்டிருக்கின்றன. மலக்குகளின் தொகை, வகை, விபரங்களை இங்கே விபரிக்க முடியாது. இவையாவும் (பௌதீக சூட்சுமங்களும் சிந்தனைக் கெட்டாத பிறவும்) றூஹு என்ற நான் என்னில் என்னைக் கொண்டே ஆக்கிக் கொள்ளப்பட்ட வையாகும். றூஹு என்பது புதியதோ பழையதோ அல்ல. இவ்வித சொற்கள் அதற்குப் பொருந்தா. அது என்றும் நிலையாயுள்ளது. றூஹுதன்னில்தானே கொண்டிருந்த சிருஷ்டியென்ற ஸுறத்துத் தோன்றியிருந்து மறைவதால் நாம் அவற்றைப் புதியவை, பழையவையாய்க் காணுகிறோம். இவை

முக்காலங்களில் கட்டுண்டவையாய், இடத்தால், திசையால், வெவ்வேறாய்க் கட்டுப்பாடுடைய மனித அறிவுக்குத் தென்பட்டாலும் உண்மையில் நானென்றுணரும் றூஹுவும் அதன்குணமும் நாமங்களின் ஸுறத்துக்களுமே யன்றிப் பிறிதொன்றில்லவேயில்லை. இருப்பது நானென்றுணரும் றூஹு மட்டுமே. றூஹுக்கு இணை துணை, ஜோடி, சமம், நிகர்கிடையாது. எனவே றூஹுவான என்னுடன் ஒப்பிட்டு நோக்க இன்னொன்றில்லாதிருப்பதால் என்னைத்தான் என்னுடன் ஒப்பிட்டு நோக்கவேண்டும். மேலே காட்டிய விபரம் குர்ஆனில் இறைவன் கூறும் வாதத் தொகுப்பாகும். எனவே றப்பு யார்? அப்து யார்? நானென்றுணர்வது யார்?

(றூஹு பேசுவதாய்க் கற்பனை பண்ணிக் கொள்க) அப்து, றப்பு என்ற நாமங்கள் என்னுடையவையே. நான் (சர்வத்தையும்) என்னை முற்றிலும் சூழ்ந்த “முஹீத்” தாய் இருப்பதால் என்ன என்ன ஸுறத்துக்கள் எங்கெங்கிருப்பினும் அவையாவும் எனது நாமங்களின் வெறும் தோற்றப்பாடுகள் தான். வானங்களையும் பூமியையும் ஹக்கைக் கொண்டே சிருஷ்டித்தேன் என்று கூறும் 16:3ம் ஆயத்தின்படி ஹக்கான (றூஹுவான) என்னையன்றி வேறெதுவும் என்னுடன் இல்லை. எனவே சர்வ ஸுறத்திலும் இருந்து நான், நானென்றுணர்வது நானேயன்றி இல்லை.

## விசேட சிந்தனைக்கு:~

நான் என்பது இரண்டுவகையாய் இருக்கிறது. ஒன்று பௌதீக உடலை இயக்கும் நப்ஸு, உடலை நான் என்று நம்புவது. இது ஷிர்க்காயும்(அனாநிய்யத்தாயும்) உண்மை யில்லாத கற்பனையான (பாதிலாய்) பொய்யாகவும் இருக்கிறது. உடலுக்கும் உடலை இயக்கும் நப்ஸுக்கும் மூலாதாரமாயுள்ள, கட்டுப்பாடற்ற றூஹு தன்னை நான் என்றுணர்வது இரண்டாவது

வகையாகும். இந்த நான்தான் உண்மையான (ஹக்கான) நான் என்பது. மேலே நான் கூறிய விளக்கத்தில் நான், நானென்று கூறியது றூஹு உணரும் நானையேயாகும். இந்த நான் சொல்மூலம் வெளிப்படையாய் வரக்கூடியதல்ல. இந்த நானுடைய உணர்வுக்கு எழுத்துக்களோ ஒலியோ கிடையாது. எனவே இதுவரை நான் என்பதை மையமாகக் கொண்டு நான் கூறியதெல்லாம் ஆரம்ப ஸூபிகள் இலகுவாயுணர்வதற்காக வேயன்றி என்னை நான் அல்லாஹ் என்று விளம்பரம் செய்வதற்காக அல்ல. எனவே அலட்டிக்கொள்ளவும் ஆத்திரம் அடையவும் மன்ஸூர் இப்னுகல்லாஜி(றலி) அவர்களைக் கொன்றது போல என்னைக் கொல்ல முயற்சிப்பதும் அர்த்தமற்ற மூடத்தனமாகும். எமது மூட புத்தியைக் கொன்றழிப்பதே அறிவுடமையாகும். நான் சுருக்கமாய்க் கூறியபடி திரைக்கப்பால் இருந்தே இறைவன் பேசுகிறான் என்பதைப் புரிந்து கொண்டால் மற்றும் இருவகைப் பேச்சுக்களையும் நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்பது அர்த்தமாகும். ஆகவே 1ம் 3ம் வழிகளை நான் இங்கே விபரிக்காமலே விட்டுவிடுகிறேன்.

**குர்ஆன்: 50:16**

وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ
بِهِ نَفْسُهُ ۖ وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيدِ ۝

**நான் இன்ஸானிடத்தில் அவனுடைய பிராண நரம்பிலும் சமீபமாய் இருக்கிறேன்.**

எனது பிராண நரம்புக்குச் சமீபமாயிருப்பவன் நானேதான். எனவே இன்ஸான் என்பவன் (றூஹு) என்பது அல்லாஹ்வாக இருந்தாலேயன்றி இவ்வாயத்து எவ்வகையிலும் ஒத்துவராது. எனதுடமைப் பொருளான என்னுடைய உடலின் ஓர் அங்கம்தான் எனது பிராணநரம்பு என்பது. அந்த நரம்புக்குச்

சொந்தமானவவன், நரம்பென்ற ஸூறத்தை கொண்டிருப்பவன் நானேதான். இருபொருள் ஏககாலத்தில் ஒன்றித்து இருக்க முடியாதென்பது தத்துவ உண்மையாகும். எனவே இருப்பவன் நானென்றுணரும் றூஹு மட்டும்தான். இதை மறந்து நப்ஸுடைய போலியான நானைநம்பி, இறைவனைக் கற்பனையில் ஆக்கிக்கொள்ளவேண்டாம் அதனால் வேதனை செய்யப்படலாம் என்று விளக்கமளிக்கும் 26:213ம் இலக்க ஆயத்தை ஆழமாய்ச் சிந்தித்துத் தெளிவு பெறுக. இவ்வாயத்தி லுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு அப்து என்று பொருள் கொண்டாலும், றப்பு என்று பொருள் கொண்டாலும் உள்ளது ஒரேயோர்நான் மட்டுமே என்பதைத்தான் உறுதிப்படுத்தும்.

சிருஷ்டியாகிய நாம் நாவினால் கூறி முஸ்லிமாகி, அதை ஆராய்ந்து ஒப்புக்கொண்டு அனுபவ பூர்வமாய்க்கண்ட கலிமாவின் சாரம் இதுதான்.

லா இலாஹ இல்லல்லாஹ்=அல்லாஹ் தவிர சிருஷ்டி இல்லை.

**குர்ஆன்: 20:14**

إِنَّنِيٓ أَنَا ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعۡبُدۡنِي وَأَقِمِ ٱلصَّلَوٰةَ لِذِكۡرِيٓ ١٤

**நிச்சயமாக நான்தான் அல்லாஹ் என்னைத் தவிர வேறு (இலாஹு) சிருஷ்டி இல்லை. என்னையே நீர் இபாதத்துச்செய்யும். என்னைத் தியானித்துக் கொண்டிருக்கும் பொருட்டுத் தொழுகையைக் கடைப்பிடியும்.**

இந்த ஆயத்தைத் தெளிந்த அறிவோடு நோக்குங்கள். இந்த ஆயத்து அப்துவுக்கு றப்புவினால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பாகும்.(சுருக்கமாய்த்தருகிறேன்) உயிரற்றிருந்த சிருஷ்டி என்ற ஸூறத்து உயிரூட்டப்பட்டபோது தன்னை, தன் இறைவனை

க்காண, உறவாட, அறியத்துடித்தது.(விரும்பியது) சிருஷ்டியின் அறிவுத்தாகத்தைத் தீர்க்க, தன்னையும் தன் றப்பையும் அறிந்து கொள்வதற்காக, கலிமத்துத்தையிபா அப்துவுக்கு றப்புவினால் தரப்பட்டிருக்கிறது. இபாதத் என்றால் "ஏகமாக்கல்" அவனுடைய செயல் வெளியாதல், அறிதல் என்பதே பொருளாகும். இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்று பொருள் கொள்வது புரட்டலாகும்.

**குர்ஆன்: 51:56**

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ۝

**(என்னை) இபாதத்துச் செய்வதற்காகவன்றி இன்ஸையும் ஜின்னையும் நான் சிருஷ்டிக்கவில்லை.**

இவ்வாயத்தின் சரியான மொழிபெயர்ப்பு இதுதான். இவ்விபரத்தை ஹதீஸுகளும் யுக்தியும் உறுதிப்படுத்துகின்றன. "இபாதத்" என்பதற்கு வணக்கம், தொழுகையென்று பொருள் கொள்வது வஹ்முடைய மயக்காகும். இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்று பொருள் கூறியது எமது முன்னோரில் உள்ள சிலரின் கூற்றாகும். இன்றுள்ள பெரும்பாலான மௌலவிமார்கள் முன்னோரின் புரட்டலிலேயே ஊறிக்கொண்டிருப்பதனால்தான் இன்றும் எம்மிடையே இவ்வித தவறான பிரசாரங்களைச் செய்கிறார்கள். எமது திருக்குர்ஆன் தீர்ப்பு முதலாம் பாகத்தில் இவ்வாயத்துக்கு விளக்கம் கொடுத்துள்ளேன். "இபாதத்" என்பது அறிதல் என்ற பொருளுடையது. அறிதலென்பதே மனிதரின் சகல செயல்களினதும் நோக்கமாயிருப்பதால், "இபாதத்" என்ற சொல்லுக்கு அப்துவில் வெளியாகும் செயல் என்று பொருள் கொண்டாலும் பாதகமில்லை. அல்லாஹ் தன்னையறிவதற்காக

என்பது பொருளல்ல. அப்து தன்னையும் தன் றப்பையும் அறியும் அறிவே அப்துவில் வெளியாகும் இபாதத் என்பது.

**ஹதீஸ்**

***நான் அறியப்படாத மறைந்த பொக்கிஷமாயிருந்தேன். அப்போது நான் அறியப்படவேண்டுமென்று நாடிச் சிருஷ்டிகளைப் படைத்தேன். சிருஷ்டிகள் என்னைக் கொண்டே என்னை அறிந்தன என்று அல்லாஹ் கூறியதாக றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**ஹதீஸுல் குத்ஸி**
**ஆதாரம்:- ஈகாலுல்ஹிமம் பீஸர்ஹிகம். தாவீலாத்துன் நஜ்மியா.**

இந்த ஹதீஸை வஹ்ஹாபிகள் இட்டுக் கட்டிய பொய்யான ஹதீஸ் என்று மளுப்புகிறார்கள். அவர்களுடைய கொள்கைக்கு இது முட்டுக்கட்டையாய் இருப்பதாலேயே இப்படிக் கூறுகிறார்கள். இந்த ஹதீஸ் குர்ஆனுடனும் யுக்தியுடனும் ஒத்திருப்பதால் இதைப் பொய்யான ஹதீஸென்று கூறமுடியாது. சிருஷ்டி தன்னையும் தன் றப்பையும் அறியும் நிகழ்ச்சி ஒரே நாளில் முடியக்கூடியதாயில்லை. வஹ்மு என்ற திரையில் தான் சிருஷ்டி உருவாக்கப்பட்டதாகும்.ஆகையால்தான் “இன்ஸான்” என்ற சொல்லுக்கு “முழுமூடன்” “அறிவிலி” என்றும் ஓர் பொருளுண்டு. இந்த வஹ்மு உலக வாழ்வுக்கு அவசிய மாயிருக்கிறது. எனவே உலக வாழ்வும் கெட்டுவிடாமல் என்னை நான் கண்டறிய 20:14ம் ஆயத்தில் மூன்று அணுகுமுறைகள் தரப்பட்டிருக்கின்றன.

1வது:-

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை விளங்கி ஏற்றுக்கொள்வது இந்த ஈமான்தான். இஸ்லாத்திலுள்ள எல்லா அமல்களுக்கும் ஸர்த்தாக அமைந்திருக்கிறது. 2:62, 5:55, 5:69, 4:124 போன்ற பல ஆயத்துக்கள் இவ்வுண்மைக்கு ஆதாரங்களாயிருக்கின்றன.

2வது:-

தொழுகை. இது உடலுக்குரிய முதலாவது பயிற்சியாகும். இந்தப்பயிற்சியின் போது, படர்க்கையில் இருப்பதாய் நம்பியிருந்த இறைவனை முன்னிலையில் இருப்பதாய்க் கற்பனை பண்ணிக்கொண்டு இறைவனுடன் மனிதன் உறவாடுகிறான், முறையிடுகிறான். இது தொழுகையிலுள்ள திக்ர் ஆகும். அப்துும் றப்பும் உறவாடும் முதலாவது வழி தொழுகைதான்.

3வது:-

தொழுகை முடிந்தபின் கல்பினால் இறைவனைத் திக்ர் (நினைவு) செய்வது, தரீக்கத் என்பது இதுவே. ஆதாரம் 4:103 ஆயத்தாகும். தனித்திருந்தோ கூடியிருந்தோ அல்லாஹ்வைத் திக்ர் செய்வதே மூன்றாவது பயிற்சியாகும்.

4வது:-

இபாதத் செய்வது. பற்பல இருப்பதாய்க் காண்பதை, அறிவதை, ஆராய்வைக் கொண்டு ஏகமாய் அறிதல் என்பதே இபாதத் என்ற சொல்லின் உண்மையான அர்த்தமாகும். இதை "முறாக்கபா" ஆராய்தல் என்று கூறுவதே மிகப்பொருத்தமாகும்.

இந்த முறாக்கபாவில் வெற்றிபெற்றால் நான் இருந்தது போலிருந்து கொண்டே எவ்வித மாறுபாடுமின்றி, அழிவுமின்றி, நானே யாவுமாய்க் காட்சியளிக்கிறேன் என்பதை உணரமுடியும். இவ்வுணர்வு நானென்றுணரும் றப்புக்குரிய தேயன்றிச் சிருஷ்டியான நப்ஸுக்குரியதல்ல. "தஜல்லி" என்பதும் இறையுணர்வென்பதும் இதுவே. சிருஷ்டியென்பது வெறும் தோற்றப்பாடேயென்பதை ஓர்கணமும் மறக்கக்கூடாது.

நாம் தொழுகை முதலாம் அமல்களைக் கொண்டு பெற்றுக்கொள்வது "இக்லாஸ்" என்ற ஏகாக்கிரசித்தமே. இந்த இக்லாஸை அடிப்படையாய் வைத்துக்கொண்டுதான்

(முறாக்கபா) ஆராய்தல் செய்யவேண்டும். இந்த முறாக்கபா முழுமை பெறுமானால் அங்கே றப்புடைய தஜல்லி நிச்சயமாக ஏற்பட்டேயாகும். இத்தனைக்கும் ஆரம்ப உயிராயிருப்பது கலிமத்துத்தையிபாவாய் இருக்கிறது. இக்கலிமாவை விளங்கி அதனுண்மையில் தரிபடும் நோக்கமாய் அமல்களைக் கையாளும் மனிதன் நிச்சயமாக இம்மை மறுமைப் பேறுகளைப் பெற்றுக்கொள்வான் என்பதில் சந்தேகமேயில்லை. தன்னைத் தன்றப்பை அறிய விரும்பும் மனிதனின் முதலாவது கடமை கலிமாவைக்கூறி, விளங்கி அவ்வுண்மையை உள்ளத்தில் பதித்தலாகும். உள்ளத்தில் பதித்த உண்மையை நழுவவிடாமல் பாதுகாப்பதே அமல்களின் உண்மையான நோக்கமாயிருக்கிறது

# 30

## விசேட விளக்கவுரை

**குர்ஆன்: 15 :99**

وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَأْتِيَكَ الْيَقِيْنُ ۝

**உமக்கு எகீன்(ஈமான், விசுவாசம்) ஏற்படும்வரையில்(ஏகமாக்கி) இபாதத் செய்து கொண்டிருப்பீராக.**

இந்த ஆயத்தில் குறிப்பிடப்பட்ட எகீன் என்ற சொல்லுக்கு மவுத்(மரணம்) என்றும் இபாதத் என்று சொல்லுக்கு வணக்கம் என்றும் சிலர் பொருள் கூறி உண்மையை இருட்டடிப்புச்செய்து கொண்டிருக்கிறார்கள்.

குர்ஆனில் இடம் பெறும் 15:99ம் இலக்க ஆயத்திலுள்ள "எகீன்" என்ற சொல்லுக்கு மரணம் என்றும் "இபாதத்" என்ற சொல்லுக்கு வணக்கம்(தொழுகை) என்றும் பொருள் கொள்வது, குர்ஆன் ஹதீஸுகளை இருட்டடிப்புச்செய்யும் "குப்ரு" ஆகவும் (மன்கூலுக்கு விரோதமாகவும்) சிந்தித்து ஆராயும் அனுமான அறிவுக்கு (மஃகூலுக்கு) விரோதமாகவும் இருக்கிறது. "எகீன்" என்ற இச்சொல் குர்ஆனில் சிற்சில இடங்களில் தனிச்சொல்லாகவும் சிற்சில இடங்களில் வேறு சொற்களோடி ணைத்தும் தரப்பட்டிருக்கிறது. எகீன் என்ற இச்சொல் குர்ஆனில் மொத்தம் 32இடங்களில் பாவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையை நீங்கள் நம்ப வேண்டுமானால் குர்ஆனிலுள்ள

நான் தருகிற இந்த ஆயத்துக்களை ஆராய்ந்து பாருங்கள். 13:2, 2:4, 2:117, 5:50, 28:3, 28:72, 30:60, 31:4, 32:24, 45:20, 52:36, 28:14, 15:99, 28:22, 56:95, 69:15, 102:5, 102:8, 4:158, 32:12, 6:85, 26:24, 44:8, 51:20, 45:32

இவ்வாயத்துக்களின்படி, குர்ஆனில் எவ்விடத்திலும் "எகீன்" என்ற சொல் மரணம் என்ற பொருளில் பாவிக்கப்படவேயில்லை. இதேபோல், ஹதீஸுகளிலும் "எகீன்" என்ற சொல் மரணம் என்ற பொருளில் பாவிக்கப்படவேயில்லை. எனவே எம்முன்னோரான முபஸ்ஸிரீன்களில் பலர் அவர்களுடைய அறிவீனத்தினால், தௌஹீதை ஏற்றுக்கொள்ள முடியாமையினால் குர்ஆனை மூடிமறைக்க முற்பட்டார்களென்பதை அறிவாளர்கள் இனிமேலாவது ஒப்புக் கொள்ளமுடியாதா?

15:99ம் இலக்க ஆயத்தில் கூறப்பட்ட எகீன் என்ற சொல்(மௌத்தை) மரணத்தை நோக்கியே கூறப்பட்டதென்பதை விளக்குவதற்காக ஓர் ஹதீஸை சிலர் ஆதாரமாய்க் காட்டுகிறார்கள். ஒருவர் இறந்த போது றசூல்(ஸல்) அவர்கள், அவர் எகீனை அடைந்துவிட்டார் என்று கூறியிருப்பதால் எகீன் என்பது மரணம்தான் என்று வாதிடுகிறார்கள். இது ஹதீஸை விளங்கிக் கொள்ளாத மருட்சியாய் இருக்கிறது. றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸில் தரப்பட்ட எகீன் என்ற சொல் ஈமானின் இரண்டாவது படித்தரத்தை விளக்குவதாய் இருக்கிறது. 15:99 இலக்க ஆயத்தில்தரப்பட்ட எகீன் என்ற சொல் ஈமானின் முழுமை பெற்ற பூரண நிலைமையை(லிகாவை)ச் சுட்டியதாய் இருக்கிறது. எனவே 15:99ம் இலக்க ஆயத்துக்கு இந்த ஹதீஸை ஆதாரம் காட்டுவது பொருந்தாது. ஏனென்றால், குர்ஆன் 55:26ம் ஆயத்தில் "குல்லுமன் அலைஹாபான்" யாவும் அழிந்து விடும் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்று கூறப்படுவதால், அழியக் கூடிய சர்வ சிருட்டிகளும் ஹுரூர், மயக்கு, மாய்யை, என்று தென்படுகிறது. நரக சுவர்க்கம், இம்மை, மறுமை யாவும்

சிருட்டியாகவே இருப்பதால் அவை யாவும் ஹுசூர் என்ற வகுப்பிலுள்ளவைதான். சிருஷ்டிக்கப்பட்ட யாவும் என்றோ ஓர்நாள், அவை சிருஷ்டிக்கப்பட முன் இருந்த நிலமைக்கு (இல்லாமையென்ற அமாவுடைய நிலமைக்கு)ச் சென்றே ஆகவேண்டும். அப்படியானால் தோன்றி மறையும் சர்வ சிருஷ்டிகளும் ஹுசூர் என்ற மயக்குக் காட்சியாகவும் (பொய்க்காட்சியாகவும்) அல்லாஹ்மட்டுமே உண்மைப் பொருளாகவும் இருக்கவேண்டும். மறைந்தொழியும் இம்மை மறுமையையும் பிறப்பு இறப்பையும் ஹுசூர் என்று கொண்டால் அவற்றை எகீன், உறுதியென்று எப்படிக் கூறுவது? இம்மை மறுமை இறப்புப் பிறப்பை ஈமான் கொள்வது ஈமானின் முதலாம் இரண்டாம் படித்தரங்களாய் இருக்கின்றன. 15:99ம் ஆயத்தில் தரப்பட்ட எகீன் ஈமானின் முழுமைபெற்ற நிலையாய் இருக்கிறது. அதாவது அல்லாஹ்வையன்றி இல்லையென்றறிந்து அனுபவத்தில் கொள்ளும் ஈமானை, உறுதியைக் குறிப்பிடவே 15:99ம் ஆயத்தில் எகீன் என்ற சொல் தரப்பட்டிருக்கிறது. இந்த எகீன் றப்புக்குடையதே அன்றி அப்துக்குடையதல்ல. பனாபித் தௌஹீது என்பது இதுவே. உப்புக்கல் கடலில் கரைந்து கடலோடு கடலாய் இருக்கும் நிலைமைபோல அடியான் தன் றப்புவில் நாஸ்த்தியாகிவிடும் நிலைமைக்கே ஆயத்தில் எகீன் என்றசொல் பாவிக்கப்பட்டிருக்கிறது.

இறப்புக்குப்பின் மனிதன் நகர சுவர்க்கங்களைப் பார்க்க, அனுபவிக்கப் போகிறான். அப்போதுதான் உலக வாழ்வு ஓர் கனவை ஒத்ததென்று நம்பப்போகிறான். இதைப்போல லிகா என்ற இறை சன்னிதானத்தையடையும்போது நரக சுவர்க்கங்களும் கனவுக்காட்சியைப் போன்றவையே என்றுணரப் போகிறான். இவ்வுணர்வின் கடைசி எல்கைதான் தஜல்லியென்பது. இந்த நிலை சிருஷ்டிக்கில்லை, இறைவனுக்குரியது. எல்லாம் அழிந்து விடும் அல்லாஹ் மட்டும்மிஞ்சுவான் என்றால் தஜல்லியின் போது சிருஷ்டி எப்படி இருக்கமுடியும்? இருக்கவே இருக்காது. இந்த இறுதி

நிலையையடையும் வரை இபாதத் (ஆராய்தல், அறிதல்) செய்ய வேண்டுமென்பதே 15:99ம் ஆயத்தின் உண்மையான அர்த்தமாயிருக்கிறது. இவ்விஷயத்தில் இன்னும் சிலவிபரங்கள் பின்னால் தரப்படும். பொறுமையடைக.

அடுத்ததாக, "இபாதத்" என்ற சொல் குர்ஆனில் (ஒருமைப்படுத்தல்) ஏகமாக்கல் என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறதென்பதையும், ஹதீஸுகளிலும் இச்சொல் அதே பொருளிலேயே பாவிக்கப்பட்டுள்ளதென்பதையும் நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமானால், நான் இங்கு தரும் குர்ஆன் ஆயத்துக்களை ஆராய்ந்து பாருங்கள். இது சம்பந்தமாக 275 ஆயத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஆனால், நான் அவற்றில் சிலவற்றின் இலக்கங்களை மட்டுமே இங்கு தருகிறேன். 2:207, 3:15, 3:20, 3:30, 7:194, 21:26, 25:63, 36:30, 37:40, 37:74, 37:128, 37:160, 37:169, 40:31, 40:44, 40:84, 43:19, 44:18, 50:11, 26:6, 39:10, 39:16, 39:17. மீதி ஆயத்துக்களைக் குர்ஆனைக்கொண்டே கண்டறிக. இந்த ஆயத்துக்களில் "அப்து", "இபாதத்", "ஆபிது" என்ற சொற்கள் முறையே அப்து-அடிமை, இபாதத் - அடிமையில் வெளியாகும் ஏகமாய் அறிதல் என்ற செயல், ஆபிது-ஏகமாய் அறிய முயல்பவர்(இபாதத் செய்பவர்) என்ற பொருட்களையே தந்துகொண்டிருக்கின்றன. ஸூறத் அப்துவாகவும்(அடிமையாகவும்) அதிலிருந்து வெளியாகும் செயலான அறிதல்(ஏகமாக்கல்)என்பது(செயலாயும்) இபாதத்தாயும் இருப்பதை நுட்பமாய் உணர்க.

மேலும், குர்ஆனில் இபாதத் என்ற சொல் எங்கு இடம்பெற்றாலும் அது (ஒருமைப்படுத்தல்) ஏகமாக்கல் என்ற பொருளிலேயே கூறப்பட்டிருக்கிறதென்று அப்பாஸ்(றலி) அவர்கள் அறிவித்துள்ளதாக தப்ஸீர் மஜீத் போன்ற பல தப்ஸீர்கள் விரிவுரை செய்திருப்பதையும் சிந்தனைசெய்து தெளிவு பெறுக. இவ்வாயத்துக்களின் சரியான மொழிபெயர்ப்பை இதோ தருகிறேன்.

**குர்ஆன்: 51:56**

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ۝

**(என்னைக்கொண்டு அவர்களை அவர்கள்) அறிவதற்காகவன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை.**

இந்த மொழிபெயர்ப்பை நிரூபிக்க ஹதீஸுகளும் இஜமாஉ, கியாஸும் பூரணமான ஆதாரங்களாயிருக்கின்றன. இதற்கு ஆதாரமான ஒரு ஹதீஸ் முன்பு தரப்பட்டுள்ளது. வணங்குவதற்காகவே சிருஷ்டித்தான் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடையாது. அப்படிப் பொருள் கொள்வது அறியாமைதான். மன்கூல், மஹ்கூல் என்ற பிரமாணங்களின் படி அறிதல், ஏகமாய்க்காணல்(ஒருமைப்படுத்தல்) என்பதே இபாதத் என்ற சொல்லின் உண்மையான அர்த்தமாகும். இவ்வித இபாதத்தைச் செய்பவர் எவரோ அவரே "ஆபிது" என்பவர். இபாதத்துக்கு "இக்லாஸ்" மன ஒருவழிப்பாடு அவசியம். இக்லாஸை உருவாக்கும் பயிற்சிகளே அமல்கள். வணக்கம் என்ற சொற்களால் விளக்கப்படும் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு, திக்கிர் என்பவையாகும். எனவே, நாம் காட்டிய ஆயத்தில்(15:99) கூறப்பட்ட எகீன் என்ற சொல் பூரண உறுதியை, ஈமானைக்குறிப்பிட்டதேயன்றி மரணத்தைக் குறிப்பிட்டதல்ல. இன்னும் சிறிது சிந்தனை செய்யுங்கள்.

**குர்ஆன்: 6:75**

وَكَذَٰلِكَ نُرِيٓ إِبْرَٰهِيمَ مَلَكُوتَ ٱلسَّمَٰوَٰتِ
وَٱلْأَرْضِ وَلِيَكُونَ مِنَ ٱلْمُوقِنِينَ ۝

**இப்றாஹீம் எகீன் (நம்பிக்கை, உறுதி) கொள்வதற்காக**

**வானங்களிலும் பூமிகளிலுமுள்ள மலக்கூத்தை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்து வந்தோம்.**

இவ்வாயத்தில் தரப்பட்ட எகீன் என்ற சொல்லுக்கு மவுத், மரணம், இறப்பு என்று பொருள் கூறமுடியுமா? இப்றாகீம்(அலை) மௌத்தென்ற உறுதியைப் பெறுவதற்காகவே, மலக்கூத்தைக் காட்டினான் என்று நாம் பொருள் கொள்ள முடியுமா? இப்படி பொருள் கொள்வோர் குர்ஆனைக் கொண்டே குர்ஆனை விளங்குதல் என்ற முதலாவது வழியைக்கூட அறியாத புரட்டல்வாதிகளென்றே கூறலாம்.

மனிதன் உடலை வாழவைக்கவே இவ்வுலகில் முயற்சி செய்கிறான். இறுதியில் அவன் தன் உடலை இழந்து விடுகிறான். மறுமையில் தன் உடலும் உலகும் கூட வெறும் கனவைப் போன்ற ஸூறத்துக்களே என்பதையும், தன் உலகவாழ்வு ஓர் மயக்கு என்பதையும் உணரப்போகிறான். இறைசன்னிதானத்தில் அழிந்து தரிபாடடையும் போதுதான், சர்வ உலகும், சர்வ சிருஷ்டிகளும் இறைவனின் கற்பனையே என்பதை உணரப்போகிறான். அவையாவும் இறைவனின் நாமங்களின் ஸூறத்துக்களே என்பதையும் நான் என்றுணர்ந்து கொண்டிருக்கும் அல்லாஹ்வையன்றி எதுவுமே அவனுடன் இணை துணையாய் இல்லையென்பதையும் அனுபவத்தில் கண்டறியப் போகிறான். இந்த அறிவுப்பிரயாணம் மிக நீண்டதாயும் கஸ்ட நஸ்டங்கள் நிறைந்ததாயும் இருக்கிறது. இதை இவ்வுலகிலேயே மனிதன் இலகுவாய் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக இறைவன் ஓர் கொள்கையையும்(சித்தாந்தத்தையும்) அக்கொள்கையை உள்ளத்தில் உறுதியாய்த் தரிபடுத்தும் உபாயங்கள் நிறைந்த முழுமை பெற்ற ஓர் வேதத்தையும் அனுப்பியிருக்கிறான். மனிதன் குறிக்கோளை மறந்துவிடுவதால் உடலுக்குரிய இம்மை வாழ்வும், ஆத்துமாவுக்குரிய மறுமை வாழ்வும் பாழ்பட்டு விடுகின்றன. எனவே முதலில் அவனுக்குக் குறிக்கோளை

விளக்குவது அவசியமாயிற்று. ஆகையால்தான் இஸ்லாத்தின் முதற்கடமையாகக் கலிமாவைக் கொண்டு ஈமான் கொள்ளும்படி மனிதனுக்கு அல்லாஹ் அறிவித்தான்.

இந்தக் கலிமாவை கூறுபவர் அல்லாஹ்வையன்றி இல்லையென்பதை அறியும்போது அவரையறியாமலேயே "நான் யார்" என்ற கேள்வி அவரின் உள்ளத்தில் தோன்றிவிடுகிறது. இக்கேள்விக்கு விடை கண்டறிவதற்கு உலக வாழ்க்கையைச் சரியான முறைப்படி அமைக்கவேண்டியது அவசியமாகிறது. இந்த அவசியத்துக்காகவே குர்ஆன் தரப்பட்டிருக்கிறது. அப்படியானால் இக்கேள்விக்குரிய பதிலை அறிவதே மனிதனின் இம்மை வாழ்வு என்பது தென்படுகிறது. எனவே, சிருஷ்டி தன்னை அறிவதற்காகவே படைக்கப்பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது.

**ஹதீஸ்**

*நான் அறியப்படாத மறைந்த பொக்கிஷமாய் இருந்தேன். அப்போது நான் அறியப்படவேண்டுமென்று நாடிச் சிருஷ்டிகளைப்படைத்தேன். சிருஷ்டிகள் என்னைக் கொண்டே என்னை அறிந்தன என்று (அல்லாஹ் கூறுவதாக) றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்*

**(கதீஸுல் குத்ஸி)**

**ஆதாரம்:-ஈகாலுல் ஹிமம் பீஸர் ஹிமம், தாவீலாத்துன் னஜ்மியா**

இந்த அறிவு தௌஹீதென்ற அடிப்படையில் ஏகமாக்கிக் கொண்டிருந்தால் அதாவது முறாக்கபா, ஆராய்வு, சிந்தனைசெய்து கொண்டிருந்தால் ஒரு தருணத்தில் அவ்வறிவு "ஹக்குல் எகீன்" என்ற உண்மையான விசுவாசத்தைப் பெற்றுவிடும். ஹக்குல் எகீனைப் பெற்ற மனிதர் உண்மையான ஈமானில் உறுதி பெற்றுவிட்டால் இனிமேல் அவர் இபாதத் (ஏகமாக்குதல்) செய்யவேண்டியதில்லை. இதை விளக்கத்தான் நாம் காட்டிய 15:99ம் ஆயத்து அருளப்பட்டது. இதில் இன்னுமோர் உண்மையுண்டு. அப்து என்பது சுயநிர்ணய

உரிமையற்ற அடிமை. அது வெறும் ஸூறத்து மட்டுந்தான். இவ்வடிமை சுயநிர்ணய உரிமையுடையதாய் (அனாநிய்யத்து டையதாய்) இருக்கும்போது நான் வேறு, அல்லாஹ் வேறு என்ற அனாநிய்யத்தை அழிப்பதற்காகவே ஏகமாக்கிக்கொண்டு (அறிந்துகொண்டு) இருந்தது. இந்த அறிவு நிரப்பம் பெற்றுவிட்டால் (ஹக்குல் எகீனாக மாறிவிட்டால்) இந்த அடிமை (அப்து) சுயநிர்ணய உரிமையற்ற பூரண(அடிமையாய்) அப்துவாய் அமைந்து விடுகிறது. இப்போது இவ்வடிமை அறியும் அறிவு அல்லாஹ்வுடையதாய் (செயல் அல்லாஹ்வுடையதாய்) அமைந்துவிடும். எனவே அறிவதற்காகப் படைத்தேன் என்பதும், செயல் வெளியாகப் படைத்தேன் என்பதும் ஒரே பொருளையே உணர்த்துவதாகும். ஏனென்றால் முன்பு நான் சுருக்கமாகக் கூறிய விபரத்தின்படி எச்செயலிலும் யார்யார் எப்படியெப்படி ஈடுபடினும் அச்செயல் அறிவதேயாகும் என்பதை மறுக்கமுடியாது. எனவே மௌத்தாகும் வரையிலும் வணங்கு, தொழு என்பதும் இதற்காதாரமாய் றஸூலின் கியாஸைக் காட்டுவது வெறும் புரட்டலும் இருட்டடிப்புமாகும். இப்புரட்டல் குர்ஆன், ஹதீஸ் என்ற மன்கூலுக்கும் உண்மையான யுக்தி என்ற ம.்.கூலுக்கும் நேர்முரணான குப்ருவாகும். அறிவுடை யோருக்கு இச்சிறு விபரமே போதுமானது.

## ஓர்கேள்வி

இவ்வித ஆயத்துக்களை எம்முன்னோர் ஏன் இருட்டடிப்புச் செய்தார்கள்?

பதில்:-

எஹூது நஸராக்கள் மதக்கரடிகளாயிருந்து மக்களிடம் பொருளாதாரத்தை, கௌரவத்தைப் பெறமுயன்ற முறைகளையும் அவர்களால் கையாளப்பட்ட அடக்குமுறைப் பத்துவாக்களையும் பின்பற்றியே எம் முன்னோரில் மிகப்பலர் தான்தோன்றித்தனமான, குருட்டுத்தனமான சட்டங்களை

உருவாக்கிக்கொண்டு மக்களிடம் கௌரவம், பொருளாதாரம் போன்றவற்றை எதிர்பார்த்திருக்கிறார்கள். மக்கள் குர்ஆனுடைய விஷயத்தில் விழிப்படைந்து விட்டால் தமது தொழில், கௌரவம் பாழாய்விடுமென்பதற்காக இருட்டடிப்புச்செய்திருக்கிறார்கள். இருட்டடிப்பு வெளியாகக் கூடாதென்பதற்காக உண்மையை வெளிப்படுத்த முனைந்த மக்களுக்குக் காபீர், முர்த்தத் என்ற பட்டங்களைச் சூட்டி அவர்களை மக்களிடத்தில் செல்வாக்கற்றவர்களாய் மாற்ற முனைந்திருக்கிறார்கள். மக்கள் இவ்விஷயத்தை (உண்மையை) உணரவிடக்கூடாதென்பதே அவர்களுடைய முழு நோக்கமாயிருந்திருக்கிறது. மார்க்கத்தில் பலாத்காரம் இல்லை என்று குர்ஆன் விளக்கிக் கொண்டிருக்கும் போதும் குர்ஆனை உண்மையின் அடிப்படையில் ஆதாரங்களோடு விளக்கும் ஓர் உண்மைவாதியைக் கொன்றழிக்கப் பலாத்காரச்செயல்களைக் கையாளுகின்றார்களென்றால், இவர்களை “மதக்கரடிகள்” என்று இங்கர்ஸால், வில்லியம்மூர் போன்றோர் கூறுவதில் என்ன தவறிருக்கிறது? இருட்டடிப்புச் செய்தோர், மக்களை மதம் என்ற கேடயத்தைக் கொண்டு அடக்கித் தங்களுடைய கட்டளைகளை நிறைவேற்றச் செய்கிறார்கள். எனவே, வரட்டுக் கௌரவத்துக்காக வாழும் வழிகாட்டிகளை விட்டு விலகி, கட்சிப்பற்றில்லாத உண்மையான தெளிந்த அறிவுடன் குர்ஆன் ஹதீஸுகளை ஆராய்ந்துதான் நாம் உண்மையை கண்டறிய வேண்டியதாயிருக்கிறது. வரட்டுக்கௌரவத்தை எடுத்துக் கொண்ட அறிவிலிகளே கலிமாவுக்கு வலிந்துரை கொண்டிருக்கிறார்களென்பதை ஆராய்ந்து கண்டறிக. இப்போது நாம் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு வருவொம்.

முன்பு நாம் காட்டிய குர்ஆன் 51:56, 15:99 ஆகிய இரு ஆயத்துக்களையும் ஓர் சாரார் ஏன் இருட்டடிப்புச் செய்தார்கள் என்பதைக் காண்போம்.

## விடை:-

இவ்வாயத்துக்களை இருட்டடிப்புச் செய்வதற்கு இரண்டு காரணங்கள் தென்படுகின்றன.

1வது:-
"யகீன்", "இபாதத்" என்ற இரு சொற்களையும் ஆராய்வு செய்யாத தற்போதுள்ள உலமாக்கள் பெரும்பாலும் தப்ஸீர் விரிவுரைகளை நம்பி அதை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பது. அதாவது, முன்னோரைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றிச் சென்று கொண்டிருப்பது.
2வது:-
எமது முன்னோரிலுள்ள மதக்கரடிகள் மக்களைத் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்வதற்கும் தங்கள் வருமானத்தைச் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகவே இவ்விரு ஆயத்துக்களையும் புரட்டியிருக்கிறார்கள். அதாவது, தொழுகையைக் கேடயமாய்க்கொள்ளாவிட்டால் தங்கள் செல்வாக்கைக் காப்பாற்ற முடியாதென்று நம்பினார்கள். இவ்வாயத்துக்களுக்கு அந்த மதக்கரடிகள் எமக்குக் காட்டிய ஆதாரம் என்னவென்றால், றஸூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் இறக்கும்வரையிலும் தொழுதிருக்கிறார்கள் என்பதே. இது எவ்வளவு அறிவீனம் என்பதைப் பாருங்கள். நாம் கூறிய இவ்விரு ஆயத்துக்களிலும் தொழுகை(ஸலாத்) என்ற சொல் பாவிக்கப்படவே இல்லை! இபாதத் என்ற சொல்தான் பாவிக்கப்பட்டுள்ளது. இபாதத் என்றால் ஏகமாக்கல், ஒருமைப்படுத்துதல் என்பதே அதன் அர்த்தம். மூமீன்கள் இறக்கும் வரையிலும் தொழுதேயாக வேண்டுமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதை 4:103 போன்ற பல ஆயத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன. இதை நிரூபிக்க றஸூல்(ஸல்) அவர்களுடையவும் தோழர்களுடையவும் கியாஸை நாம் ஆதாரமாகக் கொள்ளலாம். ஆனால், நாம் காட்டிய இரு ஆயத்துக்களிலும் ஸலாத்(தொழுகை) என்றசொல்லே

தரப்படாமலிருக்கும்போது றஸுலின் கியாஸை இதற்கு ஆதாரம் தந்து இறக்கும் வரை தொழ வேண்டுமென்று கூறுவது அறிவுள்ள உலமாக்களின் செயலா? புரட்டர்களின் செயலா? மனிதன் இவ்விதப் புரட்டல் மொழிபெயர்ப்புக்களைக் காணும்போது நான் தொழுதுகொண்டால் தீனில் நிலைப்பட்டு விட்டேன் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான். நான் ஜன்னத்தில் நுழைவேன் என்று கற்பனை பண்ணிக்கொள்கிறான். இறைவனால் அறிவுறுத்தப்பட்ட அவசியமான உண்மையை உதாசீனம் செய்து இம்மை மறுமை இரண்டிலும் நஷ்டமடைகிறான். தொழுகை மூமீன்கள் இறக்கும் வரையிலும் செய்ய வேண்டிய பர்லான கடமையென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நானும் அதை மறுக்கவே இல்லை. தொழுகையை வற்புறுத்து வதற்காகக் குர்ஆனில் சுமார் 103ஆயத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் நான் காட்டிய 51:56, 15:99 ஆகிய இரு ஆயத்துக்களும் தொழுகையைப்பற்றியோ மவ்த்தைப்பற்றியோ அணுவளவும் விளக்கவே இல்லை. இவ்விரு ஆயத்துக்களும் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கை, குறிக்கோளை விளக்குவனவாயும் அக்குறிக்கோளை அடையும் உபாயத்தை விபரந்தருவனவாயும் இருக்கின்றன. எனவே, இவ்வாயத்துக்களுக்கு வணங்குவதற்காக, தொழுவதற்காகப் படைத்தான் என்பதும் மவ்த்தாகும் வரையிலும் வணங்கு, தொழு என்பதும் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ்(மஹ்கூல், மன்கூல்) ஆகிய மூலப்பிரமாணங்களுக்கு முரணான பொய்யும் புரட்டலுமாகும். இவ்வித ஆயத்துக்களின் உண்மைப் பொருளை நாம் விளக்கும்போது, தொழாமல் இருக்கும்படி கூறுவதாய் விளங்குவதும் விளக்குவதும் வெறும் அறியாமையும் பின்பற்றலால் ஏற்பட்ட மூடப்பிடிவாதமும் ஆகும். இவ்வித புரட்டல் மொழிபெயர்ப்புக்களை அடிப்படையாய்க் கொண்டுதான் வஹ்ஹாபிஸத்தில் முளைத்த இல்யாஸிஸத் தப்புக்களை அடிப்படையாகக் கொண்டுதான் வஹ்ஹாபிஸத்தில் முளைத்த இல்யாஸிஸத்தப்லீக், மனிதர்களை மந்தைகளாய் மாற்றிக் கொண்டிருக்கிறது. மனிதனின் இம்மை மறுமையின்

வெற்றிக்குரிய பாதை மறைக்கப்பட்டுக் கொண்டும் மனிதனின் சிந்தனாசக்தி பறிக்கப்பட்டுக் கொண்டுமிருக்கிறது. இது எவ்வளவு அக்கிரமம் என்பதைப்பாருங்கள்!

## விசேட சிந்தனைக்கு :~

வணங்குவதற்காகவே மனிதனும் ஜின்னும் படைக்கப்பட்டிருக்கின்றன என்ற வாதம் அறிவுக்கு முரணாகிறது. எப்படியென்றால், அல்லாஹ்வின் நோக்கைத் தோற்கடிக்கும் எந்த ஆற்றலும் எங்கேயும் எவரிடமும் கிடையாது. இது எல்லோரும் ஒப்புக்கொண்ட ஓர் இஜ்மாஉ(ஏகோபித்த அபிப்பிராயம்) ஆகும். மனிதனும் ஜின்னும் வணங்கவே(தொழவே) படைக்கப்பட்டிருந்தால் அவ்விரு கூட்டமும் எங்கிருந்தாலும் தொழுது கொண்டே(வணங்கிக் கொண்டே) இருக்கவேண்டும். இல்லையானால், அல்லாஹ்வின் நாட்டம் தடைப்பட்டு விட்டதென்றாகும். ஒரு பொருள் எதற்காகப் படைக்கப்பட்டதோ அப்பொருள் அந்த நோக்கைத்தான் நிறைவேற்றும். இறைவனின் நோக்கை எச்சிருஷ்டியாலும் மீற முடியாது. உதாரணமாக உஸ்ணத்தைத் தருவதற்காகவே நெருப்பு படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நெருப்பு பனிக்கட்டியின் செயலை(குணத்தை)க் கொள்ள முடியாது. பனிக்கட்டி நெருப்பின் பண்பைப்பெறவேமுடியாது. இது இயற்கை விதி(களாகத்ரு) ஆகும். மனிதன் வணங்குவதற்காகவே படைக்கப்பட்டிருந்தால் மனிதனால் வணக்கத்தைத் தவிர வேறு எதையும் செய்யவே முடியாது. எனவே மனிதன் அறிவதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறானேயன்றி வணங்குவதற்காகவல்ல.

மனிதனும் ஜின்னும் மவ்த்தாகும் வரையும் வணங்க வேண்டுமென்றால் மவ்த்துக்குப் பின் வணக்கம் கிடையாதென்பது தென்படுகிறது. நரக சுவர்க்கத்திலுள்ளோர் தொழுகை நடாத்துவதில்லை என்பது உண்மை. மனுவும் ஜின்னும் இறந்த பிறகும் நரகிலோ சுவர்க்கத்திலோ மனுவாயும் ஜின்னாயுந்தான்

வாழப்போகிறார்கள். அப்படியானால், உலகில் தொழுவதற் காகவும் மறுமையில் தொழாமல் இருந்து இன்பதுன்பத்தை அனுபவிப்பதற்காகவும் படைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படி 15:99ம் ஆயத்து எமக்குப் பொருள் தருகிறதா? இல்லை. மனுவையும் ஜின்னையும் இபாதத் செய்வதற்காகவே படைத்திருப்பதாய்த்தான் ஆயத்து விளக்கம் தருகிறது. அவ்வாயத்துக் கூறுவதுதான் உண்மையென்றால் மனிதனும் ஜின்னும் எங்கேயிருந்தாலும் எத்தனை கோடாகோடியுகங்கள் வாழ்ந்தாலும் அவை இபாதத்துச் செய்து கொண்டுதான் இருக்க வேண்டும். அப்படித்தான் செய்து கொண்டிருக்கின்றனவா? ஆம். மனிதனும் ஜின்னும் எங்கெங்கே எவ்வளவு காலமிருந்தாலும் இபாதத்துச் யெ்துகொண்டுதான் இருக்கின்றன. நன்மை தீமை சுக துக்கங்களை அறிந்து கொண்டேயிருக்கின்றன. இம்மை மறுமை போன்ற நிலைகளில் அனுபவ அறிவைப் பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. அல்லாஹ்வின் நாட்டத்தை, நோக்கை அணுவும் மீற முடியாமல் அறிந்து கொண்டேயிருக்கின்றன. அறிதல் நல்லறிவாயினும் தீய அறிவாயினும் அறிதல் என்பது ஒரேயொரு விஷயந்தான். எனவே இன்ஸையும் ஜின்னையும் அறிவதற்காகவே படைத்தான் என்பதே ஆயத்தினால் உணர்த்தப்படும் பூரண உண்மையாகும்.

வணங்குவதற்காகப் படைத்தான் என்பது அறிவிலிகளின் விதண்டாவாதமாகும். இறை ஐக்கியத்தைப் பெறும் வரையிலும் அறிந்து கொண்டிருப்பதே இன்ஸானுடையவும் ஜின்னுடையவும் வாழ்வாய் அமைந்திருக்கிறது. இறை ஐக்கியம் எப்போது ஏற்பட்டதோ அப்போதே மனிதன் ஜின் என்ற நாமங்களும் அற்றுப் போய்விடும். இவ்விடத்தின் பெயர்தான் "யகீன்", "ஈமான்", "விசுவாசம்" என்பது. இந்த ஈமான் றப்புக்குரிய தேயன்றி அப்துக்குரியதேயல்ல. அப்துக்கு இரவலாய்ப் பாவிக்கப்படுகிறது. எனவேதான் "யகீன்" ஏற்படும் வரையில் (ஏகமாக்கல், இபாதத் செய்தல்) அறிதல், ஆராய்தல்செய்து கொண்டிரு என்று ஆயத்து அறிவுறுத்துகிறது. "யகீன்"

ஏற்பட்டுவிட்டால் இபாதத் (அறிதல்) கிடையாது. ஏன்? அங்கே சிருஷ்டி கிடையாது. அப்து என்ற நாமமோ றப்பு என்ற நாமமோ கிடையாது. இருப்பவன் அல்லாஹ் மட்டுமேயாவான். இதுதான் கலிமாவின் இறுதி எல்கை. அவன் அறிந்தவனாயிருக்கும் போது அவனுக்கு அறிய வேண்டிய அவசியமேயில்லை. (நுட்பமாய் உணர்க)

51:56ம் ஆயத்து மனிதன் படைக்கப்பட்ட நோக்கை (மனித வாழ்வின் குறிக்கோளை) விளக்கவும் 15:99ம் ஆயத்து மனிதன் தனது குறிக்கோளையடையக் கையாள வேண்டிய உபாயத்தை விளக்கவும் தரப்பட்டனவேயன்றி வணக்கத்தை வற்புறுத்துவதற்காகத் தரப்பட்டவையல்ல.

# 31

# மனிதன் பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும், மீள்வதும் ஏன்?

உலக வாழ்விலேற்படும் நல்ல, தீய, இன்ப, துன்பம் போன்ற ஒன்றுக்கொன்று முரணான எல்லா அனுபவங்களையும் ஒன்று சேர்த்து ஆராய்ந்து பாருங்கள். தாய் வயிற்றிலிருந்து வெளியான குழந்தை தன் புலன்கள் வாயிலாய் உலகின் இயற்கை நியதிகளைப் படிப்படியாய் அனுபவத்தில் அறிகிறது. வேம்பின் கசப்பையும், தேனின் இனிப்பையும், மிளகாயின் உறைப்பையும், உப்பின் உவப்பையும் அனுபவத்தில் அறிகிறது. இறக்கும் வரையிலும் நல்லதையோ தீயதையோ அனுபவத்தில் அறிந்து கொள்வதே வாழ்வாக அமைந்திருக்கிறது. மனிதன் எங்கே, எந்த நிலையில், எவ்வேலையில் இருந்து கொண்டிருந் தாலும் அறிவது(அனுபவத்தில் கண்டறிவது)தான் அவனின் குறிக்கோளாக, வாழ்வாக அமைந்திருக்கிறது. ஆனால், இனிப்பை விரும்பும் மனிதன் கசப்பை வெறுக்கிறான். இன்பத்தை விரும்பும் மனிதன் துன்பத்தை வெறுக்கிறான். இது மனிதனின் பழக்க வழக்கத்தினால், நூற்கேள்வியறிவினால், மனோ இச்சையினால் ஏற்படும் விளைவாகும். உண்மையை நோக்கினால், மனிதன் இன்பத்தினாலும் துன்பத்தினாலும், நல்லதினாலும், குறைவினாலும், நிறைவினாலும் பெற்றுக் கொள்வது அனுபவம் என்ற அறிவேயன்றி வேறில்லை. ஆழ்துயில் நிலைகூட அனுபவ அறிவேயன்றி வேறில்லை. பைத்தியக்காரனின் வாழ்வாயிருப்பினுங்கூட அவ்வாழ்வு அனுபவ அறிவேயன்றி வேறில்லை. இறப்பு என்பதும் அனுபவ அறிவேயன்றிவேறில்லை

மறுமையில் கூட மனிதன் அனுபவ அறிவைப் பெறுவதற்காகவே சுவர்க்கத்திற்கும் நரகத்துக்கும் செல்கிறான். (இறக்கிறான், உயிர்ப்பிக்கப்படுகிறான்) நரகத்தில் துன்பத்தினாலும் சுவர்க்கத்தில் இன்பத்தினாலும் மனிதன் பெற்றுக்கொள்வது அறிவேயன்றி வேறில்லை. இவ்வுண்மையை மனிதன் அறியாமல் வாழலாம். ஆனால், மனிதன் எவ்வுலகில், எப்போது, எப்படி வாழ்ந்தாலும் அவ்வாழ்வு அனுபவத்தில் அறிதலேயன்றி வேறில்லை. எனவே, மனிதன் அறியாதிருந்த வற்றை(நன்மை தீமைகளை) அறிவதற்காகவே சிருஷ்டிக்கப் படிருக்கிறான். அறிவதற்காகவே வாழ்கிறான். அறிவதற்காகவே இறக்கிறான். அறிவதற்ாகவே ஆகிறாவில் எழுப்பப்படுகிறான். அறிவதற்காகவே நரக சுவரக்கங்களுக்குச் செல்கிறான். இதை எம்மால் மறுக்க முடியுமா? முடியாது. இதை விளக்குவதுதான் அறிவதற்காகப் படைக்கப்பட்டான் என்ற 51:56ம் ஆயத்தின் உண்மையான நோக்கமாகும். இதை மூடி மறைப்பது முடியாத காரியம்.

இப்படியானால், மனித அறிவு எப்போது முழுமை (நிரப்பம்) பெறும்? அதாவது, அறியத் தேவையில்லாத நிலமை எப்போது ஏற்படும்? சிருஷ்டி என்ற தளையில் இருக்கும் வரையிலும் அவ்வறிவு ஒருபோதும் நிரப்பம் பெறவே பெறாது. அறிவு முழுமைபெறும்வரையிலும் எங்கேயோ ஓரிடத்தில் வாழ்வு இருந்து கொண்டேயிருக்கும். அவ்வாழ்வு இம்மையாய், மறுமையாய், நரகசுவர்க்கமாய் அல்லது நாமறியாத வேறோர் உலகமாய் இருக்கலாம். எங்கே எப்போது எப்படி வாழ்ந்தாலும் சிருஷ்டியுலகில் சிருஷ்டியாகிய மனிதனுக்குக் குறைவு இருந்து கொண்டேயிருக்கும். அவன்குறைவற்றவனாய் அறிவில் முழுமைபெற்றவனாய் அமைவதானால், முழுமை பெற்ற ஸமதாய்த் தேவையற்றவனாயிருக்கும் இறைவனில் தன்னை நாஸ்தியாக்கிக் கொள்ளவேண்டியவனாய் இருக்கிறான். நிரப்பமான ஸமதை விட்டும் நான்வேறு என்ற நிலமை இருக்கும்வரையும் நிறையறிவு பெறும் வழி இல்லவே இல்லை.

நிரப்பமான ஸமதுடன் எப்போது வேறு என்றில்லாத நிலையில் மனிதன்(சிருஷ்டி) அழிந்துவிடுகிறானோ அப்போதுதான் அறிதல் என்ற வாழ்வு நிரப்பமடைகின்றது. இந்த நிலயை மனிதன் பெறுவதானால் பல யுகாயுகங்கள் வாழ்ந்தாலும் முடியாத ஒன்றாகும். நரகு துன்பமாயும் சுவர்க்கம் இன்பமாயும் இருக்கலாம். ஆனால் அவையிரண்டையும் இறைசன்னிதானம் என்ற “லிகா”வுடன் ஒப்பிட்டு நோக்கினால், ஜன்னத் என்ற சுவர்க்கம் கூட இறை ஐக்கியத்தில் மூழ்கிவிடத் துடிக்கும் மனிதனிடத்தில் நரகம் போலவே இருக்கிறது. நரகு துன்பமாயும் சுவர்க்கம் இன்பமாயும் இருப்பதால் அவையிரண்டும் ஒவ்வொருவகைக் கட்டுப்பாடுடையவைதான். முழுமைபெற்ற அறிவை, அனுபவத்தை அவ்விரு உலகங்களிலும் பெறவே முடியாது. இவ்வளவு கஷ்டமான மிக நீண்ட மனித வாழ்வை இலகுவாய் வெற்றி கொண்டு முழுமை (தன்நிறைவு) பெற எம்முடனிருக்கும் இறைவன் எமக்கு ஓர் உபாயத்தை உபதேசிக்கிறான். இவ்வுபாயத்தை முறைப்படி கையாளும் மனிதன் ஒரே நாளிலோ அல்லது மிகக் குறுகிய ஒரு குறிப்பிட்ட காலத்திலோ தன்நிறைவு (அறியவேண்டாத) நிலையைப் பெற்றுவிடுவான். நிறைவு பெறாத மழைத்துளி, நிறைவு பெற்ற கடலுடன் சங்கமமாகித் தன் ஸுறத்தையும் கட்டுப்பாட்டையும் இழந்து கடலாகவே அமைந்து விடுவதுபோல மனிதனும் இறைவனென்ற கடலில் சங்கமமாகி விடுகிறான். இதற்குரிய உபாயம் என்னவென்பதை விளக்குதே நாம் காட்டிய 15:99ம் ஆயத்து அருளப்பட்ட நோக்கமாகும்.

யகீன் (விசுவாசம்,உறுதி) ஏற்படும்வரையிலும் இபாதத்(ஒருமைப்படுத்தல், ஏகமாய் உணர்தல்) செய்து கொண்டிருப்பீராக என்பதே அதன் சரியான அர்த்தமாகும். ஈமான் என்பது றப்புக்குரியது. அவனுக்கு “மூமின்” என்று ஒரு பெயருண்டு. இந்த ஈமானில் உறுதிபெறும் வரையிலும், நிரப்பம் பெறும் வரையிலும், இறை ஐக்கியம் கிட்டும் வரையிலும், இறைவனையன்றி நான் ஒரு தனி வுஜூதல்ல என்ற நம்பிக்கை

உறுதியடையும் வரையிலும், அனாநிய்யத் அழியும் வரையிலும் ஏகமாக்கிக் கொண்டிருப்பீராக என்பதே ஆயத்தின் உண்மை யான விளக்கமாகும். பல கோடா கோடி வருடங்கள் வாழ்ந்தாலும் பெற்றுக்கொள்ள முடியாத தன்நிறைவை (முழுமையை, கமாலியத்தை) மிகக் குறுகிய காலத்தில் இவ்வுலகிலேயே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இவ்வாயத்து மூலம் இறைவன் விளக்குகிறான். அதற்குரிய உபாயம் முறாகபா(இபாதத், ஆராய்தல்) செய்வதே என்றும் விளக்கியிருக்கிறான். இவ்வளவு பகிரங்கமான ஓர் உண்மையை மூடிமறைத்துவிட்டு, பல கோடாகோடி மக்களை நரகுக்கு அழைத்துச் செல்வதென்றால் இது பாரதூரமான ஒரு குற்றமல்லவா? தன் அற்ப சுயநலனுக்காகப் பாடுபட்டுத் தானும் தன்னைப் பின்பற்றிய பல கோடாகோடி மக்களும், பல கோடாகோடி வருடங்கள் இன்பதுன்பமென்ற தீச்சுவாலையில் வீழ்ந்துகொண்டிருப்பதானால் இந்தப் புரட்டல்வாதியை நாம் எப்படி வர்ணிப்பது? இவனையும் இவனைப் பின்பற்றிய மக்களையும் நரகுக்கழைத்தது எது? இறைவேதத்தைப் புரட்டி இருட்டடிப்புச் செய்த அடாத செயல்தான் அது.

இந்த 15:99ம் ஆயத்து, தொழுகையை உறுதிப் படுத்துவதற்காக அருளப்பட்டதல்ல. அதற்கு வேறு பல ஆயத்துக்கள் அருளப்பட்டிருக்கின்றன. அறிவில் நிரப்பம் பெற, இறைஜக்கியத்தைப் பெற ஈமானில் உறுதிபெற, சிருஷ்டி என்ற தளையிலிருந்து விடுபட எவ்வகை உபாயத்தைக் கையாள வேண்டு மென்பதை விளக்குவதற்காகவே இறைவன் இவ்வாயத்தை அருளியிருக்கிறான். அறிவிலிகள் மறுத்தாலுங்கூட ஆயத்தின் உண்மை இதுவே.

**ஹதீஸ்:-**

*“ஈமான் என்பது முற்றாக யகீனாக இருக்கும். ஆகையால், இந்த யகீன் உண்டாகவேண்டிய எத்தனத்தைக் கற்றுணர்ந்து பின்பு இருதயத்தில் பதிக்கவேண்டிய வாசலைத் திறக்கவும்”*

*இவ்வாறு றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**ஆதாரம்: யஹ்யா உலூாமுத்தீன்**

## ஆராயும் அறிஞர்களுக்கு :~

தொழுகை விஷயத்தில்(வணக்க விஷயத்தில்) இன்ஸும் ஜின்னும் மட்டுமே தனியுரிமை பாராட்ட முடியாது. நாம் காட்டிய 51:56ம் ஆயத்தில் மனிதனையும் ஜின்னையும் மட்டுமே கூறப்பட்டுள்ளது. வேறெந்தவொரு ஜீவப்பிராணியையும் கூறப்படவில்லை. மனிதனும் ஜின்னுமே வணங்குவதற்காகப் படைக்கப்பட்டிருந்தால், மற்றும் ஜீவராசிகள் வணங்குவதற்காக (ஸலாத் என்ற ொதழுகையைச் செய்வதற்காக)ப் படைக்க வில்லை என்றும், அவை வணங்கும்(தொழும்) முறையை அறியாதனவனாய் இருக்கின்றன என்றும் ஆகும். இது குர்ஆனுக்கு மாறாய் அமைகிறது எப்படியென்றால்,

**குர்ஆன்: 24:41**

أَلَمْ تَرَ أَنَّ اللَّهَ يُسَبِّحُ لَهُ مَن فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَالطَّيْرُ صَافَّاتٍ ۖ
كُلٌّ قَدْ عَلِمَ صَلَاتَهُ وَتَسْبِيحَهُ ۗ وَاللَّهُ عَلِيمٌ بِمَا يَفْعَلُونَ ⓞ

**வானங்களிலும் பூமியிலுமுள்ளவைகளும்(மத்தியிலுள்ள) பட்சிகளும் இறக்கைகளை விரித்தவண்ணமாக அல்லாஹ்வை நிச்சயமாகத் துதி(தஸ்பீஹ்)செய்து கொண்டிருக்கின்றன என்பதை நீர் காணவில்லையா? இவையாவும் தாங்கள் துதி(தஸ்பீஹ்) செய்து வணங்க(தொழ) வேண்டிய முறையை நிச்சயமாக அறிந்தேயிருக் கின்றன. அல்லாஹ்வும் அவை செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான்.**

இவ்வாயத்தில் மனிதனும் ஜின்னும் அல்லாத பிற சிருஷ்டிகளும்(பறவைகளுங்கூட) தஸ்பீஹு செய்து கொண்டும் ஸலாத் என்ற தொழுகையை நிறைவேற்றிக் கொண்டுதான்

இருக்கின்றன என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாயத்தில் வணக்கத்தை(தொழுகையை)க்குறிப்பிட "ஸலாத்" என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது. "இபாதத்" என்ற சொல் பாவிக்கப்படவேயில்லை. தொழுகை என்ற வணக்கத்தைக் குறிப்பிடக் குர்ஆனில் 103இடங்களில் "ஸலாத்" என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது. "இபாதத்" என்ற சொல் 275இடங்களில் பாவிக்கப்பட்டுள்ளது. எனவே ஸலாத் என்ற வணக்கமுறையில் மனிதனும் ஜின்னும் மட்டுமன்றிச் சர்வ சிருஷ்டிகளும் (இயங்குவன, இயங்காதன யாவும்) சமமாய்த்தான் இருக்கின்றன. இதில் மனிதனுக்கும் ஜின்னுக்கும் தனியுரிமை கிடையாது.

தஸ்பீஹ், வணக்கம், ஸலாத், தொழுகை சர்வ சிருஷ்டிக்கும் பொதுவானது. மனிதனும் ஜின்னும் மற்றும் சிருஷ்டிகளைவிட்டும் வேறுபடுவது தஸ்பீஹினாலோ, தொழுகையென்ற வணக்கத்தினாலோ அல்ல. மனிதனும் ஜின்னும் பிற சிருஷ்டிகளை விட்டும் வேறுபடுவது அறிவினால்தான். இந்த அறிவுதான் இபாதத்தாய் இருக்கிறது. தவறான வழியில் செல்லும் முஷ்ரிக்கின் வாழ்வு கூட அறிந்து கொள்வதாகவே இருக்கிறது. இறைநாட்டத்தை (படைக்கப்பட்ட நோக்கை) மீற முடியாமல்தான் முஷ்ரீக்கும் வாழ்கிறான். ஆகவே, தொழுவதற்காகவே, வணங்குவதற்காகவே மனிதனும் ஜின்னும் படைக்கப்பட்டன என்பது வெறும் கற்பனையும் புரட்டலுமாகும். மதத்தின் பெயரால் மக்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கட்டுப்படுத்த ஒருசிலர் கையாண்ட யூகந்தான் இந்தப் புரட்டல்.

நாம் மேலே காட்டிய 51:56, 15:99 ஆகிய ஆயத்துக்களுக்கு நாம் கூறியதே உண்மைப் பொருளா யிருப்பினும், மக்களுடைய நன்மையைக் கருதி அவ்வாயத்து களிலுள்ள இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்றும், யகீன் என்ற சொல்லுக்கு மரணம்(மவ்த்) என்றும் பொருள்

கூறுவதே பொருத்தம் என்றும் ஒரு சாரார் கருதுகிறார்கள். இது எவ்வளவு பெரிய அறிவீனம் என்பதை நோக்குங்கள்!

மனிதன் இகபர வாழ்வில் வெற்றிபெறச் சாந்தியடைய உள்ள ஒரேயொரு வழி அறிவைப் பெறுவதே என்பதை அறிந்த இறைவன்தான் அறிவதற்காகவே படைத்தேன் என்று கூறுகிறான். இதை நாம் பிழையாய்க் காண்பதானால், எம்மை அல்லாஹ் வாயும் அல்லாஹ்வைக் குறையறிவுள்ள சிருஷ்டியாயும் காண்கிறோம் என்பதே அதன் பொருள். வணங்குவதால் மட்டும் மனிதன் இம்மை மறுமைப் பயன்களைப் பெறமுடியாது. உலகமக்கள் இன்ப துன்பங்களை நிலையானவை என்று எண்ணும் மயக்கினால்தான் இன்று உலகவிவகாரங்களில் சொல்லொணாத அளவு இன்னல்களை அடைந்து கொண்டிருக்கிறார்கள். மதங்கள் அனுஷ்டானங்கள் வெவ்வேறாயிருப்பினும் அவரவருக்குத் தெரிந்த வகையில் வணங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆயினும் சாந்தி, சமாதானம் எங்கேயென்று தேடிக்கொண்டிருக்கிறார்கள். இறைவனால் அறிவிக்கப்பட்ட சாந்தி சமாதானத்தை ஏற்படுத்தும் வழியை அடைத்துவிட்டு, இன்னலுக்குரிய வழியை நாம் திறக்கிறோமென்றால் எம் அறிவை எப்படி எடைபோடுவது? மனிதர்களின் நன்மைக்காகச் செய்கிறோம் என்பது போலி நியாயமாகும்.

மனிதனும் விலங்கினத்தைச் சேர்ந்தவனே. இவன் விலங்குகளோடு விலங்காய் வாழாமல் விலங்கின் சுபாவத்தை தன் நோக்குக்கேற்றபடி பயன்படுத்தி மனிதன் என்ற விசேஷ சிருஷ்டியாய் வாழ்வதானால், அவனுக்கு விலங்கினத்து க்கில்லாத விசேஷ அறிவு அவசியமாகும். அதுவே “இபாதத்” (அறிதல்) என்பது. இது இருவகைப்படும்.

1வது:
பௌதிக உடலுக்காக இபாதத்(அறிதல்) செய்வது. இவ்விஷயத்தில் மனிதனும் விலங்கும் ஒன்றேதான். இவ்விஷயத்தில் விலங்கை விடவும் மனிதன் கேவலமானவன்தான்.

2வது:
உடலுக்காகவும் உயிருக்காகவும் இபாதத்(அறிதல்) செய்வது. இது மனிதனுக்கும் ஜின்னுக்கும் மட்டுமே சொந்தமான இபாதத்(அறிதல்) ஆகும். 51:56வது ஆயத்தில் குறிப்பிடப்பட்ட இபாதத் (அறிதல்) என்பது இதுதான். எனவே, இவ்வாயத்துக்களின் உண்மையை இருட்டடிப்புச் செய்வது மக்களை விலங்குகளாய் மாற்றும் உபாயமேயன்றி வேறில்லை. மக்களை நேர்வழிப்படுத்தவே இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்றால் வேதம் என்பது அவசியமற்றதாகிவிடும். மனிதர்களுடைய அறிவுக்கேற்ற வசன நடையில், பாஷையில், உதாரணங்கள் மூலம் விளங்கக்கூடிய வகையில் விளங்கப்பட வேண்டும் என்பதுதான் அல்லாஹ் றஸூலுடைய அறிவித்தலேயல்லாமல், உண்மையை மூடிமறைக்க வேண்டுமென்பதல்ல. மக்கள் வழி தவறிவிடுவார்கள் என்பதும் அதற்காக மூடிமறைப்பதும் வரட்டுக் கௌரவத்தைப் பாதுகாக்கும் உபாயமேயன்றி உண்மையல்ல.

## தொகுப்பு:

மனிதன் ஹுரூர் என்ற மருட்சியுலகில் வாழ்கிறான். இவன் தன் சுய நிலையில் மருட்சி நீங்கி முழுமைபெற்றவனாய் அமையவேண்டும். இதற்கு வழி மருட்சியிலிருந்தும் விடுபடுதலே. மருட்சி என்ற மறதியிலிருந்து விடுபடுவதற்காக, மனிதனுக்கு ஒரு குறிக்கோள் அவசியமாகிறது. இந்தக் குறிக்கோள்தான் கலிமத்துத்தையிபா என்பது. கலிமத்துத்தையிபாவைத் தெளிவாய்

விளங்கியறிந்து ஒப்புக்கொண்டால் அதே கணம் மருட்சி நீங்கி, மறதி நீங்கி, தெளிவடைந்து மனிதன் தன் சுயநிலையை உணர்ந்து கொள்வான். மனிதன் இவ்வுலகச் சூழ்நிலையில் இவ்வுண்மையில் திடீரென்று தரிபடமுடியாதவனாய் இருக்கிறான். எனவெ, முதலில் இவனுடைய எண்ணத்தை ஒருமுகப்படுத்தவும் அதில் தரிபட்டுநினைவை உருவாக்கவும்கூடிய பல பயிற்சிகள் தரப்பட்டிருக்கின்றன. அவைதான் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு, திக்ர், முறாகபா போன்றவை. இப்பயிற்சிகள் மனிதனின் சூழ்நிலைக்கும் அறிவின் தகைமைக்கும் ஏற்றபடி பல படித்தரங்களாய்த் தரப்பட்டிருக்கின்றன. இவற்றில் எவையும் ஒன்றுக்கொன்று முரணே அல்ல. யாவுக்கும் நோக்கம் ஒன்றே.

இவ்வித பயிற்சிகள் யாவுக்கும் மூலமாய் அமைந்திருப்பது கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதென்ற ஈமானாகும். ஈமானை உறுதியடையச்செய்யும் பயிற்சிகளே அமல்கள் என்பன. இப்பயிற்சிகள் ஈமானை உறுதிப்படுத்தவில்லையானால் அந்த அமல்களில் எவ்வித பிரயோசனமும் கிடையாது. அமல்கள் பயனளிப்பதை ஆகிறாவில்தான் காணலாம் என்பது அறியாமையாகும். ஆராயுந்திறனிருந்தால் அமல்கள் இம்மையிலும் பயனளிப்பதை நாம் காணலாம். மனிதனோ பிறப்பு, இறப்பு, இம்மை, மறுமை என்ற ஆழங்காண முடியாத சமுத்திரத்தில் நீந்துகிறான். அர்வாஹுடைய ஆலத்திலிருந்து பௌதீக உலகில் பிறக்கிறான். பௌதீக உலகிலிருந்து இப்போது சூட்சும உலகான ஆகிறாவில் பிறக்கப் போகிறான். இறை சன்னிதானத்தை அடையும் வரையில் நரகிலோ, ஜன்னத்திலோ எத்தனையெத்தனையோ மாற்றங்களை (இறப்பு பிறப்புகளை)ப் பெறப்போகிறான். இறைசன்னிதானத்தை அடைந்தபோது இவன் இறப்பு, பிறப்பு, ஏற்றம், இறக்கம் என்ற சகல தளைகளிலிருந்தும் விடுதலை பெற்று தன்நிறைவைப் பெற்றுக்கொள்வான். இதுவே, "லிகா" (இறைவனின்சொந்த அனுபவம்) என்பதாகும். இந்த பெறற்கரிய பேற்றை நாம்

இம்மையிலேயே பெறவேண்டுமானால் , குர்ஆன் ஹதீஸுகளைச் சுயசிந்தனையுடன் ஆராய்ந்து கலிமாவின் உண்மையோடு ஒன்றிவாழவேண்டியது கட்டாய கடமையாகும். அலட்சியம் செய்வோர் அல்லல்பட நேரிடலாம். மனிதனும் ஜின்னும் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் மறுமையில் எழுப்பப்படுவதும் நரக சுவர்க்கத்தில் பிரவேசிப்பதும் அறிவதற்காகவே! அமல்களுக்கு ஈமான் ஸர்த்தாக இருக்கிறது. ஈமானை உறுதிப்படுத்தும் நோக்கில்லாத எந்த ஓர் அமலும் பிரயோசனம் தராதென்பதை நான் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன்.

இஸ்லாம் 5காரியங்களில் மேல் நிறுவப்பட்டிருப்பதையும், கலிமாவைக் கொண்டே ஆரம்பிக்கப்படுவதையும் நோக்கினால் இவ்வுண்மை புலனாகும்.

**ஹதீஸ்**

*நாற்பது நாட்கள்(இஹ்லாஸோடு) கலப்பற்ற கல்போடு எவர் அல்லாஹ்வைத்(திக்று) தியானம் செய்கிறாரோ, அவருடைய கல்பிலிருந்து(ஹிக்மத்) ஞான ஊற்று நாவழியாய் வெளிவரும் என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (றலி)**
**ஆதாரம்: ரஜீன்**

**ஹதீஸ்**

*எவன் என்னுடைய நல்லடியார்களை விரோதித்துக் கொள்கிறானோ, அவனை நான் யுத்தத்தை கொண்டு எச்சரிக்கை செய்கிறேன். என் அடியார் என்னை நெருங்குவதை, நான் அவர்மீது விதித்த கடமையை நிறைவேற்றுவதன் மூலம் விரும்பினார். அன்றி, என் அடியார் என்னை அடைவதற்கு நபிலைக்கொண்டு நாடினார். நான் அவரை உவக்கும்வரை. எனினும், நான்*

*அவரை உவந்து விடுவேனாயின் அவருடைய செவிப்புலனாக நான் ஆகிவிடுகிறேன். அதைக்கொண்டு அவர் கேட்டுக்கொள்கிறார்.(செவியுறுகிறார்) அன்றி, அவருடைய கட்புலனாகவும் நான் ஆகிவிடுகிறேன். அதைக்கொண்டு அவர் காண்கிறார். மேலும், அவருடைய கையாகவும் நான் ஆகிவிடுகிறேன். அதைக்கொண்டு அவர் பிடிக்கிறார், மேலும், அவர் காலாகவும் நான் ஆகிவிடுகிறேன்.அதைக்கொண்டு அவர் நடமாடுகிறார். அவர் என்னிடம் எதை வேண்டிய போதிலும் நான் அவருக்கு அதைக்கொடுத்துவிடுகிறேன். அன்றி, அவர் என்னிடம் பாதுகாவல் தேடினால் நான் அவருக்கு பாதுகாப்பளிக்கிறேன். மேலும், இறை நம்பிக்கையாளரின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவது போன்று எவ்விஷயத்திலும் தயக்கம் காட்டுவதில்லை. அவர் இறப்பது பற்றி அதிருப்தியடைகிறார். அவர் வருந்துவதைக் கண்டு நானும் அதிருப்தியடைகிறேன் என்று அல்லாஹ் கூறியதாக அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர் :அபூஹுறைறா(றலி)**

**ஆதாரம்: புஹாரி**

இந்த ஹதீஸ்களைப் பல கண்ணோட்டத்தோடு சிந்தனை செய்யுங்கள். திக்றில் சிறந்தது லா இலாஹ இல்லல்லாஹ் என்பது றஸூல்(ஸல்) அவர்களின் ஹதீஸாகுமென்பதை நினைவிற் கொள்ளுங்கள். திக்று செய்வதே(நினைவு படுத்துவதே) நபில் என்பது. திக்று செய்யும் அடியாருக்கு கலிமாவை முறாக்கபா செய்வதனால் அறிவிலேற்படும் புரட்சிதான் தஜல்லிக்கு(நான் யாரென்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்வதற்குக்) காரணமாய் இருக்கிறது. வஹ்முவாயிருந்த அறிவு அதன் வட்டத்தைக் கடந்து தன் சொந்த நிலையில்(நூரில்) தரிபட்டதனாலேயே நான் யாரென்ற கேள்விக்கு அனுபவத்தில் விடைகிடைத்து விடுகிறது.

படர்க்கையில் இறைவன் இருப்பதாய் நம்பி மனிதன் தேடினான். காணவில்லை. கலிமாவை ஆராய்ந்து தெளிவு பெற்றபோது, நான் என்றுணர்ந்துகொண்டிருப்பவன் அப்துவாயும் றப்புவாயும் என்னிடத்தில் நானாகவே இருக்கிறேன் என்பதை மனிதன் அறிந்துகொண்டான். இவ்வறிவு கலிமாவை எடுத்துக் கொள்வதற்கு முன், நான் இறைவனை விட்டும் வேறானவன் என்ற ஷிர்க்கில் மூழ்கியிருந்த நானுக்குரியதல்ல. அது அனாநிய்யத்தாயிருப்பதால், வெறும் மருட்சியாயிருப்பதால் (ஷிர்க்காயிருப்பதால்) அந்த நான் இறந்து விடுகிறது. மவுத்தாகாமல் மவுத்தாகுதல் “தஜர்றுத்” என்பது இதுவே. எனவே, இவ்வுணர்வு(நான் என்பது) உண்மையாய் அமையும்போது அது இறையறிவென்ற நூருக்குரியதேயன்றி சிருஷ்டிக் குரியதல்ல. தெளிவு பெற்ற இந்தநிலையிலுள்ள சிருஷ்டியின் எச்செயலும் இறைநாட்டமின்றி நடைபெறா. இவ்வகையோர்தான் பூரண அப்துக்கள் என்பவர்கள். இதில் முழுமைபெற்ற காமீல்தான் றஸூல்(ஸல்) அவர்கள்.(ஆதாரம் முன்னர் தரப்பட்டுள்ளது) இப்போது சிந்தனை செய்யுங்கள். அப்து என்பது யார்? றப்பு என்பது யார்? பெயர்கள் இரண்டேய ன்றிப் பொருள் ஏகமான ஒன்றேயொன்றுதான். அதுதான் நான் என்பது. அப்து என்பது றப்பின் கற்பிதமான வெறும் தோற்றப்பாடு மட்டும்தான்.

**குர்ஆன்: 6:122**

أَوَمَنْ كَانَ مَيْتًا فَأَحْيَيْنَٰهُ وَجَعَلْنَا لَهُۥ نُورًا يَمْشِى
بِهِۦ فِى ٱلنَّاسِ كَمَن مَّثَلُهُۥ فِى ٱلظُّلُمَٰتِ لَيْسَ بِخَارِجٍ
مِّنْهَا ۚ كَذَٰلِكَ زُيِّنَ لِلْكَٰفِرِينَ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١٢٢﴾

**மரித்தோராயிருந்தவர்களில் எவரை நாம் உயிர்ப்பித்து,**

**மனிதருக்கிடையில் நடமாடுவதற்குரிய(நூர்) பிரகாசத்தையும் கொடுத்திருக்கிறோமோ அவர், இருள்களில் சிக்கி அவைகளிலிருந்து வெளிப்படமுடியாமலிருப்போனுக்குச் சமமாவாரா? இவ்வாறே நிராகரிப்போருக்கு அவர்களுடைய செயல்கள் அழகாக்கப்பட்டு விட்டன.**

இவ்வாயத்தில் "மவுத்துக்கபுல்அன்தமவுத்" என்று கூறப்படுகிற "கட்டவிழ்தல்"(இறக்காமல் இறத்தல்) என்பதன் விஷயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.(இருட்திரைகளில்) நூற்கேள்வியறிவு, பழக்கவழக்கம் போன்ற திரைகளில் சிக்கியுள்ள மனிதன் "மரித்தவன்"(இறந்தவன்)என்பதும், நூர் என்ற அறிவைப் பெற்றவன் இறந்தவர்களிலிருந்து (சமூகத்திலிருந்து) உயிரைப் பெற்றவன் என்பதும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இவ்வுண்மையை மனிதருக்குணர்த்துவதற்கே கலிமாவும் அதன் சட்ட விதிமுறையான குர்ஆனும் அதன் விவரமான ஹதீஸுகளும் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, குர்ஆனைப் புரட்டுவதை நிறுத்திக் கொண்டு எம் அறிவையே நேர்வழியில் புரட்ட வேண்டியதாயிருக்கிறது. வுஜுது, மவுஜுது, காலிக், கல்க், அப்து, றப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று முரண்போல்த் தென்பட்டாலும் ஒரே உண்மையை விளக்கும் இருவகைச் சொற்களாகும். நீர், பனிக்கட்டி, தங்கம், மாலை என்ற சொற்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே. இப்போது திரைக்கப்பாலிருந்து பேசும் 2ம் வழியையும், ஜிப்ரீல்(அலை) மூலம் பேசிய 3ம் வழியையும் தெரிந்து கொண்டோம். இப்போது வஹீமூலம் பேசுதல் என்ற 1ம் வழி என்னவென்பதைக் காண்போம்.

றஸுல்(ஸல்) அவர்கள் ஒருசமயம் "இன்ன றூஹுல்குத்ஸி நபதபிறூஹி" என்று கூறியுள்ளார்கள்.

என்னுடைய கல்பில் றூஹுல்குத்ஸி ஊதியது(இறக்கியது) என்று கூறியுள்ளார்கள்.

**குர்ஆன்: 2:97**

قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيلَ فَإِنَّهُ نَزَّلَهُ عَلَىٰ قَلْبِكَ بِإِذْنِ
اللَّهِ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى وَبُشْرَىٰ لِلْمُؤْمِنِينَ ﴿٩٧﴾

**........... நிச்சயமாக(ஜிப்ரீல்) அவர் அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரமே உமது இருதயத்தில்(கல்பில்) இதனை இறக்கிவைத்தார்.........**

இவ்வாயத்தின் படியும் ஹதீஸின்படியும் றஸுல்(ஸல்) என்று நாம் கூறுகிற முஹம்மது(ஸல்) என்ற மனிதரின் கல்பில், றூஹுல்குத்ஸியைக் கொண்டு (ஜிப்ரீல்) (அலை) அவர்களைக் கொண்டு பேசிய வஹி எது? ஜிப்ரில்(அலை) என்பவர் யார்? முஹம்மது(ஸல்) என்ற நம்போன்ற (அறிவில் எம்மிலும் வேறுபட்ட) மனிதரின் கல்பு எது? கல்பு என்றால் என்ன? ஜிப்ரீல்(அலை) அவர்களுடன் இறைவன் பேசிய வஹி எது? ஜிப்ரில்(அலை) அவர்களுக்கும் இறைவனுக்குமிடையிலிருந்த திரை எது? என்பவற்றை நோக்குவோம்.

32

# கல்பு என்றால் என்ன?

இவ்விஷயம் மிகநீண்ட நேரம் பேசவேண்டியதாயும் இங்கே அதற்குரிய அவகாசமில்லாதிருப்பதாலும் இக்கேள்விக்குரிய விடையை மிகச்சுருக்கமாய் இங்கு கூறுகிறேன். “கல்பு” என்ற சொல் குர்ஆன் ஹதீஸுகளில் இடத்திற்கும் அவசியத்திற்கும் ஏற்றபடி “இருதயம்” “மாறுபடுவது”, “ஆன்மா”, “கல்வியறிவு”, “வீரம்”, “அகில்” (நுண்ணறிவு அல்லது விவேகம்) என்ற பொருட்களில் பாவிக்கப்பட்டிருக்கிறது. “அறிதல்”, “உணர்தல்” என்ற பொருளிலும் சில இடங்களில் பாவிக்கப்பட்டுள்ளது. நாம் தந்த ஆயத்திலும், 50:37 போன்ற ஆயத்துக்களிலும் பாவிக்கப்பட்டுள்ள “கல்பு” என்ற சொல்லுக்கு “அக்லு” “அறிவு” என்பதே பொருள் என்று அப்பாஸ்(றலி) அவர்கள் விபரம் தந்திருக்கிறார்கள். தப்ஸீர் அபுல்லைத்தில் இதைக்காணலாம். கல்பு என்பதை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1வது: நிராசையான(கல்பு) இருதயம். (இது, காபீர்களுடைய அறிவைச் சுட்டியது.)

2வது: பூட்டப்பட்ட (முத்திரையிடப்பட்ட) கல்பு, (இது, முனாபிக்கீன்களுக்குரியது)

3வது: சாந்தியடைந்து கொண்டிருக்கும் கல்பு, (இது முமீன்களுக்குரியது)

4வது: சிருஷ்டியுலக(இம்மை, மறுமை)ச்சம்பந்தமின்றி (விருப்பு,வெறுப்பு, அச்சம் பயம்போன்ற சிருஷ்டிக்குணமின்றி) இறைகுணம் கொண்ட ஸலீமான கல்பு.(இது,இறைவனின் ஜலால் ஜமால் போன்ற அகமியங்கள் வெளியாகும் மழ்ஹறாயி ருக்கிறது.)

இந்நான்குவகைக் கல்புகளையும் நோக்கினால் இவ்வேறுபாடு அறிவின் தகைமையைப் பொறுத்ததேயன்றி வேறில்லை. அறிவு என்பது தான் றூஹு, ஆத்மா, உயிர் என்பது. இந்த றூஹு இறையாணைப்படி(களாகத்றின்படி) ஒவ்வொருவகையாய், ஒவ்வொரு விதமான தளையில் கட்டுண்டிருப்பதால்தான் இவ்விதமாய்ப் பற்பல கோலங்களில் காட்சியளிக்கிறது. தளையில் கட்டுண்டிருப்பதாய் அறிவது ஹுரூர் ஆகும். ஆனால் றூஹு பரிசுத்தமான தாயிருப்பினும் தளைகளில்(திரைகளில்) சிக்கும்போதுதான் (சிக்கியதாய் நாமறியும்போதுதான்) இந்த நிலமை தென்படுகிறது. றூஹு தளையில் சிக்குதல், கட்டுண்ணுதல் என்பதைத் தெளிவாய் விளங்கிக்கொள்ள வேண்டும். றூஹுவின் சுயதன்மை வெளிப்படத் தடையாயிருப்பது எதுவோ அதுவே "திரை" "தளை" என்பது. இத்திரையில் கட்டுண்ட றூஹு பழுதடைந்து விட்டனதென்பது பொருளல்ல. அது என்றும் பரிசுத்தமானது. நஜீஸில்பட்ட சூரியஒளி பழுதடைவதில்லை. எம்முடல் அசூசியாய், மலசலக்கிடங்காயிருப்பினும் அதை ஆட்சி பண்ணும் எம்முடைய றூஹு என்றும் பரிசுத்தமான தாகத்தானிருக்கிறது. தன்னிற்தானே உருவாக்கிக் கொண்ட திரை, தளைகளினாலும் றூஹு பரிசுத்தம் குறைவதில்லை. மனித அறிவு (கல்பு) அடிக்கடி மாறிக் கொண்டிருப்பதால்தான் இதற்கு "மாறுவது" (கல்பு) என்று காரணப் பெயர் கூறப்படுகிறது. இந்தநிலையை உருவாக்கியிருப்பது இறைவனுடைய (ஹிக்மத்) ஞானத்தைப்

பொறுத்த ஒரு விஷயம். இதிற்தலையிட சிருஷ்டிக்கு உரிமையில்லை. றூஹு, கல்பு, நப்ஸு, அக்லு ஆகிய இந்த நான்கு சொற்களும் இன்ஸான் என்ற மனிதனின் ஒவ்வோர் நிலைமையை விளக்கம் தரும் சொற்களாய் இருக்கின்றன. எனவே இச்சொற்களில் மயக்கமடையாமல் இச்சொற்களால் உணர்த்தப்படும் மனித அறிவின் நிலைமைகளை (மர்த்தபாக்களை)த் தெளிவாய் ஆராய்ந்துணர்க.

**குர்ஆன்: 54:49**

إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ

**நிச்சயமாக நாம் ஒவ்வொன்றையும் (குறிப்பான) அளவின்படி கத்றின்படி சிருஷ்டித்திருக்கிறோம்.**

(33:38,65:3போன்ற ஆயத்துக்களையும் எடுத்துக் கொள்க) களாகத்ர் என்ற கட்டிலிருந்தும் சிருஷ்டியான வஹ்முடைய நான் விடுபடமுடியாதவன். இக்கட்டுப்பாட்டை நீக்குவதானால் அதைவிதித்த இறைவனாற்றான் முடியும். அப்துக்கு றப்புச் செய்யும் ஹிதாயத், வழிகாட்டல் என்பது களாக்கத்ர் என்ற கட்டிலிருந்தும் அறிவைவிடுவித்துப் பூரணசுதந்திரம் கொடுப்பதேயாகும். ‘‘லலாலத்”, ‘‘வழிகேடு” என்பது வஹ்முக்கு இடப்பட்டகட்டை மேலும் வன்மைப்படுத்துவதாகும். இவ்விரு நிலைகளுக்குமிடையில்தான் மனிதனின் கல்பு(அறிவு) அமைந்திருக்கிறது. மனிதனுடைய கல்பு இறைவனின் இருவிரல்களுக்குமிடையில் இருப்பதாயும் அவன் நாடியபடி அதனைப் புரட்டுவதாயும் றஸுலுடைய ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. இறைவனுடைய ஹிதாயத்தை(வழி காட்டலை)ப் பெற்றுக்கொண்ட மனிதனுக்குக் கலிமாவை விளங்கி ஒப்புக்கொள்ளும் ஆற்றல் கிடைத்துவிடுகிறது. இவர் ‘‘லா இலாஹ இல்லல்லா’’ என்ற சொல்லைக்கொண்டு இம்மை

மறுமையை மட்டுமன்றி தன்னையும் மறந்துவிடும்போது (ஆழ்துயில் நிலையை எய்தும்போது) அல்லது ‘‘பனா’’ என்ற நிலையை எய்தும்போது அங்கிருந்த(கல்பு) றூஹு, தன் திரைகளைவிட்டும் நீங்கித் தன் சொந்த நிலையில் தரிபட்டுவிடுகிறது. இதுவே பரிசுத்த றூஹு என்றும் றூஹுல் குத்தூஸ் என்றும் ஜிப்ரீல் என்றும் தேவைக்கேற்ற பெயரைப் பெறுகிறது. இது ஒரு ஸூறத்தை எடுத்துக்கொள்ளும்பேது சிருஷ்டி என்று பெயர் பெறுகின்றது. ஸூறத் இல்லையானால் றூஹுவுடன் றூஹுவாய், றூஹுவின் தத்துவமாய் அமைந்து விடுகிறது. லா இலாஹ என்ற சொல்லில் தரிபாடடைந்த மனிதருடைய றூஹு என்பது வுஜூதுவாகவும் றூஹுல் குத்தூஸ் என்ற தத்துவமாயும் அதனால்(அறிவிக்கப்பட்ட) அதில் உதயமான செய்தியை ஏற்றுக்கொண்ட நூர் ஆகவும் அந்த இன்ஸானுடைய(முகம்மதென்ற மனிதருடைய) கல்பு அமைந்து விடுகிறது. இதைத்தான் லவ்ஹு என்று கூறுகிறோம். சர்வ ஆலங்களுக்குமுரிய சர்வ விஷயங்களும் இதிலுண்டு. இதில் இல்லாதது இல்லை. எனவே இதிலில்லாத ஒன்று எப்போதும் இல்லாததுதான். ஆதலால்தான் இல்லாதது இருப்பதாகாது (வராது, வெளியாகாது) என்ற தத்துவத்தைக் குர்ஆன் போதிக்கிறது. ஆதாரம் குர்ஆன் 36:12,80:13,14,15,16,6:59. றஸூல் (ஸல்) அவர்களுடைய கல்பில் குர்ஆன் இறக்கப்பட்டதென்பதற்கு குர்ஆன் 2:97 ஆதாரமாகும். எனவே, அங்கு அல்லாஹ்தான் றூஹுவாக இருக்கிறானேயன்றி, சிருஷ்டியென்பதொன்றில்லை. இது வட்டத்துக்குட்பட்ட அறிவல்ல. இதை மனித அறிவுக்கு மிக இலகுவாய் உணர்த்துகிறான் இறைவன். எப்படியென்றால்,

லாஇலாஹ என்ற சொல்லைக்கொண்டு யாவற்றையும் அழித்துக் கொண்ட அறிவு, இல்லல்லாஹ் என்று தன்னைத்தானே உணர்வதால் தன் ஸூறத்தான சிருஷ்டியாயிருப்பதும் (மனிதனாயிருப்பதும்) நானே என்பதை அறிகிறது. இபாரத், தலாலத் ஆகியவற்றைக் கொண்டு உறுதியடைகின்றது.

சிருஷ்டியாயிருந்து அறியாமலிருந்த நிலையை அறிந்து கொள்கிறது. ஸிர்ருடைய திக்ர் என்பது இதுவே. எனக்கும் என் அடியானுக்குமிடையில் ஒரு ஸிர்ரு இருக்கிறதென்றும், அதைப்பெற்றுக்கொள்ள முர்ஸலான நபிமார்களோ முகர்ரபான மலக்குகளோ இடம்பெறமாட்டார்களென்றும் கூறப்பட்ட நிலமை இதுவே. கலிமாவைக் கூறி ஒப்புக்கொள்ள முன்பு ஒவ்வொரு மனிதனுடைய றூஹூம் தனித்தனியானதே என்றிருந்த அறிவு இப்போதில்லை. எல்லா மனிதரும் என் ஸூறத்தே, நானே எல்லா ஸூறத்திலும் றூஹுவாய் இருக்கிறேன் என்பதை திரை நீங்கிய அறிவு அறிந்து கொள்கிறது. தன்னுடைய நப்ஸூகளை(பிறமனிதரை)யும் கரைசேர்க்க வேண்டுமென்பதற் காகவே றஸூலாய்(முஹம்மதென்ற மனிதராய்)க் காட்சி யளித்தது. கலிமாவைக் கொண்டு தரிபட்ட றஸூலென்ற இந்த மனிதர் பெற்றுக்கொண்ட வஹி என்பது இன்னொருவரால் இன்னொருவர்மூலம் அறிவிக்கப்பட்டதல்ல. தன்னிலிருந்தே (றப்பிடமிருந்து அப்துப் பெற்றுக்கொண்ட) திரையில்லாத வஹியாயிருக்கிறது. தஜல்லி என்பதும் இதுவே. இந்த வஹியைப் பெற்ற றஸூல்தான் முஹம்மது(ஸல்) என்ற ஸூறத்தைத் திரையாய்க் கொண்டு மனிதருடன் பேசியவர். ஜீப்ரீல்(அலை) அவர்களுக்கும் பிறமலக்குகளுக்கும் இறைவன் அறிவிக்கும் வஹிகலெல்லாம் இதைப்போன்ற திரையில்லாத வஹிகள்தான். அந்த வஹியை வெளிப்படையாய் அறிவிக்கும்போதுதான் ஜிப்ரில்(அலை) என்ற ஸூறத்தை இறைவன் திரையாய்க் கொண்டு பேசியிருக்கிறான் (நுட்பமாய் உணர்க).

நாம் இவ்வளவுதூரமும் கூறியதன் உண்மை என்னவென்றால், அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்று கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதுக்கு மாறான, ஷிர்க்கை உறுதிப்படுத்தும் எந்தவொரு வசனமும் குர்ஆனிலோ ஹதீஸிலோ கிடைக்கவே கிடையாதென்பதே. குர்ஆனை விளங்கிக்கொள்ளும் ஆற்றல் இல்லாமையினால் (இறைவனுடைய ஹிதாயத்தைப் பெற்றுக்கொள்ளாமையால்)

மனிதர்கள் ஒவ்வொருவரும் அவரவர் எந்த எந்த அடிப்படையிலிருந்து கொண்டிருக்கிறார்களோ அந்த அந்த அடிப்படையைக் கொண்டே குர்ஆனை நோக்குகிறார்கள். இது மிகப் பெரியதொரு தவறாகும். முஸ்லிம்கள் 73கூட்டமாய் அமைந்திருப்பதற்குக் காரணம் குர்ஆனை அணுகவேண்டிய முறைப்படி அணுகாமையாகும்.

**குர்ஆன்: 23:53**

فَتَقَطَّعُوٓا أَمْرَهُم بَيْنَهُمْ زُبُرًا ۖ كُلُّ حِزْبٍۭ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ ٥٣

*எனினும், தங்களுடைய வேதத்தைப் பலபிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு வகுப்பாரும் தங்களிடமுள்ள பிரிவைக் கொண்டு சந்தோஷமடைகிறார்கள்.*

**குர்ஆன்: 50:5**

بَلْ كَذَّبُوا۟ بِٱلْحَقِّ لَمَّا جَآءَهُمْ فَهُمْ فِىٓ أَمْرٍ مَّرِيجٍ ٥

**அவ்வாறிருந்தும். அவர்களிடம் வந்த உண்மையை அவர்கள் (பொய்யாக்கி) வெறும் குழப்பத்திற்குள்ளாக்கிவிட்டார்கள்.**

இன்று எம் சமூகத்திலுள்ள மிகப்பொரும்பாலான உலமாக்கள் மார்க்க விஷயத்தில் விஷேசமாய் கலிமாவுடைய விஷயத்தில் எப்படியிருந்துகொண்டு எந்த எந்த பகுதிகளைக் கையாளுகிறார்கள் என்பதைக் கண்டறிவது உங்கள் பொறுப்பு. இப்போது குர்ஆனை விளங்கும் 2ம் வழியைக் காண்பதற்கு முன்னர் குர்ஆனில் உலகக் கல்வியில் பாண்டித்தியமுடைய சிந்தனையாளர்களுக்குக் கடினமான மயக்கத்தைத் தரும் இன்னும் ஒரு சில ஆயத்துக்களை ஆராய்ந்து விட்டு,

அதன்பின்னர் குர்ஆனை விளங்கும் 2ம் வழியைக் கவனிப்போம். வாசக அன்பர்களுக்குச் சரியான தெளிவும் உறுதியும் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே நான் அதிகமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே அலட்டிக்கொள்ளாமல் தொடருங்கள். அலட்டிக் கொண்டால் ஆகிறாவில் மட்டுமல்ல, உலகிலும் சாந்தி சமாதானத்தை பெறமுடியாது.

**குர்ஆன்: 4:82**

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ ۚ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ
اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلَافًا كَثِيرًا ﴿٨٢﴾

**இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் அநேக முரண்பாடுகளை அவர்கள் காண்பார்கள்.**

இவ்வாயத்தை ஆழ்ந்து கவனித்தால் இதில் நான்கு விஷயங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

1வது-
குர்ஆனை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும் என்பது.

2வது-
குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்திருப்பதால் அதில் முரண்பாடு கிடையாது என்பது.(இது தலாலத்தென்ற கருத்துப்பிரமாணத்தினால் விளக்கப்படுகிறது)

3வது:-
அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் குர்ஆனில்

முரண்பாடு இருக்கும் என்பது.(இது இபாரத்தென்ற சத்தப்பிரமாணத்தினால் விளக்கப்படுகிறது)

4வது-
அல்லாஹ்வுடன் அவனல்லாதவர்களுமுண்டு என்பது தென்படு கிறது.

இது ஆழ்ந்து சிந்திக்காத வஹ்முக்கு இஸாறத்தென்ற சைக்கினையால் தென்படுகிறது. எனவே இந்த வஹ்மு அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவருமுண்டென்று நம்புகிறது. முன் கூறிய தௌஹீதுக்கு மாற்றமாய் முற்றும் முரணாய்த் தென்படுகிறது. ஆனால் வஹ்மு நீங்கிய ஆழ்ந்து சிந்திக்கும் அறிவு இஸாறத்தென்ற சைக்கினையைக் கொண்டு அல்லாஹ்வுடன் அவனல்லாத எவரும் இல்லையென்ற சுத்த சத்தியமான தௌஹீதே இவ்வாயத்தில் விளக்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்கிறது. (ஈமான் கொள்கிறது)

மேலே காட்டிய மூன்று விஷயங்களில் நாம் பூரண நம்பிக்கை கொள்ளலாம். ஆனால், நான்காவது விஷயம் முன்சொன்ன மூன்று விஷயங்களையும் சந்தேகத்தில் நுழைப்பதாய் அமைகிறது. இதை இலகுவாய் விளங்கிக் கொள்வதற்காக இங்கே எமது உலமாக்களிலுள்ள துவித வாதிகளையும் மூமீன்களையும் ஓரளவு ஒப்பிடுவோம். இல்லையானால் விஷயத்தைச் சுருக்கமாய் முடிக்க முடியாது

**மூமீன்-.**
குர்ஆனை அணுகவேண்டிய முறைப்படி அனுகியதால் குர்ஆனில் முரணில்லை என்பதைக் கண்டார். குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் தௌஹிதையே உறுதிப்படுத்துவதை கண்டார். இவருடைய கல்பின் திரைகள் திறக்கப்படுவதால் ஈமானில் வளர்ச்சி பெறுகிறார். குர்ஆன் அவருக்கு வழி

காட்டுகிறது. ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலை அவர் பெறுகிறார். குர்ஆனுக்காக உயிர்த்தியாகம் செய்யவும் ஆயத்தமாகிறார்.

**முஷ்ரீக்-**

குர்ஆனை அனுக வேண்டிய முறைப்படி அனுகாததால் அந்த முஷ்ரீக் குர்ஆனில் முரண்பாட்டைக் காணுகிறான். குர்ஆன் எம்போன்ற மனிதராகிய முஹம்மதின் பேச்சுத்தான் என்று நம்புகிறான். இவனுடைய கல்பின் திரைகள் இறுக்கமடைகின்றன. சிந்திக்கும் ஆற்றலை இழந்து விடுகிறான். இதன் காரணமாய் மனித ஸுறத்தில் அவன் இருந்தாலும் கேவலமான ஒரு விலங்காகவே வாழ்கிறான்.

**காபீர்-**

இவன் வேதங்களை ஏற்றுக்கொண்டதாய்க் கூறுகிறான். (வேதத்தை) குர்ஆனை அணுகவேண்டிய முறைப்படி இவன் அணுகாமையினால் குர்ஆனில் முரண்பாடிருப்பதாய்க் காணுகின் றான். தன் அறிவுக்குச் சரியென்று தோன்றும் வேதவசனங்களை மட்டும் எடுத்துக்கொள்கிறான். தன் அறிவுக்கு முரணானவற்றை மறைக்கிறான். இருட்டடிப்புச்செய்கிறான். இவனுடைய அறிவு க்கு முரணாய்த் தென்படும் ஆயத்துக்களுக்கு உண்மையான விளக்கத்தை வேறொருவர் கொடுத்தால் உடனே அவரை வழிகெட்டவர், மூர்த்தத், காபீர் என்று பத்வாக் கொடுக்கிறான். தானே வழிகெட்டவனாய் முர்தத்தாய் காபீராய் இருப்பதை அவன் உணர்வதேயில்லை. முஸ்லீமோடு முஸ்லீமாய் நடிப்போரும் அல்லாஹ்வுடன் அவனல்லாதவையு முண்டென்ற கொள்கையில் முஷ்ரிக்கோடு முஷ்ரீக்காய் இருப்போரும் இவர்களிலுண்டு. இவர்களையே இஸ்லாம் முனாபிக்கீன்கள் என்று வருணிக்கிறது. இவ்வித லேபல்கள்தான் அன்றும் இன்றும் குர்ஆனை விளங்கிக்கொள்ளும் திறமையில்லாமல் நல்லோர் களைக் கொன்றழிக்க முற்பட்டார்கள். இவர்களுடைய நிலமை

மிகச் சங்கடமானது. குர்ஆனைப் புறக்கணிக்கவும் இவர்களால் முடிவதில்லை, அதை ஒப்புக்கொள்ளவும் இவர்களால் முடிவதில்லை. எனவே மதம் என்ற ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு கௌரவத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஓநாய்களாய் வாழ்கிறார்கள். இவர்களுடைய விஷயத்தில் தௌஹீதும் குர்ஆன் ஹதீஸ்களும் ஸக்கூம்பழமாக அமைந்து விடுகின்றன. ஸக்கூம்பழம் தொண்டையில் சிக்கிக்கொண்டால் உள்ளே தள்ளவும் முடியாது, வெளியே தள்ளவும் முடியாது. இவர்களும் குர்ஆனைச் சீரணிக்கவும் முடியாமல் அதனைப் பொய்யென்று புறக்கணித்துவிடவும் முடியாமல் திண்டாடு கிறார்கள். இவர்கள் எக்கூட்டத்தினர் என்பதைக் கண்டறிவது வாசக நேயர்களின் பொறுப்பாகும். இப்போது விஷயத்திற்கு வருவோம்.

நாம் காட்டிய 4:82ஆம் ஆயத்தும், கலிமத்துத்தையி பாவை உறுதிப்படுத்த அருளப்பட்ட (தலீல்களில்) ஆதாரங்களில் ஒன்றாகும். நாம் இரவல்மூளையை வீசிவிட்டுச் சுயமூளை யுடனும் ஆயத்தை நோக்குவோம். (முமீன்களல்லாத) ஸுன்னத்வல் ஜமாஅத்தினரல்லாத 72 கூட்டங்களையும் ஒன்றுசேர்த்து அவர்களுக்குத் தௌஹீதை விளக்கி, அவர்களுடைய சந்தேகத்திற்கு விடையளிப்பதே ஆயத்தின் நோக்கமாகும். இன்னும் கூறினால் முஷ்ரீக், காபீர், முனாபீக் ஆகியவர்களின் சந்தேகத்தை எடுத்துக்காட்டி அச்சந்தேகத்திற்கு விடையளிப்பதே ஆயத்தின் நோக்கமாகும். இந்த முஷ்ரீக். காபீர், முனாபீக், ஆகியவர்களின் மூன்று கூட்டமும் அல்லாஹ்வுடன் அவனல்லாத சிருஷ்டியும் உண்டென்று உறுதியாய் விசுவாசம் கொண்டிருப்பவர்கள். அல்லாஹ்வேறு, முஹம்மது (ஸல்) என்ற மனிதர்வேறு, என்று நம்பியிருப்பதை முஷ்ரீக் நேரடியாய் ஒப்புக்கொண்டவன். இவன் குர்ஆனை ஏற்றுக்கொள்ளவில்லை. “நீர் கொண்டு வந்ததை நான் பொய்யாகக் காண்கிறேன்” என்று அபூஜஹீல் நேரடியாகவே

கூறினான். காபீர் அல்லாஹ்வையன்றி இல்லை என்று வாயால் ஒப்புக்கொண்டாலும் இவனுடைய இருதயம் இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால்தான் இருட்டடிப்புச் செய்கிறான். முனாபீக்கும் இதே வகுப்பிலுள்ளவன்தான்.

நாம் காட்டிய இந்த 4:82ம் ஆயத்து தௌஹீதை எதிர்த்த, மறுத்த, மக்களுக்குக் கூறப்பட்டதென்பதை நாம் முதலில் ஒப்புக்கொள்ளவேண்டும்."அல்லாஹ் அல்லாத வரிடமிருந்து வந்திருந்தால் முரண்பாடிருக்கும்" என்று தெளிவு படுத்தப்படுவதால், குர்ஆனில் முரண்பாடில்லையென்று முதலில் உறுதிப்படுத்தப்படுகிறது. பிறகு அந்த ஆயத்து எவரை முற்படுத்திக் கூறப்பட்டதோ அவருடைய உள்ளத்திலுள்ள தவறான விசுவாசத்தை எடுத்து விளக்குகிறது. குர்ஆன் ஆயத்தினால் முன்னோக்கப்பட்ட மனிதன் (முஷ்ரீக்) குர்ஆன் முஹம்மதென்ற மனிதரின் பேச்சே என்று நம்பியிருந்தவன். அல்லாஹ் வேறு முஹம்மது வேறு என்று நம்பியிருந்தவன். இவனை நோக்கி அல்லாஹ் உண்மையை உணர்த்துகிறான். எப்படியென்றால்,

அல்லாஹ்வாகிய நான்தான் முஹம்மதென்ற மனிதரின் ஸூறத்தைத் திரையாய்க் கொண்டு இந்தக் குர்ஆனை அருளியிருக்கிறேன். அல்லாஹ்வாகிய நான் கூறியிருப்பதால் அதில் முரண்பாடு கிடையாது. முஹம்மதென்ற மனிதர் என்னைவிட்டும் வேறானவராயிருந்து தம்மிஷ்டப்படி கூறியிருந்தால் அதில் முரண்பாடு இருந்திருக்கும். எனவே நீங்கள் மனிதராய்க் காணும் முஹம்மதென்பவர் என் ஸூறத்தாகவே இருப்பதால்தான் அதில் முரண்பாடில்லா திருக்கிறது. ஸூறத் இயக்கமுடையதல்ல அதை இயக்குபவன் நானே. எனவே நான் வேறு அவர் வேறல்ல. நீங்களும் என்னை விட்டும் வேறானவர்களல்ல. நீங்கள் முஹம்மதென்ற மனிதரை என்னை விட்டும் வேறானவரென்றே உங்கள் எண்ணத்தில் நம்பியிருக்கிறீர்கள். இவ்வெண்ணம் தவறானது. இந்த

ஷிர்க்கிலிருந்தும் விடுபடுங்கள். அல்லாஹ்வாகிய என்னையன்றி வேறு சிருஷ்டி கிடையாதென்பதை ஆராய்ந்து தெளிவு பெறுங்கள். இதுவே இவ்வாயத்தை கொண்டு இறைவன் தரும் நல்லுபதேசமாகும். எந்த அளவு சுருக்கமுடியுமோ அந்த அளவுக்கு சுருக்கியிருக்கிறேன். எனவே அல்லாஹ்வை விட்டு முஹம்மது(ஸல்) என்ற சிருஷ்டி வேறல்ல என்பதை இபாரத்தென்ற வெளிச்சத்தத்தினாலும், முஹம்மது(ஸல்) என்ற சிருஷ்டி அல்லாஹ்வை விட்டும் வேறல்லவென்றால் பிற சிருஷ்டிகளும் அல்லாஹ்வைவிட்டும் வேறல்ல என்பதைத் தலாலத்தென்ற கருத்துப் பிரமாணத்தினாலும் இவ்வாயத்து உணர்த்துகிறது. இங்கே ஓர் சந்தேகம் தோன்றுகிறது.

## கேள்வி:-

முஹம்மதென்ற மனிதர் அல்லாஹ்வின் ஸூறத் தென்றால் நாமும் அல்லாஹ்வின் ஸூறத்துத்தானே! அப்படியானால் முஹம்மதென்ற மனிதரின் நாவினால் வெளியான சொல் முரணற்றதென்றால், அவரைப் போன்ற பிற மனிதரின் சொல்லிலும் முரணிருக்கக் கூடாதே? எமது கூற்றில் முரணுண்டென்றால் முஹம்மதென்ற மனிதரின் கூற்றில் ஏன் முரண் ஏற்படாது?

## பதில்:-

முஹம்மதென்ற மனிதருக்கும் எமக்கும் அறிவுத்துறையில், ஆத்மிகத்துறையில், சம அந்தஸ்து உண்டென்றால் அவருடைய பேச்சிலும் எம்முடைய பேச்சிலும் முரணிருக்காதென்பது உண்மைதான். ஆனால் பிற மனிதர் முஹம்மதென்ற மனிதரின் தகமையில் இல்லாதிருப்பதால் பிற மனிதரின் பேச்சில் நிச்சயமாக முரணிருந்தேயாகும். எப்படியென்றால் முஹம்மதென்ற மனிதர் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அப்துவாயிருந்து கூறிய கூற்றுக்கள் நப்ஸைத் தொடரும் ஷைத்தானி, ஹைவானியென்ற சிருஷ்டி சுபாவங்களை எடுகோள்களாய்க் கொள்ளாமல் சுயமாய்(றூாஹுவின் சுயநிலையிலிருந்து) கூறப்படுபவையாகும்.

இக்கூற்று இறையுணர்வென்ற தஜல்லியின் மூலம் வெளிப்படுவதாயிருப்பதால் அது றப்புடைய பேச்சாயும் முரணற்றதாயும் அமைந்துவிடுகின்றது. இம்மனிதரைப்போல் நாம் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அப்துக்களாயில்லை. எம்முடைய மக்களில் (வலிமார்கள் நீங்கலாயுள்ள) மிகப்பெரும்பாலார் எவ்வேளையிலும் சுயநிர்ணய உரிமையுடையவர் களாயிருப்பதால் இவர்களுடைய உள்ளத்திலிருந்து வெளியாகும் கூற்றுக்கள் ஸைத்தானி, ஹைவானியாகிய எடுகோள்கள் மூலம் பெறப்படும் கூற்றுக்களாயிருக்கின்றன. ஸைத்தானி, ஹைவானிகள் தவறுடைய சிருஷ்டிகளாயிருப்பதால் அவற்றினுதவியோடு பெறப்படும் கூற்றுக்கள் முன்னுக்குப் பின் முரணுடையவையாகவே இருக்கும். எனவே எடுகோளில்லாத பிறிதொரு ஆதாரம், எடுகோள் தேவையில்லாத, தன்னைத்தானே ஆதாரமாய்க் கொண்டுள்ள இறையறிவு முரண்படாததாய் அமைகின்றது. எடுகோள் அவசியமான, அல்லது பிறிதொன்றின் தேவையுடைய அறிவு முரணுடைய தாகவே அமையும். எனவே வஹி, இல்ஹாமத், இல்முன்லதுன்னீ போன்ற இறையறிவுகள் எவ்வகையிலும் முன்னுக்குப் பின் முரணாக இருக்கவே இருக்காது. ஏனென்றால் இவ்வகையறிவுகள் இன்ஸானிலுள்ள நப்ஸானியத், ஸைத்தானியத், ஹைவானியத்துக்கள் இருக்கும்போது வெளியாவதில்லை. அதாவது ஓரு நபியோ, வலியோ, வஹியை அல்லது இல்ஹாமத்தைப் பெறும்போது ஏறக்குறைய மரணித்த நிலையிலிருந்தே பெறுகிறார்கள். இவ்வகைக் கூற்றுக்கள் முன்னுக்குப் பின் முரணானவையாய் அமையா. நுட்பமாய் உணர்க. இப்போது விஷயத்திற்கு வருவோம்.

இறைவனிடமிருந்து குர்ஆன் ஜிப்ரீல்(அலை) அவர்களால் அவ்வப்போது கொண்டுவரபட்ட தென்பதை மூமீன்கள் ஏற்றிருக்கிறோம். ஆனால் மூஷ்ரீக் என்ற மனிதனிடம் இதை ஆதாரத்தோடு நிரூபணஞ் செய்யமுடியாது. ஜிப்ரீல்தான்

கொண்டு வந்தாரென்பதை முஷ்ரீக் மறுப்பானென்பதை அறிந்த இறைவன், "இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் முரண்பாட்டைக் காண்பார்கள்" என்று கூறி இன்னுமோர் உண்மையைத்தெளிவு படுத்துகிறான். ஜிப்ரில்தான் கொண்டு வந்தார்(கூறினார்) என்றாலும், முஹம்மதென்ற மனிதர்தான் கூறினாரென்றாலும், குர்ஆனில் முரண்பாடு இல்லாதிருப்பதால், ஜிப்ரீலும் முஹம்மதும் அல்லாஹ்வின் வேறல்லவென்றும் அவர்கள் இறைவனின் ஒவ்வொரு மழ்ஹறே என்றும், ஞானம் தௌஹீதுதானென்றும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. (நுட்பமாய்ச் சிந்திக்கவும்)

இவ்வாயத்தில் பாவிக்கப்பட்டுள்ள "கைறுல்லாஹி" என்ற வசனம் "அல்லாஹ் அல்லாதவரிடம்", "அல்லாஹ்வின் வேறானவரிடம்" என்று விளக்கமளிப்பதால் குர்ஆனைக் கூறிய இறைவனும் ஜிப்ரீலும் முஹம்மது(ஸல்) அவர்களும் குர்ஆனை ஓதும் நாமும் இறைவனை விட்டும் வேறான தனித்தனி வுஜூதுகளேயல்ல என்ற உண்மையே உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியானால் முரண்தென்படுகிற நூற்களெல்லாம் அல்லாஹ்வின் வேறானவர்களிடமிருந்து உருவானவையா? அல்லாஹ்வுடன் அவனல்லாதவர்களுமுண்டா? என்று ஓர் சந்தேகம் ஏற்படுகிறது. றப்புக்கு அப்து முரண் என்பதை முதலில் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அதன்படி அப்து(மனிதன்) செய்வதில் முரணுண்டென்றால் றப்புச்செய்வதில் முரணிருக்காது. அப்துக்கு றப்பு நேர் முரண் என்பதை நாம் மறக்கக்கூடாது. எனவே முஹம்மது(ஸல்) என்ற சிருஷ்டி அல்லாஹ் அல்லாதவராய் இருந்து கூறியிருந்தால் முரண் இருக்கும். அவர் அல்லாஹ்வின் பூரண தஜல்லியுடனிருந்து கூறியிருப்பதால் அது அல்லாஹ்வின் பேச்சாயும் முரணில்லாததாயும் இருக்கிறதென்பது தென்படுகிறது. இப்பேச்சின்போது றஸுல் பூரண அடிமை என்பதும் அவரிடமிருந்து வெளியான பேச்சு சுயநிர்ணய உரிமையுடன்(அனாநிய்யத்துடன்) இருந்து பேசப்படவில்லை

என்பதும் சிருஷ்டியென்றவகையில் ஒன்றுக்கு மற்றொன்று முரணல்லாதிருப்பதால் றஸுல் மட்டுமல்லாமல் யாவும் இறைவனின் வெளிப்பாடேயென்பதும் இவ்வாயத்தின் மூலம் சைக்கினை செய்யப்பட்டிருக்கிறது. முன்பும் இதை ஓரளவு விளக்கியுள்ளேன். இதே ஆயத்து குர்ஆனை ஆழ்ந்து கவனிக்க வேண்டுமென்று கட்டளையிடுவதால் நாம் ஒவ்வொருவரும் குர்ஆனை ஆழமாகச் சிந்திக்கவேண்டியது அவசியம். குர்ஆனின் எந்தவொரு வசனமும் தௌஹீதை மறுக்கவே மறுக்காது. றஸுல்(ஸல்) அவர்களுடைய ஸஹாபாக்களிலும் சிலர் குர்ஆன் வசனங்கள் ஒன்றுக்கொண்று முரணாயிருப் பதாய்க் கண்டிருக்கிறார்கள். ஸஈதிப்னு ஜுபைர் (றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு ஹதீஸில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவர் அப்பாஸ் (றலி) அவர்களிடம் 23:101ம் ஆயத்துக்கு 37:50ம் ஆயத்து முரணாயும், 4:42க்கு 6:23 முரணாயும், 7:27க்கும் 7:30க்கும் 41:9, 41:11 ஆகியவை முரணாயும், 48:14க்கு 48:7முரணாயும், இன்னும் இப்படிப்பல ஆயத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாயிருப்பதாய் வினவ, அப்பாஸ்(றலி) அவர்கள் கேட்டவருடைய கேள்விக்குத் தெளிவாய் விடை கூறியிருக்கிறார்கள். ஹதீஸ் நீளமாயி ருப்பதால் நான் அதை இங்கு தரவில்லை. இந்த ஹதீஸ் ஸஈதுப்னு ஜுபைர்(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்டு புஹாரியில் இடம்பெறுகிறது.

றஸுல்(ஸல்) அவர்களுடைய காலமக்களே இவ்வித விளக்கப்பிசகோடிருந்தார்களென்றால் எம்முடைய காலமக்களில் பெரும்பாலாரின் விளக்கத்தைச் சரியென்று ஒப்புக்கொள்ள முடியுமா? குர்ஆனில் ஓர் அட்சரங்கூட(ஓர் எழுத்துக்கூட) ஒன்றுக்கொன்று முரணில்லையென்பதை நாம் விளங்கித் தெளிவு பெறவேண்டும்

## இன்னும் சில ஆயத்துக்களை நோக்குவோம்.

**குர்ஆன்: 2:117**

بَدِيعُ السَّمٰوٰتِ وَالْأَرْضِ ۖ وَإِذَا قَضٰى أَمْرًا فَإِنَّمَا
يَقُولُ لَهُ كُن فَيَكُونُ ﴿١١٧﴾

**அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் எதை முடிவு செய்தாலும் அதனை ஆகுக எனக்கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடுகிறது.**

இவ்வாயத்தின் மூலம் நாம் அறியும் உண்மைகள் பல

**1வது:**
வானம் பூமியைப் படைத்தவன் இறைவன்தான்.

**2வது:**
அவனுடைய படைப்புக்கு முன்மாதிரி அவசிமல்ல.

**3வது:**
முடிவுசெய்த அதேசமயத்தில் அவனுடைய முடிவின்படி ஆகிவிடும்

**4வது:**
ஆகு என்று கூறினான். இறைவன் அவனுடைய சிருஷ்டியை உண்டாக்க எவ்விதக் காரண காரியப் பொருத்தமும் அவசியமல்லவென்று தென்படுகிறது. "ஆகு" என்ற சொல் எமது விளக்கத்துக்காகத் தரப்பட்டிருக்கிறது. இறைவன் பேச்சுக்கு எழுத்தும், ஒலியும் கிடையாது. மனிதன் தனது சொந்த

அனுபவத்தைக் கொண்டே தீர்ப்பிடுவான் என்பதை இறைவன் அறிந்தவன். இறைவனுடைய பேச்சுக்கு ஒலியும் அட்சரமுமி ல்லை. எம்முள்ளத்தில் நாம் எண்ணும் எண்ணத்திற்கு ஒலியும் அட்சரமும் கிடையாது. அவ்வெண்ணம் வெளியாகும் போதுதான் ஒலியையும் அட்சரத்தையும் பெறுகிறது. இறைவனுடைய (இறாதா) நாட்டம், எண்ணம், நிய்யத் எமது நாட்டத்தை, எண்ணத்தை, நிய்யத்தைப்போலல்ல. அப்துக்கு றப்பு முரணல்லவா? எனவே ஆகு என்று அவன் கூறவேண்டியதில்லை எமது வழமைக்கேற்பவே ஆகு என்றசொல் தரப்பட்டுள்ளது.

இவ்வளவுமே எமக்குப் போதுமானது. படைத்தவன் இறைவன்தானென்பதற்கு எமக்கு விளக்கம் தேவையில்லை. அதை எல்லோருமே நம்பியுள்ளோம். அவனுடைய படைப்புக்கு முன்மாதிரி அவசியமில்லை என்பதிலும் எமக்குப் பெரும்பாலும் விளக்கம் அவசியமில்லை. அப்துக்கு றப்பு முரண் என்ற தத்துவப் படி அப்துக்கு முன்மாதிரி அவசியமென்றால் றப்புக்கு அது அவசியமில்லை. ஆனால் இல்லாதது வராது என்ற தத்துவத்தின்படி "ஆகு" என்ற சொல்லால் விளக்கப்பட்டுண்டான சிருஷ்டி, ஸுறத்தைப் பெற முன்னர் (சிருஷ்டியாவதற்கு முன்னர்) பெயரில்லாத, இனந்தெரியாதவொன்றாய், அவனுடன் அவனது (இறாதா) நாட்டம் அல்லது எண்ணத்தில் அவன்தானாகவே இருந்திருக்கும்(நுட்பமாயுணர்க). இறைவன் எதை முடிவு செய்தானோ அதேசமயத்தில் என்பதன் அர்த்தம் அவனுடைய பொதுக்கற்பனை (தஜயுனுல்ஊலா) என்ற நிலைமையில் எதை முன்னோக்கிக் குறிப்பாகக் கொண்டானோ அதுவே சிருஷ்டி என்பது. இறைவனிடத்தில் காலத்தில் முன்பின் என்பதில்லை. அவனே காலமாயிருப்பதால் அவனிடத்தில் என்றும் நிகழ்காலம்தான். இந்தச் சிருஷ்டியென்ற பிரபஞ்சம்தான் (ஆலம்தான்) அவனுடைய நூரின் ஸுறத்தென்பது. எப்போது நூர் என்ற குறிப்பும் நாமமும் ஏற்பட்டதோ அப்போதே இறைவனின் 2வது நிலையான விபரக்கற்பனை

(தஜயுனுஸ்ஸானி) உருவாகிவிட்டது. அதாவது பிரபஞ்சமும் (ஆலங்கள்) தோன்றிவிட்டன. இங்கே முன்பின் என்ற கால வேறுபாடு எதுவும் கிடையாது. பகுபடாத வுஜூதுவை விளங்கிக் கொள்வதற்காகவே முன்பின்னாய்ப் பேசுகிறோம். எப்போது நூர் என்ற நாமம் உண்டோ அப்போதே ஸூறத்தும் உண்டு. ஸூறத் இல்லையானால் நாமம் ஏற்படாது. எனவே அல்லாஹ்வுடன் எதுவுமேயில்லாத நிலையில் நூர், றப்பு, அப்து எல்லாமே ஏகமாயிருந்த நிலையை "வுஜூது" என்றும் அப்து, றப்பு, நூர் என்ற நிலமையை "வெளிப்பாடு"(லாஹிர்) என்றும் கொள்வோம்(அஸ்மா ஸூறத்தாகவும் அதிலிருந்து வெளியாகும் சக்தி ஸிபத்தாகவும் இருக்கிறது). இவ்விபரம் உண்மையென்றால், அவனுடன் வேறு எதுவும் இல்லாத நிலையில் எதைப்பார்த்து ஆகு என்று கூறியிருப்பான்.? லாஹிறும் பாத்தினும் ஏகமாய் அமைந்ததுதான் சிருஷ்டியென்பது. அப்படியானால் ஆகுக என்ற சொல் அவசியமல்லவே! ஆம் அவசியமல்ல.ஆனால் மனித அறிவு இலகுவாய் விளங்குவதற்காக மனிதனின் பாஷை வழக்குப்படி கூறி விளக்கப்பட்டிருக்கிறது. இறைவனின் பேச்சுக்கு ஒலியும் எழுத்தும் இல்லை என்பதை முன்பே கூறியுள்ளேன். நாம் கூறிய சுருக்கமான விபரப்படி இறைவனின் ஸூறத்தே சிருஷ்டி என்பதையும் இறைநாட்டம் பிறந்த அதே கணம் அவனுடைய நாட்டம் ஸூறத்தாய்(சிருஷ்டியாய்) ஆகிவிடும் என்பதையும் அறிந்து கொண்டோம். மேலும் அவன் ஏகனாய், அவனையன்றி பிறிதொன்றில்லாத ஸமதாய் இருப்பதால் அவனுக்கு எவ்வித ஆதாரமும் தேவையில்லாமல் அவனுக்கு அவனே ஆதாரமாய் இருந்தபோதுதான் நூர் என்பதை குறிப்பாக்கினான். இப்போது நூரை உருவகப்படுத்திய தத்துவமே "காதிர்" (ஆதாரமின்றித் தத்துவமுடையவன்) என்பதன் அர்த்தமாகும். இதை நாம் 1ம் குறிப்பு என்று கொள்வோம். குர்ஆன் 29:19 போன்ற ஆயத்துக்களை ஆராய்ந்து இவ்விஷயத்தில் தெளிவு பெறுக. இவ்வாயத்துக்கள் தஜயுனுல்ஊலாவை விளக்குபவையாகும்.

**குர்ஆன்: 16:3**

خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ۚ تَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ۝

**வானங்களையும் பூமியையும் தக்ககாரணத்தின்மீதே அவன் படைத்திருக்கிறான். அவர்கள் இணையேற்படுத்துபவைகளைவிட அவன் மிக்க மேலானவன்.**

நாம் முன்பு காட்டிய ஆயத்துக்கு இவ்வாயத்து முரணாய்த் தென்படுகிறது. காரண காரிய பொருத்தத்தோடு படைப்பதானால் இடைபடை காரணங்கள் பல இருக்க வேண்டும். இல்லையானால் காரண காரியப்பொருத்தம் அமையாது. அப்படியானால் 16:3ஆகிய இவ்வாயத்து 2ம் குறிப்பு (தஜயுனுஸ்ஸானி) என்ற விபரக்கற்பனையை வெளிப்படுத்துவதாயும் முன்தந்த 2:117ம் ஆயத்து முதலாம் குறிப்பான (தஜயனுல்ஊலா) என்ற பொதுக்கற்பனையை வெளிப்படுத்துவதாயும் இருக்கின்றன. எனவே ஆயத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணல்ல. ஒவ்வொரு ஆயத்தும் ஒவ்வொரு விஷயத்தை (மர்த்தபாவை) விபரிக்கின்றனவேயன்றி முரண்படவில்லை. தௌஹீதென்ற ஞான விபரத்தை பெறுவதற்காகவே குர்ஆன் இப்படி விபரம் தருகின்றது. இந்த 2ம் குறிப்பின்போதுதான் “கதீர்” என்ற பெயரை இறைவன் பெறுகிறான். “காரணத்தோடுள்ள தத்துவமுடையவன்” என்பது அதன் அர்த்தம். 21:30, 81:7, 7:189 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்க. “காதிர்” என்ற நாமம் பொதுக்கற்பனையான வுஜூதுவை நோக்கியும் “கதீர்” என்ற நாமம் விபரக்கற்பனையான றுபூபியத்தை நோக்கியும் கூறப்பட்டுள்ளன.

**குர்ஆன்: 11:7**

وَهُوَ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِىْ سِتَّةِ
اَيَّامٍ وَّكَانَ عَرْشُهٗ عَلَى الْمَآءِ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ
اَحْسَنُ عَمَلًا ؕ وَلَٮِٕنْ قُلْتَ اِنَّكُمْ مَّبْعُوْثُوْنَ مِنْ
بَعْدِ الْمَوْتِ لَيَقُوْلَنَّ الَّذِيْنَ كَفَرُوْۤا اِنْ هٰذَاۤ
اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ ۝

**அவன்தான் வானங்களையும் பூமியையும் ஆறுநாட்களளில் படைத்தான்.**

(41:9, 41:12, 25:59 போன்ற ஆயத்துக்களையும் எடுத்துக் கொள்க)

இந்த ஆயத்து முன்தந்த 2:117ம் ஆயத்துக்கு முரண்போல் தென்படுகிறது. முதல் ஆயத்து உடனே நடைபெறுவதாயும் இவ்வாயத்து குறிப்பிட்ட காலத்தில் (தாமதமாய்) நடைபெறுவதாயும் விளக்குவதால் ஒன்றுக்கொன்று முரண்போல் தோன்றுகிறது. “ஆகு” என்றவுடன் ஆகிவிடுகிற தென்ற உண்மை இவ்வாயத்தில் மறுக்கப்படுகிறது. உண்மை யை நோக்கினால் எந்த ஆயத்துக்களும் ஒன்றுக்கொன்று முரணானவையேயல்ல. 2:117ம் ஆயத்துப் பொதுக்கற்பனை யென்ற முதலாம் குறிப்பை (தஜயுனுல் ஊலாவை) விளக்குவதற்காகவும், 16:3ம், 11:7ம் ஆயத்துக்கள் இரண்டாம் குறிப்பை (தஜயுனுஸ்ஸானியை) விளக்குவதற்காகவும் தரப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றுக்கு மற்றொன்று முரணேயல்ல. 54:49ம், 50ம் ஆயத்துக்களில் “ஊலா”, “ஸானி” இரண்டுமே விளக்கப்பட்டுள்ளன. இவ்வித ஆயத்துக்களில் நாள் (யவ்மு) என்று பாவிக்கப்பட்ட சொல் படித்தரம், கட்டம், பகுதி என்ற பொருளுடையது. சூரிய சந்திரன் முதலாம் சிருஷ்டி

களைக் கொண்டே நாம் காலத்தின் ஓர்கட்டத்தை நாளாகக் கணிக்கிறோம். இவையெல்லாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன் நாம் கணிக்கும் நாள் இருந்திருக்கவே முடியாது. எனவே இறைவனுடைய விடயத்தில் நாள் (யவ்மு) என்று கூறப்படு வது கட்டம் என்ற பொருளுடையது. ஆகவே இவ்வாயத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணானவையேயல்ல.

## இன்னும் ஓர் நுட்பம்:

இறைவன் தேவையற்ற "ஸமது"வாய் இருக்கிறானென்றால் அவனே சிருஷ்டியைப் படைத்தான் என்பது பொய் போல் தென்படுகிறது. ஏனென்றால் சிருஷ்டிப்பவன் சிருஷ்டிக்க வேண்டிய தேவையுடையவனென்றாவான். எனவே நாம் இறைவனைத் தேவையற்றவனென்று கூறுவதா? தேவையுடை யவனென்று கூறுவதா? தேவையுடையவனென்றால் அவனும் எம்மைப் போன்ற சிருஷ்டிதானென்று கூற நேரிடுமே! என்று எமக்கு ஓர்சந்தேகம் உருவாகிறது. இதற்குரிய மிகச் சுருக்கமான விடை என்னவென்றால் படைத்தல் என்னும்போது நாம் ஓர்பொருளை எப்படிப் படைக்கிறோமோ அதேபோல் மண்ணைப்பிசைந்து கைகளினால் உருட்டிப்புரட்டி ஆதம் (அலை) என்ற மனிதரை இறைவன் படைத்தானென்று எமது முன்னோர் தந்த மூடவியாக்கியானங்களில் ஊறியிருந்து கொண்டே நாம் இறைவனின் படைப்புத் தொழிலையும் எடை போடுகிறோம். இது எமது வஹ்மு என்ற மூடபுத்தியும் கண்மூடித்தனமான பின்பற்றலுமாகும். அப்துவுக்கு றப்பு நேர்முரண் என்பதை மறந்தே விடுகிறோம். கனவின் போது எனது உள்ளம், கனவில் வெளியான சிருஷ்டிகளை எப்படி உருவாக்கியதோ, ஏறக்குறைய அதுபோலவே இறைவன் அவனுடைய சிருஷ்டியை அவனுடைய அறிவிலேயே உருவாக்குகிறான்.ஆனால் ஒரேயோர் வேறுபாடுண்டு. கனவுலகச்

சிருஷ்டிகளுக்கு கால, இட வேறுபாடுகளும் எண்ணத்தை உருவாக அமைக்கும் பிறதத்துவங்களும் இல்லாமல் கனவுலகச் சிருஷ்டிகள் உருவாகா. இறைவனிடத்தில் இடைபடை காரணங்கள் எதுவுமே அவசியமல்ல. நுட்பமாய் உணர்க.

இதைப்போல், இறைவன் இயங்குகிறானென்றால் தேவையுடையவன் என்றாகிறான். இயங்க முடியாதவனென்றால் சக்தியற்றவனென்றாகிறான். இயங்கவில்லையென்றால் ஏற்க முடியாமலிருக்கிறது. இறைவன் இயங்குகிறான், செயல்படுகிறான் என்பதற்கு "மன்கூல்" "ம.்.கூல்"களான ஆதாரங்களுள்ளன. இயக்கமற்றவன் என்பதற்கும் "மன்கூல்", "மஹ்கூல்"களான ஆதாரங்கள் நிறைய உள்ளன. உதாரணமாக இறைவன் வழிகாட்டுகிறான், வழிகெடுக்கிறான், இரங்குகிறான், கோபிக்கிறான் என்பவை போன்ற வசனங்களை ஆராய்வு செய்தால் இச்செயல்கள் யாவையும் இறைவனின் "றுபூபியத்" என்ற நிலைமையையும், "ஸமது"(தேவையற்றவன்), சுப்ஹானல்லாஹ்(அல்லாஹ் தூயவன்) என்பவை போன்ற வசனங்கள் இறைவனுடைய அமா, குன்ஹு, தாத்து, வுஜூது ஹக்கு, என்ற சொற்களால் சுட்டப்படுகிற அல்லாஹ்வுடைய சுய நிலையையும் விளக்குபவையாய் தரப்பட்டுள்ளன. எனவே தான் இவ்விரு "மர்த்தபா" நிலைமைகளையும் ஏகமாய் வேறுபாடின்றிக் கொண்டுடிருப்பது எதுவோ அதுவே "அஹது" "அல்லாஹ்" என்பதென்று 112ம் சூறா மூலமும் 41:9 போன்ற ஆயத்துக்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இவ்வகை வசனங்கள் ஞானவிபரத்தை இலகுவாய்ப் பெற்றுக்கொள்ள உதவியாய்த் தரப்பட்டிருக்கிறதேயன்றி அவை ஒன்றுக்கொன்று முரணானவையேயல்ல.

**குர்ஆன்: 4:78**

أَيْنَ مَا تَكُونُوا يُدْرِككُّمُ الْمَوْتُ وَلَوْ كُنتُمْ فِي بُرُوجٍ مُّشَيَّدَةٍ ۗ
وَإِن تُصِبْهُمْ حَسَنَةٌ يَقُولُوا هَٰذِهِ مِنْ عِندِ اللَّهِ ۖ وَإِن
تُصِبْهُمْ سَيِّئَةٌ يَقُولُوا هَٰذِهِ مِنْ عِندِكَ ۚ قُلْ كُلٌّ مِّنْ عِندِ
اللَّهِ ۖ فَمَالِ هَٰؤُلَاءِ الْقَوْمِ لَا يَكَادُونَ يَفْقَهُونَ حَدِيثًا ﴿٧٨﴾

**அவர்களை யாதொரு நன்மையடையும் பட்சத்தில் இது அல்லாஹ்விடமிருந்து வந்ததெனக் கூறுகின்றனர். அவர்களுக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டு விட்டாலோ இது உம்மால்தான் எனக் கூறுகின்றனர். நீர் கூறும் யாவும் அல்லாஹ்வின் பாலிருந்தே கிடைக்கின்றன. இந்த மக்களுக்கு என்ன நேர்ந்தது. எவ்விஷயத்தையும் இவர்கள் அறிந்துகொள்ள முடியவில்லையே.**

இவ்வாயத்தின்படி நன்மை தீமையாவும் அல்லாஹ்வின் நின்று முள்ளதேயென்று கூறுகிறது.

**குர்ஆன்: 53:43,44,45**

وَأَنَّهُ هُوَ أَضْحَكَ وَأَبْكَىٰ ﴿٤٣﴾ وَأَنَّهُ هُوَ أَمَاتَ وَأَحْيَا ﴿٤٤﴾
وَأَنَّهُ خَلَقَ الزَّوْجَيْنِ الذَّكَرَ وَالْأُنثَىٰ ﴿٤٥﴾

**...............நிச்சயமாக அவனே உம்மைச் சிரிக்கவைக்கின்றான். அழவும் வைக்கிறான். நிச்சயமாக அவன்தான் மரிக்குமாறும் செய்கிறான். உயிர்ப்பிக்கிறான். நிச்சயமாக அவன்தான் உங்களை ஆண் பெண் ஜதைகளாய்ச் சிருஷ்டிக்கிறான்.**

மேலே காட்டிய ஆயத்தை இவ்வாயத்து உறுதிப்படுத்துகிறது. இவ்வகை ஆயத்துக்கள் “தஜயுனுல் ஊலா” என்ற பொதுக் கற்பனையை விளக்குபவையாகும்.

**குர்ஆன்: 4:79**


مَا أَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللَّهِ ۖ وَمَا أَصَابَكَ مِنْ سَيِّئَةٍ
فَمِنْ نَفْسِكَ ۚ وَأَرْسَلْنَاكَ لِلنَّاسِ رَسُولًا ۚ وَكَفَىٰ بِاللَّهِ شَهِيدًا

**உனக்குயாதோர் நன்மை ஏற்பட்டால் (அது) அல்லாஹ்வினால் ஏற்பட்டது என்றும், உனக்குயாதோர் தீங்கு ஏற்பட்டால் உன்னால்தான் ஏற்பட்டதென்றும் (கூறுவீராக).**

இவ்வாயத்து முன் ஆயத்துக்களுக்கு முரண்போல தென்பட்டாலும் உண்மையில் முரணேயல்ல. இவ்வகை ஆயத்துக்கள் “தஜயுனுஸ்ஸானி” என்ற விபரக் கற்பனையை விளக்குபவையாய் அமைந்திருக்கின்றன. இதை விளங்கிக் கொள்ளாமையினால்தான் மனிதன் இவ்வகை ஆயத்துக்களை ஒன்றுக்கொன்று முரணாய்க்காணுகிறான்.

நாம் காட்டிய முன்மாதிரியைக் கொண்டு இன்னும் பல ஆயத்துக்களை எடுத்து ஆராய்வது உங்கள் பொறுப்பு. இப்போது “முதாஸபிஹாத்” என்ற பல கருத்துடைய வசனங்களும் தௌஹீதை நிரூபணம் செய்கின்றனவா? என்பதைக் காண்போம்.

**குர்ஆன்: 96:1**

اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِىْ خَلَقَ ۝١

**(யாவற்றையும் படைத்த) றப்புவின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவிராக.**

இவ்வாயத்துப் பலகருத்துக்களையுடைய “முதஸாபிஹாத்” இனத்தைச் சேர்ந்ததாகும். றசூல்(ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல்(அலை) அவர்கள் மூலம் முதன்முதலில் அறிவிக்கப்பட்ட ஆயத் இதுவே. இவ்வாயத்தில் “ஓதுவீராக” என்ற ஓர் வியங்கோள் வினைச்சொல்(ஏவல்வினை) பாவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக “நாமத்தைக் கொண்டு” என்ற சொல் ஏதோ ஓர் நாமத்தின் உதவிகொண்டுதான் ஓதவேண்டுமென்று அறிவிக்கிறது. ஓதுவதற்குரிய நாமம் றப்புடையதே என்றும் அறிவிக்கிறது. இதை ஒழுங்குபடுத்தினால்

**1வது:**

எமக்கு(உலகுக்கு)க் குர்ஆன் மூலம் இறைவனால் அருளப்பட்ட முதல் வசனம் இதுவே. இதைப் “பிக்ஹுடைய” உலமாக்கள் எவ்வளவோ விளக்கியுள்ளார்கள். ஆனால் நானறிந்த வரையில் “ஓதுவீராக” என்ற சொல்லுக்குத் தௌஹீது சம்பந்தமாய் எந்த ஓர்விபரமும் தந்திருப்பதாய்த் தெரியவில்லை.

**2வது:**

நாமம்(அஸ்மா) என்றால் பெயர் என்பதே அதன் அர்தமென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த ஓர்விடயம். ஆயினும் அஸ்மா என்ற சொல்லைக்கொண்டு எந்த ஓர் “பிக்ஹுக்”கிதாபும் தௌஹீதை விளக்கியிருப்பதாய்த் தெரியவில்லை.

**3வது:**
ஓதுவதற்குரிய நாமம் றப்புடைய நாமமேயென்று கூறப்பட்டிருக்கிறது. றப்புடைய நாமம் என்பது “பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்” என்பதாயிருப்பதால் பிஸ்மியைக் கொண்டே ஓதலை ஆரம்பிக்கவேண்டுமென்பது புகஹாக்களின் முடிவாகும். இம்முடிவை நாமும் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். இதற்கு ஆதாரங்கள் சிலவுள்ளன. ஆயினும் புகஹகாக்களுடைய விபரத்திலும் தௌஹீது அமைந்திருப்பதாய்த் தெரியவில்லை. அதாவது பிஸ்மியுடைய பிரயோசனம் விளக்கப்பட்டிருந்ததேயன்றி அதைக்கொண்டு எவரும் தௌஹீதை உறுதிப்படுத்தியதாய்த் தெரியவில்லை. மேலும் பிஸ்மியில் பல நாமங்கள் உள்ளன. ஆயத்தில் நாமம் ஒருமையில்தான் கூறப்பட்டுள்ளது.

தௌஹீதை உறுதிப்படுத்துவதே குர்ஆனின் குறிக்கோளாயிக்கிறது. தௌஹீதில் நிலைப்படுவதற்குரிய அணுகுமுறைப் பயிற்சிகளான தொழுகை முதலாம் வணக்கங்களை மட்டுமே குர்ஆன் கூறிக் கொண்டிருக்கிறதென்று கொண்டால் நாம் அதை ஏற்க முடியாது. ஏனென்றால் குர்ஆன் தௌஹீதை உறுதிப்படுத்துவதற்காகவே “றுபூபியத்”, “றஹ்மத்” ,“அதாலத்” என்ற பிரிவுகளையும் தன்னுட்கொண்டதாய் இருக்கிறது. இவற்றில் தௌஹீதைப்பற்றி அற்ப அளவு அறிவு கூட இல்லாமல் அதாலத்தென்ற நீதிநிர்வாகப் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றும் பகுதிகளை உதாசீனம் செய்வது பொருந்தாது, அதாலத் அரசர்களுக்கு, ஆட்சியாளர்களுக்கு, தலைவர்களுக்கு அவசியமாயிருப்பதால் அந்தப் பகுதி மட்டுமே போதுமானதென்று கொள்ள முடியாது. குர்ஆன் இறைவனின் பேச்சாயிருப்பதால் நாம் அதை உதாசீனம் செய்யமுடியாது. எனவே பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்றஹீம் என்ற வாக்கியத்தைக் கொண்டே இறைவன் ஓதச்சொன்னான் என்பது பொருந்தாது. ஆயத்தில் கூறப்பட்டது “நாமத்தை கொண்டு” என்றிருப்பதால் அந்த நாமம் ஏதோ ஓர் நாமம் மட்டுமே என்பது தென்படுகிறது.

பிஸ்மியில் பல நாமங்கள் இருக்கின்றன. குர்ஆனில் எந்த ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டாலும், நிச்சயமாக அந்தவசனத்தில் இந்நான்கு அம்சங்களும்(தௌஹீது, றுபூபிய்யத், றஹ்மத், அதாலத்) இருந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால், இதைத் தெளிவாய் அறிந்துகொள்வதற்கு இறை வழிகாட்டலும் நூறுடைய பார்வையும் அவசியமாகும். இங்கே தொகுப்பாய், மிகச்சுருக்கமாய், இவ்வாயத்திலுள்ள மூன்று விஷயங்களையும் தருகிறேன்.

**1வது:**

ஓதுவீராக, இது ஒரு வியங்கோள் வினைச்சொல்லாகும். இச்சொல் இருகருத்துக்களைத் தருகிறது. ஒன்று நபியை நோக்கி இறைவன் (ஜிப்ரீல்மூலம்) ஓதும்படி ஏவுகிறான் என்பது. இவ்வாயத்தில் “ஓதுவீராக” என்று கூறப்பட்டிருக்கிறதேயன்றி “நான் கூறுவதை நீர் ஓதுவீராக” என்று கூறப்படவில்லை. எனவே படர்க்கையிலிருக்கும் இறைவன்தான் ஜிப்ரீல் மூலம் கூறியிருக் கிறான் என்பது உண்மைபோல் தென்படினும் அது எமது மருண்ட அறிவின் யூகந்தான். “ஓதுக” என்பதற்கு “சொல்லுக” என்று பொருள் கொண்டால் பிறருக்குச் சொல்லுக, ஓதுக என்பதும் இன்னோர் அர்த்தமாகும். இவ்விரு அர்த்தங்களையும் ஒன்று சேர்த்துத்தான் “ஓதுவிராக” என்று இறைவன் அறிவிக்கிறான். அதாவது நீரும் ஓதும்(சொல்லும்), பிறருக்கும் சொல்லும்(ஓதும்) என்பது அதன் அர்த்தம். இவ்விருவிஷயமும் ஓன்றாய் அமைந்திருப்பதை நோக்குங்கள். இதுமட்டு மல்லாமல் குர்ஆனை ஏற்றுக்கொண்டு வாழ்வோர் ஒவ்வொருவரும் பிறருக்கும் சொல்லவேண்டும் என்ற ஓர் ஏவலும் இதில் பொதிந்திருக்கிறது. மக்களுடன் றஸூலைப் பேசும்படி (ஓதும்படி)யும் றப்பின் திருநாமத்தைக் கொண்டே றஸூலைப் பேசும்படியும் கூறியிருப்பதை நோக்குக. இறைவன், றப்பின் திருநாமம் என்று கூறியுள்ளானேயன்றி, அல்லாஹ்வின் திருநாமம் என்று கூறவில்லை. அல்லாஹ்வின் திருநாமங்களில்

ஒன்றுதான் “றப்பு” என்பது. றப்பு என்பது றுபூபியத்தென்ற 2ம் மர்த்தபாவைச் சுட்டியதென்பதை நான் முன்பு விளக்கியுள்ளேன்.

இவ்வசனம் படர்க்கையிலுள்ள(அர்ஷிலுள்ள) இறைவன் வேறு என்றும், ஜிப்ரீல்(அலை) வேறு என்றும் றஸுலாயிருந்த முஹம்மது(ஸல்) அவர்கள் வேறு என்றும் றஸுலின் சொல்லைக் கேட்கும் மக்கள் வெவ்வேறு என்றும், ஒவ்வொன்றையும் தனித்தனியாய் விளக்குவதால், இவ்வசனத்தில் மனித அறிவு தௌஹீதைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறது. மீண்டும் பழைய நிலைக்கே அறிவு சென்றுவிடுகிறது. தனித்தனியாய் விளக்கப்பட்டிருப்பதால் றுபூபியத், றஹ்மத், அதாலத் ஆகிய மூன்றுபகுதிகளை வெளிச்சத்தப் பிரமாணத்தினாலும் (இபாரத்தினாலும்), தௌஹீதை கருத்துப் பிரமாணத்தினாலும் (தலாத்தினாலும்) கூறப்பட்டிருப்பதை எம்மறிவு திடீரென உணர்ந்துகொள்வதில்லை. குர்ஆனின் எந்தவொரு தனிச்சொல்லாயிருந்தாலுங்கூட அது தௌஹீதை உறுதிப்படுத்தும்என்பதை எமது மருண்டஅறிவு தெரிந்து கொள்ளவில்லை. இதை நன்கறிந்துள்ள இறைவன், எங்கு சந்தேகம் ஏற்படுமோ அங்கேயே அச்சந்தேகத்தை நீக்கும் தன்மையைக்கொண்ட சொற்களையும் வசனங்களையும் பாவித்தே குர்ஆனை அருளியிருக்கிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

நூர் என்பதைக் கொண்டே சகலமும் உருவாக்கப்பட்ட தென்றும், நூர் என்பது(முஹீத்தாய்) யாவற்றையும் சூழ்ந்ததாயிருக்கிறதென்றும் முன்பு விளக்கினேன். சிருஷ்டி யென்பது இறைதிருநாமங்களான அஸ்மாக்களின் ஸுறத்துக்களே என்றும் கூறினேன். ஜிப்ரீல்(அலை) றூஹுவின் தத்துவம் என்றும், றூஹுவே அல்லாஹ் என்றும் கூறினேன். ஆதாரங்களும் தந்தேன்.

றஸூல்(ஸல்) அவர்களுடைய ஸூறத் (முஹம்மதென்ற மனிதரின் தோற்றம்) அல்லாஹ்வின் ஸூறத்துத்தான், தோற்றந்தானென்றால், அல்லாஹ் தன்னுடைய ஒரு திருநாமத்தின் ஸூறத்தில் காட்சியளித்தான் என்பதை மறுக்க முடியாது. அல்லாஹ்வின் இலாஹியான திருநாமங்களில் ஒன்றுதான் "அஹமத்" என்பது. இதற்கு அநேக ஆதாரங் களுண்டு. நான் விரிவைப் பயப்படுகிறேன். அஹமத் என்ற இலாஹியான நாமத்தின் ஸூறத்தைத்தான் நாம் முஹம்மது (ஸல்) என்ற மனிதராய் 1410 வருடங்களின் முன் கண்டோம். பார்க்கும் கண் எம்மிடமிருந்தால் இன்றைக்கும்கூட நாம் அவர்களைப் பார்க்கமுடியும். இன்ஷா அல்லாஹ் இறைவன் நாடினால் விஞ்ஞானவாயிலாய் முன் நபிமாரின் ஸூறத்துக்களை மட்டுமன்றி முஹம்மது(ஸல்) அவர்களையும் அவர்களின் உரையாடலையும் நாம் பார்த்துக் கேட்டு அனுபவிக்க முடியும். ஏனென்றால், இயற்கையென்பது நடந்து கொண்டிருக்கும் அத்தனை விஷயங்களையும் (வீடியோ கேமரா போல்) பதிவு செய்து வைத்துள்ளது. இந்தப் பதிவு நாடாவை விஞ்ஞானம் இதுவரை கண்டறியவில்லை. ஆயினும், என்றோ ஒருநாள் மனிதன் கண்டறியக்கூடும்.

"அஹமத்" என்ற இலாஹியான நாமத்தின் ஸூறத்துக்கு முஹம்மது(ஸல்) என்று நாம் வைத்துக்கொண்ட நாமம் "கௌனி"யாய் (பெயருக்குப் பெயராய்) இருக்கிறது (நுட்பமாய் உணர்க). அஸ்மா என்பது றப்பு என்ற நிலைமைக்கு(மர்த்தபாவுக்கு) உரியது. றப்பின் திருநாமத்தைக் கொண்டே ஓதுக என்றால், றப்புடைய நாமத்தின் ஸூறத்தான (உடலைக்கொண்டும்) நாவைக்கொண்டும், அதாவது லாஹிறைக் கொண்டும், றப்பின் திருநாமங்களில் ஒன்றான கல்பென்ற உள்ளத்தைக் கொண்டும், அதாவது பாதினைக் கொண்டும் றப்புவாகிய நான் ஜிப்ரீல் என்ற எனது தத்துவத்தின்மூலம் பேசுவதை நீர் கூறுவீராக அதேபோல் எனது அஸ்மாக்களின் ஸூறத்துக்களான பிறருக்கும் கூறுவீராக.

இதுவே ஆயத்தின் உண்மையான விளக்கமாயிருக்கிறது. அப்படி யானால் இப்போது றசூலை அவதானியுங்கள். றஸூலுடைய (உடல்) நா, றப்புவின் ஓர் அஸ்மாவின் பௌதீகஸூறத்தாயும், கேட்பதற்கும் கூறுவதற்கும் துணைக்காரணமான கல்பு(உள்ளம்) றப்பின் சூட்சும(பாதின்) ஆன ஸூறத்தாயும் இருக்கின்றன. லாஹிருக்கு ஸூறத்துண்டானால் பாதினுக்கும் ஸூறத்துண்டு. ஆயினும் நாம் இதை அறிவதில்லை. லாஹிரும், பாதினும் றுபூபியத்தின் மர்த்தபாவாகும். அல்லாஹ் என்ற நாமம் குறிப்பிடும் நிலைமை கட்டுப்பாடுடைய றுபூபியத்தையும் கட்டுப்பாடற்ற குன்ஹுவென்ற வுஜூதுவையும் ஏகமாய்க் கொண்டதாகும்.

லாஹிறும், பாதினும் கட்டுப்பாடுடையவை. றசூலுடைய ஸூறத்தென்ற லாஹிரும், கல்பு என்ற பாதினும் றப்புக்கே உரியதென்றால், றசூல்(ஸல்) அவர்கள் றப்புடைய ஓர்ஸூறத்துத்தானெனன்பதை நாம் எப்படி மறுக்கமுடியும்? உள்ளமும்(கல்பும்) உடலும்(வெளிப்படையானஸூறத்தும்) றப்புடையவை தானென்றால், உடலுக்கும் உள்ளத்துக்கும் வுஜூதுவாய்(முழுமுதற்காரணமாய்) இருப்பவன் அல்லாஹ் தானென்றால், றஸூல்(ஸல்) அவர்களுடைய றூஹு தான் அல்லாஹ்தானென்றால், றஸூல்(ஸல்) அவர்களுடைய றூஹுதான் அல்லாஹ்வாக இருக்கவேண்டும். றசூல்(ஸல்) அவர்களை(முஹம்மதென்றமனிதரை) நாம் ஓர் சிருஷ்டிதா னென்று கொண்டால், பேரண்டத்திலுள்ள சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ்வின் ஸூறத்துக்களேதான் என்பதை நாம் மறுக்க முடியாது. ஏனென்றால் சிருஷ்டியென்ற அடிப்படையில் ஒன்றுக்கு மற்றொன்று வேறல்ல. எனவே தோன்றிமறையும் பிரபஞ்சம் வெறும் ஸூறத்தாயிருப்பதால் அதை “ஹுரூர்” என்று குர்ஆன் கூறுவது பூரண உண்மையாகும்.

இந்த 96:1ம் ஆயத்தை நோக்கினால் தௌஹீதின் விபரம் அவ்வளவும் இவ்வாயத்தில் புதையுண்டிருப்பதை நாம்

காணலாம். தூதனுப்பியவனும் தானாய், அனுப்பப்பட்ட றசூலும்தானாய், தன்நப்ஸிடத்திலேயே றசூல்(ஸல்) வெளியானார்களென்று பல பெரியார்கள் விளக்கிய உண்மையை இந்த ஆயத்து நிரூபணம் செய்கிறது. றசூல்(ஸல்) அவர்கள் ஜிப்ரீல்(அலை) அவர்களை நேரில் கண்டார்கள் என்பது உண்மை. முஹம்மது(ஸல்) என்ற உடலுக்கும் ஜிப்ரில் (அலை) என்ற ஸுறத்துக்கும் வுஜுதுவாயிருந்தது றூஹுதானென்பதை உணர்ந்து கொண்டால் உண்மை தெளிவாய் விளங்கிவிடும்.

இன்ஸானிடத்தில் அவனுடைய பிராண நரம்பிலும் நான் சமீபமாயிருக்கிறேன் என்று இறைவன் கூறுவது உண்மை தானென்றால், முஹம்மதென்ற மனிதரின் றூஹுதான் அல்லாஹ் ஆகவும், அதன் ஓர் பரிசுத்ததத்துவம் ஜிப்ரீல் ஆகவும், முஹம்மதென்ற மனிதரின் உள்ளமும், நாவும், அல்லாவுடைய பாதின் லாஹிரான நாமங்களின் ஸுறத்தாகவும் தானிருக்கும். அனுப்பியதுயார்? யாரை? யாருக்கு? என்பதை ஆழமாய்ச் சிந்தனை செய்க. திரை நீங்கிய நிலையில் உள்ள றூஹு அல்லாஹ்வுடையதேயென்பதை உணர்ந்துகொள்க. திரையென்பது மனித அறிவின் மயக்கமேயன்றி வேறோர் திரைகிடைக்கவே கிடையாது. சாதாரண மனிதரின் வெளிப்படையில் காணும் காட்சியைவிடத் திரை நீங்கிய மனிதர் காணும் “முஸாஹிதா, றூயா” போன்ற காட்சிகள் கூட மிகமிகத் தெளிவானவை. றசூல்(ஸல்) அவர்கள் ஜிப்ரீல்(அலை) அவர்களைநேரில் கண்ணைக் கொண்டே கண்டார்களென்பது நிச்சயமான உண்மை எனினும், இங்கே ஓர்நுட்பமான ஞானவிபரம் இருக்கிறது. அவசியத்தினளவு மட்டும் இங்கே தருகிறேன். சாதாரண மனிதன் அவனுடைய முன்நிலையிலுள்ள, அவனை விட்டும் இடத்தால் வேறுபட்ட ஓர்பொருளை, அவனுடைய ஊடகங்களான புலன்களைக்கொண்டு அறிந்து, அதை உள்ளத்தில் பதிப்பதாக அறிகிறான். அதாவது வெளியிலுள்ள பொருட்களின் தோற்றமும் பிறதன்மைகளும்

புலன்கள் வாயிலாய் உள்ளத்தில் பதிக்கப்படுவதாய் மனிதன் நம்புகிறான். உலகக் கல்வி இதுவே. உலகிலுள்ள மிகப் பெரும்பாலான மக்களின் அனுபவத்தில் இது உண்மைதான். ஆனால் அன்பியாக்கள், அவ்லியாக்களான, திரைநீங்கிய தெளிந்த அறிவுடைய மக்கள், தங்கள் உள்ளத்திலுள்ள வைகளேயே ஊடகங்களான புலன்கள் மூலம் தம்மிலும் இடத்தால் வேறுபட்டவையாய், முன்னிலையில் காண்கிறார்கள். இதுவே பூரண உண்மையாகும். எனவே, றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் தத்துவமான ஜிப்ரீல்(அலை) அவர்களைத் தங்களை விட்டும் வேறாய் முன்னிலையில் கண்டுரையாடினார்களென்றால் இதில் அறிவைக் குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. என்னுடைய நப்ஸு அல்லது றூஹு என்பது நானாகவே இருப்பதுபோல, அல்லாஹ்வுடைய றசூல் என்பதும் அல்லாஹ்வென்ற அவனாகவேதான் இருக்கிறது. நாம் முன்புகாட்டிய 48:10ம் இலக்க ஆயத்தில் இன்னும் சில நுட்பங்களிருக்கின்றன.

முஹம்மது(ஸல்) என்ற சூறத்தில் தஜல்லியாகியிருந்த அல்லாஹ், அவனுடைய ஜிப்ரீல்(அலை) என்ற தத்துவத்தின் மூலம் முஹம்மதென்ற மனிதரின் கல்பில், றப்பின் ஓர் திருநாமத்தின் ஸுறத்தான நாவைக் கொண்டு ஓதுவீராக என்று அறிவிக்க, முஹம்மது(ஸல்) என்ற மனிதர் அவ்வசனத்தை ஓதினார்களென்பது ஆயத்தின் ஞானப்பொழிப்பாகும். றசூல் (ஸல்) அவர்கள் இன்ஸானியத்தென்ற நிலையையும் தஜல்லி யென்ற நிலைலையயும் ஒன்றையொன்று தடுக்காதவகையில் முழுமைபெற்றிருந்தகாரணத்தினால் ஜிப்ரீல்(அலை) அவர்களைப் புறக்கண்ணைக்கொண்டே கண்டிருக்கிறார்கள். ஆனால் முஹம்மதென்ற மனிதரில் வெளியான (நூர்) இறையறிவுதான். ஜிப்ரீல்(அலை) என்ற சிருஷ்டியாயும் முஹம்மதென்ற சிருஷ்டியாயும் தன்னிடத்தே தனக்காக காட்சியளித்திருக்கிறது. எனவே அனுப்பியவனும் அனுப்பபட்டதும் பெற்றுக்கொண்டதும் யாவும் நூர் என்ற இறையறிவாகவே இருக்கிறது. இப்போது

சிந்தனைசெய்து பாருங்கள். எந்த ஆயத்தை எடுத்துக் கொண்டாலும் அந்த ஆயத்து வெளிப்படையாகவோ சூசகமாகவோ தௌஹீதையே உணர்த்திக்கொண்டிருப்பதை நாம் காணலாம்.

நான் முன்பு வஹியைப்பற்றிக் கூறியவிபரங்களையும் இவ்வாயத்தில் சுட்டிக்காட்டிய சைக்கினைகளையும் நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால் இறைவனுக்கு எவ்வித இணைதுணையும் கிடையாதென்பதையும் எமது புலனறிவில் மயக்குண்டமயக்கமே சிருஷ்டியின் வாழ்வு என்பதையும் உங்களால் உணர்ந்து கொள்ளமுடியும்.

**குர்ஆன்: 55:26,27**

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۝ وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ
ذُو الْجَلَٰلِ وَالْإِكْرَامِ

**(பூமியிலுள்ள) யாவும் அழிந்து போகும் மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உமதிறைவன் மட்டுமே நிலைத்திருப்பான்.**

பூமிலுள்ள யாவும் அழியும். பூமி அழியாதா? அழியும். ஆம் அதுவும் சிருஷ்டிதானே! ஆனால் மனிதனிடத்தில் அழிவது றப்பிடத்தில் அழிவதில்லை. எனினும் இவ்வாயத்தில் பூமியென்பது கற்பனையாய் மனிதனால் உருவாக்கப்பட்ட கூற்றாகும். யாவும் என்பதில் பூமியும் அடங்கிவிடுவதால் பூமியிலுள்ள யாவும் என்று கூறியிருப்பது எமது முபஸ்ஸிரீன்களின் மருட்சியாகும். அல்லாஹ் மட்டும் மிஞ்சுவானென்பது வுஜுதுவைச் சுட்டியதாகும். ஆகவே அவன் மட்டுந்தான் இருக்கிறான். எமதறிவில் தோன்றி மறையும் பிரபஞ்சம் அவனிடத்தில் என்றுமிருந்தது போலவே

இருப்பதால் அவனிடத்தில் புதிதாய் ஆவதும் அழிவதும் இல்லை. அவனுடைய முகம்(வஜ்ஹு)இருந்து கொண்டே யிருக்கும். எனவே யாவும் அழிந்துவிடும் என்பதில் ஓர் நுட்பம் விளக்கப்படுகிறது. அதாவது நீங்கள் சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாத தனிவுஜூதுகள் என்று நம்பியிருப்பவை அழிந்தவிடும். (உங்களுடைய பாதிலான, பொய்யான கற்பனை அழிந்துவிடும்) என்பதே அந்த நுட்பம். அல்லாஹ்வுடைய வஜ்ஹு மட்டுமே இருக்குமென்பதில் தாத்து, ஸிபாத்து, அஸ்மாவையன்றிப் பிறிதொன்றில்லையென்பது விளக்கப்பட்டிருக்கிறது. பொய்குத்தான் அழிவுண்டு. உண்மைக்கு மறைவுண்டேயன்றி அழிவில்லை. மறைவும் மனிதனிடத்தில்தான்.

எனவே, தோன்றி மறையும் பிரபஞ்சம் அவனுடைய அஸ்மாக்களின் தொகுப்பான ஸூறத்தாகவே இருக்கிறது.

**குர்ஆன்: 2:165**

وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا
يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِ ۭ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا
لِّلّٰهِ ۭ وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْٓا اِذْ يَرَوْنَ الْعَذَابَ ۙ اَنَّ
الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ ﴿١٦٥﴾

**எல்லாவல்லமையும்(குவ்வத்) அல்லாஹ்வுக்கே உரியது(சர்வ சக்தியும் அல்லாஹ்வுக்கே உரியது)**

உலகில் வெளியாகும் எந்த ஓர்சக்தியும் அல்லாஹ்வின் சக்தியைவிட்டும் வேறானதேயல்ல. சக்தி சிருஷ்யுலகில் வெளியாக ஸூறத் அவசியம். சூறத்(தோற்றம்) என்பது

பிரபஞ்சமாயிருக்கிறது. சூட்சும உலகில் ஸூறத்தில்லையென்று கொள்ள வேண்டாம். சிருஷ்டி எவ்வுலகிலிருந்தாலும் அச்சிருஷ்டி க்குமட்டுமின்றி அதன் குணங்களுக்கும் கூட ஸூறத்தென்ற தோற்றம் உண்டு. ஆயினும் நாம் பெரும்பாலும் காண்பதில்லை. இப்பிரபஞ்சம் என்ற ஸூறத்தில் வெளியாகும் சக்தி, ஸூறத்துக் குரியவன் எவனோ அவனுக்குரியதுதான். அந்த சக்தியையன்றி வேறு சக்தி இல்லாதிருப்பதால் அதை எதிர்க்கவோ, தாக்கவோ வேறோர் எதிரிடை கிடையாது. எனவே, அந்தச்சக்தி எபபோதும் இருந்ததுபோலவே தரிபாடாய் இருந்து கொண்டிருக்கிறது.

சக்தி ஏகமானது அதில் நல்லசக்தி, தீயசக்தி கிடையாது. சக்தியை நல்லதாயும் தீயதாயும் பயன்படுத்துவது, பகுப்பது மனிதரின் சுயநிர்ணய உரிமையைப் பொறுத்த ஓர் விஷயம். நெருப்பைக் கொண்டு நாம் நல்லபலனையும் பெறலாம், தீயபலனையும் பெறலாம். நெருப்பைப்பயன்படுத்துவது எமது சுயநிர்ணய உரிமையைப் பொறுத்ததாகும். இறைசக்தி ஏகமானது, கலப்பற்றது. பரிசுத்தமானது. இவ்வாயத்தின்படி சர்வபிரபஞ்சத்தில் வெளியாகும் சர்வசக்தியும், அதாவது சர்வசிருஷ்டிகளிலிருந்தும் வெளியாகும் சர்வசக்திகளும் (உடன்பாடும்+எதிர்மறையும், மனிதனும்+ ஸைத்தானும்) அல்லாஹ்வுடையதுதானென்றால் பிரபஞ்சம் யாருடைய ஸூறத்தாயிருக்கும்? என் சக்தி என் ஸூறத்தின், குணத்தின், செயலின் மூலம்தான் வெளியாகவேண்டும். எனக்கு ஸூறத்தில்லையானால் என் சக்தியை எவராலும் கண்டறிய முடியாது. என் குணங்களுக்கும் செயலுக்கும் கூட ஏதோ ஓர்வகையான ஸூறத்தில்லாவிட்டால் அதைப்பிறரால் உணரவே முடியாது. எனவே, எச்சிருஷ்டியில் எவ்வித சக்தி வெளியானாலும் அது றப்புடைய சக்தியேயன்றிவேறில்லை. இந்த சக்தியைத்தான் பண்பு, குணம், ஸிபத்தென்றெல்லாம் கூறுகிறோம்.பிரிபடாத ஒன்றை நாம் விளங்கிக்கொள்வதற்காகவே தாத்து, ஸிபாத்து, அஸ்மா என்று பிரித்துக் கூறுகிறோம்.

இப்போது யோசித்துப்பாருங்கள், அல்லாஹ் என்ற வுஜூதும், அதன்ஸிபத்தென்ற குணமும், அஸ்மா என்ற ஸூறத்தும் ஏகமாய், வேறுபாடற்றதாய், பிரிபடாததாய் இருப்பதை நாம் உணரலாம். நெருப்பென்றசொல்லால் குறிப்பிடப்படும் வுஜூதும் அதன் ஸூறத்தும் அதன் குணமான உஷ்ணமும் வெவ்வேறில்லாமல் ஏகமாய்த்தான் இருக்கிறது. ஸூறத்தும் குணமும் எமது புலன்களில் அமைகின்றன. எனினும் ஸூறத்துக்கும் குணத்துக்கும் வுஜூதாய் உடனிருக்கும் தாத்தை நாம் காண்பதோ தொட்டறிவதோ இல்லை. அது மிகமிகப் பரிசுத்தமானதாய்ச் சிருஷ்டியின் அறிவுவட்டத்தைக் கடந்ததாய், ஏகமாய், வியாபகமாய், நிலையாய்த் தரிபட்டிருக்கிறது.

விழிப்பில், அனுபவத்தில் தென்படும் உலகு ஓர் மயக்கு என்பதை ஏற்க முடியாதென்றால் அது விதண்டாவாதமாகும். கனவின் போது நாம் கண்ட கனவுலகு உண்மைதான். அக்கனவைக் குறைந்த தத்துவங்களுடன் குறுகிய நேரம் காணுகிறோம். கூடிய தத்துவங்களோடு சுமார் 100 வருடங்கள் துன்யாவைக் காணுகிறோம். இறப்பிற்கு பிறகு (ஆகிறாவை) மறுமையை இன்னும் தெளிவாய் நீண்ட காலம் காணப்போகிறோம். இறை சன்னிதானத்தையடைந்த பிறகுதான் உண்மையான சொந்த அனுபவம் கிடைக்கப்போகிறது. மத்திய அறிவோடு மத்திய உலகிலிருந்து இவ்வுண்மையை உணரச் செய்வதே தௌஹீதென்பது. எனவே முன் காட்டிய “ஓதுவீராக” என்ற 96:1ம் வசனம் அனுப்பியவனும், அனுப்பட்டதும், ஏற்றுக்கொண்ட, ஏற்றுக்கொள்ளாத சிருஷ்டியும் வெவ்வேறான தனித்தனி வுஜூதுகளல்ல என்பதை விளக்கித் தௌஹீதையே உறுதிப்படுத்துகிறது. அல்லாஹ்வின் சக்தியை விட்டும் வேவ்வேறான தனித் தனிச் சக்தி சிருஷ்டிகளுக்குண்டென்று நம்புவது மனித செயல்களில் ஷிர்க்கேற்படக் காரணமாயிருக்கிறது. அவனையன்றி பிறிதொன்றில்லாம லிருப்பதாலேயே அவன் சர்வ சக்தியுமுடையவனென்றாகிறான்.

# 33

**குர்ஆனை விளங்கும் 2வது வழி:-**

# ஹதீஸைக் கொண்டு குர்ஆனை விளங்குதல்

**ஹதீஸ்:-**

*திராட்சைப்பழத்தைக் கண்ணியம் வாய்ந்ததென்று கூறாதீர்கள், ஐயகோ! காலத்தின் கேடேயென்றும் கூறாதீர்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ்வே காலமாகும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர் - அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம் -புஹாரி, முஸ்லிம், அபூதாவூது.**

**ஹதீஸ்:-**

*நீங்கள் காலத்தைத் திட்டவேண்டாம். திடமாகக் காலமாகிறது அல்லாஹ்தானாகவே இருக்கிறது. என்று றசூல்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவிப்பவர்:-அப்பாஸ்(றலி)**
**ஆதாரம்:- தாவீலாத் துன் நஜ்மியா. கலிமத்துல்ஹக்கி.**

குர்ஆனைக் கொண்டு காலம், அல்லாஹ் என்ற வுஜூதேதான் என்று நாம் விளங்கிக்கொண்டது சரியான உண்மைதானென்பதை இவ்விதமான பல ஹதீஸுகள் நிரூபணம் செய்துகொண்டிருக்கின்றன. ஆயினும் இரண்டை மட்டுமே இங்கே தந்துள்ளேன். இவ்வித ஹதீஸுகள் இபாரத்தென்ற வெளிச்சப்தப்

பிரமாணத்தினால் காலம் அல்லாஹ்வேதானென்று அறிவிக்கின்றன. இடம் என்பது இல்லையானால் காலத்தை எம்மால் கணிக்க முடியாது. எனவே, “தலாலத்துன்னஸ்” என்ற கருத்துப்பிரமாணத்தினால் இடமும் இடத்திலுள்ள யாவும் அல்லாஹ்வின் வேறல்ல, அல்லாஹ்வேதான் என்றறிவிக்கின்றன. பௌதீகம், சூட்சுமம் என்பவற்றை நோக்கினால் “இஸாரத்”, “இஹ்திலாவ்” என்பவையும் இதை நிரூபிக்கின்றன.

**ஹதீஸ்:-**

*நாயகமே சிருஷ்டிகளைப்படைப்பதற்கு முன் அல்லாஹ் எங்கிருந்தான் என்று நான் கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அமாவில்(அவனுடன் ஒன்றுமில்லாதநிலையில்) இருந்தான். அவனுக்குக்கீழே காற்றுமில்லை மேலே காற்றுமில்லை. அன்றி, அவன் தன்அரியணையை நீரின்மீது படைத்தான் என்று கூறினார்கள்.*

**அறிவிப்பவர்:-அபூறஜீனில் உகைலிய்யி(றலி)**
**ஆதாரம்:- திர்மிதி**

மேலும் கீழும் காற்று முதலிய எதுவுமே அவனுனிடமில்லாத ஏகனாயிருந்தான் அல்லாஹ் என்பதை இந்த ஹதீஸ் நிருபணஞ்செய்கிறது. “அமா” என்றால் அவனுடன் ஒன்றுமில்லையென்பதே அதன் அர்த்தம் என்பதற்கு அநேக ஆதாரங்களைத்தரலாம். “அமா” என்பது மனித அறிவிலமையாத ஒரு நிலையென்று அப்பாஸ்(றலி), உமர்(றலி), அபூஹுறைறா(றலி) போன்றோரால் விளக்கப்பட்ட பல சான்றுகளுள்ளன.

**ஹதீஸ்:-**

*நான் அறியப்படாத மறைந்த பொக்கிஷமாயிருந்தேன். அப்போது நான் அறியப்படவேண்டுமென்று நாடிச் சிருஷ்டிகளைப்படைத்தேன். சிருஷ்டிகள் என்னைக்*

*கொண்டே என்னை அறிந்து கொண்டன என்று அல்லாஹ் கூறியதாக றஸூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**ஹதீதுல் குத்ஸி**

**ஆதாரம்:- தாவீலாத்துன் நஜ்மிய்யா ஈகாலுல்ஹிமம்பீஸர்ஹிகம்**

இன்ஸையும் ஜின்னையும் என்னை(அவை) அறிவதற்காக(அறிதலென்ற என்செயல் வெளியாவதற்காக)ப் படைத்தேன் என்ற குர்ஆன் 51:56ம் ஆயத்துக்கு இந்த ஹதீஸ் வியாக்கியானமாய் அமைந்திருக்கிறது. பெரும்பாலான தப்ஸீர்களில் இவ்வாயத்து இருட்டடிப்புச் செய்யப்பட்டு, வணங்குவதற்காகப் படைத்தேன் என்று விளக்கம்தரப்பட்டுள்ளது. இவ்வித விளக்கம் அல்லாஹ் தேவையுடையவன் என்றறிவிப்பதால் இது ஷிர்க்காக அமைகின்றதென்பதை முபஸ்ஸிரீன்களில் பலர் உணர்ந்து கொள்ளவில்லை. அல்லாஹ் தேவையுடையவன் என்றால் அவனுடன் பிறவுமுண்டு என்றாவதால் அது சுத்தமான ஷிர்க்காகவே அமைகிறது. அறியப்பட நாடினேன் என்பது ஷிர்க்காக அமையாது. புதிதாய் அறிவது சிருஷ்டியேயன்றி இறைவனல்ல. அவன் என்றும் எல்லாமறிந்தவன். இவ்விபரம் எமது முதல் நூலில் சிருஷ்டிகளின் உண்மையென்ற தலைப்பில் தெளிவாய் விளக்கப் பட்டிருப்பதால் அதை நான் இங்கு விளக்க வேண்டியதில்லை. (இவ்விஷயத்துக்கு இவ்வளவையுமே போதுமாக்குவோம்.)

**ஹதீஸ்**:-

*மறுமை நாளில் அல்லாஹ் ஆதம்(அலை) அவர்களின் மகனே! நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன் அப்போது நீர் என்னை நலன் விசாரிக்கவில்லையே என்று கேட்பான். அதற்கு அவன் என் இறைவனே! உன்னை நான் எப்படி நலன் விசாரிப்பது? நீயோ அகிலங்களையெல்லாம் படைத்து உணவளித்துப் பரிபாலிப்பவனாயிற்றே! என்று கூறுவான். (அதற்கு) அவன் நிச்சயமாக, என் அடியாராகிய இன்னார் நோய்வாய்ப்பட்டார் என்பதை நீர் அறிய மாட்டீரா? ஆனால், நீர் அவரை நலன் விசாரிக்கவில்லை.*

*நீர் அவரை நலன் விசாரித்திருந்தால், நிச்சயமாக நீர் என்னை அவரிடம் பெற்றுக்கொண்டிருப்பீர் என்பதை அறியமாட்டீரோ? என்றும், ஆதம்(அலை) அவர்களின் மகனே! நான் உம்மிடம் உணவளிக்கக்கோரினேன். ஆனால், நீர் எனக்கு உணவளிக்கவில்லையே! என்றும் கேட்பான். அதற்கு அம்மனிதன், இறைவனே! நான் உனக்கு எவ்விதம் உணவளிப்பது? நீயோ அகிலங்களைப் படைத்து உணவளிப்பவனாயிற்றே! என்று கூறுவான்.(அதற்கு) இறைவன் நிச்சயமாக என்னுடைய அடியாரான இன்னார் உம்மிடம் உணவளிக்கக்கோரினார். ஆனால், நீர் அவருக்கு உணவளிக்கவில்லை. நீர் அவருக்கு உணவளித்திருப்பீரானால் நிச்சயமாக அதனை(பயனை) என்னிடம் பெற்றுக்கொண்டிருப்பீர் என்பதை அறியீரோ? என்றுகூறி ஆதம்(அலை) அவர்களின் மகனே!நான் உம்மிடம் நீர் தருமாறு வேண்டினேன். எனினும் நீர், எனக்கு நீர் தந்தீரில்லையே! என்றும் கேட்பான். அதற்கு அம்மனிதன். இறைவா! எவ்விதம் உனக்கு நீர் புகட்டுவது? நீயோ உலகங்களைப் படைத்து பரிபாலித்து உணவளிப்பவனாயிற்றே! என்று கூறுவான். அதற்கு அவன் (இறைவன்), நிச்சயமாக என்னுடைய அடியாரான இன்னார் உம்மிடம் நீர் தருமாறு வேண்டினார். நீர் கொடுக்கவில்லை. அவருக்கு நீர், நீர் கொடுத்திருந்தால் அதனை நிச்சயமாக என்னிடம் பெற்றிருப்பீர் என்பதை அறிந்துகொள்ளும் என்று கூறுவானென நபிகள்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர் :-அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்:- முஸ்லீம்**

சர்வ சிருஷ்டிகளும் இறைவனின் ஸூறத்தே என்பதற்கு இவ்வாதாரமே போதுமானதாகும். இந்த ஹதீஸில் அனேக ஞானநுட்பங்கள் மறைந்துள்ளன. சிந்தித்துத்தெளிக.

*ஹதீஸ்:-*

*முஹம்மதுடைய உயிர் யார்வசமிருக்கிறதோ அந்த*

*றப்பின்மேல் ஆணையாக, நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தைக் கயிற்றில் கட்டிக் கீழ்ப்பூமியாகிய பாதாளத்துக்கு இறக்குவீர்களானால் அது நிச்சயமாக அல்லாஹ்வின்மேல் விழும் என்று கூறி அதன்பின் ஆதியானவன், அந்தமானவன், தோற்றுபவன், மறைந்தவன், எல்லாமறிந்தவன் என்ற 57:3ம் குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.*

**அறிவிப்பவர்:-அபூஹுறைறா(றலி)**

**ஆதாரம்:- கரீதத்துல்அஜாயிப். கலிமத்துல்ஹக்கி**

இந்த ஹதீஸை லபீது(றலி) அவர்களும் அறிவித்துள்ளார்கள். தாவீலாத்துன் நஜ்மியா என்ற நூலிலும் இதைக் காணலாம். இந்த ஹதீஸ் நீர், நிலம், வாளி, கயிறு, அள்ளும் மனிதன், வானம், மலை, கடல் யாவும் சர்வ சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் வேறல்ல அல்லாஹ்வேதான் என்று நிரூபணஞ்செய்கிறது. கலிமாவுக்கு அல்லாஹ் தவிர ஒன்றுமேயில்லையென்று குர்ஆனைக்கொண்டு நாம் கண்ட கருத்தே சரியானதென்பதை இபாரத், தலாலத், இஸாரத், இஹ்திலாவ் ஆகிய(முஹ்கமுப்பிராணப்படி) நான்கு உறுதியான பிரமாணங்களின்படியும் நிரூபணஞ் செய்கிறது. இவ்விஷயத்தை விளக்க இன்னும் பல ஹதீஸுகளை ஆதாரம் தரலாம். சுருக்கும் நோக்கமாக மேலே தந்த ஹதீஸுகளை மட்டும் போதுமாக்குவோம்.

முஹம்மதுடைய உயிர் யார்வசமிருக்கிறதோ அந்த றப்பின்மேல் ஆணையாக என்ற வசனத்தை நோக்குங்கள். எனது றூஹு என்னுடன் என்வசம்தானே இருக்கிறது! அப்படியானால் முஹம்மது(ஸல்) அவர்களுடைய றூஹு யார் வசமிருக்கிறது? றூஹு பிரிபடக்கூடியதல்ல. முஹம்மது(ஸல்) என்ற ஸூறத் அல்லாஹ்வுடையதேயென்றால் அவர்களின் கையும் அல்லாஹ்வுடையதுதானே! அவர்களுடைய பிராண நரம்பைவிடச் சமீபமாய் இருந்த றூஹு, அல்லாஹ்வுடையது

தானென்றால் உடலும் உறுப்புகளுங்கூட அல்லாஹ்வுடையதுதானே! உண்மையான தெளிந்த அறிவோடு நோக்கினால் காலம் என்ற வுஜூதில், நீரியல்வட்டம் போல் தோன்றி மறைவதே சிருஷ்டி(பிரபஞ்சம்) என்பது.

இப்னு அப்பாஸ்(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஓர் ஹதீஸில் அழகிய உருவில் என்னிறைவன் என்னிடம் வந்து முஹம்மதே என்று கூறினான்............ என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஹதீஸ் திர்மிதியில் இடம் பெறுகிறது. இந்த ஹதீஸில் அல்லாஹ்வுக்கு உருவம் உண்டென்று கூறப்பட்டது அவனை வர்ணிப்பதற்காகவென்று வியாக்கியானிகள் மழுப்பி வைத்திருக்கிறார்கள். உருவம், ஜடம், ஸூறத் என்பவை எவை? என்பதைப் புரிந்துகொள்ளாமைதான் இவ்வித மழுப்பல் வியாக்கியானங்களுக்கு காரணமாய் இருக்கிறது.

# 34

## காலவியல் வட்டம்

உலகின் சர்வபொருட்களிலிருந்தும் நீராவியாய் வெளியேறும் நீர் வளியை அடைந்து முகிலாகி, குளிர்ச்சியடைந்து, ஒடுங்கி, மழையாகிப் பொழிந்து மீண்டும் உலகையே வந்தடைவது பௌதீக "நீரியல் வட்டம்" ஆகும். இதேபோல் காலம் என்ற வுஜூதிலிருந்து தோன்றியபிரபஞ்சம் (சிருஷ்டி), காலம் என்ற வுஜூதிலேயே வாழ்ந்து மீண்டும் அந்தக் காலம் என்ற வுஜூதிலேயே மறைதலை நாம் "காலவியல் வட்டம்" என்று கூறலாம். பௌதீக நீரியல் வட்டத்தை நாம் இந்தக் காலவியல் வட்டத்துடன் ஒப்பிட்டு நோக்கியது விளங்கித் தெளிவதற்காகவேயன்றி இரண்டும் ஒரே வகையானதென்று கூறுவதற்காக அல்ல. பௌதீக நீரியல் வட்டம், காரணகாரியப் பொருத்தத் தொடர்புக்குட்பட்டதாகும். நாம் கூறும் காலவியல் வட்டம் காரணகாரிய பொருத்தத் தொடர்புக்கு அப்பாற்பட்டதும் உட்பட்டதுமாகும். மன்கூல், மஹ்கூல் ஆகிய பிரமாணங்களைக் கொண்டு இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளமுடியும். ஆயினும் அனுபவமின்றி அறிவிலமைவது கடினந்தான். நீரியல்வட்டம் மறுபிறவியை நோக்கியது. காலவியல்வட்டம் மறுபிறவியை மறுப்பதாயும் வுஜூதை நோக்கியதாயுமிருக்கிறது. காலவியல் வட்டத்தில் முக்காலம் கிடையாது. உள்ளது ஒரே காலந்தான். (நுட்பமாயுணர்க)

# 35

## குர்ஆனை விளங்கும் 3வது வழி:~ அரபு இலக்கிய வழக்குக்கமைவாய் குர்ஆனை விளங்குதல்

இந்தமுறை பெரும்பாலும் முத்தஸாபிஹாத்தென்ற பலகருத்துடைய வசனங்களுக்கே கையாளப்படுகிறது. முஹ்கமுவான ஒரே கருத்துடைய வசனங்களுக்கு இந்த முறை கையாளப்படுவதில்லை. உதாரணமாக பல கருத்துடைய ஓர் ஆயத்தில், இறைவனுடைய கை, முகம் என்ற சொற்கள் இடம்பெற்றால் எமது பாஸை வழக்குக்கமைவாய் கைக்கு அல்லாஹ்வின் தத்துவமென்றோ அல்லது எமக்கவசியமான வேறு பொருள்கொண்டோ விளங்கலாம். ஓர் அரசன் அவனுடைய நாட்டை கையில் வைத்திருக்கிறான் என்றால் அவனுடைய ஆட்சியை மீறாமல் அடக்கி வைத்திருக்கிறான் என்று பொருள் கொள்வோம். இங்கே கை என்பதற்கு வலிமை அல்லது வல்லமை என்று நாம் கொள்ளலாம். இதுதான் பாஸை வழக்காகும்.ஆனால் கை என்ற சொல் முஹ்கமுவான ஒரே கருத்துடைய வசனத்தில் இடம்பெற்றால் அதற்கு வேறு பொருள் கிடையாது. பாஸை வழக்குப்படி பொருள் கொள்வது அதற்குப் பொருந்தாது. முஹ்கமுவில் இடம்பெறும் கை, கையேதான். முகம், முகமேதான். எனவே ஒரே கருத்துடைய முஹ்கமு வசனத்துக்கு எம்மிஷ்டம்போல் பொருள்கொள்ள முடியாது. பிற முஹ்கமுவசனங்களை அடிப்படையாய்க் கொண்டே பொருள்கணிக்க வேண்டும். ஆயினும் கலிமத்துத்தையிபா முஹ்கமுவாயிருந்தும் பாஷைவழக்குக்கும் இலக்கண

வழக்குக்கும் அமைவாகவே இறைவன் அருளியுள்ளான். எப்படியென்றால்.

கலிமாவிலுள்ள இலாஹுு என்ற சொல்லுக்கு மக்கள் இலக்கியப் பாஷை வழக்கின்படி பொருள் கொண்டதனால்தான் அதைத்தெளிவாய் விளங்கியறிந்து எதிர்த்திருக்கிறார்கள். அவர்களுடைய இலக்கியப் பாஷை வழக்கின் அடிப்படையில் அவர்களால் வணங்கப்பட்டுக்கொண்டிருந்த பௌதீக சூட்சும சிருஷ்டிகளையே அவர்கள் இலாஹுு(ஆலிஹத்) என்றழைப்பது அவர்களுடைய பாஷை வழக்கம். 37:36 போன்ற ஆயத்துக்கள் இதற்கு ஆதாரமாயிருக்கின்றன. இந்தப் பாஷை வழக்கை அடிப்படையாய்க் கொண்டுதான் கலிமாவில் இலாஹுு என்ற சொல்லை ஒருமையில் இறைவன் பாவித்திருக்கிறான். இச்சொல் பாஷை வழக்கின்படியும் இலாஹுு என்பது ஒரே கருத்துடைய முஹ்கமுதான். கலிமா முஹ்கமு என்பதை நாமறிந்துள்ளோம். முஹ்கமு வசனத்தில் இடம்பெறும் சொல் முஹ்கமுவாகத் தானிருக்கும் முத்தஸாபிஹாத்தாய் (பலகருத்துடையதாய்) இருக்கவே இருக்காது. இருக்கமுடியாது. எனவே கலிமாவிலுள்ள இலாஹுு என்ற சொல்லுக்கு அல்லாஹ்வும் றஸுல்மார்களும் ஒப்புக்கொண்ட பொருள், சிருஷ்டியென்பதேயாகும். முஷ்ரிக்கீன்கள் தங்களால் வணங்கப்பட்ட இலாஹுுவையே கலிமாவில் கூறப்பட்ட இலாஹுு என்ற சொல் சுட்டுவதைத் தெளிவாய் அறிந்ததனால்தான் எதிர்த்தார்கள். இது சரிதானென்றால் சிருஷ்டி என்று பொருள்படும் அந்த சொல் இபாரத்(சத்தம்), தலாலத்(கருத்து), இஸாறத்(சைக்கினை அல்லது குறிப்பு), இஹ்திலாவ்(உவமானம்) ஆகிய நான்கு பிரமாணங்களினாலும் ஒரேயொரு பொருளையே கொடுக்க வேண்டும். அச்சொல் அப்படிக்கொடுக்கக் கூடியதாய் அமைந்துள்ளதா இல்லையாயென்பதை ஆராய்ந்து பார்ப்போம்.(சுருக்கமாய்த் தரப்படுகிறது. நுட்பமாய் நோக்குக)

**1வது:- இபாரத்**

இலாஹுு என்பது மனிதனால் வணங்கப்பட்ட சிருஷ்யென்

பதைத்தான் இபாரத்தென்ற வெளிச்சத்தம் விளக்குகிறது. அன்றும் இன்றும் அப்படித்தான் நம்புகின்றான் மனிதன். இல்லாவிட்டால் இச்சொல்லில் எதிர்ப்புக்காட்டியிருக்க மாட்டான்.

**2வது:- தலாலத்**

(வணங்கப்பட்ட) சிருஷ்டி கல் என்றால் கல்லையெடுத்த மலை, பூமி யாவும் இலாஹுதானென்றாகும். உலோகம் அல்லது வேறு எப்பொருளை வேண்டுமானாலும் கொண்டு நோக்கலாம். பூமியாகிய சிருஷ்டி அல்லாஹ்வின் வேறல்ல என்றால் அதற்கு எதிரிடையான வானமும் அவனல்லாததல்ல என்றாகும். மனிதன் தன் புலனறிவாலறியும் அத்தனை சிருஷ்டிகளும் இலாஹுகள்தான். இது குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்பு.

**3வது:- இஸாறத்**

தலாலத்தின்படி தோன்றும் சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ்வின் வேறல்ல என்றால் தோன்றாத(மலக்கு, ஜின் போன்ற) சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் வேறல்ல என்றாகும். தோன்றுவதும் தோன்றாததும் சிருஷ்டிதானே! தோற்றமும் தோற்றமின்மையும் கட்டுப்பாடாயிருக்கின்றன. மனித அறிவுக்குட் பட்டவையாயிருக்கின்றன. அல்லாஹ் கட்டுப்பாட்டில் அமையாத பரிசுத்தன்.

**4வது:- இஹ்திலாவ்**

இஸாறத்தின்படி தோன்றுவது தோன்றாதது யாவும் (அறிவிலமைந்தவை யாவும்) அல்லாஹ்தானென்றால் எம்மறிவிலமையாதவையும் அல்லாஹ்தானென்றாகும். (அல்லாஹ் அறவிலமையமாட்டான் என்பது தெளிவாக்கப் படுகிறது.) இந்நான்கு பிரமாணங்களின்படியும் இலாஹு என்ற சொல் சிருஷ்டியை நோக்கியதே யென்பதை அறிகின்றோம்.

இப்போது கலிமாவிலுள்ள இல்லல்லாஹ் என்ற சொல் அல்லாஹ்வைத் தவிர என்றுணர்த்துவதால் வணங்கப்படுகிற,

வணங்கப்படாத, புலன்களுக்கெட்டுகிற சிருஷ்டியான பௌதீகவுலகும், புலன்களுக்கெட்டாத சிருஷ்டியான சூட்சும உலகும், அறிவுக்கெட்டாமலிருந்து கொண்டிருக்கிற றப்பும் அல்லாஹ்வாகவேயன்றி இல்லையென்று உணர்த்துகிறது. எனவே லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவிலுள்ள இலாஹுˇ என்ற சொல் பொதுப் பெயர்ச்சொல்லாகவும் முஹ்கமுவுவான ஒரே கருத்துடையதாகவும் உம்மிகளின் இலக்கிய பாஷை வழக்குக்கு ஒத்ததாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இலாஹுˇ என்ற சொல்லுக்கு சிருஷ்டியென்ற வகையிலுள்ள எப்பொருளைக் கருத்தாக எடுத்துக்கொண்டாலும் அல்லாஹ்வையன்றி ஒன்றுமேயில்லை இருப்பது அவன் மட்டுந்தான் என்பதைத்தான் கலிமா உறுதிப்படுத்துகிறது. இதைவிட இலாஹுˇ என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய நாயன் என்று பொருள் கொண்டால் அது தௌஹீதுக்கு முரணான ஷிர்க்கையே உறுதிப்படுத்தும். இவ்விபரம் எமது முதல் நூற்களில் தரப்பட்டுள்ளது. இலாஹுˇ என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன் என்று வலிந்துரை கொள்தல் குர்ஆன் ஹதீஸ், (இஜ்மாஉ, கியாஸ்) சிந்திக்கும் அறிவென்ற ம.்.கூல்(யுக்தி), வேத ஆதாரமாகிய மன்கூல்(சுருதி) ஆகிய அனைத்துப்பிரமாணங்களுக்கும் நேர்முரணான பித்அத் ஆகும். இஸ்லாமிய சமூகம் ஆத்மீகத்துறையில் சிந்திக்கும் ஆற்றலை இழந்திருப்பதற்குரிய மிகமுக்கிய காரணம் கலிமாவின் உண்மை நேர்முரனாய் புரட்டப்பட்டிருப்பதே. புரட்டப்படாமலிருந்தால் ஹிஜ்ரி 1ம் 2ம் 3ம் நூற்றாண்டுகளிலேயே முஸ்லீம்கள் செவ்வாய்க்கிரகத்தில் றெஸ்ட்ஹவுஸ் ஒன்றை அமைத்திருப்பார்கள். கலிமா மூடப்பட்டதோடு குர்ஆனிலிருந்து பெறவேண்டிய அபாரமான, ஆதாரபூர்வமான கல்விகளெல்லாம் மூடப்பட்டு விட்டன. குர்ஆனையும் இன்றைய விஞ்ஞானத்தையும் ஒப்பிட்டு நோக்கினால் விஞ்ஞானம் அறிவுத்துறையில் தவழும் குழந்தையென்று கூறவேண்டியுள்ளது. இன்ஷா அல்லாஹ் சமீபத்தில் நிரூபித்துக் காட்டுவேன். பொறுமையடைக.

# 36

# கலிமாவின் உண்மையான பொருள் என்ன?

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமத்துத்தையிபாவில் உள்ள சொற்கள் நான்குமட்டும்தான். அவையாவன:

"லா" "இலாஹு" "இல்லா" "அல்லாஹ்" என்பவை யாகும். இச்சொற்களைத் தனித்தனியாயும் தொகுப்பாயும் ஆராய்ந்து பார்ப்போம்.

**1வது:-** "லா"

"லா" என்ற இச்சொல்லின் உண்மையான பொருள் இல்லை என்பதே. (லா) இல்லையென்ற இச்சொல் தன்மை,முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களையும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்களையும் உயர்திணை, அஃறிணை என்ற இருதிணைகளையும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால் என்ற ஐம்பால்களையும் ஒரே முறையில் இல்லையென்று மறுத்துரைக்கும் ஓர் எதிர்மறைச் சொல்லாகும். (லா) இல்லையென்ற இச்சொல்லைத் தனிமையில் நோக்கும்போது எது இல்லை? என்ற ஓர் கேள்வியை இச்சொல் எழுப்புவதாய் இருக்கிறது. இக்கேள்விக்கு விடையளிக்கும் நோக்கமாகவே "இலாஹு" என்ற சொல் கலிமாவில் தரப்பட்டிருக்கிறது. எனவே இலாஹு என்றால் என்ன? என்பதை இப்போது நோக்குவோம்.

**2வது:- "இலாஹு"**

இலாஹு என்ற இந்தச் சொல் குர்ஆனில் சுமார் 140க்கும் அதிகமான இடங்களில் பாவிக்கப்பட்டிருக்கிறது. சில ஆயத்துக்களில் மனிதனால் உருவாக்கி வணங்கப்பட்ட விக்கிரகங்களுக்குத் தனிப்பெயர்ச் சொல்லாயும் வேறு சில ஆயத்துக்களில் அப்து றப்புவாகிய இரண்டையும் இணைக்கும் பொதுப்பெயர்ச் சொல்லாகவும் பாவிக்கப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான ஆயத்துக்கள் இதை நிரூபிக்கின்றன. 38:5, 6,7 போன்ற ஆயத்துக்களை ஆதாரம் தரலாம். எனவே கலிமாவில் பாவிக்கப்பட்ட இலாஹு என்ற சொல்லுக்கு அல்லாஹ்வும் நபிமார்களும் என்ன பொருள் கொண்டிருந்தார் களென்பதை நாம் அறிய வேண்டும். றசூல்(ஸல்) அவர்களின் மறைவுக்குச் சிறிது காலத்துக்குப் பின்பிருந்து இற்றைவரையிலுமுள்ள சர்வ உலமாக்களையும் நோக்கினால் இந்த இலாஹு என்ற சொல்லில் உலமாக்கள் மட்டுமின்றி உலகமுஸ்லிம்கள் யாவருமே இருபிரிவாய் அமைகிறார்கள். இவர்களில் ஒரு சாரார் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன், வணக்கத்துக்குத் தகுதியான நாயன், வணக்கத்துக்குரிய றப்பு, என்றெல்லாம் பொருள் கொண்டிருக்கிறார்கள். சுருங்கக்கூறினால் இலாஹு என்ற சொல் இறைவனை அல்லது அல்லாஹ் அல்லது கடவுளை நோக்கியே கூறப்பட்டதென்று நம்புகிறார்கள். பிரபலம் வாய்ந்த சிலர் இலாஹு என்றால் கோட், கடவுள் என்று மட்டும் கொண்டிருக்கிறார்கள். வணக்கத்துக்குரிய என்ற வசனத்தை இவர்கள் நீக்கிவிட்டிருக்கிறார்கள். கலிமத்துத்தையிபா ஷிர்க்கை நீக்க அருளப்பட்டதேயன்றி வணக்கத்தை வலியுறுத்தவோ ஷிர்க்கை உறுதிப்படுத்தவோ அருளப்பட்டதல்ல.

உலமாக்களில் இன்னும் ஒருசாரார்(வலிமார்கள்) கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் வணங்கப்பட்ட விக்கிரகங்களான சிருஷ்டிகளை நோக்கியே கூறப்பட்டதென்று கூறுகிறார்கள். இவ்விரு கூட்டத்தாரின் வாதப்பிரதிவாதங்களை

நோக்கினால் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் மூமீனையும் முஷ்ரீக்கையும் பிரித்தறிவிக்கும் வகையில் அமைந்திருப்பதை நாம் காணலாம். உள்ளத்தில் ஏற்படுகிற ஓர் தவறான நம்பிக்கையின்(விசுவாசத்தின்) பெயர்தான் ஷிர்க் இணையேற்படுத்தல் என்பதைப் பலமுறை நான்கூறியுள்ளேன். இந்தத் தவறான விசுவாசத்தினால்தான் செயலிலும் ஷிர்க் ஏற்படுகின்றதென்றும் கூறியுள்ளேன். அப்படியானால் நாம் கலிமாவுக்குக் கொள்ளும் பொருள் உள்ளத்திலும் செயலிலும் ஏற்படும் சகல ஷிர்க்குகளையும் நீக்கக்கூடியதாய் அமைய வேண்டும். எனவே இலாஹு என்ற சொல்லை நாம் மிகமிகக் கவனத்தோடு ஆராய்ந்து தெளிவு பெறுவது அவசியமாகும். ஏகமான உண்மையான மூலப் பொருளுடன் அதைப்போன்ற வேறு மூலப் பொருளுமுண்டென்று நம்புவதே ஷிர்க் இணை யேற்படுத்தல் என்பதனையும் உலகமதங்களுக்கும் இஸ்லாத்துக் குமிடையிலுள்ள உண்மையான வேறுபாடு இவ்விஷயத்தில்தான் தங்கியிருக்கிறதென்பதையும் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன், கோட், கடவுள் என்று பொருள் கொண்டால் அது ஷிர்க்கை நீக்குமா? என்பதைக் காண்போம். அல்லாஹ்வைத் தவிர நாயன், கோட், கடவுள் இல்லையென்றால் அல்லாஹ்வே நாயனாய், கோட்டாய், கடவுளாய், அல்லாஹ்வாய் இருக்கிறான் என்றுதான் பொருள் தரும் . அல்லாஹ் அல்லாத கடவுள், கோட், நாயன், அல்லாஹ் உண்டென்று யாராவது நம்பியிருந்தால்தான் அவரை நோக்கி அல்லாஹ் தவிர நாயன், கோட், கடவுள், அல்லாஹ் இல்லையென்று கூறப்படவேண்டும். கலிமத்துத்தையிபா முதன்முதலில் ஆதம்(அலை) அவர்களுக்கே அருளப்பட்டது. அவர்கள் அல்லாஹ்வைத்தவிர வேறு நாயன், கடவுள், கோட், அல்லாஹ் உண்டென்று கூறியதாக, நம்பியதாக, எவ்வித ஆதாரமும் கிடைக்கவேகிடையாது. விக்கிரகவணக்கத்தை நீக்கவே கலிமா கொடுக்கப்பட்டதென்றால் அதையும் நாம்

ஏற்கமுடியாது. ஏனென்றால் ஆதம்(அலை) விக்கிரகவணக்கம் செய்ததனால்தான் அவர்களுக்கும் கலிமா கொடுக்கப்பட்ட தென்பதற்கு என்ன ஆதாரம் எங்கே இருக்கிறது? கலிமா முஹ்கமுவான ஒரே கருத்துடையதென்றால் 124000 நபிமாரும் ஒரேகருத்தைத்தான் கொண்டிருந்திருப்பார்கள். ஆதம்(அலை) அவர்கள் அல்லாஹ் தவிர நாயன் உண்டென்று அல்லது கடவுள், கோட், அல்லாஹ் உண்டென்று விசுவாசிக்கவே இல்லை. அவர்களுடைய காலத்தில் எந்த ஓர் விக்கிரகமும் இருந்ததுமில்லை, அவர்கள் விக்கிரகவணக்கம் செய்ததுமில்லை. எனவே இலாஹு என்ற சொல்லுக்கு நாயன், வணக்கத்திற்குரிய நாயன், கோட், கடவுள் என்றெல்லாம் பொருள் கொள்வது வெறும் கற்பனையூகமாகும். இந்த யூகம் இன்று பின்பற்றல் முறையில் செயல்படுகிறது. மேலும் இவ்விதம் பொருள் கொள்வது ஷிர்க்கையே உறுதிப்படுத்துவதாயும் அமைந்து விடுகிறது. வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ் தானென்றால் வணங்கும் அப்து யார்? என்ற கேள்விக்கு நாம் என்னவிடை கூறலாம்? அல்லாஹ்வேறு அப்து வேறு என்றுதான் கூறவேண்டும். அப்படியானால் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத அப்துமுண்டென்ற சுத்தமான ஷிர்க்கே தரிபாடாகும். எனவே வணக்கத்திற்குரிய நாயன் என்று பொருள் கொள்வது மிகமிகத் தவறாகும். குர்ஆன் ஹதீஸுகளுக்கும் அறிவுக்கும் கூட முரணாகும். வணக்கத்திற்குரிய என்பதற்கான எச்சொல்லும் கலிமாவில் கிடைக்கவே கிடையாது.

அப்படியானால் ஒருசாரார் இலாஹு என்ற சொல்லுக்கு நாயன், கடவுள், வணக்கத்துக்குரியவன் என்றெல்லாம் ஏன் பொருள் கொண்டார்கள் என்று ஓர் கேள்வி பிறக்கிறது. இதற்குரிய விடையை எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலின் முதலாம் பதிப்பில் 441ம் பக்கத்திலிருந்து 461ம் பக்கம் வரை விளக்கியிருக்கிறேன். அங்கு கண்டு தெளிக.

இக்காலத்திலுள்ள சிலர் வணக்கத்தில் ஒருமைப் படுத்தலே தௌஹீது என்று நம்பியிருக்கிறார்கள். இவ்வகையினர் அப்துல் வஹ்ஹாப் நஜ்த் போன்றோரைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றும் பின்பற்றல் வாதிகளாய் இருக்கிறார்கள். கலிமத்துத்தையிபா வணக்கத்தை வலியுறுத்த அருளப்பட்டதல்ல என்பதையும் ஷிர்க்கை நீக்கவே அருளப்பட்ட தென்பதையும் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன். எனவே இலாஹுன் என்று கலிமாவில் தரப்பட்ட சொல்லுக்கு வணக்கத்துக்குரிய என்ற அடைமொழியை அமைப்பதும் நாயன், கடவுள், கோட் என்ற பொருள் கொள்வதும் ஒரு சிலரின் கற்பனையூகமாய் இருக்கிறது. மாபெரும் பட்டதாரிகள்கூட இவ்விஷயத்தில் பின்பற்றல்வாதிகளாகவே அமைந்திருக்கிறார்கள். ஆதம்(அலை) இருக்கட்டும் றசூல்(ஸல்)அவர்களுடைய காலத்து முஷ்ரிக்கீன்களாவது பல கடவுள்கள், பல அல்லாஹ்கள் உண்டென்று எங்கேயாவது கூறியதுண்டா? இல்லை. குர்ஆன் 23:86, 43:9, 31:25, 29:61, 29:63 போன்ற ஆயத்துக்களின் சாட்சியப்படி அந்த முஷ்ரீக்கீன்கள் சர்வ வல்லமையுள்ள அஸீஸும் அலீமுமாகிய இறைவன், அல்லாஹ், றப்பு, நாயன், கோட், கடவுள் ஒருவனுண்டென்றே நம்பியிருந்திருக்கிறார்கள். படர்க்கையில் அல்லாஹ் இருக்கிறான் என்று நம்பியிருந்த அந்த முஷ்ரீக்கீன்கள் அந்த அல்லாஹ்வை நெருங்கிச்சேர உதவியாய்த்தான் இவைகளை நாங்கள் வணங்குகிறோம் என்று தான் கூறியிருக்கிறார்கள் அந்த இலாஹுகளை அம்மக்கள் கடவுள்களாய் எப்போதும் ஏற்றுக்கொள்ளவே இல்லை. குர்ஆன் 39:3ம் ஆயத்து இவ்விரத்தை எமக்குத்தருகிறது. எனவே றசூலின் காலத்து முஷ்ரிக்கீன்கள் கூட அல்லாஹ் ஒருவனுண்டென்று ஏற்றுக்கொண்டிருந்தபோது அவர்களை நோக்கி அல்லாஹ் தவிர அல்லாஹ், கடவுள், நாயன் இல்லையென்று கூறப்படவேண்டியதில்லை. ஆகவே கலிமாவிலுள்ள இலாஹுன் என்ற சொல்லுக்கு நாயன், கடவுள், அல்லாஹ் என்றெல்லாம் பொருள்கொள்வது மூடத்தனமும் பின்பற்றலுமாகும்.

முஸ்ரீக்கீன்கள் அல்லாஹ் ஒருவன் உண்டென்றும் அவன் வானத்தில் (தனிப்பட்ட ஓரிடத்தில்) இருக்கிறானென்றும், சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்றும் அவை குணம் கொடுப்பவை, ஸபாஅத்துச் செய்பவை, உதவி செய்பவை யென்றும்தான் நம்பியிருந்தவர்கள். இவர்களின் உள்ளத்திலும் செயலிலும் ஏற்பட்ட சர்வ ஷிர்க்குகளையும் ஒரேமுறையில் நீக்குவதற்காகவே கலிமாவில் இலாஹுˊ என்ற சொல் தரப்பட்டிருக்கிறது. இந்த இலாஹுˊ என்ற சொல்லை அம்மக்கள் தெளிவாய் விளங்கிக்கொண்டதனால் அதை ஏற்கமுடியாமல் மறுத்திருக்கிறார்கள். இலாஹுˊவான இவை சிருஷ்டியேயன்றி இல்லையென்று கூறியிருக்கிறார்கள். குர்ஆன்38:7 போன்ற ஆயத்துக்கள் இதை விளக்குகின்றன. எனவே கலிமாவிலுள்ள இலாஹுˊ என்ற சொல் சிருஷ்டியென்ற பொருளிலேயே தரப்பட்டதென்பதை மறுக்கமுடியாது.

இன்னுமோர் முக்கிய விஷயம் என்னவென்றால் கலிமாவின் சொற்களைத் தனித்தனியாயும் ஒன்றுசேர்த்தும் நோக்கினால் அதில் மூன்று கேள்விகள் இடம்பெறுகின்றன. அவற்றில் இருகேள்விகளுக்கு வெளிப்படையாயும் ஒரு கேள்விக்கு மறைமுகமாகவும் கலிமா விடை தந்துகொண்டிருக்கிறது.

1வது கேள்வி:-

“லா” இல்லை என்ற சொல் எது இல்லையென்ற கேள்வியை எழுப்புகிறது. இதற்கு விடை “இலாஹுˊ” என்று தரப்பட்டிருக்கிறது. இதைக் கடவுள் அல்லாஹ் என்று பொருள் கொள்ள முடியாது. அல்லாஹ் என்ற சொல்லுக்கு எதிரிடை கிடைக்கவே கிடையாது. அல்லாஹ் இல்லையென்று கூற முடியாது. எனவே இல்லை “லா” என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டது அல்லாஹ்வைத்தான் என்று

கொள்ளமுடியாது. அப்படிக்கொண்டால் கலிமா முன்னுக்குப்பின் முரணாக அமையும். அதாவது லா என்றசொல் அல்லாஹ்வை மறுப்பதாயும் (அழிப்பதாயும்) "இல்லா" என்ற சொல் அல்லாஹ்வைத் தரிபடுத்துவதாயும் அமையும். இதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. அறிவும் இதை ஏற்காது.

2வது:- கேள்வி :-

"இல்லா" "தவிர" என்ற சொல் எதைத்தவிர என்ற கேள்வியை எழுப்பி அல்லாஹ் (தவிர)என்று விடை தருகிறது. அப்படியானால் "லா" இல்லையென்ற சொல்லால் குறிப்பிடப்பட்டது தோன்றி மறையும் (ஹுஸூர்)மாயையான சிருஷ்டியைக் குறிப்பிட்ட தாகவே இருக்கும். ஏனென்றால் இல்லையென்ற எதிர்மறைச் சொல் அழிந்தொழியும் சிருஷ்டிக்குப் பொருந்துமேயன்றி அழிந்தொழியாத அல்லாஹ்வுக்குப் பொருந்தாது.

3வது கேள்வி:-

அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி இல்லை என்றால் இதைச் சிருஷ்டியினால் உணரமுடியாதே? இல்லாத சிருஷ்டி எப்படி உணரும் என்பதே கேள்வி. இவ்விஷயம் ஞானத்தின் கடைசி எல்கையாய் இருப்பதாலும் அனுபவமற்ற மக்களால் உணர, விளங்க முடியாமலிருப்பதாலும் நான் இதை விளக்காமலே விட்டுவிடுகிறேன். இப்போது கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு சிருஷ்டி என்று பொருள்கொண்டால் அது ஷிர்க்கை நீக்குமா? தௌஹீதை உறுதிப்படுத்துமா? என்பதை

நோக்குவோம். குர்ஆனை விளங்குவதற்குரிய முதலாவது வழி, எந்த ஆயத்தில் சந்தேகமேற் படுகின்றதோ அதே ஆயத்தைக்கொண்டே சந்தேகத்தை நீக்குதல் என்பதாகும். இந்த விதிப்படி கலிமாவைக் கலிமாவிலுள்ள சொற்களைக் கொண்டே ஆராய்ந்து பார்ப்போம்.

கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் சிருஷ்டியைக் குறிப்பிடும் நோக்கமாகவே தரப்பட்டுள்ளதென்பதைக் கலிமாவிலுள்ள “லா” இல்லையென்ற சொல் மிக நுட்பமாய், உறுதியாய் நிரூபணம் செய்துகொண்டிருக்கிறது. எப்படியென்றால் இல்லை(லா) என்றசொல், நாம் முன்பு கூறியது போல மூவிடங்களையும், முக்காலங்களையும், இருதிணை களையும், ஐம்பால்களையும் ஒரே முறையில் இல்லையென்றழிப்பதாலும், எது இல்லையென்ற கேள்விக்கு “இலாஹு” இல்லையென்று விடைதருவதாலும் முன்கூறிய காலம் இடம் போன்ற 13அம்சங்களையும் கொண்டதே சிருஷ்டியாய் இருப்பதாலும் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு அல்லாஹ்வும் நபிமார்களும் நாடிய பொருள் சிருஷ்டியென்பதுதான் என்று ஆணித்தரமாய் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. “லா” “இலாஹு” ஆகிய இரு சொற்களும் இல்லா(தவிர) அல்லாஹ்(கடவுள்) ஆகிய சொற்களுடன் இணையும்போது அல்லாஹ்வையன்றி அல்லது அல்லாஹ் தவிர, அவனுடன் முன்கூறிய 13அம்ஸங்களிலும் கட்டுண்ட சிருஷ்டியான இலாஹு இல்லவே இல்லையென்பது பெறப்படுகிறது. அப்படியானால் சிருஷ்டியென்றால் என்ன? அல்லாஹ்தானா? என்று ஓர் கேள்வி பிறக்கிறது. அல்லாஹ் தானென்றால் கண்டப்படுத்தும் காரணத்தால் அது குப்றுவாகவும், அல்லாஹ் அல்லாததென்றால் அல்லாஹ்வுடன் அவனல்லாதது முண்டென்ற சுத்தஷிர்க்காகவும் அமைகிறது. இவ்விபரம் எமது முதல் நூலில் சிருஷ்டியென்றால் என்ன என்ற தலைப்பில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதால் மிகச்சுருக்கமாய் இங்கே

கூறுகிறேன். இறைவன் அவனுடைய அறிவில்கொண்டுள்ள அவனுடைய கற்பனையே சிருஷ்டியாய் (சர்வ ஆலங்களுமாய்) இருக்கிறது. மனிதன் புலனறிவில் கட்டுண்டிருப்பதால் சிருட்டியுலகு ஜடம்என்று நம்புகிறான். இது ஓர் ஹுஸூர் மயக்காகும். இந்த மயக்கியிலிருந்து விடுபடவே கலிமாவில் இலாஹு என்ற சொல் சிருஷ்டியென்றபொருளில் கூறப்பட்டிருக்கிறது.

தன்மை, முன்னிலை, படர்க்கையென்ற மூவிடங் களாகவும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்களாகவும், அ∴றிணை, உயர்திணையென்ற இருதிணைகளாகவும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற ஐம்பால்களாகவும் புலனறிவில் தென்படுகிற இலாஹுவான (லாஹிர்- வெளிப்படை அல்லது தோற்றப்பாடு) சிருஷ்டியானயாவும் அல்லாஹ்வைத் தவிர வேறான தனித்தனி வுஜுதுகளேயல்ல என்பது உறுதிப்படு த்தப்படுகிறது. இலாஹு என்று ஒருமையில் தரப்பட்ட சாதாரண வழக்குச்சொல் இல்லா, அல்லாஹ் என்ற சொற்களோடிணையும் போது பொதுப் பெயர்சொல்லாயும் அமைந்திருப்பதை நாம் காணலாம். கனவைக் கண்ட நானும் என் கனவில் வெளியான பொருட்களும் வெவ்வேறானவையென்று கூறமுடியாது. கனவு குறிப்பிட்ட நேரம் தோன்றி, இருந்து, மறைவது போல இலாஹு என்ற சர்வ பேரண்டமும் இறையறிவில் குறிப்பிட்ட நேரம் தோன்றி, இருந்து, மறைகிறது. தோற்றுகிற சிருஷ்டியான இலாஹும்(றப்புவான) இலாஹும் வெவ்வேறல்ல என்றுணர்த்தவே கலிமா தரப்பட்டிருக்கிறது. எனவே கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு சிருஷ்டி என்று பொருள் கொண்டால் அல்லாஹ்வையும் அதன் தத்துவத்தையும் தவிர அவனுடன் எதுவும் இணை, துணையாய், ஜோடியாய், சமமாய் இல்லவே யில்லை என்ற சுத்தசத்தியமான தௌஹீது கிட்டிவிடும். உள்ளத்திலும் செயலிலும் குடியிருந்த ஷிர்க் மாயமாய் மறைந்துவிடும். இதை நிருபணஞ் செய்ய குர்ஆன்

ஹதீஸுகளிலிருந்து அனேக ஆதாரங்களைத் தரலாம். எல்லோரும் இலகுவாய் விளங்க வேண்டுமென்பதற்காக மிகச் சுருக்கமாய் தந்திருக்கிறேன். உலகிலுள்ள எக்கல்வியைக் கொண்டும் ஷிர்க்கை (அல்லாஹ்வுடன் அவனல்லாதது முண்டென்பதை) நிரூபணஞ்செய்யவே முடியாது.

கலிமா ஷிர்க்கென்ற உளநோயிலிருந்து விடுபடுவ தற்காக அருளப்பட்டதேயன்றி வணக்கத்தை வலியுறுத்த மட்டும் அருளப்பட்டதல்ல. முஸ்லிம்களென்ற போர்வையிலிருந்த விஷமிகள் அவர்களுடைய அறியாமையால் தங்கள் யூகப்படிதான் இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய நாயன் என்று கூறியிருக்கிறார்கள். ஷிர்க்கென்றால் என்ன? என்பதை அறிந்துகொள்ளாமையினால்தான் கலிமாவில் வணக்கத்தைப் புகுத்த முனைந்திருக்கிறார்கள். இஸ்லாத்தில் முதல் முதலில் ஏற்படுத்தப்பட்ட உண்மையான பித்அத் என்பது இந்தப் புரட்டல் வேலைதான். வணக்கத்தை வலியுறுத்த, வணக்கத்திற்குரியவன் இறைவன்தான் என்பதை வலியுறுத்த அனேக ஆயத்துக்கள் ஹதீஸுகள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வேலைக்குக் கலிமா அவசியமேயில்லை.

3வது:- "இல்லா"

தவிர, அன்றி என்பது இச்சொல்லின் அர்த்தமாகும். கலிமாவிலுள்ள இல்லை(லா) என்ற சொல் எது இல்லையென்று ஓர் கேள்வியை எழுப்பி இலாஹு(சிருஷ்டி) இல்லையென்று பதில் தந்ததுபோல தவிர, அன்றி(இல்லா) என்ற சொல்லும், எதைத்தவிர என்ற கேள்விக்கு அல்லாஹ்வைத் தவிர என்று விடைதருகிறது. இச்சொல்லுக்கு மேலதிக விபரங்கள் அவசியமில்லை. இச்சொல் அல்லாஹ் என்ற சொல்லுடன் இணையும்போது அல்லாஹ்வைத்தவிர என்றுணர்த்துவதால் அல்லாஹ்வை மட்டுமே தரிபடுத்துகிறது. அல்லாஹ் அல்லாததே சிருஷ்டியென்று நம்பியிருந்த மக்களின் இணைகற்பித்தலென்ற ஷிர்க்கை நீக்கி அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டியில்லை

என்றுணர்த்தப்பட்டிருக்கிறது. இல்லா என்ற சொல்லுக்கு இவ்வளவு விபரமும் போதுமானது.

4வது: “அல்லாஹ்”

இது ஓர் இடுகுறிப்பெயராய் இருக்கிறது. அதாவது இணைதுணையற்ற ஏகமான வுஜூதுவைச் சுட்டவே இப்பெயர் பாவிக்கப்படுகிறது. இறைவனுடைய எல்லாத் திருநாமங்களும் அல்லாஹ் என்ற சொல்லிலேயே கட்டுண்டிருக்கின்றன. ஏகமாய், அதையன்றி அதனுடன் வேறு எதுவுமில்லாமல், மனித அறிவு வட்டத்தில் முழுமையாய் அமையாமல், இனம் தெரியாமல் இருக்கும் வாஜிபுல்வுஜூது என்பதே அல்லாஹ் என்பதன் பொது விபரமாகும். இது இலக்கம், காலம், இடம், திணை, பால், ஒருமை, பன்மை போன்ற சகல பண்புகளையும் விட்டு மிகமிகப் பரிசுத்தமானதாகும். அல்லாஹ் என்ற இச்சொல்லுக்கு இவ்வளவு விபரமுமே போதுமானதாகும்.

## ஓர் நுட்பம்:~

ஒருமை, பன்மை, தன்மை, முன்னிலை, படர்க்கை போன்ற 13 அம்சங்களிலும் இறைவனைக் கட்டுப்படுத்துவது குற்றமென்றால் இலாஹு என்ற சொல்லுக்கு இறைவன், நாயன், கோட் என்று எப்படிப் பொருள் கொள்ளமுடியும்? அப்படிப் பொருள் கொள்வது பெரும் குற்றமாகும். மேலும் அல்லாஹ் வுக்கு எதிரிடை கிடையாது. சிருஷ்க்குத்தான் எதிரிடையுண்டு. அப்படியானால் இலாஹு என்பது அல்லாஹ்வை சுட்டிய சொல் என்று கொண்டால் அல்லாஹ்வை “லா” இல்லையென்ற எதிரிடைச் சொல்லைக்கொண்டு மறுக்க முடியாதே! ஏனென்றால் இலாஹுவான அல்லாஹ்வை இல்லையென்ற சொல்லைக் கொண்டு ஒழிக்கமுடியாது. அல்லாஹ்வுக் கெதிராய் இல்லை (லா) என்றசொல் பொருளற்றதாய்விடும். ஆனால் கலிமாவில் லா என்ற எதிரிடை பாவிக்கபட்டிருக்கிறது. எனவே இலாஹு

என்றசொல் சிருஷ்டியை நோக்கிக்கூறப்பட்டதேயன்றி அல்லாஹ்வான, எதிரிடையில்லாத ஹக்கை நோக்கிக் கூறப்பட்டதேயில்லை. இதை எவர் சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லையோ அவர் இறுதிவரையிலும் தௌஹீதென்ற ஏகத்துவக்கொள்கையை ஏற்றுக்கொள்ளவேமாட்டார்.

அல்லாஹ் என்ற சொல்லுக்கு எதிரிடையில்லை யென்பதையும் அல்லாஹ்வுடைய மற்றும் திருநாமங்களுக் கெல்லாம் எதிரிடை உண்டென்பதையும் நாம் மறக்கக்கூடாது. எனவே கலிமாவில் தரப்பட்டுள்ள அல்லாஹ் என்ற சொல்லும் கலிமாவிலுள்ள இலாஹு என்பதன் பொருள் சிருஷ்டிதான் என்பதைத் தெளிவாய் நிரூபணம் செய்கிறது.

நாம் காட்டிய விபரப்படி கலிமாவின் உண்மையான பொருள் அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி இல்லையென்பதாகும். இக்கருத்துச் சரியானதுதானென்றால் இபாரத், தலாலத், இஸாறத், இஹ்திலாவ் ஆகிய நான்கு பிரமாணங்களும் எவ்வித கஸ்டமும் இல்லாமல் தௌஹீதை உறுதிப்படுத்தவேண்டும். முன்பு இதை நான் விளக்கிக் காட்டியுள்ளேன்.

குர்ஆனில் இலாஹு என்றசொல் பொதுப்பெயர்ச் சொல்லாய்ப் பாவிக்கப்படவில்லையென்று சிலர் கூறுவதாகவும் நான் அறிகிறேன். இவ்வகையினர் ஷிர்க்கின் உண்மையை அறியாதவர்களாயும் இபாரத், தலாலத், இஸாரத், இஹ்திலாவ் போன்ற பிராமாணங்களை அறியாதவர்களாயும் குர்ஆனை விளங்கும் ஆற்றல் இல்லாதவர்களாயும் இருப்பதாலேயே மருட்சியடைந்திருக்கிறார்கள். இலாஹுவான சிருஷ்டி இல்லையானால் சிருஷ்டிகர்த்தாவான றப்பும் இல்லையென்றாகும். அப்து றப்பு ஆகிய இவ்விரு சொற்களும் ஒன்றுக்கொண்று முரணானவை. ஒன்றில்லையானால் அதன் எதிரிடையும் கிடையாது. எப்போது இலாஹுவான சிருஷ்டி இல்லை யென்றாகிறதோ அப்போதே றப்பும் இல்லை

யென்றாவதால் அப்துவாயும் றப்புவாயும் காட்சியளிப்பது அல்லாஹ்வின் றுபூபியத்தென்ற இரண்டாவது மார்த்தபாவே என்றும் அல்லாஹ்வுடன் அவனல்லாத வேற்றுப் பொருள் (இணை) இல்லையென்றும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**ஓர்கேள்வி:**

கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்குச் சிருஷ்டியென்று பொருள் கொள்வதே சரியென்றால் "லாகல்கு இல்லல்லாஹ்" அல்லது "லா அப்து இல்லல்லாஹ்" என்று கலிமா தரப்பட்டிருக்குமே! அப்படித் தரப்படவில்லையே! எனவே இலாஹு என்ற சொல்லுக்குச் சிருஷ்டியென்று பொருள் கொள்வது எப்படிச் சரியாகும்?

**விடை:**

கல்கு, அப்து ஆகிய இரு சொற்களும் இறைவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகளை, அப்துக்களை மட்டும் சுட்டிக் காட்டுபவையாய் இருக்கின்றன. இச்சொற்கள் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களையும் மனித உள்ளத்தில் கற்பனையாய்ச் சிருஷ்க்கப்பட்டவற்றையும் உள்ளடக்கா. ஆனால் இலாஹு என்ற சொல் இறைவனால் சிருஷ்டிக்கப் பட்டவை, மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டவை, மனிதனால் அவனுடைய உள்ளத்தில் கற்பனையாய் உருவாக்கப்பட்டவை யாவற்றையும் ஒன்று சேர்த்துக்கொண்டதாய் இருக்கிறது. நாம் முன்பு காட்டிய 25:43, 26:213 போன்ற ஆயத்துக்களில் இலாஹு என்ற சொல் என்ன என்ன பொருளில் பாவிக்கப்பட்டிருக்கிறதென்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் றுபூபியத் தென்ற இறைவனின் இரண்டாவது மர்த்தபாவில் உள்ள யாவற்றையும் உள்ளடக்கிச் சூழ்ந்த முஹீத்தாய் இருக்கிறது. ஆகையால்த்தான் கலிமாவில் இலாஹு என்றசொல் தரப்பட்டிருக்கிறது. அல்லாஹ்வுடன் அவனல்லாத பொருளோ,

குணமோ கிடையாதென்பதை வலியுறுத்துவதே கலிமாவின் நோக்கமாயிருக்கிறது.

**இன்னும் ஓர் கேள்வி**

அல்லாஹ் என்ற சொல்லுக்கு “லா” இல்லையென்ற சொல் எதிரிடையாய் அமையாதென்பதை ஏற்கலாம். அப்படியானால் இலாஹு என்ற சொல்லுக்கு “லா” இல்லையென்ற சொல் எதிரிடையாய் இருப்பதால் இலாஹு என்ற சொல்லுக்கு றப்பு அல்லது நாயன் என்று பொருள் கொண்டால் அதில் என்ன தவறு ஏற்படும்?

**பதில்:**

றப்பு என்ற சொல்லுக்கு எதிரிடை இருப்பதால் “லா” இல்லையென்ற சொல் றப்பை நோக்கியதேயென்று கொள்ள முடியாது. ஏனெனில் “லா” இல்லையென்ற சொல் நாம் முன் கூறிய காலம், இடம், இலக்கம் போன்ற 13அம்ஸங்களையும் மறுப்பதற்காகவே அமைந்திருப்பதால் அச்சொல் இந்த 13 அம்ஸங்களையும்விட்டுப் பரிசுத்தமாயிருக்கும் றப்பை மறுக்காது. றப்பு என்ற சொல்லுக்கு அப்து என்ற சொல் எதிரிடையே யன்றி லா இல்லை என்ற சொல் எதிரிடையாகாது. இலாஹு என்ற சொல்லுக்கு றப்பு, நாயன், என்று பொருள் கொண்டால் தௌஹீது நிலைப்படாது. இதைமுன்பே விளக்கியுள்ளேன். மேலும் ஆதம்(அலை) அவர்களோ அவர்களின் பின்வந்த நபிமார்களோ அல்லது நபிமார்களின் காலத்து முஷ்ரிக்கீன்களோ அல்லாஹ் அல்லாத றப்பு அல்லது றப்புக்கள் உண்டென்று கொண்டதாக எவ்வித ஆதாரங்களுமே கிடையாது. முஷ்ரிக்கீன்கள் வணங்கிய எந்த ஓர் விக்கிரகத்துக்கும் றப்பு, றஹ்மான் போன்ற நாமங்களைச் சூட்டியதுமில்லை. அந்த விக்கிரங்களுக்கு அம்மக்கள் இலாஹு(ஆலிஹத்) என்று ஒருமை பன்மையில்தான் பெயர் கூறியிருக்கிறார்கள். எனவே இலாஹு என்ற சொல்லுக்கு றப்பு என்று பொருள் கொள்ளவே கூடாது.

கலிமாவிலுள்ள "இல்லா" தவிர என்ற சொல் மனித அறிவில் தென்படும் அத்தனையும் அல்லாஹ் அல்லாதவையல்ல வென்றுணர்த்துகிறது. அதாவது மனித அறிவு புலன்கள் வாயிலாய் ஏதோவெல்லாம் (சிருஷ்டி) இருப்பதாய் அனுபவ வாயிலாய் அறிந்து கொண்டிருக்கிறது. எனவே சிருஷ்டியென்ற வெறும் ஸூறத்தாயும் சிருஷ்டிகர்த்தா என்ற றப்பாயும் இருப்பது அல்லாஹ்தான் என்பது உணர்த்தப்படுகிறது. இங்கு அல்லாஹ் என்ற நாமத்தால் சூட்டப்படும் வுஜூதுவான ஹக்கின் இரண்டாவது மர்த்தபாவான றுபூபியத்தின் விபரம் இலாஹு என்ற சொல்லால் விளக்கப்படுகிறது. இந்தநிலைமை அறிவு வட்டத்தில் எட்டக்கூடியதாயிருக்கிறது. அல்லாஹ்வைத்தவிர என்னும்போது இருப்பதாய்த் தென்படும் (மவுஜூது) சிருஷ்டி, அல்லாஹ்வின் இரண்டாம் படித்தரமான றப்புவின் ஸூறத்துத்தான் என்றாகிறது. இருப்பதாய் காணப்படும் (மவுஜூது) அல்லது சிருஷ்டி அல்லாஹ்வின் அஸ்மாக்களுடைய ஸூறத்துக்களே என்ற ஞானம் உணர்த்தப்பட்டிருக்கிறது. ஸூறத்தென்பது வெறும் ஹுரூர், மாய்கையேயன்றித் தனித்தனி வுஜூதுகளேயல்ல வென்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும். ஜடம் என்பது வெறும் மயக்கே என்பதை முன்பு விளக்கியுள்ளேன்.

கண்டப்பொருட்களான ஜடம் வெறும் ஹுரூர், மயக்கு என்றும் கண்டப்பொருளைக் குறிப்பிட்டு அல்லாஹ் என்ற நாமத்தைச் சூட்டுவது குப்ரு என்றும் அவனையன்றி அவனுடன் வேறெதுவுதுமில்லையென்றும் அவனே எல்லாமாய்க் காட்சியளிக் கின்றான் என்பதே தௌஹீது என்றும் ம.்.கூல், மன்கூலான பிரமாணங்கள் சாட்சியமளிக்கின்றன. எல்லாம் என்னும் போது எல்கை கணிக்க முடியாதிருப்பதால், ஏகனாய் இருப்பவன், எல்லாமாய்த் தோற்றுபவன் அவனே என்று பெறப்படுகிறது. இந்த உண்மையை மனித அறிவு சக்குச் சந்தேகமில்லாமல் தெளிவாய் விளங்கவேண்டுமென்பதற்காகவே குர்ஆனின் மூன்றில் ஓர் பகுதி அருளப்பட்டிருக்கிறது. அவனே எல்லாமாய்க் காட்சியளிக்கிறானென்றால் ஹிந்துக்களில் ஒருசாரார் கூறுவது

போல அல்லாஹ் (கடவுள்) சமஷ்டி, சரீரி என்று விளங்கிக் கொள்ளக்கூடாது. இறைவன் சமஷ்டி, வியட்டியென்ற தளைகளைவிட்டும் மிகமிகப் பரிசுத்தமானவன். அல்லாஹ்வின் வஜ்ஹு(முகம்) ஏகமாய் இருப்பதுபோல லாஹிர் என்ற வெளிப்பாட்டிலும் இலக்கத்தில் கட்டுண்ணாத ஏகனாய்த்தான் அல்லாஹ் இருக்கின்றான்.

இன்றைய உலகிலுள்ள மிகப் பெரும்பாலான உலமாக்கள் கூடக் கலிமா விஷயத்தில் கண்மூடித்தமாய்த் தான் சென்று கொண்டிருக்கிறார்கள். கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லை முறைப்படி விளங்கிக் கொள்ளாமை யினால்தான் அப்து வேறு றப்பு வேறு என்ற முஷ்ரீக்குகளின் கொள்கையை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய நாயன், கோட், கடவுள் என்றெல்லாம் பொருள் கொண்டதனால் இஸ்லாத்தின் ஆணிவேரே பிடுங்கப்பட்டிருக்கிறது.

வணக்கத்துக்குரிய நாயன் யார்? வணக்கத்துக்குரியவன் றப்புத்தான். நாயன் என்றால் எஜமான் என்பது பொருள். இந்த எஜமான் என்ற றப்பையே இலாஹு என்ற சொல்லின் பொருளாய் இறைவன் கொண்டிருந்தால் “லாறப்பு இல்லல்லாஹ்” என்றே கலிமா தரப்பட்டிருக்கும். கோட், கடவுள் என்பதைக் குறிப்பிடுவதே இலாஹு என்ற சொல் தரப்பட்ட நோக்கமென்றால் லா அல்லாஹ் இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர அல்லாஹ் இல்லை) என்று கலிமா தரப்பட்டிருக்கும். இப்படியெல்லாம் கலிமா தரப்படவில்லை. அல்லாஹ்தான் றப்பு என்பதும் றப்பு தான் அல்லாஹ் என்பதும் முஷ்ரிக்கீன்களுக்கு தெரிந்திருக்கும் போது அவர்களறிந்திருந்த அதே விஷயத்தையே கலிமாவாகக் கூறுவதில் என்ன அர்த்தமிருக்கிறது. அல்லாஹ்வுடன் அவனல்லாத (லாத், உஜ்ஜா, மனாஸ் போன்ற ) சிருஷ்டிகளும் உண்டென்று நம்பியிருந்த ஷிர்க்கை நீக்கவே கலிமா தரப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையை மறுக்கமுடியாது. அல்லாஹ்

என்பவன் அவனையன்றிப் பிறிதொன்றில்லாத ஏகன் என்பதை விளக்குவதே கலிமாவின் குறிக்கோளாகும்.

கலிமாவிலுள்ள இலாஹுன் என்ற சொல்லுக்கு நாயன், கடவுள், றப்பு, கோட், அல்லாஹ் என்றெல்லாம் பொருள் கொண்டால் தௌஹீது நிலைப்படவேபடாது. வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்தானென்றால் வணங்கும் சிருஷ்டி அவனல் லாதது என்றே பொருள் பெறப்படும். இதில் அல்லாஹ்வை மட்டும் ஏகமாய்க் கொள்ளமுடியாது. அதாவது இலாஹுன் என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரியவன், நாயன் என்றெல்லாம் பொருள்கொள்வது தௌஹீதுக்கு மாறாய் முஸ்ரீக்குகளின் கொள்கையான ஷிர்க்கையே உறுதிப்படுத்தும் என்பதை ஊன்றி உணரவேண்டும். கலிமாவில் எவ்வித வலிந்துரையும் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

கலிமாவுக்கு அல்லாஹ் தவிர சிருஷ்டியில்லை என்று பொருள் கூறுவது இந்துக்களின் அத்வைதம் என்று சிலஷைத்தான்கள் மக்களை ஏமாற்றுவதாய் அறிகிறேன். இவ்வித ஷைத்தான்களுக்கு அறபு பாஷையும் தெரியாது தமிழ் பாஷையும் தெரியாதென்றே கூறலாம். துவிதம் என்றால் இரண்டு என்பது அதன் அர்த்தம். அ+துவிதம் (அத்துவிதம் அல்லது அத்வைதம்) என்றால் இரண்டில்லாதது என்பது அதன் அர்த்தம். இரண்டில்லாதது என்னும் போது அது ஒன்றுதானேயென்று ஒரு சிலரின் மூடபுத்தி தீர்ப்புக் கட்டிவிடுகிறது. இது தவறாகும். இரண்டில்லாதது என்றால் இணை, துணை, சமம், நிகர், ஒப்பு, உவமை, இல்லாத ஏகம் என்பதே அதன் உண்மையான அர்த்தமாகும். தௌஹீதென்ற சொல்லை ஏகத்துவம் என்று கூறினால் அது முஸ்லீம்களின் கொள்கையென்று கொள்வதும் அத்வைதம் என்றால் இந்துக்களின் கொள்கையென்பதும் சுத்தமான அறிவீனமாகும். ஏகத்துவம் என்பதும் அத்வைதம் என்பதும் ஒரே கொள்கையின் இரு பெயர்களேயன்றி இரு கொள்கைகள் அல்ல. இந்துக்களுக்கென்று மட்டும் ஓர்

கொள்கை கிடையாது. ஆரம்ப மனிதர் ஆதம்(அலை) அவர்களிலிருந்து இறுதி நாள் வரையிலுள்ள மனிதன் வரை யாவருக்கும் உள்ளது ஒரேயோர் கொள்கைதான். இக்கொள்கைக்கு எப்பெயரைச் சூட்டினாலும் அதன் உண்மையான கருப்பொருள் அல்லாஹு வுக்கு இணை கிடையாதென்பதே. கலைகலாச்சாரம், பாஸை வேறுபட்டாலும் உலகமக்கள் யாவருக்கும் பொதுவான கொள்கையே தௌஹீது, அத்வைதம், ஏகத்துவம், என்பது. இது ஓர் சித்தாந்தமே(கொள்கையே)யன்றி வேறில்லை. எனவே வீண்பிடிவாதங்களைவிட்டுவிட்டு கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லைத் தெளிவாய் ஆராய்ந்து முடிவுக்குவரவேண்டியது எம் கடமையாகும்.

# தொகுப்பு

1.வது: கலிமாவில் தரப்பட்ட இலாஹு என்ற சொல்லுக்கு கோட், கடவுள், நாயன், வணக்கத்துக்குத் தகுதியான நாயன், வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ் என்றெல்லாம் பொருள் கொண்டால் அக்கலிமா ஷிர்க்கைத் தரிபடுத்துமேயன்றி ஏகத்துவம் என்ற தௌஹீதைத் தரிபடுத்தாது. இப்படி பொருள் கொள்வது “மஃகூல்” “மன்கூல்” என்ற பிரமாணங்களுக்கு முரணாகும்.

A. லா என்ற எதிர்மறைச் சொல் அல்லாஹ் என்ற சொல்லுக்கு எதிராய் அல்லாஹ் இல்லையென்று மறுக்காது. லா என்ற சொல் சிருஷ்டியைத்தான் மறுக்கமுடியும். லா என்ற சொல் இறை நாமங்களை மறுக்காது.

B. லா என்ற சொல்லால் அல்லாஹ் இல்லையென்று மறுத்தபின் இல்லா என்ற சொல்லைக்கொண்டு

அல்லாஹ் உண்டென்று தரிபடுத்தினால், லா இலாஹ" என்ற வசனத்துக்கு இல்லா என்ற வசனம் நேர்முரணாய் அமையும். கலிமா முன்னுக்குப் பின் முரணாய் அமையும். இது பாமர மனிதனுடைய அறிவுக்குக் கூடப் பொருந்தாது.

C. இலாஹ" என்ற சொல்லுக்கு அல்லாஹ் என்று பொருள் கொண்டால் கலிமாவின் தலீல்களான, நூற்றுக்க ணக்கான குர்ஆன் வசனங்களை மறுக்கும் காபீராய், முஷ்ரீக்காய் அமையவேண்டிய நிர்ப்பந்தமேற்படும்.

2வது: கலிமாவிலுள்ள இலாஹ" என்ற சொல்லைப் பொதுப் பெயர்ச் சொல்லாய்க் கொண்டு அப்தும் றப்பும் இல்லை அல்லாஹ்வைத் தவிர என்று கலிமாவுக்குப் பொருள் கொண்டால் அதுவும் ஏகத்துவம் என்ற தௌஹீதை உறுதிப்படுத்தாது. மேலும் இப்படிப் பொருள் கொண்டால் ஆதம்(அலை) அவர்களுடைய காலத்துக்கு இக்கலிமா அவசியமில்லை என்று கூற நேரிடும். மேலும் சிற்சில நுட்பங்களும் மறைக்கப்பட்டதாகிவிடும்.

3வது. கலிமாவிலுள்ள இலாஹ" என்ற சொல்லுக்கு (சிருஷ்டிக் கப்பட்டது) சிருஷ்டி என்று பொருள் கொண்டால் அது சுத்தமான தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையே தரிபடுத்தும். ம..கூல், மன்கூல் என்ற பிரமாணங்களால் உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகவும் அமையும். மிகக்குறுகிய காலத்தில் மனிதன் உண்மையில் தரிபட உதவியாயும் அமையும்.

எனவே கலிமாவுடைய விஷயத்தை உலமாக்கள் கூடிய கவனம் செலுத்தி ஆராய்ந்து உண்மையைக் கண்டறிந்து அதன்பின் மக்கள் மத்தியில் அவர்கள் விளங்கக்கூடிய வகையில்

உதாரணம் காட்டி விளக்கினால் மிகக்குறுகிய காலத்தில் அகில உலக மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்களென்பது எனது நம்பிக்கையாகும். உலக மக்கள் சாந்தி சமாதானத்தைப் பெறவேண்டுமானால், கலிமாவை ஏற்றுக்கொள்வதனால் இம்மைமறுமைகளில் ஏற்படும் நன்மையையும், கலிமாவை மறுப்பதனால் இம்மை மறுமையில் ஏற்படும் தீமையையும் உலமாக்கள், அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் பகிரங்கமாய் உலகுக்குணர்த்த வேண்டியது கட்டாய கடமையாகும்.

குறிப்பு:

கலிமத்துத்தையிபா இல்லை, உண்டு என்ற இருவிதிகளில் கட்டுண்டிருக்கிறது. இல்லை என்பது கற்பனையான சிருஷ்டியை நோக்கியும், உண்டு என்பது வுஜூதுவான அல்லாஹ்வை நோக்கியும் தரப்பட்டதாகும். சிருஷ்டி இல்லையென்ற வசனத்தைக் கொண்டு சர்வ சிருஷ்டியையும் தன்னையும் (உடலையும்) மறப்பதால் பனாபித் தௌஹீதை, இறைஐக்கியம் என்ற பெறற்கரும் பேற்றை மனிதன் ஒரே நொடியில் பெற்றுக்கொள்கிறான். அல்லாஹ் மட்டுமே உண்டென்ற வசனத்தைக் கொண்டு சர்வ சிருஷ்டியும் அவன் ஸூறத்தேயென்றும் சர்வ சக்தியும் அவனுடையதேயென்றும் மனிதன் பெற்றுக்கொள்வதால் அம்மனிதனிலிருந்து எவ்வித தீய குணங்களும் வெளியாகாது. பரிசுத்தமான, சாந்தியடைந்த மனிதனாய் அம்மனிதன் மாறிவிடுகிறான். ஒவ்வோர் குடும்பமும், ஒவ்வோர் கிராமமும் இவ்வித மாய்க் கலிமாவை விளங்கித் தெளிவு பெற்றுக் கொண்டால் உலகு ஜன்னத்துப்போல் அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஓர்குறிப்பு:

லா இலாஹ என்பதற்கு றப்பும் அப்தும் இல்லை என்ற

பொருள் தலாலத்தினால் நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய விபரமாகும். லாஇலாஹ என்பதன் உண்மை சிருஷ்டி இல்லை என்பதுதான். இது இபாரத்தினால் பெறப்படுவதாகும். எனவே கலிமாவில் ஒருமையில் தரப்பட்ட இலாஹு என்ற சொல் சிருஷ்டியை நோக்கியிருப்பதால் அதை லா என்ற சொல்லைக் கொண்டு மறுக்கலாம். றப்பையோ அல்லது இறைவனின் மற்றும் திருநாமங்களையோ இல்லை என்ற சொல்லால் மறுக்க முடியாதிருப்பதால் இலாஹு என்ற சொல்லுக்கு அப்தும் றப்பும் என்று பொருள் கொள்ளமுடியாது.

ஒரு கேள்வி:

கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்குச் சிருஷ்டி என்று பொருள் கொள்வதா? வணங்கப்படுகிற சிருஷ்டியென்று பொருள் கொள்வதா?

விடை:

வணக்கத்துக்குரிய என்ற வசனத்தில் ஓர் மயக்கு இருக்கிறது. வணக்கம் என்பது தன்நிறைவு பெறும் நோக்கமாய் ஏற்படும் ஆசைக்கு, விருப்புக்கு, உவப்புக்குக் கூறப்படுகிறது. வணக்கம் உடற் செயல் மட்டுமல்ல உள்ளத்திலேற்பட்ட நோக்கை உறுதிசெய்ய உபயோகி க்கப்படும் வெளிச்செயல்களை (உடற் செயல்களை) மட்டுமே பெரும்பாலார் வணக்கமென்று நம்புகிறார்கள். அது தவறு. மனோ இச்சையை, உவப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாய் இருப்பது எதுவோ அது கற்பனையான இலாஹுவாகவும், உள்ளத்தில் ஏற்பட்ட உவப்பு வணக்கமாயும் அமைகிறது. ஓர் கஸ்பின்போது தன்னிலிருந்து வெளியான ஹவ்வா (அலை) அவர்களைக் கண்ட ஆதம்(அலை) அவர்கள் ஹவ்வா(அலை) தன்னைவிட்டும் இடத்தால், காலத்தால் வேறுபட்டவர்

என்று கண்டார்கள். அதாவது துவித உணர்வு ஏற்பட்டபோது வெளிப்புலன்கள் வேலை செய்ய ஆரம்பித் ததனால் ஜன்னத் துன்யாவாய்க் காட்சியளித்தது. துவித உணர்வு ஏற்பட்டபோது ஹவ்வா(அலை) அவர்கள் ஆதம்(அலை) அவர்களின் மனோ இச்சையைத் தூண்டக் காரணமாயிருந்த இலாஹுவாய் அமைந்தார்கள். அந்தக் கற்பனை இலாஹுவான ஹவ்வா(அலை) அவர்களும் தானும் அல்லாஹ் அல்லாதவையேயென்று நம்பியதனால்தான் அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி வேறல்ல என்ற கலிமா அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹவ்வா(அலை) அவர்களை ஆதம்(அலை) காண்பதற்குமுன் அவர்களுடைய புலன்களும், அறிவும், அனுபவமும் வேறானது. அது ஜன்னத்துக்குடையது. ஹவ்வா(அலை) அவர்களைக் கண்டபோது இப்போது எம்மிடமுள்ள அறிவும், புலன்களும், அனுபவமும் ஏற்பட்டிருக்கின்றன. ஹவ்வா(அலை) அவர்களை ஆதம்(அலை) கண்டபோது ஏற்பட்ட உவப்பே அவர்களுடைய வணக்கமாய் அமைந்தது. இந்த வணக்கம் உள்ளத்தில் ஏற்பட்டதேயன்றி உடற்செயலாய் வெளிவரவில்லை.

**குர்ஆன்: 25:43**

أَرَءَيْتَ مَنِ ٱتَّخَذَ إِلَٰهَهُۥ هَوَىٰهُ أَفَأَنتَ تَكُونُ عَلَيْهِ وَكِيلًا

**தன் இச்சையை (ஆசையை, விருப்பத்தை) இலாஹுவாய் எவன் எடுத்துக் கொண்டானோ அவனை நீர் பார்த்தீரா? நீர் அவனுக்குப் பாதுகாப்பாளராய் இருப்பீரா?**

இவ்வாயத்தில் துவித உணர்வினால் ஏற்படுகிற

ஆசைக்கு இலாஹு என்ற சொல் பாவிக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொள்க. ஆதம்(அலை) அவர்களுக்கேற்பட்ட துவித உணர்வினால் அவர்களுடைய உள்ளத்தில் ஓர் கற்பனையான இலாஹுவை ஆக்கிக்கொண்டார்கள். அவர்களுடைய ஷிர்க் இதுதான்.

**குர்ஆன்: 26:213**

فَلَا تَدْعُ مَعَ اللَّهِ إِلَٰهًا آخَرَ فَتَكُونَ مِنَ الْمُعَذَّبِينَ ۝

**ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் கற்பனையான ஓர் இலாஹுவை அழைக்காதீர்.**

ஒவ்வோர் சிருஷ்டியிலும் நான் இருக்கிறேன், நான் உண்டு என்றுணர்ந்து கொண்டிருக்கிற இறைவனுடன் அவனை விட்டும் வேறான ஓர் இலாஹுவைக் கற்பனையாய் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமென்பது ஆயத்தின் அர்த்தமாகும். அதாவது என்னைவிட்டும் என் இறைவன் வேறானவன் நான் மற்றெல்லாச் சிருஷ்டிகளையும் விட்டு வேறானவன் என்ற கற்பனையில் ஊறவேண்டாமென்பதே அதன் சாரமாகும். எனவே வணங்கப்படுகிற சிருஷ்டியென்று பொருள் கொள்வது தவறல்லவாயினும் அது உளஆக்கலுக்குப் பொருந்தாம லிருப்பதால் சிருஷ்டியென்று இலாஹுக்குப் பொருள் கொள்வதே சரியாகும்.

ஆயினும் வணங்கப்படுகிற என்பதற்குரிய எச்சொல்லும் கலிமத்துத்தையிபாவில் கிடையாது. முஷ்ரிக்கீன்கள் கலிமா விலுள்ள இலாஹு என்ற சொல் அவர்களால் வணங்கப்பட்ட விக்கிரகங்களைக் குறிப்பிடுவதாகவே நம்பினார்கள். எனவே அவ்வகை மக்களுக்கு வணங்கப்படுகிற இலாஹு என்று பொருள் விளக்கமளிப்பது சரியென்று தோன்றலாம். இது சரியாகாது.

ஏனெனில் விக்கிரக வணக்கம் செய்வோருக்காக மட்டும் கலிமா தரப்படவில்லை. எனவே வணங்கப்படுகிற அல்லது வணக்கத்துக்கு பாத்திரமான என்ற வசனத்தைக் கலிமாவோடிணைப்பது தவறேயாகும். இவ்விணைப்பு மனிதயுக்தியினால் கலிமாவில் புகுத்தப்பட்ட இடைச்செருகலாகும். இப்படியோர் வசனம் கலிமாவுக்கு அவசியமேயில்லை.

இலாஹு என்ற சொல்லுக்குச் சிருஷ்டியென்று பொருள் கொண்டால் அது வணங்கப்படுகிற வணங்கப்படாத சகல சிருஷ்டிகளையுமே குறிக்கும். நாம் முன்பு காட்டிய25:43 ஆயத்தின்படி மனிதனின் உள்ளத்திலுள்ள கற்பனையான எண்ணத்தைக்கூட இலாஹு என்ற சொல் குறிப்பிடுவதாய் இருக்கிறது. எனவே கலிமாவுடன் எவ்வித வசனங்களையும் நாம் பலாத்காரமாய் நுழைக்கவேகூடாது.

ஹவ்வா(அலை) அவர்களை ஆதம்(அலை) அவர்கள் எப்போது தம்மைவிட்டும் வேறானவர் என்று நம்பினார்களோ அப்போதே அவர்களுடைய உள்ளத்தில் ஷிர்க்கென்ற துவித உணர்வு முளைவிட ஆரம்பித்துவிட்டது. துவித உணர்வு மனித உள்ளத்துக்கு இனிமை(இன்பம்) தருவதால் அதைக் குர்ஆன் ஹதீஸுகள் பழம் என்று உருவகப்படுத்தி விபரம் தந்திருக்கின்றன. ஆதம்(அலை) அவர்கள் அனாநிய்யத்தற்ற நிலையில் ஜன்னத்தில் வாழ்ந்தவர்கள். அதாவது அப்து றப்பு வென்ற வேறுபாடற்ற நிலையில் தன்னையன்றிப் பிற பொருள் இல்லையென்ற நிலையில் வாழ்ந்தவர்கள். ஜன்னத் அவர்களுடைய அறிவில் அமைந்திருந்தது. கனவு எமதுள்ளத்தில் அமைந்திருப்பதைப் போல. அவர்களுடைய உண்ணல், குடித்தல் போன்ற அனுபவ விஷயங்கள் யாவும் பௌதீக உலகச் செயல்களுக்கு முரணானவை. ஜன்னத் என்ற சொல்லுக்கு மனித அறிவில் மறைந்தது என்பதும் ஓர் கருத்தாகும். மனிதன் ஓரளவேனும் விளங்கிக்கொள்ள

வேண்டுமென்பதற்காகவே ஜன்னத்துடையவும் ஆதம்(அலை) அவர்களுடையவும் விஷயங்களை நாமறிந்துள்ள விஷயங்களைப் போல் உருவகப்படுத்தி கூறப்பட்டிருக்கிறது. ஜன்னத்தில் அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருந்த மரம் ஷிர்க்கென்ற ஆணிவேரற்ற மரமாகும். இதை விபரிப்பது மிகக் கடினமாயிருக்கிறது. சுருங்கக் கூறினால் அனுபவிப்பவன். அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் என்ற திரிபுடி உணர்வு அற்றவர்களாய் இருந்த ஆதம்(அலை) அவர்கள் "தஜயுனுல் ஊலா" என்ற பொதுக்கற்பனையில் விதிக்கப்பட்டிருந்த தற்கமைவாய்த் தன்னில் இருந்தே ஹவ்வா(அலை) அவர்கள் வெளிப்படக்கண்டார்கள். இக்காட்சி அவர்களுடைய அறிவுக் கண்ணைக் கொண்டு கண்ட காட்சியாகும். இக்காட்சியில் ஹவ்வா(அலை) தம்மைவிட்டும் வேறானவர்தானென்ற எண்ணம் ஊன்றிப் பதிந்த போதுதான் புறக்கண்ணைக் கொண்டு ஹவ்வா (அலை) அவர்களை இடத்தால் காலத்தால் வேறுபட்டதாய்க் கண்டார்கள். அதாவது சூட்சுமமாய் மறைந்திருந்த பௌதீகப் புலன்கள் யாவும் வேலைசெய்ய ஆரம்பித்தன. வியாபகமாய் இருந்த ஜன்னத் இப்போது நாம் வாழும் பௌதீக உலகாய் அவர்களறிவில் அமைந்தது. என்னையன்றி எதுவுமே இல்லையென்ற நிலையில் வியாபகமாய் இருந்த அவர்களுடைய உடல் சுமார் 6-7அடி உயரம் கொண்ட பௌதீக உடலாய்க்காட்சியளித்தது. எப்போது ஆதம்(அலை) அவர்களுடைய உள்ளத்தில் துவித உணர்வு அரும்பிவிட்டதோ அப்போதே அவர்களிடமிருந்த நூர் என்ற அறிவு பகுத்தறிவென்ற தளையைத் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்டது. "இன்ஸானுன் கபீர்" என்ற பெரிய இன்ஸானாய் இருந்த ஆதம்(அலை) துவித உணர்வை எடுத்துக்கொண்டபோது "இன்ஸானுன் ஸகீர்" என்ற சின்ன இன்ஸானாய்க் காட்சியளித்தார்கள். இவ்விபரம் விபரிக்கக்கூடிய ஒன்றல்ல. எனவே மிகச்சுருக்கமாய்க் கூறுகிறேன்.

நாம் குறைந்த தத்துவங்களோடு கனவை அனுபவிப்பது போல ஆதம்(அலை) அவர்கள் கூடிய தத்துவங்களோடு ஜன்னத்தை அனுபவித்தவர்கள். நாம் கனவில் நன்மை தீமை, இன்ப துன்பம் இரண்டையும் அனுபவிக்கிறோம். ஆதம்(அலை) ஜன்னத்தில் இன்பத்தை மட்டுமே அனுபவித்தவர்கள். இவர்களை கலீபாவாகவே இறைவன் சிருஷ்டித்திருந்தான். ஓர் கலீபா நிரப்பம் பெற்றிருக்க வேண்டியது அவசியம். ஜன்னத்தில் இன்பத்தை மட்டும் அனுபவமாய்க் கொண்டிருந்த ஒருவர் துன்பத்தையும் அனுபவமாய்க் கொள்ளாமல் நிரப்பம் பெறமுடியாது. எனவே இறைவனுடைய நாட்டப்படி முழுமையைப் பெறுவதற்காகவே ஆதம்(அலை) அவர்கள் துன்யாவுக்கு அனுப்பப்பட்டார்கள். கலீபா என்ற கமாலியத்தை(பூரண நிலைமையை)ப் பெறுவதற்காகவே அவர்களுக்குக் கலிமா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர்களுடைய அறிவில் ஓர் இறக்கத்தைப் பெற்றார்கள். இது அல்லாஹ்வுடைய நாட்டத்தைப் பொறுத்ததாகும். இவ்விபரத்தை இன்னும் தெளிவாய் அறியவேண்டுமானால் குர்ஆனின் 7:189, 2:30, 2:35, 7:12, 2:34, 2:36, 2:37, 2:38 போன்ற ஆயத்துக்களை ஆராய்ந்து தெளிவு பெறுங்கள். நான் மிகச் சுருக்கமாய்க் கூறிய விபரத்திலிருந்து நீங்கள் பெறவேண்டிய உண்மை என்னவென்றால் இவ்வுலகில் வஹ்மு என்ற பேத புத்தியில் மூழ்கி வாழும் நாம் எமது தந்தை ஆதம்(அலை) அவர்கள் வாழ்ந்த ஜன்னத்தின் 1ம் படித்தரத்தையே அடைவதானாலும் அணுவேனும் ஷிர்க்கென்ற அனாநிய்யத்திருக்கும் வரையிலும் அடைய முடியாதென்பதே.

எவ்வித அமல்களைக் கொண்டும் ஜன்னத்தைப் பெறமுடியாதென்பதையும் உள்ளம் ஷிர்க்கற்ற நிலையிலிருக்கும் போது இறைகிருபையைக் கொண்டு மட்டுமே ஜன்னத்தில் பிரவேசிக்கலாம் என்பதையும் எமது முதல் நூற்களில் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளேன். இப்போது விஷயத்துக்கு வருவோம்.

கலிமாவில் தரப்பட்டுள்ள “இலாஹு” என்ற சொல்லைத் தனிப் பெயர்ச் சொல்லாய்க் கொண்டாலும் அச்சொல் ஒருமையிலே கூறப்பட்டிருக்கிறது. ஓர் மரத்தில் வேர், பட்டை, கிளை, இலை, பூ , பிஞ்சி, காய், பழம் போன்ற எத்தனையோ வகையான வெவ்வேறான பொருட்கள் இருக்கும்போதும் அவற்றையெல்லாம் (ஒன்று சேர்த்து) ஏகமாக்கி மரம் என்று கூறுவது போல சிருஷ்டிகள் வகையில், தொகையில் அடக்க முடியாத அவ்வளவு அதிகமாயிருப்பினும் (இலாஹு) சிருஷ்டி யென்ற ஒருமைச் சொல்லிலேயே கட்டுண்டு விடுகின்றன. சர்வ ஆலங்களிலுமுள்ள சர்வ முகங்களையும் ஏகமாக்கி “வஜ்ஹு” முகம் என்று 2:115ம் ஆயத்தில் ஒருமையில் கூறியிருப்பது போலவே கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லும் பாவிக்கப்பட்டிருக்கிறது. இலை, காய், பூ, பழம் வெவ்வேறாயும் வெவ்வேறு தன்மையுடையவையாயும் இருக்கின்றன. அவற்றில் ஒரு சில எமக்கு ஆகுமானவையாயும் ஒரு சில எமக்கு ஆகாதவையாகவும் இருக்கலாம். நாம் அவையொவ்வொன்றின் தன்மைக் கேற்றபடி - விதிக்கேற்றபடி - ஹுக்கூமுக்கேற்றபடி நடந்துகொள்கிறோம். இவை வெவ்வேறாய் வெவ்வேறு குணமுடையவையாயிருப்பினும் அவையாவும் மரம்என்ற சொல்லில் ஏகமாய் அமைந்துவிடுகின்றன. இதைப்போலத்தான் பன்றி போன்ற நல்லதீய பொருட்கள்யாவும் ஒவ்வோர் வகையில், இனத்தில், குணத்தில் வேறுபட்டிருக்கின்றன. அவ்வவற்றின் ஹுக்கூமின்படி நடந்துகொள்வது எமது கடமை. இதற்கு வேதம் விபரம் தந்திருக்கிறது. எனினும் இலாஹு என்ற ஒருமைச் சொல் மரம் என்ற சொல்லைப்போல சர்வ ஆலங்களையும் ஏகமாய்க்கொண்டதாய் அமைந்திருக்கிறது. அதாவது ஒருமையில் கூறிய இலாஹு என்ற தனிப்பெயர்ச் சொல் பொதுப் பெயர்ச் சொல்லாயும் அமைந்திருக்கிறது. எனவே இலாஹு என்ற சொல்லுக்கு அல்லாஹ், றப்பு, நாயன், என்றெல்லாம் பொருள் கூறுவது உண்மையைப் புரட்டுவதாகவே அமையும்.

இப்படியெல்லாம் பொருள்கொண்டால் அறிஞர்களால்கூடத் தௌஹீதை விளங்கிக்கொள்ள முடியாமலாகிவிடும். இன்னும் சிலர் இலாஹு என்றால் படைப்பவன் என்றுகூடப் பொருள் கூறுவதாக நான் அறிகிறேன். இலாஹு என்ற சொல்லுக்குப் படைப்பவன் என்ற பொருளையே அல்லாஹ் நாடியிருந்தால் "லாகாலிக் இல்லல்லாஹ்" என்றே கலிமா தரப்பட்டிருக்கும். இப்படிக்கலிமா தரப்படவில்லை. இலாஹு என்ற சொல் நாயன் என்ற பொருளில் பாவிக்கவேண்டு மென்றிருந்தால் "லாறப்பு இல்லல்லாஹ்" என்றே தரப்பட்டிருக்கும். இப்படித்தரப்படாமல் "லா இலாஹ" இல்லல்லாஹ் அல்லாஹ்வைத்தவிர சிருஷ்டி இல்லையென்றுதான் கலிமா தரப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தைப் பலமுறை நான் திரும்பத்திரும்பக் கூறுவதன் நோக்கம் இவ்வுண்மை உங்களுள்ளத்தில் பதிக்கப்பட வேண்டும் என்பதே. கலிமாவின் உண்மையான கருத்தை எமது யூகத்துக் கேற்றபடி மாற்றிக்கொண்டால் உலகமக்களில் எவருமே ஷிர்க்கிலிருந்தும் விடுபட முடியாதென்பதை நாம் உணர வேண்டும். பாமரமனிதன் மட்டுமின்றி அறிஞர்களாலும்கூடத் தௌஹீதை விளங்கிக்கொள்ள முடியாது. இன்றைய உலக முஸ்லீம்களில் மிகப் பெரும்பாலாருடைய நிலமை இதுதான். தற்காலம் எம்மிடையேயுள்ள ஒருசில மௌலவிமார்களுக்கு இவ்விஷயத்தில் சந்தேகம் தோன்றுகிறது. மாபெரும் மேதைகளான இமாம்கள் எம் முன்னோரான அறிவு மேதைகள் கலிமாவின் பொருளை அறியாமலிருந்திருப்பார்களா? இந்த நூலாசிரியரான அப்துல்லாஹ் மட்டுந்தான் அறிந்து கொண்டாரா? இவரென்ன ஒரு நபியா? வலியா? மௌலவியா? மௌலானாவா? அறபு பாஷையில் இவருக்குப் பாண்டித்தியமுண்டா? இவை தான் பெரும்பாலாரின் சந்தேகம்.

ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற எமது முதல் நூலின் முதலாம் பதிப்பில் 427ம் பக்கத்திலிருந்து 461ம் பக்கம் வரையிலும் இக்கேள்விகளை நானே கேட்டு அவற்றுக்குரிய பதில்களையும் தெளிவாய் விளக்கியுள்ளேன்.

அவசியமானோர் அதை வாசித்துத் தங்கள் சந்தேகத்தை நீக்கிக் கொள்க. இதே சந்தேகமும் கேள்விகளும் றசூல்(ஸல்) அவர்களுடைய கால மக்களாலேயே எழுப்பப்பட்டுள்ளன. அந்த இருண்ட கால மக்களின் அறிவே விஞ்ஞான கால மக்களாகிய நம்மிடமும் உண்டு என்றால் அது மனிதகுலம் வெட்கப்படவேண்டிய ஒரு விஷயமாகும். இவ்வித கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் காரணம் என்னவென்றால் மார்க்கத்தைப் பற்றிய அறிவு எள்ளளவும் இல்லாமலிருப்பதும் முன்னோரைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்று வதும் தங்களின் வழிகாட்டிகளை மேதைகளாய் நம்பிக் குரங்குப்பிடி பிடித்துக் கொண்டிருப்பதுமேயாகும். ஒவ்வொரு கல்விமானுக்கும் மேலானதொரு கல்விமானை அல்லாஹ் வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை நாம் அறியவேண்டும். முன்னுள்ளோர் மட்டுமே அறிஞர்களென்று நம்புவது மூடத்த னமாகும்.

இலாஹுஃ என்ற சொல் கலிமத்துத்தையிபாவில் சிருஷ்டி என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் இலாஹுஃ என்பது ஒரு பொதுப்பெயர்ச்சொல்லே என்பதையும் மறுக்க முடியாது. இலாஹுஃ என்ற சொல்லுக்கு இறைவன் என்று பொருள் கொண்டால் தௌஹீது நிலைப்படாது. சிருஷ்டி என்று பொருள் கொண்டால் அது பொதுப்பெயர்ச் சொல்லாயும் தௌஹீதை நிலைப்படுத்துவதாயும் அமையும். இலாஹுஃ என்ற சொல்லுக்கு நாயன், வணக்கத்திற்குரிய நாயன், வணங்கத் தகுதியான நாயன், இறைவன், றப்பு என்றெல்லாம் பொருள் கொள்வது அனாறிய்யத்தை உறுதிப்படுத்துமே தவிர அதை அழிக்காது. சிருஷ்டி என்று இலாஹுஃக்குப் பொருள்கொண்டால் அனாறிய்யத் என்ற ஷிர்க் முற்றாக அழிக்கப்படுகிறது.

வணங்கப்படுகிற சிருஷ்டிகளான பலஇலட்சம் இலாஹுஃகள் இருக்கும்போதும் அவற்றையெல்லாம் இறைவன் ஒன்று சேர்த்துத்தான் இலாஹுஃ என்று ஒருமையில் கூறியி

ருக்கிறான். பன்மையில் ஆலிஹத் என்று கூறியிருக்கலாம். ஆனால் அப்படிக் கூறப்படவில்லை. மனித அறிவுக்கேற்படும் பற்பல சந்தேகங்களையும் நீக்கவேண்டுமென்று நாடிய இறைவன் இலாஹுˇ என்ற சொல்லை ஒருமையில்கூறி ஒரே நொடியில் தௌஹீதை விளக்கியிருக்கிறான். இலாஹுˇ என்பதைச் சிருஷ்டி என்று கொண்டால் ஸுˇறத்தென்ற சிருஷ்டி இல்லையாயின் ஸுˇறத்தைப் பெற்றிருந்த றப்பும் இல்லை யென்றாகும். அப்து, றப்பு என்ற பெயர் இரண்டுண்டு என்றால் அப்பெயர்களிரண்டுக்கும் மூலமான(வுஜூˇது) அல்லாஹ் ஏகமானவன்(அஹதுன்) என்று பெறப்படுகிறது. சுத்தசத்தியமான தௌஹீது உறுதியாகிறது. இலாஹுˇ என்ற தனிப் பெயர்ச் சொல் பொதுப் பெயர்ச் சொல்லாகவும் விளக்கமளிக்கிறது. (மிகநுட்பமாய் உணர்க)

இலாஹுˇ என்பதை வணக்கத்துக்குரிய நாயன் (றப்பு) என்று கொண்டால் அல்லாஹ் தவிர றப்பு இல்லை, அல்லாஹ்வே றப்புவாய் இருக்கிறான் என்றுதான் கலிமா விளக்கம் தரும். அப்படியானால் அப்து யார்? அல்லாஹ்வா? அல்லாஹ்வின் வேறானதா? இக்கேள்விக்கு விடை காண முற்பட்டால் அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்ற இணை கற்பித்தலே நிலைப்படும். இதில் தௌஹீது எப்படித் தரிபடும்? கலிமத்துத்தையிபாவை எமது யூகத்தின்படி புரட்டிக் கலிமத்துக் கபீஸாவாக மாற்றிக்கொண்டால் அந்தத்துர்நாற்றக் கலிமா அறிவின் கேள்விக்கு எப்படி விடையளிக்கும்? அல்லாஹ்தான் றப்பு என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்காக ஒரு கலிமா அவசியமல்ல. அல்லாஹ்தான் றப்பு என்றால் சிருஷ்டி என்பது யார்? இந்தக் கேள்விக்கு விடை காணமுடியாத மனிதன் மீண்டும் அப்து வேறுதான் றப்பு வேறுதான் என்ற ஷிர்க்கில் (துவிதக்கொள்கையில்) தான் நிலைப்பட்டுவிடுகிறான். இவ்விஷயத்தை தெளிவாய் அறிந்திருந்த இறைவன் மனிதனின் அறிவிலேற்படக் கூடிய அத்தனை கேள்விகளுக்கும் விடை

தரக்கூடியதாகவே கலிமாவைத் தந்திருக்கிறான். முற்றறிவான இறைவனின் கூற்றை ஏற்க முடியாத மனிதன் தன் யூகத்தைக் கொண்டு புரட்ட, பிழைகாண முற்பட்டதால்தான் இன்று இஸ்லாம் நேர்முரண் திசையில் போய்க்கொண்டிருக்கிறது. எமது மூடத்தனமான யூகத்தை விட்டுவிட்டு இறைவசனத்தில் தெளிவு பெறும் வரையிலும் ஆராய்ந்து, இறைவன் பேச்சே ஹக்கு என்பதை உள்ளம் ஒப்புக்கொள்ளாதவரையிலும் அவ்வுள்ளத்தில் ஈமான் நுழையவே நுழையாது. குர்ஆன் ஹதீஸுகளையும், பகுத்துணர்ந்து ஆராயும் அனுமான அறிவையும் (உண்மையான யுக்தியையும்) மூலையில் எறிந்து விட்டு, வாயினால் குர்ஆனை ஏற்றுக்கொண்டோம் என்பதும் குர்ஆனுக்கு முரணாய் அபூஜஹ்லின் கொள்கையைக் குர்ஆனின் வியாக்கியானம் என்று மக்களை ஏமாற்றுவதும் அல்லாஹ் றஸூலுக்கு முற்றும் முரணான செயலாகும். இன்னும் சிந்தனை செய்யுங்கள். "இல்லா" (தவிர,அன்றி) என்றசொல் இலாஹு என்பதற்கு அல்லாஹ் நாடிய பொருள் "சிருஷ்டி" என்பதே என்று நிரூபணஞ் செய்கிறது.

வுஜூதுவாய் மனித அறிவிலமையா மலிருக்கிற அல்லாஹ் தன்னுடைய இரண்டாவது மர்த்தபாவை (அறிவினால் அறியக் கூடிய றப்பு - அப்து என்ற றுபூபியத்தின் உண்மையை) மனித அறிவுக்கு மிக இலகுவாய் விளக்குவதற்காகவே இலாஹு என்ற சொல்லை "இல்லா"(அன்றி) என்ற சொல்லோடும் அவ்விரு சொற்களையும் "அல்லாஹ்" என்ற சொல்லோடும் சேர்த்து அமைத்திருக்கிறான். இலாஹு என்ற சொல்லுக்கு எந்தச் சிருஷ்டியை எடுத்துக்கொண்டு நோக்கினாலும் அது தௌஹீதை மட்டுமே உறுதிப்படுத்தும். 112ம் ஸூறாவில் அஹதுன் என்ற சொல்லை ஸமது என்ற சொல் தெளிவுபடுத்தியதுபோல கலிமாவிலுள்ள இல்லா என்ற சொல், இலாஹு என்பது சிருஷ்டியை நோக்கிக் கூறப்பட்டதே யென்று விளக்குகிறது. "இஸ்றாக்", "நித்து" என்பது இணையேற்படுத்தலென்ற ஷிர்க்கை குறிப்பதாகும். உளதான ஒரேயொரு பொருளைச் சாரக்கண்ணன் இரண்டாய் அல்லது

பலதாய்க்காண்பதுபோல நிலையாயுள்ள வுஜூதான மூலப் பொருளுடன் வேறுபல மூலப்பொருட்களும் உண்டென்று உள்ளத்தில் பொய்யான விசுவாசத்தைக் கொள்வதன் பெயர்தான் ஷிர்க்கென்பது. இது ஓர் உளஆக்கலாய் இருக்கிறது. சொல் செயல்களில் ஏற்படும் ஷிர்க்குகள் இதிலிருந்து பிறந்தவைதான். இவை புறஆக்கலாய் இருக்கின்றன. இந்த ஷிர்க்கை ஒரே நொடியில் தோற்கடிப்பதற்காகவே கலிமாவைக் கொண்டு ஷிர்க்குக்கு எதிரான தௌஹீது தரப்பட்டிருக்கிறது. அனாநிய்யத்தென்பதும் ஷிர்க்கென்பதும் மனிதன் தன்னுடைய அறிவிலேற்படுத்திக் கொண்ட வெறும் பொய்யாய்(பாத்திலாய்) இருக்கிறது. அனாநிய்யத் என்பது உண்மையிலேயே இல்லாத ஒன்றாகும். இது வஹ்முவினால் ஏற்படுகிற ஓர் உளநோயாயி ருக்கிறது. இவ்வுளநோயை நீக்குவதற்காக அருளப்பட்ட சஞ்சீவி தான் கலிமா என்பது. குர்ஆன் 14:24, 25, 26, 27ம் ஆயத்துக்களை ஆராய்ந்து தெளிவுபெறுக. வணக்கத்தைக் கலிமாவோடு பிணைப்பது பொருந்தாது.

குர்ஆனைக் கலிமாவும் கலிமாவைக் குர்ஆனும் சூழ்ந்து(முஹீத்தாய்) இருப்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். குர்ஆனைப் புரட்டவோ இருட்டடிப்புச் செய்யவோ வேண்டியதில்லை. குர்ஆன் ஹதீஸுகள் உண்மையைத்தான் கூறிக்கொண்டிருக்கின்றன. ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளாமல் மறுப்பதும் மனிதர்களின் சுயநிர்ணய உரிமையைப் பொறுத்த ஒரு விஷயம். பொய்யை உண்மையென்று கூறுவதால் அது ஒரு போதுமே உண்மையாய் மாறிவிடுவ தில்லை. பொய்யென்பது வெறும் கற்பனை யூகமேயன்றி அப்படி ஒன்று இல்லவே இல்லை. ஆனால் பொய் உண்டென்று மக்களில் பெரும்பாலோர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும் பொய் வெறும் கற்பனையேதான். உண்மை என்றும் இருந்தது போலவே தான் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கழிவில்லை.

**குர்ஆன்: 10:99**

وَلَوْ شَاءَ رَبُّكَ لَآمَنَ مَن فِي الْأَرْضِ كُلُّهُمْ جَمِيعًا ۚ
أَفَأَنتَ تُكْرِهُ النَّاسَ حَتَّىٰ يَكُونُوا مُؤْمِنِينَ ﴿٩٩﴾

**உமதிறைவன் விரும்பினால் பூமியிலுள்ள யாவரும் மூமீன்களாகி விடுவார்கள். மனிதர்கள் விசுவாசிகளாகி விடவேண்டுமென்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?**

**குர்ஆன்: 29:69**

وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ۚ
وَإِنَّ اللَّهَ لَمَعَ الْمُحْسِنِينَ ﴿٦٩﴾

**யார் நம்மில் பாடுபட்டார்களோ (ஜிஹாது, அறிவுப் போராட்டம் செய்தார்களோ) அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம்.**

# 37

# அரைகுறைகளின் மயக்கமும் தெளிவும்

**குர்ஆன்: 114:3**

إِلٰهِ النَّاسِ

**(இலாஹின்னாஸ்) மனிதர்களின் இறைவன் (கடவுள்).**

இவ்வாயத்தின்படி இலாஹு என்ற சொல் இறைவனை மட்டும் சுட்டிக்காட்டியிருப்பதால் குர்ஆனைக் குர்ஆனைக்கொண்டே விளங்குதல் என்ற வகையில் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன் என்று பொருள் கூறுவதில் என்ன தவறிருக்கிறது என்றொரு சந்தேகம் ஒருசில உலமாக்களுக்கு உருவாகிறது. இது ஓர் மௌலவி என்னிடம் கடிதமூலம் கேட்ட கேள்வியாகும். நான் அப்போதே அவருக்கு விடை கூறிவிட்டேன். இவ்விதச் சந்தேகம் ஏற்பட்ட ஏனைய உலமாக்களுக்கு இன்ஷா அல்லாஹ் நாம் இங்கு விடை கூறுவோம்.

**குர்ஆன்: 114:1,2,3,4,5,6**

قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ۝١ مَلِكِ النَّاسِ ۝٢ إِلَٰهِ
النَّاسِ ۝٣ مِن شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ ۝٤ الَّذِي
يُوَسْوِسُ فِي صُدُورِ النَّاسِ ۝٥ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ۝٦

**நீர் கூறுவீராக; மனிதர்களின் இறைவனிடம்(றப்பிடம்) நான் பாதுகாவல் தேடுகிறேன்.(அவன்) மனிதர்களின் அரசன்(மலிக்). (அவன்) மனிதர்களின் இலாஹு. மனிதர்களின் இருதயங்களில் (வீணான) சந்தேகங்களையூட்டிவிட்டு மறைந்துகொள்ளும் விஷமிகளின்(வஸ்வாஸ் என்ற கன்னாஸின்) தீங்கை விட்டும் (இரட்சிக்கக் கோருகிறேன். அத்தகைய விஷமிகள்) ஜின்களிலுமுண்டு. மனிதரிலுமுண்டு.**

இவ்வாயத்தைத் தெளிந்த அறிவோடு நோக்குங்கள். இரண்டாவது வசனத்தில் மனிதர்களின் றப்பிடம் (இறைவனிடம்) என்று கூறப்பட்டிருக்கிறது. மனிதர்களின் இறைவன் றப்புத்தான் என்பதில் சந்தேகமில்லை. றப்பிடமே பிரார்த்தனை செய்யப்பட் டிருப்பதால் அந்த றப்புத்தான் வணங்கப்படுபவனாயும் வணக்கத் துக்குத் தகுதியானவனாயும் இருக்கிறான். பிரார்த்திப்பவர் வணங்குகிறார் என்பதற்கு குர்ஆன் ஹதீஸில் ஆதாரமுண்டு. றப்பு என்ற சொல் ஆளுமையுடையோன், எஜமான் என்பதை நோக்குவதாயிருக்கிறது. ஆளுமையுடையோன், எஜமான், வணக்கத்துக்குரிய றப்புத்தான் என்பது தெளிவாய் விளக்கப்பட்டி ருப்பதால் மீண்டும் வணக்கத்துக்குரிய(இலாஹு) றப்பு, கடவுள், நாயன் அவன்தான் என்று கூறப்படவேண்டியதில்லை. ஆனால் இறைவன் கூறியிருக்கிறானேயென்று நாம் கொண்டால் அது எமது மருட்சிதான், கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரியநாயன்(ஆண்டவன்) என்று பொருள்

கொண்டது எம்முன்னோரின் மருட்சியாயும் அவர்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவது இக்காலத்திலுள்ள விளக்கம் பெறாத உலமாக்களின் மருட்சியாயும் இருக்கிறது.

**குர்ஆன்: 31:21**

وَإِذَا قِيلَ لَهُمُ اتَّبِعُوا مَا أَنزَلَ اللَّهُ قَالُوا بَلْ نَتَّبِعُ
مَا وَجَدْنَا عَلَيْهِ آبَاءَنَا ۚ أَوَلَوْ كَانَ الشَّيْطَانُ
يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ السَّعِيرِ ﴿٢١﴾

**அவர்களைநோக்கி அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை, எங்கள் மூதாதைகள் (எமது வழிகாட்டிகளான இமாம்கள்) எதன்மீதிருக்கக்கண்டோமோ அதையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதைகளை ஷைத்தான் நரகவேதனையின்பால் அழைத்திருந் தாலுமா? (பின்பற்றுவார்கள்)**

எமது உலமாக்களில் ஒரு கூட்டம் இமாம்களைப் பின்பற்றாதவன் காபீர் என்று கூறுகிறது. இன்னோர் கூட்டம் வேறுசில இமாம்களைப்பின்பற்றிக் கொண்டிருந்தும் இமாம்களைப் பின்பற்றுபவன் காபீர் என்று கூறுகிறார்கள். ஆனால் இவ்விருகூட்டமும் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன் என்றே பொருள் கூறுகிறார்கள். இவ்விருவகை உலமாக்களும் இரவல் மூளையுடையவர்களேயன்றிச் சுயசிந்தனை, ஆராய்வுடையவர் களுமல்ல குர்ஆனை இமாமாகக் கொண்டவர்களுமல்ல. இவ்வகையினர் மன்கூல், மஹ்கூல் என்ற பிரமாணங்களை அறிந்தவர்களுமல்ல, நடைமுறையில் எடுத்துக் கொண்டவர்

களுமல்ல. அப்படியிருந்தும் இவர்கள் தங்களை ஞானமேதை களாகவே காட்டிக்கொள்கிறார்கள். என்னே! இவர்களின் அறியாமை.

(114-3) இவ்வாயத்து அருளப்படுவதற்கு முன்பும் அருளப்பட்ட காலத்திலும் இக்காலத்திலும் உள்ள மனிதர்களில் ஸுன்னத்வல் ஜமாஅத்தைச் சேர்ந்த மூமீன்களேயன்றி மூமீன்களல்லாத எவரும் முஸ்ரீக்கீன்களால் வணங்கப்படுகிற இலாஹு அல்லாஹ்வின்(லாஹிர்) தோற்றப்பாடுதான் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இறைவனின் அன்பைப்பெற முஷ்ரிக்கீன்கள் வஸீலாவாக எடுத்துக்கொண்டிருந்த "லாத்", "உஸ்ஸா" "மனாஸ்" போன்ற விக்கிரகங்களைத்தான் அம்மக்கள் இலாஹு, ஆலிஹத் என்று ஒருமை பன்மைகளில் கூறிக்கொண்டிருந்திருக்கிறார்கள். இதற்கு நிறைய ஆதாரங்களுண்டு. இன்றும் மனிதன் அப்படித்தான் கூறிக்கொண்டிருக்கிறான். இவ்வித இலாஹுகள் அல்லாவைவிட்டும் வேறானவையல்ல, என்பதையும் புலனாட்சியில் கட்டுண்ட மனிதனுக்கு சிருஷ்டி உண்மைப் பொருள் போல் தென்படினும் அது (ஹுரூர்) மயக்குக் காட்சி என்பதையும் விளக்கவே நாம் காட்டிய 114:3ம் வசனத்தில் மனிதர்களின் இலாஹு என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த இலாஹு என்ற சொல்லுக்கு ஆண்டவன், வணக்கத்துக்குரிய நாயன், தெய்வம், கோட் என்றெல்லாம் பொருள் கொள்வது மருட்சியாயும். அறிவுக்கு முரணாயும் அமைகிறது. எப்படியென்றால்,

மனிதர்களின் ஒரு கூட்டத்தாரின் இலாஹு விக்கிரக மாயும் இன்னொரு கூட்டத்தாரின் இலாஹு றப்புவாயும் இருக்கும் போதும் மனிதர்களின் எல்லாக் கூட்டத்தினரையும் ஒன்று நோக்கித்தான் இறைவன், மனிதர்களின் இலாஹு என்று கூறியிருக்கிறான். எனவே இலாஹு என்றசொல் வணங்கப்பட்ட சிருஷ்டியையும் வணங்கப்படத்தகுதியான சிருஷ்டிகர்த்தாவையும் ஒன்றிணைத்த பொதுப்பெயர்ச் சொல்லாகவே இறைவனால்

பாவிக்கப்பட்டுள்ளதென்பது வெளிப்படையாகவே தென்படுகிறது. ஆகவே இலாஹின்னாஸ் என்பதிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு றப்பு என்று மட்டும் பொருள் கொண்டாலும் அப்து என்று மட்டும் பொருள் கொண்டாலும் குர்ஆனைப் புரட்டுவதாகவே அமையும். அந்த இலாஹு என்ற சொல் இவ்வசனத்தில் பொதுப்பெயர்ச் சொல்லாகவே அமைந்திருக்கிறதென்பதை எம்மால் மறுக்க முடியாது. முஸ்லீம்களின் இலாஹு இறைவனாயும் முஷ்ரீக்கீன்களின் இலாஹு சிருஷ்டியாயும் இருப்பதால் மனிதர்களின் இலாஹு என்னும்போது அது மனிதனால் வணங்கப்பட்ட இலாஹுவான சிருஷ்டியையும் மனிதர்களின் இறைவனான றப்பையும் ஒன்றிணைத்த பொதுப் பெயர்ச்சொல்லாகவே தரப்பட்டிருக்கிற தென்பதை மறுக்கவே முடியாது.

அல்லாஹ்வையன்றி இல்லையென்றும் இருப்பது அல்லாஹ் மட்டுமேயென்றும் கலிமா உணர்த்தும் தௌஹீதை அடிப்படையாய்க் கொண்டே இந்த முடிவை நாம் கொண்டிருக்கிறோம். கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய நாயன் என்று பொருள் கொண்டால் அறிவுக்கும் உண்மைக்கும் முரணாய் அபூஜஹ்லின் கொள்கையான ஷிர்க்கிலிருந்து கொண்டே நாம் குர்ஆனை அணுகினோம் என்று அர்த்தமாகும். மேலும் கூறுவதானால் இலாஹின்னாஸ் என்பதன் கீழ்வசனங்களைக் கொண்டு நாம் கூறிய உண்மையைப் பூரணமாய் நிரூபிக்கமுடியும். ஆயினும் நான் விரிவை அஞ்சுவதால் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு இவ்வளவு விபரமே போதுமானதாகும் என்று நம்புகிறேன்.

# 38

### குர்ஆனை விளங்கும் 4வது வழி:~

## முன்கூறிய மூன்று வழிகளையும் மீறாமல் யூகித்தறிவது

நாம் இவ்வளவு தூரமும் முன்கூறிய மூன்று பிரமாணங்களையும்கொண்டு அவற்றை மீறாமல்தான் சிந்தித்து அறிந்தோம். ஆகவே நாம் இதை விபரிக்க வேண்டியதில்லை ஆனால் விஞ்ஞானரீதியான யூகம் ஒன்றைமட்டும் மிகக்கு றுகலாய் நோக்குவோம். அல்லாஹ்வுடைய வாஜிபான ஸிபத்து களிலொன்று "ஹையுல்கையூம்". நித்தியஜீவனாய், அழி வில்லாமல், மாறுபடாமல், நிலையாய் இருந்து கொண்டி ருப்பவன் என்பதே அதன் அர்த்தமாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் இருப்பதானால் தாக்கமேற்படும். மாறுதலோ, அழிவோ(மறைவோ) ஏற்படும். ஒருபொருள் வேறு எதுவும் அதனுடன் இல்லாதபோது அழிவையோ மாற்றத்தையோ பெறவேபெறாது. என்றும் இருந்தது போலவேதான் இருந்து கொண்டிருக்கும். தோற்றும் பொருட்கள் அழிக்கப்பட்டால், தோற்றம் மறைந்து விட்டால், அவற்றிற்கு மூலமாயுள்ள அளப்பரும் சக்தி மட்டுமே மிஞ்சுமென்பது இன்றைய விஞ்ஞானத்தின் தீர்ப்பாகும். அந்தச் சக்தியிலிருந்து வெளியானதே சிருஷ்டியென்றால் சிருஷ்டியின் உற்பத்தியும், தரிபாடும், அழிவு அல்லது மறைவும் அந்த மாபெரும் சக்தியிலேதான் நடைபெற்றிருக்கும். எனவே சிருஷ்டியை ஆதேயம் என்ற குணியாயும் சக்தியை ஆதாரம் என்ற

குணியாயும் கொண்டால் இது தௌஹீதையே நிரூபிக்கிறது. ஆதாரத்தை விட்டு ஆதேயம் பிரிபடாது வேறு எங்கேயும் இருந்து வரவும் முடியாது. சிருஷ்டியான மனிதஅறிவு ஆதாரம், ஆதேயம் என்று விளங்குவதற்காகவே வகுத்துக் கொண்டாலும் உண்மையில் வுஜூது என்பது எவ்வகையிலும் பிரிபடக் கூடியதல்ல. எனவே அவனையன்றி ஒன்றுமேயில்லை என்று கூறும் கலிமா யுக்தியின்படியும் 100% மும் சரியாகவே அமைந்திருப்பதை நாம் காணலாம்.

**குர்ஆன்: 21:22**

لَوْ كَانَ فِيهِمَا آلِهَةٌ إِلَّا اللَّهُ لَفَسَدَتَا ۚ فَسُبْحَانَ
اللَّهِ رَبِّ الْعَرْشِ عَمَّا يَصِفُونَ ﴿٢٢﴾

**வானம் பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத வேறுஇலாஹுகள் இருந்திருந்தால் அவ்விரண்டும் கேட்டை அடைந்திருக்கும்.**

இரு பொருள் அல்லது பலபொருட்களிருந்தால் அவை ஒன்றையொன்று தாக்கும் என்ற விஞ்ஞானம் தற்போது கண்டறிந்த உண்மையை இவ்வாயத்து 1410 வருடங்களின் முன்பே விளக்கிக் காட்டியிருக்கிறது. இதைப் போல் குர்ஆனில் இடம்பெறும் 27:64, 17:39ம் போன்றவற்றையும் ஆராய்வுக்கு எடுத்துக் கொள்க. 21:22ம் ஆயத்தின்படியும் முன்காட்டிய ஹதீஸுகளின்படியும் மன்கூல் என்ற வேத ஆதாரத்தின்படியும் மஃகூல் என்ற தெளிந்த யுக்தியின்படியும் அவனுடன் அவனல்லாத எதுவுமேயில்லாத ஏகனாயிருப்பவனே அல்லாஹ் என்பது உறுதியாகிறது. அல்லாஹ் அல்லாத இலாஹு இல்லை என்று ஆயத்து வற்புறுத்துவதை நோக்குக. இன்னும் சிறிது யூகிப்போம்.

தங்கம் என்ற பொருளையோ அல்லது வேறொரு பொருளையோ நாம் காண்பதானால் ஏதாவது ஒரு ஸூறத்தில் (தோற்றத்தில்)தான் நாம் பார்க்க முடியுமேயன்றி அப்பொருளின் சுயவுஜூதை எம்மால் பார்க்கவே முடியாது. ஸூறத்தைக் கொண்டேயன்றி ஒரு பொருளுண்டென்பதை மனிதனால் அறியவே முடியாது. ஸூறத்தென்பது பௌதீகமாகவோ, சூட்சுமமாகவோ, பொருளாகவோ, குணமாகவோ இருக்கலாம். குணமும் ஸூறத்துடையதுதான். நல்லகுணத்துக்கும் தீய குணத்துக்குங்கூட ஸூறத்துண்டு. எனினும் எல்லோரும் இதை அறிவதில்லை.

மாலையும் மோதிரமும் தங்கமாயிருக்கும்போது அவை தங்கத்தைவிட்டும் வேறானவையென்று நாம் கூற முடியாது. மாலையும் தங்கமும் வெவ்வேறென்றிருந்தால்தான் அவை ஒன்றையொன்று தாக்கமுடியும். மாலையும் தங்கமும் பெயரளவில் வேறுபடினும் பொருள் ஒன்றாகவேயிருப்பதால் தங்கத்தை மாலையும் மாலையைத் தங்கமும் எப்படித் தாக்கமுடியும்? முடியாது. இதைப் போல் அப்து றப்பு என்பது பெயரளவில் வேறுபடினும் வுஜூது என்ற பொருள் (ஒன்றாக) ஏகமாகவே இருந்து கொண்டிருக்கிறது. அப்து என்ற ஸூறத்தும் றப்பு என்பதும் அல்லாஹ்வாகவே இருப்பதனால் தாக்க மேற்படாது. அப்தும் றப்பும் வெவ்வேறாயிருந்தால் தாக்க மேற்படும். அப்து என்ற சிருஷ்டி ஓர் இலாஹு வாகவும் றப்பு என்ற சிருஷ்டிகர்த்தா வேறோர் இலாஹுவாகவும் இருந்தால்தான் அவை ஒன்றையொன்று தாக்கமுடியும். றப்பு, அப்து என்ற பெயர்கள் ஒரே வுஜூதுவின் இரு நிலைமைகளுக்கு இடப்பட்ட இரு பெயர்களாயிருக்கும்போது எப்படித் தாக்கமேற்படும்? எனவே முஷ்ரிக்கீன்கள் வணங்கிக் கொண்டிருந்த லாத், உஸ்ஸா, மனாஸ் போன்ற இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவையென்று எப்படிக் கூறமுடியும்? எனவேதான் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று கலிமா விளக்கம் தருகிறது. அல்லாஹ் றப்பு என்ற பெயருடன் மறைந்தவனாயும்

(பாத்தினாயும்), அப்து என்ற பெயருடன் (லாஹிறாயும்) வெளிப்படையாய்த் தோற்றுபவனாயும் இருக்கிறான் என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். மூடத்தனத்தை வீசிவிட்டு உண்மையை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

21:22ம் ஆயத்தை மீண்டும் ஒருமுறை நோக்குங்கள். இவ்வாயத்தில் *“அல்லாஹ் அல்லாத வேறு இலாஹுகள் இருந்தால் கேட்டை அடைந்திருக்கும்”* என்ற வசனம் அல்லாஹ்வேயன்றி அல்லாஹ் அல்லாத இலாஹுகள் இல்லை(எல்லா இலாஹும் அல்லாஹ்வேதான்) என்பது மிகத்தெளிவாய், வெளிப்படையாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாயத்தில் தரப்பட்ட இலாஹு என்ற சொல்லை றப்பு என்று கொண்டாலும் அப்து என்று கொண்டாலும் அப்தையும் றப்பையும் ஒன்றிணைத்த பொதுப்பெயர்ச் சொல் என்று கொண்டாலும் அல்லாஹ்வுடன் அவனல்லாத வேறு எதுவுமே கிடையாது என்பதையே ஆயத்து நிரூபணஞ் செய்கிறது. இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமையால்தான் முஷ்ரீக்கீன்கள் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். நபிமாரை எதிர்த்திருக்கிறார்கள். கொலையே செய்திருக்கிறார்கள்.

**குர்ஆன்: 38:5,6,7**

أَجَعَلَ الْآلِهَةَ إِلَٰهًا وَاحِدًا ۖ إِنَّ هَٰذَا لَشَيْءٌ عُجَابٌ ۝ وَانطَلَقَ الْمَلَأُ
مِنْهُمْ أَنِ امْشُوا وَاصْبِرُوا عَلَىٰ آلِهَتِكُمْ ۖ إِنَّ هَٰذَا لَشَيْءٌ يُرَادُ ۝
مَا سَمِعْنَا بِهَٰذَا فِي الْمِلَّةِ الْآخِرَةِ إِنْ هَٰذَا إِلَّا اخْتِلَاقٌ ۝

**என்னே! எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று (இந்த முஹம்மத்) ஆக்கிவிட்டாரா? மெய்யாகவே இது ஓர் ஆச்சரியமான விஷயந்தான்! அவர்களிலுள்ள தலைவர்கள்**

**(அவர்களை நோக்கி) சென்றுவிடுங்கள, உங்கள் இலாஹு¯களில் நீங்கள் உறுதியாயிருங்கள். இது நிச்சயமாகக் கற்பனை செய்யப்பட்டதாகும் என்று கூறிச் சென்றுவிட்டனர். முன்னுள்ள சமுதாயத்தாரிலும் இதனை நாம் கேள்விப்பட்டதில்லை. (இலாஹு¯வான)இவை, சிருஷ்டியேயன்றி வேறில்லை.**

**குர்ஆன்- 37:35,36**

إِنَّهُمْ كَانُوٓا۟ إِذَا قِيلَ لَهُمْ لَآ إِلَٰهَ إِلَّا ٱللَّهُ يَسْتَكْبِرُونَ ۝ وَيَقُولُونَ
أَئِنَّا لَتَارِكُوٓا۟ ءَالِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُونٍۭ ۝

**அல்லாஹ் தவிர இலாஹு¯ இல்லையென்று அவர்களுக்குக் கூறப்பட்டால் அவர்கள் கர்வங்கொண்டு என்னே நாங்கள் பைத்தியங் கொண்ட ஓர் கவிவாணருக்காக எங்களுடைய இலாஹு¯களை மெய்யாகவே நாங்கள் விட்டுவிடுவோமா? என்று கூறுகின்றனர்.**

இவ்வித ஆயத்துக்களைத் தெளிந்த அறிவோடு நோக்குங்கள். இவ்வாயத்துக்களில் பாவிக்கப்பட்ட இலாஹு என்ற சொல்லைப் பலகோணங்களில் ஆராய்ந்து தெளிவு பெறுங்கள். இவ்வகை ஆயத்துக்கள் துவிதவாதிகளிடத்தில் ஓர் பொருளையும் தௌஹீதுவாதிகளிடத்தில் அதற்கு நேர் முரணான பொருளையும் தருபவை போல அமைந்திருக்கின்றன. துவிதவாதி ஷிர்க்கை அறிந்து கொள்ளாமையினால் அவனுடைய யூகப்படியே ஷிர்க்குடன் குர்ஆனை அணுகுகிறான். தௌஹீதுவாதி ஷிர்க்கை விளங்கிக் கொண்டதனால் கலிமாவைக் கொண்டே குர்ஆனை அணுகுகிறார். எனவே மூமீனையும் முஸ்ரீக்கையும் இவ்வகை ஆயத்துக்கள் பிரித்துக் காட்டுபவையாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மாலையென்ற ஸூறத்தைக் கண்டபிறகுதான் இது தங்கத்தின் ஒரு ஸூறத்து என்று காண்கிறோம். மாலையென்ற ஸூறத்துக்கு ஆதியாயும் ஸூறத்துடன் தோற்றும் ஏகமாயும் ஸூறத்து அழிந்தபின் ஆகிறாயும் தன்னையும் தன் ஸூறத்தையும் முற்றாய் அறிந்ததாயும் இருந்து கொண்டிருப்பது தங்கம்தான். மாலைக்கு ஓர் உளநோய் ஏற்பட்டதால் நான் வேறு தங்கம் வேறு என்று (கூறுவதால்) நம்பியிருப்பதால் அந்த மாலை ஒருபோதும் தங்கத்தைக் காணவேமுடியாது. தங்கம் என்ற உண்மைப் பொருள் மாலையாகிய என்னைச் சூழ்ந்த முஹீத்தாய் இருக்கிறதென்பதையும் மாலையென்ற என்னுடைய ஸூறத்து வெறும் கற்பிதமான தோற்றப்பாடேயென்பதையும் மாலை அறிந்து கொள்வதில்லை. மாலை தங்கத்தைத் தேடியலைந்து கொண்டிருக்கிறது. இந்த உதாரணத்தில் தரப்பட்ட மாலையின் நிலைமையிலேயே இன்றுள்ள மனிதர்களில் மிகப் பெரும்பாலார் தென்படுகிறார்கள். மாலை என்பது தங்கத்தை விட்டும் வேறல்ல அல்லது தங்கம் தவிர மாலை இல்லை(நகை இல்லை) என்று கூறுவதுபோல அல்லாஹ் தவிர (சிருஷ்டி) இலாஹு இல்லை அல்லது இலாஹு (சிருஷ்டி) அல்லாஹ்வின் வேறல்ல என்று கலிமா விபரம்தருகிறது. இவ்வுண்மையை உணரமுடியாத பின்பற்றல்வாதிகளான மனிதர்கள் தம் பிராணநரம்பைவிடச் சமீபமாய் இருந்து கொண்டிருக்கிற இறைவனைத்தேடிப் புதுடில்லிக்கும் பங்களாதேஷுக்கும் பிரயாணம் செய்கிறார்களென்றால் இவர்களின் அறிவைப்பற்றி நாம் என்னதான் கூறமுடியும்? முஸ்லீம்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்களென்பதை ஊன்றிச் சிந்தனைசெய்யுங்கள். குர்ஆன் உண்மையான யுக்தியுடன் ஒத்திருப்பதை ஆராய்ந்து தெளிவுபெறுக.

# 39

**குர்ஆனை விளங்கும் 5வது 6வது வழிகள்:~**

## சந்தேகத்தை ஏற்படுத்திய வசனத்தைக்கொண்டே சந்தேகத்தை நீக்கித் தெளிவுபெறல்

**குர்ஆன்: 7:7**

فَلَنَقُصَّنَّ عَلَيْهِم بِعِلْمٍ ۖ وَمَا كُنَّا غَائِبِينَ ۝

**நாம் மறைவாக இருக்கவில்லை.**

இந்தவசனம் இறைவன் எப்போதும் தெளிவாகத் தென்படுபவனாய் (மனிதனால் காணக்கூடியவனாய்) இருக்கிறான் என்று கூறகிறது. ஆனால் நாம் இறைவனை எப்போதும் பார்த்ததேயில்லை. அப்படியானால் குர்ஆன் கூறுவதை நாம் எப்படி நம்புவது? அந்த ஆயத்திலேயே எமது கேள்விக்கு சந்தேகத்துக் கெல்லாம் பதில் தரப்பட்டிருப்பதைக் கட்டுண்ட பகுத்தறிவு உணர்வதில்லை. இப்போது ஆயத்தை நோக்குங்கள். நாம் மறைவாக இருக்கவில்லை யென்பதைக்கொண்டுதான் அவன் வெளிப்படையானவன் என்று நம்பினோம். இந்த வெளிப்படையைத் தெளிவாக்க மறைவு என்ற சொல் பாவிக்கப்ப

டாமல் நாம் இதோ உன் பார்வைக்குத் தெரியக்கூடியதாக இருக்கிறோம் என்று கூறியிருக்கலாம். ஏறக்குறைய இருவசனங்களும் வெளிப்படையில் ஒன்று போல் தென்படினும் இறைவசனம் வேறொரு கருத்தை விளக்குகிறது. முன்கூறிய 7:7ம் வசனத்திற்கு முரணான 7:143ம் வசனத்தையும் எடுத்துக் கொண்டு நோக்குவோம்.

**குர்ஆன்: 7:143**

وَلَمَّا جَاءَ مُوسَىٰ لِمِيقَاتِنَا وَكَلَّمَهُ رَبُّهُ قَالَ
رَبِّ أَرِنِي أَنظُرْ إِلَيْكَ ۚ قَالَ لَن تَرَانِي وَلَٰكِنِ
انظُرْ إِلَى الْجَبَلِ فَإِنِ اسْتَقَرَّ مَكَانَهُ فَسَوْفَ
تَرَانِي ۚ فَلَمَّا تَجَلَّىٰ رَبُّهُ لِلْجَبَلِ جَعَلَهُ دَكًّا وَخَرَّ
مُوسَىٰ صَعِقًا ۚ فَلَمَّا أَفَاقَ قَالَ سُبْحَانَكَ تُبْتُ
إِلَيْكَ وَأَنَا أَوَّلُ الْمُؤْمِنِينَ

**என்னைக்காண ஒருபோதும் முடியாது.**

நாம் காட்டிய இவ்விருவசனங்களும் ஒன்றுக்கொன்று நேர்முரணாகவே தென்படுகின்றன. வசனங்களிரண்டும் கலிமாவின் தலீல்களான முஹ்கமு என்பதை நாம் மறக்கக்கூடாது. இவை ஒன்றுக்கு மற்றொன்று முரணாய்த்தென்படினும் ஒரே கருத்தையே வலியுறுத்துகின்றன. ஆனால் சிந்தனையற்ற அறிவு இதை ஏற்பதில்லை. ஆயத்துக்களை மீண்டும் நோக்குங்கள். நாம் மறைவாக இருக்கவில்லையென்ற வசனத்தில் மறைவை(பாத்தினை)த்தான்

வெளிப்படையாய் (இபாரத்தாய்)த் தரப்பட்டிருக்கிறது. ஆகவே தலாலத்தை(கருத்தை)க் கொண்டுதான் அவன் வெளிப்படையாய் இருக்கிறான் என்று அறிகிறோம். அடுத்த வசனத்தை நோக்கினால் இதுவும் அப்படித்தான் தரப்பட்டிருக்கிறது. என்னைக் காண ஒருபோதும் முடியாது என்பதில் சத்தமென்ற இபாரத்தைக் கொண்டுதான் பாத்தினை (மறைவை)க் கருத்துப் பிரமாணத்தினால் அறிந்து கொள்கிறோம். (நுட்பமாய் அவதானிக்கவும்)

நாம் இப்போது ஐந்தாவது வழியுடன் ஆறாவது வழியான ஒன்றுக்கொன்று முரணான ஆயத்துக்களைக் கொண்டு குர்ஆனை விளங்குதல் என்பதையும் ஒன்றிணைத்து விளங்குவோம். சுருக்கத்துகாகவே இந்த நடவடிக்கை.

நாம் மறைவாக இருக்கவில்லையென்று கூறிய 7:7ம் வசனம் வெளிப்படையாய் இருக்கிறான் என்பதைக் கருத்துப் பிரமாணத்தால் விளக்குவதால் அவனுக்கு மறைவும் உண்டென்று இபாரத்தென்ற சத்தப்பிரமாணத்தினால் உணர்த்தப்படுகிறது. வெளிப்படைக்கு மறைவு என்ற எதிரிடை உண்டென்று இவ்வாயத்து விளக்குகிறது. அதாவது மறைவு என்ற சொல்மட்டுமே உண்டென்றால் வெளிப்படை என்பதும் வெளிப்படை என்ற சொல்மட்டுமே உண்டென்றால் மறைவு என்பதும் இல்லாமலாகிவிடும். மறைவும் வெளிப்படையும் ஒன்றித்ததே றுபூபிய்யத்(றப்பு,அப்து) என்பது. வெளிப்படை என்ற சொல்லைக்கொண்டு அதே ஆயத்து மறைவும் உண்டென்று வலியுறுத்துவதால் இறைவனுக்கு வெளிப்படையும் மறைவும் (லாஹிறும் பாத்தினும்) உண்டென்பது நிரூபணஞ் செய்யப்படுகிறது.

மனித அறிவுக்கு (புலன்களுக்கு) எட்டக்கூடிய நிலையை இபாரத்தென்ற சத்தத்தைக்கொண்டு வெளிப்படையாய்க் கூறுவதும் மறைவை தலாலத்தென்ற கருத்தைக்கொண்டு

சூசகமாய் விளக்குவதும் இவ்வாயத்தின் கடமையாயிருக்கிறது. புலன்களுக்கெட்டும் நிலை எல்கையுடைதாயிருப்பதால் புலன்களுக்கெட்டாத ஒரு நிலையும் இறைவனுக்குண்டென்று விளக்கம் தரப்படுகிறது. புலன்களுக்கெட்டும் நிலையே "லாஹிர்" "வெளிப்படை" என்பது. எனவே தோற்றும் சிருஷ்டி அவன் ஸுறத்தேயென்பதை உணர்த்தவே ஆயத்துத் தரப்பட்டிருக்கிறது.

என்னைப் பார்க்கமுடியாதென்ற 7:143ம் ஆயத்து அவன் மறைவாக இருப்பவன் என்றுணர்த்துவதால் மறைவுக்கு வெளிப்படையும், வெளிப்படைக்கு மறைவும் உண்டென்ற உண்மை முதலில் உணர்த்தப்படுகிறது. மறைவு மட்டுமே உள்ளதென்றால் வெளிப்படை என்ற சொல் அவசியமில்லாமல் ஆகிவிடும். மறைவும் வெளிப்படையும் ஒன்றித்த நிலைமைதான் றுபூபிய்யத் என்பதை முன்பே கூறியுள்ளேன். எனவே மறைவு என்ற சொல்லைக்கொண்டு வெளிப்படையும் உண்டென்ற உண்மை இவ்வாயத்தினால் விளக்கப்படுகிறது. மனித புலன்கள் எல்கையுடையனவாயிருப்பதால் மனித புலன்களைக் கடந்த எல்கையில்லாத ஒரு நிலையும் இறைவனுக்குண்டென்று பெறப்படுகிறது. புலன்களுக்கெட்டாத நிலையே பாதின் என்பது. புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத நிலையே "தாத்து", "வுஜூது" என்பது. எனவே இவ்வாயத்துக்களில் தோன்றிய மயக்கம் இவ்வாயத்துக்களினாலேயே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் விபரம் எமக்கவசியமல்ல.

இப்போது ஒன்றுக்கொன்று முரணான இரு ஆயத்துக்களைக்கொண்டே குர்ஆனை விளங்குதல் என்ற அடிப்படையில்(ஆறாவது பிரமாணத்தின்படி) நாம் முன்பு தந்த 7:7, 7:143 ஆகிய இரு ஆயத்துக்களையே எடுத்துக்கொள்வோம். ஒன்று காணமுடியாத பாத்தின் என்றும் மற்றொன்று காணக்கூடிய வெளிப்படையான லாஹிர் என்றும் இவ்வாயத்துக்கள் விபரம்தருவதால் இவை ஒன்றுக்கு மற்றொன்று முரணாயிருப்பதுபோல் தென்படுகின்றன. உண்மையான

சுயசிந்தனையுடன் நோக்கினால் இவையிரண்டும் ஒரே விஷயத்தையே வெவ்வேறு வகையாய் விளக்கம் தருகின்றன என்பது தெளிவாகின்றது. நாம் முன்பு காட்டிய 57:3ம் ஆயத்து இவ்விரு ஆயத்துக்களையும் ஒன்றாக்கி உறுதிப்டுத்துகிறது.

**குர்ஆன்: 57:3**

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

**ஆதியும் அவனே, அந்தமும் அவனே, தோற்றுவதும் அவனே .மறைந்திருப்பதும் அவனே, அவன் எல்லாம் அறிந்தவன்.**

இவ்வேத வசனம் முன்கூறிய இரு முரணபட்ட ஆயத்துக்களையும் சமப்படுத்திக் கலிமாவினால் உணர்த்தப் படும் தெளஹீதையே உறுதிசெய்து கொண்டிருக்கும்போது இன்னோர் இமாமும் கிரேக்க புராணக் குப்பை கூழங்களும் கஞ்சா மஸ்த்தான்களின் பாடல்களும் எமக்கு அவசியமே யில்லை. சில பாடல்களில் உண்மையுண்டு என்பது உண்மை. ஆயினும் அவற்றில் பெரும்பாலும் ஹுலுல் இத்திஹாது கலந்தேயிருக்கிறது. சில பாடல்கள் சுத்தஷிர்க்கையும் ஞானமென்று கூறுகின்றன.

**ஹதீஸ்:-**

*தாங்கள் இறைவனைப் பார்த்ததுண்டோ என்று நான் கேட்டேன். அவன் ஒளிமயமானவனாயிற்றே நான் எப்படிப் பார்க்க முடியும் என்று றஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர் :- அபூஸர் (றலி)**

**ஆதாரம்:- முஸ்லீம், திர்மிதி**

இதைப்போல் ஆயிஷா ஸித்தீக்கா அவர்களின் ஓர் அறிவிப்பும் இறைவனைப் பார்க்கமுடியாதென்று அறிவிக்கின்றது. இவ்வகை ஹதீஸ்கள் மூலம் இறைவனைப் பார்க்க

முடியாதென்று கூறப்படுவது இறைவனுடைய சுயதாத்தை (வுஜூதை, நூரை)க் குறிப்பிட்டதாகும். அப்பாஸ்(றலி) அவர்களின் சில அறிவிப்புக்கள் றஸூல்(ஸல்) அவர்கள் இறைவனை இருமுறை பார்த்துள்ளதாக அறிவிக்கின்றன. இவ்வித ஹதீஸுகள் ஒன்றுக் கொன்று முரண்போல் தென்படினும் அவை ஒன்றுக்கொன்று முரணானவையேயல்ல.

**ஹதீஸ்:-**

*நபி(ஸல்) அவர்கள் இறைவனை இருமுறை பார்த்தார்களென்று நான் கூறினேன். அதற்கு இக்ரிமா(றலி) அவர்கள், எவருடைய பார்வையும் அவனை அடையாது என்று 6:130 ஆயத்தில் இறைவன் கூறுகின்றானே என்று கேட்டார்கள். அதற்கு நான், உம்முடைய கைசேதமே! இது இறைவன் தன் சுய ஒளியில்(சுயதாத்தில், நூறில்) இருக்கும்போதுதான். நிச்சயமாக நபி(ஸல்) அவர்கள் தம் இறைவனை இருமுறை பார்த்துள்ளார்களென்று எடுத்துரைத்தேன்.*

**அறிவிப்பவர்:- இப்னு அப்பாஸ்(றலி)**
**ஆதாரம்:- திர்மிதி**

**ஹதீஸ்:-**

*அழகிய உருவில் என் இறைவன் என்னிடம் வந்து முஹம்மதே என்று கூறினான். அதற்கு நான் அடிபணிந்தேன். இதோ பிரசன்னமாகியுள்ளேன் என்று கூறினேன் என்று றஸூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.* (இது ஒரு நீண்ட ஹதீஸாகும்)

**அறிவிப்பவர்:- இப்னுஅப்பாஸ்(றலி)**
**ஆதாரம்:- திர்மிதி**

இந்த ஹதீஸில் கூறப்பட்ட உருவம் என்பது இறைவனைக் கண்ணியப் படுத்துவதற்காகவென்று எமது முன்னோரில் பலர் அறியாமையால் கூறியிருக்கிறார்கள். இவர்களின் கூற்று உண்மையென்றால் இறைவன் உருவமி

ல்லாதவன் என்று கூறுவது இறைவனைக் கண்ணியக் குறைவாய்க் கணிப்பதாய் முடியுமே என்பதை இவர்களறிவு எட்டிக்கொள்ளவில்லை. இவர்கள் இபாரத்தென்ற வெளிச்சத்தப்பிரமாணத்தை மட்டும் எடுத்துக்கொண்டவர் களேயன்றி தலாலத்தென்ற கருத்துப் பிரமாணத்தையும் எடுத்துக் கொண்டவர்களல்ல. அப்படி எடுத்துக் கொண்டிருந்தால் இவ்வித தவறான வியாக்கியானங்களை எழுதியிருக்கமாட்டார்கள். மேலும் இவ்வித ஹதீஸுகள் பலகருத்துக்களையுடைய முதஸாபிஹாத் வகையைச் சேர்ந்ததாயும் முஸாஹிதா, கஸ்புவென்ற ஞானக்காட்சியைச் சேர்ந்தவையாயும் இருக்கின்றன.

நாம் பார்க்கும் சர்வபிரபஞ்சமும் இறைவனின் ஸூறத்தேதானென்றால் றஸூல்(ஸல்) அவர்கள் இருமுறை பார்த்தார்களளென்பதன் அர்த்தமென்ன? இந்தக் காட்சி விசேஷ காட்சியாகும். இக்காட்சி நல்லடியார்களுக்கு மட்டும் சொந்தமானது. றஸூல்(ஸல்) அவர்கள் மட்டுமென்ன தெளிவான உறுதியான மூமீன்களும் இவ்வித விசேஷ காட்சியை (ஒரு குறிப்பிட்ட ஸூறத்தில்) காணக்கூடும். ஆனால் றப்புடைய முழுமை பெற்ற லாஹிறை (பிரபஞ்சத்தை, பேரண்டத்தை, றப்பை)க் காணமுடியாது. அக்காட்சி றப்புக்கு மட்டுமே உரியது. மூஸா(அலை) அவர்கள் றப்பின் முழுமைபெற்ற தோற்றத்தைக் காணத்துடித்தார்கள். நீர் ஒருபோதும் பார்க்கமாட்டீர் என்று இறைவன் கூறினான் என்பதை நாமறிவோம்.

மேலே நாம் காட்டிய ஹதீஸ்கள் போன்று இன்னும் பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. இவற்றினால் நாம் அறிந்து கொள்ளும் உண்மை என்னவெனில் இறைவனுடைய வுஜூதை எவராலும் பார்க்கமுடியாதென்பதும், றுபூபிய்யத்தென்ற 2ம் மர்த்தபாவில் எமதறிவுக்கேற்ற ஏதோ ஒரு தோற்றத்தில் வெளிப்படையாகவோ கனவு, றூயா, முஸாஹிதா, கஸ்பு போன்றவை மூலமாகவோ காணலாமென்பதுமே. பிரபஞ்சம்

எமதறிவுக்கு எல்கையற்றதாயிருப்பதால் இறைவனின் வெளிப்பாடான லாஹிறைக் கூட முற்றாய் முழுமையாய்ச் சிருஷ்டியான எவராலும் பார்க்கமுடியாது என்பதும் உண்மை. எனவே ஹதீஸுகள் ஒன்றுக்கொன்று முரணல்ல. ஒவ்வோர் ஹதீஸும் ஒவ்வோர் நிலையைக் குறிப்பிட்டவையாகும். ஞான விளக்கமின்மையினால்தான் அவை ஒன்றுக்கொன்று முரணாய்த் தென்படுகின்றன. நாம் காணும், அறியும், சர்வசிருஷ்டிகளும் ஒவ்வோர் வகையான கட்டுப்பாட்டில் தரிபடுத்தப்பட்ட கண்டப் பொருட்களாய் இருப்பதால் எந்த ஓர் பொருளைச் சுட்டியும் இது அல்லாஹ்தானென்று கூறாமல் அல்லாஹ்வில் நின்றுமுள்ளதேயென்று கூறுவதே பொருத்தமாகும். கண்டப்பொருளை அல்லாஹ் என்று கூறுவது "குப்ரு" வாகும்.

நாம் காணும் சர்வபொருட்களும் வுஜூதின் இயல்பான (இலாஹியான) நாமங்களின் தோற்றப்பாடேயன்றி வேறில்லை. தோற்றப்பாடு பொருளல்ல. அதைப் பொருளாய்க் கணிப்பதே "ஹுரூர்" ஆகும். ஏழுகடல்களை மையாகக் கொண்டாலும் அல்லாஹ்வுடைய நாமங்களை எழுதி முடிக்க முடியாதென்று குர்ஆன் கூறுகிறது. ஏதோ ஓர் சொல்லின் கருத்தைத்தான் நாம் எமது புலன்களுக்கமைவாய்ப் பொருளாய் (ஸூறத்தாய்)க் காணுகிறோம். கருத்து என்பதும் பொருள் என்பதும் ஒரே விஷயத்தின் இருபெயர்களாகும். நாமம் செவிமூலமும் அதன் கருத்தான பொருள் கண்முதலாம் மற்றும் புலன்கள் மூலமும் உணர, அறியப்படுகிறது. இறைவனுடைய நாமங்களின் ஸூறத்துக்கள் ஒன்று சேர்ந்த தொகுப்புக் காட்சியே நாம் காணும் பிரபஞ்சமாய் இருக்கிறது. மரம் என்று நாம் கூறும் சொல்லைச் செவியினால் கேட்ட நாம் மரமென்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட கருத்தை (பொருளைக்)க் கண்களினால் காணுகிறோம். நாம் மரம் என்று கூறும் சொல்லுக்கு ஒலியுமில்லை, அட்சரமுமில்லை. எனவேதான் ஒலியும் அட்சரமுமில்லாத இறை நாமங்களை "இலாஹி" என்றும், எமது வாயால் கூறும் நாமங்களை "கௌனி" (பெயருக்குப் பெயர்) என்றும்

கூறுகிறோம். இறைநாமங்களின் ஒலியை நாம் கேளாமல் அவற்றின் கருத்துக்களை மட்டும் நாம் பொருளாய்க் காண்பது "ஹுரூர்" மயக்காகும். நாம் கண்ட பொருளுக்கு மரம் என்ற ஒலியும் அட்சரமுமுள்ள ஓர்பெயரை நாம் ஆக்கிக் கொள்கிறோம். ஒலியில்லாத இறைநாமத்தின் ஸூறத்துக்கே நாம் ஒலியும் எழுத்துமுள்ள மரம் என்ற சொல்லை ஏற்படுத்திக் கொண்டோம். சர்வ பிரபஞ்சத்திலுமுள்ள சர்வபொருட்களும் இறை நாமங்களின் ஸூறத்துக்களேயென்பதுதான் பூரண உண்மையாகும். எனவே ஏழு கடலென்ன எழுபது ஆயிரம் கடல்களை மையாய் எடுத்துக்கொண்டாலும்கூட இறைநாமங்களை எழுதிமுடிக்க முடியாதென்பது உண்மையே. முடியுமென்றால் இறை நாமங்களை எல்கையில் எண்ணிக்கையில் நாம் கட்டுப்படுத்திக் கொண்ட காபிர்கள் என்று கூற நேரிடும்.

எமது முன்னோரில் மேதைகளாய் மக்களால் கணிக்கப்பட்ட சிலர் 40ஆதங்களைப் படைத்து அழித்த பின்பு தான் எமது தந்தை ஆதம்(அலை) அவர்களை இறைவன் படைத்தானென்றும் எல்லாமே அல்லாஹ்தானாயிருப்பதால் தொட்டுணர்வதெல்லாம் தாத்துத்தானென்றும் இன்னும் ஏதோவெல்லாம் கூறி உண்மையான சுத்தசத்தியமான இஸ்லாத்தின் தௌஹீதைத் திசை திருப்பியிருக்கிறார்கள். இவ்விதமான பேச்சுக்கள், எழுத்துக்கள், தெளிவில்லாத உள்ளத்தில், மயக்க நிலையில் வெளியாகும் நப்ஸானி யாவுடைய மருட்சியாகும். இவ்வித ஆதாரமற்ற குப்ருவான பேச்சுக்கள் எழுத்துக்களை இல்ஹாமத்தென்று நம்பிய மௌலவிமார்கள் கூட எம்மிடையேயுண்டு. இறைவனை, அவன் சிருஷ்டியை, அவன் செயல்களை இலக்கத்தில் கட்டுப்படுத்து வதென்றால் எம்மை நாம் சிருஷ்டியாய் எடைபோடுவது போலவே இறைவனையும் ஓர் சிருஷ்டியாய்க் கற்பனையில் இருத்திக்கொள்கிறோமென்பதே அர்த்தம். இறைவன் விஷயத்தில் எண்ணிக்கை கொள்கிறோமென்பதே அர்த்தம். இறைவன்

விஷயத்தில் எண்ணிக்கை வகிக்கும் மக்கள் வழி தவறியோர் என்பது உண்மை. ஏனென்றால் இவ்வித கணிப்புக்கள் நிச்சயமாக மனிதனை ஷிர்க்கில் நுழைக்கும்.

**குர்ஆன்: 41:54**

أَلَا إِنَّهُمْ فِي مِرْيَةٍ مِّن لِّقَاءِ رَبِّهِمْ ۗ أَلَا إِنَّهُ
بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ

**நிச்சயமாக அவர்கள் தங்களிறைவனைக் காண்பதைப் பற்றியும் சந்தேகத்திலிருக்கிறார்களென்பதை நீர் அறிந்து கொள்ளும். அவன் சகல விஷயங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதையும் அறிந்துகொள்ளும்.**

இறைவனைக் காண்பது ஆகிறாவில்தானேயென்று மருட்சியடைய வேண்டாம். ஆகிறாவில்தான் காண்பதென்றாலும் காட்சிக்குச் சூறத்(தோற்றப்பாடு) அவசியம். ஸூறத்தென்பது இல்லையென்றால் காட்சியென்பதும் இல்லவே இல்லை. இவ்வாயத்தில் ஆகிறாவில் மட்டுமல்லாமல் துன்யாவிலும் சர்வ பேரண்டத்தில் எவ்விடத்திலும் எப்போதும் றப்பையேயன்றி வேறொன்றைப் பார்க்கவே முடியாதென்பதை "முஹீத்" என்ற சொல்லைக் கொண்டு இறைவன் தெளிவுபடுத்தியுள்ளான். முஹீத் என்ற சூழ்தலுக்கு நான் முன்பே விளக்கம் கூறியுள்ளேன்.

இறைவனையேயன்றிப் பிறிதொன்றில்லாதிருப்பதால் அவனையன்றி எங்கேயும் எப்போதும் நாம் பிறிதொன்றைக் காணவேமுடியாது. இக்காட்சி எமது புலனமைப்புக்கேற்ற காட்சியாய் ஹுரூரென்ற மாயையாய் இருக்கிறது. இதில் ஜன்னத்துக் கூட அடங்கும். எனினும் இம்மை மறுமைகளில் இன்னுமோர் வகையான இறைதரிசனை உண்டு. றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் றப்பை இருமுறை பார்த்தார்களென்று

கூறப்பட்ட ஹதீஸில் குறிப்பிடப்பட்ட காட்சியென்பது ஹுஜுருடைய காட்சியல்ல. ஆயினும் அத்துடன் தரிசனை முடிந்ததென்பதும் அர்த்தமல்ல. ஜன்னத்திலும் உலகிலும் இறைவனைத் தரிசிப்பதில் இன்னும் ஓர்வகையுண்டு. அதுவே "லிகா" என்பது. இதைத் தரிசனையென்று கூறினாலும் கூட உட்புலன்கள் வெளிப்புலன்களைக் கொண்டமையாமல் ஆத்துமா(றூஹு) தன்னில்தானே அனுபவத்தில் பெற்றுக் கொள்ளும் தரிசனையாய் அனுபவமாய் இருக்கிறது. இவ்வனுபவம் சிருஷ்டிக்குரியதல்ல.

யாவும் அழிந்துவிடும் அல்லாஹ்மட்டுமே மிஞ்சுவானென்ற வேதவசனப்படி ஜன்னத்தும் ஓர் நீண்ட ஹுஜூர்தான் என்பதை மறுக்கமுடியாது. இந்த ஹுஜூர் நீங்கும் போதுதான் லிகா கிடைக்கும். லிகாவையும் ஜன்னத்தையும் ஒப்பிட்டால் ஜன்னத்தும் ஓர்ஹுஜூர்தான். அங்கு வாழ்கிறவர்கள் சிருஷ்டிகள் தான். எனவே ஹுஜுரூறுடன் றப்பைக்காணும் காட்சியும் ஹுஜூரற்ற சுயநிலையில் காணும் காட்சியும் வெவ்வேறானவை.

அல்லாஹ்வையன்றி நான் கண்டதில்லையென்று பல பெரியார்கள் கூறியிருக்கிறார்கள். இக்காட்சி ஸுறத்தை நோக்கிக் கூறுப்பட்டதேயன்றி தாத்தைத் தொட்டுப்பார்த்ததால் உண்டாவதில்லை. மோதிரத்தைத் தங்கம் சூழ்ந்து கொண்டிருக்கும்போது தங்கத்தை மோதிரம் கண்டுகொள்ளவில்லையென்று கூறமுடியாது. தங்கத்தை விட்டும் மோதிரம் தன்னை வேற்றுப்பொருள் என்று நம்பியிருப்பதனாற்றான் தங்கத்தை அதனால் காணமுடியாமலிருக்கின்றது. தானே தங்கத்தின் ஓர் ஸுறத்தென்பதை மோதிரம் மறந்துவிட்டதனால்தான் தங்கத்தை மோதிரம் காண முடியாதிருக்கிறது. மோதிரமாகிய நான் தங்கத்தின் ஸுறத்தேயென்பதை மோதிரம் உணர்ந்து கொண்டால் தங்கத்தை மோதிரம் நிச்சயமாக அறிந்துகொள்ளும்.

# 40

### குர்ஆனை விளங்கும் 7வது வழி:~

# வஹி, இல்ஹாமத், இல்முன்லத்துன்னி, கஸ்பு, றூயா, கனவு போன்றவற்றைக் கொண்டு விளங்குதல்

வஹி என்பதில் நபிமார்கள் றஸூல்மார்களுக்கு அருளப்பட்ட வேதம் தொடர்பான வஹி இப்போதில்லை. இதன் விபரம் எமது முதல் நூற்களில் தரப்பட்டிருப்பதால் இங்கு அவசியமானதை மட்டும் தருகிறேன். இல்ஹாமத் முதல் உண்மையான கனவு வரையிலும் தெய்வீக உண்மைகள் வெளியாகின்றன என்பது நூறு வீதமும் ஆதாரத்தோடுள்ள உண்மைதான். ஆயினும் அதை ஆதாரமாய்க் கொண்டு பிறருக்கு உறுதிப்படுத்த முடியாது. நான் என் இறைவனைக் கண்டேனென்றோ, குர்ஆன் வசனத்தை விளக்கினான் என்றோ, இன்ன மகான் இரவு கனவில் தோன்றி விளக்கினாரென்றோ, நாம் பொய்யுங் கூறலாம். உண்மையுங்கூறலாம். நான் என் இறைவனைக் காணும்போது அல்லது மகானைக் காணும்போது எந்தவொரு சாட்சியையும் வைத்திருக்கவில்லையே! எனவே நான் கண்ட விஷயத்தை உண்மைதானென்று நிரூபிக்க முடியாது. ஆதலால் எந்த மகான்கள், ஸெய்யிதுகள்,

ஷேகுகளுடைய இல்ஹாமத்தும் வஹியும் எமக்கு வேண்டாம். மனிதன் தன் நோக்கை நிறைவேற்றப் பொய்யும் சொல்லக் கூடுந்தானே!

நீங்கள் எவ்விஷயத்தில் தர்க்கித்துக் கொள்கிறீர்களோ அதைத் தெளிவாக்கவே இக்குர்ஆனை அனுப்பினோம் என்றும் இறுதிப் பிரமாணம் குர்ஆனே என்றும் 16:64, 6:149ம் போன்ற வசனங்கள் மூலம் அதே குர்ஆன் இன்றும் கூறிக்கொண்டிருப்பதால் நாம் குர்ஆனைக் கொண்டே எமது பிரச்சனையை அணுகுவோம். இறைவனுடைய சாட்சியமும் நபிமாருடைய சாட்சியமுமே எமக்குப் போதுமானதாகும்.

**குர்ஆன்: 21:25**

وَمَآ أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِىٓ
إِلَيْهِ أَنَّهُۥ لَآ إِلَـٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعْبُدُونِ ۝

**உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத் தவிர வேறு இலாஹு இல்லை. எனக்கே இபாதத்துச் செய்யுங்கள் என்று நாம் வஹி அறிவிக்காமல் இல்லை.**

குர்ஆனிலுள்ள 7:59, 7:65, 7:73, 7:85, 41:43 போன்ற ஆயத்துக்களையும் அவதானித்துப் பாருங்கள். நபிமார்கள் அத்தனைபேரும் கலிமத்துத்தையிபாவை வஹி மூலந்தான் பெற்றிருக்கிறார்கள். அதன் பக்கந்தான் அழைத்திருக்கிறார்கள். நபிமார் தமது சொந்த யூகத்தினால்தான் கலிமாவைக் கூறினார்களா? இல்லை, வஹி மூலம் அறிந்துதான் கூறினார்கள். வஹியுடைய விஷயம் சாதாரண மனிதனுடைய அறிவுக்கு அப்பாற்பட்டதாயிருப்பதால் இதை இன்னும் விபரிக்காமலேயே நான் விட்டுவிடுகிறேன். ஆயினும் இறையுணர்வு உண்மையா பொய்யா என்ற தலைப்பில் ஒரு சிறு விபரம் தருகிறேன்.

குறுகலாய்க்கூறினால் கனவு, றூயா, கஸ்பு, முஸாஹிதா, இல்ஹாமத், இல்முன்லத்துன்னி, வஹி போன்ற விஷயங்கள் உண்மையென்பதை ஒப்புக்கொள்வது முஸ்லீம்களின் மூ:. மீன்களுக்கு அவசியமானதொன்று என்று மட்டும் கூறிவைக்க விரும்புகிறேன். மேலும் குர்ஆனில் இடம்பெறுகிற சில உண்மைகள்(அலிப், லாம், மீம், போன்ற)அட்சரங்களால் விளக்கப்படவேண்டிய உண்மைகள் முதஸாபிஹாத்தென்ற பல கருத்துடைய ஆயத்துக்களின் சில அகமியங்கள் இல்ஹாமத் மூலம் நல்லடியார்களுக்கு வெளியாகின்றன என்பதை மூமீன்கள் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். எனினும் அதை (இல்ஹாமத், இல்முல்லத்துன்னி போன்ற அறிவிப்புக்களை) வஹியென்று கூறப்படுவதில்லை.

# 41

## "தஜல்லி" என்ற "இறையுணர்வு" என்பது உண்மையா?

கலிமாவில் ஜெயம்பெற்றவர்களுக்கும் கலிமாவை எடுத்துக் கொள்ளாமல் வேறுசில கலைகளில் பாண்டித்தியம், பயிற்சி, அனுபவம் உள்ள மக்களுக்கும் சிற்சில வேளைகளில் பல காட்சிகள் தென்படுகின்றன. சில பேச்சுக்கள் கேட்கின்றன. இவ்விதமான காட்சிகளைக் காணுதல், பேச்சுக்களைக் கேட்டல் போன்ற சூட்சும விஷயங்களை இன்றைய உலகு பொதுப்படையாய் "இறையுணர்வு" என்று கூறிக்கொண்டிருக்கிறது. இவ்விறையுணர்வு உண்மையா பொய்யா என்பதை கண்டறிய மருத்துவர்கள், உளவியலாளர்கள், விஞ்ஞானிகள் போன்ற மேதைகள் இன்றும் அரும்முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை அவ்வறிஞர்களில் மிகப்பலர் கொண்டுள்ள முடிவு என்னவென்றால் இறையுணர்வு உண்மையல்ல என்பதே.

ஆயினும் அறிவுத்தாகம் கொண்ட மேதைகளில் பலர் இம்முடிவு சரியானதல்லவென்று கருதியதால் சுமார் 15வருடங்களாய் விடாமுயற்சியுடன் ஆராய்ந்து தற்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இவர்களின் கட்டுரைகளின் விபரம் அதிகமாயினும் முடிவு என்னவென்றால் மனித அறிவு வட்டத்தைக் கடந்த பிரபஞ்ச அறிவு ஒன்று உண்டு. அதனுடன் மனிதன் சில பயிற்சிகள் மூலம் தொடர்பு கொள்ளவும், அபார சாதனைகளைச் சாதிக்கவும், அறியாதனவற்றை அறியவும் முடியும் என்பதே. இத்தொடர்பு தியானவாயிலாய் புலனுணர்வை ஒருமுகப்படுத்துவதால் ஏற்படுகிறதென்றும் முடிவு

கட்டியுள்ளார்கள். அநேக மேற்கோள்களை ஆதாரங்கயாய்க் காட்டி விளக்கியிருக்கிறார்கள். ஆயினும் மனித அறிவு வட்டத்தைக்கடந்த பிரபஞ்ச அறிவு என்று இவர்களால் கூறப்படுவதுகூட அறிவின் ஒரு வட்டவரையே என்று குர்ஆன், ஹதீஸுகள் வலியுறுத்துகின்றன. பிரபஞ்சம் என்பது வெறும் ஸூறத்தாயிருப்பதால் அவற்றிற்கெல்லாம் உயிராயிருப்பவன் எவனோ அவனுடையதே அறிவு என்றும் அவ்வறிவின் முழுமை நாமறிந்துள்ள பிரபஞ்சத்தைக் கடந்தது என்றும் விபரம் தருகின்றன.

இவ்வகையில் விஞ்ஞான அறிவுகூட குர்ஆனின் விபரப்படி மண்குடிசை கட்டிவிளையாடும் குழந்தையறிவு என்றுதான் கூறவேண்டியுள்ளது. விஞ்ஞானம் காரணகாரியத் தொடர்பைக் அடிப்படையாய் கொண்டு ஆராயமுற்படுகிறது. இது றுபூபிய்யத்தோடு நின்றுவிடும். றுபூபிய்யத் இறைவனின் இரண்டாவது மர்த்தபாவாகும். குர்ஆன் காரணகாரியத் தொடர்பைக் கொண்டும், காரணகாரிய தொடர்பைக் கடந்தும் நிரூபிக்க(அனுபவத்திலேயே நிதர்சனமாய் உணர, அனுபவிக்க) வழிகாட்டுகிறது.

விஞ்ஞானம் பெரும்பாலும் இந்துமத அத்வைதிகளையும் அவர்களுடைய தியானமந்திரங்களையும் எடுத்துக்கொண்டே ஆராய்வு செய்கிறது. ஆயினும் அந்த விஞ்ஞானிகளும், உளநூல் விற்பன்னர்களும், மனநோய் மருத்துவர்களும், மெஸ்மரைஸ்ட்டுக்களும் இஸ்லாத்தின் மூலமந்திரமான கலிமாவை ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. விஞ்ஞான ஆராய்வெல்லாம் பிரபஞ்சத்தை மையமாகக்கொண்டே நடைபெறுகிறது. இஸ்லாத்தின் கலிமாவோ நான் என்றுணரும் உணர்வைப் பிரபஞ்சத்துக்கு மையமாகக் கொண்டு ஆராயும் படி (தியானிக்கும்படி) ஏவிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வரையும் தத்தம் சொந்த அனுபவத்தில் உணரும்படி

கூறிக்கொண்டிருக்கிறது. எனவே உடனடியான பலனை அறிஞர்கள் பெறவேண்டுமானால் கலிமாவை அடிப்படையாகக் கொண்டே உண்மையை உணர முற்படவேண்டும் என்பது எனது அவா. விஞ்ஞானம் இஸ்லாத்தை, அதன் மூலமந்திரமான கலிமாவை ஏற்றுக்கொள்ளும் காலம் சமீபத்தில் வரலாம் என்பது என் அபிப்பிராயமாகும். விஞ்ஞானத்தையும் தௌஹீதையும் ஒப்பிட்டு நோக்குவதானால் மிகமிக அதிகம் எழுத வேண்டியேற்படும். இங்கே எமக்கு அவகாசமில்லாதிருப்பதால் மிகமிகக் குறுகலாய்ச் சில குறிப்புக்களைத்தருகிறேன். பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்து தெளிவு பெறுக.

## ஆராய்ச்சியாளர்களின் முடிவு

1. ஜடவாதிகள் என்ற பிரிவினர் மனத்தில் ஊன்றிப்பதிந்த கற்பனை அல்லது விகாரந்தான் இறையுணர்வு என்று கூறுகின்றனர்.

2. அடொல்ப் கச்சிலி என்பவர் இராசாயன உயிர்ச்சத்துக் களின் குறைவினால் ஏற்படும் மனோ விகாரமே இறை யுணர்வு என்று கூறுகிறார்

3. ஒரு சில வைத்திய அறிஞர்கள் கஞ்சா, அபின் போன்ற போதைவஸ்துக்களின் மயக்கினால் ஏற்படும் நிகழ்ச்சியே இறையுணர்வு என்று கூறுகின்றார்கள்

4. சந்தானா என்பவர் இறையுணர்வென்பது ஓர் உளநோய் என்று கூறுகின்றார்

5. இன்னும் சில ஆராய்ச்சியாளர்கள் மூளை நுண்ம அமைப்புக் கோளாறினால் இறையுணர்வு ஏற்படுகிற தென்று கூறுகிறார்கள்.

6. இன்னும் சில ஆய்வாளர்கள் பக்தியின் மிகைப்பட்ட வேகத்தினால் உருவாகும் கற்பனைக்கூற்றே இறை யுணர்வு என்று கூறுகிறார்கள்.

இந்த ஆறுவகை விபரங்களுந்தான் நாம் இன்றைய ஆராய்விலிருந்து பெற்றுக்கொண்ட முடிவுகளாகும். நாம் அறிந்த அறிவையும், குர்ஆன் ஹதீஸுகளின் விளக்கத்தையும், மேன்மக்களின் அனுபவ அறிவையும் ஒப்பிட்டு நோக்கினால் நாம் இதுவரை கண்டறிந்த உலகக்கல்வி வேறு என்பதும் இவ்விதமான ஆராய்வுகளினால் ஆத்மீக உண்மையை உணர முடியாதென்பதும் குர்ஆன் ஹதீஸுகளினால் விளக்கப்படுகிற நபிமார் வலிமார்களின் இறையுணர்வு வேறு என்பதும் தென்படுகிறது. இவ்வுணர்வுபற்றிக் கூறப்பட்ட 1,2,3.4.5 ம் இலக்கங்களுக்குரிய விபரங்கள் மனித உள்ளத்தின் வெளியமைப்பு (அனாநிய்யத்) என்ற சாதாரண மனிதனின் நிலைமையைக் கொண்ட ஆராய்வாக இருக்கிறது. இவ்வித ஆராய்வுகள் ஆராய்ச்சியாளாரின் அறிவு வட்டத்துக்குட் பட்டவையாயும் இருக்கின்றன. இன்று சரியென்று கண்டது நாளை பிழையாயும் தென்படலாம். இவ்வாராய்வின் முடிவு உண்மையானதுதான். ஆனால் பக்திமான்களைப்பற்றிய 6வது விஷயத்திலும் ஓரளவு உண்மையுண்டு. இந்தப் பக்திமான்கள் என்போர் தௌஹீதின் அடிப்படையில் இல்லாமல் அனாநிய்யத்துடையோராய் இருந்து அறிந்து கொள்ளும் காட்சிகள், பேச்சுக்களை கற்பனை (கியாலி) என்ற கூறுவது முற்றிலும் உண்மை. ஆயினும் குருடன் கையில் விரால் அகப்படுவது போல இந்த மூட பக்தியுடைய மக்களுக்கும் சிலவேளைகளில் ஓரளவு உண்மை தென்படக்கூடும். இதற்குக்காரணம் இவர்களுடைய உள்ளம் வெறுமனேயாகும்போது இவர்களுடைய பக்திக்குக் காரணமாயிருந்த ஏதோ ஓர் எண்ண அலை தாக்குவதாலேயே இவ்விதமான உணர்வு ஏற்படுகிறது. இப்படி ஓரிருமுறை

ஏற்பட்டாலும் அது உண்மையான நூறுவீதமும் சரியான இறையுணர்வென்று கூறமுடியாது. பிரபஞ்சத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நல்லடியார்களின் எண்ண அலைகள் ஆழ்துயில் நிலையிலுள்ள மனத்தில் தாக்கத்தை யேற்படுத்துகின்றன. இது ஓர் தற்செயல் நிகழ்ச்சிதான். இதைத் தெளிவுபடுத்த மிக நீணட நேரம் தேவையாகையாலும் இவ்விஷயம் இங்கு அவசியமில்லாதிருப்பதாலும் இதை இவ்வளவோடு முடிப்போம்.

அடுத்ததாக பக்தர்களில் இன்னொருவகையினர் இருக்கிறார்கள். இவர்கள் தௌஹீதை விளங்கியறிந்து அதில் ஒன்றிவிடுவதற்காக எவ்வேளையிலும் தங்களுள்ளத்தில் அறிவுப் போராட்டம் நடாத்துபவர்கள். இவர்களை “ஹாஷிக்கீன்கள்” என்று கூறப்படும். இவர்கள் மூட நம்பிக்கையுள்ள பக்தர்களல்ல. இவர்களைப் பொதுப்படையாய்ப் பக்திமான்களென்று கூறினாலும் இவர்கள் முக்தியில் முற்றிலும் அழிந்து விடத்துடிக்கும் மக்களாயிருப்பதால் இவர்கள் காணும் காட்சிகள், கேட்கும் பேச்சுக்கள் உண்மையானவையாயும் வழிகாட்டி உறுதிப்படுத்தும் தன்மையுடையனவாயும் இருக்கின்றன. ஆயினும் இவ்விதக்காட்சிகளைக்கொண்டு அவர்கள் தாங்கள் நேர்வழியை, குறிக்கோளை அடையலாமேயன்றிப் பிறரை வழிநடாத்த அவை உதவி செய்யா. பிறருடைய விஷயங்களில் இவர்களுடைய காட்சிகள், பேச்சுக்கள் நூறுவீதமும் பிரயோசனம் செய்யாது. சில வேளைகளில் இவர்களுடைய பேச்சுக்கள் சாதாரண மனிதனைத் தவறாயும் செலுத்தக்கூடும். எனவே இவர்களின் கூற்றை நாம் ஆதாரமாய்க் கொள்ள முடியாது. இவ்விதமான ஹாஸிக்கீன்களில் சிலர்தான் தாத்தைத் தொட்டுணரலாமென்றும் 40 ஆதம்களை அல்லாஹ் படைத்துள்ளானென்றும் நானே உண்மைப் பொருள் (அனல்ஹக்) என்றெல்லாம் கூறியவர்கள். இவர்கள் மயக்க நிலை தெளிந்த வேளைகளில் கூறிய கூற்றுக்கள் 100வீதம் ஆதாரத்தோடுள்ளவையாயும் மயக்கநிலையில் கூறியவை

ஆதாரங்களுக்கு முரணாயிருப்பவையாயும் தென்படுவதால் நாம் ஆதாரங்களோடுள்ளவற்றை ஏற்கவும் ஆதாரங்களை மீறுபவற்றை மறுக்கவும்வேண்டியது நியாயமே.

குர்ஆனில், இதிலுள்ள நல்லவற்றையெடுத்துக் கொள்ளுங்களென்று இறைவன் கூறுவதால் அதில்(குர்ஆனில்) தீயதுமுண்டென்பதும் அதை ஏற்கக்கூடாதென்பதும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எனவே எவர் எதை எப்படிக் கூறினாலும் நாம் உண்மையை ஏற்போம். பொய்யை மறுப்போம். ஹாஸிக்கீன்கள் இப்படிச் சிற்சில முரண்பாடுகளில் சிக்குவதற்குக் காரணம் என்னவென்றால் இந்த ஹாஸிக்கீன்கள் அனாநிய்யத் முற்றாய் நீங்காதவர்களாயிருப்பதே. இவ்வகை யினரின் போக்கு எமக்குப் பிடிக்கவில்லையென்றால் நாம் அவர்களிடமிருந்து விடுபடுவது நல்லது. ஆனால் அன்னோரைப் பிழையாய்க்கண்டு அவர்களைத் தண்டிக்க, உபத்திரவம் செய்ய நாம் முற்படுவது மாபெரும் பாதகமாகும். அவர்களின் விஷயத்தில் தவறாகத் தலையிடுவது இயற்கையின் தண்டனை களுக்கு எம்மை ஆளாக்கலாம். இவ்வித ஹாஷிக்கீன் களுக்கேட்படும் காட்சிகள், பேச்சுக்களும் உண்மையான பூரணமான இறையுணர்வு தானென்றும் கூறமுடியாது.சூரியனின் இயல்பான ஒளியிலிருந்து சந்திரன் ஒளியைப் பெறுவது போல இம்மக்களும் தங்களிடமுள்ள நூர் என்ற ஒளியை அவரவர் தன்மைக்கேற்ப பெறுகிறார்கள். இன்னோர் முற்றிலும் தெளிவு பெற்றவர்களல்லர். இவர்களுக்கேட்படும் பிரதிபலிப்புக்குக் காரணம் அனாநிய்யத் அவர்களை விட்டும் முற்றாய் நீங்காமல் திரையாயிருந்து கொண்டிருப்பதே. இவர்களை இறையை நோக்கி ஏறுவோர் என்று நாம் கூறலாம். தாங்கள் பிரயாணஞ் செய்து வந்த வழியை இவர்கள் தெளிவாய் அனுபவத்தில் அறிந்து கொண்டிருக்கிறார்கள். மிகுதியாயிருக்கும் வழியை இவர்கள் அனுபவத்தில் அமைக்கவே முயற்சித்துக் கொண்டிருப்பதால் பிறருக்கு வழிகாட்டும் உரிமை, அறிவு,

தெளிவு. ஆதாரம், இவர்களிடம் ஒப்படைக்கப்படுவதில்லை. எனினும் இவர்கள் நல்லடியார்களே என்பதும் இவர்களுக்குக் காட்சி, பேச்சு உண்டெனப்து உண்மைதான்.

இவ்விதக் காட்சி, பேச்சு ஒரு விரிவான வட்டவரைக் குட்பட்டதாகும். இன்னோர் ஊண் உறக்கம் அற்றிருப்பதால் அல்லது ஊண் உறக்கம் இன்னோருக்குக் குறைவாயிருப்பதால் வைத்திய ஆராய்வின்படி அடொல்ப் கச்சிலி கூறுவதை நாம் ஏற்கலாம். ஆயினும் அவ்வாராய்வு அவர்களுடைய வெளியுடல், வெளிமனத்தைப் பொறுத்ததாயும் நல்லடியார்களின் நிலைமை நான் என்றுணரும் றூஹுவைப் பொறுத்ததாயுமிருப்பதால் முழுமைபெற்ற நல்லடியார்களின் விஷயத்தில் அடொல்ப் கச்சிலியின் கூற்றை நாம் ஏற்கமுடியாது.

அடுத்ததாக நபிமார்கள், றஸூல்மார்கள், குத்புல் அக்தாபுகள் அல்லது ஷேகுமுறப்பிகள் பெற்றுக்கொள்ளும் இறையுணர்வு என்பது நாம் முன்கூறிய இறையுணர்வை போன்றதல்ல. நபிமார்கள் அனாநிய்யத்தற்றவர்கள் ஆயினும் அவர்களுக்கும் ஒரு வரையறையுண்டு. சூரிய ஒளி பூமியை யடைய பலதிரைகளைத் தாண்டுவது போல (வடிகட்டப்படு வதுபோல) நூர் என்ற ஒளியும் வடிகட்டப்பட்டே (பல திரைகளைத் தாண்டியே) அவர்களை அடைகிறது. அவ்வாறு வடிகட்டப்பட்ட அந்த நூர் மேலும் வடிகட்டப்பட்டே எம்மிடத்தில் கிடைக்கிறது. றஸூல்மார்கள் இதைவிட இன்னும் மிகைப்பட்ட வர்கள். இவர்கள் நூர் என்ற ஒளியை முறைப்படி வடிகட்டியே மக்களிடம் அளிக்கிறார்கள். இதை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போது, நூரின் திரைகள் திடீரென நீக்கப்படுவதால் பேரழிவுகள் ஏற்படுகின்றன. இவ்விதப் பேரழிவுகள் ஆது, ஸமூது போன்ற கூட்டங்களுக்கு மட்டுமல்ல இன்றுந்தான் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனித அறிவில் இவ்வித சரித்திர நிகழ்வுகள் இடம்பிடித்திருந்தாலும் அதை முன்மாதிரியாய்க் கொண்டு தற்கால நிகழ்ச்சிகளை மனிதன் எடை போடுவதில்லை.

இது மனிதனின் மருட்சியாகும். நெருப்பைக்கொண்டு இப்றாஹீம்(அலை) அவர்களைப் பஸ்மீகமாக்க நம்றூது முனைந்தான். ஆனால் உலகிலேயே மிகப் பலவீனமான ஓர் ஈயைக் கொண்டே அவன் சாகடிக்கப்பட்டான். அம்பு, வில், வாள் முதலாம் (அக்காலத்திலுள்ள மிகக்கொடுமையான) ஆயுதங்களைக் கொண்டு எமது றஸூலை ஒழித்துக்கட்ட முனைந்த அபூஜஹ்லும் அவன் கூட்டமும் உலகிலேயே மிகப் பலவீனமான நூலாம் பூச்சியின் வலையைக்கொண்டே தோற்கடிக்கப்பட்டார்கள். ஞானிகளின் தந்தை(அபுல்ஹிகம்) என்ற பெயருடைய சிறந்த கல்விமான் எழுதப்படிக்கத்தெரியாத உம்மி நபியால் தோற்கடிப்பட்டான்.

இவ்விதக் காட்சிகள், பேச்சுக்கள், நிகழ்ச்சிகள் போன்றவை நபிமார்கள், றஸூல்மார்கள் யாவருக்கும் சொந்தமானவை. ஆயினும் எமது றஸூலே கரீம் முஹம்மது முஸ்தபா(ஸல்) அவர்களுக்கும் அவர்களின் அடிமேல் அடிவைத்து நடந்துசென்ற குத்புல் அக்தாபுகளுக்கும் ஏற்படும் இறையுணர்வு சிருஷ்டிக்குரியதல்ல. அது நூர் என்ற றப்புக்கேயுரியதாயிருப்பதால் இதில் எவ்விதச் சந்தேகமும் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் இதை விளங்கித் தெளிவுபெறுவதும் விளக்குவதும் மிகமிகக் கடினமான ஒன்றுதான். ஆயினும் நான் இதை இயன்றவரை விளக்க வேண்டியவனாகிறேன். ஏனென்றால் நிறைவு பெறாத உலகக்கல்வியிலும் ஏமாற்றுப்பேர்வழிகளின் ஏமாற்றுக் கல்வியிலும் நீங்கள் ஏமாறக் கூடாதென்பதற்காகவே இதைக் கூறகிறேன்.

றஸூல்(ஸல்) அவர்கள் எமக்கு விளக்கிய தௌஹீதின் விபரத்தின்படி ஒரு மனிதன் செயல்பட்டால் என்றைக்கோ ஒருநாள் திடீரென அவனுடைய அனாநிய்யத்து அழிந்து விடுகிறது. அங்கே இன்ஸான் என்பதோ, துவிதம் என்பதோ கிடையாது.

நான் என்றுணரும் உண்மையான நூர், அதனிடமுள்ள லௌஹு என்ற தன்னால் உருவாக்கப்பட்ட பலகையையும் அதிலுள்ள யாவற்றையும் தெரிந்துகொண்டதாய் ஆகிவிடுகிறது. இங்கே திரையென்பதும் இடைபடை காரணங்களும் கிடையாது. எனவே அந்த நூர் எதிர்கால நிகழ்ச்சிகளை அவ்வப்போதுள்ள அவசியத்தின்அளவு வெளியாக்குகிறது. தீர்க்கதரிசனம் என்பது இதுவே. தீர்க்கமாய் அறிவது, உணர்வது என்பதே அதன் அர்த்தமாகும். நபி(ஸல்) அவர்களுடைய அறிவிப்புக்கள், தீர்க்க தரிசனங்கள் இன்றும் நிறைவேறிக் கொண்டிருப்பதை அறிவாளர்கள் அறிந்திருக்கிறார்கள். தௌஹீதில் நிலைப்பட்ட நல்லடியார்களுக்கு இறையுணர்வு(தஜல்லி) உண்டென்பது நூறுவீதமும் உண்மையானதுதான்.

**குர்ஆன்: 58:22**


لا تجد قوما يؤمنون بالله واليوم الآخر يوادون
من حاد الله ورسوله ولو كانوا آباءهم أو أبناءهم
أو إخوانهم أو عشيرتهم أولئك كتب في قلوبهم
الإيمان وأيدهم بروح منه ويدخلهم جنت تجري
من تحتها الأنهر خالدين فيها رضي الله عنهم ورضوا
عنه أولئك حزب الله ألا إن حزب الله هم المفلحون

**இவர்களுடைய இருதயங்களில் அல்லாஹ் விசுவாசத்தைப் பதியவைத்துத் தன்னுடைய உணர்வைக் கொண்டு (றூஹைக் கொண்டு)ம் இவர்களைப் பலப்படுத்தி வைக்கிறான்.**

**குர்ஆன்: 6:75**

وَكَذَٰلِكَ نُرِيٓ إِبۡرَٰهِيمَ مَلَكُوتَ ٱلسَّمَٰوَٰتِ
وَٱلۡأَرۡضِ وَلِيَكُونَ مِنَ ٱلۡمُوقِنِينَ ۝

**இப்றாஹீம்(அலை) எகீன்(விசுவாசம்) கொள்வதற்காக வானங்களிலும் பூமியிலுமுள்ள மலக்கூத்தை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்துவந்தோம்.**

இவ்வாயத்தின்படி ஈமானில் உறுதியடைவதற்காக மலக்கூத்தின் சில இரகசியங்கள் அறிவிக்கப்படுகின்றனவென்பது தென்படுகிறது. மேலே காட்டிய 58:22ம் ஆயத்தின்படி விசுவாசம் பூரணமாய் இருதயத்தில் பதியும்போது அங்கே சிருஷ்டியின் நான் என்ற உணர்வு நீக்கப்பட்டு இறைவனுடைய நான் என்னும் தன்னுணர்வு ஏற்பட்டுவிடுகிறது. தஜல்லியென்பதும் இறை ஐக்கியம் என்பதும் லிகா என்பதும் இதுவே. றஸூல் (ஸல்)அவர்களுடைய விஷயங்களைக் கூர்ந்து நோக்கினால் இவ்வுண்மையை எம்மால் உணரமுடியும். இது அனுபவத்தில் பெறவேண்டிய ஒரு விஷயமாகும். இவ்விதக் காட்சிகள் நபி(ஸல்) அவர்களாலும் ஒரு சில நல்லடியார்களாலும் விளக்கப்பட்டுள்ளன. மனித அறிவுக்கேற்றபடி பேச அன்பியாக்களாகிய நாங்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறோமென்று றஸூல்(ஸல்) அவர்கள் கூறிய கூற்றுங்கிணங்க அவர்கள் கண்ட காட்சிகளை எம்முடைய அறிவுக்கேற்றபடி உருவகப்படுத்தி விளக்கியுள்ளார்கள். நாமறிந்துள்ள நரக சுவர்க்க வர்ணனைகளெல்லாம் எமதறிவுக்கேற்றபடிதான் கூறப்பட்டுள்ளன. நரக சுவர்க்கங்களின் உண்மை எமதறிவு வட்டத்தைக் கடந்ததாயிருப்பதால் எம்மால் உணரப்படக்கூடிய அளவு எமது வாழ்க்கை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கியுள்ளார்கள். றஸூல்(ஸல்) அவர்கள் கூறிய துன்யா ஆகிறாவுடைய அத்தனை விஷயங்களும் அவர்களுடைய சொந்த அனுபவ உண்மையிலிருந்து வெளிப்பட்டவைதான்.

இவ்விதமான விஷயங்கள்(நரகம், சுவர்க்கம், லிகா போன்றவை) பொய்யானவையல்ல. உலகக் கல்வியில் கட்டுண்ணாதவற்றை உலகக் கல்வியைக் கொண்டே உருவகப்படுத்தி விளக்கப்பட்டிருக்கிறது.

எனவே இறைநேசர்களான நல்லடியார்களிடத்தில் வெளியாகும் இறையுணர்வு உண்மையானதாயும் ஹாஷிக்கீன்களின் இறையுணர்வு சந்தேகத்தோடுள்ளதாயும் மது போதைகளினால் உருவாகும் இறையுணர்வு கற்பனையாயும் ஆனந்த மனத்தினால் (வெளி மனத்தினால்) உருவாக்கப்படும் இறையுணர்வு உளநோயாயும் இருக்கின்றது. அடுத்து பசி, பட்டினி, உறக்கமின்மையால் ஏற்படும் இறையுணர்வு உண்மையாயுமிருக்கலாம், பொய்யாயுமிருக்கலாம். இதை ஆராயாமல் முடிவுக்கு வரமுடியாது. ஏனென்றால் தொடர்ந்து பசியோடு தனிமையில் உறக்கமற்றிருக்கும் ஒருவருக்கு ஷைத்தானி, ஹைவானி என்ற பண்புகள் நீங்கிவிடுவதால் அவருடைய உள்ளம் சூட்சும உலகைக் காணக்கூடிய நிலையை அடையக்கூடும். ஆயினும் அவருடைய உள்ளம் உலக அனுபவ அடிப்படையிலிருந்து காணும் காட்சி, கேட்கும் பேச்சு நூறுவீதமும் உண்மையானதாயிருக்கமுடியாது. உண்மையாயிருந்தாலும் அதை ஆராய்ந்துதான் அவர் உண்மையைப் பெறவேண்டியவராகிறார். உலக அனுபவ அடிப்படையில் இல்லாத ஒரு காட்சி, பேச்சு வெளியானால் அது உண்மையையுணர்த்தும் சைக்கினையாய் (இஸாரத்தாய்) இருக்கலாம்,மகனைப் பலியிட இப்றாஹீம்(அலை) அவர்கள் முனைந்தது இவ்வகையிலுள்ளதுதான். அவர்கள் ஒரு நபியாயிருந்தும் அக்கனவை விளங்கிக்கொள்ளும் ஆற்றல் அப்போது அவர்களிடமிருக்கவில்லை, இவ்விதக் காட்சிகள் பேச்சுக்கள்தான் இஸாரத் என்பவை. இந்த இஸாரத்தை (சைக்கினையை) உண்மையென நம்பி அதை அமுல்படுத்த இப்றாஹீம்(அலை) அவர்கள் முனைந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய காலத்தில் முழுமைபெற்ற வேதம் இருந்ததில்லை. தெளிவான ஆதாரங்கள் தரப்பட்டிருக்கவில்லை. கட்டளைகளான ஒரு சில ஸுஹ்புகள் மட்டுமே இருந்தன.

எமது றஸூல்(ஸல்) அவர்களுடைய காலத்தில் வேதம் முழுமை பெற்றுள்ளது. பூரண ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. உண்மையான இறையுணர்வை அறிந்து கொள்ளும் விளக்கம் அருளப்பட்டிருக்கிறது. இதை அனைவரும் அறிய வேண்டியது அவசியமாயுமிருக்கிறது. இது இங்கே சுருக்கமாய்த் தரப்படுகிறது.

நான் என்றுணரும்(இன்ஸான்) றூஹு நான்கு அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டு தன் செயல்களைத் தன் நப்ஸுமூலம் உடலுக்கறிவிக்க அவ்வுடல் இயக்கம் பெறுகிறது. இந்த நான்கு தத்துவங்களில்

1வது:-

ஷைத்தானிய்யா என்பது உள்ளத்திலேற்படும் தீய குணங்களின் மூலமாயிருப்பது. ஷைத்தானிய்யாவே கன்னாஸ், வஸ்வாஸ் என்பவையும் ஷைத்தானிய்யாவையே குறிக்கும்.

2வது:-

ஹைவானிய்யா உள்ளத்திலேற்படும் மிருக சுபாவம் என்பதே இதன் அர்த்தம். உலக இன்பத்தை விரும்புவது இந்த ஹைவானியின் சுபாவமாகும். பிறரைப்பற்றிக் கவலையே கிடையாது. நான் வாழவேண்டும், இன்பம் பெறவேண்டும் என்பதே இதன் நோக்கு. ஸ்பரிஸமும் அதன் புலன்களும் ஹைவானியைச் சேர்ந்தவைதான்.

3வது:-

மலக்கானிய்யா. சூட்சும உலகை அறிந்து அதைப் பயன்படுத்தும் வழிகளைத் தெரிவிக்கும் பண்பே மலக்கானி

என்பது. இது நப்ஸானியோடு தொடர்புடையது. அதாவது உள்ளம் ஸைத்தானி, ஹைவானியை அடக்கியாளும் போது இத்தொடர்பு கிட்டலாம்.

4வது:-

றஹ்மானிய்யா. அப்துக்கும் றப்புக்குமுள்ள இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தும் தத்துவம் என்பதே இதன் அர்த்தம். இதில் 3 வகுப்புக்கள் உள்ளன. இவ்விபரம் இங்கு நமக்கவசியமல்ல.

மேலே காட்டிய நான்கு தத்துவங்களையும் மந்திரிகளாய்க் கொண்ட ஒரு மந்திரிசபைதான் மனித உள்ளம், நப்ஸு என்பது. இந்த நான்கு மந்திரிகளுக்கும் எஜமானா யிருப்பவரே இன்ஸான் என்ற தெய்வப் பிரதிநிதியாவார்.

இந்த இன்ஸான் என்பவர் நான் ஒரு சிருஷ்டியென்ற வஹ்மில் ஊறியிருக்கும்போது மேலே கூறிய நான்கு மந்திரிகளையும் அவர்களின் இயல்பையும் அறிந்து கொள்ள முடியாத நிலையிருக்கிறார். இவர் தன் சுதந்திரத்தை, அதிகாரத்தை இழந்துவிடுவதால் இவருடைய மந்திரிகளின் ஆலோசனைப்படிதான் நடப்பார். இதில் வேறுபாடுகாணும் பகுத்தறிவு இவரிடமிருந்தாலும் அது பெரும்பாலாரிடத்தில் முறைப்படி தொழிற்படுவதில்லை. இவரைத்தான் நாம் உலகில் வாழும் சின்னமனிதன்(இன்ஸானுன்ஸகீர்), பாமர மனிதன் என்றும் அவாம் என்றும் கூறுகிறோம். இவரிடம் நான்கு மந்திரிகளில் எவருடைய குணமும் வெளியாகலாம். ஆனால் இன்ஸானுடைய பூரணகுணம் வெளியாகமாட்டாது. சுருங்கக் கூறினால் ஷைத்தானி, ஹைவானியின் உதவியை அடிப்படை யாகக்கொண்ட இவ்வகை மனிதன் ஏதோ மதத்தில் ஏதோவொரு உண்மையில்தான் நான் இருந்து கொண்டிருக்கிறேன் என்று நம்பினாலும்கூட இவன் விலங்கினத்தைச் சேர்ந்தவனாகவே

இருப்பான். அதாவது இவனிடத்தில் மலக்கானி, றஹ்மானி வெளியாதில்லை.

லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை நாவினால் கூறிய ஆரம்ப முஸ்லீமுடைய நிலைமை இதுதான். இக்கலிமாவை அம்மனிதன் எப்போது விளங்கியறிகிறானோ அப்போதுதான் தன் மந்திரிகள் நான்கு பேரைப்பற்றியும் அவர்களை எவ்வகையில் பயன்படுத்துவது என்பதைப்பற்றி யுமான அறிவை அவன் பெற்றுக்கொள்கிறான். இவன் தன்னுடைய வேத நூலை விளங்கியறிவதால் ஒவ்வொரு மந்திரியின் சுபாவத்தையும் அதனாலேற்படும் விளைவுகளையும் அறிகிறான். இப்போது அவனுடைய அறிவு முறைப்படி இயங்கத் தொடங்குகிறது. ஏவல் விலக்கல்களைக் கவனித்துக் கொள்ளும் அம்மனிதன் தன் குறிக்கோளையடைவதற்கு முதன்முதல் பயிற்சியாகக் கொள்வதே “ஸலாத்” தொழுகையென்பது. இந்தத் தொழுகையின் வெளியமைப்பைப்பற்றி நாம் தெளிவாய் அறிந்திருப்பதைப் போல அதன் உள்ளமைபைப்பற்றியும் அறிந்து கொள்ளாமையினால் அது எமக்குப் பிரயோசனம் தருவதில்லை. இதில் வெற்றிபெற்றால் நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற கடமைகளிலும் வெற்றிபெற்றுக் கொண்டே செல்லலாம். தொழுகை விஷயத்தில் வெற்றிகாணாத ஒருவர் மற்றெந்தச் செயலிலும் வெற்றிபெறவே முடியாது. இந்த அமல்கள் கலிமாவினால் விளங்கிக் கொண்ட உண்மையில் தரிபடவே தரப்பட்டிருக்கின்றன. வெளியமல்களின் உண்மை யான நோக்கம், ஷைத்தானி, ஹைவானியென்ற இரு மந்திரிகளையும் அடக்கியாளும் பயிற்சியைப் பெறுவதாகும். இன்னும் கூறினால் ஷைத்தானி, ஹைவானியுடைய தீய எண்ணங்களுக்கு இடமளிக்காமல் உள்ளத்தை(கல்பை), எண்ணத்தை ஒருவழிப்படுத்துவதே வெளியமல்களின் உண்மையான குறிக்கோளாகும். தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் காப்பாற்றும், திக்றோ மிகப் பெரும் காரியம் என்று குர்ஆனின் 29:45ம் ஆயத்து விபரம் தருகிறது. இதை எமது அறிஞர்கள் விளக்கித் தரவில்லை. இனிமேலாவது

தொழுகை தொழுகையென்று மாளாமல் தொழுகையின் அந்தரங்கமென்ன, அதைக் கொண்டு இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவது எப்படி? என்பதைப்பற்றி விளங்கிச் செயல்படுவதே சிறந்தது. நாம் உண்மையாய்ச் செயல்பட்டால் அதே கணம் எமக்கு வழிகாட்டப்படலாம்.

பிறகு ஷைத்தானி, ஹைவானியை அடக்கியாளும் அதிகாரம்(உறுதி) ஏற்பட்டுவிட்டால் மலக்கானி வேலை செய்ய ஆரம்பிக்கிறது. இந்நிலையிலுள்ள மனிதருக்கு மலக்கூத்துடைய உலகிலிருந்து சிலகாட்சிகள், பேச்சுக்கள் தென்படக்கூடும்.

**குர்ஆன் 41:53**

سَنُرِيهِمْ آيَاتِنَا فِي
الْآفَاقِ وَفِي أَنفُسِهِمْ حَتَّىٰ يَتَبَيَّنَ لَهُمْ أَنَّهُ الْحَقُّ ۗ
أَوَلَمْ يَكْفِ بِرَبِّكَ أَنَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدٌ ۝

**நம்முடைய உண்மை அவர்களுக்கு வெளியாவதற்காக உலகத்திலேயும் அவர்களுடைய நப்ஸுகளிலேயும் நம்முடைய அத்தாட்சிகளை நாம் அவர்களுக்குக் காட்டுவோம்.**

இவ்வாயத்தின்படி உலகின்(மலக்கூத்து) இரகஸியங்களை அவர்கள் அறிந்து கொள்வது மட்டுமன்றி அவர்களுடைய உள்ளத்திலிருந்தும் பேச்சு, காட்சி போன்ற விஷயங்களையும் அறிந்துகொள்வார்களென்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

**குர்ஆன்: 6:75**

وَكَذٰلِكَ نُرِيْٓ اِبْرٰهِيْمَ مَلَكُوْتَ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَلِيَكُوْنَ مِنَ الْمُوْقِنِيْنَ ۝

**இப்றாஹீம் உறுதி கொள்ளும் பொருட்டு வானங்களிலும் பூமியிலுமுள்ள(மலக்கூத்தை) சிருஷ்டிகளை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்து வந்தோம்.**

இவ்வாயத்து முன்பு தரப்பட்டுள்ளது. இவ்வாயத்தின்படி ஈமானில் வளர்ச்சிபெற்றுக் கொண்டிருக்கும் மக்களுக்கு மற்ற மக்களறியாத இரகசியபரகசியங்கள் வெளியாவது உண்மையென்று உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்விதமான நிகழ்ச்சிக்குப் பிறகு றஹ்மான் என்ற தன் றப்புவுக்கும் அப்துவாகிய தனக்குமிடையில் உறவாட்டம்(தொடர்பு) ஏற்படலாம். அப்துவின் நிலைமைக்கேற்ற காட்சிகள், பேச்சுகள் தென்படக்கூடும். இவற்றைப்பகுத்து இக்காட்சி இன்னபகுதியைச் சேர்ந்தென்று கண்டறிந்து வெற்றிபெற இறைவழி காட்டலும் அயராமுயற்சியும் காமீல்களான நல்லடியார்களின் தொடர்பும் அவசியமாகும். சில்ஸிலாவும், தாடி தலைப்பாகையும் இவ்வுண்மைக்கு வழிகாட்டாது. மனிதன் வெளியமல்களையும் அவற்றின் நோக்கத்தையும் தெரிந்து கொண்டு முறைப்படி செயலில் ஈடுபடுவதால் ஒருபோது நான் என்ற அனாநிய்யத்து அழிந்துவிட உண்மையாய் இருந்து இயங்கிக் கொண்டிருந்த றூஹு தன் சொந்தநிலையில் தரிபட்டுவிடுகிறது. இங்கே எவ்விதத்திரையும் இருக்காது. இதற்குமுன் தென்பட்டவை யாவும் ஹுளூர் என்றும் ஹக்கு இதற்கப்பாற்பட்டதென்பதும் இவருக்குத் தென்படலாம். இதுதான் ஓர் உண்மையான மூ.்.மினுடைய நிலமை. எனவே இவ்வகையினரிடத்தில் ஏற்படும் இறையுணர்வு உண்மையானதுதான். இவ்வுணர்வை பௌதீக உலக

ஆய்வுகளைக் கொண்டு தீர்ப்பிட முடியாது. ஆயினும் இதை அனுமான வாயிலாய் உண்மையென்று ஒப்புக்கொள்ள முடியும்.

இன்றுள்ள உலகில் இவ்வித ஆத்மீக உண்மைகளை அறிந்து கொள்ளாத மக்களில் பலர், தங்களை ஞானவான்களாய் அவ்லியாக்களாய், மேதைகளாய்க் காட்டிக்கொள்ள முனைகிறார்கள். இவ்வகையினரின் அறிவுக்கு முரணான, மூடத்தனமான உபதேசங்கள் மக்களை இருளில் தள்ளு வதாகவே அமைந்திருக்கின்றன. இல்ஹாமத், இல்முன்லத்துன்னி, கஸ்பு, றூயா, கனவு போன்ற விஷயங்களில் எத்தனையோ வகைகள், இனங்கள் இருக்கின்றன. இவ்விபரங்கள் நூற்களில் பெரும்பாலும் வெளிப்படுத்தப் படவில்லை. வெளிப்படுத்துவது அவசியமுமல்ல. இவ்வித விபரங்களை எடை போட உண்மை யென்று தீர்ப்புக்கட்ட மிக மிக நுண்ணறிவு அவசியமாகும். இவ்வித இறையுணர்வைக் கொண்ட ஒருவர் இறைவனின் பேச்சுக்கு, செயலுக்குத் திரையாய் அமைந்து விடுகிறார். இதைவிட அபின் கஞ்சாப் போதைகளில் மாட்டிக் கொண்டவர்களை அல்லது உளநோயுள்ளவர்களை நாம் ஷேகு ஸெய்யதுகளாக- இமாம்களாகக் கொள்ளாமல் எமது இமாமான குர்ஆனையும் எமது ஷெய்கான றஸுல்(ஸல்) அவர்களையும் தெளிவாய் விளங்கிப் பின்பற்றுவதே அறிவுடைமையாகும்.

## 42

# கலிமா இறையுணர்வைத் தருமா?

மனிதனுக்குத் தீனுடைய விஷயத்திலேற்படக்கூடிய அத்தனை மருட்சிகளையும்(திரைகளையும்) ஒரே நொடியில் கிழிந்தெறிந்து உண்மையை விளக்கக்கூடிய ஒரு ஜீவமந்திரந்தான் கலிமத்துத்தையிபா என்பது. எம் முன்னோர்களிலுள்ள கீழ்நாட்டார், மேல்நாட்டார், ஸலபுகள், கலபுகள் ஆகிய இவர்களில் மிகப் பெரும் உலமாக்களான ஒருசிலர்கூட இவ்வுண்மையை உணர்ந்திருந்ததாய் நான் காணவில்லை. மேலும் மக்களால் அவ்லியாக்கள் என்று கூறப்படும் மக்களிலும் மிகப்பலர் கலிமாவைக்கொண்டு இறையுணர்வை(தஜல்லியை)ப் பெறும் வழியை விளக்கியிருப்ப தாயும் நான் காணவில்லை. என்னை எவரும் கோபிக்க வேண்டாம். மக்களால் அவ்லியாக்களாய்க் கருதப்படுவோர் இறைநேசச்செல்வர்களாய், ஒவ்வொரு துறையில் வெற்றி பெற்றவர்களாய் இருந்தார்களென்பது நூறுவீதமும் உண்மை. நான் அதை மறுக்கவேயில்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நப்ஸோடு, அவரவர்களுக்குத் தெரிந்த வழியில் போராடி அரும் முயற்சிசெய்து வெற்றி கண்டவர்கள். ஒவ்வொரு கூட்டத்தோடு மட்டும் பராக்கானவர்கள். உலகமக்கள் யாவருக்கும் அவர்கள் வழிகாட்டிகளாக இருந்தார்களென்று கூறமுடியாது. ஏனென்றால் றஸுல்(ஸல்) அவர்களாலும் முன் நபிமார்களாலும் விளக்கப்பட்ட பாதை ஒன்றேயொன்றுதான். ஆனால் இன்றைய உலகில் எத்தனை

யெத்தனையோ மதுஹபுகளும், தரீக்காக்களும், வழிகளும் இருந்துகொண்டிருக்கின்றன. எத்தனையோ வகையான திக்ருகள் எப்படியெல்லாமோ கையாளப்படுகின்றன. இவர்கள் பலவருட முயற்சி செய்தும் பூரணஇறையுணர்வு பெற்றிருக்கிறார் கள்தானென்று என்னால் கூறமுடியாது. இதற்கு நிறைய ஆதாரங்கள் தரமுடியும். அப்படியவர்கள் பெற்றிருந்தால் பல வழிகள்,கட்சிகள் ஏற்பட்டிரா. அவர்கள் தம்மோடும் தம் கூட்டத்தினரோடு மட்டும் நின்றுவிடாமல் உலகளாவியரீதியில் கலிமத்துத்தையிபாவையும் அதனால் வெற்றிபெறக்கூடிய வழியையும் விளக்கியிருப்பார்கள். இதுவரை இரண்டொருவரைத்தவிர வேறுயாரும் விளக்கியிருப்பதாய் நானறியவில்லை. அந்த மேன்மக்கள் அவரவர் சென்று வெற்றி பெற்ற வழிக்கு அவரவர் பெயரையே சூட்டியிருக்கிறார்கள். மதுஹபுகளை மக்கள் எப்படிக் கட்சியடிப்படையில் எடுத்துக் கொண்டார்களோ அதேபோலத் தரீக்காக்களையும் கட்சியடிப்படையிலேயே எடுத்துக்கெண்டிருக்கிறார்கள்.

இவ்வித மதுஹபுகளும், தரீக்காக்களும், அவசியமற்ற வையென்றோ முற்றிலும் தவறானவையென்றோ நான் கூறவில்லை. தற்போது நடைமுறையிலுள்ள மதுஹபுகளும் தரீக்காக்களும் மன்கூல், ம∴கூலென்ற ஆதாரங்களுடன் உயிருடையவையாய் இயங்குகின்றனவென்று என்னால் கூறமுடியாதிருக்கிறது என்றுதான் கூறுகிறேன். அதாவது இந்த மத்ஹபுகளும், தரீக்காக்களும் கலிமத்துத்தையிபாவின் அடிப்படையில் இயங்கவில்லையென்றுதான் கூறுகிறேன். இந்த மத்ஹபுகளிலும் தரீக்காக்களிலும் வழிகாட்டிகளாய், ஸேகுகளாய்த் தற்காலத்திலிருந்து கொண்டிருக்கிற பெரும்பாலார் கலிமத்துத்தையிபாவைத் தவறாய் விளங்கிக் கொண்டு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று பொருள் கொண்டவர்களாய்ச் செயல்படுகிறார்கள். இவர்களில் பல ஷெய்க்குமார்கள் கலிமாவுக்கு லாஹிர், பாதின் என்று இரு பொருள்களு

ண்டென்றும் வேறு சிலர் கலிமத்துத்தையிபாவுக்கு நாலு பொருள்களுண்டென்றும் கூறகிறார்கள். தங்கள் முரீதீன் களுக்கும் இவ்வித மூடத்தனமான அறிவையே போதித்திருக்கிறார்கள் போதிக்கிறார்கள். இவ்விதமாய் உண்மைக்கு மாறான கொள்கையடிப்படையில் நின்று பலவருடங்கள் முயற்சி செய்தாலும் மனிதன் தனது குறிக்கோளையடைய முடியாதென்பதை இறைவழி செல்லுகிற மக்கள் நிச்சயமாக விளங்கித் தெளிவு பெறவேண்டும்.

அபூஜஹ்லின் கொள்கையை உள்ளத்தில் இருத்திக் கொண்டு தரீக்காக்களைப் பின்பற்றும் மக்கள் தரீக்காக்களை உருவாக்கிய நல்லடியார்களை அவமானம் செய்கிறார்க ளென்பது எனது கருத்தாகும். வழிகாட்டும் மக்கள் இவ்விதமாய்த் தவறான விளக்கம் செய்வது ஏமாற்று வித்தையாயும் எதிர்காலமக்களின் அறிவைத்தடைப்படுத்துவதாயும் அமைந்திருக்கிறது. எமது சமூகத்தில்(இக்காலத்தில்) நாம் அந்த நல்லடியார்களை கண், மூக்கு, கொம்பு, செவியெல்லாம் வைத்தெழுதப்பட்ட சரித்திரவாயிலாய் அறிந்து அவர்களுடைய அற்புதச்செயல்களைக் கொண்டே அவர்களை நல்லடியார்களாய் நம்பியிருக்கிறோம். இது ஓர் குருட்டு நம்பிக்கையென்பதை நாம் உணர்வதில்லை. இவ்வித நம்பிக்கையிலுள்ளவர்கள் அந்த நல்லடியார்கள் என்ன கூறினார்கள்? அவர்களுடைய கொள்கை என்ன? என்பதைக் கொஞ்சமேனும் சிந்திப்பதே இல்லை. இன்றுள்ள தரீக்காக்களின் வழிகாட்டிகளில் மிகப் பெரும்பாலார் இன்றுள்ள விஞ்ஞான கால மக்களின் கேள்விகளுக்கு விடையளிப்பதாக, அவர்களின் கல்புகளிலுள்ள இருட்திரைகளை நீக்கி ஜோதியென்ற நூரைக் குடியேற்றுவதாக நான் காணவில்லை. கேள்வி கேட்கும் மனிதனை நோக்கி இவ்வித ஸெய்குகள் கூறுகிற நல்லுபதேசம் என்னவென்றால் இஸ்லாத்தில் கேள்விக்கு இடமில்லையென்பதே. நான் கூறும் உண்மையை விளங்கிக் கொள்ளாமல் நான் பெரியார்களைக் குறை கூறுகிறேனென்று என்னைக் கோபிக்க வேண்டாமென்று மீண்டும் கூறிவைக்கிறேன். நான் போலிகளை எதிர்ப்பவ

னேயன்றி உண்மையான நல்லடியார்களை எதிர்ப்பவனோ மறுப்பவனோ அல்ல. அந்த நல்லடியார்களின் கொள்கையை, உண்மையைத் தரிப்படுத்த நான் உயிர்த் தியாகம் செய்யவும் ஆயத்தமாயிருக்கிறேன்.

வழி, தீன், ஸிறாத் என்பது ஒன்றேயொன்றுதான். உலகில் தோன்றிய சுமார்124,000 நபிமார்களும் விசேடமாய் எமது றசூல்(ஸல்) அவர்களும் ஸஹாபாப் பெருமக்களும் அவர்களைப் பின்தொடர்ந்த ஏனைய நல்லடியார்களும் எந்த சுன்னாவில்(கொள்கையில்) இருந்தார்களோ அந்தஸுன்னாவை எடுத்துக்கொண்ட மக்களுக்கு உள்ளது ஒரேயோர் தரீக்காதான். அதுதான் வெற்றிபெற்ற 124,000 நபிமாரும் அவர்களைப் பின்பற்றியோரும் எடுத்துக்கொண்ட "தரீக்கத்துல் முப்லிஹீன்"(வெற்றிபெற்ற நல்லடியார்களின்வழி) என்ற தரீக்காவாகும். இது எனக்கோ வேறொருவருக்குமோ தனிப்பட்ட வகையில் சொந்தமானதல்ல. உலகமக்கள் யாவருக்குமே சொந்தமானது.

எமது சமூகத்தில்360 தரீக்காக்கள் ஏற்படும் என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஓர் ஹதீஸ் காணப்படு கிறது. எனவே தரீக்காக்கள், மதுஹபுகள், எத்தனையும் இருக்கலாம். ஆனால் இவையாவும் கலிமத்துத்தையிபாவை உயிராய்க் கொண்டமைந்திருந்தால் 360தரீக்காக்களும் தரீக்கத்துல் முப்லிஹீன் தரீக்காவின் பிள்ளைகளாகவே அமையும்.

**குர்ஆன்: 4:125**

وَمَنْ أَحْسَنُ دِينًا مِّمَّنْ أَسْلَمَ وَجْهَهُ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ
وَاتَّبَعَ مِلَّةَ إِبْرَاهِيمَ حَنِيفًا ۗ وَاتَّخَذَ اللَّهُ إِبْرَاهِيمَ خَلِيلًا ۝

**எவன் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்டு நன்மையும் செய்துஇப்றாஹீமுடைய நேரான மார்க்கத்தையும் பின்பற்றுகிறானோ**

**அவனைவிட அழகான மார்க்கத்தை உடையவன் யார்? அல்லாஹ் இப்றாஹீமைத் தோழராக எடுத்துக் கொண்டான்.**

இவ்வாயத்தில் பலநுட்பங்கள் தென்படுகின்றன. இதில் "ஹனீபன்" "மில்லத்" என்ற இருசொற்கள் தரப்பட்டுள்ளன. இவை மிக விரிவான விளக்கமுடைய சொற்கள். றசூல்(ஸல்) அவர்கள் தாம் இப்றாஹீம்(அலை) அவர்களுடைய மார்க்கத்திலிருப்பதாகப் பலமுறை கூறியிருக்கிறார்கள். குர்ஆன் ஹதீஸுகளில் இதற்கு ஆதாரமுண்டு. இவ்வாயத்தில் றசூல்(ஸல்) அவர்களைக் குறிப்பிடாமல் இப்றாஹீம்(அலை) அவர்களையே இறைவன் கூறியுள்ளான். "ஹனீப்" என்பது விசுவாசம் என்றும் விசுவாசிகள் என்றும் பொருள்படும். இணை, ஷிர்க் உள்ளத்திலும், செயலிலும், சொல்லிலும் ஏற்படாமல் ஈமானில் மிகமிக உறுதியான நிலையிலுள்ளோரை "மில்லத்" என்ற சொல் சுட்டுவதாகும். இவ்வகையினர் நாவினால் கலிமாவைக் கூறி, விளங்கி, உள்ளத்தில் பதித்து, நழுவவிடாமல் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள். இவ்வித நல்லடியார்களையே நாங்கள் பின்பற்றுகிறோமென்று வாயால் கூறிக்கொண்டாலும், கலிமாவின் உண்மையான பொருளை ஷிர்க்காக நாம் மாற்றிக் கொண்டிருக்கிறோமென்றால் நாம் எந்த தரீக்காவில், எந்த மத்ஹபில், எந்த மார்க்கத்தி லிருக்கிறோம்? கலிமாவை உணர்ந்து கொள்ளாத மனிதன் மூடத்தனமென்ற தரீக்காவில் நம்றூத், அபூஜஹ்ல் போன்றோரின் மார்க்கத்திலும் தானிருப்பான். வெற்றி பெறவேண்டுமென்ற அவா அறிவின்மையை, குருட்டு நம்பிக்கையை, பின்பற்றலைத் துணையாய்க் கொள்வதால் மனிதன் தனது குறிக்கோளுக்கு எதிர்த்திசையிலேயே போய்க்கொண்டிருக்கிறானென்று நான்காணுகிறேன். ஆனால் வெற்றிபெற்ற முப்லிஹீன்களான நல்லடியார்கள் சென்ற ஸிறாத்தென்ற தரீக்காவை வழியை எடுத்துக் கொண்டால் மிகக்குறுகிய காலத்தில் குறிக்கோளை யடையலாம் என்பது உறுதி.

காட்டுக்கு, மேட்டுக்குப் போகவேண்டியதில்லை. எவ்வித படாடோபமும் வீண்முயற்சிகளும் அவசியமல்ல. கலிமாவைப் பற்றிய சந்தேகமில்லாத சரியான விளக்கமும் உறுதியான உள்ளமும் மனஒருவழிப்பாடும்(இக்லாஸும்)தான் அவசியம். எவ்வித ஹடயோகமும் சரக்கட்டுப்பாடுகளும் கஞ்சா, அபின் போன்ற மஸ்த்துக்களும் அவசியமே இல்லை. ஏன் இப்படிக் கூறுகிறேனென்றால் இன்றுள்ள தரீக்காக்களிலுள்ள மிகப்பெரும் பாலான மக்கள் கலிமத்துத்தையிபாவை(மணக்கும் கலிமாவை) கலிமத்துல் கபீஸாவாக(துர்நாற்றக்கலிமாவாக) மாற்றிக் கொண்டுதான் செயல்படுகிறார்கள். கலிமாவின் விளக்கம் பெரும்பாலான மக்களுக்குக் கிடைத்திருப்பதாய்த் தென்படவில்லை. எனவே எல்லாத்தரீக்காக்களையும், எல்லா மத்ஹபுகளையும் சேர்ந்த எல்லாமக்களும் "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற கலித்துத்தையிபாவான ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டுச் செயல்படுவதே அறிவுடைமையாகும்.

**குர்ஆன்: 57:27**

ثُمَّ قَفَّيْنَا عَلَىٰٓ اٰثَارِهِمْ بِرُسُلِنَا وَقَفَّيْنَا بِعِيْسَى
ابْنِ مَرْيَمَ وَاٰتَيْنٰهُ الْاِنْجِيْلَ ۙ وَجَعَلْنَا فِيْ
قُلُوْبِ الَّذِيْنَ اتَّبَعُوْهُ رَاْفَةً وَّرَحْمَةً ۭ وَرَهْبَانِيَّةَ ۨ
ابْتَدَعُوْهَا مَا كَتَبْنٰهَا عَلَيْهِمْ اِلَّا ابْتِغَاۗءَ رِضْوَانِ
اللّٰهِ فَمَا رَعَوْهَا حَقَّ رِعَايَتِهَا ۚ فَاٰتَيْنَا الَّذِيْنَ
اٰمَنُوْا مِنْهُمْ اَجْرَهُمْ ۚ وَكَثِيْرٌ مِّنْهُمْ فٰسِقُوْنَ ۝

**(பிரமச்சரியத்தை) துறவியாவதை நாம் கடமையாக விதிக்க வில்லை. எனினும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைய விரும்பி அவர்களே அதை உண்டு பண்ணிக்கொண்டார்கள். அவ்வாறிருந்தும் அவர்கள் அதனை அனுசரிக்க வேண்டிய கிரமப்படி அனுசரிக்கவில்லை.**

**குர்ஆன்: 5:103**

مَا جَعَلَ اللَّهُ مِن بَحِيرَةٍ وَلَا سَائِبَةٍ
وَلَا وَصِيلَةٍ وَلَا حَامٍ وَلَٰكِنَّ الَّذِينَ كَفَرُوا
يَفْتَرُونَ عَلَى اللَّهِ الْكَذِبَ وَأَكْثَرُهُمْ لَا يَعْقِلُونَ

**பஹீறா, ஸாயிபா, வஸீலா, ஹாம் இவையெல்லாம் அல்லாஹ் ஏற்படுத்தியவையல்ல. எனினும் நிராகரிப்போர்தாம்.(அவைகளை அல்லாஹ் ஏற்படுத்தியவையென்று) அல்லாஹ்வின் மீது பொய் கூறுகின்றனர். அவர்களில் பலர் அறிவிலிகளாகவே இருக்கின்றனர்.**
(வஸீலா என்பதில் ஓர் இரகசியமுண்டு)

**குர்ஆன்: 5:35**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَابْتَغُوا إِلَيْهِ
الْوَسِيلَةَ وَجَاهِدُوا فِي سَبِيلِهِ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

**விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து அவனிடம் செல்வதற்குரிய வழியைத் தேடிக்கொள்ளுங்கள். தவிர, அவனுடைய பாதையில் (வஸீலா)ஜிஹாது செய்துகொள்ளுங்கள். நீங்கள் வெற்றியடையலாம்.**

5:103ம் ஆயத்தில் கூறப்பட்ட வஸீலா காபீர்களை நோக்கியும். 5:35ம் ஆயத்தில் கூறப்பட்ட வஸீலா மூமீன்களை நோக்கியும் கூறப்பட்டிருப்பதை நோக்குக. வஸீலா என்ற சொல்லின் எழுத்துக்கள் இவ்விரு ஆயத்துக்களிலும் வேறுபட்டிருப்பதைக் காண்க.

5:35ம் ஆயத்தில் கூறப்பட்ட முமீன்கள் என்போர் கலிமாவை நாவினால் கூறிய முஸ்லீம்களாவர். இவர்கள் வெற்றிபெற வஸீலா அவசியமென்று தென்படுகிறது. இந்த வஸீலா எது? இதை சிந்தித்துத் தெளிக.

விஷயத்துக்கு வருவோம். மனிதனிடமிருக்கும் நான் என்றுணரும் அறிவு திரையற்ற நிலையில் நூர் என்ற பெயரைப் பெறுகிறதென முன்பு விளக்கியிருந்தேன். நூரைக் கொண்டே சர்வ ஆலங்களும் உருவாக்கப்பட்டிருப்பதால் அந்த நூர் சர்வ ஆலங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கிற முஹீத் என்றும் அந்த நூரிலேயே அர்ஷு, குர்ஸி, லவ்ஹு, கலம் முதலிய சர்வ ஆலங்களெல்லாம் அமைந்துள்ளன என்றும் கூறினேன். நூர் என்பது இறைவனின் அறிவேயென்றும் அதுவே றூஹு என்றும் கூறினேன். இவ்வுண்மையை அடிப்படையாய்க் கொண்டு சிந்தனை செய்து பாருங்கள். நான் என்ற உணர்வு நூருக்கேயன்றி வேறொன்றுக்கிருக்க முடியாது. ஏன்? வேறெதுவும் அதனுடனில்லை. கலிமாவைத் தியானம் செய்பவர் நான் என்றுணர்பவன் இறைவனேயென்ற விசுவாசத்தில் முழுமைபெறும் போது அந்த விசுவாசம் நூரினால் உணரப்படும் விசுவாசமாகவேயிருக்கும். இவ்வுணர்வு ஸ்பரிஸத்துக்குரியதல்ல.

கலிமாவிலுள்ள லாஇலாஹ என்ற சொல்லைக் கொண்டு தன்னையும் சர்வ உலகையும் வெளிமனம் மறக்கும்போது (இக்லாஸ் ஏற்படும்போது), அந்த வெளிமனம் என்ற திரை நீங்கிவிடுகிறது. எப்போது அத்திரை நீங்கிவிடுகிறதோ அதேகணம் உள்மனம்(சிருஷ்டியான றூஹு ) இல்லல்லாஹ்

என்ற சொல்லை அனுபவ உண்மையாய்ப் பெற்றுக்கொள்கிறது. இப்போது நான் ஒரு சிருஷ்டியென்ற மயக்கோ சிருஷ்டிகர்த்தா என்ற மயக்கோ அங்கு கிடையாது. இருப்பவன் நான் மட்டுமே (லாஹிறாய். பாத்தினாய், குத்தூஸாய் இருப்பவன் நான் மட்டுமே) என்ற எகீன்(ஈமான், விசுவாசம்) நிரப்பமடைந்து விடுகிறது. இந்த விசுவாசம் நானே அல்லாஹ் என்று விசுவாசம் கொண்டிருக்கிற மூமீனாகிய அல்லாஹ்வுக்குரியதேயன்றி அப்துக்குரியதல்ல. அப்து என்பது என்னுடைய வெறும் ஸூறத்தேயென்பதை அந்த ஈமான் அறிந்திருக்கிறது. எனவே அதனிடத்தில் அப்து றப்பென்ற வேறுபாடற்ற சுயநிலை இருப்பதால் அப்துவிடத்திலோ(ஆலங்களிலோ), றப்புவிடத் திலோ உள்ள எதுவும் அந்த ஈமானுக்கு(அல்லாஹ்வாகிய மூமீனுக்கு) ஒரு போதுமே மறைய முடியாது. இந்த ஈமானைத்தான் "தஜல்லி", இறைஐக்கியம், இறையுணர்வு என்று கூறப்படுகிறது. லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற மந்திரத்தைக் கொண்டேயன்றி வேறு எவ்வித மந்திரத்தைக் கொண்டும் ஈமானின் முழுமை பெற்ற நிலையை மனிதனால் அடைய முடியாது. இதை உறுதிப்படுத்த மிக நீண்ட நேரம் தேவை. கலிமாவை நாவினால் கூறுவதால் மட்டும் ஒரு போதுமே மூமீனாகி விடமுடியாது. விசேஷமாக இறையுணர்வுண்டான மூமீனாகிவிட முடியாது. கலிமாவின் அர்த்தத்தை விளங்கியறிந்து, நானேயன்றி இல்லை என்ற அனுபவம் றூஹுவுக்கு ஏற்படுவதே ஈமானாகும். இவ்வித ஈமானைப் பெற்ற ஒரு நல்லடியார் (வலி) நூராயும் நூருடைய ஸூறத்தாயு மிருக்கிறார்.

இந்த நூருக்கு எங்கிருந்து காட்சி, பேச்சு, செய்தி கிடைக்கும்? தன்னிலிருந்துதான் கிடைக்கும். பிரபஞ்ச அறிவு என்று ஆராய்வாளர்கள் கூறுகிற அறிவு கூட இந்த நூரின் சிறிய வட்டந்தான். பிரபஞ்சம் வெறும் ஸூறத்தாயிருப்பதால் பிரபஞ்சத்துக்கென்று ஓர் அறிவு கிடையாது. எனவே ஈமானில் முழுமைபெற்ற ஒரு நபி, ஒரு வலி, லவ்ஹுவைப்பார்ப்பதும்

இறைவனின் மழ்ஹறாய் அமைவதும் ஆச்சரியமல்ல. இவ்விஷயம் ஆராய்வில் அமையாது. அனுபவத்தில்தான் அமையும். எனவே, இறையுணர்வு பொய்யா? மெய்யா? என்று கண்டறிய விரும்பும் அறிஞர்களை தத்துவ விற்பன்னர்களை, விஞ்ஞானிகளை, மனோதத்துவ மேதைகளை, மூளை இருதய-நரம்பியல் நிபுணர்களை நோக்கி நான் கூறக்கூடிய ஆலோசனை ஒன்றுண்டு. அது என்னவென்றால் இறையுணர்வை ஆராய்வினால் கண்டறிய முயற்சிப்பது அறியாமையாகும். இவ்வாராய்வு உங்கள் அவாவை எடுத்துக்காட்டுகிறது. பாராட்டப்படவேண்டிய விஷயந்தான். இவ்விஷயத்தில் சரியானதொரு முடிவை நீங்கள் பெறவேண்டுமானால் முதலில் கலிமா கூறும் உண்மையைப் பலகோணங்களில் ஆராயுங்கள். உங்கள் உள்ளம் அதன் உண்மையில் திருப்திப்பட்டால் உடனே கலிமாவைக் கொண்டு தியானம் செய்ய முற்படுங்கள். உரியமுறைப்படி நீங்கள் தியானத்தைக் கையாண்டால் சுமார் நாற்பது நாட்களில் அல்லது இரண்டு மூன்று மாதங்களுக்குள் அல்லது இன்னும் சிறிது காலத்தில் இறையுணர்வின் சொந்த அனுபவத்தை நிச்சயமாக உங்களால் பெறமுடியும் என்பதே. தியானம் செய்வதற்குச் சில அணுகு முறைப்பயிற்சிகள் (மனப்பயிற்சிகள்) இருக்கின்றன. தெரிந்த மக்களிடம் விபரத்தைக் கேட்டறிந்து செயலில் ஈடுபாடு கொண்டு வெற்றி காணுங்களென்று கேட்டுக் கொள்கிறேன்.

## மேலும் உங்கள் சிந்தனைக்கு:-

சிருஷ்டியாகிய ஒவ்வொன்றும் ஸூறத்(தோற்றம்) என்ற திரையிலிருந்து கொண்டுதான் தத்தம் புலன்களை ஊடகங்களாய்க் கொண்டு பார்க்கின்றன, கேட்கின்றன, அனுபவிக்கின்றன, உறவாடுகின்றன என்று நான் முன்பே கூறியிருந்தேன். அதை நீங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் கலிமாவிலுள்ள லாஇலாஹ என்ற சொல்லைக் கொண்டு

ஸுறத்தென்ற(தோற்றமென்ற) திரையை முதலில் நீக்குங்கள். ஸுறத்தென்ற திரை அறிவைவிட்டு நீங்கிவிட்டால் அவ்வறிவும் இறந்துவிடும். இப்போது நான் என்ற தன்னுணர்வு மட்டுமே இருக்கும். இந்தத் தன்னுணர்வு தன்னுடன் வேறொன்றில்லை என்றுணர்வதால் சர்வ ஆலங்களிலுமுள்ள தன்னுணர்வுகள் யாவும் ஒரேயோர் உணர்வே என்றும் அவ்வுணர்வுக்குரியவன் நானே என்றும் ஹக்கு உணரப்படுகிறது. இதில் உறுதி பெற்றால் முன் இறந்துபோன அறிவு மீண்டும் உயிர் பெறுகிறது. அதாவது நூர் என்ற அறிவு தன்னால் தனக்குப் போடப்பட்ட தளைகளுடனும், தளைகளற்றதாயும்(அப்துவாயும், றப்புவாயும்) நிலைப்படுகிறது. இதுதான் ஸிர்ருடைய அடியார்களின் நிலை. இதில் பூரண முழுமைபெற்றவர்கள்தான் றஸுல்(ஸல்) அவர்கள். மின்குமிழ்கள் புதிதுபுதிதாய் தயாரிக்கப்பட்டாலும் இருப்பது என்றுமுள்ள ஒரேயொரு மின்சாரமேதான். இதுபோல் இருப்பது என்றுமுள்ள ஒரேயொரு நூரேதான். புதிய மின்குமிழ்கள் போன்றவர்கள்தான் நபிமார்கள்,வலிமார்கள்.

நூர் தன் சுயநிலையிலுள்ளதன் பெயர்தான் இறையுணர்வு என்பது. இவ்விஷயம் விளக்கத்துக்குரியதல்ல அனுபவத்திற்குரியது. மனிதனுக்கேட்படும் எண்ணங்கள் சட்ட அடிப்படையில் சரியென்றாலும் பிழையென்றாலும் அவ்வெண்ண த்துக்கு மூலம் இறைநாட்டமேதான். இதை, 76:30ம் ஆயத்து அறிவிக்கின்றது. ஆனால் நல்லடியார்களில் ஏற்படும் இறையுணர்வுக்கும் சாதாரண மனித மனத்தில் ஏற்படும் சாதாரண உணர்வுக்குமிடையில் பேதம் கண்டு, இது இறையுணர்வுதானா இல்லையா என்பதைத் தீர்ப்புக் கட்டுவது மிகமிகக் கடினமானதாகும். இவ்வுணர்களில் இறையுணர்வு எது வென்பதைத் தீர்மானிக்க உலகக்கல்விகள் எதுவுமே வழிகாட்டா. இதன் விளக்கத்தை விபரத்தை அனுபவத்தில்தான் கண்டறிய முடியும். எனக்கும் இறையுணர்வுண்டென்று ஏமாற்றும் பேர் வழிகள் நிறையவுண்டு ஏமாறவேண்டாம்.

உங்களால் முடியுமென்று நம்பினால் வாழ்நாளை வீண்விரயஞ்செய்யாமல் கலிமத்துத்தையிபாவை எவ்வகையில் வேண்டுமானாலும் திரும்பத்திரும்ப வெவ்வேறு கோணத்தில் ஆராய்ந்து முடிவுக்கு வரும்படி கேட்கிறேன். இஸ்லாத்துக்கும் பிறமதங்களுக்குமிடையிலுள்ள பேதம் கலிமாவினால் உணர்த்தப்படும் கொள்கையில்தான் அமைந்திருக்கிறது. சாந்தி சமாதானத்தை, இறைஐக்கியத்தை இம்மையிலும் மறுமையிலும் பெறக்கூடிய ஸிறாத் என்ற நேர்பாதை கலிமாவை விளங்கிதெளிவடைந்து உறுதி பெறுவதே. நீங்கள் எம் மதத்தவராயும் எந்த நாட்டவராயும் இருக்கலாம். கலிமாவின் கருத்தை முறைப்படி ஆராய்ந்தால் உண்மையோடு ஒன்றி வாழும் வாய்ப்பு நிச்சயமாகக் கிடைத்துவிடும் அயராது முயல்க.

இப்போது சிந்தனைசெய்து பாருங்கள். நாம் முன்பு குர்ஆனை விளங்குவதற்கு ஏற்றுக்கொண்ட ஏழுவழிகளைக் கொண்டும் அல்லாஹ்வையன்றி எதுவுமே இல்லையென்ற தௌஹீதின் உண்மையை உணர்த்துவதே கலிமாவின் குறிக்கோள் என்பதையும் அதை உறுதிப்படுத்துவதே குர்ஆனின் குறிக்கோள் என்பதையும் குர்ஆனை விளக்கி விபரம் தருவதே ஹதீஸ்களின் குறிக்கோல் என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இல்லையானால் நாம் குர்ஆனை ஏற்றுக் கொண்ட சுயசிந்தனையுடையவர்கள் தான் என்று கூற முடியாது. கலிமாவை விளங்கிக்கொண்டு குர்ஆன் ஹதீஸ்களை அணுகினால் குர்ஆன் ஹதீஸ்கள் கலிமாவையும் கலிமா குர்ஆன், ஹதீஸ்களையும் நிரூபணஞ் செய்து கொண்டிருப்பதை நாம் காணலாம்.

பிரகாசத்துக்கெல்லாம் பிரகாசமான குர்ஆனை எமது நூற்கேள்வியறிவில் தளையுண்ட வஹ்மைக்கொண்டு அணைத்துவிடமுடியாது. பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிக்கலாம். அதன் அறிவில் எவரும் என்னைக் காணவில்லையென்றும் நம்பலாம். ஆனால் பூனை தனக்குத்

தானே இருளையாக்கிக் கொண்டதேயன்றி உண்மையை மறைத்துவிடுவது சாத்தியமாகவில்லை. குர்ஆனின் ஜோதி என்றும் இருந்து கொண்டேதானிருக்கும், அதை அணைக்கவே முடியாது. அதைக் காத்துக்கொள்ள அதன் உரிமையாளனே பொறுப்பேற்றுக் கொண்டான். நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. ஆயிரம் கைகளைக் கொண்டும் ஆதவனை மறைக்கமுடியாது என்று கண்ணதாசன் பாடுவது சிந்தனைக் குரியது.

குர்ஆனை விளங்கும் ஏழுவழிகளில் முதலாவது குர்ஆனைக் கொண்டே குர்ஆனை விளங்குதல் என்பதை நாம் அறிந்து கொண்டோம். இலாஹ¨ என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய நாயன் என்று பொருள்கொண்ட எமது மூதாதைகள் (மக்களால் இமாம்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சில முன்னோர்கள்) குர்ஆனை விளங்கும் முதலாவது வழியிலேயே நூறுவீதம் தவறு செய்துள்ளார்களென்பதை எம்மில் மிகப் பலர் அறிந்து கொள்ளவில்லை. அந்த முன்னோர்கள் மற்றைய ஆறு வழிகளையும் கையாளவே இல்லை. அவற்றையெல்லாம் உதாசீனம் செய்துவிட்டுத் தங்கள் யூகப்படிதான் கலிமாவுக்குப் பொருள் கூறியிருக்கிறார்கள். இலாஹ¨ என்பது வணக்கத்திற்குரிய நாயன், நாயன் என்றெல்லாம் பொருள்கொண்டது வெறும் கற்பனையான, வஹ்முடைய யூகம்தான். வணக்கத்திற்குரிய நாயன் யாருமில்லை என்று கலிமாவுக்கு பொருள் கொண்ட, கூறிய, எழுதிய அத்தனைபேரும் குர்ஆனைக் காதல் கதை படிப்பது போல் படித்திருந்திருந்தார்களேயன்றி அதனை அணுக வேண்டிய முறைப்படி அணுகி தெளிந்த சிந்தனையுடன் படிக்கவில்லை. தங்கள் மூதாதைகளை இமாம்களாய் ஏற்றுக் கொண்டமக்கள் வெறும் கண்மூடித்தனமான பின்பற்றலில் சென்று கொண்டிருப்பதால் எவர் உண்மையை விளக்கியபோதிலும் அதை ஏற்றுக்கொள்ளப் பெரும்பாலார் ஆயத்தமாயில்லை. அவர்களுடைய அறிவுக்கிடப்பட்ட முத்திரையே அதற்குக்

காரணமாகும். மாபெரும் மேதைகள் என்று மக்களால் கணிக்கப்பட்ட மிகப்பலர் அன்றும் இன்றும் கலிமாவுடைய விஷயத்தில் கண்மூடித்தனமான பின்பற்றலில் தொங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள். சிந்தனை செயல்படாத சிலர் மனிதர்களின் அறிவுக்கேற்றபடி கலிமாவுக்குப் பல கருத்துக்களைக் கூறுவது பிழையல்லவென்றும் கூறுகிறார்கள். அப்படியானால் றசூல்மார்களே பல கருத்துக்களைக் கூறியிருப்பார்களே! றசூல்மார்களை மக்கள் எதிர்க்கவேண்டிய அவசியமேயில்லையே. முத்திரையிடப்பட்ட மக்களின் வியாக்கியானங்கள் எம்மைத் தவறான வழிக்கே செலுத்தும் என்பதை நாம் உணரவேண்டும்.

**குர்ஆன்: 16:108**

أُولَٰئِكَ الَّذِينَ طَبَعَ اللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَسَمْعِهِمْ
وَأَبْصَارِهِمْ ۖ وَأُولَٰئِكَ هُمُ الْغَافِلُونَ ﴿١٠٨﴾

**இத்தகையோரின் இருதயங்கள்மீதும் செவிகள்மீதும் கண்கள்மீதும் அல்லாஹ் முத்திரையிட்டுவிட்டான். இவர்கள்தான் (ஆராய்வில்லாமல்) பராமுகமாய் இருப்பவர்கள்.**

**குர்ஆன்: 23:53**

فَتَقَطَّعُوا أَمْرَهُم بَيْنَهُمْ زُبُرًا ۖ كُلُّ حِزْبٍ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ ﴿٥٣﴾

**எனினும் தங்களுடைய வேதத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு வகுப்பாரும் தங்களிடமுள்ள பிரிவைக்கொண்டு சந்தோஷமடைகிறார்கள்.**

மக்களால் இமாம்களாய் தலைவர்களாய், வழிகாட்டிகளாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பெரும்பெரும் பட்டங்களையுடைய பலர் இன்றும் தீனில் ஒருவருக்குக்கொருவர் மாறுபட்ட அபிப்ராயங்கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். ஒரேவிஷயத்தில் அதிலும் முஹ்கமுவான ஒரேகருத்துடைய குர்ஆன் வசனங்களிலேயே அபிப்பிராய பேதமுடையவர்களாய் இருக்கிறார்களென்றால் இவர்களை இமாம்களாய், தீனில் வழி நடாத்தும் தலைவர்களாய் நாம் எப்படி ஏற்கமுடியும்? முன்னுக்குப் பின் முரணில்லாமல் தெளிவான, உறுதியான, இறுதியான ஆதாரங்களைக் கொண்டு அறிவு ஏற்றுக் கொள்ளும்வகையில் வழிகாட்டக்கூடிய ஒரேயோர் இமாம் குர்ஆன்தான் என்பதையும் அதன் விளக்கவுரையே ஹதீஸுகள் என்பதையும் ஏற்றுக்கொள்ளாமல் கண்மூடித்தனமான பின்பற்றலில் ஊறிக் குப்பைகூழக்கல்விகளில் தடைப்பட்டிருப்போர் தங்களை மூமீன்கள் என்று தம்பட்டமடிப்பது வெறும் பறைதான்.

# 43

## மூடத்தனமான பிரச்சாரம் எதற்காக?

இப்போது சிந்தனைசெய்து பாருங்கள். இன்றுள்ள பெரும்பாலான மௌலவிகள் குர்ஆனை விளங்கமுடியாது, அதை இமாம்கள் எப்படி விளங்கினார்களோ அதையே ஏற்கவேண்டும், எவரோ ஓர் இமாமைப் பின்பற்றாதவன் காபீர், பகுத்தறிவைக்கொண்டு குர்ஆனை விளங்க முயல்வது வழிகேடு என்றெல்லாம் ஏன் பிரச்சாரம் செய்கிறார்கள்? இதற்கு இரு காரணங்கள் தென்படுகின்றன.

1வது:-

தாங்கள் கற்றறிந்த நூற்கேள்வியறிவென்ற திரையில் இவர்கள் மாட்டிக்கொண்டதால் வெறும் கண்மூடித்தனமான பின்பற்றலில் சென்றுகொண்டிருப்பதாகும். இவர்கள் தீனை ஆராய முயற்சிக்கவேமாட்டார்கள். கேள்விக்கிடமளிக்கும் செயல் இவர்களிடம் தென்படாது. இவர்களுக்குத் தீனைப்பற்றிய கவலையே கிடையாது தீனைக் கொண்டு உலகக்கௌரவத்தைப் பெற்றுக்கொண்டால் சரி யார் நரகுக்குப் போனாலும் இவர்களுக்குக் கவலையேயில்லை

2வது:-

இவர்களில் ஓரளவு அறிவுத்தெளிவுடையவர்கள் குர்ஆனைப் பார்க்கும்போது அதில் ஒன்றுக்கொன்று முரணான வசனங்களைக்கண்டு மயக்கமடைகிறார்கள். இந்த மயக்கைப்

போக்க வழிதெரியாத அவர்கள் தங்கள் மூதாதைகளைப் பின்பற்றிச்செல்வதே சரியென்ற முடிவுக்கு வருகிறார்கள். இதுவும் பின்பற்றல்தான். இவர்களில் மிகப்பெரும்பாலார் தாங்கள் அறிவுத்துறையில் குழம்பிக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல் பிறரையும் குழப்பத்துக்குள்ளாகி விடுகிறார்கள். இவர்கள் எடுத்துக்கொள்ளும் ஆதாரங்கள் பழைய மக்களின் அபிப்பிராயங்களைக்கொண்ட கிதாபுகள் மட்டுமே. இவ்வகையினர் தௌஹீதுடைய விளக்கத்தைக் கேட்கும்பொது "ஸக்கூம்" பழத்தைச் சாப்பிட்டவர்களின் நிலையை எய்திவிடு கிறார்கள். தௌஹீதை அவர்களால் மறுக்க முடிவதுமில்லை ஏற்றுக்கொள்ள முடிவதுமில்லை. அவர்கள் விழுங்கிக் கொண்ட ஸக்கூம் பழத்தைச் சீரணிக்கவைப்பதற்காகச் சீழ்நீரென்ற அறிவுத் தெளிவில்லாத மக்களால் உருவாக்கப்பட்ட தௌஹீதுக்கு முரணான உலகக்கல்வியையே மேலும் மேலும் பருகுகிறார்கள். ஆனால் உண்ட ஸக்கூம்பழம் வெளியேறுவதுமில்லை சீரணிப்பதுமில்லை. ஆகவே அவர்களுடைய கல்வியறிவுக்கு மாறானதாயிருப்பதால் தௌஹீது பொய்யென்றே மக்கள்மத்தியில் பிரச்சாரம் செய்கிறார்கள். ஒவ்வொரு கல்விமானுக்கும் மேலான ஒவ்வொரு கல்விமானுண்டு என்ற குர்ஆனின் கூற்றை மறந்துவிடுகிறார்கள்.

**குர்ஆன்: 10:39**

بَلْ كَذَّبُوا بِمَا لَمْ يُحِيطُوا بِعِلْمِهِ وَلَمَّا يَأْتِهِمْ تَأْوِيلُهُ ۚ كَذَٰلِكَ
كَذَّبَ الَّذِينَ مِن قَبْلِهِمْ فَانظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الظَّالِمِينَ ۝

**என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் (விளக்கம், ஆதாரம்) தாவீல் அவர்களுக்குக் கிடைக்காததுமான செய்தியைப் பொய்யென்றே கூறுகின்றனர்.**

மேலே நாம் காட்டிய இரண்டுக்கும் கிளைக் காரணமான இன்னுமொன்றுண்டு. மக்கள் குர்ஆனை வாசித்துத் தெளிவாய் விளங்கிக்கொண்டால் தங்களுடைய போர்வையைக் காப்பாற்ற முடியாதே, தொழில் தடைப்பட்டுவிடுமே என்ற சுயநல நோக்கமும் வரட்டுக்கௌரவமும் அச்சமுமே அந்தக்கிளைக் காரணமாகும். இதுதான் அவர்களின் கீல்(தார்)ச்சட்டை என்பது.(102:5,6,7)ம் ஆயத்துக்களை சிந்தனைசெய்க. குர்ஆனில் தௌஹீதை உறுதிப்படுத்தும் ஆயத்துக்களில் பாமரமக்களுக்கும், பகுத்தறிவாளருக்கும், கவாஸுகளான மக்களுக்கும் ஏற்படுகிற சந்தேகங்களைத் தனித்தனியே எடுத்துக்காட்டி அவ்விதச் சந்தேகங்களுக்குரிய விடைகளைக் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு எமது முதல் நூலான "ஈமானின் உண்மையை நீ அறிவாயா?" என்ற நூலில் "கலிமாவை வலிந்துரை கொண்டு புரட்டியது யார்?" என்ற தலைப்பில் எல்லோரும் விளங்கக்கூடிய வகையில் விளக்கியுள்ளேன். மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அங்கு கண்டுதெளிக.

# 44

# ஷரீயத்துக்கு தௌஹீது விரோதமானதா?

அல்லாஹ் தவிர இலாஹு(சிருஷ்டி) இல்லை என்று கலிமாவுக்குப் பொருள் கொள்வது ஷரீயத்துக்கு விரோதம் என்று உலமாக்களில் மிகப்பலர் நீண்ட காலமாய்க் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஈமானை விளங்கித்தெளிந்த அறிஞர்கள், சிந்தனையாளர்கள் பலரை இவ்வகை உலமாக்கள் முர்த்தத்துக்கள் என்று பத்வா வழங்கிப் பிரஷ்டம் செய்துள்ளார்கள். அந்த உலமாக்கள் உண்மைகூறிய மக்களை ஏன் இப்படிச் செய்தார்கள் என்பதே எமது கேள்வி.

பதில்:-

அல்லாஹ்வையன்றிச் சிருஷ்டி வேறானதல்லவென்றும் அல்லாஹ்வுடன் அவனல்லதவை எதுவும் இல்லையென்றும் அப்படி உண்டென்று விசுவாசிப்பதே ஷிர்க்கின் ஆணிவேர் என்றும் விளக்கமளித்த மக்களை ஸரியத்தின் விரோதிகள் என்றும் முர்த்தத்துக்கள், காபீர்கள் என்றும் ஒரு கூட்டம் முன்பு பத்துவா வழங்கிச் சமூகப்பிரஷ்டம் செய்ததற்கும் தற்போது அதையே பின்பற்றிப் பலர் சென்றுகொண்டிருப்பதற்கும் மிக முக்கிய காரணங்கள் பல உள. அவற்றில் மிகப்பிரதான காரணம் என்னவென்றால் அந்தத் தீர்ப்புக்களை வழங்கியவர்கள் உலமாக்கள் என்ற போர்வையிலிருந்துங்கூட ஷரீயத்தென்றால்

என்னவென்பதை விளங்கிக்கொள்ளாத மூடர்களாயும் அபூஜஹ்லைப் போன்ற ஷைத்தான்களைத் தங்களின் வழிகாட்டிகளாய் ஏற்றுக் குருட்டுத்தனமாய் பின்பற்றும் கால்நடைகளாகவும் இருந்தமையே, இருக்கின்றமையே. இவ்வித மக்கள் குர்ஆன் ஹதீஸுகளை ஒப்புக்கொண்டிருக்கிறோமென்று வாயால் கூறினாலும் இவர்கள் வேத நூற்களாக ஆதார நூற்களாக கொண்டிருப்பதெல்லாம் முன்னோரின் பிக்ஹுகிதாபுகைளயும் பத்துவா நூற்களையுந்தான். குர்ஆன் இவர்களிடம் இருந்தாலும் நேரடியாக விளக்கம் பெறும் ஆற்றல் இவர்களிடம் இருப்பதாய்த் தெரியவில்லை. இவர்களுடைய பத்துவாக்களையும் பிக்ஹு கிதாபுகளையும் ஆராய்ந்த அறிஞர்கள் இவர்களுடைய அறிவீனத்தைத் தெளிவாய் விளங்கியிருக்கிறார்கள், விளக்கியிருக்கிறார்கள். தங்களுடைய கௌரவம் பறிபோய்விடுமே என்ற பயமும் பெரியார்களுடன் கொண்ட பொறாமையும் இவர்களுடைய நடவடிக்கைக்கான அடுத்த காரணங்களாகும். இப்போது ஷரீயத் என்றால் என்னவென்பதை இங்கே காண்போம்.

## ஷரீயத் என்றால் என்ன?

மனிதன் என்பவன் உடல், உயிர் ஆகிய இரண்டும் ஒன்றித்த ஏகமானநிலையில் வாழ்கிறான். இவனுடைய பௌதீக உடலைப் பாதுகாக்க பௌதீக நீர் தேவையாயிருக்கிறது. உடலைப் பாதுகாக்கும் நோக்குக்காக நீரைப்பெற்றுக்கொள்ளச் செல்லும் வழிக்கு “ஷிர்அத்” என்று கூறப்படும். இந்த உடல் பௌதீக நீரைக்கொண்டு வாழ்வதுபோல உயிர்என்பதும் சூட்சுமமான ஒரு நீரைப்பெற்றுக்கொண்டாலேயன்றி வாழ முடியாது. இந்த உயிருக்கு ஜீவசக்தியைத்தரும் “மாவுல்ஹயாத்” என்ற நீரைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் வழியின் முதலாவதுமைக்கல் எதுவோ அதற்குத்தான் “ஷரீயத்” என்பது பெயர். “ஷிர்அத்” என்ற சொல்லடியாகவே “ஷரீயத்” என்ற

சொல் பிறந்திருக்கிறது. குர்ஆன் 5:48ம் ஆயத்தில் “ஷிர்அத்” என்ற சொல்லைக் காணலாம். மனிதன் உடலையும், உயிரையும் ஒழுங்காய் அமைத்துக்கொள்வதற்காகவே ஷரீயத்தென்ற வழியை இறைவன் ஏற்படுத்தியுள்ளான். இந்த ஷரீயத்தென்ற வழி “ஹுர்புல்பராயிலி”, “ஹுர்புன்நவாபிலி” என்ற இரு அம்சங்களைக்கொண்டே நிறுவப்பட்டிருக்கிறது. குர்ஆன் 20:14ம் ஆயத்தில் திக்ரு செய்வதற்காகவே தொழுகை என்று கூறப்பட்டிருப்பதை நாம் காணலாம். தொழுகையின் உடற்செயல் “ஹுர்புல்பராயிலீ” (பர்லைக் கொண்டு நெருங்குதல்) என்றும், உள்ளத்தின் செயலான திக்ரு “நபில்” (இறைவனுடன் ஐக்கியமாதல்) என்றும் வகுக்கப்பட்டுள்ளன. எனவே ஷரீயத் என்பதில் உடலைப் பாதுகாக்கும் உலகநீரான அதாலத்தென்ற நீதிநிர்வாகமும் (சட்டங்களடங்கிய கல்வியும்), உயிரைப்பாதுகாக்கும் சூட்சும நீரான “மாவுல்ஹயாத்” என்ற தௌஹீதின் கல்வியும் ஒன்று சேர்த்திணைக்கபட்டிருப்பதே ”ஷரீயத்” என்பதை நாம் காணலாம். எனவே தௌஹீதுக்கு ஷரீயத் முரண் என்பது மார்க்க விளக்கம் தெரியாத மருட்சியும் கௌரவத்தைப் பாதுகாக்கும் சுயநல நோக்குங்கொண்ட வெறும் விதண்டாவாதமேயாகும்.

ஷரீயத் என்பதுதான் தௌஹீது என்பது. தௌஹீது என்பதுதான் ஷரீயத் என்பது. இறைவனுடன் அடியான் தொடர்பு கொள்ளும் பாதை (ஐக்கியமாகும் வழி) ஒன்றே ஒன்றுதான். அதுதான் ஸிறாத் என்ற நேர்பாதையாகும். ஸிறாத்தென்ற நேர்பாதை மனித சௌகரியத்துக்காக நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்கு பகுதிகளையும் ஒன்றிணைத்து அமைக்கப்பட்டதே ஷரீயத் என்பது. இதை இன்னும் விபரமாய்க் கூறினால் தௌஹீது என்பதே ஈமான் என்பது. இந்த ஈமான் நான்கு கட்டங்களாய் மனித உள்ளத்தில் குடிகொள்ள வேண்டியதாகிறது. இந்த நான்கு படித்தரங்களையும் மனிதன் ஒரேமுறையில் பெறமுடியாது. படிப்படியாய், கட்டம்

கட்டமாய்த்தான் ஸிறாத்(ஷரீயத்) என்ற பாதையில் மனிதன் செல்ல வேண்டியவனாகிறான்.

**குர்ஆன்: 84:19**

لَتَرْكَبُنَّ طَبَقًا عَنْ طَبَقٍ ۝

**நிச்சயமாக நீங்கள் படிப்படிப்படியாய்க் கடக்க வேண்டியிருக்கிறது.**

**குர்ஆன்: 45:18**

ثُمَّ جَعَلْنٰكَ عَلٰى شَرِيْعَةٍ مِّنَ الْاَمْرِ فَاتَّبِعْهَا وَلَا
تَتَّبِعْ اَهْوَآءَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ۝

**மார்க்கத்தின் ஷரீயத்தில்தான் நாம் உம்மை ஆக்கியிருக்கிறோம்.**

## ஷரீயத்தின் நான்கு பிரிவுகள்

1வது:- லாஇலாஹஇல்லல்லாஹ் என்ற கலிமாவை நூலறிவு, கேள்வியறிவு மூலம் அறிந்து உறுதிகொள்ளுதல். இதைக் குர்ஆன் “இல்முல்யகீன்” என்று கூறுகிறது. இதற்கு ஆதாரம் குர்ஆன். 102:5ம் இலக்க ஆயத்தாகும். நூற்கேள்வியறிவினால் அறிந்து கொண்ட ஈமான் என்பதே “இல்முல்யகீன்” என்பதன் அர்த்தமாகும். ஷரீயத் என்ற நேர் பாதையின்(ஸிறாத்தின்) 1வது மைக்கல்தான் இந்த நிலைமை. இதில் உடற்பயிற்சியும் உளப் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு ஆகிய நான்கு அமல்களும் இடம்பெறுகின்றன. லாஹிறான வெளிப்படை அமல்கள் யாவும் இதிலடங்கும். இச்செயல்கள் ஷரீயத்தின் ஆரம்ப

படித்தரமேயன்றி முடிவுபெற்ற நிலையல்ல. மன ஒருவழிப்பாடென்ற இக்லாஸை உருவாக்குவதே இச்செயல்களின் நோக்கம். அறியாத அமாவாசைகள் இத்துடன் தீன், ஸிறாத் என்பது நிரப்பமடைந்து விட்ட தாக நம்புகிறார்கள். இது அறியாமையாகும். இந்த "இல்முல்யகீன்" என்பது குர்ஆன்102:5ம் ஆயத்தில் இடம்பெறுவதைக் காண்க. இஸ்லாத்தின், தீனின் ஆரம்பம் இந்த இல்முல்யகீன் என்பதேயாகும். இது ஈமான் கொள்வதன் 1வது மர்த்தபாவாகும்.

2வது:- லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை விளங்கித் தெளிவு பெறுவதனால் ஏற்படுகிற விசுவாசம்(ஈமான்) என்பதாகும். இந்த ஈமானை "ஐனுல்யகீன்" (பிரத்தியட்ச ஈமான்) என்று குர்ஆன் கூறுகிறது. ஆதாரம், குர்ஆன்-102:7ம் ஆயத்தாகும். இந்த நிலையிலுள்ள மூமீன்கள் வழமையான தொழுகையின் பின்னர் தனித்திருந்து அல்லாஹ்வைத் தியானம் செய்துகொண்டிருப்பார்கள். தொழுகையை முடித்துக்கொண்டால் நிலையிலும், இருப்பிலும், படுக்கையிலும் அல்லாஹ்வின் பெயரைக் கூறித் திக்ருசெய்யுங்கள் என்று குர்ஆன் 4:103ம் வசனம் அறிவிக்கிறது, இந்த நிலையிலுள்ளோர் ஸிறாத் என்ற நேர்பாதையின் 2வது கட்டத்தில் தரிபட்டிருக்கிறார்கள். இதுவே "தரீக்கத்" என்பது. இல்முல்யகீனில் இருந்த மனிதரின் உள்ளம் இப்போது ஈமானின் 2வது படியான ஐனுல்யகீனில் தரிபட்டிருக்கிறது. இது ஷரீயத்துக்கு விரோதமேயில்லை. குர்ஆன்72:16ம் இலக்க ஆயத்து இதை உறுதிப்படுத்தும் ஆதாரமாகும். எம்மிடையேயுள்ள உலமாக்களில் பலர் தரீக்கத் என்பதொன்று கிடையாதென்றும் பிரச்சாரம் செய்கிறார்கள். அப்படியானால் அவர்கள் மஃகூல், மன்கூல் என்ற யுக்தி, வேத ஆதாரம் (சுருதி) போன்ற எந்த ஆதாரமுமின்றியே இஸ்லாம், முஸ்லீம் என்ற பெயரில் நடமாடும்

காால்நடைகளே என்பதில் ஐயமில்லை. குர்ஆன், ஹதீஸ், (இஜ்மாஉ, கியாஸ்) யுக்தி ஆகிய பிரமாணங்களின்படி தரீக்கத் என்பது ஈமானின் 2வது படித்தரமான ஐனுல்யகீனைக் குறிப்பிட்டதாகும். இது ஸிறாத்தின், ஈமானின் 2வது மைல்க்கல்லாகும். இந்த தரீக்கத் என்பது எம்மால் அல்லது எம்முன்னோரான அவ்லியாக்களால் சுயஇஷ்டப்படி உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. தரீக்கத் என்பது (திக்ரில் ஈடுபாடுகொள்வது) குர்ஆன் ஹதீஸுகளினால் தெளிவாய் வலியுறுத்தப்பட்ட ஒரு படித்தரமேயன்றி ஷரியத்துக்கு அணுவளவும் மாறுபாடான ஒன்றேயல்ல. ஷரியத் என்ற நேர்பாதையாகிய ஸிறாத்தில் நடந்து செல்லும் மனிதரின் 2வது மைல்க்கல்தான் “தரிக்கத்” என்பது. இதை நிரூபணஞ்செய்யும் குர்ஆன் ஆயத்துக்கள்: 4:168, 169, 46:30, 20:77, 104, 72:16, 20:63, இவ்வித ஆயத்துக்களில் தரீக்கத் என்பது வழி, பாதை, என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறது,

**குர்ஆன்: 20:77**


وَلَقَدْ أَوْحَيْنَا إِلَىٰ مُوسَىٰ أَنْ أَسْرِ بِعِبَادِي فَاضْرِبْ لَهُمْ
طَرِيقًا فِي الْبَحْرِ يَبَسًا لَّا تَخَافُ دَرَكًا وَلَا تَخْشَىٰ ⁂

**சமுத்திரத்தில் அடித்து அவர்களுக்கு வழியை ஏற்படுத்தும்.**

இவ்வாயத்தில் மூஸா(அலை) அவர்களால் ஜலத்தில் ஏற்படுத்தப்பட்ட வழிக்கு தரீக்கத் என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது.

**குர்ஆன்: 20:63**

قَالُوٓا إِنْ هَٰذَٰنِ لَسَٰحِرَٰنِ يُرِيدَانِ أَن يُخْرِجَاكُم مِّنْ أَرْضِكُم بِسِحْرِهِمَا وَيَذْهَبَا بِطَرِيقَتِكُمُ ٱلْمُثْلَىٰ ﴿٦٣﴾

*அவர்கள் இவ்விருவரும் சூனியக்காரர்களே! தங்களுடைய சூனியத்தின் மூலம் உங்களை உங்களுடைய இவ்வூரைவிட்டு வெளியேற்றி விடவும் உங்களுடைய மேலான மார்க்கத்தை(வழியை) அழித்துவிடவும் விரும்புகிறார்கள்.*

இவ்வாயத்தில் பிர்அவுனுடைய மார்க்கத்தை(வழியை) தரீக்கத் என்று கூறப்பட்டிருக்கிறது,

**குர்ஆன்: 72:16**

وَأَن لَّوِ ٱسْتَقَٰمُوا عَلَى ٱلطَّرِيقَةِ لَأَسْقَيْنَٰهُم مَّآءً غَدَقًا ﴿١٦﴾

*(இவர்கள் மார்க்கத்தின்)வழியில் உறுதியாக இருந்தால் தடையின்றியே அவர்களுக்கு மழையைப் பொழிவித்துக் கொண்டிருப்போம்.*

இவ்வாயத்தில் ஷரீயத்தைத்தான் (வழி)தரீக்கத் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தரீக்கத் என்றால் குறுகிய வழி, குறுகிய பாதை என்பதுதான் அதன் அர்த்தம். இது ஷரீயத் என்ற வழிக்கு விரோதமானதேயல்ல.

**குர்ஆன்: 4:169**

إِلَّا طَرِيقَ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَا أَبَدًا ۚ وَكَانَ
ذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرًا ۝

**நரகத்தின் வழியைத்தவிர**

இவ்வாயத்திலும் தரீக்கத் என்ற சொல் வழி என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டிருப்பதை நோக்குக. ஷரீயத்தென்ற பாதையின் 2வது மைல்கல்லே தரீக்கத் என்பது. நல்லடியார்கள் செல்லும் பாதையில் குறுகிய வழியென்ற பொருளிலே தரீக்கத் என்றசொல் பாவிக்கப்பட்டிருக்கிறது.

3வது:-

கலிமத்துத்தையிபாவை எவ்வித சக்குச் சந்தேகமுமின்றி உள்ளத்தால் பரிபூரணமாய் ஏற்றுக்கொள்ளும் ஈமானுக்கு, விசுவாசத்துக்கு "ஹக்குல் யகீன்" ("உண்மையான ஈமான்") என்று கூறப்படும். இதற்குக் குர்ஆன் 56:95ம் ஆயத்து ஆதாரமாகும். இந்த நிலைமையையே "ஹகீக்கத்" என்று கூறுகிறோம். இது குர்ஆன் ஹதீஸுகளால் பூரண ஆதாரங்களோடு உறுதிப்படுத்தப்பட்ட பூரண உண்மையாகும். இது நேர்பாதையாகிய ஸிறாத்தின் 3வது மைல் கல்லாகும். இந்த "ஹகீக்கத்" என்பது ஷரீயத்தில் நிலைப்படுவதற்காகத் தரப்பட்ட 3வது படியாயிருக்கும்போது இது ஷரீயத்துக்கு முரண் என்று யாராவது கூறினால் அவரை நாம் ஒரு ஜாஹில் என்று கூறலாமேயன்றி அவரை ஒரு மூமீன்என்றோ அல்லது மௌலவிஎன்றோ அல்லது ஆலிம்என்றோ கூறமுடியாது. ஏனென்றால் இவர் குர்ஆன் ஹதீஸுகளை மூடிமறைக்கும் காபீராயிருக்கிறார். இவர் குர்ஆன் ஹதீஸுகளை மறுப்பதால் இஸ்லாத்துக்கும் இவருக்கும் எவ்விதத் தொடர்புமே கிடையாது.

இவர் மதத்தை வயிறு வளர்க்கும் தொழிலுக்காகப் பயன்படுத்துபவரேயன்றி வேறில்லை.

4வது:-

யகீன் (கமாலுல் யகீன்). இந்த யகீன் (ஈமான்) நிரப்பம் பெற்றதாய் இருப்பதால் இந்த ஈமானை றப்புக்குரியதே அன்றி அப்துக்குரியதல்ல. ஷரீயத்தின் முழுமை இங்கேதான் அமைகிறது. அல்லாஹ்வுடைய சன்னிதானம், லிகா, இறை ஐக்கியம் என்பதெல்லாம் இதுவே. இந்த நிலைமை ஸிறாத்தின் 4வது மைல்கல்லாகும். இங்கே சிருஷ்டி என்பது இல்லாதி ருப்பதால் சிருஷ்டிகளுக்காக அமைக்கப்பட்ட எந்தவொரு சட்டமும் இங்கே இடம்பெறாது. இந்த நிலைமையை வட்ட வரையறையில் கட்டுண்ட பகுத்தறிவு விளங்கிக்கொள்ள முடியாது. இந்த நிலைமை அனுபவத்தில்அமைய வேண்டியதாகும். இதை விபரிப்பதே “யகீன் ஏற்படும் வரையிலும் இபாதத்துச் செய்வீராக” என்ற 15:99ம் ஆயத்தின் நோக்கமாகும். முழுமையான யகீனைப் பெற்றுக்கொள்ள முயன்று உயிருடன் பெற்றுக்கொள்ளும் நிலைமையையே “மஹ்ரிபா” என்று கூறுகிறோம். யகீன் என்ற சொல் விசுவாசம் என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் எமது மதக்கரடிகள் யகீன் என்ற சொல்லுக்கு மரணம் என்று பொருள் கூறி உண்மையை இருட்டடிப்புச் செய்துள்ளார்கள். இப்படி இருட்டடிப்பு செய்யாவிட்டால் அவர்கள் போர்த்தியுள்ள ஆட்டுத் தோலைக்காப்பாற்ற முடியாதல்லவா?

அடுத்ததாக, 51:56ம் ஆயத்ததை மதக்கரடிகள் இருட்டடிப்புச் செய்து இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்று பொருள் கூறுகிறார்கள். இப்படிக் கூறாவிட்டால் தொழுகையைக் கேடயமாகக்கொள்ளவும் மக்களை மந்தைகளாய் மேய்க்கவும் முடியாதல்லவா. இபாதத் என்ற சொல் குர்ஆனில் எங்கு இடம்பெற்றாலும் அது ஏகமாக்கல் என்ற பொருளுடையதேயன்றி வணக்கம் என்ற பொருளு

டையதல்ல என்பதை அப்பாஸ்(றலி) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். இவ்விஷயம் முன்பு விளக்கப்பட்டிருப்பதால் அதை நான் இங்கு கூறவில்லை. எனவே ஷரீயத், தரீக்கத், ஹகீகத், மஹ்ரிபத் என்ற நான்கு வகுப்புக்களும் ஒன்றிணைக்கப்பட்ட நேர்பாதைதான் தீன், மார்க்கம், ஸிறாத் என்றெல்லாம் கூறப்படுவது. குர்ஆன் ஹதீஸுகளின் ஆதாரங்களைக்கொண்டு யுக்திக்கு அணுவளவும் மாறுபடாமல் உண்மை நிரூபணம் செய்யப்பட்டிருக்கும்போதும், தரீக்கத், ஹகீகத், மஹ்ரிபத், என்பவை குர்ஆனில் கிடையாதென்றும் இந்துமத, சரியை, கிரிகை, யோகம், ஞானம் என்ற சொற்களை அறபு மொழியில் ஒரு சில வழிகெட்டோர் கூறி இஸ்லாத்தைக் குழப்பிவிட்டிருக்கிறார்களென்றும் ஒரு சிலர் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னோர் கனம் தங்கிய உலமாக்களென்ற பெயருக்குப் பொருத்தமானவர்களேயல்ல. இவ்வகையினர் குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக் கொண்டவர்களல்ல. அறிவை ஒப்புக் கொண்டவர்களுமல்ல. இவ்வகையினர் இஸ்லாத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் தஜ்ஜாலின் கூட்டத்திலுள்ளவர் களென்றே நான் கருதுகிறேன்.

அல்லாஹ் தவிர இலாஹு (சிருஷ்டி) இல்லையென்று கூறுகிற தௌஹீதுக் கலிமாவின் உண்மையான பொருளை இஸ்லாத்துக்கு, ஷரீயத்துக்கு விரோதம் என்று கூறுவோர், எதனை ஷரீயத்தென்று நம்பியிருக்கிறார்கள்? இவர்கள் படித்தறிந்த பிக்ஹுக் கிதாபுகளும் பத்துவா நூறகளும்தான் இவர்களுடைய ஷரீயத்துக்கு விபரம் தருகிற குர்ஆன் (வேதநூல்) என்று கண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் ஷரீயத்துக்குத் தௌஹீது விரோதம் என்று கூறுகிறார்கள்.

இவ்விபரத்தை இன்னுமோர் வகையாய் நாம் விளங்கலாம் ஒருவர் பூரணமான மூமினாய் அமைவதானால் அவருக்கு நான்கு பர்லுகள் அவசியமாகின்றன.

1வது:- கலிமாவை நாவினால் கூறுவது. இது ஊமையன் பேரில் பர்லல்லாதிருப்பதால் இதை மூலபர்லு என்று கூற

முடியாது. ஷரீயத்தின் ஆரம்பம் இதுவே. இதை இல்முல் எகீன் என்று கூறப்படும். இவர்களை நோக்கி ஈமான் கொண்டவர்களே முற்றிலும் இஸ்லாத்தில் நுழைந்து விடுங்களென்று 2:208ம் ஆயத்தில் இறைவன் கூறியுள்ளான்.

2வது:- நாவினால் கூறியகலிமாவை விளங்கியறிவது. இதைத்தான் “ஐனுல்எகீன்” என்று கூறுகிறோம். இவ்விளக்கம் கல்பில் பதிவது கடினமாயிருப்பதால் இதைக் கல்பில் பதிப்பதற்குரிய மூன்றாவது பர்லு அவசியமாகிறது. இவ்வகையினரை நோக்கி இறைவன் குர்ஆனில் விபரம் தருகின்றான்.

**குர்ஆன்: 4:136**

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ ءَامِنُوا۟ بِٱللَّهِ وَرَسُولِهِۦ وَ
ٱلْكِتَٰبِ ٱلَّذِى نَزَّلَ عَلَىٰ رَسُولِهِۦ وَٱلْكِتَٰبِ ٱلَّذِىٓ
أَنزَلَ مِن قَبْلُ ۚ وَمَن يَكْفُرْ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ
وَرُسُلِهِۦ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ فَقَدْ ضَلَّ ضَلَٰلًۢا بَعِيدًا ۝

**ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும், அவன் தன்னுடைய தூதர் மீது அருளியதையும், இதற்குமுன் அவன் அருளிய வேதங்களையும் ஈமான் கொள்ளுங்கள்**

தரீக்கத்தின் உண்மை இந்த நிலைமைதான்.

3வது:- கலிமாவினால் விளங்கிக் கொண்ட உண்மை கல்பை விட்டும் நழுவவிடாமல் பாதுகாத்தல். இதன் நோக்கமாகவே 2:14, 4:103 போன்ற ஆயத்துக்கள் அருளப்பட்டி

ருக்கின்றன. ஹகீக்கத் என்பதன் பூரண உண்மை இந்த் நிலைமைதான். இந்த நிலையில் “பர்லும்” “நபிலும்” ஒன்று சேர்ந்தும் கடினமானதாயும் இடம் பெறுகின்றன. இந்த நிலைமை மிகக் கடினமான ஓர்நிலைமையாகும்.

4வது:- ஈமானில் முழுமைபெறுவது. இதையே “மஹ்ரிபத்” என்று கூறப்படுகிறது. மேலே காட்டிய நான்கு படித்தரங்களும் ஒன்றாய் அமைந்ததுதான் இஸ்லாம், தீன், என்பது. எனவே இஸ்லாத்தின் முதலாம் படித்தரத்துக்கு 2ம் 3ம் 4ம் படித்தரங்கள் விரோதம் என்று கூறுவது, இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான அறிவில்லாத மூடத்தனமாகும்.

# 45

## தீனும் ஷரீயத்தும் ஒன்றா? வெவ்வேறா?

நாம் ஆரம்பத்தில் காட்டிய 7:85, 21:22, 27:64, 43:84, 47:19 போன்ற ஆயத்துக்களின்படி உலகில் தோன்றிய நபிமார்கள் யாவரும் லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக்கொண்டே தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையை உலகமக்களுக்கு விளக்கியிருக்கிறார்கள். நபிமார் அத்தனைபேரும் தீன்(மார்க்கம்) வழி என்பதில் எவ்வித வேறுபாடுமின்றி ஒருமித்திருக்கிறார்கள். மேலே காட்டிய ஆயத்துக்களே இதற்கு ஆதாரமாகும். ஆனால், இந்த நபிமார்கள் அவ்வக்காலத்துக்கேற்றபடி ஷரீயத்தில் (நடைமுறைக் கோவையில்)தான் வேறுபட்டிருக்கிறார்கள். இந்த நபிமார் கையாண்ட ஷரீயத்துக்குள் அவர்களால் போதிக்கப்பட்ட தௌஹீதென்ற தீனுக்கு (மார்க்கத்துக்கு) அணுவேனும் முரணில்லாமலேயே இருந்திருக்கின்றன. ஷரீயத் என்றால் என்ன? மன ஒரு வழிப்பாட்டை (இக்லாஸை) உருவாக்க எடுத்துக் கொண்ட வணக்கமுறைகள், ஒருவரோடொருவர் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகள், ஏவல் விலக்கல்கள் போன்றவற்றை விளக்குவதே (வாழ்க்கை முறையே) ஷரீயத் என்பதாகும்.

இறைவன் அவ்வக்காலத்துக்கேற்றபடி பலதரப்பட்ட சமூகங்களின் நிலைமைகளையும் அறிவுத் தகைமையையும் அடிப்படையாய்க்கொண்டு ஒவ்வொரு சமுதாயத்தையும் தனித்தனியாய் நற்குணங்கள், நல்ல பழக்க வழக்கங்கள், நாகரீகம், நீதி நிர்வாகம் பற்றிய போதனைகளை அறிவித்துப் பயிற்சி கொடுத்து முடிவில் ஒரு நிரப்பமான ஒழுக்கமுறையை அருளுவதற்காகவே பலவிதமான ஷரீயத்துக்களைத் தூதுவர்கள் வாயிலாய் அறிவித்திருந்தான். வேதம் நிரப்பமாக் கப்பட்டபோது எக்காலத்திலும் மாற்றம் செய்யத் தேவையில்லாத ஒரு நிரப்பமான ஷரீயத்தை றஸூல்(ஸல்) அவர்கள் மூலம் உலகமக்கள் எல்லோருக்கும் பொதுப்படையாகவே தந்திருக்கிறான். இனிமேல் வேறொரு ஷரீயத் அவசியமே யில்லை. ஷரீயத்தில்தான் மாற்றம் நடைபெற்று வந்ததேயன்றி தீனில்(மார்க்கத்தில்) எவ்வித மாற்றமும் எப்போதும் நிகழவேயில்லை.

இப்போதுள்ள மாற்றப்படவேண்டாத ஷரீயத்தை நாம் அறிந்துகொள்ள இரண்டு வழிகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. ஒன்று, புனித திருக்குர்ஆன் ஆகும். இது அல்லாஹ்வின் சொல்லாகும். மற்றொன்று றஸூல்(ஸல்) அவர்களுடைய பண்புகள், செயல்கள், நல்லுபதேசங்கள் ஆகியவற்றை அவர்களுடன் இருந்த உற்றார், உறவினர், தோழர்கள் வாயிலாய் நாம் அறிந்திருக்கும் செய்திகளின் தொகுப்பான ஹதீஸுகளாகும். இவ்விரண்டையும் சிந்தித்த ஒரு சில அறிஞர்கள் பொதுமக்களின் நன்மையைக் கருதித் தெளிவாகவும் விரிவாகவும் ஷரீயத் சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். இவ்விதச் சட்டங்களையே நாம் தற்காலத்தில் “பிக்ஹு” என்ற சொல்லால் குறிப்பிடுறோம். ஆரம்ப காலத்தில் மாலிக்(றலி), ஷாபி(றலி), ஹன்பல்(றலி), ஹனபி(றலி) ஆகிய நான்குபேரினால் உருவாக்கப்பட்ட பிக்ஹுகளே இருந்து கொண்டிருக்கின்றன. இந்நால்வரிடத்திலும் பற்பல அபிப்பிராய பேதங்கள் தென்படுகின்றன. இந்நால்வருடைய பிக்ஹுச்

சட்டங்களும் ஷரீயத்தென்ற வணக்க வழிபாடுகள், நடைமுறைகள், ஏவல் விலக்கல்கள், கலை கலாச்சாரங்கள் ஆகியவற்றின் வெளிப்படையை உள்ளடக்கியவையேயன்றி ஈமானுடைய(தீனுடைய)அந்தரங்கங்களை உள்ளடக்கியவை யல்ல.

இவ்வித வணக்க வழிபாடுகள் நடைமுறைகள், கலைகலாச்சாரங்களினால் உள்ளத்தில் ஈமானைத் தரிபடுத்தும் அந்தரங்கக் கல்வி இந்தப் பிக்ஹுக் கிதாபுகளில் இடம்பெற வேயில்லை. பிக்ஹு என்பது மனிதனின் வெளிப்படையான செயல்களுடன் தொடர்புடையது. தீனுடைய, ஈமானுடைய கல்வி என்பது உள்ளத்தைப் பொறுத்ததாய் இருக்கிறது. இக்கல்வியைக் குர்ஆன் "தஸ்கியா" என்றும் "ஹிக்மத்" என்றும் ஹதீஸுகள் "இஹ்ஸான்" என்றும் பெயர் சூட்டியுள்ளன.

பிற்காலத்திலுள்ள ஒரு சில நல்லடியார்கள் இக்கல்விக்கு "தஸவ்பு" என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். இக்கல்வியைக் கொண்டேயன்றி தீனில் தரிபடமுடியாது. பிக்ஹுடைய கல்வியை அரைகுறையாய்ப் பெற்றுக்கொண்டோர் "தஸவ்பு"டைய கல்வியைப் பற்றி அறிந்துகொள்ளாதிருப்பதால் தௌஹீது ஷரீயத்துக்கு விரோதமென்று கருதுகிறார்கள். இது அன்னோரின் அறியாமையே ஆகும். தௌஹீதுக்கு(தீனுக்கு) ஷரீயத் அணுவளவும் விரோதமேயல்ல. தௌஹீதில் தரிபடவே ஷரீயத் தரப்பட்டுள்ளதென்பதை பட்டம்பெற்ற குருடர்கள் அறிந்து கொள்ளாவிட்டாலும் பகுத்தறிவுள்ள நாம் இனிமேலாவது உணர வேண்டும். ஷரீயத்துக்குத் தௌஹீது விரோதமென்றும் கலிமாவில் பாவிக்கப்பட்ட இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயனே பொருளென்றும் கொண்டவர்கள் இஸ்லாத்தைப் புரட்டுபவர்களாகும்.

ஹதீஸ்:-

ஏறக்குறைய முப்பது பொய்யர்களான தஜ்ஜால்கள் ஏற்படாதவரை உலகமுடிவுநாள் ஏற்படாது. அவர்கள் அனைவரும் நிச்சயமாகத் தாம் அல்லாஹ்வுடைய நல்லடி யார்கள்தாம் என்று எண்ணுவார்கள் என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பவர்:அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: அபூதாவுத், திர்மிதி**

இந்த ஹதீஸின்படி ஷரீயத்துக்குத் தௌஹீது (தரீக்கத், ஹகீக்கத், மஹ்றிபத்) விரோதமென்றும் அல்லாஹ்வுடன் பிறிதொன்றில்லை என்று கூறுவது வழிகேடு என்றும் அப்படிக் கூறுவோரின் கூற்றை, எழுத்தை வாசிக்க வேண்டாமென்றும் மக்கள் மத்தியில் பொய்ப் பிரச்சாரம் செய்வதும் வணக்கத்தி ற்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர (றப்பு வேறு அப்து வேறு) என்று கலிமாவுக்குப் பொருள் கூறுவதும் குர்ஆனுக்கு முரணாய்ப் பொய்கூறுவதும் தௌஹீது சம்பந்தமான பேச்சுக்களை, எழுத்துக்களைத் தடைசெய்து அவை மக்களைச் சென்றடையாதவாறு இருட்டடிப்புச் செய்வதும் முஸ்லீம்கள் என்ற போர்வையில் காட்சியளிக்கும் தஜ்ஜால்க ளேயன்றி வேறு யார்? தஜ்ஜால் என்ற சொல் இஸ்லாத்துக்கு முரணான கொள்கையைப் பரப்பும் கூட்டத்தினர் யாவரையும் குறிக்கும். அல்லாஹ்வுடன் அவனல்லாத எதுவுமே இல்லை என்ற, இணையேற்படுத்தாத, இஸ்லாத்தின் கொள்கையான ஹக்குக்கு(உண்மைக்கு) நேர்முரணாய் அல்லாஹ்வுடன் அவனல்லாத சிருஷ்டியான வேறு வுஜுதுகளும் உண்டென்று ஒப்புக்கொண்டவன்தான் ஹதீஸில் குறிப்பிடப்பட்ட பொய்ய னாயும் தஜ்ஜாலாயும் இருக்கின்றான். இஸ்லாத்தின் உயிர் அல்லாஹ்வுக்கு இணையில்லை என்பதே. அப்படியானால் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவைகளும் உண்டு என்று கூறுபவன் யார்? அவன் இஸ்லாத்தின் உயிரையே அழிக்க வந்த தஜ்ஜாலாகத்தானே இருப்பான்!

**ஹதீஸ்:-**

கடைசி நாளையில் வருகிற தஜ்ஜாலை விட வேறு சில தஜ்ஜால்களுக்கு நான் மிகப் பயப்படுகிறேன் என்று றஸூல்(ஸல்) அவர்கள் கூற, அவர்கள் யாரென்று ஸஹாபாக்கள் வினவ, வழிகேட்டில் மக்களைத் தள்ளிவிடுகிற உலமாக்கள்(வழிகாட்டிகள், இமாம்கள்) என்று றஸூல்(ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள்.

**அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (றலி)**

**ஆதாரம்: துர்ருல் மன்தூர்**

இந்த ஹதீஸ் இன்னும் பலராலும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. வழிகேடு, றித்தத் என்பது எது? வழியென்பது, ஸிறாத்தென்பது கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீது ஆகும். அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காமல் இருத்தல் என்பதே அதன் சாரம். இதைத்தான் ஷரீயத் என்று குர்ஆன் ஹதீஸுகள் உறுதிப்படுத்துகின்றன. (இஸ்லாத்தின் முதற் கடமை) ஷரீயத்தின் முதற்கடமை நாவினால் கலிமாவைக் கூறி அதை ஏற்றுக் கொள்வதாகும். அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்று இணைகற்பிக்கும் ஒருவன் தௌஹீதுக்கு விரோதமான வழிகேடனாகவே(முர்த்தத்தாகவே)இருப்பான். இவன் ஒரு நல்லடியாரை வழிகேடன் என்று கூறினால் அவனுடைய பாதையை விட்டு விலகியவன் என்று நம்புகிறான். இது நிச்சயமான உண்மை. இணையேற்படுத்தும் முஷ்ரீக்கின் பாதையை விட்டும் விலகி, இணையேற்படுத்தாத பாதையிலிருப்பவர் உண்மையான தீனுல் இஸ்லாத்திலுள்ள மூமீன்தான் என்பதற்கு இணையேற்படுத்தும் தஜ்ஜால் கூறும் கூற்றும் பத்துவாவும் அத்தாட்சியாய் அமைந்து விடுகிறது. ஷரீயத் என்பது தௌஹீதேயன்றி இணைகற்பித்தல் அல்ல.

**ஹதீஸ்:-**

*என்னுடைய உம்மத்திலுள்ள ஒரு கூட்டம் எப்போதும்*

*சத்தியத்தின்பால் ஜிஹாது செய்து கொண்டே இருக்கும். தங்கள் எதிரிகளிடம் வெற்றி பெற்றுக்கொண்டே இருக்கும். இறுதியாகக் கடைசியில் உள்ளவர்கள் தஜ்ஜாலை எதிர்த்துப் போராடுவார்கள்.*

**அறிவிப்பவர்: அனஸ் (றலி)**
**ஆதாரம்: பைஹக்கி, அபூதாவுத், நஸாயி**

(இந்த ஹதீஸ் இன்னும் சிலராலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.)

இந்த ஹதீஸில் சுட்டப்பட்ட மேன்மக்கள்தான் இன்று வஹ்ஹாபிஸம், இல்யாஸிஸம் போன்ற தவறான கொள்கைகள் என்ற தஜ்ஜால்களுடன் கலிமத்துத்தையிபா என்ற கூரியவாளைக் கொண்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

**ஹதீஸ்**

*மனிதர்களில் ஒரு காலம் வரும் அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் உண்மை(தௌஹீது) இராது. குர்ஆனில் எழுத்துக்களேயன்றி அதன் உண்மையான அர்த்தம் இராது. அவர்களின் பள்ளிவாசல்கள் இயங்கிக் கொண்டிருந்தாலும்(கடமை நடபெற்றுக் கொண்டிருந் தாலும்) நேர்வழியின்றி(கலிமா இன்றி)க் கெட்டுப் போயிருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் கெட்ட ஜந்துக்களாயிருப்பார்கள் என்று றஸூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: அலி (றலி)**
**ஆதாரம்: பைஹக்கி, மிஸ்காத்**

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட கெட்ட ஜந்துக்களான உலமாக்கள் யார்? கலிமாவுக்கு வலிந்துரை கொண்டு அல்லாஹ்வேறு, சிருஷ்டிவேறு என்று கூறி அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத சிருஷ்டியும் உண்டென்ற இணை கற்பித்த

லான ஷிர்க்கில் மூழ்கிக் கொண்டிருக்கிற உலமாக்கள்தான் அந்த கெட்ட ஜந்துக்கள். இவர்கள் கலிமாவை நாவினாற் கூறிக்கொண்டும் இஸ்லாமியர்போல் நடமாடிக் கொண்டு மிருப்பதால் மனிதர்கள் இவர்களை இலகுவாய் இனங்காண முடியாமலிருக்கிறார்கள். உண்மையை நோக்கினால் இவர்கள் இஸ்லாத்தை அழித்தொழிக்கமுற்படும் தஜ்ஜாலின் கூட்டத்தினராகவே இருக்கிறார்கள். மேலும் குர்ஆன்15:40, 41,42ம் வசனங்களின்படி இவர்கள் இப்லீஸுடைய வாகனங்களாய் நடமாடுகிறார்கள் என்பது தென்படுகிறது

**ஹதீஸ்:-**

சிந்தித்து ஆராயாமல் குர்ஆன் ஓதுவதில் நன்மையில்லை. விளங்கி அறிந்து செய்யாத வணக்கம் ஒருவணக்கமேயல்ல.

**அறிவிப்பவர் அலி(றலி)**

**ஆதாரம் றஜீன்**

எனவே ஒலிப்பதிவுநாடாக்கொப்பான அறிவிலிகளின் வரட்டுவாதங்களில் மூழ்கி இம்மை மறுமை வாழ்வை இழக்காமல் குர்ஆன் ஹதீஸுகளை விளங்கி உண்மையைக் கண்டறிந்து அவ்வுண்மைக்காக வாழ்வதே அறிவுடமையாகும்.

**குர்ஆன்: 14:27**

يُثَبِّتُ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا بِالْقَوْلِ الثَّابِتِ فِي الْحَيٰوةِ الدُّنْيَا وَفِي

الْاٰخِرَةِ ۚ وَيُضِلُّ اللّٰهُ الظّٰلِمِيْنَ ۙ وَيَفْعَلُ اللّٰهُ مَا يَشَآءُ ۝

**ஈமான் கொண்டவர்களை இம்மையிலும் மறுமையிலும் (கலிமத்துத்தையிபாவென்ற) உறுதியானவாக்கைக்**

**கொண்டு அல்லாஹ் உறுதிப்படுத்துகிறான். அக்கிரமக்காரர்களை அல்லாஹ் தவறான வழியில் விட்டுவிடுகிறான். அல்லாஹ் நாடியதைச் செய்கிறான்.**

அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல் என்பதே தவறான வழியென்பதை உணர்ந்துகொண்டால் நாம் புத்தி ஜீவிகள் என்பது உண்மையாகும். நம்மெல்லோருக்கும் இறைவன் இன்னருள் பாலிப்பானாக. தீன் என்பதே கலிமாவினாலுணர்த் தப்படும் தௌஹீதுதான் என்பதையும் அதில் நிலைப்படும் அணுகுமுறைப்பயிற்சிகளே அமல்கள் என்பதையும் பொறுமை யோடு சிந்தித்துத் தெளிக.

உலகமக்களை(சமூகத்தை)த் திருப்திப்படுத்தும் நிய்யத்தோடு கையாளப்படும் எந்த அமலும் பிரயோசனம் தராதென்பதை நாம் உணரவேண்டும். “நிய்யத்துல் மூமினி கைறும் மின்ஹமலிஹி” மூமினுடைய நிய்யத் அவனுடைய அமலை விடச்சிறந்ததென்ற ஹதீஸை நாம் ஊன்றி நோக்க வேண்டும்.

# 46

# இப்லீஸும் அல்லாஹ்வும் செய்து கொண்ட ஒப்பந்தம்

இப்லீஸ் இறைவனோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மூடபுத்தியுள்ள அமாவாசை ஆலிம்களைக் கேடயமாய்க் கொண்டே இப்லீஸ் நிறைவேற்றுகிறான் என்று நான் நம்புகிறேன். இப்லீஸ் இறைவனுடன் செய்து கொண்ட அந்த ஒப்பந்தம் என்ன?

**குர்ஆன்: 15:39,40,41,42**

قَالَ رَبِّ بِمَآ أَغْوَيْتَنِى لَأُزَيِّنَنَّ لَهُمْ
فِى الْأَرْضِ وَلَأُغْوِيَنَّهُمْ أَجْمَعِينَ ﴿٣٩﴾ إِلَّا عِبَادَكَ
مِنْهُمُ الْمُخْلَصِينَ ﴿٤٠﴾ قَالَ هَٰذَا صِرَٰطٌ عَلَىَّ مُسْتَقِيمٌ ﴿٤١﴾
إِنَّ عِبَادِى لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطَٰنٌ إِلَّا مَنِ
اتَّبَعَكَ مِنَ الْغَاوِينَ ﴿٤٢﴾

**அதற்கவன் (இப்லீஸ்) என் இறைவனே! நீ என் வழியைத்தடுத்துக் கொண்டதன் காரணமாகப் பூமியிலுள்ளவைகளை நான் அவர்களுக்குக் காண்பித்து (பணம் புகழ் என்ற ஆசையையூட்டி) அவர்கள் யாவரையும் வழிகெடுப்பேன். எனினும் கலப்பற்ற மனத்தையுடைய உன்னுடைய நல்லடியார்களைத் தவிர என்று கூறினான். அதற்கு இறைவன், அதுதான் என்னிடம் நேரான வழி**

**என்று கூறினான். வழிகேட்டில் உன்னைப் பின்பற்றிய வர்களைத்தவிர. (உன்னைப்பின்பற்றிய) அவர்கள் யாவருக்கும் வாக்களிக்கப்பட்ட இடம் நிச்சயமாக நரகம்தான்.**

இதுதான் இப்லீஸும் அல்லாஹ்வும் செய்து கொண்ட ஒப்பந்தம்.

இப்லீஸ் என்பவன் யார்? அவன் எம்முடன்தான் இருக்கிறான். எமதுள்ளத்தில் வரட்டுக் கௌரவ ஆசையை, மேலெண்ணத்தை உருவாக்குபவன் அவனே. இதைத்தான் வஸ்வாஸ், கன்னாஸ் என்று கூறுகிறோம். இதைக் கண்டறிந்து தப்பித்துக் கொள்ளும் ஆற்றல் நம்மெல்லோரிடமும் உண்டு. இப்லீஸ் எம் நிலைமையை எமக்கெடுத்துக்காட்டும் எதிரிடையாக இறைவனால் தரப்பட்டிருக்கிறான். இவனுடைய ஆலோசனையையும் அல்லாஹ்வுடைய அறிவுரையையும் நிறுத்தச் சரி பிழை காணும் தராசு எம்முடைய நிந்திக்கும் மனச்சாட்சியாகும். “லவ்வாமா” என்பது இதுவே.

**குர்ஆன்: 57:25**

لَقَدْ اَرْسَلْنَا رُسُلَنَا بِالْبَيِّنٰتِ وَ اَنْزَلْنَا مَعَهُمُ

الْكِتٰبَ وَ الْمِيْزَانَ لِيَقُوْمَ النَّاسُ بِالْقِسْطِ ۚ

وَ اَنْزَلْنَا الْحَدِيْدَ فِيْهِ بَاْسٌ شَدِيْدٌ وَّ مَنَافِعُ

لِلنَّاسِ وَلِيَعْلَمَ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ وَ رُسُلَهٗ

بِالْغَيْبِ ۚ اِنَّ اللّٰهَ قَوِيٌّ عَزِيْزٌ ۝

**மனிதர்கள் நீதமாக நடந்து கொள்ளும் பொருட்டு நிறைகோலையும் நாம் அருளினோம்.**

இவ்வாயத்தில் கூறப்பட்ட “நிறைகோல்” என்பதுதான் “மீஸான்” என்ற தராசாகும். இதுவே நிந்திக்கும் மனச்சாட்சி என்பது. இது நம்மெல்லோரிடமும் உண்டு. ஆனால் 90வீதமான மக்களுக்கு இதைக்கையாளத் தெரிவதில்லை.

**குர்ஆன்: 22:24**

وَهُدُوٓا۟ إِلَى ٱلطَّيِّبِ مِنَ ٱلْقَوْلِ وَهُدُوٓا۟
إِلَىٰ صِرَٰطِ ٱلْحَمِيدِ

**பரிசுத்த வாக்கியம் (கலிமத்துத்தையிபா) அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு மிக்க புகழுக்குரிய(இறைவனின்) பாதையிலும் அவர்கள்(இம்மையில்) செலுத்தப்படுவார்கள்.**

ஸிறாத்தென்பது உலகிலுண்டு. நாம் தொழுகையின் போது கேட்டுக்கொள்ளும் ஸிறாத்தும் இதுவே. கலிமத்துத்தையிபாவினாலுணர்த்தப்படும் தௌஹீதென்பதே ஸிறாத்தென்பது. இதை உலகில் கண்டறியாதவன், கடக்காதவன் ஆகிறாவில் கடக்கவேமாட்டான். எனவே வீண்பிடிவாத உணர்வுகளை விட்டொழித்து உண்மையோடொன்றி வாழ்ந்து இம்மை, மறுமைப் பயன்களைப் பெறுவது எல்லோருக்கும் அவசியமாகும். தீர்ப்புச் செய்வோர் தீர்ப்புச் செய்தபோதிலும் நீர் உம்முடைய மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்டுக்கொள்ளும் என்று றஸுல்(ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள். மேலும் அவர்கள் தீர்ப்புச் செய்வதற்குரிய ஆதாரங்கள் குர்ஆன் ஸதீஸுகளில் தென்படாதவிடத்து மனச்சாட்சியைக் கொண்டு தீர்ப்புச் செய்யும்படி ஏவியிருக்கிறார்கள். இறை சன்னிதானத்தில்

இன்றுள்ள துவித உலமாக்கள் எவராவது எமக்கு உதவி செய்வார்களென்று நம்புவது அறிவீனம் இறை சன்னிதானத்தில் பாமரமனிதனின் நிலையைவிட அமாவாசை உலமாக்களின் நிலை மிகக் கைசேதமாக அமையலாம். எமது செயலுக்கு எம்மைத் தவிர வேறு யாருமே பொறுப்பேற்க முடியாது. எனவே நாம் எம்மறிவைப் பயன்படுத்தி இம்மை, மறுமைப் பாக்கியங்களைப் பெற்றுக்கொண்டோமென்றால் உண்மையில் நாம் புத்தி ஜீவிகளே.

# 47

## அரைகுறைகளின் அறிவின் தகைமை

இன்று நம்மிடையேயுள்ள துவிதக் கொள்கையுடைய பெரும்பாலான மௌலவிகளை ஒரு கணம் சிந்தனை செய்து பாருங்கள். பாடசாலைப்படிப்பில் ஆர்வமில்லாத, விவேகமற்ற பிள்ளைகள், சமூகமக்களிடையே மதிப்பில்லாத, தாய் தந்தைக்குக் கட்டுப்படாத, தீயவொழுக்கமுடைய பிள்ளைகள் தான் பெரும்பாலும் மத்ரஸாக்களில் மாணவர்களாய்ச் சேர்க்கப்படுகிறார்கள். சுமார் ஏழு அல்லது எட்டு வருடங்கள் மத்ரஸாக்களில் உண்டு, உறங்கி, உலகவிஷயங்கள் எதுவுமே தெரியாத கிணற்றுத் தவளைகளாய் இவர்கள் வாழ்கிறார்கள். சிந்தனைக்குரிய கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மத்ரஸாக்களில் போதிக்கப்படுவதேயில்லை. தத்துவ விளக்கங்களும் இவர்களுக்குக் கற்பிக்கப்படுவதில்லை. பிக்ஹு கிதாபுகளில், பத்துவாக்கிதாபுகளில் கூறப்பட்டுள்ளவற்றை மட்டும் அரைகுறையாகப் பாடமிட்டுக் கொள்ளும் இவர்கள் முடிவில் முறையான பரீட்சை எதுவுமின்றி மௌலவிப் பட்டங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்தப்பட்டம் கிடைத்துவிட்டால் தங்களை மார்க்க மேதைகளாக, அறிஞர்களாக இவர்கள் நம்பிக் கொள்கிறார்கள்.

அறபுபாஷையில் பண்டிதர்களாய்ப் பட்டம்பெற்ற எஹுதுநஸாறாக்கள் பல்லாயிரமுண்டு. எமது நாடான இலங்கையிலும் பல சிங்கள, தமிழ் மக்கள் அறபு பாஷையில் பாண்டித்திய முடையவர்களாய், டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களாய் இருக்கிறார்கள். எமது மௌலவிமார்களின் அறபுக்கல்வியைவிட எவ்வளவோ உயர்ந்த அறிவிருந்தும் அந்த அயல்மதவாதிகளில் இதுவரை எத்தனை பேர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்? விரல்விட்டெண்ணக்கூடிய ஒரு சிலர்தான் ஒப்புக் கொண்டார்கள். ஏனையோர் அறபுப்பாஷைப் பாண்டித்திய மிருந்தும் இஸ்லாத்தை, குர்ஆனை எதிர்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். இது ஏன்?

உண்மையை ஒப்புக்கொள்ள, ஈமானை ஏற்றுக் கொள்ள ஹிதாயத்தென்ற இறைவழிகாட்டல் அவசியமாகும். எமது சமூக உலமாக்களில் மிகப் பெரும்பாலாருக்கு இந்த ஹிதாயத் கிடைக்கவில்லை. இது இறைவனின் சொந்த "வீற்றோ" அதிகாரத்திலுள்ளது. இதிலெவரும் தலையிட முடியாது. இதை நான் இங்கு கூறுவது எமது உலமாக்களை அவமானப்படுத்துவதற்காக அல்ல. அவர்களுடைய கல்வியறிவை, சிந்தனையை எடுத்துக்காட்டவே இவ்விஷயத்தைக் கூறுகிறேன். இவ்விதமாய் இவர்கள் சிந்தனை தூண்டப்படாமல் வாழ்வதற்கு காரணம் மத்ரஸாக்களின் கல்வித் திட்டங்களிலுள்ள தவறுகளே யாகும். யாராவதொருவர் மதரஸாவுக்குப் போகாதவராயிருந்துகொண்டு குர்ஆன் ஹதீஸ்களுக்கு இறைவழிகாட்டலால் வியாக்கியானம் செய்கிறார் என்றால் இந்த மௌலவிகளில் சிலருக்குச் சகிக்கமுடியாத பொறாமை ஏற்பட்டுவிடுகிறது. மத்ரஸாவுக்குச் செல்லாத மனிதர் கூறும் விபரம் உண்மை தானென்றாலுங்கூட அதை இந்த அமாவாசைகள் மறுக்க, எதிர்க்க முற்படுகிறார்கள். அது ஷரீயத்துக்கு விரோதம் என்கிறார்கள். அதைக் கூறிய மனிதர் காபீர், முர்த்தத், வழிகேடன் என்றெல்லாம் பத்துவாவும் வழங்கி விடுகிறார்கள். உண்மையில் இது அவர்களின் குற்றமென்று கூறுவதைவிட

அவர்களுக்குப் போதிக்கப்பட்ட பாடத்திட்டத்திலுள்ள தவறே இதற்குக் காரணமென்றால் மிகையாகாது.

மத்ரஸா செல்லாத மனிதரின் மார்க்கவிளக்கத்தை ஏற்றுக் கொண்ட மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத இந்த அமைவாசைகள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே காபீர், முர்த்தத் என்ற பத்துவாக்களை அம்மனிதருக்கு வழங்குகிறார்கள். யாராவது ஒருவர் ஒரு மார்க்க விஷயத்தை இவர்களிடம் வினவப்போனால் இவ்விஷயம் முர்த்ததுடைய விஷயம் என்று தீர்ப்புக் கட்டிவிட்டோமே! ஆதலால் இதைப் பற்றி இனிமேல் கேட்கவேண்டாம் என்று மழுப்பிக் கௌரவத்தைப் பாதுகாக்கலாமென்பதே இவர்களின் நோக்கம். உண்மை மக்களிடம் பிடிபட்டுவிட்டால் தங்களால் வாழ முடியாமல் போய்விடுமே என்பதற்காக இவர்களின் மூடத்தனமான கொள்கைக்கு மாறான எந்தவொரு பேச்சு, எழுத்தும் மக்களைச் சென்றடையாதவாறு தடை விதிக்க முனைகிறார்கள். இந்தத் திருவிளையாடல் இவர்களின் புதிய கண்டுபிடிப்பல்ல. இவர்களின் மூதாதைச் சகோதரர்களான எஹுூது நஸாறாக்களிடமிருந்து பெறப்பட்டதே இந்தத் திருவிளையாடலாகும்.

முன்னொருபோது எமது பூமியைப் போன்ற வேறு உலகங்களும் பிரபஞ்சத்திலிருக்கின்றன என்று கூறிய புரூனோ, மதவாதிகள் என்ற பெயரில் வாழ்ந்த முழுமூடர்களால் மதம்மாறிய முர்த்தத்தென்று தீர்ப்புச்செய்யப்பட்டு உயிருடன் தீயிலிடப்பட்டார். பூமி பிரபஞ்சத்தின் மையமல்ல என்பதையும் அது சூரியனைச் சுற்றிவருகிறதென்பதையும் தொலைநோக்கி மூலம் நிரூபித்த கலிலியோ, மதக்கரடிகளான அறிவிலிகளால் மதம்மாறிய முர்த்தத்தாய்ப் பத்துவாச் செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார். உள்ளது ஒரேயொரு மூலப் பொருளே என்று கூறிய பிளேற்றோ கண்ணிரண்டும் பிடுங்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். அல்லாஹ் மட்டுமே இருக்கிறான் என்றும்

அவனுடன் அவனல்லாத எதுவுமே இல்லை என்று கூறிய இப்றாஹீம்(அலை) அவர்கள் நெருப்புக்கிடங்கில் எறியப்பட்டார்கள். அவர்களைப் பின்பற்றிய எமது றஸுல் (ஸல்) அவர்கள் பைத்தியக்காரப் பட்டம் சூட்டப்பட்டு கல்லெறிந்து துரத்தப்பட்டார்கள். இவ்விதக் கொடூரங்களைச் செய்தவர்கள் யார்? அவ்வப் போதிந்திருந்த மௌலவிகள்தான். றஸுல்(ஸல்) அவர்களைப் பின்பற்றிச் செல்லும் உண்மை மூமீன்களுக்கு இன்றும் பத்துவா வழங்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆனால் அந்தப்பத்துவாக்களை வழங்கும் அமாவாசைகள் றஸுல்(ஸல்) அவர்களையே தாங்கள் பின்பற்றிச் செல்வதாக குருட்டுத்தனமாய் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களின் அறியாமை உண்மையில் அபூஜஹ்லையே அவர்கள் பின்பற்றிச் செல்கிறார்கள். ஆதலால்தான் றஸுலின் கொளகைக்கு மாறாய், குர்ஆனுக்கு முரணாய்,உண்மை மூமீன்களுக்கு பத்துவாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பத்துவாக்கள் மூமீன்களை ஏனையோரிடமிருந்து வேறுபிரித்துக்காட்டும் அத்தாட்சிப் பத்திரங்களாய் அமைந்து விடுவதை மூடர்களான அவர்களால் அறிந்து கொள்ளமுடியாதுதான்.

குர்ஆன் 2:256ம் ஆயத்தின் மூலம் மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை என்று அல்லாஹ அறிவித்துக் கொண்டிருந்த போதிலும் துவிதவாதிகளான அரைகுறைகள் அவர்களுடைய துவிதக் கொள்கைக்கு மாறான ஓர் உண்மையான மூமீனை முர்த்தத், வழிகேடன் என்றெல்லாம் பட்டம் சூட்டி துப்பாக்கியைக் கொண்டு துன்புறுத்துகிறார்கள். அம்மனிதனை பொதுமைய வாடியில் அடக்குவது ஹறாம் என்கிறார்கள். அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்கிறார்கள். அம்மனிதனைக் கொன்றொழிப்பது ஜன்னத்தில் பிரவேசிக்க இலகுவான வழியென்றும் அவனையும் அவன் கூட்டத்தையும் முற்றாய்க் கொலை செய்து அழித்து விட மாரக்கம் வற்புறுத்துவதாகவும் பிரச்சாரம் செய்கிறார்கள். இவ்வித மூடத்தனமான, காட்டு மிராண்டித்தனமான பிரச்சாரங்கள்,

பத்துவாக்களைக் கேட்கும் போது மனித அறிவு படைத்த மனிதர்கள் இஸ்லாம் இவ்வளவு நிர்ப்பந்தமுடையதா என்று கேட்கின்றார்கள். இஸ்லாத்தைத் தழுவ பிற மதவாதிகள் அச்சமடைகிறார்கள். புனிதமான இஸ்லாத்தைக் காட்டு மிராண்டிகளின் வாழ்க்கைத்திட்டமாய் மாற்றிக் கொண்டிருக்கிற, மதம் என்ற பைத்தியத்தில் உழன்று கொண்டிருக்கிற இந்த அறிவிலிக்கூட்டம், உண்மையான இஸ்லாத்தை அழித்தொழிக்க முயலும் தஜ்ஜால்களே என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. இக்கூட்டம் மார்க்கத்துக்கு முரணான எந்தக் கட்டளையைப் பிறப்பித்தாலும் அதை மனப்பூர்வமாய் ஏற்றுச் செயலாற்றும் மதியீனர்களான மக்கள் இந்த 21ம் நூற்றாண்டிலும் முஸ்லீம்களில்தான் வாழ்கிறார்கள். வேறு எந்தவொரு சமூகத்திலும் இவ்வித மூடத்தனமான மக்கள் வாழ்வதாய் நான் காணவில்லை. பல்லாயிரம் மக்கள் வாழும் ஒரு கிராமத்தில் நீதிக்காக, மனிதாபிமானத்துக்காக, உண்மைக் காகக் குரலெழுப்பக் கூடிய எந்தவொரு மனிதனும் இல்லை யென்றால் இது மனிதகுலத்துக்கே ஒரு வெட்கக்கேடல்லவா? இவ்வகை மிருகசுபாவமுள்ள மக்களை இறைவன் பூண்டோடு அழித்திருக்கிறான் என்பது உலகறிந்த உண்மையாயிருந்தும் இஸ்லாமிய சமூக மக்கள் இதுவரை இதை உணராதிருப்பது ஆச்சரியம்தான்.

மிருக சுபாவத்தோடு வாழும் மதக்கரடிகள் தங்களின் போர்வையைக் காப்பாற்றவே இவ்வித காட்டுமிராண்டித் தனமான சட்டங்களையும் தீர்ப்புக்களையும் உருவாக்கி மனித குலத்தின் சிந்தனையைப் பறித்து அதன் முன்னேற்றத்தைத் தடைபடுத்தியிருக்கிறார்கள். நபிமார், வலிமார்களுடைய விஷயங்களையும் சிந்தனைக்கெடுங்கள். அவ்வக்காலங்களி லுள்ள மதாச்சாரிகள், உலமாக்கள் என்ற போர்வையிலிருந்த அறிவீனர்கள் தான் நபிமார், வலிமார்களை எதிர்த்திருக்கிறார்கள். றஸூல்(ஸல்) அவர்களைப் பைத்தியக்காரர், வழிகேடர், மார்க்கத்தை அழிக்கவந்தவர்

என்றெல்லாம் தீர்ப்புக் கட்டித் துன்புறுத்தியதனால்தான் அவர்கள் மக்காவை விட்டு மதீனாவுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்விதம் தீர்ப்புச் செய்தவர்கள் யார்? அப்போது அபுல்ஹிகமாய், ஞானிகளின் தந்தையாய் இருந்த அபூஜஹ்லும் அவன் தோழர்களான முஷ்ரீக்கீன்களின் அமாவாசை ஆலிம்களும்தான். உலகில் தோன்றிய நபிமார்கள், வலிமார்களில் அவ்வக்கால உலமாக்களென்ற போர்வையிலிருந்த அமாவாசைகளால் வழிதவறியவர்கள் என்று தீர்ப்பிடப்பட்டுத் துன்புறுத்தப்படாதவர்கள் இல்லையென்றே கூறலாம். இந்த மூடர்களின் கூட்டம் றஸூலின் செய்திகள், விளக்கங்கள் மக்களுக்கெட்டாமல் தடைசெய்தது போலவே இன்றும் செய்து கொண்டிருக்கிறது. இவ்வகை அமாவாசைகளின் நோக்கம் இஸ்லாத்தைப் பாதுகாப்பதுமல்ல மக்களைப் பாதுகாப்பதுமல்ல. இவர்களின் உண்மையான நோக்கம் தங்களின் போர்வையை கௌரவத்தைப் பாதுகாப்பதே.

**குர்ஆன்: 14:13**


وَقَالَ الَّذِينَ كَفَرُوا لِرُسُلِهِمْ لَنُخْرِجَنَّكُمْ مِّنْ
أَرْضِنَا أَوْ لَتَعُودُنَّ فِي مِلَّتِنَا ۖ فَأَوْحَىٰ إِلَيْهِمْ رَبُّهُمْ
لَنُهْلِكَنَّ الظَّالِمِينَ

**நிராகரித்தோர் தங்களிடம் வந்த தூதர்களை நோக்கி நிச்சயமாக நீங்கள் நம்முடைய மார்க்கத்தில் திரும்பிவிட வேண்டும். இன்றேல் நாங்கள் உங்களை எங்களுடைய ஊரிலிருந்து வெளியேற்றி விடுவோம் என்று கூறினார்கள்.**

இவ்வாயத்தில் குறிப்பிட்டது போல்தான் முஸ்லீம்களின் ஸூறத்தில் காட்சியளிக்கும் ஒரு சில நிராகரிப்பவர்கள் நமக்கும்

கட்டளையிட்டார்கள், கொன்றொழிக்கவும் முயன்றார்கள். நான் கலிமாவின் உண்மையை விளக்கமளித்தபோது அதை அவர்களுடைய மாரக்கத்துக்கு விரோதமாய்க் கண்டார்கள். எஹுூது நஸாறாக்களால் கையாளப்பட்ட ஐயாமுல் ஜாஹிலியாக் காலத்து மௌட்டீகச் சட்டங்களையே ஷரீயத்தின் பெயரால் கையாள முற்பட்டார்கள்.

**குர்ஆன்: 5:50**

أَفَحُكْمَ الْجَاهِلِيَّةِ يَبْغُونَ ۚ وَمَنْ أَحْسَنُ مِنَ
اللَّهِ حُكْمًا لِقَوْمٍ يُوقِنُونَ ۝

**(மௌட்டீககாலத்து) ஜாஹீல்களின் (மூடர்களின்) சட்டங்களையா இவர்கள் விரும்புகின்றனர். உறுதியாக நம்பிக்கை கொண்ட மக்களுக்குத் தீர்ப்பளிப்பதில் அல்லாஹ்வை விட அழகானவன் யார்?**

**ஹதீஸ்:-**

*இறைவன் மீது ஆணையாகக் காலணிகளில் ஒன்று மற்றொன்றை ஒத்திருப்பதைப் போன்று என் சமூகத்தினர் தமக்குமுன்னுள்ள சமுதாயங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பார்கள் என்று றசூல்(லஸ்) கூறியிருக் கிறார்கள்.*

**ஆதாரம்: திர்மிதி**

இந்த ஹதீஸில் சுட்டியபடி இன்று நம்மிடையேயுள்ள பெரும்பாலான உலமாக்கள் அக்கால எஹுூது நஸாறாக்களால் உருவாக்கப்பட்ட மௌட்டீககாலச் சட்டங்களைத்தானே இஸ்லாத்திலும் கையாளுகிறார்கள்.

இவ்வகை அமாவாசைகளுக்கும் மார்க்கத்துக்கும் எவ்விதத்தொடர்புமே கிடையாது. ஆதலால்தான் தௌஹீதை

ஷிர்க்காயும், ஷிர்க்கைத் தௌஹீதாயும் எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஷரீயத்துக்குத் தௌஹீது விரோதம் என்கின்றார்கள். இவ்வித அறிவிலிகளின் மாயவலையில், ஏமாற்றுவித்தையில் சிக்கிவிடாமல் ஒவ்வொருவரும் குர்ஆன், ஹதீஸுகளை வாசித்து விளக்கம் பெறுவதும், முடியாத போது நல்லறிஞர்களை அணுகி ஆராய்ந்து தெளிவுபெறுவதும் எமது கடமையாகும்.

**ஹதீஸ்:-**

***நான் உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றினால் நிச்சயமாக வழி தவறவேமாட்டீர்கள். அவைதான் அல்லாஹ்வின் வேதமும் என்னுடைய ஸுன்னாவும் ஆகும். என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர் : மாலிக் இப்னு அனஸ் (றலி)**
**ஆதாரம் :முஅத்தா**

நபியுடைய ஸுன்னா (வழிமுறை) என்பது கலிமாவைக் குறிப்பிட்டதென்பதை எமது திருக்குர்ஆன் தீர்ப்பு 3ம் பாகம் 1ம் பாடத்தில் தெளிவாய் விளக்கியுள்ளேன். முழுமை பெற்ற வேதமும் ஹதீஸுகளும் தத்துவவிளக்கங்களும் இருந்து கொண்டிருக்கும்போது எவருடைய தீர்ப்பும் விளக்கமும் எமக்கு அவசியமேயில்லை. ஷரீயத்துக்குத் தௌஹீது விரோதம் என்பது மார்க்கவிளக்கம் புரியாத அறிவிலிகளின் வாதமாகும்.

குர்ஆனின் 6:149, 16:64, 33:36, 24:51 போன்ற ஆயத்துக்களை நோட்டமிடுங்கள். எவ்விஷயத்தில் நாம் பிணங்கிக்கொண்டாலும் குர்ஆன் அதற்குச் சரியான விடையளிக்கும் என்பது நிச்சயமான உண்மை. ஆனால் குர்ஆனை ஆராய்பவர் கட்சிப்பற்றிலில்லாத சுயசிந்தனையுடன் கலிமாவைக் கொண்டு குர்ஆனை அணுகுவதும் நாம் காட்டிய ஏழு வழிகள் மூலம் விளங்கித் தெளிவடைவதும் அவசியமாகும்.

# 48

## மார்க்கத்தில் நிர்ப்பந்தமுண்டா?

**குர்ஆன்: 2:256**

لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ ۖ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ۚ
فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ
اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۗ لَا انْفِصَامَ لَهَا ۗ
وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿٢٥٦﴾

**மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை**

**குர்ஆன்: 109:6**

لَكُمْ دِيْنُكُمْ وَلِيَ دِيْنِ ﴿٦﴾

*உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு. என்னுடைய மார்க்கம் எனக்கு.*

**குர்ஆன்: 10:99**

وَلَوْ شَآءَ رَبُّكَ لَاٰمَنَ مَنْ فِى الْاَرْضِ كُلُّهُمْ جَمِيْعًا ۗ
اَفَاَنْتَ تُكْرِهُ النَّاسَ حَتّٰى يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ ﴿٩٩﴾

**உம் இறைவன் விரும்பியிருந்தால் பூமியிலுள்ள யாவருமே ஒன்றுபட்டு விசுவாசித்திருப்பார்கள். மனிதர்கள் யாவரும் விசுவாசி களாகிவிடவேண்டுமென்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?**

**குர்ஆன்: 88:22,23,24**

لَسْتَ عَلَيْهِمْ بِمُصَيْطِرٍ ۝ إِلَّا مَنْ تَوَلَّىٰ وَكَفَرَ ۝
فَيُعَذِّبُهُ اللَّهُ الْعَذَابَ الْأَكْبَرَ ۝

**அவர்களை நீர் நிர்ப்பந்திக்கக் கூடியவரல்ல. எனினும் எவர் புறக்கணித்து நிராகரிக்கின்றாரோ அவரை அல்லாஹ் பெரும் வேதனை செய்வான்.**

**குர்ஆன்: 18:29**

وَقُلِ الْحَقُّ مِنْ رَبِّكُمْ ۖ فَمَنْ شَاءَ فَلْيُؤْمِنْ وَمَنْ
شَاءَ فَلْيَكْفُرْ ۚ إِنَّا أَعْتَدْنَا لِلظَّالِمِينَ نَارًا أَحَاطَ
بِهِمْ سُرَادِقُهَا ۚ وَإِنْ يَسْتَغِيثُوا يُغَاثُوا بِمَاءٍ كَالْمُهْلِ
يَشْوِي الْوُجُوهَ ۚ بِئْسَ الشَّرَابُ وَسَاءَتْ مُرْتَفَقًا ۝

**(நபியே!) நீர்கூறும்(முற்றிலும்) உண்மையான (இவ்வேதமான)து உம் இறைவனால் அருளப்பெற்றது, விரும்பியவர்(இதை) விசுவாசிக்கலாம். விரும்பாதவர் நிராகரித்து விடலாம்.**

இவ்வித ஆயத்துக்கள் மூலம் மார்க்கத்தில் நிர்ப்பந்தம் செய்ய எவருக்குமே உரிமை கிடையாதென்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

**ஹதீஸ்:-**

*மக்கள் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்றும் திட்டமாக முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்தூதர் என்றும் சாட்சி கூறித் தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி ஸக்காத்தும் கொடுத்து வராத வரையில் அவர்களுடன் ஜிஹாது(அறப்போர்) செய்யுமாறு இறைவன் எனக்கு ஆணையிட்டுள்ளான். இவ்விதம் அவர்கள் செய்து வருவார்களானால் அவர்களுடைய உயிர்களையும் பொருட்களையும் என்னைவிட்டும் காத்துக் கொண்டவர்களாவார்கள். இஸ்லாத்தின் கடமைகளைத் தவிர அவர்களுடைய கணக்கு அல்லாஹ்விடமிருக்கிறது என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னுஉமர் (றலி)**
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்**

இந்த ஹதீஸ் கூறும் நிர்ப்பந்தம் மார்க்கம் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னுள்ளதாகும். இந்த ஹதீஸ் நாம் முன்பு காட்டிய ஆயத்துக்களைக்கொண்டு ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

**ஹதீஸ்:-**

*லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறி விக்கிரக வணக்கத்தை எவர் நிராகரிக்கிறாரோ அவருடைய உயிரை(கொலை செய்வதை விட்டும்) அவருடைய பொருளை(கபளீகரம் செய்வதை விட்டும்) அல்லாஹ் தடை செய்துள்ளான். அவருடைய கணக்கு அல்லாஹ்விடமிருக்கிறதென்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: தாரீருள் அஸ்ஜயி**
**ஆதாரம்: முஸ்லிம்**

இந்த ஹதீஸ் உபைதுல்லாஹ் இப்னு அதிய்யி (றலி)

அவர்களாலும் கூறப்பட்டுள்ளது. முஅத்தா என்னும் ஹதீஸ் கிரகந்தத்தில் இடம்பெறுகிறது.

**ஹதீஸ்:-**

*எவருடைய நாவினாலும் கைகளாலும் முஸ்லீம்கள் பாதுகாப்புப் பெறுகின்றனரோ அவரே முஸ்லிம் ஆவார் என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**

**ஆதாரம்: திர்மிதி, நஸாயி**

இதே ஹதீஸை அப்துல்லாஹ் இப்னு ஆஸ்(றலி) அவர்களும் அறிவிக்கிறார்கள். இது புஹாரி, முஸ்லீம். அபூதாவூத் ஆகிய கிரந்தங்களில் இடம்பெறுகிறது.

இவ்வித ஹதீஸுகளில் கலிமாவைக் கூடக் குறிப்பிடாமல் இருப்பதை நோக்குக.

**ஹதீஸ்:-**

எவர் நம்முடைய தொழுகையைப் போல் தொழுபவரும் நமது கிப்லாவைத் தொழுகையில் முன்னோக்குவரும் நம்மால் அறுக்கப்பட்ட இறைச்சியை உண்பவருமாக உள்ளாரோ அவர் முஸ்லீம்தான் என்று றஸுல்(ஸல்) அவர்கள் கூறினர்

**அறிவிப்பவர்: அனஸ் (றலி)**

**ஆதாரம் : நஸாயி**

(இவ்விதமான இன்னும் பல ஹதீஸுகளைத் தரமுடியும்)

ஒரு முஸ்லீமை நிர்ப்பந்தம் செய்ய - அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்று ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்ய எவருக்குமே அதிகாரமில்லை என்பதைச் சமூக மக்களும் உணரவேண்டும். சமூக மக்களை மேய்த்துப்பிழைக்கும் வழிகாட்டிளும் உணரவேண்டும்.

**குர்ஆன் :5:45**

وَكَتَبْنَا عَلَيْهِمْ فِيهَا أَنَّ النَّفْسَ بِالنَّفْسِ وَ
الْعَيْنَ بِالْعَيْنِ وَالْأَنْفَ بِالْأَنْفِ وَالْأُذُنَ بِالْأُذُنِ
وَالسِّنَّ بِالسِّنِّ وَالْجُرُوحَ قِصَاصٌ فَمَنْ
تَصَدَّقَ بِهِ فَهُوَ كَفَّارَةٌ لَهُ وَمَنْ لَمْ يَحْكُمْ
بِمَا أَنْزَلَ اللَّهُ فَأُولَٰئِكَ هُمُ الظَّالِمُونَ ۝٤٥

**எவர்கள் அல்லாஹ் அருளியதைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக வழி கெட்ட அக்கிரமக்காரர்களே**

**குர்ஆன் : 5:44**

إِنَّا أَنْزَلْنَا التَّوْرَاةَ فِيهَا هُدًى وَنُورٌ يَحْكُمُ
بِهَا النَّبِيُّونَ الَّذِينَ أَسْلَمُوا لِلَّذِينَ هَادُوا
وَالرَّبَّانِيُّونَ وَالْأَحْبَارُ بِمَا اسْتُحْفِظُوا مِنْ كِتَابِ
اللَّهِ وَكَانُوا عَلَيْهِ شُهَدَاءَ فَلَا تَخْشَوُا النَّاسَ
وَاخْشَوْنِ وَلَا تَشْتَرُوا بِآيَاتِي ثَمَنًا قَلِيلًا وَمَنْ لَمْ
يَحْكُمْ بِمَا أَنْزَلَ اللَّهُ فَأُولَٰئِكَ هُمُ الْكَافِرُونَ ۝٤٤

**எவர்கள் அல்லாஹ் அருளியதை(வேதத்தை)க் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் காபீர்களே.**

**குர்ஆன் : 25:52**

فَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَجَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا ۝

**ஆகவே நீர் காபீர்களுக்கு(மறைப்பவர்களுக்கு) வழிப்படாதீர். இந்த குர்ஆனைப்பற்றி அவர்களுடன் பலமாகத் தர்க்கம் செய்யும்.**

ஒரு மனிதன் வழி தவறிச் செல்கிறான் என்பது நிரூபணமானால் அவன் யார் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்ட எல்லோருக்கும் உரிமையுண்டு. ஆனால் காட்டு மிராண்டிச் சட்டங்களை ஆக்கிக்கொண்டு நிர்ப்பந்தம் செய்ய எவருக்குமே உரிமையில்லை.

கலிமத்துத்தையிபா கலிமத்துல்கபீஸாவாக மாற்றப்பட்டு குர்ஆனின் உயிர் வசனங்கள் இருட்டிப்புச் செய்யப்பட்ட காலத்திலேயே நாம் வாழ்கிறோம் என்பதை நாம் ஆராய்ந்து தெளிவுபெற வேண்டும். அநேக ஆதாரங்களிருப்பினும் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தருகிறேன்.

**ஹதீஸ்:-**

*கடைசி நாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறு சில தஜ்ஜால்களுக்கு நான் மிகப் பயப்படுகிறேன் என்று றஸூல் (ஸல்) அவர்கள் கூற, அவர்கள் யாரென்று ஸஹாபாக்கள் வினவ வழிகேட்டில் ஜனங்களைத் தள்ளி விடுகிற உலமாக்கள் என்று றஸூல்(ஸல்) அவர்கள் கூறினர்.*

**அறிவிப்பவர்: இப்னுஅப்பாஸ் (றலி)**

**ஆதாரம் : துர்ருல்மன்தூர் , யஹ்யாஉலூாமுத்தீன**

இணையேற்படுத்துவது வழிகேடாகும். அல்லாஹ்வுடன் அவனல்லாததும் உண்டென்பதே இணையேற்படுத்தல் என்ற வழிகேடாகும்.

**குர்ஆன்: 14:30**

وَجَعَلُوا لِلَّهِ أَندَادًا لِّيُضِلُّوا عَن سَبِيلِهِ ۗ قُلْ
تَمَتَّعُوا فَإِنَّ مَصِيرَكُمْ إِلَى النَّارِ ﴿٣٠﴾

**அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையிலிருந்தும் மக்களைத் திருப்பிவிடும்பொருட்டு அவனுக்கு இணையை ஆக்குகின்றனர். நீர் கூறும்(சிறிது காலம்) நீங்கள் சுகமனுபவித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் சேருமிடம் நரகம்தான்.**

**குர்ஆன்: 14:28**

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ بَدَّلُوا نِعْمَتَ اللَّهِ كُفْرًا
وَأَحَلُّوا قَوْمَهُمْ دَارَ الْبَوَارِ ﴿٢٨﴾

**அல்லாஹ்வின் அருளை நிராகரிப்பைக் கொண்டு மாற்றித் தங்களின் மக்களையும் அழிவுக்கிடங்கில் தள்ளிவிட்டவர்களை நீர் பார்க்கவில்லையா?**

**குர்ஆன்: 4:59**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ
مِنكُمْ ۖ فَإِن تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللَّهِ وَالرَّسُولِ إِن
كُنتُمْ تُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ ۚ ذَٰلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا ﴿٥٩﴾

**விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடவுங்கள். உங்கள் தூதருக்கும் உங்கள் தலைவருக்கும் வழிப்பட்டு நடவுங்கள்.**

**உங்ககளுக்குள் யாதோர் விஷயத்தில் பிணக்கேற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் (குர்ஆனிடமும்) தூதரிடமும் (ஹதீஸிடமும்) ஒப்படையுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாயிருந்தால் தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஒப்புக் கொள்ளுங்கள். இதுதான் நன்மையாகவும் அழகான முடிவாகவும் இருக்கும்.**

## ஷெய்குல் முப்லிஹீன் எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களின் வெளியீடுகள்

1. ஈமானின் உண்மையை நீ அறிவாயா?
2. பித்அத் துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 1)
3. பித்அத் துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 2)
4. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 1)
5. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 2)
6. சுன்னத்வல் ஜமாஅத்தினரை தெரிந்து கொள்வது எப்படி? (தமிழ்)
7. சுன்னத்வல் ஜமா அத்தினரை தெரிந்து கொள்வது எப்படி? (ஆங்கிலம்)
8. ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்
9. பகுத்தறிவின் நீதிமன்றம் (தமிழ்)
10. பகுத்தறிவின் நீதிமன்றம் (ஆங்கிலம்)
11. பகுத்தறிவின் நீதிமன்றம் (சிங்களம்)
11. ஏகத்துவப் பாடல்கள் (181 பாடல்கள் உள்ளடக்கிய CD இலவசம்)